ஹநுமான்

ஆண்டு மலர்

HANUMAN ANNUAL

1938

ஆகஸ்டு 12ல்

பிராட்வே டாக்கீஸில்

நந்தகுமார்

(தமிழ்)

இப்படத்தின் பாடல்களை ஓடியன் ரிகார்டுகளில் கேளுங்கள்

DIAMOND MERCHANTS

Rasiklal Mehta & Co.

2, ANUMANTHARAYAN LANE
P.T. MADRAS

TELEGRAMS:
"BLUE JAGGER"

HEAD OFFICE:
BOMBAY

..............................1938

Dear Sir/Madam,

We have pleasure in taking this opportunity to present you this printed JEWELLERY PAMPHLET, and hope that it will interest you.

As we IMPORT DIRECT, DIAMONDS from the Manufacturers of Antwerp and Amsterdam (both centres for DIAMOND CUTTING and DIAMOND TRADE in Belgium), we SAVE the MIDDLEMAN'S PROFIT, so as to compete successfully with the other merchants of this line— At the same time with our long experience in the Diamond Market as wholesale and retail dealers we have always satisfied our local as well as moffussil constituents. This list gives you a comprehensive idea of a few of our Ready-made Diamond Jewelleries which we manufacture.

Should you find these designs not to your taste, we shall be glad if you would kindly advise us regarding your requisites.

OUR SERVICES: LASTLY, our workshop is equipped with specially trained expert craftsmen who can undertake to manufacture any kind of up-to-date Jewellery.

OUR BUSINESS INTEGRITY AND REPUTATION are our customers' best security. Your satisfaction is our asset, and so in dealing with us you always get the BEST GOODS at the RIGHT PRICE and the RIGHT TIME.

Assuring you, therefore of our best and personal attention and unfailing courtesy at all times, we extend our hearty invitation to you, to visit our shop.

Ever at your services,

Yours faithfully,

Rasiklal Mehta & Co.

RASIKLAL MEHTA & CO.

PARK TOWN
MADRAS

THE PREMIER HOUSE FOR QUALITY DIAMONDS

TERMS

1. All orders are executed promptly and neatly, under our personal attention.

2. We make a speciality of Diamonds Mounting and repairing of every description.

3. Customers may rely on us for promptness and satisfaction even in the most intricate of Jewellery Repairs.

4. Goods bought from us, *if not approved*, may be returned either for full value of money or can be exchanged to any other jewel, within a week from the date of the delivery of the jewel.

5. We guarantee your entire satisfaction in all our transactions.

6. All Moffussil orders should be placed with an advance of 25% of the value of the goods, and the balance should be covered by V. P. P.

RASIKLAL MEHTA & CO.
PARK TOWN :: MADRAS

A SUITABLE GIFT FOR LADIES

AS EVERYDAY IS SOME ONE'S

BIRTH DAY - MARRIAGE

SOME OTHER FUNCTION

HOW BETTER CAN YOU EXPRESS YOUR WELLWISHES THAN BY PRESENTING A JEWEL SET WITH DIAMONDS FROM

RASIKLAL MEHTA

WHO DESERVE YOUR CONFIDENCE AND RECOMMENDATION

★

Particulars from:

RASIKLAL MEHTA & CO.,

Direct Importers, Wholesale & Retail Diamond Merchants

(Opp.: MYSORE CAFE - CHINA BAZAAR)

2, HANUMANTHARAYAN LANE, P. T., MADRAS.

Tel.: "BLUEJAGGER"

OUR DIAMONDS ARE UNRIVALLED

IN PRICES AND IN QUALITY

இனும்! இனும்!

இந்தக் கூபனை கத்தரித்து அனுப்பவும்

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட்

23, எர்ரபாலு செட்டித் தெரு, சென்னை

வைடமின் F உள்ள காஸ்டரால் ஹோரயில் (தைலம்) உபயோகிக்க விரும்புகிறேன். தயவு செய்து ஸாம்பிள் தைலம் அனுப்பவும்.

பெயர்.......................................

விலாசம்.......................................

....

"RYBEX" PRECISION WATCHES

மிகவும் உயர்ந்த மெகானிஸம், 15 சாகெட் ஜூவெல், நிவாரெக்ஸ் குரோனே ஹேர் ஸ்பிரிங், நாகரீக மான, அழகான உருவம். நீடித்து உழைக்கக்கூடியவை.

18 காரட் போன்	ரூ. 130
ரோல்டுகோல்டு, 10-வருஷ உத்திரவாதம்	ரூ. 55
ஸ்டேய்ன்லெஸ் ஸ்டீல்	ரூ 50

ரிப்பேர் உத்திரவாதத்துடன், உயர்ந்தவேலைப் பாடுகளுடன் செய்கின்றோம். ஒரு முறை எங்க ளிடம் உங்கள் கெடியாரங்களை அனுப்பிப் பரீட்சித்து பார்க்கவும்.

MUBARAK & Co.

Government & Railway Suppliers & Repairers

RATTAN BAZAAR : : MADRAS

Suppliers and Repairers to the Police Department throughout the Presidency.

Engage us for scientific repairs.

நல்ல படங்களைத் தேர்ந்தெடுக்கும் படக்காட்சிக்காரர்களுக்கு ஸௌண்ட் ஸிடியின் வெளியீடுகள்

பெயர்	சுருணைகளின் நீளம்	மாதிரி	டைரெக்டர்	ஆக்டர்கள்
1 பாரத வீரன்	16	விக்டர் ஹியூகோவின் "லெஸ் மிஸரபில்ஸ்" ஐ தழுவியது	ஏ. நாராயணன்	என். என். ராஜன், B.A., B.L. எம். கே. கோபால், B. A.
2 மதன சுந்தரி	16	டம்பாச்சாரி நாடகத்தை பின்பற்றியது	,,	டி. கே. சுந்தரப்பா மிஸ். டி. வி. ராஜசுந்தரி
3 மீராபாய்	16	பக்திக்குரியதும் சரித்திர சம்மந்தமானதும்	டி. ஸி. வி. நாயக்கர் & ஏ. நாராயணன்	டி. எஸ். சந்தானம் கொத்தமங்கலம் சீனுவாஸன் ஸி. வி. வி. பந்துலு டி. வி. ராஜசுந்தரி
4 துளஸி பிருந்தா விநியோகிப்பவர்கள்:— ஏ. எல். ஆர். எம். கோ., மதராஸ்	16	புராணப்படம்	ஏ. நாராயணன்	என். என். ராஜன், B.A., B.L. மிஸ். சங்கரிபாய் கொத்தமங்கலம் சீனுவாஸன் விசலூர் சுப்ரமண்ய பாகவதர் & ஸுசிலா
5 மடசாம்பிராணி விநியோகிப்பவர்கள்:— ஏ. எல். ஆர். எம். கோ., மதராஸ்	15	முழுதும் தமாஷ் படம்	எஸ். என். ரங்கநாதன்	கிச்சு, பிச்சு, மங்களம்
6 கிருஷ்ண துலாபாரம் விநியோகிப்பவர்கள்:— முருகன்டாக்கி பிலிம் கோ. மதுரை	16	புராணப்படம்	ஏ. நாராயணன்	எம். வி. கிருஷ்ணப்பா ரமாமணி பாய் டி. எம். சாரதாம்பாள்
7 துரௌபதி வஸ்திராபஹரணம்	13	,,	ஆர். பிரகாஷ்	டி. எஸ். சந்தானம் கே. ஆர். சாரதாம்பாள் சிறுகளத்தூர் சாமா எம். டி. பார்த்தசாரதி பி. எஸ். சீனுவாஸராவ்
8 ஸ்ரீநிவாஸ கல்யாணம்	12	,,	ஏ. நாராயணன்	பி. எஸ். சீனுவாஸராவ் ஆர். பி. லெக்ஷ்மிதேவி சாமா முதலியோர்
9 நாஷனல்யூகாரிஸ்டிக் காங்கிரஸ்	5	சர்வ தேசங்களிலும் காட்டக்கூடிய முதல் இந்தியச் செய்திப் படம்	,,	மாட்சிமை தங்கிய மதராஸ் ஆர்ச்பிஷப்பும் போப்பாண்டவர் தூதரும்
10 பணமா? அல்லது அன்பா?	3	தமாஷ்	,,	மிஸ். கிருஷ்ணவேணி துரைஸாமி ஐயா சொர்ணப்பா கண்ணபிரான்
11 கட்டை கிட்டு	2	,,	,,	,,
12 தீக்ஷதரின் ஆவி	3	,,	,,	,,
13 காங்கிரஸ் தேர்தல் பிரசங்கம்	2	பிரஸங்கம்	,,	ஸ்ரீஜத் ஸி. ராஜகோபாலாச்சாரியார் ஸத்யமூர்த்தி புலாபாய் தேசாய் ஈ. கிருஷ்ணய்யர்
14 சர்வதேச குஸ்திப் பந்தயம்	1	திடுக்கிடும் சம்பவம் நிறைந்தது	,,	ஹர்பான்ஸிங், கிங்-காங், டானி லமாரோ முதலியோரின் பராக்ரமங்களைக் காணலாம்.
15 கிருஷ்ண ராஸ லீலா டான்ஸ்	1	நாட்டியக் கூளுள்	,,	போற்றற் குரிய ரிவி கம்பெனி மாஸ்டர் பாலசந்திராவும் இள நங்கையர்களும் நடித்தது.

ஸ்ரீனிவாஸ ஸினிடோன் படங்கள் எப்போதும் புக்கிங்குகளுக்கு தயார்.

விபரங்களுக்கு: **ஸ்ரீனிவாஸ ஸினிடோன், வேப்பேரி, மதராஸ்.**

Read what the Sheriff of Madras says

G. A. NATESAN
Sheriff of Madras 14—4—38

Prof. R. Swaminatha Iyer, the well-known Astrologer, quite unasked for made two forecasts about me. Both of which have surprisingly come true.

(Sd.) G. A. NATESAN

Read what the Maha Maham Exhibition Committee Says on 22-3-1933

Prof. R. Swaminatha Iyer, was awarded a Silver Medal and Merit Certificate, for his proficieney in Astrology, and for his Sri Gayathri Charm.

(Sd.) SHAIK DAWOOD,
Organiser and President, Kumbakonam Exhibition Committee.

ஆரூட கேள்விகளுக்கு பதில்

ஸ்ரீ காயத்ரீ உபாசத்தால்

நிஜமாய் சொல்லுகிறேன்

முக்கியமான 5 கேள்விகள் எதிர்காலத்தைப் பற்றி எழுதவும். கடிதம் எழுதும் நேரமும், ஒரு புஷ்பத்தின் பெயரும் எழுதவும். அணு 0—9—0 மட்டும், பூஜை, தபால், அட்வர்டைஸ்மெண்ட் சிலவிற்காக, தபால் ஸ்டாம்புகள் அனுப்பவும். மறு தபாலில் உண்மையான பதில் பரிகாரத்துடன் எழுதி அனுப்பப்படும்.

N.B. :—சிலோன், ரங்கோன், சிங்கப்பூர் தபால் சிலவு அதிகமானதால் அணு 0—12—0 மணியார்டர் மூலம் அனுப்பவும். (வி.பி.யில் அனுப்புவதில்லை)

அதிசயமான ஜோதிட பலாபலன்

அதிர்ஷ்டத்தின் சக்கரம் அல்லது **1939-ம் வருஷத்திய மாதவாரியான பலனும்**

ஆயுள்பூரா குணநிசய பலனும் (அச்சிடப்பட்டது)

1939-ம் வருடத்தில் உங்களுக்கு மாதவாரியாக நடக்கும் பலாபலன்கள் விபரமாய் எழுதப்பட்டது.

பலாபலன் வேண்டியவர், தங்கள் பிறந்த வருடம், மாதம், தேதி, நக்ஷத்திரம் அல்லது முழுப் பெயர் எழுதி அணு 0—7—0 மணியார்டர் மூலமாவது, தபால் ஸ்டாம்பு மூலமாவது அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ காயத்ரி ரக்ஷை

சுவாமிநாதன்

இதை கட்டிக்கொள்ளும் ஒவ்வொரு ஆடவரும், பெண்டிரும், பாலர்களும், எல்லா கார்யசித்தியும் தொழில் ஏற்படுவதும், பரீக்ஷையில் பாஸ் செய்வதும், பூமிலாபமும் வாஹன லாபமும், தீராதென கைவிடப் பட்ட சர்வ வியாதிகள் தீருவதும், விரோதிகள் சமாதானம் ஆவதும், கோர்ட் விவகாரம் ஜெயமாவதும், தான் நினைத்த காதலி பிரிந்தால் மறுபடி சேருவதும், ஜாதக கோளாறுகளினால் ஏற்படும் புத்திரதோஷம், கண்டம், வியாதி, கடன் உபத்திரவம், எதிர்பாராத கஷ்டம் வராமலும், உதவிசெய்யும். எந்த எந்த கார்யத்தை உத்தேசித்து கேட்கிறீர்களோ, அதேமாதிரி செய்து அனுப்பப்படும்.

ஆயுள் பூராவும் பலன் தரக் கூடியது :—		ரக்ஷை கட்டிக் கொண்ட நாள் முதல் 12வருடம் பலன் தரக்கூடியது	
தங்க ரக்ஷை விலை ரூ.	44—8—0	தங்க ரக்ஷை விலை ரூ.	22—8—0
வெள்ளி ரக்ஷை விலை ரூ.	22—8—0	வெள்ளி ரக்ஷை விலை ரூ.	12—8—0

வி. பி.யில் அனுப்புவதில்லை. பூராத்தொகையும் ஆர்டருடன் அனுப்பவேண்டும். ரக்ஷை வேண்டியவர் தங்கள் பெயர், தற்கால வயது, தனக்கு என்ன கார்யத்திற்காக ரக்ஷை வேண்டுமோ, அந்த காரணமும் விவரமாய் எழுதி அனுப்பவும்.

Prof. R. சுவாமிநாத அய்யர்

ஜோதிஷர், நெ. 7, பிலிப்ஸ் தெரு :: ஜி. டி., மதராஸ் (4)

அற்புதமான 5 திரைப் படங்கள்

தேச முன்னேற்றம்

(தமிழ்)

மாதிரிமங்கலம் நடேசய்யர், M. லெக்ஷ்மணன், S. R. பத்மா, செல்லம், ருக்மணி முதலியோர் நடித்தது

மயூராவின் **பக்த அருணகிரி**

(தமிழ்)

தேவாரம் C. சங்கரலிங்கம், T. N. மீனாட்சி முதலியோர் நடித்தது

கோகிலா

(ஹிந்தி)

சபிதாதேவி, மோதிலால், மாயாபானர்ஜீ நடித்தது

நிரந்தரகீதம்

(ஹிந்தி)

சுரேந்திரா, B.A., LL.B., மாயாபானர்ஜீ நடித்தது

பிரதிபா

(ஹிந்தி)

துர்கா கோட்டே, ஜீராயாஸ் முதலியோர் நடித்தது

: விபரங்களுக்கு :

மயூரா பிலிம்ஸ் லிமிடெட்

தந்தி: MAYURA — சென்னை — Post Box 343

Simplex

நிகரற்ற தொனியுள்ளது !

நீடித்து உழைப்பது !!



ஸிம்ப்ளெக்ஸ்

டாக்கி மெஷீன்கள்

●

நீண்ட காலமாக உத்திரவாதத்துடன் உழைத்து பல தியேட்டர் முதலாளி களுக்கும் பொது ஜனங்களுக்கும் திருப்தியை அளித்துள்ளன

●

கீழ்க்கண்ட தியேட்டர்களில் ஸிம்ப்ளெக்ஸ் மெஷீன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

1. அஸோஸியேடட் டாக்கீஸ் ...தூனி
2. எக்ஸெல்ஸியர் ஸினிமா ...அனந்தப்பூர்
3. ஆந்திரா யூனைடெட் டாக்கீஸ்.ஓங்கோல்
4. ராக்ஸி தியேட்டர் ...வேலூர்
5. எவர்கிரீன் பிக்சர்ஸ் ...பம்பாய்
6. லிபர்ட்டி டாக்கீஸ் ...சங்கரநாயனர் கோவில்
7. செலின் டாக்கீஸ் ...திண்டுக்கல்
8. கெயிட்டி டாக்கீஸ் ...கொளும்பு
9. ராமகிருஷ்ண டாக்கீஸ் ...குண்டூர்
10. சாரதா டாக்கீஸ் ...பாலகோல்
11. சத்யநாராயண டாக்கீஸ் ...நந்திகாமா
12. ஸ்ரீ கிருஷ்ண டாக்கீஸ் ...நாகர் கோயில்
13. சீதாராம் விலாஸ் ...பெர்ஹாம்பூர்
14. லக்ஷ்மி டாக்கீஸ் ...சிக்காகோல்
15. ராமகிருஷ்ண டாக்கீஸ் ... ,,
16. ரகுநாத் டாக்கீஸ் ...பலாஸா
17. பூர்ண தியேட்டர் ...விசாகப்பட்டணம்
18. சித்தூரி மாருதி ஸினிமா ஹால் ...தணுக்கு
19. ஸ்டார் டாக்கீஸ் ...பாலக்கோல்
20. விஷ்ணு ஸினிமா ...ஸிங்கரேணி காலியரிஸ்
21. சரஸ்வதி டாக்கீஸ் ...கிடாடவலு
22. இந்தியன் டாக்கீஸ் ...கண்துக்கூர்
23. கன்யகா பரமேஸ்வரி ஸினிமா ...புளியேக்துலா
24. பிரேமகார் ஸினிமா ...மதனப்பள்ளி
25. பிரேமளா டாக்கீஸ் ...சித்தூர்
26. எல்ஜின் டாக்கீஸ் ...சேலம்
27. குகை டாக்கீஸ் ... ,,
28. பழனியப்பா டாக்கீஸ் ...காரைக்குடி
29. விஜயக் ஸினிமா ...நெல்லூர்
30. வெங்கடேஸ்வர ஸினிமா ...காவாலி
31. கெயிட்டி டாக்கீஸ் ...யாழ்ப்பாணம்
32. ,, ...புதுக்கோட்டை
33. அன்னபூர்ண டாக்கீஸ் ...பெர்ஹாம்பூர்
34. அலி டூரிங் டாக்கீஸ் ...பங்கனப்பள்ளி
35. ராமகிருஷ்ண டாக்கீஸ் ...நந்தியால்
36. பாரதமாதா டூரிங் டாக்கீஸ் ... ,,
37. பாரத் டூரிங் டாக்கீஸ் ...உரவகொண்டா
38. மதுசூதன் டாக்கீஸ் ...மதனப்பள்ளி
39. விக்டோரியா டூரிங் டாக்கீஸ்.நெல்லூர்
40. விஜேலியா டூரிங் டாக்கீஸ் ... ,,
41. வர்ஜினியா டூரிங் டாக்கீஸ் ... ,,
42. மஹபூப் ஔலியா டூரிங் டாக்கீஸ் ...கண்துக்கூர்
43. ஸ்ரீனிவாஸ் டூரிங் டாக்கீஸ் ...செல்லக்கரை
44. ஸுதாமா ,, ...காடூர்
45. புஜகசாயன் ,, ...பத்ராசலம்
46. ஸ்டார் பிலிம்ஸ் ...யாழ்ப்பாணம்
47. டாக்கி டாக் ...கரூர்
48. மாடர்ன் டூரிங் டாக்கீஸ் ...பெத்தாபுரம்

இன்னும் பல ஊர்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதைவிட வேறு அத்தாக்ஷிகள் என்ன வேண்டும்?

விவரங்களுக்கு:

The Central Talkie Equipment Co.,

Bharat Buildings, Mount Road, Madras

Grams: "Centauto" Phone: 86168

Head Office: 48, CENTRAL AVENUE, SOUTH CALCUTTA

Branch: CHANDNI CHOWK, DELHI

INDEX TO ADVERTISERS

		Page
1.	Abdul Kareem (Kareem Beedi Factory) ...	116
2.	Andhra Cinetone Ltd. ...	32
3.	Appasamy Chetty & Co., M. C. ...	4
4.	Bengal Lamps ...	36-a
5.	Bengal Silk Stores ...	94
5a.	Bragathi Pictures ...	(Wrapper)
6.	Broadway Talkies (Kambar) ...	117
7.	Calcutta Chemical Co., Ltd. ...	1, 115
8.	Carnatic Chemical Works ...	48-b
9.	Central Studios Ltd. ...	29
10.	Central Talkie Equipment Co. ...	5
11.	Chintamani Pictures Ltd. ...	108
11a.	Dharma Rao Printing Works ...	4
12.	E. S. K. Swamy ...	48-a
13.	Ganesh & Co. ...	36-a
14.	General Film Distributing Co. ...	65
15.	General Swadeshis Ltd. ...	115
16.	Gopalaswamy Naidu & Sons, P. ...	101
17.	Gopaljee & Co., J., (Asafoetida) ...	100
18.	Gore, D. G. (Bombay) ...	84
19.	Gramophone Co., Ltd., The ...	109
20.	Hindustan Co-Operative Insurance Society Ltd., The ...	101
21.	Jaya Films & Hindustan Films Ltd. ...	88-a
22.	India Life Benefit Assurance Society Ltd.	88-a
23.	Jammi Venkataramanayya, Dr. ...	67
24.	Jayabharatham & Co. (Jabco Neem Soap) ...	88-a
25.	Kannan Devan Hills Produce Co., Ltd. ...	55
26.	Kalyanasundaram, T. S. R. S. ...	110
27.	Kesari Kuteeram ...	24
28.	Kopran Chemicals Co. ...	27
29.	Lakshmi Jewellery Mart, Sri ...	61
30.	Madras Type Foundry, The ...	119
31.	Madras United Artistes Corporation, The.	24-B & 24-C
32.	Mahalakshmi Studios Ltd. ...	25
33.	Mohamed Ebrahim & Co. ...	98 & 101
34.	Majestic Pictures, & Radha Films ...	118
35.	Malayappaswami Vaidyasala ...	36-b & 117
36.	Mayura Films Ltd. ...	4
37.	Midland Insurance Co., Ltd. ...	114
38.	Mubarak & Co. ...	1
39.	National Insurance Co., Ltd. ...	48-a
40.	New Asiatic Life Insurance Co., Ltd. ...	6
41.	New India Assurance Co., Ltd. ...	31
42.	Norton & Co. ...	36-a
43.	Oriental Life Assurance Co., Ltd. ...	12
44.	Orr's Gramophone & Talkies Ltd., ...	(Wrapper)
45.	Parvathi Medical Hall ...	116
46.	Paton Smith & Co., Calcutta ...	88-a
47.	Pilla Papiah Patrudu ...	105
48.	Ponnambalam Pictures ...	48-a
49.	Rajagopala Talkies ...	68
50.	Raja Photo Studio ...	98
51.	Rajan & Co., P. V. ...	24
52.	Raju Films Ltd., The ...	92
53.	Raju Chettiar and Bros. P. A. ...	48-b
54.	R. M. S. & Co. ...	112
55.	Rasiklal Mehta & Co. ...	1
56.	Ratna & Co. ...	48-b
57.	Royal Scented Betel Nuts ...	36-b
58.	Rukmani Cooker Co. ...	119
59.	Sarathi Films ...	89
60	Samshudin & Ismail ...	88-b
61.	Srinivasa Cinetone ...	2
62.	Sound Products Co. ...	64
63.	Spencer & Co., Ltd. ...	115
66.	Standard Photo Engraving Co. ...	88-b
65.	Subbarayalu Chettiar, T. ...	81
66.	Sultan & Co., A. D. ...	48-a
67.	Sundaram Sound Studios ...	36-b
68.	Swaminatha Iyer, Prof, R. ...	3
69.	Theodre Litho Works ...	111
70.	Thomas Rodrigo & Sons ...	117
71.	Tonsinal Laboratory ...	116
72.	Tropical Insurance Co., Ltd. ...	105
73.	T. T. Asafoetida (Rashid Jamshed & Sons) ...	88-b, 105
73a.	Universal Agency, The ...	48-b
74.	Veecumsee Chabildas & Sons ...	113
75.	Vetrivel Balm Depot ...	119
76.	V. H. R. Asafoetida (Varjivandas Hirjee) ...	24
77.	Yessel Film Co. ...	120

நியூ ஏஷ்யாடிக்

லைப் இன்ஷ்யூரன்ஸ்

பாலிஸியை விரும்புவது ஏன்?

குறைந்த பிரிமியம்; புதிய பலதிறப்பட்ட பாலிஸி திட்டங்கள்; பாலிஸி தொகை கொடுப்பதில் ஜரூரான நடவடிக்கை; கம்பெனியின் உயர்வான செல்வநிலை; வியாபாரத் துறையில் பிரக்யாதிபெற்ற பிர்லா பிரதர்ஸ் அவர்களின் திறமையான நிர்வாகம் இவைகள் காரணங்களில் ஒரு சில.

கீழ்க்கண்ட புள்ளி விவரங்களே நாளுக்குநாள் இக்கம்பெனி உயர்வடைந்து வருவதற்குப் போதிய அத்தாட்சியாகும்

1934-ல் பூர்த்தியான பாலிஸி தொகை ரூ. 15,38,000
1935-ல் „ 25,01,000
1936-ல் „ 30,61,000
1937-ல் „ 35,58,000

வருடப் பிரீமியங்களின் மேல் 2½% குறைவு

இது போனஸ் வருஷம்

பாலிஸிதாரராக இன்றே சேருங்கள்

ஊக்கமும் செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் நாடெங்கும் தேவை
தாராளமான பரம்பரை ஏஜன்ஸி கமிஷன்

முழு விவரங்களுக்கு:

தலைமை ஆபீஸ்:
நியூ ஏஷ்யாடிக் பில்டிங்ஸ்
நியூ டில்லி

பிராஞ்சு ஆபீஸ்:
ஏ. சுப்பையா, பிராஞ்சு மானேஜர்
289, லிங்கசெட்டித் தெரு — ஜி. டி., மதராஸ்

பொருளடக்கம்

	பக்கம்
நமஸ்காரம்	8
கிராமவாசி கணக்கெடுத்தால்	9
வத்தலக்குண்டு, பி. எஸ். சங்கரன்	
பாரத சாரதி (படம்)	11
திருவிளக்கு (கவி)	13
"மணிக்கொடி" கே. ஸ்ரீநிவாசன்	
விண்வழிகாட்டும் விரல்கள் (படம்)	14
மாரியாத்தா (கவி)	16
கொத்தமங்கலம்: ஸுப்ரமணியம்	
ஆவல் ஒருபக்கம் அதிர்ஷ்டம் ஒரு பக்கம்	18
மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர்	
ஆதிக் கூத்து (கவி)	20
ஸ்ரீ. கு. வா. (பம்பாய்)	
லட்சியமும் சாதனமும்	21
வ. ரா.	
பொற்சரடு	22
ந. பிச்சமூர்த்தி (கும்பகோணம்)	
குதிரையோட்டம் (கவி)	23
திருச்சி: பிரஹத்தீசுவரி	
பட்டணம் கில்லாடியும் சோமாறியும்	24-A
மான்செய்த தந்திரம்	24-D
கி. வா. ஜகந்நாதன்	
சீதையும் சிறையிருந்து	26
கே. சபாநாதன் (கொழும்பு)	
ஷாஜஹானின் காதல் கனவு	28
செல்லாக்காசு	30
என். சிதம்பர ஸுப்ரமணியன்	
மரங்களும் மனிதனும்	33
பெ. நா. அப்புஸ்வாமி	
நகர்ந்துசெல்லும் தலைநகரம்	34
எஸ். ஆர்.	
பொழுதுபோக்கு	37
வ. வெ. சு. அய்யர்	
பெரிய இடத்துப்பெண்	39
மல்கம்பம்	42
காப்டன் டி. வி. திருவேதி	
ஊமை செய்தவேலை	44
ஸ்வாமி. சுத்தானந்த பாரதியார் (புதுவை)	
எங்கள் மாந்தோப்பு (கவி)	46
"ஜோதி"	
ஸிம்லாவின் சிவபுரி	47
சிவப்பு இந்தியர்கள்	48
செதுக்குளிச் சித்திரங்கள் (படங்கள்)	49
பச்சை மோதிரம்	53
ஸ்ரீமதி. "குகப்ரியை"	
ஸொக்கோல் இயக்கம்	56
சிகித்சை	58
"மௌனி"	
தாரகைப்பெண்கள் (கவி)....	60
"தாராபதி"	

	பக்கம்
அமெரிக்காவில் ஓர் தமிழன்	62
ஏ. கே. செட்டியார் (கோட்டையூர்)	
ஸ்ரீ ரவீந்திரநாதர்	66
கு. ப. ராஜகோபாலன்	
சித்திரமும் சித்திரக்காரர்களும்	70
பி. எஸ். ராமையா	
அஜந்தா	74
"சங்கு. மணி"	
பண்டைக்காலத்து வாணிகச் சங்கங்கள்	77
தி. நா. சுப்பிரமணியன்	
குரூர உலகம்	79
டி. என். குமாரஸ்வாமி	
தாம்பத்ய தண்ட விதாயம்	82
பங்கிம் சந்திர சடோபாத்யாய	
நியாயம்!	85
மஞ்சேரி, எஸ். ஈஸ்வரன்	
கனவும் நினைவும்	86
"காமாட்சி"	
மலரின் விருப்பம் (கவி)	89
எஸ். உமைதாணு பிள்ளை (நாகர்கோவில்)	
ஜயசிங்கின் ஜந்தர் மந்தர்	90
எஸ். ராஜகோபால், பி. எஸ்ஸி.	
கீர்த்தி ரகசியம்	93
சிட்டி	
டில்லி டவாலிச் சேவகர்கள்	95
கே. ராமு (டில்லி)	
சென்னை பேசுகிறது	97
வி. அனந்தகிருஷ்ணன் பி. ஏ. (பம்பாய்)	
ஸினிமாவும் கோவிலும்	99
"முருகதாஸா"	
கலங்காப்புலி	102
எஸ். எம். எஸ்.	
கன்றைக்கொன்ற பசு....	106
எஸ். குருசாமி, பி. ஏ.	
தமிழ்நாட்டில் ஹிந்திப்படங்கள் தயாரிப்பு	109
ஒய். வி. ராவ்	
ஹநுமானின் ஜன்மபூமி	110
ஸ்ரீமதி. எஸ். விசாலாக்ஷி	
பாரதிதாஸன்	112
புரொபஸர். கே. ஸ்வாமிநாதன்	
வர்ணப் படங்கள்:	
அசோகவனக் கனவு	8
சேகர்	
ஆதிக்கூத்து	20
ராமராஜு	
நாட்டிய நாரி	44
மாஸ்டர். ராஜம்	
ஆடும் சிதம்பரம்	60
சி. குருநாதம் அண்டு சன்ஸ்	
கர்நாடகம்	112
சி. சுப்பராயலு	

★

ஆசிரியர்:
ஸு. சுப்ரஹ்மணியன்,
"சங்கு

★

நமஸ்காரம்

ஹநுமானுக்கு சமீபத்தில் நடந்த ஆண்டு நிறைவின் உவகைதான் இந்தமலராகப் புஷ்பித்திருக்கிறது. தமிழரின் சந்நதியில் சந்தோஷத்தோடு இதை சமர்ப்பிக்கின்றோம். வெளியாவதற்கு முன்னமேயே ஆயிரக்கணக்கான தமிழ் இல்லங்களினின்று இம் மலருக்கு அழைப்புகள் வந்து குவிந்தன. ஹநுமானிடம் மக்கள் காட்டும் அன்புக்கு அதுவே போதுமான அறிகுறி.

நமது திருவிழாக்களில் தேர் விழாவன்று எவ்வளவு ஒத்துழைப்பும் ஊக்கமும் வேண்டுமோ, அவ்வளவு சுடரும் சுறுசுறுப்பும் ஆண்டு மலர் வெளியிடும் பத்திரிகாலயத்திலிருக்க வேண்டும். அந்த உற்சாகத்தை நமது காரியாலயத்தில் கண்டோம். தமிழ்ப் பண்ணையில் தற்காலம் வளமை யூட்டிவரும் பெரியார்களெல்லாம் இம்மலருக்கு உதவி செய்திருப்பது இன்னொரு திருப்தி.

இம்மலரில் வெளியாகி யிருக்கும் கட்டுரைகள் பல, இன்று தமிழில் ஜீவநடை எழுதுவோர்கள் அருளியதாகும். கஸ்தூரி குவித்து வைத்த பிதிரார்ஜிதப் பெட்டி போன்ற ஸ்ரீ ஸ்வாமிநாதய்யர், வெசூவியஸ் வெடிப்பது போல புதுப்புது எண்ணங்களை அள்ளி வீசும் வ. ரா., பிறநாட்டு நாகரிகங்களைக் குருவி போலக் கொணர்ந்து சேர்க்கும் ஸ்ரீ. ஏ. கே. செட்டியார், கற்பனை வெள்ளத்திலே முழுகி நிலை காட்டும் பிச்சமூர்த்தி, நையாண்டி நைபுண்யத்தையே புண்ணியச் செய்கையெனக் கொண்டுள்ள 'சிட்டி', மனித உணர்ச்சிகளை எழுத்தில் பிசைந்து பிசைந்து தரும் பி. எஸ். ராமையா, நாட்டின் பழைய வாழ்வுகளை வஸ்திரகாயம் செய்து அந்தப் பொடியை வார்த்தைக் கோலங்களாகப்போடும் டி. என். குமாரஸ்வாமி, கிராம மக்களே தெய்வங்களென நினைக்கும் பி. எஸ். சங்கரன், கோத்தமங்கலம் சுப்பு, உரைநடை மட்டுமல்ல கவிதையிலும் தானொரு வார்த்தைச் சிற்பி யென்பதை நிரூபித்திருக்கும் ஸ்ரீ. கே. ஸ்ரீநிவாசன், பிரதிபைத்தராசுடைய ஆசிரியர் ஸ்வாமிநாதன், காலத்தின் வேகத்தோடு பேனாவைப் போட்டியிடுமாறு விட்டிருக்கும் சுவாமி சுத்தானந்தாஜி இவர்களெல்லாரும் இம்மலரில் எழுதி யிருப்பது நமது பாக்யமாகும். கு. ப. ரா, சிதம்பர சுப்ரமணியன், குருசாமி, கி. வ. ஜ., ஒய். வி. ராவ், அப்புஸ்வாமி, ஸ்ரீ. குகப்ரியை, டி. என். எஸ்., ஸ்ரீ. ஈஸ்வரன், அனந்த கிருஷ்ணன், ஸ்ரீமதி விசாலம், ஸ்ரீ சபாநாதன், முருக தாஸா முதலிய இதர நண்பர்களுக்கும் நாம் எப்படி நன்றி செலுத்தப் போகிறோம்! உழைப்பெல்லாம் அவர்களுடையது; சிருஷ்டி கௌரவமோ காரியாலயத்துக்கு.

வெறும் பொழுது போக்குக்கான வெளியீடாகப் போய்விடாமல் ஒரு கலையின் கதிராகவேனும் இதை ஆக்கவேண்டுமென விரும்பினோம். சித்திரக்கலையின் பல அவதாரங்களையும், விவரங்களையும் இம் மலரில் சேர்த்திருக்கிறோம். தமிழ் ஓவிய உலகின் சிறந்த பிரதிநிதிகளும் இம்மலரை அலங்கரித்திருக்கிறார்கள். ஸ்ரீமான் குலசேகர் தாம் கண்ட 'அசோகவனக் கனவை' வர்ணத்தில் வேய்ந்திருக்கிறார். ஸினிமா நடிகர் ஸ்ரீ ராஜத்துக்கு தமிழ் நாட்டின் ஓவியர் சமூகத்திலும் ஒரு உன்னத ஸ்தானம் கிடைத்துவிட்டதென்பதற்கு அவர் வழங்கியுள்ள 'நாட்டிய நாரி'யின் படம் ஒன்றே போதும். ஹநுமான் காரியாலயத்தில் ஸேவகரா யிருந்து வரும் ஸ்ரீ ராமராஜு, எவ்வளவு திறமையுள்ள கலைக் களஞ்சியம் என்பது இந்த ஆண்டு மலரின் சிருஷ்டி காலத்தில்தான் தெரிந்தது. காமிராவைத் தூக்கினாலும் சரி, வர்ணத்தைக் குழைத்தாலும் சரி அவருடைய சுறுசுறுப்பே அலாதி. 'ஆதியும் பாதியும் ஆடிய கூத்'தின் அதிர்ச்சியையும், சுழற்சியையும் வெறும் மசியைத் தாண்டவமாடச் செய்து அவர் காட்டியிருப்பது இந்த வருடத்தின் சிறந்த சித்திரங்களில் ஒன்றாகும். கட்டுரைகளுக்குப் படங்களைக் கையால் போடுவதற்குப் பதிலாக, பொருத்தமான போட்டோக்களை எடுத்துத் தந்திருக்கிறாரே, அது தமிழ்ப் பத்திரிகை யுலகத்திலேயே நூதன முயற்சியென்று சொல்லலாம்.

'ஆண்டு மலர்' என்ற ரதோற்சவம் எங்கள் காரியாலயத்தில் நடந்து முடிந்து விட்டது. இந்த விழாவில் முக்கிய மேஸ்திரியாக இருந்து நடத்திக்கொடுத்த பெருமை வத்தலக்குண்டு, பி. எஸ். ராமையாவைச் சேர்ந்தது. 'வளர்ச்சியே வாழ்வு' என்ற மனோபாவமுடைய கலைக் கொழுந்து ஸ்ரீ. பி. எஸ். ராமையா. அவருடைய உற்சாகம் என்றென்றும் பசுமையோடிருப்பதாக!

தமிழ் நாட்டின் கலை வள்ளல்கள் இந்த ஆண்டு மலர் சிருட்டியின் போது சொரிந்த அன்பைக் காணும் போது ஹநுமான் விசுவரூபத்தோடு தமிழ் நாட்டில் திகழ்வான் என்ற நம்பிக்கையும் நமக்கு அதிகரிக்கிறது. நமஸ்காரம்.

"நீட்டிதென நேர்ந்தன னெனு நெடிய கையால்
காட்டினன் ஒரு ஆழியது வாணுதலி கண்டாள்."

* * * *

"குழந்தையை யுயிர்த்த மலடிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதொரு உயிர்ப் பொறையுமொத்தாள்."

—கம்பன்

KESARI PRINTING WORKS, MADRAS.

கிராமவாசி கணக்கெடுத்தால்

வத்தலக்குண்டு
பி. எஸ். சங்கரன்
எழுதியது

நமது மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டு ஒரு வருஷம் ஆகிவிட்டது. பதவி ஏற்பைத் தீவிரமாக எதிர்த்த பண்டித ஜவஹர்லால் முதல், பதவி ஏற்புக்குக் காரண பூதராயிருந்த ஸ்ரீ சத்யமூர்த்தி வரை எல்லாரும் லாப நஷ்டக் கணக்குப் பார்த்து லாபக் கலத்தில் முடிவு கட்டி விட்டார்கள். பத்திரிகைகளும் ஏறக்குறைய அதே முடிவுக்குத் தான் வந்திருக்கின்றன. பதவிப் பொறுப்பின் பளுவை ஏற்றிருப்பவர்களும், ஏதோ தாங்கள் செய்திருக்கும் காரியங்களைத் திரும்பிப் பார்த்துத் திருப்தி அடைந்து, அந்தத் திருப்தியில், தங்கள் மீது இருக்கும் பளுவின் கனத்தைக் கொஞ்சம் மறந்திருக்கிறார்கள்; இன்னமும் பளு அதிக மானாலும் தாங்க சக்தி வந்து விட்டதாகவும் சொல்லுகிறார்கள்.

காங்கிரஸ் தொண்டர்கள், ஊழியர்கள் அபிப்பிராயங்களைப் பற்றி அதிகமாக யாரும் கவலைப் படுவதில்லை. தங்களைப் பற்றி யாரும் கவலைப் படுவதில்லையே என்ற கவலை ஊழியர்களுக்கும் இருப்பதில்லை. காங்கிரஸ் ஊழியர்கள் காந்தி சகாப்தத்தின் அபூர்வ சிருஷ்டிகள். ஏசு நாதர் தயாரித்த ஆதி பக்தர்கள் பன்னிருவரில் ஒருவர் துரோகம் செய்தார். ஏசு நாதர் அவரை மன்னித்துக் காப்பாற்றினார். ஆனால் மகாத்மா காந்தியின் ராஜீய சிஷ்யர்களாகிய காங்கிரஸ் ஊழியர்கள் துரோகம் செய்தால், அந்த மகாத்மாவின் மன்னிப்புத் தான் அவர்களுக்கு மரண தண்டனை. காங்கிரஸ் ஊழியர்கள் எந்தக் கஷ்டத்தையும் அனுபவிக்கத் தயார். ஆனால் அந்த காந்தி ஆக்ஞைக்கு மீறியோ மாறுபட்டோ அவருடைய கிருபா கடாக்ஷத்தால் மன்னிக்கப்பட்டு விட்டால், அத்துடன் அந்த ஊழியரின் ராஜீய வாழ்வு அதோ கதிதான்.

இந்த மகா ரஸமான அபூர்வமான தனியாட்சியின் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கக் காங்கிரஸ் ஊழியர்களுக்குத் தான் தெரியும். அதனாலே தான் அவர்கள் காந்தி சகாப்தத்தின் அபூர்வ சிருஷ்டிகள் என்றேன். பிற்காலச் சரித்திராசிரியர்கள் காந்தி சிஷ்யர்களை இருபதாம் நூற்றாண்டு அதிசயங்களில் ஒன்றாகக் குறிப்பிடுவர் என்பது நிச்சயம். நமது ஜனங்கள் விதியில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அதைக் காட்டிலும் அதிகமான நம்பிக்கை காந்தியின்மீது காங்கிரஸ் ஊழியர்களுக்கு உண்டு. ஆதலால் காந்திஜீ பார்த்துத் தப்பு என்று சொல்கிற வரையில் காங்கிரஸ் ஆட்சியைப் பற்றி லாப நஷ்டக் கணக்கு எடுப்பதற்கு காங்கிரஸ் ஊழியர்கள் யாரும் தயாராக இல்லை.

நமது தலைவர்கள் மந்திரிகள் முதலியவர்களுக்கும் காங்கிரஸ் ஊழியர்களின் கட்டுப்பாடு, ஒழுங்கு முதலியவற்றின் மீது அபார நம்பிக்கை உண்டு. ஆதலால் அவர்கள் அபிப்பிராயங்களைப்பற்றிக் கவலை கொள்ளாமலே ஆட்சியை நடத்தலாம்.

குதிரை பயப்படுவது வண்டிக்குள் உட்கார்ந்திருக்கும் பிரயாணிகளுக்கு அல்ல; வண்டியை ஓட்டும் சாரதியின் சாட்டைக்குத்தான். சாரதி சாட்டையை சரியான—அவசியமான—சந்தர்ப்பத்தில் தவறாமல் உபயோகப்படுத்துவார் என்கிற நம்பிக்கை இருக்கிற வரையில், வண்டிக்குள் இருக்கும் பிரயாணி சௌக்யமாய் தூங்கலாம்.

இப்பொழுது ஏழு மாகாணங்களிலும் காங்கிரஸ் ஆட்சியை நடத்துகிற சாரதி மகாத்மா காந்திதான். காந்தி ஓட்டும் வண்டி கல்லின் மீது ஏறிக் கவிழ்ந்துவிடாது; அச்சுமுறிந்துவிடாது; கடையாணிகள் ஜாக்ரதையுடன் பொறுத்தி இறுக்கப் பட்டிருக்கும்; வண்டிக்காரன் தூங்கமாட்டான். எல்லாம் சரிதான். இருந்தாலும் வண்டியிலே இருக்கிற பிரயாணி அடிக்கடி எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம் என்று மைல் கல்லைக் கணக்குப் பார்ப்பது மனித சுபாவம் தானே!

அது போலாவது இந்த ஒரு வருஷ ஆட்சியின் பலாபலனை அளந்து பார்க்க வேண்டுமென்ற எண்ணம் நமக்குத் தோன்றுவது சகஜம். இயற்கையாகத் தோன்றும் இந்த எண்ணத்தைக் கூட அழுத்திவைத்துக் கொள்ளும்படி தற்பித்தி செய்யப் பட்டிருக்கிறான் காங்கிரஸ் ஊழியன்! காந்தி 'தப்பு' என்று சொல்லுகிற வரை 'நல்லது' என்ற பல்லவியையே பாடி வருகிறான். ஆகவே நாமெல்லோரும் என்னதான் முன்னேறி விட்டதாகச் சொல்லிக்கொண்டாலும் பிரயோஜனமில்லை. வண்டிக்குள்ளே இருக்கிற பிரயாணி மைல் கல்லைப் பார்க்கும்பொழுது முன்னேற்றம் இருக்கவேண்டும். வண்டிக்குள்ளே இருக்கிற பிரயாணி—கிராமவாசி—என்ன சொல்லுகிறான்?

கிராமவாசியின் அபிப்பிராயம், அதாவது பொது ஜனங்களின் அபிப்பிராயம், காங்கிரஸ் ஆட்சி வேண்டுமென்று சென்ற ஒரு வருஷத்திற்கு முன்னால் ஒரு முனையாக இருந்தது. அதன் பலன் தான் தேர்தலில் காங்கிரஸுக்கு அந்த வெற்றி. கண்ணுக்குப்புலப்படாமல் நிரந்தரமாக இருக்கும் பிரிட்டிஷ் ஆட்சியும் அதன் பிரத்தியக்ஷ ரூபப்பிரதிநிதியாக விளங்க முயன்ற ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியும் தொலைய வேண்டுமென்று விரும்பி, காங்கிரஸுக்கு ஓட் போட்டால் அந்த விருப்பம் வீணாகாதென்று நம்பி, கிராமவாசிகள் தங்கள் வாக்குகளை தாராளமாக நமக்கு அளித்தார்கள். சுயராஜ்ய சித்தி அடைவதற்கு முன்னால் இடைக்காலத்தில் ஏதாவது சில்லரை சௌகரியங்கள் உண்டாகும் என்றும் தீர்மானித்திருந்தார்கள். இன்றைக்கு ஒரு வருஷமாகிவிட்டது. சுயராஜ்ய பாதையில் எவ்வளவு தூரம் போயிருக்கிறோம்? இடைக் காலத்தில் எதிர்பார்த்த சில்லரை சௌகரியங்கள் எவ்வளவு கிடைத்திருக்கின்றன? இந்த இரண்டு கேள்விகளுக்கும் கிராம வாசி என்ன பதில் அளிக்கிறான் என்பதிலிருந்து சரியான லாப நஷ்டக் கணக்குத் தயாரித்து விடலாம்.

காங்கிரஸ் ஆட்சியில் செய்திருக்கும் மூன்று முக்கிய நன்மைகள் மதுவிலக்குச் சட்டம், கடன் நிவாரணச் சட்டம், கைத்தறித் துணிக்குப் பாதுகாப்பு. இன்னும் ராஜாங்க நடைமுறையில் அவ்வப்பொழுது தோன்றித் தீர்ந்து போகும் பிரச்னைகளில் புரட்சிகரமான மாற்றமும் தைரியமான சமாளிப்பும் இருந்திருக்கின்றன. உதாரணம் வேண்டுமானால் நீலன் சிலையை அப்புறப் படுத்திய விஷயம், மதுரை மில்லுக்கு 144-வது சட்டப் பிரிவை உபயோகப்படுத்தியது, திருவாங்கூர் நேஷனல் பாங்கி நெருக்கடியில் சென்னை சர்க்கார் தலையிட்டது முதலியவற்றைச் சொல்லலாம். மதுரை மில்லுக்கு 144-வது பிரிவு பிரயோகிக்கப்பட்ட விஷயம் பத்திரிகைகளில் படித்ததும், அந்தச் செய்கையின் மகத்துவத்தை எத்தனை பேர்கள் கற்பனா சக்தியோடு கிரஹித்தார்களோ தெரியாது.

நமது மாகாணத்தில் பொறுப்பு வகிக்கும் பிரதம மந்

திரியின் போக்கே தனியானது. ஆரவாரமும் ஆடம்பரமுமில்லாமல் பெரியபிரச்னைகளை சாதூத்தாகத் தீர்ப்பதிலும், கிடைத்த வெற்றியை ஒரு வெற்றியாகவே வெளிக்குத் தெரியாமல் அனுபவிக்கும்படி செய்வதிலும் ராஜாஜி மகா சமர்த்தர். ஒரு பெரிய மில் முதலாளிகளுக்கு 144-வது பிரிவை உபயோகிப்ப தென்பது சாமானியமான காரியமன்று. இதை ஒரு பொது உடமை அரசாங்கம் செய்திருந்தால் எவ்வளவு சச்சரவும் மனக் கசப்பும் ஏற்பட்டிருக்கும் என்பதை சரித்திரம் எழுதுகிறவர்கள் தான் தீர்மானிக்கவேண்டும். மூச்சுப் பேச்சில்லாமல் காரியத்தை நடத்திவிட்டு, ராஜ ரிஷி ஜனகரைப் போல் மேற்கொண்டு காரியங்களைப் பார்த்துக் கொண்டு வருகிறார் ராஜாஜி.

நீலன் சிலை விஷயமாக எழுந்த கசமுசலில், அவர் சாதித்துள்ளதின் அளவை சாதாரண குடியானவன் கற்பனைசெய்து கொள்ளக் கூட முடியாது. புதிய திட்டப்படி ஏற்பட்டுள்ள மாகாண சுயாட்சியில், பொறுப்பை வகிக்கும் மந்திரிகளின் அதிகார எல்லைக்குள் பிரிட்டிஷ் பார்லிமெண்டு தலையிட முயலுவது அசட்டுத்தனமாக முடியும் என்று எவ்வளவு சாவகாசமாக, சர்வ சகஜமாகச் சொல்லி விட்டார்!

நமது மாகாணத்தைப் பொறுத்த வரையில் உத்யோக நடை முறையில் என்னென்ன புரட்சி முறைகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்கிற விஷயம் விளம்பரம் இல்லாமலே போய்விட்டது.

இப்பொழுது நமது கணக்கெல்லாம் மேலே சொன்ன கண்ணிய உயர்வு சம்பந்தப்பட்டதல்ல. பசியினால் துவண்டு, கடனால் கஷ்டப்பட்ட கிராமத்தான் ஆவல் தீர்ந்து விட்டதா இல்லையா என்பதே. மதுவிலக்குத் திட்டத்தால் ஒரு ஜில்லாக் குடியானவர்களுக்கு நல்ல சுகம். கூடிய சீக்கிரம் மற்ற ஜில்லாக் குடியானவர்களுக்கும் இந்த லாபம் கிட்டும். கடன் நிவாரணச் சட்டத்தால் கடன்பட்டிருந்த விவசாயிகளுக்கும் ஜமீன் கிஸ்தி பாக்கி வைத்திருந்த குடிகளுக்கும் லாபம். கைத்தறி துணிக் கடைக்காரர்களுக்குப் பாதுகாப்பென்று சொல்லிப் போட்டிருக்கும் லைசென்ஸ் விகிதத்தில், எல்லா ஜவுளிகளும் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கும் நஷ்டம் என்று தான் கணக்கெடுக்கலாமே ஒழிய, கைத்தறி நெசவாளர்களுக்கு லாபம் என்று கணக்கெழுதுவதற்கில்லை. ஏதோ பின்னால் லாபம் வரலாம் என்று எதிர்பார்க்கலாம். பின்னால் எதிர்பார்க்கும் லாபத்தைப் பேரேட்டில் ஏற்றுவது வியாபாரத்திற்கு ஒழுங்கில்லை.

கிராமச் சாவடியில் உட்கார்ந்துகொண்டு வாடின வெற்றிலையையும், புகையிலைக் காம்பையும் வாயில் அடக்கிக்கொண்டே ஒரு குடியானவன் மற்றொரு குடியானவனைப் பார்த்து, "ஆமா, இந்த காங்கிரஸ்காரன் மந்திரியாகி ஒரு வருசமாச்சே, என்னையா வரிவம்பு ஒண்ணும் குறையல்லே; எல்லாம் பழைய சொக்கனே சொக்கன் என்றிருக்கே?" என்று கேட்கிறான். அவனுடைய வரிப் பளுவு குறையவில்லை. ரூபாய்க்கு மூன்று அணாவோ நாலணாவோ குறைந்திருப்பது ஒட்டக முதுகின் பாரத்திலிருந்து சுளகு ஒன்றை எடுத்த கதைதான்.

"காங்கிரஸ் மந்திரி வந்தால் காடு பட்டிக்கு ரோடு போடுவாங்கன்னு சொன்னாங்களே; என்னையா ஒரு வருச மாச்சே" என்ற சுப்பா பிள்ளையின் கேள்விக்கு பதில் சொல்லமுடியாமல், அந்தத் தெருப் பக்கமே போவதில்லை தொண்டர் ராமசாமி. "பண மில்லை" என்ற பதிலை மந்திரி, சட்டசபை மெம்பரிடம் தான் சொல்ல முடியுமே ஒழிய, மெம்பர் காடு பட்டியில் சொல்ல முடிவதில்லை. ஆத்தூருக்கு ஆஸ்பத்திரியில்லை; படித்த பிள்ளைக்கு வேலை இல்லை; விலைவாசி ஏறவில்லை; குளிப்பட்டிக்கு இன்னும் கிணறு வெட்டவில்லை; குடியானவன் குத்தகை கொடுத்தது போகபாக்கி குறுணி நெல் மிஞ்சவில்லை, இத்யாதி இத்யாதி....

வேறொரு வகையிலும் கிராமவாசிக்குப் பெரிய ஏமாற்றம். தேர்தல் காலங்களில் வோட்டு வாங்குவதற்காக சர்க்கார் உத்யோகஸ்தர்களையும், போலீஸ்காரர்களையும் ஏதோ பைசாச அவதாரங்கள் என்று சித்தரித்து விட்டான் காங்கிரஸ் தொண்டன். இன்று மேடைதோறும் ராஜாஜி போலீஸ்காரர்களையும், உத்தியோகஸ்தர்களையும் புகழ்வது கிராமவாசிக்குப் புரியவே இல்லை. உள் அந்தரங்கம் வேறு விதமாக இருக்கலாம். தொண்டர் முன்னால் பிரசாரம் செய்த தோரணை பிசகு என்று இன்று நாம் முடிவு கட்டலாம். ஆனால், கிராம ஜனங்களின் ஏமாற்றத்தைப் பற்றித் தான் இப்பொழுது குறிப்பிடுகிறேன்.

உத்யோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுக்காமல் காரியம் ஆகாது என்கிற மனப்பான்மை குடியானவர்களை விட்டு அகலவில்லை. ஒரு வருஷ ஆட்சிக்குப் பின்னாலும் 'மாமூல் விவகாரம்' நிற்காமலிருப்பது குடியானவனுக்கு ஆச்சரியத்தைத் தான் விளைவிக்கிறது. 500 ரூபாய் பட்டாவுள்ள கர்ணம் முத்துச்சாமி பிள்ளை, இன்றைக்கும் கூட தாசில்தார் முன்னால் மேல் வேட்டியை இடுப்பில் கட்டி வாய் பொத்தி நிற்பதும், போலீஸ் இன்ஸ்பெக்டர் எஜமானுக்காக இருபது பிரயாணிகளுடன் மோட்டார்பஸ் காத்துக் கொண்டே நிற்பதும், விவசாயப் பண்ணை இன்ஸ்பெக்டர் கோட், பூட், ஹாட்டுடனும் டவாலிச் சேவகனுடனும் எப்பொழுதாவது கிராமங்களுக்கு முகாம் செய்து விட்டவுடன், விவசாயம் விருத்தி அடைந்து விட்டதாகச் சொல்லிச் சம்பளம் வாங்குவதும், கிராமவாசியின் கண்களில் ஏமாற்றப் பார்வையை உண்டு பண்ணுகிறது. அவ்வப்பொழுது மந்திரிகள் பொது ஜனங்களுடன் கைகோத்துப் பழகுவதைத் தவிர, மற்ற எல்லா விஷயங்களிலும் பழைய அரசாங்கமே தான் நடப்பதாக கிராமச்சாவடி, ஆற்றங்கரை அக்ரஹாரத்துத் திண்ணை எல்லா இடங்களிலும் கிராமவாசி பேசுகிறான். ஆகவே, கிராமவாசியின் கணக்குப்படி நஷ்டக் கலத்தில்தான் முடிவு கட்டவேண்டியிருக்கிறது.

மகாத்மா காந்தியும், மந்திரிகளும் கட்டும் கணக்கு முடிவிற்கும் கிராமவாசி கட்டும் முடிவிற்கும் வித்யாச மிருப்பானேன்? வித்யாசமிருக்க விடுவது காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அஸ்திவாரத்தை பல ஹீனப்படுத்தி விடாதா? இந்தக் கேள்விகளுக்கு பதில், காங்கிரஸ் ஸ்தாபனங்களில் பொறுப்புக்கும், பதவிக்கும் போட்டி போடும் தலைவர்கள் சொல்லியாக வேண்டும்.

உண்மையான நிலைமை இது தான். காங்கிரஸ் மந்திரிகள் வெறும் சில்லரை சௌகரியங்களை விருத்தி செய்வதுடன் நில்லாமல், ஜனங்களின் ராஜீய மனப்பான்மையில் ஒரு பிரளயத்தை உண்டு பண்ண விரும்புகிறார்கள். இப்போதுதான் சமுத்திரத்தில் வலையை வீசியிருக்கிறார்கள் காங்கிரஸ் மந்திரி சபையார். மீன்கள் அங்கங்கே சிக்கி இருக்கின்றன. அவசரப்படாமல் மெதுவாகக் கயிற்றை இழுத்தால்தான் வலைக்கும் சேதமில்லாமல் எல்லா மீன்களையும் கைப் பற்றலாம். வெளியேயிருந்து பார்க்கும் கிராம வாசிக்கு வலை விரித்திருப்பதே கண்ணிற்குத் தெரியவில்லை. ஆதலால் நஷ்டக் கணக்கெழுதுகிறார்கள்.



கிராம வாசிகள் அபிப்பிராயம் ஏமாற்றமாக இருக்கக் காரணம் காங்கிரஸ் தொண்டர்களும், ஸ்தாபனமும் கைக்கொள்ளும் மனப்பான்மை தான். பதவியேற்று நிற்கும் எந்த ஸ்தாபனமும் தன் சக்தியைக் கொஞ்சம் பணயம் வைக்காமல் முடியாது. பதவிப் பொறுப்பின் தவிர்க்க முடியாத பாணங்கள் ஸ்தாபனத்தின் பலத்தைக் கொஞ்சம் தாக்கி இருக்கும். அந்தத் தாக்குதல்களினால் ஏற்படக்கூடிய சேதங்களை அவ்வப்போது கவனித்து, செப்பனிட்டுச் சீர்திருத்தி, ஸ்தாபனத்தின் பலம் குறையாமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய பொறுப்பு ஸ்தாபனத்தில் பதவி வகிப்போருடையதுதான். அதே தாக்குதல்களிலிருந்து ஸ்தாபனத்திற்கு புதிய பலம் ஊறும்படி செய்வதும் அவர்கள் திறமையைப் பொறுத்துத்தா னிருக்கிறது.

நாம் தற்சமயமிருப்பது ராமாயணம் சுந்தர காண்டத்தில் கணையாழி கொடுக்கும் படலம். ஹநுமான் கொண்டுவந்து கொடுத்திருப்பது ஸ்ரீ ராமபிரானின் கணையாழிதான். பின்னால் வரப்போகும் வெற்றிப் பேரின்பத்தின் சூசகம். ஆனாலும் கூட ஜானகியின் பயமும் சந்தேகமும் பூராவாகத் தீர்ந்தபாடில்லை. "நான் சொன்ன கெடுவுக்குள் ஐயன் வரத்தவறி விட்டால் என்னை உயிருடன் காண வியலாது என்பதையும் சொல்லு" என்று சேதி யனுப்புகிறாள் ஹநுமானிடம்.

கிராமவாசிகள் இன்று அந்த சீதையின் மனப் பான்மையில் தான் இருக்கிறார்கள்.

ஒரு சின்ன உதாரணம்: கடன் நிவாரணச் சட்டத்தால் பயனடைந்தவர்களுடன் ஒப்பிட்டால், அதனால் பாதக மடைந்தவர்கள் எண்ணிக்கை எங்கெங்கையோ இருக்கும். இப்படியிருந்தும், இந்தச் சட்டத்தினால் உயிர் பெற்றவர்களின் சந்தோஷக் குரலே காதில் விழக்காணோம்; பாதக மடைந்தவர்களின் கூக்குரல்தான் பலமாக இருக்கிறது கிராமங்களில். சாதக மடைந்த விவசாயி ஏதோ திருட்டுத்தனமான சுகமடைந்தவன் போலப் பதுங்கிப் பதுங்கிச் சந்தோஷப்படுகிறான். வட்டிக் கணக்கை மாத்திரம் வஜாப்பண்ண நேர்ந்த கடன் கொடுத்தவன் குய்யோ முறையோ என்று கூச்சல் போடுகிறான். கடிகாரத்திற்குக் காலா காலத்தில் சாவி கொடுத்தால் தான் அது சரியாக ஓடும், மணி காட்டும். பதவி ஏற்றுள்ள ஸ்தாபனத்தை வெளியிலிருந்து நிர்வகிக்கும் தலைவர்கள் அவ்வப்போது சாவி கொடுக்கா விட்டால், ராஜீய கடிகாரம் ஓய்ந்து நின்றுவிடும். நமது துரதிர்ஷ்டம் நமது தலைவர்கள் சாவி கொடுப்பதற்குப் பதிலாகக் கடிகாரத்தின் பெண்டுலத்தின் கூடவே ஆடுகிறார்கள். எல்லாரும் சேர்ந்தாப்போல் ஓய்ந்துவிடாமல் காப்பாற்றவேண்டும். அந்த வேலையைக் காலாகாலத்தில் நிச்சயமாகச் செய்துவிடுவார் மகாத்மா என்ற நம்பிக்கை யிருக்கிறது.

பாரத சாரதி

"....   ....   பெருஞ்
சேனைத்தலை நின்று போர் செய்யும் போதினில்
தேர் நடத்திக் கொடுப்பான்."

"காந்தி சேர் பதுமராகக் கடிமலர் வாழ் ஸ்ரீ தேவி
போந்து நிற்கின்றா ளின்று பாரதப் பொன்னா டெங்கும்
மாந்தரெல் லாருஞ் சோர்வை அச்சத்தை மறந்து விட்டார்
காந்திசொற் கேட்டார் காண்பார் விடுதலை கணத்தி னுள்ளே."

—பாரதியார்.



ஓரியண்டல் கட்டடங்கள், மதராஸ்.

உங்கள் கடமை

ஒவ்வொரு இளைஞரும், விவாகமா யிருந்தாலும், இல்லாவிட்டாலும், பணக்காரராயினும், ஏழையாயினும், அவரை நம்பி நிற்பவர்கள் சிலர் இருப்பார்கள். தனக்கு மரண மேற்படும் போது அவர்கள் நிர்க்கதியாக இராமல் பாது காப்பது ஒவ்வொரு இளைஞருக்கும் கடமை யாகும்.

இக்கடமையை நிறைவேற்ற 'ஓரியண்டல்' உங்களுக்கு உதவி செய்யட்டும்

சென்ற 64 வருடங்களுக் கதிகமாக **'ஓரியண்டல் பாலிஸிகள்'** சம்பாதிப்பவர் இறந்ததினால் கஷ்டப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு தேவையான சமயத்தில் உதவியிருக்கின்றன.

முன்னேயோ பின்னேயோ

ஒவ்வொருவரும், இன்ஷ்யூர் செய்ய அருகதையற்றவராகி விடக்கூடும். ஆகையால்

உங்கள் கடமையை செய்வதில் தாமதம் வேண்டாம்

உங்கள் ஆயுளை

ஓரியண்டல்

கம்பெனியில் இன்ஷ்யூர் செய்து, குடும்பத்தினரின் பிற்கால வாழ்வைக் காப்பாற்றுங்கள்

ஓரியண்டல்

கவர்ன்மெண்ட் ஸெக்யூரிடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபிதம் 1874

தலைமை ஆபீஸ் :—**பம்பாய்**

இந்தியாவெங்கும் பிரதிநிதிகளும் கிளைகளும்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :—

பிராஞ்சு காரியதரிசி,

ஓரியண்டல் லைப் ஆபீஸ்

அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

அல்லது பிராஞ்சு காரியதரிசி :—

ஓரியண்டல் லைப் ஆபீஸ்
3, மாக்டனல்ட்ஸ் ரோட்,
திருச்சி கண்டோன்மெண்டு

ஓரியண்டல் லைப் ஆபீஸ்
மேல மாசி தெருவு,
மதுரை

தலைமை ஆபீஸ் :—ஓரியண்டல் கட்டடங்கள், பம்பாய்

திருவிளக்கு

ஏற்றிவைத்தேன் திருவிளக்கை
போற்றிப்பணி, பொன்மயிலே!

ஓட ஆட நேரமில்லை
ஒளிக்கப் பிடிக்க வெளிச்ச மில்லை
உள்ளேவா கண்ணே! உள்ளேவா கண்ணே!

அந்தி மல்லி மலரு நேரம்
அழகு தாமரை குவியு நேரம்
பறவை கூட்டில் படியு நேரம்
கறவை வீட்டில் உறையு நேரம்
உள்ளேவா கண்ணே! உள்ளேவா கண்ணே!

சூழுகின்ற இரவைக் கீறி
ஜொலித்து நிற்கும் ஜோதியாகி
ஆழமான மனத்திற் குள்ளே
அறிவு காட்டும் அருள் விளக்கு (ஏற்றி)

நாலு பக்கமும் ஒளி பரப்பி
நடுவில் நின்று தலை நிமிரும்
செறிந்து வரும் இருள் திரளைச்
சீறி எழும் ஜோதிப் படம் (ஏற்றி)

எண்ணெய் திரி உள்ளளவும்
தானெரிந்து தவம் புரியும்
காமவெகுளிக் காற்றுப் பட்டால்
கலங்கி மலங்கி அலங்கி ஆடும் (ஏற்றி)

உரத்தைப் பெருக்கும் உள்விளக்கு
சலிப்பை மாய்க்கும் சரவிளக்கு
செயல் வழிக்குத் துணை விளக்கு
கண்ணன் தந்த கைவிளக்கு (ஏற்றி)

வெற்றி வீரர் கொற்ற விளக்கு
வினையில் வீர மூட்டும் விளக்கு
நமனுக் கிருட்டுக் காட்டும் விளக்கு
நமது நாட்டு நல்விளக்கு (ஏற்றி)

தந்தை வந்தழைக்கிறார்:
தாவிப் பறந்து செல்லு நீ
ஆவிபோன்ற அண்ணலார்:
அவரையும் வணங்கிவா (ஏற்றி)

"மணிக்கொடி" ஆசிரியர்:

கே. ஸ்ரீநிவாசன்



"மலரின் மேவு திருவே!
....
செல்வமெட்டு மெய்தி—நின்னால்
செம்மையேறி வாழ்வேன்
இல்லையென்ற கொடுமை—உலகில்
இல்லையாக வைப்பேன்"

—பாரதியார்.

ஜய் சங்கர் மகாதேவ் !
காசி

அல்லா ஹோ அக்பர் !



ஸத் ஸ்ரீ அகால் !
அமிர்தசரஸ் சீக்கியர் பொன் கோயில்

பாண்டுரங்க விட்டல !
பண்டரீபுரம்

—ஹ⁻னி தவ உதாரவாணி
ஹிந்து பௌத்த ஸிக்க
ஜைன பாரசீக
முஸல்மான கிறிஸ்தானி.
—டாகூர்.

அரஹர மகாதேவா !
தஞ்சாவூர்

அண்ணமலைக் கரோகரா !
திருவண்ணமலை (வலம்) ←



பாபரஹித பசுபதே !
→ நேபாளம் (இடம்)

புத்தம் சரணம் கச்சாமி !
கயா

மகாவீரப் பிரபுவே நம :!
பராஸநாதர், ஜைனக் கோயில், கல்கத்தா.

அருட்சோதி வழிகாட்டு !

சங்கம் சரணம் கச்சாமி !
டகோபா, ஸிலோன்

—மக்கள்
துங்கமுயர்ந்து வளர்கெனக்
கோயில்கள்
சூழ்ந்தது மின்னுடே.
—பாரதியார்.



நான்மறை தந்த கோவே !
வேதாரண்யம்



சிவராஜினி கஞ்சி காமாக்ஷி !
→ காஞ்சீவரம் (இடம்)

சிவ சிவ சிவ சிவ !
108 சிவலிங்கம், பர்த்வான் ←
(வலம்)



கண்ணாத்தா காத்தமுத்தே—மாரியாத்தா நீ
பொன்னாத் தந்திடணுமடி மாரியாத்தா. அடியே
என்னாத்தா நீயலவோ—மாரியாத்தா அதைச்
சொன்னாத்தாஞ் சொகங்கெடைக்கும்—மாரியாத்தா. (1)

ஓங்காரக் காளியடி—மாரியாத்தா (நான்)
ஒன்னை நம்பிப் போட்டேனடி—மாரியாத்தா.
பாங்காகப் பயிர் செழித்து —மாரியாத்தா
பழனமெல்லாம் செறக்கவேணும்—மாரியாத்தா. (2)

ஒன்னையல்லாத் தெய்வமில்லே—மாரியாத்தா நான்
திண்ணையிலே தூங்கப்போறேன்—மாரியாத்தா.
ஒன்னெலந்தான் என்னெலமும்—மாரியாத்தா
செந்நெல்தர வேணுமடி—மாரியாத்தா. (3)

நாடு செழிக்கவேணும்—மாரியாத்தா எங்கும்
நல்ல மழை பெய்யவேணும்—மாரியாத்தா.
காடுகிளம்பவேணும் மாரியாத்தா—கதிர்
கட்டுக் கலங் காணவேணும்—மாரியாத்தா. (4)

மாரிமாரி மாரிவேணும்—மாரியாத்தா பூ
மாரிசேஞ்சு மதுவெடுக்கிறம்—மாரியாத்தா.
வேறுயாரும் தெய்வமில்லே—மாரியாத்தா உன்னை
வேணமட்டும் கும்புடறம்—மாரியாத்தா. (5)

ஆத்துலே தண்ணிவரணும்—மாரியாத்தா சம்பா
நாத்துப் பசுக்கவேணும்—மாரியாத்தா.
நேத்தைக்கிச் சாமியா நீ—மாரியாத்தா எங்க
கோத்திரப் பேயில்லையோ—மாரியாத்தா. (6)

தத்துக்கிளி வெட்டுப்பூச்சி தண்டட்டியாம்—பொளைகள்
தாவா திநக்கவேணும்—மாரியாத்தா.
மத்தப்படி மாடுகண்ணு கொழுகொழுத்து உந்தன்
மதமை வெளங்கவேணும்—மாரியாத்தா. (7)

திண்டாட விட்டுடாதே—மாரியாத்தா உன்னையே
கொண்டாடிப் பூசை வைக்கிறம்—மாரியாத்தா.
உண்டோடி உன்னைப்போல—மாரியாத்தா தெய்வம்
கண்டோரார் சொல்லட்டுமே—மாரியாத்தா. (8)

எல்லாமும் சாமியாமோ—மாரியாத்தா பட்டுக்
தூல்லா மழைக்காமோ—மாரியாத்தா.
வல்லாரை பால்தருமோ—மாரியாத்தா அது
நல்லாவின் பால்பொருமோ—மாரியாத்தா. (9)

தட்டி வெட்டிக்கும்பிடுரோம்—மாரியாத்தா. புள்ளே
தட்டி தெம்பாவாழவேணும்—மாரியாத்தா.
சட்டியிலே நெத்தம் வைக்கிறோம்—மாரியாத்தா பீங்கான்
வட்டியிலே சோறிருக்கணும் மாரியாத்தா. (10)

★

கோத்தமங்கலம் :

ஸுப்ரமணியம்

★

எவ்வளவு அவசரம்!

ஹநுமான் ஆண்டு மலர் வெளிவரப் போகிற தென்று கேள்விப்பட்டவுடன் பாப்பா சைக்கிளில் ஏறிப் புறப்பட்டு விட்டாள், பிரதியை வாங்கிவர.

புருஷப் பயலோன்னே!



எதிரில் வந்த அம்பி "இங்கே கொடு சைக்கிளை; நான் ஒரு நொடியிலே போய் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அடெ போக்கிரி!



மலர் வந்தவுடன் அதை எடுத்துக்கொண்டு ஒருத்தருக்கும் தெரியாமே வந்து உட்கார்ந்து விட்டாள் பேபி பொம்மை பார்க்க!

அழுகையா சிரிப்பா?

மலர் வந்து விட்டதென்ற சந்தோஷமா, "எங்கிட்டேத் தரமாட்டேங்கரா" என்ற வருத்தமா அங்கச்சிக்கு?

ஆவல் ஒரு பக்கம் அதிர்ஷ்டம் ஒரு பக்கம்



மகாமகோபாத்யாய டாக்டர்

உ. வே. சாமிநாதய்யர்

எழுதியது

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள சைவ மடங்களில் திருப்பனந்தாள் காசி மடம் ஒன்று. அங்கே சில வருஷகாலம் குமாரசாமித் தம்பிரானென்பவர் தலைவராக இருந்துவந்தார். அவர் திருவாவடுதுறை யாதீனத்து மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்டார். நானும் அவருடன் கல்வி பயின்றேன். அவ்வாதீனத் தலைவராக இருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய ஆதரவில் இருந்துவந்த நாங்கள் இருவரும் ஒரேகாலத்தில் அம்மடத்தினின்றும் பிரிந்தோம். அவர் திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராகச் சென்றார். எனக்குக் கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதர் வேலை கிடைத்தது.

குமாரசாமித் தம்பிரான் நல்ல அறிவாளி; சிறந்த சிவபக்தி யுள்ளவர்; என்னிடம் பேரன்புடையவர். செய்யுள் நடையிலேயே கடிதப்போக்குவரவு எங்களிடையே நடந்ததுண்டு. அவர் சிலகாலம் திருவாவடுதுறை மடத்திற் காறுபாறாக இருந்து வந்தார். அவருக்கு அம்மடத்தில் வித்துவான் தம்பிரானென்ற பட்டம் அளிக்கப்பட்டது.

அவர் காசி மடத்துத் தலைவராக இருந்தபோது அவர் சம்பந்தமாகக் கும்பகோணம் 'ஸப் கோர்ட்'டில், ஒரு வழக்கு நடைபெற்று வந்தது. அவரும் எதிர்க் கட்சியினரும் சிறந்த பாரிஸ்டர்களையும் அவர்களுக்கு உதவியாகப் பல பெரிய வக்கீல்களையும் நியமித்திருந்தனர். வழக்குமிகவும் பெரியது. ஏறக்குறைய நானூறு சாட்சிகள் வரையில் விசாரிக்கப்பட்டனர். அந்த வழக்கு நடைபெற்று வந்தகாலத்தில் கும்பகோணத்திலும், அதைச் சூழ்ந்துள்ள இடங்களிலும் அதைப்பற்றிய பேச்சாகவே இருந்தது. சாட்சி விசாரணையைப் பற்றியும் குறுக்கு விசாரணையைப்பற்றியும் ஜனங்கள் அங்கங்கே உத்ஸாகமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு கட்சிக்காரரும் தங்கள் தங்கள் பக்கத்தில் வெற்றி உண்டாக வேண்டுமென்பதற்குரிய முயற்சிகளையெல்லாம் செய்துவந்தார்கள். தெய்வங்களைப் பிரார்த்தித்தார்கள்; பணத்தை வாரி இறைத்தார்கள்.

இன்ன கட்சிக்குத்தான் ஜயமுண்டாகுமென்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. பலநாள் நடந்துவந்த வழக்கு விசாரணை முடிவுபெற்றது. தீர்ப்புக் கூறுவதற்காக ஒரு நாள் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நாளை எல்லோரும் எதிர்பார்த்துக்

கொண்டிருந்தனர். இரண்டு கட்சிக்காரர்களுக்கும் இருந்த ஆவலும் பயமும் இத்தகையன வென்று சொல்ல முடியாது. ஜனங்களோ, 'இவ்வளவு விரிவாக நடந்த வழக்கில் தீர்ப்பு எப்படியாகுமோ பார்க்கலாம்!' என்று வியப்போடு எதிர்பார்த்தனர்.

வழக்கு முடிவடையும் காலத்தில் குமாரசாமித்தம்பிரான், கும்பகோணத்திற்கு அருகே காவிரியின் வடகரையில் இருக்கும் சத்திரம் கருப்பூர் என்னுமிடத்தில் உள்ள மடத்தில் தங்கியிருந்தார். அந்த மடம் திருப்பனந்தாள் காசி மடத்தைச் சார்ந்தது. அது கும்பகோணம் காலேஜுக்குக் கிழக்கே ஏறக்குறைய ஒன்றரை மைல் தூரத்தில் உள்ளது. காவிரியில் ஜலமில்லாதபோது ஸப் கோர்ட்டிலிருந்து குறுக்கே போனால் அந்த மடம் ஒரு மைல் தூரந்தான் இருக்கும். காவிரியில் வெள்ளம் உள்ள காலத்தில் பாலத்தைக் கடந்துதான் செல்லவேண்டும்; அப்போது இரண்டு மைல் தூரம் இருக்கும்.

தீர்ப்புக்கூறக் குறிப்பிட்டிருந்த தினம் காவிரியில் ஜலமுள்ள காலமாதலால் அவ்வாற்றின் தென்கரையிலுள்ள கோர்ட்டிலிருந்து சமாசாரம் வருவதை ஒவ்வொரு கணமும் தம்பிரான் எதிர்பார்த்திருந்தார். அங்கங்கே வேலைக்காரர்களை அரைப் பர்லாங்குக்கு ஒருவராக நிறுத்தித் தமக்கு விரைவிலே சமாசாரம் எட்டும்படி ஏற்பாடு செய்திருந்தார்.

காலையில் பதினொரு மணியிருக்கும். காவிரியாற்றில் பூரணப் பிரவாகம் போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு மனிதன் கோர்ட்டிலிருந்து வெகு வேகமாக ஓடிவந்தான். காலேஜுக்கு நேர் எதிர்கரையில் இறங்குந் துறை இருந்தது. அதற்குக் கிழக்கே கச்சேரிக் கட்டிடங்கள் உள்ளன. அங்கிருந்து பாலத்தின் வழியே இக்கரைக்கு வருவதென்றால் நேரமாகும். வேகமாக ஓடிவந்த ஆள் தொப்பென்று செங்குத்தாக இருந்த கரையிலிருந்து காவிரியில் குதித்து நீந்தலானான். காலேஜில் கரையை நோக்கியுள்ள அறையில் நான் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தேன். அந்த ஆள் அவ்வளவு வேகமாக ஓடிவந்து குதித்ததை நான் பார்த்தேன். வழக்கில் குமாரசாமித் தம்பிரானுக்கு ஜயம் உண்டாயிற்றென்று அவன் சொல்லப் போகிறானென்பதை நான் உணர்ந்துகொண்டேன். காவிரி நீரின் வேகத்தைக் காட்டிலும் அவன் வேகம் அதிகமாக இருந்தது.

அந்த மனிதன் தண்ணீரில் திடீரென்று குதித்ததுதான் தாமதம்; இந்தக் கரையில் இருந்த ஒருவன் விஷயத்தைப் பளிச்சென்று ஊகித்துக்கொண்டான். அவ்வளவுதான்; உடனே கருப்பூர் மடத்தை நோக்கி ஓடத் தொடங்கினான். அவன் ஓடி வருவதைக் கண்டு அவனுக்கு முன்னே இருந்த ஒருவன் 'இதுதான் சமயம்' என்று எண்ணி அவனுக்குமுன் ஓட ஆரம்பித்தான். இப்படியே ஒருவனைக் கண்டு மற்றொருவன் ஓடினான். பாலத்துறையிலிருந்த ஆட்களும் இவ்வாறே ஒருவன்முன் ஒருவனாக ஓடினார்கள்.

கருப்பூர் மடத்தில் முன்பக்கத்தில் இருந்த வாசற்காரன் கும்பகோணத்திலிருந்து வரும் சாலையிலே கண்வைத்தபடியே நின்று கொண்டிருந்தான். நெடுந்தூரத்தில் தலைதெறிக்க ஒருவன் ஓடிவருவது அவனுக்குப் புலப்பட்டது; "எசமானுக்கு ஜயம்" என்று கோஷமிட்டுக்கொண்டு அவன் வந்தது தெரிந்தது. உடனே வாசற்காரன் உள்ளே ஓடினான்; "எசமானுக்கே ஜயம்" என்று தம்பிரானிடம் சொல்லி வணங்கினான்.

குமாரசாமித் தம்பிரான் தம்மை மறந்தார். பெரிய வழக்கில் யாருக்கு ஜயம் கிடைக்குமோ என்ற கவலையினால் குழம்பியிருந்த அவர் மனம் ஆறுதல் அடைந்தது. அந்தச் சமாசாரம் சொன்ன வாசற்காரனுக்கு உடனே பணம் வேஷ்டி முதலிய நல்ல பரிசுகள் கிடைத்தன; அவனுக்கு அதிர்ஷ்டம் இருந்தது; சிரமமில்லாமல் பரிசு கிடைத்துவிட்டது.

இரண்டு நிமிஷங்களுக்கு அப்பால் மற்றொருவன் ஓடிவந்தான்; "சாமீ! எசமானுக்கு ஜயம்!" என்று அவன் கூவினான். அவனுக்குச் சில பரிசுகள் கொடுக்கப்பட்டன. பின்பும் இரண்டு மூன்று பேர்கள் வந்து பரிசு பெற்றார்கள்; பரிசு குறைந்துவந்தது. இப்படியே பலர் வரவே, தம்பிரானுக்குச் சலிப்பு உண்டாகி விட்டது; "போக்கிரிப்பயல்கள்! முதலில் நம்மிடம் சொன்னவனுக்கு இனாம் தருவதுதான் நியாயம். ஊரில் இருப்பவர்களுக்கெல்லாம் கொடுக்கமுடியுமா?" என்று அவர் சொல்லிவிட்டார்.

"சாமி! நான் இரைக்க இரைக்க ஓடிவந்தேன். நான் வருவதைக் கண்டு தெரிந்துகொண்டு இவன் முன்னே வந்து சொல்லிவிட்டான்" என்று ஒவ்வொருவரும் சொல்லலாயினர். இந்தத் தொந்தரவு பொறுக்கமுடியாமல், "இனிமேல் இந்தமாதிரி யாராவது வந்தால் உள்ளே விடவேண்டாம்" என்று தம்பிரான் உத்தரவிட்டார்.

கால்மணி கழித்து நனைந்த துணியுடன் வேகமாக, காவிரியில் குதித்து நீந்தியவன் வந்து சேர்ந்தான். மடத்து வேலைக்காரர்கள் அவனை உள்ளேவிடவில்லை. அவன் மன்றாடிப் பார்த்தான். ஒன்றும் பலிக்கவில்லை; எவ்வளவுக்கெவ்வளவு உத்ஸாகமாக ஓடிவந்தானோ, அவ்வளவுக்கவ்வளவு சோர்வு உண்டாகிவிட்டது அவனுக்கு. அப்படியே வாசற்படியில் உட்கார்ந்துவிட்டான். 'கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லையே' என்று அவன் தன் தலைவிதியை நொந்துகொண்டான்.

ஒரு மணிக்குக் காலேஜ் பாடம் முடிந்தது. இரண்டு மணி வரையில் உள்ள இடைவேளைக்குள் கருப்பூர் மடத்திற்குச் சென்று தம்பிரானிடம் சந்தோஷம் விசாரித்து வரலாமென்று புறப்பட்டேன். கருப்பூர் மடம் வந்து சேர்ந்தேன். அங்கே வாசற்படியில், நீந்தி வந்த ஆள், தலையில் கையை வைத்துக்கொண்டு பைத்தியம் பிடித்தவனைப்போல உட்கார்ந்திருப்பதைக் கண்டேன்.

"என் அப்பா, இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? எசமானைப் பார்க்கவில்லையா?" என்று கேட்டேன்.

அவன் தன் துக்கஸ்வப்பனத்திலிருந்து விழித்துக் கொண்டான்; "ஐயோ சாமீ! நான் காவேரியிலே குதித்து நீந்தி ஓடிவந்தேன். என்னை உள்ளே விடாமல் அடித்துத் தள்ளுகிறார்கள். எனக்கு ஏதாவது இனாம் கிடைக்குமென்ற ஆத்திரத்தில் வெள்ளத்தைக்கூடப் பார்க்கவில்லை" என்று அவன் கூறினான்.

நான் சிரித்துக்கொண்டே உள்ளே போனேன். தம்பிரானைக் கண்டு சந்தோஷம் விசாரித்தேன். அப்பால், "இது சம்பந்தமாகப் பல பேருக்கு இனாம் கிடைத்திருக்குமென்று எண்ணுகிறேன்" என்றேன்.

"ஆமாம். பத்துப் பேர்களுக்குமேல் கொடுத்தோம். அப்புறமும் எத்தனையோ பேர்கள் வந்தார்கள்."

"யாருக்கு அதிகமாகக் கிடைத்ததோ?"

"முதலிலே யார் சொன்னானோ அவனுக்குத்தான் அதிகம்."

"இதிலே ஒரு வேடிக்கை: நியாயமாக முதலிற் பரிசைப் பெறவேண்டியவனுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை."

"ஏன்? என்ன சங்கதி?"

"இப்போது இந்த மடத்து வாசலில் ஒருவன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். அவனுக்குத்தான் நியாயமாக முதற்பரிசு கொடுக்கவேண்டும். தன் உயிரைத் திரணமாக மதித்து, இந்தச் சமாசாரத்தை முதலில் வெளிப்படுத்தியவன் அவன்தான்" என்று சொல்லிவிட்டு, அவன் ஓடிவந்ததையும், ஜலத்தில் திடீரென்று குதித்ததையும், அவனைப் பார்த்து மற்றவர்கள் அவனுக்கு முன்னே ஓடிவந்ததையும் விரிவாகச் சொன்னேன்.

தம்பிரான் புன்னகை பூத்தார்; "எங்கே, அவனை இங்கே அழைத்துவா" என்று ஒரு வேலைக்காரனுக்கு உத்தரவிட்டார். ஏமாந்துபோய் உட்கார்ந்திருந்த ஆள் ஓடிவந்து தம்பிரான் காலில் விழுந்தான்; விம்மிவிம்மி அழுவதைத் தவிர அவனால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவன் பட்ட கஷ்டமும், கொண்டிருந்த ஆவலும் அவனுக்கல்லவா தெரியும்?

தம்பிரான் உண்மையை உணர்ந்து அவனுக்கும் பணமும், வேஷ்டியும் அளித்தார்.

"இவன் இப்போது பரிசு பெற்றுவிட்டாலும் முதற்பரிசு மற்றொருவனுக்குப் போய்விட்டது. கடைசியிலே நின்றவன் அதைப் பெற்றுக்கொண்டான். அவனுடைய அதிர்ஷ்டம் அது. முதலில் பெறவேண்டியவன் கடைசியில் பெற்றான்; பெறாமற் போய் இருந்தாலும் போய் இருப்பான்" என்றேன் நான்.

"உலக இயல்பு அப்படித்தான் இருக்கிறது. உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பது அருமை; உழைப்பில்லாதவர்களுக்கே அதிக ஊதியம் கிடைக்கிறது" என்று அவர் பதில் சொன்னார்.

ஆதிக் கூத்து

(1) முக்த நிலைவிட்டு மோனன் பெயர்ந்தான்
மோதிற்று, முழங்கிற்று, மோகக் கடல்;
வித்தகன் விளையாட வேறென்று விழைந்தான்,
மோகன சுந்தரி வந்தெதிர் நின்றாள்.

(2) "பங்கிட்டுத் தந்தேன் பாதி நீ" என்றான்,
பங்கயக் கண்ணியும் "பார்த்தா நீ" என்றாள்.
அங்கம் நெகிழ்ந்தது; ஆசை திரண்டது;
நெஞ்சில் நிறைந்தது நீர்.

(3) ஆதியும் பாதியும் ஆடினர் கூத்து
ஆனந்த மோனப் பர வெளியில்
ஒடுங்கி உலர்ந்த உயிர்க ளெல்லாம்
உள்ளங் களித்தன உலகம் வருமென்று.

(4) ஆதியும் பாதியும் ஆடினர் கூத்து
திரையற்ற தெய்வத் திருக் களியில்
காலெற்றி ஆடினர்; கைகொட்டிப் பாடினர்
மின்னொத்த பாய்ச்சலில் மெய்யுற்றுச் சாடினர்.

(5) ஒன்றென்றும் அன்றென்றும் உணர்ந்தவர் மயங்க
உடனென்றும் தனியென்றும் பின்னிப் பிரிந்தார்.
முன்னென்றும் பின்னென்றும் முதலென்றும் முடிவென்றும்
இங்கென்றும் அங்கென்றும் இடம் மாறித் திரிந்தார்.

(6) அள்ளிக் கொண்டாடினர்; துள்ளிக் குதித்தனர்
உள்ள மகிழ்ச்சிக்கோ ரெல்லை காணார்
ஓடி உவந்தனர்; நாடித் தளர்ந்தனர்;
கூடிக் குவிந்தனர்; வாடித் துவண்டனர்.

(7) மாயையை மாதவன் மார்போடணைத்தான்
காதல் கனிந்தது; கருத்துக் கலந்தது
என்பு கரைந்தது; எண்ணம் சுரந்தது.
பாய்ந்தனர் தாவி: ஓய்ந்தனர் சாய்ந்து
தோய்ந்தனர் உள்ளம்: தொட்டனர்—மறதி.

(8) சுழல் மூச்சில் பிறந்தது காலம்
சுருதிப் பேச்சில் பிறந்தது நாதம்
கை ஓச்சில் உதித்தன திக்கு
கால் பாய்ச்சில் பிறந்தது வேகம்

(9) கோளம் சுழன்றது: ஞாலம் பிறந்தது
அண்டம் உதித்தது அன்னை அருள்;
ஆவி துடித்தது: முகடு வெடித்தது:
தாவிப் புறப்பட்ட தனிப்பட்ட ஜீவன்.

ஸ்ரீ. கு. வா.

ஆதியும் பாதியும்
ஆடினர் கூத்து

லட்சியமும் சாதனமும்

வ. ரா.
எழுதியது

அவரை போட்டால், அவரை தான் முளைக்கும், துவரை முளைக்காது என்று சொன்னால், எல்லாரும் கை கொட்டிச் சிரிக்கமாட்டார்களா? தெரிந்ததைச் சொல்லுகிற பிருகஸ்பதி என்று சிரித்தால், நாமும் கூடச் சிரிக்கிறதைத்தவிர, வேறு வழியில்லை. ஆனால், இதே ஜனங்கள், வேறுசங்கதிகளில், விநோதமாக யோசித்து, முடிவுக்கு வந்து விடுகிறார்கள். இது எப்படி என்று பார்ப்போம்.

ஆரம்பத்திலேயே, ஒன்றை, கொஞ்சங்கூட சந்தேகமில்லாமல் தெளிந்து கொள்ளுவோம். அவரையைப் பயிர் செய்வதற்கு, அவரையைத் தான் விதைக்க வேண்டும். வேறு எந்தவிதையையும் போடமுடியாது. வேறு எந்த விதையை விதைத்தாலும், அதன் பயிர் தான் உண்டாகும். இதிலே, யாருக்கும் இனிமேல் சந்தேகமே யில்லையே?

எப்படிச் செய்தாலும், காரியம் கை கூடினால் சரி என்று பலர் சொல்லுவதை நாம் கேள்விப்படுகிறோம். எப்படிச் செய்தாலும் காரியம் கைகூடுமா என்று அவர்கள் யோசித்துப் பார்த்ததுண்டா? ஒரு புஸ்தகத்தை, எப்படித் திருப்பி வைத்துக் கொண்டும், அதைப் படிக்க முடியுமா? தலை கீழாகப் பிடித்துக் கொண்டு, புஸ்தகத்தைப் படிக்க முடியுமா? முடியாது. ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு சரியான முறை தான் இருக்க முடியும். அந்த முறையைத் தெரிந்து கொள்ளாமலோ அல்லது அலட்சியம் செய்தோ, காரியம் செய்யத் துவக்கினால், கோரிய இலட்சியமான காரியம் ஒரு நாளும் கை கூடாது.

இன்னொரு சங்கதியை எடுத்துக் கொள்வோம். எதைச் செய்தாலும் பணம் சம்பாதிக்கலாம் என்று பலர் முட்டாள்தனமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பிச்சை எடுத்து பணம் சம்பாதிக்க முடியாது. எல்லாரும் பிச்சை எடுக்கத் துவக்கினால், பிச்சை போடுவதற்கு யார் பாக்கி யிருப்பார்கள்? திருடி சம்பாதிக்க முடியாது. திருடினால், சம்பாத்தியத்தைக் காட்டிலும் அடியும் அவமானமும் ஜெயிலும் நிச்சயம். எனவே, பல பேர்கள் ஏற்றுக்கொள்ளும் படியான, அல்லது பல பேர்களுக்குத் தேவையான, முறைகளின் மூலமாக அல்லது பொருள்களின் மூலமாக சம்பாத்தியத்தை நாடினால்தான், சம்பாத்தியம் கைகூடும். பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்ளும் வழி தான் சரியான வழியா என்று கேட்கலாம். இதைப் பின்னே பார்த்துக் கொள்ளலாம்.

ஆயிரம் பொய் சொல்லிக் கலியாணம் செய்துவைக்கலாம் என்று யோசனையில்லாமல் அநேகர் சொல்லுவதையும் நாம் பார்த்திருக்கிறோம். இதைப் போல அபத்தம் வேறு யாதுமே இல்லை என்று நான் சொல்லுவேன். பொய் பொய்யாகத் தான் முடியும். பொய் வேதனையாகத் தான் முடியும். பொய்யின் மூலமாக சுகமும் ஆனந்தமும் எவ்வாறு உண்டாகும்? உலகத்திலே, எப்பொழுதாவது, யாராவது, பொய்யின் மூலமாக, நிரந்தரமான சந்தோஷத்தை அனுபவித்திருக்கிறார்களா? இல்லை; இல்லவே யில்லை. இதை அழுத்தமாகச் சொல்லலாம்.

இப்படியிருந்தும், உலகத்திலே ஏன் இப்படித் தாறுமாறுமாகப் பேசுகிறார்கள்? எவ்வித சாதனத்தைக் கொண்டும் எந்த லட்சியத்தையும் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று ஏன் அபத்தமாகச் சொல்லுகிறார்கள்? அவர்கள் யோசிக்கிறதே யில்லையா? உலகத்திலே, பெரும்பான்மையோர் அவசரக் குடுக்கைகள் அல்லது சோம்பேறிகள் என்று சொன்னால், சண்டைக்கு வருவார்கள். ஆனால், உண்மை அது தான். அவசரத்தினாலே, எதையாவது செய்து, சீக்கிரத்தில் பயனையும் சந்தோஷத்தையும் அடையவேண்டும் என்பது எல்லோருக்கும் இயற்கையாக இருக்கக்கூடிய ஆவல். இந்த ஆவலினால், எந்த சாதனத்தையும் கொண்டு, எந்த லட்சியத்தையும் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

மேலும் பெரும்பாலோர் சோம்பேறிகள் என்று சொன்னேனே! அதுவும் ஒரு வகையில் உண்மை தான். இந்த சோம்பேறித்தனத்தால், என்ன தீமையான பயன் உண்டாகிறது தெரியுமா?

பாடத்தை, படித்தால் தான் தெரியும், புரியும். படிக்காமல் பிள்ளையாருக்குத் தேங்காயை உடைத்து விட்டு புஸ்தகத்தைத் தலையணையாக வைத்துப் படுத்துக் கொண்டால், திடீரென்று ஆவேசம் வந்து, பாடமுழுதும் தெரிந்துவிடுமா? சோம்பேறித்தனத்தால், அபத்தமான பக்தி, பயனைக் கொடுக்காத பக்தி, பலருக்கு உண்டாகின்றது. ஒரு தொழிலில் பயிற்சிவேண்டுமென்றால், அவர்கள் பக்தி இருந்தாலே போதுமென்று சொல்லி காளியின் வரப் பிரசாதத்துக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். "காளி வரமாட்டாள்; காத்ததுதான் மிச்சம்" என்று அவர்களுக்கு எப்பொழுது தெரியப்போகிறது? சாகும் பொழுது தான்.

ஆகவே, சாதனத்தைப்பற்றி தீர்க்கமாக யோசிக்கவேண்டும். எது சாதனம், எது சாதனமில்லை என்பதை நன்றாக நிதானித்துக் கொள்ளவேண்டும். மரத்திலே ஏறுவதற்கும் குளத்திலே இறங்குவதற்கும் உழைப்புத் தான் வேண்டும். ஏறுகிற சாதனத்தைக்கொண்டு இறங்கமுடியாது;



இறங்குகிற சாதனத்தைக் கொண்டு ஏற முடியாது. இதை யோசிப்பதே யில்லை பலர். கலியாணம் என்பது காமத்துக்கு நியாய வரம்பு கொண்ட சாதனமாகும். இந்த சாதனத்தால் மனிதன் உயர்கிறான். ஆனால், அதே காமத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக, அவன் வியபிசாரம் செய்யத் துணிந்தால், அவன் உலகத்தால் ஏளனம் செய்யப்பட்டு, அதமனாக வாழ நேருகின்றது.

மேற்சொன்ன ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கொள்ளுவோம். காமம்என்பது தூண்டுதல் சக்தி. இன்பம் என்பது லட்சியம். இந்த லட்சியத்தை அடைய இரண்டு சாதனங்கள் இருக்கின்றன. ஒன்று கலியாணம்; மற்றொன்று வியபிசாரம். இரண்டு சாதனங்களையும் கைக் கொள்ள முடியுமா? இரண்டும் சரியான சாதனங்களாகுமா? ஆகாது; முடியாது. காமத் தூண்டுதல் சக்தியை கலியாணம் என்ற சாதனத்தோடு பூட்டி ஒட்டினால், இன்பம், சுகம், ஆரோக்கியம், நீடித்த ஆயுள், புகழ் முதலியன உண்டாகின்றன. அதேக் காமத் தூண்டுதலை வியபிசாரம் என்ற சாதனத்தோடு இணைத்து ஓட்டினால், நோய், உலக அபவாதம், அற்ப ஆயுள், மனவேதனை, வேறு பல இம்சைகள் முதலியன ஏற்படுகின்றன. ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில், கலியாணத்தைத் தான், உண்மையான சாதனமாகக் கொள்ளவேண்டும். அது தான் சாதனம். மற்றது பாதகம்.

ஆகவே, இதிலிருந்து என்ன தெளிவாகிறது? சாதனத்துக்கும் லட்சியத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு; உயிருள்ள சம்பந்தம் உண்டு. சாதனத்தைக் கொண்டு, லட்சியம் அதாவது முடிவு இப்படித்தான் இருக்க முடியும் என்று நிச்சயமாக, சந்தேகம் யாதொன்று மில்லாமல் நிர்ணயித்து விட முடியும். அதனாலேதான் காந்தி, சாதனத்தின் தன்மையைப்பற்றி, இடைவிடாமல் வற்புறுத்திப் பேசுகிறார். அவரை போட்டால், அவரை தான் முளைக்கும் என்ற வெளிப்படைஉண்மையைப் பற்றி சிரிக்கப்படாது என்று இப்பொழுது தெரிகிறதல்லவா?

லட்சியம் என்பது எப்பொழுது கைகூடுகிறதோ, அது "சுவாமிக்குத்தான் வெளிச்சம்". லட்சியம் விரைவில் கைகூடலாம். நூறு வருஷங்களுக்குப் பிறகும் கைகூடலாம். ஆகவே, ஜனங்கள் என்ன செய்யமுடியும்? சாதனத்தைக் கொண்டுதான், லட்சியம் இப்படியிருக்கலாம் என்று ஒருவாறு ஊகம் செய்து கொள்ளலாம். லட்சியம் கைகூட வேண்டும் என்ற சாக்கிலே, எதையும் செய்ய முடியாது. செய்தால், ஜனங்களுக்கு லட்சியத்தில் நம்பிக்கை உண்டாகாது. சாதனத்தால் நன்மையும் ஏற்படாது.

சாதனத்தைக் கொண்டு தான் லட்சியத்தை உருப்படுத்திப் பார்க்கமுடியும். ஆகவே, சாதனம் தான் முக்கியம். பொய்யைச் சொல்லி, பொது ஜனங்களுக்கு என்ன சேவை செய்ய முடியும்? என்ன லட்சியம் கைகூடும்? பொய்யைப் பரப்புவது என்ற சேவை தான் ஏற்படும். பொய்யை நிலை நாட்டுவது என்ற லட்சியம் தான் கைகூடலாம். பொய்யைப் பரப்புவதும் பொய்யை நிலை நாட்டுவதும் ஜனசமூகத்தின் லட்சியமாக இருக்க முடியுமா? இருக்க முடியாது. அந்த லட்சியத்தை கைக்கொண்ட சமூகம், தனது அழிவையே தேடிக்கொள்ளும் என்பது நிச்சயம்.

தனக்காகப் பொய் சொல்லாமல் தேசத்துக்காகப் பொய் சொல்லலாம் என்பது பலருடைய சித்தாந்தம். இதைப் போன்ற அபத்தம் வேறு எதுவுமே இருக்க முடியாது. பொய் சொல்லுவது தேசபக்தியாகாது. இன்றைக்குப் பொய் சொல்லித் தன் நாட்டை ஒரு ராஜ தந்திரி காப்பாற்றுகிறார் அல்லது சம்பத்தில் முன்னேறச் செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். மற்ற தேசத்திலும் மற்றவர்கள் செய்ய மாட்டார்களா? இப்படியே, உலகத்திலுள்ள எல்லா ராஜ தந்திரிகளும் செய்தால், உலகப் போர் நிச்சயம் என்று சொல்ல, ஜோஸியம் தேவையில்லை. பொய் சொல்லி, சூது செய்து, பலாத்காரத்தை உபயோகித்து ஏமாற்றிக் கைப்பற்றிய எந்த உரிமையும் எந்த உடமையும் நிலைத்து நிற்க முடியாது. அதை அபகரிக்க, பிறர் எப்பொழுதும் தயாராகக் காத்துக் கொண்டிருப்பார்கள்.

சாதனம் சரியானதாயும் தூய்மை கொண்டதாயும் இருந்தாலொழிய, ஒன்று லட்சியம் கை கூடாது; அல்லது லட்சியம் மிகக்கேவலமானலட்சியமாகஇருக்கும். சாதனத்தைக் கொண்டுதான் லட்சியத்தைமதிப்பிடமுடியும். அதனாலேதான், காந்தி உண்மையும் அஹிம்சையும் நிகரில்லாத சாதனங்கள் என்று இடைவிடாமல் சொல்லி வருகிறார். உலகத்தின் உய்வு அதிலே தானிருக்கிறது என்பது என் கருத்து.

பொன்சரடு

ந. பிச்சமூர்த்தி

பின்னியது

பூனையை வெறுப்போர், விரும்புவோர் என மனித வர்க்கத்தையே இருகூருக்கிப் பேசியிருக்கிருர் ஒரு மேல் நாட்டு ஆசிரியர். நான் இரண்டாவது கோஷ்டியைச் சேர்ந்தவனே அல்ல. பூனையினுடைய சிறிய சதைப்பற்றற்ற உருவமும், வரியும், சாம்பல் வர்ணமும், குரூரமான கண்ணும், சூதும் எனக்குப் பிறவி முதற்கொண்டே அகாரணமாக வெறுப்பை உண்டாக்கி வந்திருக்கின்றன. புலியின் இனத்தை சேர்ந்ததாம் பூனை. புலியின் கம்பீரமும் அழகும்வலிமையும் பூனை பெற்றிருக்குமாளுல் யாரும் அதை வெறுக்கமாட்டார்கள். குற்றங்களோடு குணமும் அழகும் இருந்தால் போற்றலாம். குற்றமும் சிறுமையும் மட்டும் நிறைந்ததை சகிப்பதெப்படி?

தவிர, இந்த மனப்பான்மை இளம் வயதிலேயே ஸ்திரப்படத்தக்க சம்பவமும் நடந்திருப்பதாக இப்பொழுது நினைவிற்கு வருகிறது.

அப்பொழுது நான் சிறுவன். பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்தேன். பையன்களுக்குள்ள குரூரத்தனமும் விஷமமும் என்னிடம் வேண்டிய அளவு உண்டு. எங்கிருந்தோ ஒரு பூனைக் குட்டி வீட்டுக்கு வந்து சேர்ந்தது. வந்து சேர்ந்தால் சும்மாவா இருக்கும்? என்னென்னவோ கஷ்டமும் தொந்தரவும் வீட்டிலுள்ளோர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தது. சுபாவத்திலேயே பூனையை வெறுப்பவன் அதன் தொல்லையை சகித்துக் கொண்டிருப்பானு? ஒரு நாள் அந்திப்பொழுதில் அது ஒரு கறப்பைத் தின்று கொண்டிருந்தபொழுது பலமாய் அடித்து விட்டேன். அழுது கொண்டே பூனைக்குட்டி ஓடிவிட்டது. ஒரு வாரம் பத்து நாள் வரையில் அது கண்ணில் படவில்லை. அதற்குப் பிறகு அதைப் பார்த்தேன்—கொல்லைப்புறத்து புதரடியில் விறைத்துக் கிடந்த உடலாக. நான் அடித்ததற்கும் அது இறந்ததற்கும் காரண காரியம் போன்ற தொடர்பு இருந்தது போல் என் நெஞ்சில் ஒரு குழப்பம் உண்டாயிற்று. துயரும் வெறுப்பும் பொங்கி எழுந்தன. இந்த அற்பப் பிராணியின் உயிருக்கு உலை வைத்த பாவம் என்னைச் சாராதா என்ற துயரம் ஒரு புறம். இருந்தும் கெடுத்தான், இறந்தும் கெடுத்தான் என்று சொல்லுவது போல ஆயுள் முடிந்து இறந்துபட்ட ஒரு சவம் என் மனதை அறுக்கலாயிற்றே என்ற வெறுப்பு மறுபுறம். நாளாவட்டத்தில் அந்த சம்பவம் மறைந்து வெறுப்பு மட்டும் ஏனே நிலைத்துவிட்டது!

காலப் பெருக்கில் அழுந்திப் போன இந்த நினைவுகள் திரும்ப மிதந்து வரக் காரணமென்னவென்ருல், வீட்டிலே ஒரு பூனைக் குட்டி மறுபடியும் வந்துவிட்டது என்பதுதான்! ஆனல் என் மனசு முன் போலில்லை. மாறிக் கொண்டு வருகிறது. அது கூடச் சரியல்ல; மாறி விட்டதென்றே சொல்லி விடலாம்.

ஒரு நாள் காலையில் இதுவந்து சேர்ந்தது. ஊஹூம்—என் குழந்தைகள் தூக்கிக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். கொல்லைப்புறத்திலே அறுகம்புல்லைத் தின்று கொண்டிருந்ததாம். அதைக் கண்ட நிமிஷத்திலேயே பழய நினைவுகள் குவிந்தன; வெறுப்பு விசிறி எழுந்தது. அதை விரட்டி விட முயன்றேன். ஒத்துழைப்பில்லாவிட்டால் எந்தக் காரியத்தை வெற்றிபெறச் செய்ய முடியும்? அதுவும் இல்லறம் என்னும் இரட்டை மாட்டு வண்டி விஷயத்தில்! என் மனைவி குழந்தைகளின் பக்கம் சேர்ந்து கொண்டு இந்தக் காரியத்தில் என்னுடன் ஒத்துழைக்க மறுத்து விட்டதன்னியில், ஒரு கொட்டாங்கச்சியில் பூனைக்குப் பாலும் வைக்க ஆரம்பித்து விட்டாள். என் மனப்போக்கை குழந்தைகள் உடனே உணர்ந்துகொண்டு விட்டார்கள். பூனையை விரட்டிளுல் அழுவேன் என்ற மாதிரி காட்டி பயமுறுத்திற்று குழந்தை. இன்னும் கொஞ்ச மூத்த குழந்தை பூனைக்குட்டியை கீழேயே விடப்போவதில்லையென்று முடிவுகட்டிச் சொல்லிற்று. மனைவி சமாதானம் வேறு சொல்ல ஆரம்பித்துவிட்டாள். "குழந்தைகளோடு குழந்தையாய் அதுவும் இருந்துவிட்டுப் போகட்டுமே." ரொம்ப பேஷ்!........

வெறுப்பென்னும் மதில் சுவரில் இப்படி உப்பளர் பட்டது.

அன்று முதல் குழந்தைகள் பூனையை போஷிக்க ஆரம்பித்துவிட்டனர். தினம் அதிகாலையில் எழுந்திருப்பார்கள். (பூனைக் குட்டி வந்ததின் நற்பயன்!) பால்க்காரிவந்துமாட்டைக்கறந்து பால் கொடுத்துவிட்டுப் போகும் வரையில் திண்ணையில் உட்கார்ந்து, அவளிடமிருந்து ஒரு கொட்டாங்கச்சிப்பால் பூனைக்குட்டிக்கு வாங்கிக் கொடுத்துவிட்டுத் தான் மறுகாரியம் பார்ப்பார்கள். பால்க்காரி அது குழந்தைகளுக்காக இனும் என்று நினைத்துக்கொண்டிருந்தாள். குழந்தைகள் வேறு விதமாகத் திட்டம் போட்டிருந்தனர். சுண்ணும்படித்த ரேழிச் சுவரில் மண்ணைக் குழைத்து கோணலும் மாணலுமாக தினம் இரண்டு பொட்டு—காலை ஒன்று மாலை ஒன்று—மாதக் கடைசியில் கணக்குப் பார்த்து என்னிடம் பால்க்காரிக்கு பணம் வாங்கிக் கொடுப்பதற்காக.

இப்படியே கொஞ்ச நாள் சென்றது. பூனைக் குட்டிக்கு அறிவு கூர்மையாகி குறிப் புணர்ந்து கொள்ளும் சக்தி ஏற்பட்டுவிட்டது. குழந்தைகள் காலையில் தூங்கிக்கொண்டிருந்தாலும்கூட, பால்க்காரியின் குரலைக் கேட்டதும் கத்திக்கொண்டு வாசலுக்குப் போகத் தெரிந்துவிட்டது. அந்த மாதிரி சந்தர்ப்பத்தில் பால்க்காரியே பூனைக்குப் பலதரம் பால் கொடுப்பாள். இதிலிருந்து பால்க்காரியுடன் அதற்கு நெருங்கிய உறவு ஏற்பட்டுவிட்டதல்லாமல், பக்கத்து வீடுகளுக்குக் கூட அவளுடன் போகத் தெரிந்துவிட்டது.

ஒரு நாள் காலையில் பால் கறப்பதைப் பார்த்துக் கொண்டு திண்ணையில் உட்கார்ந்து இருந்தேன். உஷ்ணத்தால் பொங்கிய கண்களுடன் உட்புறத்திலிருந்து குழந்தைகள் வந்தார்கள்.

"அப்பா! பூனைக்குட்டி எங்கே?"

"எனக்கென்ன தெரியும்?"

"இல்லே. நீ தான் அதைப் போகச் சொல்லிட்டே."

"இல்லியே."

"நம்பமாட்டேன். தினம் அதைக் கோவிச்சுக்கறே. அது போயிடுத்து."

"இப்போ என்ன பண்ணணும்?"

"அதைக் கொண்டா. இல்லாதபோனு நாங்களும் எங்கேயானும் போயிடுவோம்."

குழந்தைகளைச் சமாதானம் செய்யத் தெரியாமல் இங்குமங்கும் போனேன். கொல்லைத் தலைமாட்டில் போய் பார்த்தேன். பக்கத்து வீட்டு ஓட்டிலிருந்து மெதுவாக அது வந்து கொண்டிருந்தது—இராக் கால முழுதும் காட்டில் இரை தேடித் தின்று விட்டு காலை ஒளியோடு குகைக்குத் திரும்பி வரும் புலி போல. கொட்டாங்கச்சியைக் காட்டியவுடன் அது விழுந்தடித்து ஓடி வந்தது. அதற்குப் பிறகு எனக்கு ஒரு பெரிய பொறுப்பு ஏற்பட்டு விட்டது. பூனைக்குட்டி ஓடிப்போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை என்னுடையதாயிற்று. வெறுப்பின் மதில் சுவர் விரிந்தே விட்டது!

விளையாட்டுப் போல் நான்கு ஐந்து மாதங்கள் ஆயின. குழந்தைகளும், பூனையும், என் மனைவியும் ஆனந்தமாய்ப் பொழுது போக்கி வந்தார்கள். இதெல்லாம் என் கண்ணில் படப்பட, என்னுள்ளத்திலே என்னை அறியாமலே மாறுதல்—மண்ணுக்குள் இருக்கும் விதை உலகறியாமல் வெடித்து முளைப்பது போல. ஆனல் ஒரு விஷயம் எனக்கே தெரிந்து போயிற்று. பூனைக் குட்டியிடத்தில் நான் முன்னை விட ரொம்ப கவனம் இப்பொழுது செலுத்தி வந்தேன் என்று. கவனம் செலுத்தி வந்ததிலிருந்து அதனுடைய விளையாட்டிலும் விஷமத்திலும் பங்கெடுத்துக் கொண்டேன்

...எங்களைப்பற்றி யாரோ ஆண்டுமலரில் எழுதியிருக்கிருர்களாமே...... நிஜம்மாவா!...

என்பதை சொல்லாமலிருப்பது நியாயமாகாது.(பூனைக்குட்டிக்கும் குழந்தைகளுக்கும் மனைவிக்கும் கோபம் வந்து விடும்!) நானுகவே உடுப்புப் பெட்டியில் கிடந்த அம்மானைக் காய்களை மெனக்கட்டு எடுத்து, பூனைக்கு எதிரில் போட்டேன் என்றால் பார்த்துக் கொள்ளலாமே! என்ன விளையாட்டு! என்ன விளையாட்டு! கடிக்க முயலுவதும், அம்மானைக் காய் ஓடுவதும், பதுங்கிப் பாய முயலுவதும் கவ்வ முடியாமல் திகைப்பதுவும் எனக்கு ரொம்பத் தமாஷாயிருந்தது. தான் கொன்ற மிருகத்தைத் தின்பதற்கு முந்தி இப்படித்தான் அதோடு புலி காட்டில் விளையாடும் போலும்!

இந்த நிலையில் ஒரு பெரிய பிரச்னை எழுந்துவிட்டது. கோடைகால விடுமுறையை உத்தேசித்து குழந்தைகளுடன் தன்

......புஸ்தகங்களோடு புஸ்தகமாய் பூனைக்குட்டி......

தாயார் வீட்டுக்குப் போக மனைவி ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். பூனைக்குட்டியை என்ன செய்வது? குழந்தைகளுக்கென்னவோ பூனைக்குட்டியை அழைத்துக்கொண்டு போவதில் விருப்பம்தான். ஆனால் நத்தாது இடத்தை நத்தும் பூனைக்கு ரயிலில் போக இஷ்டம் இருக்க வேண்டுமே. இதை எல்லாம் உத்தேசித்து குழந்தைகளை என்னுடனேயே இருக்கும்படி வற்புறுத்தினேன். அவை இசையவில்லை.

ரயிலுக்குப் போகும் நேரம். நல்ல வேளையாக அந்த சமயத்தில் பூனைக்குட்டி எங்கேயோ போயிருந்தது. குழந்தைகள் அங்குமிங்கும் தேடிவிட்டு மௌனமாய்த் தாயாருடன் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். இவர்களை ரயிலில் ஏற்றி விடுவதற்காக நானும் கிளம்பினேன். குழந்தைகள் ரயிலில் ஏறும் வரை வாயையே திறக்கவில்லை. கீழ் நோக்கியும், கடைக்கண்ணுலுமே பார்த்துக் கொண்டிருந்தன. நான் ஏதோ சதி செய்து விட்டதாக சந்தேகம்! ரயிலில் எல்லோரும் ஏறிவிட்டார்கள். பிளாட்பாரத்தில் மணி அடித்தது.

“அப்பா! பூனைக் குட்டியைப் பத்திரமாய்ப் பாத்துக்கணும், தெரியுமா? நாங்க ஊருக்குப் போயிட்டு சுருக்க வந்தூடரோம்னு சொல்லிப்புடு” என்று குழந்தைகள் உத்திர விட்டார்கள்.

வீட்டிற்குத் திரும்பி வந்தேன் அது முதல் பூனைக் குட்டியைப் பராமரிக்கத் தான் போது இருக்கிறது போல் தோணுகிறது. நானே அதற்குப் பால் வாங்கிக் கொடுக்கணும், சாப்பாட்டு வேளையில் நெய்யும் சோறும் கலந்து போடணும், முதலிய இப்புது உத்யோகத்தின் பலனாக இரண்டொரு நாட்களுக்குள் என்னைக் கண்டதும்பூனை என்காலை சுற்றிச் சுற்றி வருகிறது. அடிக்கடி முதுகைத் தூக்கி வாலை உயர்த்திக் கொண்டு என் மீது உராய்ந்து செல்கிறது. அப்பொழுது என் உடல் கொஞ்சம் குன்னித்தான் போகிறது. ஆனால் அதை விரட்ட மட்டும் மனம் கொள்ளக்காணோம். பகுத்தறிவற்ற உயிர் என்னை நம்பி அன்பு கொண்டு உறவாடுகிறது! ஆனால் பகுத்தறிவோடு கூடிய நான்மட்டும் அதன்மீது காரணமின்றி அருவருப்புப் படுகிறேன். ஏனோ?—....

போனவாரம் என் மேஜையண்டை உட்கார்ந்து வழக்கம் போல் பால் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். பூனைக்குட்டி எங்கிருந்தோ வந்தது. என்னையும் பாலையும் பார்த்து விருக்கென்று மேஜைமேல் தாவி உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டு ஜபம் செய்தது. பூனைக்குப் பால் கொடுத்தேன். வெள்ளப் பெருக்கில் ஆற்றின் கரை நனைந்து விரிந்து பிறகு இடிந்து நீரில் கரைந்து விடுவதுபோல் என் அருவருப்பு இடிந்து மறைந்து போயிற்று... ஏன்? குழந்தைகள் மேஜையண்டை வந்து பாலுக்காக என்னுடன் எத்தனை நாள் வம்பு வளர்த்திருக்கின்றன!.......

எனவே இப்பொழுதெல்லாம் என் மேஜையின்மீதுள்ள புஸ்தகங்களோடு புஸ்தகமாய் பூனைக்குட்டி கண்ணை மூடிக்கொண்டு உறங்கிக் கிடப்பது எனக்கு வியப்பையோ வெறுப்பையோ தரவில்லை. வீட்டிற்கு வந்து போகிறவர்கள் சிரிக்கிறார்கள்! அவர்கள் எதைக் கண்டார்கள்?





குதிரை யோட்டம்

திருச்சி : பிரஹத்தீசுவரி.

முன்பொருநாள் காலையிலே முச்சந்தி வீதியிலே
வீட்டுப்படி நின்று வேடிக்கை பார்த்திருந்தேன் ;
கோச்சு வண்டியொன்று கடகடென் றோசையிட்டு
வீச்சும் வேகமுமாய் வீதிவழிசென்ற தங்கே

குதிரைக்குக் கொள்ளுகட்டி, கோச்சுமான் ஆப்பம் தின்று
உள்ளே யிருப்பவர் உயர்ந்த ‘டிபன்’ அருந்தி
அவரவர்க் கேற்றவிதம் அலங்கரித்துக் கொண்டிருந்தார்.
குதிரைக்குச் சேணமிட்டு, கோச்சுமான் ரிஜாருடனே

உள்ளே இருப்பவர் உன்னத உடையணிந்து
ஊர்வலமாச் சென்ற ஓர்காட்சி தனைக்கண்டு
கடிவாளமற்ற கற்பனையாம் என் குதிரை
துடியாகப்பாய்ந்து தோற்றிய கனவு சொல்வேன்.

காலைமுதலாகக் கண்ணுறக்கம் கொள்ளும்வரை
தோன்றிய நாள்முதலாய் துயரடங்கிச் சாமளவும்
—மக்கள்
ஓடும் விசித்திரத்தை உள்ளபடி என்ன சொல்ல !

இயற்கையரசியவள் எழில்கரத்தில் சாட்டையுடன்
ஒவ்வொருவர் முதுகினிலும் உணர்ச்சி பெறும்படியாய்
சாட்டை அடிகொடுத்துச் சாதுரியக் காரியம்மை
சேணமிட்டுக் கண்மூடி திரும்பிப் பாராதவணம்

ஓட்டும் அழகிற்கு உவப்பதுவோ ! அழுவதுவோ !
சாவென்றும் துன்பமென்றும் சாட்டை அடிபட்டு
ஓடும் நமக்குள்ளே உள்ளபடி பேதமுண்டோ !
உருவிலும் உடையினிலும் உணவிலும் பேதமன்றி
ஒருவிதமும் பேதமில்லை ஒரு கணந்தான் உன்னிடுவீர் !

R. S. SUGANTHA MOOKKUTHOOL

Ask for P. V. RAJAN'S BEST MADRAS SNUFF &

ஜெகப்பிரசித்திப்பெற்றதும்
காரம், மணம், குணம், நிறம் எல்லாவற்றிலும்
சிறந்ததும் பல

எக்ஸிபிஷன்களில் பொன், வெள்ளி
மெடல்கள் பரிசு பெற்றதுமான்

பி. வி. ராஜன் அண்டு
கம்பெனியாரின்

பட்டணம் பொடி
&
R. S. சுகந்த மூக்குத்தூள்

இதையே கேட்டு வாங்கி உபயோகப்படுத்துங்கள்

விலை விபரத்துக்கு எழுதவும்

தயாரிப்பவர்கள்:—

பி. வி. ராஜன் & கம்பெனி,
44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி,

தந்தி விலாசம்: "NASYAM" } மதராஸ்.

பிராஞ்சு: பரா பஜார் கல்கத்தா.

BEST IN THE MARKET. SOLD EVERYWHERE.

லோத்ரா

ஸ்திரீகளின் நோய்களுக்கு ஏற்ற மருந்து
கர்ப்பாசயத்திற்குச் சிறந்த டானிக்

கேசரி குடீரம், மதராஸ்

எப்போதும் உபயோகியுங்கள்

வி. எச். ஆர்.

பெருங்காயம்

இது பசியைக் கொடுக்கும்; ஜீர்ணசக்தியைப் பலப்படுத்தும்

வர்ஜீவன்தாஸ் ஹிர்ஜீ & கோ.,

பம்பாய் — மதராஸ் — கும்பகோணம்

பட்டணம் கில்லாடியும் சோமாறியும்

"பட்டணத்துக்குப் போய் வந்தேன்" என்று பெருமையாகச் சொல்லும் கிராமவாசி நாள் கணக்காகப் பட்டணத்தின் அதிசயங்களைப் பற்றிப் பேசுவார். ஒரு வாரம் கால் நடையாகவும், மோட்டார், டிராம் வண்டிகளினுமாக அவர் சுற்றிக் கண்ட காட்சிகளை யெல்லாம் வர்ணிப்பார்.

ஆனல் அவருக்கு இன்னெரு வாரமல்ல, ஒரு வருஷம் தான் பட்டணத்திலே வசிக்க வரம் கொடுத்தாலும், அவர், பட்டணத்தின் முக்கியமான விசேஷமிரண்டைக் கண்டுபிடித்து விட முடியாது. அந்த விசேஷங்கள் தான் பட்டணம் கில்லாடியும், சோமாறியும்.

பட்டணம் கில்லாடியின் நடை யுடை பாவனைகள் எல்லாமே ஒரு தனி யழகு கொண்டவை. குடித்து விட்டுக் குடி வெறியில் வீதியில் கலகம் செய்து, ஒரு தடவை, ஒரு வாரம் சிறை வாசம் செய்துவிட்டு வந்து விட்டால் போதும்; அவன் ஒரு பெரிய கில்லாடியாகி விடுவான். மானத்திற்குப் பயப்படுகிறவர்கள் அவனிடம் நெருங்கக் கூசுவார்கள். அந்தக் கூச்சத்தைத் தன்னிடமுள்ள பயமாக ஆக்கிக் கொள்ள முயன்று, அதனல் பிழைக்கவும் முயலுவான் கில்லாடி.

மூக்குக் கண்ணுடி, பவுண்டன் பேன, ரிஸ்ட் வாச், மேல் வேஷ்டி ஆகிய உபயோகப் பொருள்களையும் அலங்கார அணிகளாக மாற்றி அனுபவிக்க முயலும் பெண்மை நிறைந்த அலங்கார புருஷர்களைக் கண்டால் "என்ன நய்ன, நாஸ்தா கிஸ்தாக்கு சில்றை கில்றை, ஒண்ணும்லேயா...." என்று அவன் கையை நீட்டி உடல் குழைந்து நிற்பது தெய்வீகக் காட்சியாகும்.

பட்டணம் சோமாறி என்பவன் சர்க்கார் சென்சஸ் கணக்கிலேயே வராதவன். இந்திய சமுதாயம், இந்திய சமூகம் என்றெல்லாம் வீசுகிருர்களே ராஜீய வாதிகள், அதை யெல்லாம் மீறி நிற்பவன்.

பட்டணத்தில் எங்காவது கலியாணம் நடக்கிறதா? ஒரு நூறு பேர் சாப்பிடுவார்களா? அந்த வீட்டு வாசலில், சாப்பிட்ட எச்சில் இலைகளைப் போடுவார்களே அந்த இடத்தில் பட்டணம் சோமாறியை நீங்கள் நிச்சயமாக, சுலபமாக, காலணுக் காசு பணம் செலவில்லாமல் பார்க்கலாம்.

அதோ, அந்தக் குப்பைத் தொட்டிக்கருகில் எச்சில் இலைகளைப் பிரித்துப் பிரித்து அதில் மிஞ்சியிருக்கும் சோற்றையும் மற்றவற்றையும் எடுத்தெடுத்து அடைக்கிருனே, அவன் தான் பட்டணம் சோமாறி அல்லது சோம்பேறி.

இந்தச் சோம்பேறிகள் என்பவர்கள் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்? எந்த ஜாதியை, மதத்தைச் சேர்ந்தவர்கள்? இந்தக் கேள்விகளுக்கு இதுவரை விடை கண்டு பிடிக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

"பட்டணத்தான்"

பட்டணம் சோம்பேறியின் பாஷை நடையே தனி. பண்டைக்கால இலக்கிய கர்த்தர்கள், கவிகள், இன்றைய மறுமலர்ச்சி எழுத்தாளர்கள், பண்டிதர்கள், பத்திரிகைகள், பாடபுத்தகங்கள், சாதாரண குடியானவர்கள் ஆகியவர்களது பாஷா நடைகள் என்று தனித் தனியாக யிருப்பது போல இவர்களுக்கும் ஒரு தனி நடையுண்டு.

எடுத்தா, இக்குது, இட்டுக்கினு, இஸ்காதே, கூத்கொட்டா, ஒதிப்பேன், மருவாதி, கைதே— இவை யெல்லாம் இவர்களது பாஷையிலிருந்து இரண்டொரு உதாரணங்கள். இவர்கள் பாஷையில் சில விசேஷப் பதங்களும் உண்டு. "என்னம்மா நம்ம கிட்டவே ஜோக் பண்றியே! அய்யே! என்ன தபாய்க்கிறையே! கண்லேருக்கிற பாப்பாவை யெடுத்து போதுகையாடிப் புடுவோம். ஆமாம், தட்ன தாரை வாங்து பூடுவே, குத்ன கண்லே மின்னும்பூச்சி பறக்கும். ஸூம்மா ஸூந்தாயி, ஸூருளாயி, டோக்கு மோஞ்சு நடுத்தெருவு நாராயண, பழய ஸோத்துப் பரமசிவம், அம்போ அருளோன்னு போயிடுவே" என்பது ஒரு தினுசாகப் பல்லவி மாத்திரமே எனலாம்.





பட்டணம் சோமாறி (1) நகரத்தின் முக்கியமான வீதி யொன்றில் "அரிதுயில்" செய்கிருர். (2)...எச்சில் இலைகளைப் பிரித்து...எடுத்தெடுத்து அடைக்கிருனே... (3) 'எந்த வீட்டில் மேளச்சத்தம் கேட்கிறது' என்று யோசிக்கிருன் போலும்!

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன்

தமிழ்ப்பட உலகின் முன்னணியிலிருக்கும் படக் கம்பெனிகளில் மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷனைத் தமிழ் நாட்டில் எல்லோரு மறிந்ததே. இக் கம்பெனியானது, "தொழிலாளி"களான ஒரு நடிகை, ஒரு டைரக்டர் ஆகிய இருவரால் நடத்தப்பட்டு வருவதே இதன் வெற்றிக்கு முக்கிய காரணம்.

முதல் படம்

இக் கம்பெனி 1935-ஹு செப்டம்பர்மீ 13௳ ஸ்ரீமதி S. D. சுப்புலக்ஷ்மி, ஸ்ரீமான் K. சுப்ரமண்யம், முதலியவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களின் முதல் படம் நவீனசதாரம். இப்படம் ஈஸ்ட் இந்தியா ஸ்டூடியோவில் தயாரிக்கப்பட்டது. சொந்தத்தில் எடுக்கப்படும் முதல் படமென்ற காரணத்தினால், மிக்க சிரமத்துடன் தயாரிக்கப்பட்ட இப்படம், தமிழ் நாட்டினரின் ஆதரவைப்பெற்றது. பட முதலாளிகளுக்கு அதனால் நல்ல உற்சாக மேற்பட்டது. இப்படத்தினுடன் 'நவரஸக்கூத்து' என்ற ஒரு ஹாஸ்யத் துணுக்குப் படமும் சேர்க்கப்பட்டுள்ளது.

பக்த குசேலா

இவர்களின் இரண்டாவது படம் பக்த குசேலா. இது ஒரு புராணக் கதைதான். என்றாலும், தற்காலத்திற் கேற்றவாறு திருத்தி யமைக்கப்பட்ட காரணத்தினாலும், எளிய நடைச் சம்பாஷணைகளினாலும் படம் நல்ல வெற்றி யடைந்தது. ஸ்ரீமதி S. D. சுப்புலக்ஷ்மி இதில் கிருஷ்ணன், சுசீலை ஆகிய இரு வேஷங்கள் தரித்ததோடு, தென்னிந்தியாவில் பிரபல சங்கீத வித்வானும், இசையாளருமான பாபநாசம் சிவன் முதன் முதலாக வெள்ளித் திரையில் தோன்றித் தமிழ் நாட்டினரின் உள்ளத்தைக் கவர்ந்தார். இப்படத்தின் மூலம் பால சரஸ்வதி என்ற சிறுமி, தமிழ்ப்பட உலகிற்கு ஸ்ரீமான் K. சுப்ரமண்யத்தால் அறிமுகம் செய்விக்கப்பட்டாள். இப்படம் சென்னையில் இருபது வாரங்களுக்குமேல் ஓடியதுமன்றி, மதுரை, கோயம்புத்தூர், காரைக்குடி, திருவாரூர் முதலிய விடங்களிலும் பலவாரங்கள் ஓடிற்று.

பாலயோகினி

'குசேலாவின்' வெற்றியைப் பின்பற்றி வந்த சமூகப் படம் பாலயோகினி. இப் படத்தின் வெற்றி தமிழ் நாடறிந்ததே. பல குழந்தை நட்சத்திரங்கள் ஸ்ரீ. சுப்ரமண்யத்தின் டைரெக்ஷனில், பெரிய நடிகர்களுக்கும் கிட்டாத அபார வெற்றியை அடைந்தனர். முக்யமாக பேபி ஸரோஜாவுக்கு இப்படத்தில் கிடைத்த வெற்றி அளவிட முடியாததே. இப்படம் சென்ற விடங்களிலெல்லாம் சிறப்பாக வரவேற்கப்பட்டது. சென்னையில் 26 வாரங்களுக்கு மேல் நடைபெற்றது.

மூன்று துணுக்குகள்

இதற் கடுத்தபடியாக இரண்டு மூன்று சிறிய துணுக்குப் படங்களை ஒன்றாகச்சேர்த்து ஒரு காட்சியாகத் தயாரிக்கப்பட்டது ஒருபடம். மிஸ்டர் அம்மாஞ்சி, கௌஸல்யா பரிணயம், திருவெண்காடு சுப்ரமண்யம் நாதஸ்வரக் கச்சேரி இம்மூன்றும் அடங்கிய படம் அது. இப்படம் ஹாஸ்யம், புராணக்கதை, சங்கீதம் ஆகிய பல வகை ரஸிகர்களையும் திருப்தி செய்யு முறையில் அமைந்தது.

மற்றும் தென்னாட்டு சங்கீத உலகிற்கு அறிமுகமான ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யரின் அஷ்டபதிப் பாடல்களை இக் கம்பெனியார் ஒரு ரீல் தயார் செய்துள்ளார்கள்.

இவர்களால் தயாரிக்கப்பட்ட 'தெலுங்கு பாலயோகினி'யின் முழு உரிமைகளும் மகாலக்ஷ்மி ஸ்டூடியோஸிற்குக் கொடுக்கப்பட்டு விட்டன.

ஸேவாஸதனம்

இவர்களது சமீபப்படம் ஸேவாஸதனம். இதில் ஸ்ரீமதி M. S. சுப்புலெக்ஷ்மி, ஸ்ரீ. F. G. நடேசய்யர், ஸ்ரீமதி ராம்பியாரி முதலியோர் நடித்துள்ளனர். தமிழ்த்திரைக்கு, வரலக்ஷ்மி, கமலகுமாரி என்ற இரண்டு புதிய நட்சத்திரங்கள் இப் படத்தின்மூலம் அறிமுக மாக்கப்பட்டிருக்கின்றார்கள். இப் படம் தற்சமயம் தமிழ் நாடெங்கும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

வரப்போகும் படங்கள்

அடுத்தப் படங்களாக ஸ்ரீமதி S. D. சுப்புலக்ஷ்மி நடிக்கப்போகும் அஹிம்சாசக்தி என்ற படமும், பேபி ஸரோஜா, பாபநாசம் சிவன் ஆகியவர் நடிக்கும் ஒரு சமூகப்படமும் தயாரிக்கப்படும். இவைகளுக்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

விநியோக ஆபீஸ்

இவர்கள் படங்களை விநியோகிப்பதற்கு ஒரு டிஸ்ட்ரிபியூஷன் ஆபீஸ் ஸ்தாபித்துள்ளனர். இங்கு தியேட்டர் முதலாளிகளின் க்ஷேமத்தையும், அபிவிருத்தியையும் அதிகமாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் படங்களல்லாத, வாடியா மூவிடோனின் முதல் வனக்காட்சிப் படம் "வனராஜ கார்ஸன்" என்ற தமிழ்ப்படத்திற்கு முழு உரிமைகளும். பக்தசேதா (ஹிந்தி) FIGHTING MARINES (ஆங்கிலம்) முதலிய படங்களுக்குத் தென்னிந்திய உரிமைகளும், ருக்மணி கல்யாணம் என்ற தமிழ்ப்படத்திற்கு, வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், சித்தூர், செங்கற்பட்டு ஜில்லா உரிமைகளும் இக் கம்பெனியார் பெற்று, தங்கள் டிஸ்ட்ரிபியூஷன் ஆபீஸ் மூலம் விநியோகித்து வருகின்றனர்.

தென்னிந்தியாவிற்கே முதல் தடவையாக இக் கம்பெனியார் "பிலிம் மெயில்" என்ற சினிமாப் பத்திரிகை யொன்றும் ஆரம்பித்துள்ளனர். இப்பத்திரிகை, படமுதலாளிகள், தியேட்டர் முதலாளிகள் முதலியவர்களிடையே பரஸ்பரம் ஒற்றுமையை யுண்டு பண்ணுவதற்கும் பொது ஜனங்களிடையே சினிமாக் கல்வியைப் பரப்புவதற்கும் பாடுபடுமெனத் தெரிகிறது.

தமிழ் நாட்டினரின் பேராதரவைப் பெற்ற இக் கம்பெனியார், மேன்மேலும் வெற்றியுடன் தமிழ் படக் கலைக்குத் தொண்டியற்றுவார்களென நம்பப்படுகிறது.

(ADVT.)

ஸ்ரீமதி S. D சுப்புலக்ஷ்மி

ஸ்ரீ K. சுப்ரமண்யம், B.A., B.L.

கௌஸல்யா பரிணயம்

சேவாசதனம்



மிஸ்டர் அம்மாஞ்சி

பேபி ஸரோஜா



பக்த குசேலா

நவீன சதாரம்



பாலயோகினி

மான் செய்த தந்திரம்

கி. வா. ஜகந்நாதன்

அன்பும் கடமையும் ஒன்றுக்கு ஒன்று முரணாகஇருப்பது போலத்தோற்று கின்றன. அறம் செய்வது அவன் கடமை. அதற்குரிய பொருள் ஈட்டுவதும் அவன் கடமை. பொருள் அவனிடம் நிரம்ப இருக்கிறது. ஆனாலும் அப்பொருள் அவன் சம்பாதித்தது அன்று; அவனுடைய பரம்பரைச் செல்வம்; அதைச் செல்வமாகவே கருதுதல் கூடாது. அப்படி அதைத் தன் கடமையை நிறைவேற்றுவதற்காகச் செலவழித்தால் அவனது ஆண்மைக்கு இழுக்கு வந்துவிடும். தானே உழைத்துச் சம்பாதித்து விருந்தோம்ப வேண்டும்; இல்லறம் நடத்தவேண்டும். இது பெரியோர்கள் வைத்த நியதி.

இந்த நியதிப்படி அவன் வெளிநாட்டுக்குச் சென்று பொருள் தேட எண்ணுகிறான். தன் அருமைக் காதலியைப் பிரிந்து செல்வதற்கு அவன் மனம் துணியவில்லை; கலங்கித் தடுமாறுகின்றது; ஆயினும் 'நம் ஆண்மைக்கு இழுக்கு வருமே' என்ற அச்சத்தால் அவன் பிரிந்து விடுகின்றான். அதற்கு முன் தான் போவதைப் பற்றிப் பல கால் எண்ணி எண்ணி, 'அவளுக்குக் கூறுவதா? வேண்டாமா?' என்று நினைந்து மனங்குழம்பி நிற்கிறான். இறுதியில் காதலியின் உயிர்த்தோழியினிடம் சொல்லிவிட்டுப் போய் விடுகின்றான்.

* * *

பொருள் எளிதில் கிடைத்து விடுகிறதா? காடும் மலையும் கடுகி வழிநடந்து வேறு தேசம் செல்லவேண்டும். மழை மறந்து பாலைவனமாகப் போன இடங்கள் இடையே இருக்கின்றன. கொடுங்கோலரசனது நாட்டைப் போல நினைப்போர் உள்ளமுஞ் சுடும் பாலை பயிர் பச்சை ஈவிரக்கம் இல்லாமல் கிடக்கின்றது. எங்கோ ஒரு மூலையில் ஒரு சாண் உயரத்தில் ஒரு மொட்டை மூங்கில் நிற்கிறது. அதில் இலையுமில்லை; கொழுந்துமில்லை. பாறைக ளெல்லாம் பொரிந்துபோய் ருத்திரமூர்த்தியின் நெற்றிக் கண்ணின் பார்வை விழுந்த இடத்தைப் போல அந்தப் பூமி ஒரே பரப்பாகப் பரந்திருக்கிறது. கானலும், அதை நீரென்று எண்ணி ஓடித் திரியும் ஒன்று அல்லது இரண்டு மான்களும் அதுவும் உலகத்தின் ஒரு பகுதி என்பதை நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன. காதலன் போகும் வழி இதுதான்.

* * *

தோழி பாலை நிலத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறாள். அதன் வெம்மையையும், அதன் வழியே வியாபாரிகள் பிரயாணம் செய்வதையும், வழிப்பறி செய்வோர் அவர்களைக் கொள்ளை யிடுவதையும் அவளுக்குப் பலர் சொல்லி யிருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் அவள் நினைவுக்குக் கொண்டு வருகிறாள். தன் உயிர்க்காதலனது பிரிவைத் தாங்க மாட்டாமல் துடித்துச் சோர்ந்து விழுந்து கிடக்கும் தலைவியைப் பார்க்கும் போது அவள் மனம் மறுகுகின்றது. 'இவள் துயரத்தை மாற்றுவது எப்படி?' என்று யோசிக்கிறாள். அவளுக்குக் கற்பனை யறிவு உண்டு. தலைவிக்குக் கதைகள் கூறிப் பொழுது போக்கும் தந்திரத்தில் அவள் மிகவும் சாமர்த்திய முடையவள். ஆதலின், பாலை நிலத்தின் கொடுமைப் பரப்புக்கிடையே காணப்படும் அன்பை, தூய காதலை வெளிப்படுத்தும் ஒரு காட்சியை அவள் உள்ளத்துள்ளே காண்கின்றாள்.

* * *

நீரில்லாத பாலைவனந்தான் அது. பல இடங்களில் பழைய காலத்தில் தண்ணீர் தேங்கியிருந்த குழிகள் மாத்திரம் இருக்கின்றன. இரண்டு மான்கள் நாவறண்டு கண் சுழலத் திரிகின்றன. ஒன்று பெண்; மற்றொன்று அதன் ஆண்.

ஆணுக்குத் தன் தாகம் பெரியதாகத் தோன்றவில்லை: 'இந்த மெல்லியலுக்குச் சிறிது நீர் தேடித்தரவேண்டுமே!' என்று அது தவிக்கின்றது. கடவுள் கருணை செய்கிறார். எங்கோ ஒரு மூலையில் ஒரு சிறிய சுனை காணப்படுகிறது. சூரியனது வெயிலால் அதில் சுண்டிப்போய்க் குழம்பிய சிறிதளவு நீர் தேங்கி நிற்கிறது. இரண்டு மான்களும் அந்தச் சுனைக்கருகில் நிற்கின்றன.

அன்பின் அதிசய சக்திதான் என்ன சிறப்புடையது! அன்பின் முதிர்வில் இணையற்ற தியாகம் கனிகின்றது. அந்தச் சுனையிலுள்ள சிறிதளவு நீரை யார் உண்பது என்பதில் விவாதம் வந்துவிடுகின்றது. 'நான் தான் உண்பேன்', 'நான் தான் உண்பேன்' என்ற அசுர எண்ணம் அந்த மான்களிடத்தில் தோன்றவில்லை. 'நீ குடி' என்று ஆண்மான் அன்பு கனியச் சொல்கிறது. 'நீ தான் குடிக்கவேண்டும்' என்று பெண் மான் பேசுகிறது. தெய்விகக் காதலிலே தோன்றிய எண்ணம் அல்லவா?

சிறிது நேரம் இரண்டும் அங்கே நிற்கின்றன. ஆண்மான் தன்னுடைய ஆண்மையதிகாரத்தினால் பெண்மானைக் குடிக்கும்படி வற்புறுத்தலாம். பெண்மானும் அந்த வற்புறுத்தலுக்கு அஞ்சிக் குடிக்கலாம். அப்பொழுது அது மனத்தில் மகிழ்ச்சியோடு இனிமையாக உண்ணாதே. 'நம் காதலன் குடிக்கவில்லையே!' என்ற வருத்தத்தோடு அது குடிக்கும். அந்த வருத்தமிகுதியினால் அது குடித்தும் குடிக்காதது போலவே யல்லவா இருக்கும்? இந்த யோசனை ஆண் மானுக்குத் தோன்றுகிறது. இரண்டு பேரும் குடிக்கவோ அதில் ஜலம் இல்லை; அது போதாது. இந்தச் சங்கடத்தில் என்ன செய்வது?

தான் உண்டு மிஞ்சிய நீரைக் குடிப்பதானால் பெண்மான் அதனை இனிது உண்ணும்; இல்லையெனில் உண்ணாது. அதன் காதல் உயர்வு அப்படி இருக்கிறது. இந்தப் பெரிய சிக்கலைப் போக்குவதற்குத் திடீரென்று அதற்கு ஒரு தந்திரம் தோன்றுகின்றது.

வெகு வேகமாக அந்தச் சுனையிலே ஆண் மான் தன்வாயை வைத்து உறிஞ்சுகின்றது; வாஸ்தவத்தில் ஜலத்தைக் குடிக்கவில்லை. குடிப்பது போலப் பாசாங்கு செய்கிறது. "உஸ்" என்ற ஒலி மட்டும் கேட்கிறது. அது பெண்மானின் காதிலே படும்போது அதன் உள்ளம் குளிர்கின்றது. பாதிதாகம் அடங்கிவிடுகிறது. 'நம் காதலன் உண்டு தாகம் தீர்த்துக் கொண்டான். அவன் உண்டு மிஞ்சியதை நாம் இனிக் குடிக்கலாம்' என்று அது நினைக்கின்றது. அப்படியே பரம ஸந்தோஷத்தோடு அது சுனையிற் சிறுநீரைக் குடித்துவிடுகின்றது. அந்நீர் எய்தாது (போதாது) என்று எண்ணிக் கலங்கிய கலைமான், பிணைமான் இனிது உண்ண வேண்டித் தன் கள்ளத்தினால் ஊச்சி (உறிஞ்சி)ய தந்திரம் பலித்துவிட்டது. அது பிணைமானைத் தழுவிக் களிக்கின்றது.

* * * *

பாலை வெம்மையினிடையே நிகழும் இந்த அன்பு நிகழ்ச்சி தோழியின் உள்ளத்தைக் குளிர்விக்கின்றது. அதை அப்படியே தலைவிக்குச் சொல்கிறாள். 'உன் காதலர் திருவுள்ளத்திலே போவதாக விரும்பிய நெறி இத்தகையது' என்கின்றாள். 'வெவ்விய பாலையிலே ஆண் மான் தன் பெண் மானின் துயரைத் தீர்க்கச் செய்யும் தந்திரத்தைப் பார்த்து நின் காதலன் உன்னை நினைப்பான். அந்த மானுக்குள்ள அன்பு நிலை கூடத் தன்னிடத்திலே இல்லையே என்று வருந்துவான். விரைவிலே போன காரியத்தை முடித்துக்கொண்டு வந்து விடுவான்' என்ற விஷயத்தைத் தோழி சொல்வதில்லை; ஆனாலும் அந்த மான் கதையைக் கேட்ட தலைவி அதை ஊகித்துக் கொள்கிறாள். அவளுக்கு நம்பிக்கை உதயமாகிறது. 'வருவான்' என்ற துணிவோடு அவனை எதிர்பார்த்து நிற்கின்றாள்.

* * *

இந்தக் காட்சிகளையே பின் வரும் பாடல் உணர்த்துகிறது.

"சுனையிற் சிறுநீரை எய்தாதென்
றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண
வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம்
என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி."

—ஐந்திணை ஐம்பது

[எய்தாது-போதாது. பிணைமான்-பெண் மான். கலைமான்-ஆண் மான். ஊச்சும்-உறிஞ்சும். சுரம்-பாலைவனம்.]

தயார் ஆகிறது! விரைவில் வெளிவரும்!!

தமிழ் நாட்டினரின் புகழையும், ஆசியையும் பெற்ற நாடகம்
வெள்ளித் திரைக்கு வருகின்றது



ஸ்ரீமதி M. R. சந்தானலக்ஷ்மி S. சுந்தரி நவாப் ராஜமாணிக்கம்

அவரது கூட்டத்தினரும் நடிக்கும்

"இன்பசாகரன்"

(தமிழ்)

டைரக்டர் :—C. பட்டு அய்யர் ஸ்டுடியோ :—மோஷன் பிக்சர்

★

தென்னிந்தியாவின் முதல் ஹிந்திப் படம்!

"ப்ரேம் சாகர்"

வடநாட்டு நடிகதிலகங்கள் — மிஸ் ராம்பியாரி, இந்துபாலா, கோகிலா, பானர்ஜீ, ஹஸன்தீன்
முதலியோர் நடிப்பது

ஸ்டுடியோ :—மோஷன் பிக்சர்

★

Y. V. ராவ், L. நாராயண ராவ், மைசூர் வித்வான் சீனுவாஸன், அரங்கநாயகி
முதலியோர் தோன்றும்

"ஸ்வர்ணலதா"

(தமிழ்)

டைரக்டர் : Y. V. ராவ் ஸ்டுடியோ : நியூடோன் ஸ்டுடியோ

(The Rajendra Films Joint Production)

"மதுவில்க்கே தேச முன்னேற்றத்திற்கு மஹத்தான அடிப்படை"
என்பதை விளக்கும் உன்னதப் படம்

விவரங்களுக்கு :—

மஹாலக்ஷ்மி ஸ்டுடியோஸ் லிமிடெட்

ராயப்பேட்டை : : சென்னை

சீதையும் சிறையிருந்து

கே. சபாநாதன்

எழுதியது

அநுமான் சீதாபிராட்டியாரைக் காண்பதற்காக இலங்கையிலுள்ள மாளிகைகளிலெல்லாம் தேடிமுடித்த பின்னர், 'கள் உறையும் மலர்ச் சோலை' யொன்றனைக் கண்ணுற்றான். இச்சோலையின் ஒரு பாங்கரே கண்டனன் கற்புக்கரசியை. சிறிய திருவடி சீதா பிராட்டியாரைச் சந்தித்த இடம் அசோகவனமென்பது யாவர்க்கும் உடம்பாடெனினும், இது யாண்டுளது என்பதைப் பற்றி அபிப்பிராய பேதமுண்டு. இவ்வசோகவனமும் இலங்கையும் ஆழிவாய்ப்பட்டன என்பர் ஒரு சாரார். இப்பொழுது சிலோன் என்றழைக்கப்படும் இலங்கைத் தீவிற்றான் இவ்வசோகவன மிருந்ததென்பர் பிறிதொரு சாரார். இலங்கையினைப்பற்றிய கம்ப சித்திரங்களுட் சில இற்றை ஞான்றும் இயைபுடையனவாக விருத்தலின், இப்பொழுது சிலோன் என வழங்கப்படும் தீவு பண்டைஞான்றிருந்த இலங்கையின் ஒரு பகுதியெனச் சில சரித்திராசிரியர்கள் குறிப்பிட்டமை மிகப் பொருத்தமே.

இலங்கைத் தீவின் தென்பகுதி மிகப் பரந்திருந்த தென்றும், மாலைத் தீவு, லக்ஷத் தீவு முதலிய குறும் பொழில்களெல்லாம் இத்தீவொடு தொடர்புற்றுப் பரந்த நாடாக விருந்தனவென்றும் கூறுவர். இராவணன் கோட்டையும் தென்பாகத்திலிருந்தபடியால் அதுவும் ஆழிவாய்ப் பட்டதென்றும், அதன் உயர்வான பகுதிகளே இப்பொழுது சிறிய வாஸ், பெரியவாஸ் என வழங்கப்பட்டு வருகின்றனவென்றும் சரித்திராசிரியர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இராவணனது கோட்டை மீது ஒரு கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இராவணனும் அவனது கோட்டையும் அழிந்த காலத்தும், அவன் புகழை நினைவூட்டிக் கொண்டிருப்பது போலும் இக்கலங்கரை விளக்கம்!

இலங்கையை குபேரன் ஆட்சி புரிந்த காலத்தில் அவன் சிறந்த பூங்காவனமொன்றை அமைத்தான். இதனைப் பின்பற்றி இராவணனும் தனது நாட்டின் ஒரு பகுதியை இராவணன் தோட்டம் எனப் பெயரிட்டுச் சிறப்பாக வைத்திருந்தான். இது நான்கு பக்கத்திலும் சரிவான மலைத் தொடரால் சூழப் பட்டிருத்தலின், இம்மலைத் தொடர்களைத் தோட்டத்தின் சுவர்களென வழைப்பர். சமந்த கூடம், ஹக்கல, பேதுருத்தாலகல, கலகமகந்த எனும் மலைத்தொடர்கட்கிடைப்பட்ட இடமே இராவணன் அமைத்த பூந்தோட்டமாகும். இதன்கண் பல பிரிவுகளுள. அவற்றுளொன்றே அசோக வனம்.

இவ்வசோகவனம் சீதா எலிய எனும் சிங்களச் சொல்லால் இப்பொழுது வழங்கப்படுகின்றது. எலிய எனும் சிங்களச் சொல் வெளி எனப் பொருள்படும்; வனம் எனினும் பொருந்தும். சீதா பிராட்டியாரின் பெயரை நினைவூட்டும் இடங்கள் இலங்கையில் இரண்டுள. சீதா எலிய என்பதொன்று; சீதா வக்க (வக்க—வளைவு) என்பது மற்றொன்று. இவ்விரண்டினுள் சீதா எலிய அல்லது அசோக வனத்தைப் பற்றி யான் கேள்விப்பட்டனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

"வேலையுளிலங்கை யென்னும் விரிநகரொரு சார் விண்டோய் காலையு மாலைதானு மில்லதோர் கனக கற்பகச் சோலை" எனவும், "அலங்குதண் சோலை" எனவும் அநுமானே இச் சோலையைப் புகழ்ந்துரைத் திருக்கின்றான். இக்காலத்திலும் மத்திய மாகாணத்து நுவரெலியாப் பிரிவினைச் சென்று பார்ப்பின், இவ்வர்ணனை உண்மையா யிருத்தலைக் கண்டு மகிழலாம். கல்வியிற் பெரிய கம்பரும் இலங்கைத் தீவுக்கு வந்து இயற்கை யழகிலீடுபட்டுத் தான் பாடத்தொடங்கி யிருத்தல் கூடுமென ஐயுறவேண்டியிருக்கின்றது. 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பினை'க் கண்ணாரக் கண்டு களிக்கும் பொழுது, உண்டாகும் இன்பத்திற்கு வரம்பும் உண்டு கொல்!

நுவரெலியாவிலிருந்து யானும் சில நண்பர்களும் ஹெக்கலையிலுள்ள சிறந்த பூந்தோட்டத்தைப் பார்க்கச் சென்றோம். வழியில் நாலைந்து கட்டை (மைல்) சென்ற பின் எங்கள் மோட்டார் வண்டிச் சாரதி எங்களை நோக்கி, "இதுதான் சாமி, சீதா எலிய" என்றான். உடனே வண்டியை நிறுத்தி இறங்கி மிக்க ஆவலுடன் பார்க்கச் சென்றோம்.

நாங்கள் செல்வதைக் கண்ட வயோதிகரொருவர் எங்கள் முன்பாக வந்து "சாமிகாள்! நான் எல்லாம் உங்களுக்கு விவரமாச் சொல்றேன்; வாங்க" என்று பணிவொடு அழைத்தார். நாங்களும் அவரைப் பின்பற்றிச்சென்றோம்.

முதலில் ஒரு சிறு கோயிலைக் காட்டி "இதுதான், சாமி, சீதையினுடைய கோயில்" என்றார்.



சீதா குன்றமும் அருவியும்



... இதுதான் சாமி, சீதையினுடைய கோயில் ...

> "சீதையும் சிறையிருந்து—திரும்பி வந்து சேர்ந்தனள் துறை தீர்ந்து" என்று பாடினார் ஒரு தேசியக்கவி. இந்தியாவின் மகா காவியங்களில் ஒன்றான ராமாயணக் கதையின் முக்கியமான இடம் சீதையின் அசோகவனச் சிறைவாசம். சீதாதேவி சிறையிருந்த இடமென்று அனுமானிக்கப்படும் சீதா எலிய என்ற இலங்கை ஸ்தலத்தின் வர்ணனை கவர்ச்சி நிறைந்ததாகும்.

"இது சீதை கட்டிய கோயிலா அல்லது வழிபட்ட கோயிலா" எனக் கேட்டேன். "இல்லை சாமி, சீதாபிராட்டியாரைத் தெய்வமாக வழிபடுகிறோங்கோ, சாமி!" எனப் பதிலளித்தார். ஒரு குன்றத்தின் அடிவாரத்திலிருந்து பாயும் நீரருவி சிறிது தூரஞ் சென்று பின் கருங்கற் பாறையினுள் மறைந்து, கொஞ்ச தூரம் புலப்படாதிருந்து பின்னர் ஐம்பது கஜத்துக்கப்பால் பெரும் ஊற்றாக வெளித் தோன்றி ஓடுகின்றது. இவ்விரு ஊற்றுக்களும் வேறு வேறு போலத் தோன்றினும், ஒன்றே யென்பதனைச் சில பூக்களினுதவி கொண்டு விளக்கிக் காட்டினார்.

அருவி பாறையினுள் மறையும் இடத்தில் அவ்வயோதிகர் இட்ட பூக்கள் சிறிதுநேரம் மறைந்து அப்பால் அருவி பாறையினின்றும் வெளிக்கிளம்பும் ஊற்றிற் காணப்பட்டன. கற்பாறைமீது பல வட்ட வடிவமான பதிவுகளுண்டு. அவற்றை அப்பெரியார் சுட்டிக்காட்டி, "சுவாமி! இவைதான் இராவணன் ஏறிவந்த பட்டத்து யானையின் காலடிகள் பட்டுப் பதிந்த இடங்கள். அந்த இராவணன் மாதாவைச் சிர்குலைக்க எத்தனையோ சூழ்ச்சிகளைச் செய்து பார்த்தான். சில சமயங்களில் அவன் சீதையைப் பிடிப்பதற்காக ஓடி வந்தால், தாயார் இந்த ஆத்திலே பாய்ந்து விடுவாங்க. பாய்ந்து கருங்கற் பாறையினுள் ஒளித்திருந்தபின் மற்ற இடத்தால் வெளிக்கிளம்பிச் சென்று விடுவாங்க. இந்தத் தடிப்பயல் அந்த அம்மாள் நீரினுட் குதித்த இடத்தில் காத்திருந்து அப்புறம் வெட்கிப்போய் வீட்டுக்குத் திரும்புவானும். இந்தக் குன்றுக்கு அதன் பிறகுதான் சீதா குன்றம் என்று பெயர்," எனத் தன் கதையை முடித்தார்.

அக்குன்றின் மீது சிறிது தூரத்திலுள்ள சிறு குழிகளைக் காட்டி "சுவாமி! இதிலே தான் அந்த அம்மா முகங்கழுவினா; மற்றதிலே கைகால் கழுவுறது; அடுத்ததிலே சேலை அலசுகிறது; அதற்கடுத்ததிலே சட்டை தோய்க்கிறது" என அடுக்காக ஒவ்வொரு குழிக்கும் ஒவ்வொரு பயன் கற்பித்துச் சொன்னார். "இந்த அருவிக்கு என்ன பெயர்" என்று கேட்டேன். "அது சாமி, சீதா சுனை" என்றார். இது சீதா எல்ல எனும் சிங்களச் சொல்லின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.

சீதா குன்றம், சீதா வெளி, சீதா சுனை, இராவணன் தோட்டம் முதலிய இடப்பெயர்கள் யாவும் மிகப் பொருத்தமாக இடப்பட்டு ஒன்றனோடு மற்றொன்று தொடர்புற்று மிருத்தலின், இவ்வசோக வனத்திற்றான் சீதாபிராட்டியார் திரிசடையின் காவலில் இருந்திருத்தல் வேண்டுமெனக் கருதற்கிடமுண்டு. இலங்கையில் அசோக மரங்கள் பெரும்பாலுமுள்ள இடம் இஃதொன்றேயாம். இவ்வசோக மரங்களிற் செந்நிறப் பூக்கள் பூத்திருத்தலின், வனம் முழுதும் செந்நிறக் காடாகக் காட்சி யளிக்கின்றது. இக்காட்சி அநுமான் எரியூட்டிய நிகழ்ச்சியை நினைவூட்டுகின்றது.

சுமார் நாலாயிரம் ஆண்டுகட்கு முன் நிகழ்ந்த செய்தியைக் குறித்து இப்பொழுது ஆராய்ச்சி செய்து ஒரு தலை துணிதல் எளிதான தொன்றன்று. கற்புக்கரசியாகிய சீதாபிராட்டியார் பிறந்த இடமும் இலங்கையே யெனவும் கொள்வர் ஒரு சிலர். அநுமான் எரிக்கிரையாக்கின இடங்களே எலிய என வழங்கப் படுகின்றன எனச் சிலர் கூறுவர். ஆனால் இப்பொழுது ஹநுமான் பிறிதொரு உருவெடுத்துத் தமிழகம் முற்றும் தொண்டாற்றுகின்றான். கலை வளர்ச்சியிலும் தேசியத்தொண்டிலும் ஈடு பட்டுழைக்கின்றான். அவன் தொண்டு இலங்கையிலும் பரவுகின்றதாதலின், இலங்கை மக்களும் துயில் விட்டெழக் காலம் கிட்டிவிட்டதெனக் கருதுகின்றேன். முன்னர் வந்த அநுமான் இலங்கையில் ஒரு பாகத்தைத் தீக்கிரை யாக்கினன். ஆனால் இன்றைய "ஹநுமான்" ஆண்டு மலர்களைத்தூவி மீட்டும் இன்பச் சோலையாக்க முயல்கின்றான். இவனது புதுத்தூது மனித சாதியின் பூர்ண சுதந்திர இன்ப வாழ்க்கைக்கு உற்சாக மூட்டும் செய்தியன்றோ!

கோப்ரான் உயர் ரக பற்பசை

பலமிழந்த ஈறுகளில் கோப்ரான் உபயோகித்தவுடன் எரிச்சலேற்படும். இவைகளுக்கு ஜீவசக்தியளித்து, எதிர்க்கும் சக்தியளிக்கவே கோப்ரான் தயாரிக்கப்படுகிறது.
பற்களை சுத்தம் செய்ய அவசியமான நுரையே கோப்ரான் பற்பசை மூலம் ஏற்படும். அதிக நுரை ஏற்பட்டால், அவை கடைசியில் பற்களுக்கும் ஈறுகளுக்கும் கெடுதியாக முடியும்.
கோப்ரான் பற்பசையில் கருவேலன் சத்து இருப்பதால் பல் வியாதி வராமல் காக்கும்.



தயாரிப்பவர்கள் : KOPRAN CHEMICAL Co., BOMBAY ; Props. MAGANBHAI AMIN & Co.

மதராஸ் ஸ்டாகிஸ்டுகள் :—ஷியாம் & கம்பெனி, 6, பந்தர் தெரு; ஜே. எம். ஷேத், 3, பந்தர் தெரு; வி. ஜே. ஷேத், 2, பந்தர் தெரு; ஏ. பி. பரேக், 268, சைனாபஜார் ரோட்.

எச்சரிக்கை :—கோப்ரான் பற்பசை வாங்குகையில் கோப்ரான் கெமிகல் கம்பெனி (புரொப்ரைட்டர்கள், மகன்பாய் அமீன் கம்பெனி) யாரால் தயாரிக்கப்பட்ட புதிய டியூப் என கவனித்து வாங்குங்கள். லிக்விடேஷனிலுள்ள கோப்ரான் கெமிகல் கம்பெனி லிமிடெட்டாரால் தயாரிக்கப்பட்ட இரண்டு மூன்று வருஷமுள்ள பழய சரக்கை வாங்காதீர்கள்.

ஷாஜஹானின் காதல் கனவு

காதல் என்ற அந்த மகா சக்தியின் வெள்ளச் சுழலில் பட்டவர்களது கதைகள் மகா காவியங்களாகவும், சிரஞ்சீவி இலக்கியங்களாகவும் விளங்குகின்றன. மனித சமூகத்தின் வாழ்க்கைக் கொள்கைகளும், நம்பிக்கைகளும், முறைகளும் மாறலாம். ஆனால், இந்தக் காதல் கதைகளின் ரஸனையும், ருசியும் மாறாது; குறையாது.

தாஜ்மஹால் பாதுஷா ஷாஜஹானின் காதல் கவிதை. ஏட்டில் எழுத்தாணியால் எழுதியதன்று; சலவைக் கற்களால் ஆக்கப்பட்ட ஸ்வப்பனம். கண்ணால் கண்டு, கைகளால் தடவிப் பார்த்து உணரப்படக் கூடியதானாலும், அதை ஒரு கனவு என்றுதான் சொல்லவேண்டும். அத்தகைய அழகுக் கற்பனை.





தாஜ்மஹாலின் படம் அடிக்கடி காணக் கிடைக்கிறது. சாதாரணமாக தாஜ்மஹாலின் முன்பக்கத்துத்தோற்றம்—குளத்துடன்—தான் படமாக எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் படங்களில் மேலேயுள்ளது "ஷாஜஹானின் கருங்கல் மேடை." ஷாஜஹான் தன் மகன் ஔரங்கசீப்பினால் சிறைப்படுத்தப்பட்டு அந்திய காலத்தில் இதிலிருந்து தாஜ்மஹாலைப் பார்த்துப் பெருமூச்சு விட்டு ஏங்கி ஏங்கி இறந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

மற்ற இரண்டும் தாஜ்மஹாலின் இரண்டு புதிய கோணங்களிலிருந்து எடுக்கப்பட்ட படங்கள். இரண்டாவது படத்தின் இடக் கோடியிலுள்ள மரத்தின் நிழல் தோற்றம் தாஜ்மஹாலின் கம்பீரம் நிறைந்த அழகுத் தோற்றத்திற்கு இன்னும் அதிக சோபை யளிக்கிறது.



தேசம் பேராவலுடன் எதிர்பார்க்கும் ஸங்கீதானந்தம்



முசிரி. சுப்ரமண்ய ஐயர்
நடிக்கும்

துகாராம்

கோவை
சென்ட்ரல் ஸ்டூடியோவின்
தயாரிப்பு

இதர நடிகர்கள் :

ஸ்ரீமதி ஸீதா	காமேடியன் சாரங்கபாணி	ஆர். பாலசுப்ரமணியம்
பாலசரஸ்வதி	எம். எஸ். முருகேசம்	சோக்கலிங்க பாகவதர்

வித்வான் முசிரி சுப்ரமணியய்யரின் கர்ணாம்ருதமான பாடல்கள் கேட்கக் கேட்க ஆனந்தம்

மகத்தான ஆரம்பம் !

1938 ஜூலை 15-ந்தேதி முதல்

வேலிங்டன் டாக்கீஸ், திருச்சி ஓரியண்டல் டாக்கீஸ், சேலம் ராஜாராம் டாக்கீஸ், தஞ்சாவூர் ராஜா டாக்கீஸ், கும்பகோணம்

மற்றும் இதர நகரங்களில் ஏக காலத்தில் வெளிவரும்

விநியோக உரிமை பெற்றவர்கள் :

சேங்கல்பட்டு, வட ஆற்காடு & தென் ஆற்காடு நாராயணன் & கோ., மௌண்ட் ரோட், மதராஸ்.	ராமநாதபுரம், திருநெல்வேலி & புதுக்கோட்டை முருகன் டாக்கி பிலிம் கோ, மதுரை
சேலம் ஜில்லா எஸ். எஸ். வேலாயுதன், சேலம் பிலிம்ஸ் லிமிடெட், சேலம் **ஸிலோன்** ஸிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட், ஸிலோன்	**கோயம்புத்தூர் ஜில்லா** கர்நாடிக் டாக்கீஸ் லிமிடெட், கோயம்புத்தூர் **பர்மா** லங்காபிலிம் டிஸ்ட்ரிப்யூடிங் கம்பேனி, மதுரை

இதர பிரதேசங்களில் புக்கிங்குகளுக்கும் ஜில்லா உரிமைகளுக்கும் :

ஸெண்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட், கோயம்புத்தூர்

"துகாராம்" பாடல்களடங்கிய கிராமபோன் ரிகார்டுகள்
எல்லா **ஆர்ஸ் கொலம்பியா கிராமபோன்** வியாபாரிகளிடமும் கிடைக்கும்

செல்லாக்காசு



என். சிதம்பர சுப்ரமண்யன் எழுதியது

மணி பதினொன்றடிக்கப் பத்து நிமிஷம். சரியாக பதினொரு மணிக்கு ஆபீஸில் நான் இருக்க வேண்டும். அவசர அவசரமாக சட்டையை மாட்டிக் கொண்டு ஓடினேன். சாப்பிட்டவுடன் ஓடுவ தென்றால், அவ்வளவு லேசான காரியமா? மூச்சுத் திணற டிராம் நிற்கு மிடத்தில் நின்றுகொண்டிருந்தேன். டிராம் வந்தது. ஏறிஉட்கார்ந்துகொண்டு ஒரு 'ரிடன் டிக்கட்' என்று ஒரு ரூபாயைக் கண்டக்டரிடம் நீட்டினேன். அவன் அதைத் தட்டிப் பார்த்தான். என்னை ஏற இறங்கப் பார்த்தான். "ஸார், வேறே ரூபாய் கொடுங்கோ" என்று என்னிடம் திருப்பிக் கொடுத்தான். அது ஒரு செல்லாக்காசு.

கண்டக்டர் பார்வையில் பெருமை, கர்வம், அலக்ஷ்யம் மூன்றும் கலந்திருந்தன. இந்தச் செல்லாக் காசை அவன் தலையில் கட்டிவிட முயற்சித்ததில், அவன் ஏமாறவில்லை யல்லவா? இத் திருட்டுத் தனத்தைக் கண்டு பிடித்ததில் அவனுக்குப் பெருமையும் கர்வமும்; என் முயற்சி வீணானதில், என்னிடம் அலக்ஷ்யம்.

காசைத் திருப்பி வாங்கிக் கொண்டேன். நானும், அப்படியும், இப்படியும், அதைத் திருப்பிப் பார்த்து, ஒரு தட்டு தட்டிவிட்டு, பைக்குள் போட்டுக் கொண்டேன். ஆபீஸ் போயாக வேண்டுமே. வேறு காசு இருக்கிறதா என்று பையைக் கிளறிப் பார்த்தேன். நல்ல வேளையாக இரண்டணாக்கள் இருந்தன. ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு, இழந்த மரியாதையை விலைக்கு வாங்கினவன் போல, கம்பீரமாக வீற்றிருந்தேன்.

டிராமிலே போகும் போது, ஏதாவது பத்திரிகை வாசித்துக் கொண்டு போவது என் வழக்கம். ஆனால், இன்று எனக்குப் பத்திரிகையில் மனம் ஓடவில்லை. மத்யான டிபனுக்கு, என் ஆபீஸ் நண்பர்களிடம் பணம் வாங்கிக் கொள்ளலாம். அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந்த செல்லாக்காசை எப்படியாவது செல்லுபடி செய்தாகவேண்டுமே. எப்படியோ என்னிடம் வந்து விட்டது. கண்டக்டர் திருப்பிக் கொடுத்தபோது தான் செல்லாது என்பது தெரியும். எப்படி அது என்னை விட்டுப் போகப் போகிறதோ?

செல்லாக்காசு கல்யாணமாகாத தங்கை மாதிரி. அதைத் தட்டிக் கழிப்பதற்குச் செய்யும் முயற்சியெல்லால் வீணாகுமே யொழிய, பணம் கையைவிட்டுப் போவதே யில்லை. எவ்வளவோ யுக்திகள் செய்யலாம். ஆனால், பிறந்த வீட்டிற்குப்போய்விட்டு வரும் மனைவியைப்போல, கட்டாயம் திரும்பி வந்துவிடும். பண மூட்டையை, தலைக்கு அடியில்வைத்துக்கொண்டிருப்பவனாவது நிம்மதியாகத் தூங்குவான. செல்லாக் காசு மட்டும் ஒன்று இருந்து விட்டதோ, நிச்சயமாகத் தூக்கம் வரவே வராது.செல்லாக்காசு நாம்தேடிச் சேர்த்துக் கொண்ட பாவம் மாதிரி. எங்கேயாவது தொலைக்கப் பார்த்தாலும், அது நம்மை விடுவதில்லை. காசியிலும், இராமேச்வரத்திலும் போயாவது, பாவத்தைக் கரைத்து விட்டு வந்துவிடலாம். செல்லாக் காசிற்குக் காசியுமில்லை, இராமேச்வரமுமில்லை.

ஏசு கிறிஸ்து ஒரு ஊருக்குப் போயிருந்தார். அந்த ஊர் பணக்காரன் அவரை வரவேற்கவில்லை. ஆனால், அந்தக் கிராமத்து ஏழை ஸ்திரி அவரை வெகுவாக உபசரித்தாள். ஊரை விட்டுப்போகும்போது, பணக்காரனுக்கு ஒரு பீப்பாய் நிறையமோகராக்களும், ஏழைக்கு அவள்கடைசி ஆட்டை விழுங்க ஓநாயும் அருளிச் செய்து போனார். பணம் பாவம்



செய்யத் தூண்டுகிறது என்பது பெரியோர்கள் கொண்ட சித்தாந்தம். ஏசு நாதர், பணக்காரனுக்கு ஒரு பீப்பாய் நிறையத் தங்கம் அனுப்பியிருக்க வேண்டியதில்லை. ஒரு செல்லாத நாணயம் கொடுத்திருந்தால் போதும்; யோக்யனை அயோக்கியனாக மாற்றுவதற்குச் சிறந்த உபகாரணம் அதைவிட வேறொன்றுமில்லை.

கத்தரிக்காய்க் கூடைக் காரி, பால்காரன், கெரோஸின் ஆயில் விற்பவன், இவர்களிடம் செல்லாக் காசைச் செலுத்த முடியாது. நல்ல ரூபாயையே சில சமயம் அவர்கள் திருப்பிவிடுவார்கள். அந்த இடங்களில் முயற்சிப்பதில் பிரயோசனமில்லை. பொதுவாக, சினிமாக் கொட்டகை, நாடகக்கொட்டகை, ஹோட்டல்கள் இம்மாதிரி இடங்களில் தான் எல்லோரும் மாற்றுவது வழக்கம். ஜன நெருக்கடி, பரபரப்பு, அவசரம், இவையெல்லாம் சேரும்போது, செல்லாக் காசு வெளியேறுகிறது. மற்ற இடங்களில் அதைச் செலாவணி செய்வது அவரவர்கள் சாமர்த்தியத்தைப் பொறுத்தது. வாத்தியாருக்குத் தக்ஷிணை கொடுக்கலாம். ஆனால், எங்கள் வாத்தியார் சுப்பராம சாஸ்திரிகளைப் போலத் தானம் கொடுத்த மாட்டிற்கும் பல்லைப் பிடித்துப் பார்ப்பவர்களாயிருந்து, "செல்லாது போலிருக்கே, வேறே கொடுத்துவிடுங்களேன்" என்று கேட்டு வேறு காசு வாங்கிக் கொண்டு போகிறவர்களிடம் அது நடக்காது. பிரார்த்தனைக்குச் செலுத்த வேண்டிய உண்டியல் பணத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம். உண்டியலில் சேரும் பணம் செல்லாத தாயிருந்தால் என்ன? கடவுளுக்கு நம்மிட மிருக்கும் கருணைக்குச் செல்லாக் காசு போதாதா!

அடுத்த வீட்டு அனந்தராமய்யர் வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். முனிசிபல் வரி வாங்கும் குமாஸ்தா பணம் வசூலிக்க வருகிறார். ஆளைப்பார்த்தவுடன் "அம்பீ, பழுக்கா மரவையில், ஒரு நோட்டும், ஒரு ரூபாயும் வைத்திருக்கிறேன். எடுத்துக் கொண்டுவா, வரிகட்டி விடுவோம். ஸாரை எத்தனை நாள் வரச்சொல்கிறது!" என்று உபசரித்து உட்கார வைக்கிறார் ஐயர். ஆச்சர்யத்துடன் உட்காருகிறார் குமாஸ்தா. அவருக்கு ஒன்றும் புரியவில்லை. பையன் நோட்டையும் ரூபாயையும் கொண்டு வந்து கொடுக்கிறான். குமாஸ்தா வாங்கிக்கொள்கிறார். அந்த ரூபா ஒரு செல்லாக்காசு.

"சத்தக் கட்டையாயிருக்கே. வேறு எடுத்து வரச்சொல்லுங்களேன்."

"ஹாம்! செல்லாதா? எல்லாம் சர்க்கார் பணம் தானே, ஐயா. நான் போட்ட பணமா? உங்க முனிசிபாலிட்டி செய்யற வேலைக்கு இது போதாதோ? சாக்கடைலே ஜலம் போகல்லே. குழாயிலே ஜலம் துளியூண்டு சொட்டறது. வரிக்கு மாத்திரம் கறாராக வந்து விடுகிறீர்கள்.



வேணும்னா, இந்த ரூபாயை எடுத்துக்கொண்டு போம். இல்லாவிட்டால் பதினைந்து நாள் கழித்து வாரும்" என்று ஒரு இரைச்சல் போடுகிறார். குமாஸ்தா, வராத நல்ல ரூபாயைவிட வந்த செல்லாத ரூபாயே தேவலை யென்று, எடுத்துக் கொண்டு போய்ச் சேருகிறார்.

எனக்கு அவ்வளவு சாமர்த்தியமும், மனோ தைர்யமும் கிடையாது. பொதுவாக, முன்சொன்னபடி, சினிமாவிலும், ஹோட்டல்களிலும் தான் மாற்றுவது வழக்கம். செல்லாத ரூபாயோடு, நல்ல ரூபாயையும் எடுத்துக் கொண்டு போவேன். செல்லாக் காசைக் கொடுக்கும் போதெல்லாம், அது திரும்பி வந்து விடுமென்றே எதிர்பார்ப்பேன். நான்

நினைத்தபடி தான் அடிக்கடி நடக்கும். தப்பித் தவறி யாராவது வாங்கிக்கொண்டு திருப்பித்தராமலிருந்து விட்டால், அவர்கள் தலை மறையும் வரையில் எனக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. நான் எதிர் பார்த்தவாறே, பணம் திரும்பிவிட்டால், ஒரு விகல்பமற்ற புன்சிரிப்புடன், கல்மஷமற்ற மனத்தினனாய், ஒன்றுமறியாத குழந்தையைப் போல, "அடேடே! அது செல்லாதா?" என்று ஆச்சர்யத்தோடு அதைத் திருப்பி வாங்கிக்கொண்டு, பையிலிருக்கும் மற்றொரு ரூபாயை மனமுவந்து கொடுப்பேன். சில பேர் வழிகள் போல் "இது நல்ல ரூபா, ஸார். நன்றாகத் தட்டிப் பாருங்கோ, ஸார். யார் செல்லாதுங்கிறது? இப்பத்தானே போஸ்டாபீஸில் வாங்கி வருகிறேன். ஒருவரும் உங்களிடம் வாங்கிக் கில்லேன்னா, என்னிடமே திருப்பிக் கொடுத்து விடுங்கள், ஸார். வாங்கிண்டுடறேன்" என்றெல்லாம் வாதம் செய்வதில்லை.

"நான் யோக்யன். நான் நாணயஸ்தன். பிறருக்குத் தீங்கு செய்வதில்லை. பொய், பித்தலாட்டம் தெரியவே தெரியாது" என்று பெருமையாகச் சொல்பவர்கள் செல்லாக்காசு விஷயத்தில் மாத்திரம் அவ்வளவு யோக்யமாயும், நாணயமாயும் நடந்து கொள்வதில்லை. ஒருவனை ஒருவன் ஏமாற்றுவதிலேயே உலகம் நடக்கிறது என்பதற்கு ருஜு செல்லாக்காசு. நாமும் ஏமாறுகிறோம். முடிந்த வரையில், பிறரையும் ஏமாற்றுகிறோம். இது தினசரி நடந்து கொண்டேயிருக்கிறது.

"இதிலென்ன தப்பு? காசு செல்லாமலிருப்பதற்கு நாம் ஜவாப்தாரியில்லை. நாம் நஷ்டப்படுவானேன்? நம்மிடமிருந்து அதைத் தள்ளிவிட்டால், வாங்குகிறவன் அவன் யுக்திப்படி எது வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டுமே!" என்று சமாதானம் செய்து கொள்ளலாம். மனச்சாக்ஷியை திருப்திசெய்வது மிகவும் சுலபமான கார்யம். அதை வெகு எளிதில் இஷ்டம்போல் சமாதானப்படுத்தி விடலாம். தவறு செய்யும்போதுகூட, தர்ம நியாயம் பேசுவதற்கு வழக்கப்படுத்திக் கொள்கிறோமல்லவா? நம்மை நாம் ஏமாற்றிக்கொள்ளும் போது மனச்சாக்ஷி முகத்தை மறைத்துக் கொள்ளும். ஆனால், ஒரு செல்லாக்காசு நம்மை இவ்வளவு கேவலமாகச் செய்யவேண்டியதில்லை. எவ்வளவு உபாயங்கள் நாம் செய்யவேண்டியிருக்கிறது! நம் கார்யத்தைக் கவனித்துக்கொண்டு போகிறோம்; பிறர் எக்கேடு கெட்டாலென்ன? நம் சிரமத்தை பிறர் தலையில் தூக்கி வைக்க நாம் பின் வாங்குவதில்லை. அதற்குப் பிரமாணம் செல்லாக்காசு. எவ்வளவு செல்லாக்காசுகள் நம் கைக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. ஆனால், நம்மிடம் செல்லாக்காசு மூட்டையா இருக்கிறது? கிடையவே கிடையாது. எப்படி வந்ததோ அப்படியே போய்விடுகிறது ஆனால், தெரியாமல் வந்தது தெரிந்துபோகிறது.

ஆபீஸிலிருந்து திரும்பி வரும்போது செல்லாக் காசின் ஞாபகம் வந்தது. எப்படிச்செலவழிப்பது என்று யோசித்துக் கொண்டே வந்தேன். டிராம், மௌண்ட் ரோட் வந்தது. 'ஹிந்து! ஹிந்து!' என்று கத்திக் கொண்டிருந்தான் பையன். "டேய், சில்லரை இருக்கா?" என்றேன். பதினைந்தணா எடுத்தான் பையன். பதினைந்தணாவையும், 'ஹிந்துவையும்' வாங்கிக் கொண்டு, ரூபாயை அவன் கையிலே போட்டேன். அவன் ரூபாயைத் தட்டிப் பார்ப்பதற்குள் டிராம் 'ஹைரோட்' வந்து விட்டது. காசு கையை விட்டுப் போய்விட்டது. ஆனால், ஒரு பிசாசு என் நெஞ்சை அறுத்துக் கொண்டேயிருந்தது. அவன் அந்த ரூபாயை வைத்துக் கொண்டு எப்படித் திண்டாடுகிறானோ? என் சுய நலத்திற்காக ஒரு ஏழை தலையிலா கை வைக்க வேண்டும்? அதற்குப் பிறகு, மவுண்ட் ரோட்டில் தலை நீட்டவே, எனக்குப் பயமாயும் வெட்கமாயுமிருந்தது. என் குணம் ஒரு செல்லாக்காசு கூடப் பெறாது என்று நினைக்க அவமானமாயிருந்தது. செல்லாத நாணயம் என்னை விட்டுப் போய் விட்டது. என் நாணயம் செல்லாததாகி என்னிடமே யிருக்கிறது!



தீ • விபத்து • கப்பல் • ஆயுள் • இன்ஷ்யூரன்ஸ் நடத்துகிறது

உச்ச நிலையிலுள்ளது

நியூ இந்தியா

ஏன்?

இக்கம்பெனி, இந்தியாவில் கப்பல், தீ, விபத்து, ஆயுள், முதலிய துறைகளில் பெருகிய வியாபாரம் செய்திருக்கிறது.

எமது கம்பெனி! மூலபலம்—நீடிப்பு—பொதுஜன நம்பிக்கை முதலியவைகளைக்கொண்டது என்பதற்குக் கீழ்க்கண்ட புள்ளி விபரங்களே அத்தாட்சியாகும்

கையொப்பமிட்ட மூலதனம் ரூ. 3,56,05,275
கொடுக்கப்பட்ட " ரூ. 71,21,055
மொத்தம் நிதி (31—3—1937) ரூ. 2,13,94,387

இதுவரை கொடுக்கப்பட்ட உரிமைகள் (Claims) மொத்தம் ஏழு கோடிக்கு மேல் ஓடுகின்றது.

1936-37-ம் வருஷத்திய மொத்த பிரிமிய வருமானம் **91** லட்சத்துக்குமேல் இருக்கிறது.

ஐந்து வருட "ஆயுள்" இன்ஷ்யூரன்ஸ் வளர்ச்சிப் புள்ளி.

	1931—32 ரூபா	1932—33 ரூபா	1933—34 ரூபா	1934—35 ரூபா	1935—36 ரூபா
புது அஷ்யூரன்ஸ் ...	88,00,000	105,00,000	111,66,500	1,41,02,250	1,76,41,750
மொத்தம் உள்ள கணக்கு ...	146,00,000	219,00,000	284,25,834	3,85,43,292	5,29,23,711
முதிர்ந்து கொடுக்கப்பட்ட உரிமைகள் ...	41,000	1,26,000	1,29,750	2,15,100	2,76,592

விசேட நன்மை அளிக்கும் எங்கள் அரிய திட்டம் எது?

5,000 ரூபாய் பாலிசிக்கு 15,070 ரூபாய் கொடுப்பதாக செய்துக்கொள்ளும் ஒப்பந்தத் திட்டம்.

வருடப் பிரிமியங்களின் மேல் $1\frac{1}{4}\%$ குறைவு.

ஏஜன்ஸி மனுதார்கள் தேவை

வேண்டுவோர்:— **கே. கே. ஸ்ரீனிவாசன்,** பிராஞ்சு மானேஜர், என்ற விலாசத்திற்கு எழுதுக.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி,
மதராஸ் கிளை: 4, 5, முதல் லைன் பீச்சு.

ஆந்திர தேசத்திலும்
தமிழ் நாட்டிலுமுள்ள
பிரதான நகரங்களில்

சீ
க்
கி
ர
த்
தி
ல்

வர விருக்கிறது

ஆந்திரா ஸினிடோன் லிமிடெட்

(விசாகபட்டணம்)

சமர்ப்பிக்கும்

சினிமா உலகின் தலைசிறந்த மகத்தான தயாரிப்பு

பக்த ஜெயதேவர்

(தெலுங்கிலும், ஹிந்தியிலும்)

இந்தியா முழுதும் போற்றும் ஒரு மஹானுடைய திவ்ய சரிதம். இன்றும் இந்தியா முழுதும் அவருக்கு மரியாதை செலுத்துகிறது. சத்தியம், தர்மம் இவற்றிற்காக தனது சகல சொத்தையும் அர்ப்பணித்த மஹான். ஆரம்ப முதல் கடைசிவரை கவர்ச்சி பொருந்திய கதை அமைப்பு. ஏராளமானவர்களின் மனதை இழுக்கும் படம். குடும்பத்திற்கெல்லாம் படிப்பினையைக் கற்பிக்கும் சம்பாஷணைகள்.

இது சமூகம்—மதம்—சங்கீதம் இம்மூன்றும் நிறைந்த உன்னதப் படம்

ரெண்டுசிந்தல சத்யநாராயணமூர்த்தி (ஜயதேவர்)
வி. சாந்தகுமாரி (பத்மா)

முக்ய நடிகர்கள் :

தெலுங்கில் நடிக்கிறார்கள்:

- வி. சாந்தகுமாரி
- ரெண்டுசிந்தல சத்யநாராயணமூர்த்தி
- கமலாபாய் சுரபி
- வெல்லங்கி வெங்கடேச்வரலு
- மங்கிபூடி காமேச்வர ராவ்
- ஜி. விஸ்வேச்வரம்மா
- ஒய். தாதா ராவ் (மேதாவிச் சிறுவன்)
- ராதாராணி (நாட்டியக்காரி)

மற்றும்

தமது அற்புதமான நடிப்பால் பரவசத்தில் உங்களை மூழ்கச் செய்யப்போகும் உயர்ந்த நடிகர்கள் தோன்றுகிறார்கள். எல்லா விதத்திலும் சிறப்பாக நடிகர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்பது பொதுஜன வாக்கு.

டைரக்ஷன் :
ஹீரன் போஸ்

ரிகார்டிங்:
எஸ். சாட்டர்ஜி எம். எஸ்ஸி.

போட்டோக்காரர் :
ஜி. சிங்.

ஆர்ட் டைரக்ஷன் :
டி. எஸ். மணி

லெபரெடரி :
கே. ராய்

படம் தயாரிக்குமிடம் :—
ஆந்திரா சினிடோன் ஸ்டுடியோ, விசாகபட்டணம்

"உயர்தரப் படங்களுக்கு உயிர் சிறந்த தயாரிப்பே!"

பக்த ஜெயதேவரில்

பக்தி, நாரதகானம், ஊர்வசியின்நர்த்தனம்போன்ற நாட்டியம், கணக்கற்ற மாந்திரீக போட்டோஸீன்கள், திகைக்கச்செய்யும் ஸெட்டிங்குகள், அழகிய இயற்கைக் காட்சிகள், சோகரசம், காதல், உணர்ச்சி ததும்பும் நடிப்பு, ஜன ஆகர்ஷணம், முதலியவை அடங்கியது............இன்னும் என்ன வேண்டும் ஒரு படத்தை சிறப்புறச் செய்ய !

தென்னிந்திய சினிமா உலகின் சரித்திரத்திலேயே இதற்கிணை வேறில்லையென்று எல்லோரும் பாராட்டப்போகும் படமிது என்ற கியாதியை முன்னதாகவே அடைந்த படம்.

புக்கிங்குகளுக்கும், ஏஜன்ஸி திட்டங்களுக்கும் எழுத்து எழுதுக :

மானேஜிங் ஏஜண்டுகள் :

ராஜு அண் கோ.,

போன் : ஆபீஸ் 24, ஸ்டுடியோ 99

தந்தி : CINETONE

ஆந்திரா சினிடோன் லிமிடெட்

83, மெயின் ரோடு • விசாகபட்டணம்.



மரங்களும் மனிதனும்

ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி

ஒரு காலத்தில் அனுபவமற்றவனய் அறிவிற் குறைந்தவனய் கேவலம் மிருகத்தைப் போல் இடம் இடமாய்ச் சஞ்சரித்து உயிர் வாழ்ந்துவந்த மனிதன், காட்டில் தாமாக முளைத்தெழுந்த மரங்களிற் பழுத்த பழங்களையும், தாமாக முளைத்து முற்றிய தானியக் கதிர்களையும் பறித்துத் தின்று அரும்பாடுபட்டுப் பிழைத்து உயிர் தப்பி வந்தான். பிறகு, அறிவும் அனுபவமும் முதிர, தனக்கு வேண்டிய செடிகளிற் சில வற்றை, தான் தங்கி வாழ்ந்த இடங்களிலேயே, பயிர் செய்யக் கற்றுக்கொண்டான். அதற்கு மேல் உயிர் தாங்குவது சற்றே எளிதாயிற்று. இவ்வாறு சுமார் ஆறுயிரம் வருஷங்களுக்கு முந்திய காலம்தொட்டே, மனிதன் உணவிற்காகவும் அழகுக்காகவும் செடி கொடி வகைகளை வளர்த்து வந்திருக்கிறுன். ஆயினும் செடிகொடிகள் முதலிய தாவர வகைகளின் உயிர்த் தத்துவங்களை முறையாய் ஆராயத் தொடங்கி ஏறக்குறைய நூறு வருஷங்களே யாயின.

* * *

இவ்வுலகத்திலே உள்ள பிராணிகள் அனைத்தும் தாவரங்களாலேயே உயிர் வாழ்கின்றன என்னலாம். ஏனெனில், பசித்தாலும் புல்லைத் தின்னுப் புலியானது, புல்லையும் இலையையும் தின்று வாழும் மான் முதலிய தாவர பக்ஷணிகளை அடித்துத் கொன்று தின்று உயிர் வாழ்கிறது. ஆதலால், முதற் படியில் இல்லாவிட்டாலும் இரண்டாம் படியிலாவது பிராணிகள் உயிரைத் தாவரங்கள் தாங்குகின்றன.

பிராணிகளிடத்துக் காணப்படாத விசேஷமான சக்தி ஒன்று தாவரங்களிடத்தே உள்ளதாய்த் தெரிகிறது. மண் முதலிய சடப் பொருள்களிலிருந்து உயிர்ப் பொருளுக்கு வேண்டிய வஸ்துக்களை எடுத்துக்கொள்ளும் சக்தியானது பிராணிகளிடத்தில் இல்லை. தாவரங்களுக்கு மட்டுமே அந்தச் சக்தி இருக்கிறது.

* * *

இவ்வுலகத்திலே எப்பொழுதும் மும்முரமான பிராணுதாரப் போராட்டம் நடந்து கொண்டே யிருக்கிறது. பசுவும் புலியும் மட்டுமல்ல; பாம்பும் தேரையும் மட்டுமல்ல; இப்பூமியிலுள்ள எல்லா உயிர்களும் செடியும், கொடியும், புல்லும், பூண்டும், நண்டும், நத்தையும், மீனும், மிருகமும், பக்ஷியும், மனிதனும் ஆகிய எல்லா உயிர்களும்—இப் பிராணுதாரப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கின்றன. ஒன்றுல் மற்றென்று வாழ்வதும், ஒன்று மற்றென்றை அழிக்க முயலுவதும் இவ்வுலகத்தியற்கை. வலியற்றவை, ஏமாந்தவை, முயற்சியற்றவை, சாமர்த்தியமற்றவை முதலியன கொடுமையான இப்போராட்டத்தில் இழுபட்டுத் தோல்வியுற்று அழிந்து போவது உறுதி. எத்தனையோ வகை உயிர்கள்—தாவரங்களும் ஜங்கமங்களும்—இவ்வாறு அடியோடு தொலைந்து நிர்மூலமாய்ப் போயிருக்கின்றன. இதுபோலவேதான் இனிமேலும், இப்பொழுது உள்ள உயிர்களிற் சில இனி அழிந்து அற்றுப்போவன என்பது உறுதி.

* * *

ஒவ்வொரு உயிரும் தன் பொருட்டு—சிறிதளவு தன் இனத்தின் பொருட்டும்—உயிர் வாழ்கின்றதே யன்றிப் பிறவகை, உயிரின் பொருட்டு வாழ்வதில்லை. எவ்வகை உயிருக்கும் பிறவகை உயிரைக் காப்பாற்றவேண்டும், பிறர்பொருட்டு உயிர் வாழவேண்டும் என்ற உத்தம தர்ம சிந்தனை கிடையாது. “மல்லிகையும் ரோஜாவும் மணமிகுந்த சாமந்தியும்” மனிதர் மோத்தற் பொருட்டு தம் மணங் கமழ்வதில்லை. கீரையும் கத்தரியும் மனிதர் தம்மைத் தின்னும் பொருட்டு முளைப்பதில்லை. பாம்புக் காகத் தவளை பிறப்பதில்லை; புலி வயிறு புடைப்பதற்காக மான் புல் மேய்வதில்லை.

இருந்தபோதிலும், ஓர் உயிர் மற்றோர் உயிரைப் பயன்படுத்திக் கொள்வதை நாம் பார்க்கிறோம். ஆனல், இதிலிருந்து ஒன்றுக் கொன்று துணை செய்யவேண்டும் என்னும் நட்புக் கருத்துத்தான் படைப்பின் கருத்து என்று முடிவு செய்வது தவருகும். ஓர் உதாரணத்தால் இது விளங்கும். தானுக நிமிர்ந்து நிற்கச் சக்தியற்றுத் துவளும் காட்டுக் கொடியானது பக்கத்திலுள்ள மரத்தைப் பற்றி மெல்லமெல்ல மேலேறுகிறது. மேலேறித் தனக்கு இன்றியமையாத சூரிய வெளிச்சத்தில் தன் தலையை நீட்டி உயர்த்துகிறது. நாளடைவில் மரத்தின் மேலுச்சி முழுவதிலும் தன் இலைகளைப் பரப்புகிறது. மலர் நிறைந்து களித்து இன்புற்று, தனக்குத் துணை செய்த மரத்தின்மேல் வெயில் படாமல் அதற்கு நிழலிடுகிறது; ‘என்ன அன்பு’ என்று நினைக்கலாம். இல்லவே இல்லை: இது அன்புச் செயலன்று. ஏனெனில், கொடி பரந்த மரம் நிழல்பட்டு, வெயிலற்றுப் போகிறது. வெயிலின்றிப் பச்சை மரங்கள் வாழ முடியா. மேலும் உதவி பெற்ற கொடியானது இன்னோர் அபகாரமும் செய்கிறது. மரத்தின் வேர்ப்புறத்திலே தன்னுடைய வேர்களைப் பரப்பி அங்குள்ள ஈரத்தையும் உணவையும் முழுக்கப் பறித்து விடுகிறது. மரம் பட்டுப்போகிறது. பாலைப் பருகும் நச்சரவினும் கொடியதாக அல்லவா இருக்கிறது அழகிய பசுங்கொடியின் செய்ந்நன்றி கொல்லும் வாழ்க்கை!

* * *

இரக்கமற்றதாய்த் தோன்றும் இக்கொடிய போராட்டத்திலே மனிதனும் ஈடுபட்டிருக்கிறுன்—வேறுவகை யில்லை. அவனைச் சுற்றிலுமுள்ள மிருகங்களும் தாவரங்களும் அவற்றுள் சில நுண்ணிதின் நுண்ணிய—அவனை எதிர்த்து அழிக்க முயன்றுகொண்டே யிருக்கின்றன. புலியும் பாம்பும் அவனை விழுங்குகின்றன; கடித்துக்கொல்லுகின்றன. உதவாச் செடிகள் முளைத்துச் செழித்து அவனுக்கு உணவாகும் நற்செடிகளை அழித்துத் தொலைத்து அவனைப் பட்டினி போட முயலுகின்றன. சிற்சில செடிகளின் அழகிய பூக்களும் இலைகளும் பழங்களும் கொல்லும் விஷமுள்ளன. கண்ணுக்குத் தெரியா நுண்ணுயிர்கள் — தாவரங்களும் ஜந்துக்களும்— நீக்கொணுக் கொடு நோய்களை உலகெங்கும் பரப்புகின்றன. மனித இனத்தையே அவை அழித்துவிடப் பார்க்கின்றன. இவையாவும் எண்ணிச் செய்யும் கருமங்கள் என்று நான் சொல்லவில்லை. ஆயினும் என்ன? எண்ணம் யாதாயினும் அஃது உளதாயினும் இலதே யாயினும், பயன் ஒன்றேதான் அல்லவா?

* * * *

இடையருது நிகழும் இம் மும்முரமான ஈரமற்ற போராட்டத்தில் வலுவிலே இழுக்கப்படும் மனித இனமானது மற்ற உயிர்கள் அனைத்தினும் அறிவிற் சிறந்தது. ஆதலால், அது தன் வாழ்க்கைக்குத் துணையான செடி வகைகளை வளர்த்தும், பகையான வகைகளை அழித்தும், இருவகையாலும் தன்னுடைய தற்காப்பைப் பேணி வந்திருக்கிறது. இவ்வகையாய்த் தொடங்கிய முயற்சியானது மேலேசொல்லியபடி ஆறுயிரம் வருஷங்களுக்கு முன் தொடங்கிய போதிலும், ஒழுங்கின்றியும் ஒரு முறையாய்த் தொகுக்கப்படாமலும் இருந்தது. இப்பொழுது, ஒரு நூறு வருஷமாகத்தான் அவ்வாறு கிடைத்த பழைய அனுபவங்களையும் புதிதாகச் சோதித்தறிந்த நூதன அனுபவங்களையும் திரட்டி, ஒத்துப்பார்த்து, ஒழுங்குபடுத்தித் தாவரங்களின் இயற்கைகளையும், குண குணங்களையும் பலவிதமாய் மனிதர் ஆராய்ந்து வருகிறுர்கள்.

* * * *

இப்பொழுது,—தாவரங்களின் வகைகளை அறிந்து, பிரித்துத்தெரிந்து பகுத்துப் பெயரிட்டு வருவோர் அவற்றின் உயிர்த் தத்துவங்களையும் உடல் நுட்பங்களையும் அறிய முயலுவோர், மண்ணையும் சீதோஷ்ண நிலைமையையும் ஒட்டிய அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வோர், அவற்றைப் பாதிக்கும் நோய்களையும் அந்நோய்களின் தன்மைகளையும் சோதித்து வருவோர், புதிது புதிதான மரம் கொடி செடி வகைகளைச் சிருஷ்டிக்க முயலுவோர், அவற்றுக்கும் கைத்தொழில் வியாபாரம் தேசத்தின் நிலை முதலியவற்றுக்கும் உள்ள தொடர்களை நுணுகி ஆராய்வோர், என்றெல்லாம் பற்பல வகையான ஆராய்ச்சி ஆராய்ந்து மனித அறிவுத் தொகுதியை வளர்த்துப் பெருக்கி வருகின்றனர். இவற்றுள் ஒவ்வொரு துறையிலும் கிடைத்துள்ள அறிவானது மனித இனத்தின் தற்காப்புக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. சிறு இடத்தில் நிறையச் செடிகளை வளர்ப்பதும்; சில செடிகளிலிருந்து நிறைய மாகுலைப் பெறுவதும் அவற்றுக்கு நோய் வராமல் பாதுகாப்பதும், வந்த நோய்களைத் தீர்ப்பதும் - இவையும் இவைபோன்ற பிறவும் இவ்விஞ்ஞானிகளால் உண்டாகிய உபகாரங்கள்.

யாளர் செடிகொடிவகைகளைப் பலவிதமாய்

நகர்ந்து செல்லும் தலைநகரம்

•

எஸ். ஆர்

•



……புது டில்லி சட்டசபைக் கட்டிடமும், செகரெட்டேரியேட் ஆபீஸ்களும்……

ஒரே நகரம். சுமார் நாற்பது ஐம்பது சதுர மைல் விஸ்தீரணமுள்ள நிலப் பரப்பு. இந்த எல்லைக்குள் எத்தகைய மகத்தான நாடகங்கள் எல்லாம் நடந்து முடிந்திருக்கின்றன! சாதாரண மனிதன் ஒருவன் கற்பனையாலும் காணமுடியாத கம்பீரமான பிரமாதமான விஷயங்களெல்லாம் இந்தச் சிறிய எல்லைக்குள் நிகழ்ந்திருக்கின்றன! எல்லாம் பெரிய பெரிய, ரொம்பப் பெரிய சாம்ராஜ்ய நாடகங்கள்! கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கைக் கடிவாளத்தைப்பற்றி இழுத்துத் திசைமாற்றி ஓட்டும் ஒரு மகா சக்தி, இந்த எல்லையில், சரித்திரத்திற்கும் முந்திய காலத்திலிருந்தே கண்ணுக்குத் தெரியாமல் தங்கியிருந்து ஆட்சி புரிவதாகத் தோன்றுகிறது.

“சாம்ராஜ்யங்களின் சமாதி” என்று ஒரு பிரபல சரித்திராசிரியரால் குறிக்கப்படும் டில்லி நகரத்தின் சரித்திரம் ரொம்ப ரொம்பக் கவர்ச்சி நிறைந்தது. இன்றும் அதன் பழமை வாய்ந்த கடை வீதிகளில் நிற்கும்போது, நம்மையும் மீறி, நமது மனக் கண்முன் அற்புதமான காட்சிகளெல்லாம் எழுந்து நடைபெறுகின்றன.

லட்சக் கணக்கில், மனக்கண்ணின் திருஷ்டி வியாபகத்தையும் மீறிய பரப்பில், மத்த கஜங்களும், துரகங்களும், கொடியாட அசைந்து செல்லும் ரதங்களும், ஆயுதந் தாங்கிய மனிதப் படைகளும் வரிசை வரிசையாக எழுந்து செல்லுகின்றன. இங்கு சிந்தியுள்ள மனித ரத்தம் முழுவதும் பெரும் பிரவாகமாகக் கண்முன் ஓடுகிறது.

நவரஸ நாடகங்கள்

கணத்திற்குக் கணம் மாறுபடும் உணர்ச்சிகளில் அமுங்கி அமுங்கி எழுகிறது நெஞ்சம். வீரம், சோகம், பயங்கரம், ச்ருங்காரம் என்று நவ ரஸங்களையும் கங்கையாற்றின் வெள்ளமாகப் பாய்ச்சும் காட்சிகள் எழுகின்றன. பாண்டவர்களுக்காகத் தூது நடந்த பகவான் கிருஷ்ணன், புத்தர் பிரான் முதலிய மகா புருஷர்களின் நினைவு பொங்கியெழுகிறது.

> மகாபாரத காலத்தில் இந்திரப்ரஸ்தம் என்று வழங்கிய ஸ்தலம், இன்று டில்லி என்று இந்திய ஏகாதிபத்தியத்தின் தலைநகராக விளங்குகிறது. இந்நகரம் எப்படி நூற்றுண்டுக்கு நூற்றுண்டு நகர்ந்து நகர்ந்து சுற்றி வருகிறது என்ற ரஸமான சரித்திரம் இங்கு தரப்படுகிறது.

இதோ அடுத்த காட்சி. எத்தனை தினுசான மதத்தினர்! எப்படி எப்படிப்பட்ட பொருளாதார அமைப்பைக் கொண்ட சமுதாயங்கள் இந்த இடத்திலிருந்து சிருஷ்டிக்கப்படுகின்றன!

புத்த மதத்தின் சாயையில் ஒரு மகத்தான சமூக அமைப்பு நடக்கிறது. இதோ அது மாறி விட்டது. கொஞ்சம் தள்ளிப் பாருங்கள். அரேபியாவிலிருந்து கடலலையின் வேகத்துடனும், பலத்துடனும் வந்து பரவுகிறது இஸ்லாம் மதம். இப்போது புதிய தினுசான சமூகச் சட்டங்கள். இன்னும் கொஞ்சம் தள்ளி சீக்கிய மதம் என்று ஒன்றன் சாயை படருகிறது. இதோ கிறிஸ்துவ மதத்தினரின் ஆட்சியதிகாரம் இங்கு வேரூன்றுகிறது. கணத்திற்குக் கணம் மாறி மாறிப் புதிய புதிய காட்சிகள் எழும் இந்த இடத்தின் சரித்திரம் கவர்ச்சி நிறைந்தது.

ஆராய்ச்சியாளர்கள் செய்துள்ள நிர்ணயப்படி இன்றைக்குச் சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்பு நடந்த மகாபாரதக் கதையின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை, இந்த ஸ்தலத்தில் எவ்வளவு அற்புதமான நாடகங்கள் நடந்தேறியிருக்கின்றன! மண், பெண், பொன் என்ற மனித ஆசைகள் மூன்றும் விஸ்வரூபத்துடன் வீற்று அரசு புரிந்துவந்த, புரிந்து வரும் ஸ்தலம் இது.

ஆயினும் டில்லியிலிருந்து இப்படிக் கண்ணுக்குத் தெரியாமல் மகத்தான சாம்ராஜ்ய விளையாட்டுகள் நடத்தும் அந்த மகாசக்தி ஒரேயிடத்தில், ஒரு ஆயிரம் வருஷம்கூடச் சேர்ந்து நிலைத்து நிற்பதில்லை யென்று தோன்றுகிறது.

மகாபாரத காலம்

முதல் முதலாக நாம் டில்லியைப் பற்றி மகா பாரதத்தில் கேள்விப்படுகிறோம். அப்போது இதற்கு இந்திரப்பிரஸ்தம் என்று பெயர். நீதிக்கும் நேர்மைக்கும் பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக உதாரண புருஷனாக விளங்கிவரும் தரும புத்திரர், பலத்திலும், சௌகரியத்திலும், புத்தியிலும் ஒப்பும் உவமையுமற்ற தம்பிமாருடன் வீற்றிருந்து அரசு செலுத்திய இடம். மகா பாரத காலத்து பாரத சமுதாயத்தின் தலைநகர். ஆயினும் தரும புத்திரர் இங்கு உட்காருமுன் துரியோதனாதியருடன் எத்தகைய போர் புரியவேண்டி வந்தது! எவ்வளவு வீரர்களின் ரத்தம் சிந்த வேண்டி இருந்தது!

அதன் பின்னர் சரித்திரத்தில் தெளிவாகத் தெரியும் எல்லை வரை இந்த ஸ்தலத்தில் எத்தனை சாம்ராஜ்யங்கள் எழுந்து மறைந்தனவோ!

தற்கால டில்லிக்கும், அங்கிருந்து சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள குதுப் மினர் என்னுமிடத்திற்கு மிடையிலுள்ள நாற்பத்தைந்து சதுர மைல் விஸ்தீரணமுள்ள இந்தப் பிரதேசத்தில், ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்குள் ஏழு நகரங்கள் தோன்றி மறைந்துள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய சாம்ராஜ்யத்தின் தலைநகராகவே விளங்கியுள்ளது. ஏழாவதாக எழுந்தது தான் இன்றுள்ள டில்லி நகரம். தற்காலம் பழைய டில்லி என்று வழங்கப்படுவது. இதன் அருகில் இன்றுபுதிதாகஎழுந்துள்ள புதுடில்லி எட்டாவது நகரமாகும்.





•

மேலே:— அலாவுதீன் கில்ஜி கட்டிய ஹவுஸ் காஸ். **வலது:** தக்லக்ஷா கட்டிய தக்லகாபாத்தின் ஒரு பாகம்.

•

கிறிஸ்து பிறப்பதற்கு 57 வருஷங்களுக்கு முன் தில்லு என்ற ஒரு அரசன் இந்நகரைத் தோற்றுவித்ததாகவும், அதனலேயே இதற்கு டில்லி என்ற பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது.

இரண்டாவது டில்லி

அங்கிருந்து சரியாக ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு கி. பி. 1052-ல் தோமர வம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது அனங்கபாலர் டில்லியைக் கட்டினதாக குதுப் மினரிலுள்ள ஒருஇரும்பு ஸ்தம்பத்தில் நாகரி அட்சரங்களில் செதுக்கப்பட்டுள்ளது. இவருடைய டில்லி இப்போது குதுப் மினர் உள்ள இடத்தில் தானிருந்தது. கி. பி. 1060-ல் இவர் ஊரைச்சுற்றி லால்கோட் என்றகோட்டையைக் கட்டினர். இருபது முப்பது அடி அகலமுள்ள இதன் இடிந்த மதில்களை இன்றும் காணலாம்.

சோகன் என்னும் வம்சத்தினர் தோமர வம்சத்தைத் தோற்கடித்து டில்லியைக் கைப்பற்றினர். இந்த வம்சத்தின் கடைசி அரசர் தான் பிருத்வீராஜ். இவர் லால்கோட்டையைச் சுற்றி மற்ருெரு கோட்டை கட்டினர். இது சுமார் நாலு மைல் நீளமுள்ளது. இவர் காலத்தில் டில்லி மிகவும் பிரசித்தியுடன் விளங்கியிருக்கிறது. தைமூர் எழுதியிருக்கும் வரலாற்றில் இந்தக் கோட்டைக்குப் பத்து வாயில்கள் இருந்ததாகத் தெரிகிறது.

மறுபடி ஒரு அலை; டில்லி கைமாறிவிட்டது. ஆப்கானிஸ்தானத்திலிருந்து படையெடுத்து வந்த முகம்மது கோரி பிருத்வீராஜனைத் தோற்கடித்து கி. பி. 1193-ல் டில்லியைக் கைப்பற்றினன். கோரி தன் அடிமைகளில் ஒருவனை குத்புதீன் என்பவனைத் தனது வைசிராயாக நியமித்து விட்டுத் திரும்பி ஆப்கானிஸ்தானம் சென்றுவிட்டான். சில வருஷங்களில் குத்புதீன் தானே டில்லியின் மன்னனுகி விட்டான். அவனும் அவன் வம்சத்தவர்களும் சரியாக ஒரு நூறு வருஷம் டில்லியிலிருந்து அரசு செலுத்தினர்.

இந்த அடிமை வம்சத்திற்கு அடுத்துப் பட்டம் வகித்தது கில்ஜி வம்சம். டில்லி சிம்மாதனத்தின் மீது அமர்ந்து அரசு நடத்திய கில்ஜிகளில் அல்லாவுதீன் கில்ஜீ முக்கியமானவன். கி. பி. 1303ல் தர்கை கான் என்ற மொகலாயன் படையெடுத்து வந்து கில்ஜியை எதிர்த்தான். அல்லாவுதீனும் ஒரு பெரும் படையுடன் குதுப்மினருக்கு ஆறு மைல் வடக்கே ஒரு இடத்தில் பாளையமடித்தான். ஆனல், சிறிது நாட்களில் மொகலாயர் எதிர்க்காமலே வந்த வழி திரும்பி விட்டனர்.

அவர்கள் சென்ற பிறகு அலாவுதீன் அந்த இடத்தில் ஹஜார் மினர் என்ற ஆயிரக்கால் அரண்மனை யொன்று கட்டிக் கொண்டான். அரசன் இங்கே தங்கி விடவே, குடிகளும் கொஞ்சம் கொஞ்சமாக இங்கு வந்து குடியேறினர். இதுதான் இரண்டாவது டில்லி. இதற்கு சிரி என்று பெயர் வழங்கியது அந்தக் காலத்தில். இப்போது இந்த இடம் ஷாபூர் என்ற பெயருடன் ஒரு குக்கிராமமாக விருக்கிறது. கில்ஜி வம்சத்தினர் அதிக காலம் கூட ஆளவில்லை. கி. பி. 1321-ல் இந்த வம்சத்தின் ஆட்சி முடிந்து துக்லக் வம்சத்தினரிடம் மாறி விட்டது.

இந்த துக்லக் வம்சத்தினரில் முதல் அரசன் கியாசுதீன் துக்லக். இவர் துக்லக்ஷா என்ற பெயருடன் முடி சூடினர்: பழய டில்லி, சிரி ஆகிய இரண்டு நகரத்துக் கோட்டைகளும் பந்தோபஸ்துக் குறைவானவை யென்று கருதிய துக்லக்ஷா 1321ல் சிரியிலிருந்து ஐந்து மைல் கிழக்கேயுள்ள ஒரு குன்றின்மீது துக்லகாபாத் என்ற பெயர் கொண்ட ஒரு நகரத்தை எழுப்பினர். ஆயினும் அவர் பட்டத்திற்கு வந்து நாலு வருஷங்களிலேயே காலஞ் சென்றுவிடவே, நகரம் அறை குறையாகவே நின்று போய் விட்டது. துக்லக்ஷாவின் மகன் மகம்மது துக்லக் அடுத்த படியாகப் பட்டத்திற்கு வந்தார். துக்லகாபாத் ஒரு குன்றின் மீது கட்டப்பட்டதால் ஜலக் கஷ்டம் முதலிய சிரமங்கள் ஏற்பட்டன. அதனல் குடி ஜனங்கள் துக்லகாபாத்திற்கும் பழைய டில்லிக்கும் இடையிலுள்ள மைதான பூமியில் கிணறு குளங்களை வெட்டிக்கொண்டு வசிக்க ஆரம்பித்தனர். கொஞ்சம் கொஞ்சமாக வெறும் மைதான பூமி ஒரு நகரமாக உருவெடுத்தது. மகம்மது துக்லக் இந்தப் புதிய நகரத்தை அங்கீகரித்து பட்டத்திற்கு வந்த நாலாம் வருஷம் அதைச் சுற்றிக்கோட்டைச் சுவர் எழுப்பினர். உடனே நகரத்தின் ஜனத் தொகையும் பெருக ஆரம்பித்தது. இந்த இடத்திற்கு "ஜஹான் பன்னு" அல்லது "உலகினர் யாவரும் தங்குமிடம்" என்ற பெயரிடப்பட்டது.

சில வருஷங்கள் கழித்து மகமது துக்லக் தெற்கே நெடுந்தூரத்திலிருந்த தேவகிரி என்ற நகரைத் தன் அரசின் தலைநகராக்க முடிவு செய்தார். உடனே டில்லியிலுள்ள ஜனங்களனைவரும் மூட்டை முடிச்சுகளுடன் அப்படியே தேவகிரியில் குடியேறவேண்டு மென்று உத்திரவிட்டார். டில்லி பாழடைந்தது.

மறைந்து நின்று மக்களை ஆட்டுவிக்கும் மகா சக்தி

தேவகிரியில் குடியேறியவர்களுக்காக மகம்மது துக்லக் எவ்வளவோ அழகான வீடுகளும் வசதிகளும் செய்து கொடுத்தார். ஆயினும், ஜனங்கள் டில்லியைப் பிரிந்த துக்கத்தை மறக்கவேயில்லை. அதனல் மறுபடி ஜனங்களை டில்லியிலேயே குடியேறும்படி உத்திரவிட்டார். ஆனல், டில்லி தனது பழைய சோபையைத் திரும்பவும் அடையமுடியவில்லை.

மகம்மது துக்லகிற்குப் பிறகு பட்டம் வகித்த பிரோஸ் ஷா துலக், பிரோஷாபாத் என்ற ஒரு புது நகரை சிருஷ்டித்தார்.

பிரோஷாபாத்தின் முக்கால் பாகம் இப்போது புது டில்லியாக இருக்கிறது. இக்கர் கி. பி. 1354-ல் கட்ட ஆரம்பிக்கப் பட்டது. பிரோஷ் ஷா காலத்தில் டில்லி உச்ச நிலையை அடைந்திருந்தது. ஜனங்களும், இவருக்கு முந்தியவர்கள் காலத்தில் உட்பட்ட கலகங்கள் சண்டைகள் முதலியவற்றிலிருந்து தப்பிப் பிழைத்து ஓய்வெடுத்துக் கொண்டனர்.

பிரோஷ் ஷா காலஞ் சென்றவுடன் தார்தார் தலைவன் தைமூர் டில்லியில் புகுந்து கொள்ளையிட்டு நகரத்தைச் சூறையாடினன். ஜனங்களை தயைதாட்சண்யமின்றிக் கொன்று குவித்தான்.

துக்லக் வம்சத்திற்குப் பிறகு டில்லி சிம்மாதனத்தின் மீது ஸயத் என்ற வம்சத்தினரும், லோதி என்ற வம்சத்தினரும் அமர்ந்து கொலு நடத்தினர். பிந்திய வம்சத்தைச் சேர்ந்த சிக்கந்தர் லோதி டில்லியில் தங்க விரும்பாமல் ஆக்ராவைத் தனது தலை நகராக்கிக் கொண்டார்.

கொஞ்சம் மங்கல்

சுமார் அரையாயிரம் வருஷம் தொடர்ந்து பல வம்ச அரசுகளுக்கு தலைமை ஸ்தலமாக இருந்த டில்லி சரித்திரத்தில் மங்க ஆரம்பித்தது. ஆனல் உண்மையில் மங்கிவிடவில்லை. கி. பி. 1526-ல் இப்ராஹிம் லோதியைத் தோற்கடித்த மோகலாய பேபர் டில்லியில் தான் முடி சூட்டிக் கொண்டார். டில்லியின் இந்த ஆளும் வெறி மறுபடி தலைதூக்கி விட்டது. ஆயினும் பேபர் பட்டம் கட்டிக்கொண்டு சுமார் நான்கு வருஷங்களே ஆண்டதாலும், அதிலும் சிறிது காலம் ஆக்ராவிலும் சிறிது காலம் டில்லியிலுமாக வசித்ததாலும், எது தலைநகராக இருந்தது என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.



வலது :—ஹுமாயூன் கீழே விழுந்து இறந்த ஷெர்மண்டல். இது புராண கில்லாவில் இருக்கிறது. கீழே:—ஷாஜஹான் கட்டிய கோட்டை வாயில். இதற்கு லாகோரி கேட் என்று பெயர்.

நகர்ந்து செல்லும் நகரம்



குத்புதீன் கட்டிய மசூதி. இவ்விடத்தில் முதலில் ஒரு ஹிந்துக் கோவில் இருந்தது. மத்தியில் உள்ள த்வஜஸ் தம்பம் அதன் ஞாபகச் சின்னமாக இன்னுமிருக்கிறது.

பேபருக்குப் பின் பட்டத்திற்கு வந்த ஹுமாயூன் டின்பன்னு என்று டில்லியில் ஒரு கோட்டை கட்ட ஆரம்பித்தார். இதைக் கட்டி முடிப்பதற்குள் வங்காளத்திலிருந்து படையெடுத்து வந்த ஷேர்ஷா ஹுமாயூனைப் போரில் தோற்கடித்து ஊரைவிட்டுத் துரத்தி விட்டார். முற்றுப் பெறாத கோட்டையையும் முடித்து, அதற்கு ஷேர்காட் என்று பெயருமிட்டார் ஷேர்ஷா. அதற்கு இப்போது புராணகில்லா அல்லது பழைய கோட்டை என்று பெயர் வழங்குகிறது.

ஷேர்ஷாவும் அவர் மகன் ஸலீம்ஷாவும் பதின்மூன்று வருஷம் டில்லியில் ஆண்டனர். இவர்கள் இருவரும் சேர்ந்து ஷேர்ஷாவின் டில்லி என்ற பெயருடைய ஆறாவது டில்லியை எழுப்பினர்.

ஷாஜஹானபாத்....

ஹுமாயூன் இழந்த ஆட்சியதிகாரத்தை மொகலாயர் திரும்பக் கைப்பற்றியபோது ஹுமாயூன் மகன் அக்பரும், அவரது மகன் ஜிஹாங்கீரும் டில்லியை ஒதுக்கிவிட்டு, முறையே ஆக்ராவையும், லாஹூரையும் தலை நகராக்கிக் கொண்டு அரசு செலுத்தினர். ஆனால் ஜிஹாங்கிருக்குப் பின் பட்டம் வகித்த ஷாஜஹான் டில்லியில் ஷாஜஹானபாத் என்று ஒரு புது நகர மமைத்தார். அது தான் இப்போதுள்ள டில்லி.

இவர் காலத்தில் ஷேர்ஷாவின் டில்லி அழியாமல் நல்ல ஸ்திதியிலேயே இருந்தது. ஆயினும், அவர் அதைக் கைவிட்டு அருகிலேயே புதிய ஒரு நகரத்தை அமைத்துக் கொண்டது ஆச்சரியம்தான்.

உர்தூவில் ஒரு பழமொழி வழங்குகிறது. "புதிதாக ஒரு நகரம் தோன்றுவதற்கு மூன்று காரணங்கள் வேண்டும். நதி, மழை, அரசனின் விருப்பம்." இவற்றில் டில்லியின் இந்தக்கணக்கற்ற இடமாற்றத்திற்கு இரண்டு அம்சங்கள் முக்கிய காரணமாக இருந்திருக்கின்றன என்று சொல்லலாம்.

முதலாவது அரசனின் இஷ்டம்; இந்த அம்சம் எப்படியெல்லாம் டில்லியை மாற்றி மாற்றி இழுத்து அலைக்கழித்திருக்கிறது என்பது சரித்திரம்.

இரண்டாவது நதி: டில்லி நகரம் யமுனைக்கரையில் அமைந்துள்ளது. யமுனை நாளுக்குநாள் கொஞ்சம் கொஞ்சமாகக் கிழக்கு நோக்கி நகர்ந்து தன் படுகையை மாற்றிக் கொண்டே வருகிறது. உதாரணமாக ஷாஜஹானின் அரண்மனை யமுனைக் கரையில் கட்டப்பட்டதாகச் சரித்திரம் சொல்லுகிறது. ஆனால், இன்று யமுனை அரண்மனையிலிருந்து சுமார் முக்கால் மைல் தள்ளி ஓடுகிறது.

இந்த ஏழு டில்லிகளும் குதுப்மினாரிலிருந்து தற்கால டில்லி வரையிலும் வட கிழக்காகவே நகர்ந்து வந்திருக்கின்றன. எனவே ஒருவர் பின்னொருவராக டில்லியை மாற்றிவந்த அரசர்களும், ஜனங்களும் கூடிய வரை நதிக்கரையிலேயே தங்க விரும்பி இப்படி அடிக்கடி நதியுடனேயே நகர்ந்து சென்றனவென்றும் ஊகிக்கலாம்.

ஆனால் துக்லகாபாத், சிரி முதலிய நகரங்களின் அமைப்பில் இந்த நதிக்கரை அம்சத்தைவிட, அரசாக்ஞையே முக்கியமாக இருந்திருக்கிறது.

எட்டாவது டில்லி

தற்காலத்தில் புதிதாகத் தோன்றியிருக்கும் புதுடில்லியின் அமைப்பிலிருந்தும் அதன் விஸ்தரிப்பின் போக்கிலிருந்தும் டில்லி பழையபடி குதுப்மினாரை நோக்கியே போய்க் கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது. முதலில் கல்கத்தாவைத் தங்கள் இந்திய ஏகாதிபத்தியத்திற்குத் தலை நகராக அமைத்துக்கொண்ட ஆங்கிலேயரும், முடிவாக டில்லிக்கே போய்ச் சேர்ந்தனர்.

பிரிட்டிஷார் டில்லியைத் தங்கள் தலை நகராக்க முடிவு செய்ததற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஆயினும் அதன் இரண்டாயிர வருஷ கம்பீரமான சரித்திரத்தின் ப்ரபை தான் அதில் முக்கியமானதாக இருந்திருக்கவேண்டுமென்பது நிச்சயம்.

வீரர்கள் மண்டபமும் சதிகளின் கைமுத்திரையும்

மார்வார் தேசத்தில் உள்ள மாண்டோர் நகரம் இன்று உண்மையில் "சரித்திரப் பிரசித்தி பெறும் செயல் செய்து மாண்டோர்" ஞாபகச் சின்னங்கள் நிறைந்த நகரமாக விளங்குகிறது. மார்வார் என்பது வட இந்தியாவிலுள்ள பெரும்பாலும் பாலைவனமான ஒரு நாடு. கி. பி. 1459 வரையிலும் இந்த நாட்டை ஆண்ட ராஜபுத்திரர்களின் தலைநகரமாக இருந்தது மாண்டோர். பின்னால் இந்த நாட்டின் அதிபதியான ஜோதா என்பவர் சுமார் ஐந்து மைல் தூரத்தில் தமது பெயரால் ஜோத்பூர் என்ற நகரைச் சிருஷ்டித்து அதையே நாட்டின் தலை நகருமாக்கினார்.

ஔரங்கசீப் காலத்தில் இதை யாண்ட ஜஸ்வந்த சிங் வஞ்சகமாகக் காபூலில் கொலையுண்டார். அவரது வம்சத்தையே அழித்து விட விரும்பினார் ஔரங்கசீப். ஆயினும், ஜஸ்வந்த சிங்கின் மனைவியான மகாமாயா தன் வம்சத்தைக் காப்பாற்றிக் கொண்டாள். ஜஸ்வந்தசிங்கின் பல மனைவியர் அவர் மரணச் செய்தி கேட்டவுடன் "சதி யாகி"னர்.



கற்பு, குல கௌரவம் ஆகிய வற்றைக் காக்க சதியான அந்த வீரப்பெண்மணிகள், வானை நோக்கி நாக்கைநீட்டி எரியும் தீக் குண்டங்களில் இறங்குமுன், தங்கள் கைமுத்திரைகளைப் பதித்துச் சென்ற இடம் ஒன்று ஜோத்பூர் கோட்டை வாசல் சுவரில் இருக்கிறது.



இந்தப் புனிதமான அடையாளங்களை இன்றுவரை மஸ்லின் திரையிட்டு மருதாணியிட்டு அழியாமல் காப்பாற்றி வருகின்றனர்.

மாண்டோரில் வீரர்கள் மண்டபம் என்று ஒரு அழகிய மண்டபமுள்ளது. அநேக வீரர்கள் குதிரைமீதமர்ந்து இருப்பதுபோன்ற சிலைகள் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் ஒவ்வொருவரும் போர்க்களத்திலே வீரஸ்வர்க்கம் எய்தியவர்கள்.

காபிக்கு எடுத்தது

கணேஷ் காபி

பச்சையாகவும்

வறுத்ததாகவும்

பொடியாகவும்

முதல்தரமான காபி கிடைக்கும்



7 பவுண்டு சிறு பையிலிருந்து கப்பல் கப்பலாக வேண்டுமானாலும் அவரவருக்கு வேண்டியபடி பல ரகத்திலும் நாங்கள் ஸப்ளை செய்கிறோம்.

கணேஷ் & கம்பெனி

தம்புச் செட்டித் தெரு : : மதராஸ்

சில்லரை வியாபாரம்

285, சைனு பஜார் : : மதராஸ்

ON THE I. S. D. LIST

முதல் இந்தியன் லாம்ப்

உங்களுடைய சொந்த தீபங்களாகிய ''பெங்கால் லாம்ப்'' களால் உங்களுடைய மாளிகைகளை அலங்கரியுங்கள்.

நவநாகரீக டைப்புகள்

கண்கவரும் பார்டர்கள்,

எலெக்ட்ரோ & டைப்மேட் பிளாக்குகள்,

மிஷினரி, காபினெட், (John Kidd's) ஜான்கிட் இங்க்,

முதலிய அச்சாபீஸ் சாமான்கள் எல்லாம் கிடைக்கும்.

விவரங்களுக்கு:

NORTON & Co.,

1/16, Baker Thiruvengada Mudaly St.,

CHOOLAI :: :: MADRAS

Telegrams: CLEANTYPES Telephone: 3001

கேட்லாக் வேண்டுகோளின் மேல் அனுப்பப்படும்.

பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கண்டு களித்து வருவது!

சென்னை கெயிட்டியில்

1938 ஆகஸ்டுமீ 6௳

மஹத்தான ஆரம்ப விழா!

பூ கைலாஸ் அல்லது மண்டோதரி பரிணயம்

(அரிய புரான தமிழ் பேசும் படம்)

பல முக்கியமான நகரங்களில் நடந்து வருகிறது. இதர இடங்களில் ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்

ஸ்டுடியோ:

சுந்தரம் ஸவுண்ட் ஸ்டுடியோஸ் லிமிடெட்

●

விபரங்களுக்கு:

செல்லம் டாக்கீஸ், கோயமுத்தூர்

காங்கிரஸ் பொருட் காக்ஷியில் ஓர் நற்சாட்சி

அகில இந்திய காங்கிரஸ் பொருட்காக்ஷிகளில் தேசியத் தலைவர்களால் நன்கு மதிக்கப்பட்டு நற்சான்று அளிக்கப்பெற்ற அபூர்வமான மருந்துகள்.

கர்ப்ப எண்ணெய்

சூதக வியாதியைப் போக்கும்.

இது ஸ்திரீகளுக்கென்றே கடவுளால் அருளப்பட்ட ஓர் சஞ்சீவி. மாதாந்திர வயிற்று வலியை உடனே நிறுத்தும். கைகால் குடைச்சல், இடுப்பு வலி குணமாகும்; சரியாய்ப் பகிஷ்டையாகும். கர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களையும் நீக்கி கர்ப்பம் உண்டாக்கும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2

தாளக பஸ்பம் (இருமலுக்கு)

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம் கோழை கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது.

புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0

பிராஞ்சு:—1/54, அருணாசல நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

தலைமை ஆபீஸ்:—

மலையப்பசாமி வைத்திய சாலை,
பழனி S. I.

1,000 ரூபாய் இனம்!

ஆனல் நீங்கள் உபயோகிக்கும் பாக்குத்தூள் மட்டும் அகில இந்திய அரசியல் மகாநாட்டில் முதன்மை ஸ்தானம்பெற்றதும், பல ராஜாக்கள், ஜமீன்தார்கள், சங்கீத விற்பன்னர்களால் புகழப்பெற்றதுமான எங்கள்

ராயல் சுகந்த பாக்குத்தூள்

என்ற லேபில் ஒட்டிய பொட்டலமா? என்பதை தயைசெய்து கவனித்து வாங்குங்கள்.

ராயல் பாக்குத்தூள் வாசனையிலோ, சுவையிலோ, அல்லது குணத்திலோ மட்டரகமென நிரூபித்துக்காட்டினல் இனம் தொகைக்கு, நாங்கள் உத்திரவாதி

தயாரிப்பவர்கள்:

ராயல் சுகந்த பாக்குத்தூள்

வெறைட்டிஹால் ரோட்
கோயமுத்தூர்

பொழுது போக்கு

ஸ்வர்கீய. வ. வெ. சு. அய்யர்

எழுதியது

ஒரு நாளில் அறுபது நாழிகைகளே இருக்கின்றன. ஆனால் இந்த அறுபது நாழிகைகளும் எல்லோருக்கும் ஒரே வேகமாகச் செல்கிறதில்லை. பள்ளிக் கூடத்திற்குப்போகும் சிறுவனுக்குப் பள்ளிக் கூட நேரம் ஆமை நடையாய்ப் போகும். கை நிரம்பக் கட்சியுள்ள வக்கீலுக்கு ஒய்வு நாள்கள் செல்லும் வேகத்துக்குத் தேவாங்கின் நடையே மான் வேகமாகும். காந்தனைப் பிரிந்த காந்தைக்கு அவன் வராத நேரம் அப்படியே நின்று விட்டது போல இருக்குமே ஒழியப் போவதாகவே தோன்றாது. இதற்கு மாறாகப் பள்ளிச் சிறுவர்களுக்கு ஒய்வு காலம் இறக்கை கட்டிப் பறந்து செல்லும். சாமர்த்தியமும் வெற்றியுமுள்ள வக்கீலுக்கு நீதிஸ்தலம் நடக்கும் நாள்கள் போவதே தெரியாது. காந்தனோடு ஏகாந்தமாயிருக்கும் காந்தையின் நேரத்துக்கு இறக்கையும் வேண்டுமோ!

* * * *

ஆனால், பெரும்பாலார் இந்தச் சிறப்பு நிலைமைகளில் இருப்பதில்லை. அவர்கள் நிலைமை மத்தியஸ்தமானது. அவர்களுடைய பொழுது முன் சொன்னவர்களுக்குப் போல அத்தனை மெல்லவாவது, பின் சொல்லியவர்களுக்குப் போல அத்தனை வேகமாயாவது செல்வதில்லை. தினப்ரதி காரியங்களில் சில மணி நேரமும், தூக்கத்தில் சில மணி நேரமும் போக, மனம் போனபடி செலவிட வென்று கொஞ்சம் பொழுது தானிருக்கும்.

தனிகர் வீட்டில் இக்காலத்தில் முக்கால் வாசி வேலை சமையற்காரனும் வேலைக்காரர்களும் பார்த்துக்கொண்டு விடுகிறார்கள். பட்டணங்களில் தனிக் குடித்தனம் செய்கிற சிறு பெண்களுக்கும் கையில் நேரம் அதிகமாகவே இருக்கும். ஆனால், கொஞ்சம் பொழுதோ அதிகப்பொழுதோ, வேறு காரிய மின்றிக் கையிலிருக்கும் பொழுதை எவ்விதம் போக்குவது என்கிற கேள்வி அநேகமாய் எல்லோருக்கும் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் பிறந்துகொண்டே இருக்கும். எப்படியோ பொழுது போய்க்கொண்டுதா னிருக்கிறது. ஆனால், போகும் பொழுதினின்று பயனாகவும், விளையாட்டாகவும் எத்தனை பயன் பெற முடியுமோ அத்தனையும் பெறுவது தான் அறிவுடையோர்க்கு அழகு.

* * * *

கையில் விடுதியாக இருக்கும் நேரத்தில் ஒரு பாகத்தைப் பத்திரிகைகள், நூல்கள் முதலியன வாசிப்பதில் செலவிடுவதன் அவசியத்தைப் பற்றி அதிகம் எழுதவேண்டுவதில்லை. ஆனால், வாசிப்பது நல்ல நூல்களாக இருக்கவேண்டும். உயர்ந்த அபிப்பிராயங்களும் உயர்ந்த ஆதர்சங்களும் உள்ள நூல்களேதாம் வாசிக்கத் தக்கவை. அவை யின்றி அனர்த்தமான சம்பவங்கள் நிறைந்த கதைகளைப் படித்து அறிவைக் கெடுத்துக் கொள்வதைவிட நல்ல விளையாட்டுகள் விளையாடுவது எத்தனையோ உத்தமமானது.

* * * *

விளையாட்டும் மனிதருக்கு அவசியமே. எப்பொழுதும் புத்தியை விசாரத்திலும் காரியங்களிலும் செலுத்தி வருதல் அநேகமாய் அசாத்தியம். அப்படிச் செலுத்த முடிந்து செலுத்தி வந்தால்அவ்விதம் செய்வோர் சீக்கிரம் விருத்தர்களாகி விடுகிறார்கள். வீணை, பிடில் முதலிய தந்தி வாத்தியங்களை எப்பொழுதும் ஏற்றியே வைத்திருந்தால் காலத்தில் வாத்தியங்கள் நாதங் கெட்டுப்போய்ப் பயன்படாது போய் விடும்.



அவைகளின் தந்திகளை அடிக்கடி தளர்த்தி வைக்க வேண்டியது போலவே, மனிதனுடைய புத்திக்கும் பொழுது போக்குக் காட்டி அவன் நரம்புகளையும் அடிக்கடி தளர்த்திக் கொடுக்க வேண்டும். ஆகையால் "பல்லாங் குழி", "அம்மானை," "பதினைந்தாம் புலி," "தாயக் கட்டம்," "சொக்கட்டான்," "பச்சீஸ்," முதலிய விளையாட்டுகளில் சிறிது பொழுது செலவழிப்பது நன்மையே பயக்கும். ஆனால், விளையாட்டுகளில் அறிவைத் தூண்டக்கூடிய விளையாட்டுகளே உத்தம மானவை.



மேற் சொன்னவைகளில் "பதினைந்தாம் புலி" ஒன்றுதான் அவ்வியற்கையுள்ளது. சதுரங்கம் கற்றுக்கொண்டு விளையாடுவது மிகவும் உயர்ந்த விளையாட்டாகும். ஆட்டங்களுக்குள் இது அரசு. பாரஸீகத்தின் மகா கியாதிமானான அரசனாகிய நவஷேர்வான், தன்பிரதம மந்திரி

யை நம் நாட்டுக்கு அனுப்பி 'இங்குள்ள மிக உயர்ந்தபொருள்களைக் கொண்டு வருக' என்று ஆக்ஞாபித்தபோது, அவன் பஞ்ச தந்திரத்தையும் சதுரங்கத்தையும் கொண்டு போனானாம். அந்நூலையும் விளையாட்டையும் பார்த்து விட்டு நவஷேர்வான் மந்திரியைப் பெரிதும் மெச்சிக் கொண்டானாம். அப்பேர்க்கொத்த விளையாட்டாகிய சதுரங்கத்தை நமது பெண்கள் விளையாடினால் மிகவும் அழகாக இருக்கும். இது நாயகர்களோடும் விளையாடத்தக்க விளையாட்டாகையால், இதனால் நாயக நாயகிகளுக்குள் அன்னியோன்னியமும் விருத்தியாகும்.

* * *

ஆனால் விளையாட்டிலே பொழுதைக் கழித்து விடுதல் புத்திசாலித் தனம் ஆகாது. விளையாட்டு விளையாடுவதற்கு இரண்டு பேராவது வேண்டும். அப்படிச் சந்திக்கிறவர்கள் ஒருவரோ டொருவர் சம்பாஷித்தல் இதை விட உயர்ந்த பொழுதுபோக்காகும். சம்பாஷணை செய்வதில் மனிதருடைய பயிற்சி விளங்குவது போல வேறு எதிலும் அத்தனை விளங்காது. சரியாகப் பேசத் தெரிந்த ஸ்திரீகளாகட்டும் புருஷராகட்டும் எத்தனை அருமை? தற்காலம் நமது பெண்மணிகளுக்குக் கல்வி புகட்டுவது மிக அருமையாக இருக்கிறபடியால் அவர்களிற் பெரும்பாலார் பேசுகிற பேச்சுக்கள் பயனற்றவையாயும் சுவையற்றவையாயும் இருக்கின்றன. தங்களுடைய ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் பற்றிப் பேசுதல், மற்றோருடைய அழகின்மை, வறுமை, கயமை, இவற்றைப் பற்றிப் பேசுதல், சமையலைப் பற்றிப் பேசுதல், இவற்றை விட்டால் வேறு ஒன்றும் பேசத் தெரியாதவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் பேசுவதற்கு நல்ல விஷயங்கள் எத்தனை இருக்கின்றன. நூல்களி லுள்ள நாயகர்கள், நூல்களின் அமைப்பு, கவிதை, கானம், சித்திரம், சிற்பம், ஜாதியில் செய்யவேண்டிய



சீர்திருத்தங்கள் இவைகளெல்லாம் சம்பாஷணைக் குரியன. கொடுமையின்றிக் குதூகல ஆதிக்கத்தினால் சிரிப்பு எழும்படி பேசுவதிலிருந்து நண்பினருக்குள் சந்தோஷமும் கலகலப்பும் பிறக்கு மாதலால், மாதர்கள் அந்தக் கலை பழகுதல் அவசியமாகும். மயிலினும் அழகிய தோற்றத்தோடுதங்கக் கம்பி போல் இழையும் குரலில் மனச்செம்மையும், இளமையின் தளதளப்பும், சரீரம் ஆதியந்தம் பெருகியோடும் கங்கைகளினுடைய அறிவும், நல்லுணர்ச்சியும், சுவையும் நிரம்பிய பேச்சுக்களைக் கேட்டலே மனிதர்க்குக் கலைப் பயிற்சி யாகும். அத்தகைய சம்பாஷணைகளைப் போலப் பொழுதை இனிது போக்கக்கூடிய சாதனங்கள் இல்லை.

தமது அருமைக் குழந்தைகளின் மழலைகளைக் கேட்டும் அவர்களுக்கு விளையாட்டுக் காட்டியும், நல்லுணர்ச்சி எழும்படி கதைகள் சொல்லியும் போதனைகள் செய்தும் கல்வி பயில்வித்தும் வருவது ஓர் உன்னதமான பொழுதுபோக்கு என்று நமது பாரத நாட்டுப் பெண் மணிகளுக்கு எடுத்துக் காட்டலும் அவசியமோ?

இனிச் சங்கீதம்: சங்கீதம் பயிலுதலும் பாடுதலும், பயிலுவோர் பாடுவோருக்கு மாத்திரமின்றிக் கேட்போருக்கும் இனிமையாகப் பொழுதைப்போக்கும். ஆனால், ஆர்மோனியம் பியானோ இவைகளின் கருமுருவைச் சங்கீதம் என நினைத்துத் தனிகர் தங்கள் வீட்டில் இவ் வாபாசக் கருவிகளை வைத்து மக்களுக்கு உண்மையான கானத்தின் சாரம் தெரியாமல் அடித்துவிடுகிறார்கள். வீணையும், பிடிலும், லேசாகப் புல்லாங்குழலும், ஸ்திரீகள் பயிலத்தக்க வாத்தியங்கள். வாத்தியங்கள் வாசிக்கையிலும், வாய்ப்பாட்டு பாடுகையிலும் ஜீவனையும் அறிவையும் உணர்வையும் சுரங்களில் செலுத்தி நாத உலகத்தில் ததும்பிக்கொண் டிருக்கும் ஆனந்த உணர்ச்சியைத் தானும் அனுபவித்து, கருடன் அமுதகலசம் கொண்டுவந்து தேவர்களுக்குக் கொடுத்தது போல, அவ்வுணர்ச்சியைக் கேட்போருக்கும் ஊட்டி மனதுக்கு உற்சாகமும், ஆஹலாதமும் லயமும் தந்து பேரின்ப வசப்படுத்த வல்ல மகளிர் இருக்குமிடம் தெய்வலோகமாகி விடும்.

* * * *

இயற்கை அழகு

பிரகிருதியின் அழகுகளை அனுபவிப்பதைப்பற்றிக் கடைசியாகப் பேசுகிறோம். முன்னாட்களில் நம் நாட்டவர்க்குப்பிரகிருதியினோடு பழக்கம் அதிகமாக இருந்தது. ஜலம் எடுக்க ஆற்றங்கரைக்குச்

செல்லுவார்கள். கனுப் பொங்கல் வைத்தல், அசுவத்தப் பிரதக்ஷிணம், பருவஸ்நானம், கோவில் குளங்களுக்குப் போதல், தீர்த்த யாத்திரை ஆகியவற்றால் நமது மாதருக்கும் பிரகிருதிக்கும் ஓயாது சம்சர்க்கம் இருந்து வந்தது. ஆனால் தற்காலம் தண்ணீர்க் குழாய் வந்து ஆற்றங்கரையினுடையவும், குளங்கள் கிணறுகளினுடையவும் அவசியத்தை மாற்றிவிட்டது. இஷ்டமிருந்தால் நகரங்களில் வசிக்கும் தனிகர் வீட்டு ஸ்திரீகள் ஒரு மரம் செடியைப் பார்க்காமல் சூரிய சந்திர நக்ஷத்திரங்களைப் பார்க்காமல், நீல ஆகாயத்தின் ஒரு துணுக்கைக் கூடப் பார்க்காமல் இருந்து விடலாம். பிரதக்ஷிணங்கள் முதலியவெல்லாம் கருநாடக வழக்கங்களாகி விட்டன. தீர்த்த யாத்திரை போகவேண்டுமென்று பதினாயிரத்தில் ஒருவருக்குத் தோன்றினால், ரயிலிருக்கிறது சரக்கு மூட்டைகளைப் போலக் கொண்டுபோவதற்கும், திரும்பி வீடு கொண்டுவந்து சேர்த்து விடுவதற்கும். இந்த நிலைமையில் நம்மைச் சுற்றிலும் அழகுக் கடலானது கொந்தளித்துக்கொண்டிருக்கிறது; அதைப் பார்த்து ஆனந்தத்தோடு அனுபவிப்பது மனித வாழ்க்கையின் அதியுன்னதமான பாத்தியமாகும் என்கிற எண்ணம் எங்கிருந்து வரப்போகிறது? பிரகிருதி என்ற பெயரைப் பார்த்துவிட்டே இந்த ரசனையைப் படிக்காமல் விட்டு விடவேண்டும் என்று மனதில் எத்தனையோ பேர்களுக்குத் தோன்றப்போகிறது என்பது நிச்சயம்!

* * * *

ஆனால், இந்த உலகத்தில் நிலைபெற்ற நிஷ்களங்கமான, ஒய்வற்ற பிரமானந்த சுகம் தருவது நம்மைச் சுற்றிலும் உள்ள பிரகிருதி தேவியே; வானமும் மேகமும் மரங்களும் செடிகளும், ஆறுகளும் குளங்களும், ஏரிகளும் கேணிகளும், மலைகளும் பள்ளத் தாக்குகளும் அத்தேவியினுடைய திருவுருவங்கள். அவள் நிஷ்பக்ஷவாதி. தன்னுடைய சௌந்தர்யங்களை எல்லோருக்கும் சரிசமனாகக் காட்டக் காத்துக்கொண்டிருக்கிறாள். தனிகனுக்கென்று ஓர் ஆகாயம், ஏழைக்கென்று ஓர் ஆகாயம் இல்லை. அந்தக் களங்கமற்ற நீலப் பரப்பில் அந்தக் கண்கொள்ளாக் காட்சியை அனுபவிக்கக் கண்கள் ஒன்று தான் தேவை. அதிலும் எத்தனை விதமான காட்சிகள்? இந்த நாகரிக காலத்தில் வைகறைப் பொழுதிலேயே துயில் விட்டெழும் வழக்கம் போய்விட்டது. ஆனால் எழுந்து கிழக்கு நோக்கி நின்றாலோ வானத்தில் பூஞ் சிவப்பு மெல்ல மெல்ல முதிர்ந்து ரோஜா வர்ணமாகி, அது முதிர்ந்து தாமரை மலரின் உள்ளிதழ்களின் சிவப்பைப் பெற்றுப் பொன் மயமாக மாறுவதையும், அனுமான் தாவின அன்றைக்குப் போலவே தெய்வலோகத்துக் கனியோ என்ற உணர்ச்சியைத் தரும் ரம்மியமான சிவப்பு வர்ணமுள்ள சூரியன் மெல்ல மெல்ல உருக்கி வார்த்த தங்கம் போல மாறிமாறிச் சுழலுவதையும் பார்ப்போம்.

கீழ்க் கடலோரத்திலுள்ளவர்கள் கடலினின்று சூரியன் எழும் காட்சியைப் பார்க்க வென்று கடலோரம் சென்றால் சொல்லற்கரிய இன்பம் எய்துவார்கள். தோப்புக்களில் வெளிச்சமும் நிழலும் ஒன்றற்கொன்று பின்னிக்கொண்டு, நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டு வரும் பலவிதமான கோலங்களைப் போடுவதைக் காலை நேரத்தில் ஸ்திரீகள் அனுபவிப்பது கஷ்டம். ஆனால், இம்மாதிரி அனுபவம் இல்லாமலிருக்கக்கூடாது. எனவே, தூரத்திலுள்ள நீர் நிலைகளுக்குப் போய் ஸ்நானம் செய்யவேண்டும் என்றும் மாதத்தில் இரு முறை கடலில் ஸ்நானம் செய்யவேண்டுமென்றும், நமது பெரியோர் விதித்திருக்கிறார்கள். தண்ணீர்க் குழாய்கள் நதி ஸ்நானத்தைக் கெடுத்துவிட்டபோதிலும், மத்தியான ஆகாரம் முடிந்த பிறகு வெளியில் சென்று பிரகிருதியின் முகத்தைக் கண்டு மகிழுவதைத் தடுக்கவில்லை.

ஒரு தோட்டத்தின் மத்தியிலோ, ஒரு நதியின் அல்லது ஒரு ஏரியின் கரையிலோ நின்றுகொண்டு இளங்காற்றில் மரங்களும் செடிகளும், நீண்டு கொழுமையாக வளர்ந்த புற்களும் பயிர்களும் ஓயிலாக அசைவதையும், பக்ஷிக் கூட்டங்கள் மாலை மாலையாய்ப் பறப்பதையும், குயிலும் குருவியும், மைனாவும் மரங்கொத்தியும் இனிமையாய்ச் சப்திப்பதையும், மேய்ச்சல் தரைகளில் ஆடுகளும் மாடுகளும் மேய்ந்துகொண்டும் படுத்துக்கொண்டும் துள்ளிக்கொண்டும் இருப்பதையும், உயர் வானத்தில் மேகக் கூட்டங்கள் நிமிஷத்துக்கு ஒரு உருவத்தைத் தாங்கிக்கொண்டு நீந்திக்கொண்டு செல்வதையும் பார்த்துக்கொண்டு வந்தால் பொழுது போவது தெரியுமா?

இந்தப் பிரகிருதியின் தோற்றங்களைத் திறந்த மனத்தோடும் உள்ளன்போடும் அனுபவித்துத் தான் நமது மகரிஷிகளும் கல்விமான்களும் கவிகளானார்கள். ஒவ்வொரு ருதுவிலும் பிரகிருதி அடையும் புதிய தோற்றங்களை வருணித்துக் காளிதாசன் "ருது சம்ஹாரம்" என்று ஒரு காவியம் எழுதியிருக்கிறான். ஆங்கிலத்தில் தாம்ஸன் என்ற ஓர் கவியும் "ருதுக்கள்" என்ற பேர் வைத்துப் பிரகிருதியின் பல்வேறு மாறுபட்ட உருவங்களை வருணித்தெழுதியிருக்கிறார். எமெர்ஸன், கால்ரிட்ஜ், டெனிஸன், வொர்ஸ்ட்வொர்த் என்ற ஆங்கில ஆசிரியர்களும் கவிகளும் பிரகிருதியிடம் வைத்த காதலினாலேயே உயர்ந்த வேலைகள் செய்து பிரசித்தி பெற்றார்கள்.

மனதுக்குச் சாந்தியும் அறிவுக்குத் தெளிவும் உள்ளத்துக்கு நேர்மையும் பிரகிருதியின் சம்சர்க்கம் கொடுப்பதுபோல வேறெதுவும் தராது. ஸ்திரீகளுக்குப் பிரகிருதியின் பழக்கம் எத்தனை நன்மை செய்யும் என்று காட்டி வொர்ட்ஸ்வொர்த் சில அருமையான பாக்கள் எழுதியிருக்கிறார். பொழுதுபோக்கைக் குறித்து எழுதிய இவ்வியாசத்துக்கு அவை தகுதியான தீர்மானமாயிருக்கும் என்று அவற்றின் சாரத்தை இங்கு எழுதி முடிப்பேன்.

"லூஸி என்பாள் மூன்று வருஷம் வெயிலிலும் மழையிலும் வளர்ந்தாள். பிரகிருதி அப்பொழுது கூறினாள்: "இவளை விட அழகிய மலர் பூமியில் மலர்ந்ததில்லை. இக் குழந்தையை நானே எடுத்து வளர்ப்பேன்; இவளை என் மனதினுக் குகந்த நங்கையாக்கி விடுவேன்.

"என் செல்வத்துக்கு நானே விதியாயும் உணர்ச்சியாயும் இருப்பேன்; மலையையும் தரையையும், பூமியையும் வானத்தையும், புற்றரைகளையும் மண்டபங்களையும் பார்த்து, அவள் அவற்றிலுள்ள சிற்சக்தியைச் சாக்ஷாத்கரித்துக்கொண்டு, மனவெழுச்சி கொள்ள வேண்டிய இடத்தில் மன வெழுச்சி கொள்ளுவாள். அடங்கி நிற்க வேண்டிய காலத்து அடங்கி நிற்பாள்.

"வானத்தில் மிதந்து செல்லும் மேகங்கள் அவளுக்குத் தங்கள் காம்பீரியத்தைத் தரும். ஒசிந்து வீழும் நாணல்கள் அவளுக்கு ஒயில் தரும். புயற்காற்றுக் கூட அவளுக்கு ஓர் எழில் கற்பிக்கும். ஏனெனில், அவளுக்கு அதன்மீதும் உணர்ச்சியோடு கலந்த நட்புக் கிழமை பிறக்கும்.

"ஸஞ்சீவகமான ஆனந்த உணர்ச்சியினால் அவள் ராணி போல் மதர்த்து வளருவாள். இந்த இன்பகரமான சோலையில் நானும் அவளும் வாழ்ந்து வருகையில், இவ்விதமான ஆனந்தகரமான எண்ணங்கள்தான் அவள் மனதில் புகும்படி செய்வேன்."

பெரிய இடத்துப் பெண்

ஸ்ரீ பிரேம் சந்த்

எழுதிய



'சிவமணி'

மொழிபெயர்ப்பு

இன்று அவர்களுக்குத் ததாகலம்; 'பஞ்சாங்கம் இரவலுக்கு' என்று சிலரும், 'வரி செலுத்திய ரசீதைக் காட்ட' வென்று சிலரும் வந்து கூட ஆரம்பித்தனர். இருந்தாலும் அவள்........

I

மாதவசிங் கௌரிபுரத்து ஜமீன்தார். அவருடைய தந்தையின் காலத்தில் ஜமீன் மிக்க செல்வாக்கோடு இருந்தது. அவருடைய பெருமைக்கு அந்த ஊரிலிருந்த குளமும் கோயிலுமே சிறந்த அத்தாக்ஷியாகும். அவைகளைத் தற்போது சீர்திருத்துவதும் சிரமமான காரியம் என்பர். அவர் வீட்டுவாயிலில் யானை கட்டியிருந்ததாம். ஆனால் இப்போது அங்கு ஓர் கிழ எருமைதான் நிற்கின்றது. அது கேவலம் எலும்புக் கூடுதான். ஆனால் ஒருவர் மாறி ஒருவர் அதன் அடியே சொம்பு பிடித்து உட்கார்ந்ததால் அதற்கு மடி அதிகம் எனத் தோன்றுகிறது. மாதவசிங் தன் சொத்தில் பாதிக்குமேல் வக்கீல்களுக்குத் தாரை வார்த்தார். தற் சமயத்தில் வருடம்



தோறும் ஆயிரம் ரூபாய்தான் அவருக்கு வரும்படி. அவருக்கு இரண்டு குமாரர்கள். மூத்தவன் பெயர் ஸ்ரீ கண்டன். வெகு நாள் பாடுபட்டு பி. ஏ. பட்டம்பெற்றவன். தற்சமயம் ஓர் ஆபீஸில்உத்யோகம். இளையவனை விஹாரிசிங் இரட்டைநாடி உருவத்தோடு ஆடையழகில் மிகுந்தவன். பருத்த தோள்களும் அகன்ற மார்பு முடையவன். காலையில் எழுந்ததும் ஓர் படி எருமைப் பாலைத் தீர்த்துவிடுவான்.

ஸ்ரீ கண்டனின் குணங்கள் இவற்றிற்கு நேர்மாறானவை. நேத்ரானந்தம் தருபவற்றையெல்லாம் இரண்டெழுத்துப் பட்டத்திற்காக இழந்து விட்டான். அவ்விரண்டு எழுத்துக்கள் அவன் உடலைச் சுருக்கியதோடு முகவிலாசத்தையு மழித்துவிட்டன. எனவே, ஸ்ரீ கண்டனுக்கு வைத்ய சாஸ்திரத்தில் அதிக அன்பு ஏற்பட்டது. ஆயுர்வேதத்தில் மிக்க நம்பிக்கையுண்டு. இரவும் பகலும் அவன் அறையில் கலுவம் உறைபடும் சப்தம் கேட்டுக்கொண்டே யிருக்கும். பொம்பாயிலும், கல்கத்தாவிலுமிருந்து வைத்யர்களோடு கடிதப் போக்கு வரத்து நடந்த வண்ணம் இருந்தது.

ஸ்ரீ கண்டன் ஆங்கிலப் பட்டம் பெற்றும் ஆங்கிலேயரின் நடவடிக்கைகளை அங்கீகரித்தவனன்று. மேற்கு நாகரிகத்தைப் பற்றித் தூஷணையாகவும் திரஸ்கரித்தும் அவன் பேசுவது வழக்கம். இக்காரணத்தினால் அவனுக்கு அந்தக் கிராமத்தில் பெருமை அதிகம்.

நவராத்ரியின் போது கிராமத்தில் நடக்கும் கொண்டாட்டங்களுக்கு ஸ்ரீ கண்டன் தான் தலைவன். அப்போது நடக்கும் நாடகங்களில் கூட அவன் நடிகனாக மேடை யேறுவதுண்டு. கௌரிபுரத்தில் இத்தகைய விழாக்களைத்தோற்றுவித்தவனே ஸ்ரீ கண்டன் தான். பண்டைக் காலப் பெருமைகளைப் பேசுவதில் அவனுக்கு அத்தியந்தப் பிரியம். 'ஏக குடும்பம்' என்ற கொள்கையில் அவனுக்குத் தீவிர நம்பிக்கை. தற்காலப் பெண்கள் ஏக குடும்ப வாழ்க்கையை விரும்பாதிருப்பது ஜாதிக்கும் தேசத்திற்கும் தீங்கு விளைவிக்கக் கூடியதென்பது அவன் அபிப்பிராயம். அந்த ஊரிலிருந்த ஸ்திரீகள் இந்தக் கொள்கைக்காக ஸ்ரீ கண்டனை நிந்திப்பது வழக்கம். சிலர் அவனைச் சத்ருவாகவும் பாவித்தனர். அவனுடைய மனைவிகூட அவன் கொள்கைக்கு மாறுபட்டவள். ஆனாலும் அவளுக்கு மாமன், மாமி, மைத்துனன் முதலியோரிடம் வெறுப்பு என்பது கிடையாது. ஏதாவது சச்சரவுகள் நேர்ந்து இன்னல்கள் ஏற்படுவதைக் காட்டிலும், தனிக் குடும்பம் நடத்தி சமாதானமாக வாழ்வதே சிறந்தது என்பது அவள் அபிப்பிராயம்.

ஆனந்தி ஓர் பெரியவீட்டுப் பெண். அவளுடைய தகப்பனாரும் ஓர் ஜமீன்தார்தான். பெரிய மாளிகை; யானை; மூன்று நாய்கள்; வண்டி, ஆள்; ஆனரரி மாஜிஸ்திரேட் பதவி; கடன்கள் முதலிய ஜமீன்தாரருக்கு இருக்க வேண்டியவை யெல்லாம் அவருக்கிருந்தன. அவர் பெயர் பூபஸிங். தாராள புத்தியும் நல்ல மனது முடையவர். அவர் துரதிர்ஷ்டம் பிள்ளை ஒன்றுகூட இல்லை. ஏழும் பெண்கள் தான். கடவுள் செயலால் ஒன்று கூட இறக்கவில்லை. ஆரம்ப சூரத்வமாக முதல் மூன்று பெண்களின் விவாஹத்திற்குத் தாராளமாய்ச் செலவழித்தார். அதனால் தலைமீது பதினைந்திருபது ஆயிரம் ரூபாய் கடன் ஏறியவுடன் அவர் கண் திறந்தது. கையைச் சுருக்க ஆரம்பித்தார்.

ஆனந்தி நான்காவது பெண். அவள் ரூபத்திலும் குணத்திலும் மற்றப் பெண்களிலும் மேம்பட்டவள். ஆகையால், அவள் பேரில் பூபஸிங்குக்குப் பிரேமை அதிகம். அவள் கலியாணத்தைக் குறித்துப் பூபஸிங்குக்குக் கவலை அதிகரித்தது. அதற்காகக் கடன் வாங்கவும் இஷ்டமில்லை. யோசியாமல் எங்கேயாவது கொடுத்து விட்டுப் பிறகு குழந்தை கஷ்டப்படுவதிலும் இஷ்டமில்லை. இவ்வாறிருக்க, ஒருநாள் ஸ்ரீகண்டன் அவரிடம் தீபாவளி தேச நிதிக்குப் பணம் வசூல் செய்ய வந்தான். பூபசிங்கர் அவனுடைய குணங்களைக் கண்டு மகிழ்ந்தார். தன்னுடைய பெண்ணை அவனுக்கே கொடுத்தார். கலியாணம் விமரிசையாக முடிந்தது.

ஆனந்தி தன் புக்ககத்திற்கு வந்தாள். அவளுக்கு எல்லாம் புதிதாக விருந்தன. தடபுடல் ஒன்றையும் காணோம். யானை குதிரை ஒன்று மில்லாவிடினும் ஓர் அழகிய மாட்டு வண்டி கூடவா இல்லாதிருக்க வேணும் என்று யோசித்தாள். வெல்வெட் பாதரக்ஷை ஒரு ஜதை கொண்டுவந்திருந்தாள். உலாவுவதற்கு நந்தவன மிருந்தாலல்லவோ அதற்கு உபயோகம்? வீட்டில் சாளரமே கிடையாது. தரையில் விரிப்புகளில்லை. சுவரில் சித்திரங்களில்லை. ஓர் சாமானிய நாட்டுப்புற வீடாகத்தா னிருந்தது. ஆனாலும், ஆனந்தி இந்தப் புதிய வாழ்க்கைக்குத் தன்னை விரைவில் பழக்கப் படுத்திக் கொண்டாள். போகம் என்பதை முன்னமே அனுபவிக்காதவள் போல் மாறி விட்டாள்.

II

ஒரு நாள் மத்தியானம் விஹாரிசிங் வேட்டைக்குச் சென்று இரண்டு பறவைகள் சுட்டு வந்தான். மதனியிடம் அதைக் கொடுத்து, "எனக்குப் பசி அதிகமாயிருக்கிறது. சீக்கிரம் சமையலாகட்டும்" என்றான். ஆனந்தி முன்னதாகவே சமையல் செய்து வைத்துவிட்டு மைத்துனனை எதிர்பார்த்திருந்தாள். புதிதாக அவன் கொண்டு வந்ததைப் பாகம் செய்ய ஆரம்பித்தாள். கிண்ணத்தில் நெய் மிக்க குறைவாக விருந்

தது. பெரிய வீட்டில் பிறந்து வளர்ந்தவள்; செட்டுத் தெரியாதவள். கிண்ணத்தில் இருந்த நெய்யையெல்லாம் செலவழித்து விட்டாள்.

விஹாரிசிங் சாப்பிட உட்கார்ந்தான். பருப்பு அன்னத்திற்கு நெய்யில்லை. "என் நெய்யில்லை" என்று கேட்டான் விஹாரிசிங். "நெய் கொஞ்சம்தானிருந்தது, செலவழிந்து விட்டது" என்றாள் ஆனந்தி. "மூந்தா நாளன்று தானே நெய் வாங்கினேன்; இதற்குள் ஆய்விட்டதா?" என்று கேட்டான் மைத்துனன்.

"இன்று கொஞ்சம்தான் மிகுந்திருந்தது. சமையலுக்குக் கூடப் போதவில்லை" என்றாள் மதனி.

கட்டை உலர்ந்தால்தான் நன்றாய் எரியும். அவ்வாறு பசி மிகுந்தால் தான் கோபம் விரைவில் உண்டாகும். ஆனந்தி கூறியவையெல்லாம் இறுமாப்பின் கூற்று என்று அவனுக்குப் பட்டது.

"உங்கள் அகத்தில் நெய் ஆறு ஓடுகிறதோ?" என்றான்.

பெண்கள் நிந்தனையைக் கேட்பார்கள். அடியையும் பொறுப்பார்கள். ஆனால் பிறந்தகத்தைத் தூஷித்தால் கோபம் ஏற்பட்டு விடும். அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டு,

"யானை இறந்தாலும் ஆயிரம் பொன் தானே! எங்கள் வீட்டு வண்ணானும் அம்பட்டனும் கூட இவ்வளவு நெய் சாப்பிடுவார்கள்" என்றாள்.

விஹாரி சிங்குக்கு மூக்கிற்கு மேல் கோபமூண்டது. சாப்பிடும் கலத்தை அலட்சியமாகத் தள்ளிவிட்டான். "நாக்கை யறுக்க வேண்டும்" என்று உறுமினான்.

ஆனந்திக்கும் கோபம் உண்டாயிற்று. முகம் சிவக்க,

"அவர் இருந்தா லல்லவோ தெரியும்!" என்றாள். அந்தக் கல்வியற்ற நாட்டுப்புறச் சிறுவனுக்கு அது பொறுக்க முடியவில்லை. அவன் மனைவி ஓர் கிராமாந்திர ஜமீன்தாரரின் மகள். நினைத்த போதெல்லாம் அவன் அவளை அடிப்பது வழக்கம். இப்போது கோப வேகத்தால் அருகிலிருந்த தீர்த்த பாத்திரத்தை எடுத்து மதனி மீது வீசிவிட்டு, "எவன் உன்னைக் காப்பானோ அவனையும் உன்னையும் ஒரு கை பார்க்கிறேன்" என்றான்.

ஆனந்தி பாத்திரத்தைக் கையால் தடுக்கி விட்டதால் தலை தப்பித்தது. விரலில் மட்டும் சிறிது காயமேற்பட்டது. காற்றில் அசையும் இலையென அவள் உடல் நடுங்கிற்று. பெண்களில் பலமும் துணிவும் கௌரவமும் எல்லாம் கணவனே யன்றோ! அவளுக்கு அவன் பெருமையில் அதிக நம்பிக்கையுண்டு. அதனால் தான் அவள் சிறிது தலை நிமிர்ந்து நடப்பாள். ஆனால் இப்போது நடந்த சம்பவத்தால் மிக்கவருத்த மடைந்து தன் அறைக்குச் சென்று விட்டாள்.

III

ஸ்ரீகண்டன் சனிக்கிழமை தோறும் வீடு வருவது வழக்கம். மேற்கூறிய சம்பவம் வியாழக்கிழமையன்று நடந்தது. ஆனந்தி தன் அறையிலேயே இருந்தாள். அன்னாகாரம் ஒன்றுமின்றித் தன் கணவன் வருகையை எதிர்நோக்கி யிருந்தாள். சனியன்று ஸ்ரீ கண்டன் வந்ததும் வெளியே உட்கார்ந்து ஊர் விவஹாரங்களையும், தேச அக்கப்போர்களையும், அப்போது நடந்து வந்த வியாஜ்ஜியங்களையும் பற்றிப் பேசினான். இப்படியே இரவு பத்து மணியாகி விட்டது. அந்த ஊராருக்கு ஸ்ரீகண்டன் பேச ஆரம்பித்து விட்டால் சாப்பாடு கூட மறந்து விடும். கடைசியில் ஓர் விதமாகப் பேச்சை முடித்து விட்டு ஸ்ரீகண்டன் சாப்பிட எழுந்தான். இந்த இரண்டு மூன்று மணி நேரங்களை ஆனந்தி மிக்க சிரமத்துடன் கழித்தாள். ஸ்ரீ கண்டன் சாப்பிடச் செல்லும்போது விஹாரி அவனைத் தனியே கண்டு, "அண்ணா! சற்று தயவு செய்து பெண் மக்கள் நாக்கையடக்க வேண்டுமென்பதைத் தெரிவியுங்கள். இல்லாவிடில் என்றாவது ஒரு நாள் ரகளை ஏற்படும்" என்றான்.

மாதவசிங்கும் இளைய மகனின் சார்பாக "ஆமப்பா, நாட்டுப் பெண்கள் புருஷர்களின் எதிரே இவ்வாறு தர்க்கம்செய்வது தகாது" என்றார்.

"அவள் பெரிய வீட்டுப் பெண்ணாயிருக்கலாம். ஆனால் நாம் என்ன குயவர்களா?" என்றான் விஹாரி.

ஸ்ரீ கண்டன் சற்று கவலை கொண்டு நடந்தது என்னவென்று அறிய ஆவலுற்றான்.

"ஏதோ தானாகவே மன்னிக்குக் கோபம் வந்து விட்டது. அவள் புக்ககத்தைச் சிறிதேனும் மதிப்பதே கிடையாது" என்றான் விஹாரி.

ஸ்ரீகண்டன் சாப்பிட்ட பிறகு ஆனந்தியின் அறைக்குச் சென்றான். கோபத்தோடு அவள் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். ஸ்ரீ கண்டனுக்கும் கோப மேற்பட்டது.

"உடம்பு எவ்வாறிருக்கிறது?" என்று கேட்டாள் ஆனந்தி.

"சவுக்யம் தான். இதென்ன நீ உபத்திரவம் செய்கிறாயாமே!" என்றான்.

ஆனந்தியின் முகம் சுருங்கிற்று. அவள் உடல் தீப்பற்றியதுபோலிருந்தது. "இதை உங்களிடம் குத்தி விட்டவனை நெருப்பு வைக்க!" என்றாள்.

"இவ்வளவு கோப மேன்? என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"என்ன சொல்லட்டும். எல்லாம் என் தலைவிதி. இல்லாவிட்டால் ஓர் நாட்டுப்புறத்து மூர்க்கன் என்மீது லோட்டாவை எறிவானா?" என்று முணுமுணுத்தாள்.

"விவரமாகச் சொல். எனக்கு ஒன்றும் தெரியவில்லையே" என்றான் ஸ்ரீகண்டன்.

"முந்தாநாள் உங்கள் செல்லத் தம்பி சமைக்கச் சொன்னார். நெய் குறைவாய்த் தானிருந்தது. அது சமையலில் செலவழிந்து விட்டது. சாப்பிட உட்கார்ந்ததும் பருப்பு அன்னத்திற்கு நெய் இல்லையா என்று கேட்டார். அதிலிருந்து பேச்சு வளர்ந்து விட்டது. என் பிறந்தகத்தைத் தூஷிக்க ஆரம்பித்ததால் எனக்குத் தாள வில்லை. 'எங்கள் வீட்டு வண்ணானும் அம்பட்டனும் கூட இவ்வளவு நெய் சாப்பிடுகிறார்கள். நாங்கள் அதைக் கவனிப்பது கூடவில்லை' என்றேன். இதற்காக லோட்டாவை என் மீது விட்டெறிந்தார். என் கையால் அதைத் தடுத்திருக்காவிடில் என் தலை போயிருக்கும். ஏன், அவரையே எல்லா வற்றையும் கேளுங்களேன். இது தானா உண்மை யென்று" என்று அடுக்கினாள்.

ஸ்ரீ கண்டனின் கண்கள் சிவந்தன. "இவ்வளவு தூரமாயிற்றா? அந்தப்பயலுக்கு இவ்வளவு துணிவா?" என்று உறுமினான்.

பெண்ணல்லவா? ஆனந்தி அழவாரம்பித்தாள். அவர்களுக்கெல்லாம் கண்ணீர் இமையில் காத்திருக்கும்.

ஸ்ரீ கண்டன் பெரிய தைர்யசாலி. சாந்த முள்ளவன். ஒருவர்மீதும் கோபம் கொள்ளாதவன். ஆண் மகனின் கோப அனலுக்குப் பெண்மக்களின் கண்ணீர் எண்ணெயைப் போன்றது. அன்று ஸ்ரீகண்டனுக்குத் தூக்கமேயில்லை. அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தான். விடிந்ததும் நேரே தந்தையிடம் சென்று, "அப்பா, நான் இனி இங்கிருக்க முடியாது." என்றான்.

ஸ்ரீகண்டனின் நண்பர்கள் இவ்வாறு பேசியபோது, ஸ்ரீகண்டன் அவர்களைக் கண்டிப்பான். காலத்தின் கோலத்தை என்னெனக் கூறுவது! ஸ்ரீகண்டன் எதை எதிர்த்தானோ அதையே அனுஷ்டித்து விட்டான். பிறருக்கு உபதேசம் செய்வது எளிதுதான்.

மாதவசிங் பரபரப்போடு எழுந்து, "ஏனடா அப்பா?" என்றார்.

"ஏனென்றால் எனக்கும் மானம், கௌரவம் என்பன உண்டு. உங்கள் வீட்டில் அநியாயமும் கொடுமையும் துள்ளுகின்றன. பெரியவர்களைக் கௌரவிக்க வேண்டியவரெல்லாம் தலைமீது ஏறுகிறார்கள். நான் எங்கேயோ உத்தியோகத்தி லிருக்கிறேன். நான் இல்லாத வேளையில் என் மனைவியின் மீது லோட்டாவும் டம்ளரும் சீறிப்பறக்கின்றன! வாய்ப்பேச்சு மிஞ்சி யிருந்தாலும் பரவாயில்லை. ஆனால், கைமிஞ்சும் வரை பொறுக்கமுடியுமா" என்றான் ஸ்ரீகண்டன்.

மாதவசிங்கால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஸ்ரீகண்டன் எப்போதும் அவரிடம் மிக்க மரியாதையுடையவன். அவனே இன்று கோபிக்கக் கண்டு பெரியவரால் ஒன்றும் கூற முடியவில்லை.

"பையா! நீ புத்திசாலியாயிருந்தும் இப்படிப் பேசுகிறாயே. பெண்கள் இவ்வாறு தான் குடி கெடுக்கிறார்கள். நீ அவர்களுக்கு இடங் கொடுக்கலாகாது" என்றார்.

"எனக்கும் தெரியுமப்பா. தங்கள் ஆசீர்வாதத்தால் நான் மடையனல்ல. என் பிரயத்தனத்தால் அநேக குடும்பங்கள் கலையாதிருக்கின்றன என்பது தங்களுக்குத் தெரி

யும். ஆனால், எவளின் பாதுகாப்பை நான் வகிக்கின்றேனோ, அவளுக்கு அநியாயமும் கொடுமையும் நடந்தால் எவ்வாறு பொறுப்பது? நான் விஹாரிசிங்கை தண்டியாது இருப்பதே ரொம்பப் பெரிது” என்றான் ஸ்ரீ கண்டன்.

மாதவசிங்குக்கும் சற்று உரம் ஏறிற்று. இந்த வார்த்தைகளைக் கேட்க மனம் வராது, “விஹாரி உன் தம்பிதானே! அவன் ஏதேனும் குற்றம் செய்திருந்தால் அவன் காதைப் பிடித்துக் கொள். ஆனால்......”

இவ்வாறு கூறிக்கொண்டிருக்கையிலேயே ஸ்ரீ கண்டன் “விஹாரி என் தம்பியல்ல,” என்று முணுமுணுத்தான்.

“அடே! ஓர் பெண்ணுக்காகவாடா?” என்று மாதவர் வினவினார்.

“அன்று! இவ்வளவு மூர்க்கமும் கொடுமையும் உடையவன் என் தம்பியாகமாட்டான்,” என்றான் ஸ்ரீ கண்டன்.

இதனிடையே ஊர் ஜனங்கள் ஏதேதோ காரணம் கூறிக்கொண்டு அங்கு சேர வாரம்பித்தனர். தன் மனைவிக்காகப் பரிந்து கொண்டு தகப்பனோடு ஸ்ரீகண்டன் சண்டை யிடுவதைக் கேட்ட அவ்வூர்ப் பெண்கள் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. தந்தையும் தனயனும் சொல்லும் வார்த்தைகளைக் காதாரக் கேட்பதற்குப் பெரிதும் விருப்பமுற்றனர். இந்தக் குடும்பத்தில் சச்சரவே யில்லாதிருக்கிறதே என்று வயிற்றெரிச்சல் கொண்ட சில பெரியோர்கள் இருந்தனர். தகப்பன் பேச்சைத் தட்டாமல் நடந்துவந்ததால், ஸ்ரீ கண்டன் பயந்தாரி யென்றும், ஓயாமல் படித்துக் கொண்டிருந்ததால் அவன் புத்தகப் புழுவென்றும், மகனைக் கேளாமல் மாதவசிங் ஒன்றும் செய்ததில்லை, ஆதலால் அவன் முழு மூடனென்றும் அந்தப் பெரியார்கள் கூறுவது வழக்கம். இன்று அவர்களுக்கு குதூகலம்.



எனவே ‘பஞ்சாங்கம் இரவலுக்கு’ என்று சிலரும், ‘வரி செலுத்திய ரசீதைக் காட்டவென்று’ சிலரும், பற்பல காரணங்கொண்டு அங்கு வந்து உட்கார ஆரம்பித்தனர். கிழவர் ‘குட்டை’த் தெரிந்து கொண்டார். இந்த த்ரோகிகள் நம்மைக் கண்டு நகைக்க இடங்கொடுக்கலாகாது என்று தீர்மானித்தார்.

உடனே, மிகவும் இனிய குரலில், “குழந்தாய்! நீ வேறு, நான் வேறா? உனக்கு எப்படிச் செய்ய இஷ்டமோ அவ்வாறு செய்துகொள். அவன் செய்தது குற்றம் தான்” என்றார்.

சர்வகலாசாலையில் படித்த அந்தச் சிறுவர்களுக்குப் பெரியவரின் நோக்கம் தெரியுமா? அவன் தர்க்கப் பிரஸங்கங்களில் பிடித்த வாதத்தை விடாது பேசியே வழக்கமுடையவன். ஆகையால், தகப்பனாரின் நோக்கத்தை அறிந்து கொள்ளாது, “நான் விஹாரிசிங் அவர்களோடு இந்த வீட்டில் இருக்கமாட்டேன்” என்றான்.

“குழந்தாய்! புத்திசாலியா யிருப்பவர்கள் மடையன் செய்வதைப் பாராட்டமாட்டார்கள். அவனோ ஒன்றுமறியாத பையன். அவன் செய்த குற்றங்களைப் பெரியவனாகிய நீ மன்னிக்கவேண்டும்.”

“அவனுடைய போக்கிரித்தனத்தை ஒரு நாளும் பொறுக்கமுடியாது. அவனாவது வீட்டில் இருக்கட்டும். இல்லை, நானாவது இருக்கிறேன். அவனை நீங்கள் அதிகமாக விரும்பினால் எனக்கு விடை கொடுங்கள். நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ள அறிவேன். நான் இங்கிருக்க விரும்பினால் அவனுக்கு எங்கு இஷ்டமோ போகச்சொல்லுங்கள். இதுதான் என் கடைசித் தீர்மானம். இனி, அவன் முகத்தில்கூட விழிக்கப் போவதில்லை,” என்றான் ஸ்ரீ கண்டன்.

விஹாரிசிங் வெளியே நின்று அண்ணன் சொல்பவைகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு அண்ணனிடம் மிக்க மரியாதையுண்டு. அண்ணன் எதிரே வெற்றிலைகூடப் போடமாட்டான். உட்காரக்கூட மாட்டான். தகப்பனாரிடம் கூட அவன் அவ்வளவு மரியாதை காட்டியதில்லை. ஸ்ரீ கண்டனுக்கும் அவன் மீது உண்மையான அன்பு. அவனுக்குத் தெரிந்து ஒரு நாள் கூடத் தம்பியை அதட்டியது இல்லை. வெளியூரிலிருந்து வரும்போதெல்லாம் தம்பிக்குக் கட்டாயம் ஏதாவது வாங்கிக் கொண்டுதான் வருவான். ‘கர்லா’ கட்டை கூட அவன்தான் செய்து தந்தான். சென்ற

வருஷம் விஹாரி ஓர் பயில்வானை மல்யுத்தத்தில் தோற்கடித்தபோது நடுமைதானத்தில் சென்று தம்பியைத் தழுவினானே! சுமார் ஐந்து ரூபாய்ச் சில்லரையை ஆனந்தத்தால் வாரிச் சூறை விட்டானே! அத்தகைய தமையன் இன்று கடுஞ்சொற்கள் கூறுவதைக் கேட்டு விஹாரியின் மனது அபார துக்கம் கொண்டது. தன்னைக் கூப்பிட்டு அவன் புத்திமதி கூறுவானென எண்ணிக்கொண்டிருந்தான். ஆனால், கொஞ்சமேனும் இரக்கமின்றி இப்படிப் பேசக் கண்டு அண்ணன் செய்வது அநியாயமென்று அவனுக்குப்பட்டது. “அவன் முகத்திலும் விழிக்கப்போவதில்லை,” என்ற சொற்கள் அவன் மனதைப் பிளந்தன. அவன் அழுதுகொண்டே தன் அறைக்குள் சென்றான். மேல் வேஷ்டியை எடுத்துக் கொண்டு மதனியின் அறைக்கு வந்தான்.

“மன்னி! அண்ணா நானிருக்குமிடத்தில் இருப்பதில்லை யெனத் தீர்மானித்து விட்டார். என் முகத்திலும் விழிக்கப்போவதில்லை எனக் கூறிவிட்டார். ஆகையால் நான் போகிறேன். என் முகத்தை அவரிடம் இனி காட்டப்போவதில்லை. நான் செய்த குற்றங்களை மன்னித்துவிடு” என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அவன் கண்ணில் நீர் அருவியெனப் பாய்ந்தது.

IV

மதனியுடன் விஹாரி தலை குனிந்த வண்ணம் பேசிக் கொண்டிருக்கையிலேயே ஸ்ரீகண்டன் அங்கு வந்து சேர்ந்தான். தம்பியை அங்கு கண்டவுடன் திரும்பிச் செல்ல வாரம்பித்தான். தம்பியின் நிழலைக் கூட மிதிக்க அவன் விரும்பவில்லை.

ஆனந்தி விஹாரிசிங்கின் மீது கணவனிடம் கோள் சொன்னதற்காக வருத்தப்பட்டாள். “நான் போகிறேன்...நான் செய்த குற்றங்களை மன்னித்துவிடு” என்று விஹாரிசிங் கூறியதும், கொஞ்சம் நஞ்சம் இருந்த கோபமும் பறந்தோடி விட்டது. அவளும் அழ ஆரம்பித்தாள். மனதின் அழுக்கை அலம்பக் கண்ணீரைக் காட்டிலும் சிறந்தது உண்டோ!

ஸ்ரீகண்டனைப் பார்த்து, “உங்கள் தம்பி அழுகிறாரே” என்றாள்.

“அதற்கு நான் என்ன செய்யட்டும்?” என்றான் ஸ்ரீகண்டன்.

“அவரை உள்ளே கூப்பிடுங்கள். என் நாக்கில் நெருப்பு வைக்க! நான் ஏன் இந்த வீண் சண்டையைக் கிளப்பினேன்!” என்றாள்.

“நான் கூப்பிடமாட்டேன்” என்றான் ஸ்ரீகண்டன்.

“வேண்டாம். பிறகு வருத்தப்படுவீர்கள். அவர் மிகவும் ஆயாஸப் படுகிறாரே. எங்காவது போய்விடப் போகிறார்” என்றாள் ஆனந்தி.

ஸ்ரீகண்டன் நகரவில்லை. இதற்குள் விஹாரிசிங்,

“அண்ணாவிடம் நான் சொன்னதாகச் சொல்லுங்கள். அவர் என்முகத்தைக் கூடப் பார்க்க விரும்பவில்லை. ஆதலால், நானும் என் முகத்தைக் காட்டவில்லை. என் நமஸ்காரத்தைச் சொல்லுங்கள்” என்று கூறிவிட்டு வெளியே புறப்பட்டான்.

அப்போது ஆனந்தி ஓடி வழியைமறைத்துக்கொண்டு தடுத்தாள்.

விஹாரிசிங், “என்னைப் போக விடுங்கள்” என்றான்.

“நீங்கள் போகக்கூடாது. நான் வழிவிடமாட்டேன்” என்றாள் ஆனந்தி.

“நான் உங்களோடு வஸிக்கத் தகுதியற்றவன்” என்றான் விஹாரி.

“என் ஆணை. நீங்கள் போகக்கூடாது” என்றுரைத்தாள் ஆனந்தி.

“அண்ணா என்னை மன்னித்து விட்டாரென்று தெரிகிறவரையில் நான் இந்த வீட்டில் இருக்கமாட்டேன்” என்றான் விஹாரி.

“நான் கடவுள் சாக்ஷியாகக் கூறுகிறேன். மனப்பூர்ணமாகத் தங்களை மன்னித்து விட்டேன்” என்றாள் ஆனந்தி.

இதையெல்லாம் கேட்டு ஸ்ரீகண்டன் மனது இளகியது. அவன் ஓடோடியும் வந்து, விஹாரியைக் கட்டித் தழுவினான். சகோதரர்களிருவரும் விம்மி விம்மி அழுதனர். விஹாரி அழுதுகொண்டே, “என் முகத்தில் விழிக்கமாட்டேனென இன்னமே சொல்லவே சொல்லாதீர்கள். வேறு எந்தத் தண்டனை வேணுமானாலும் விதியுங்கள்” என்றான்.

ஸ்ரீகண்டன் அழுத வண்ணமாகவே, “அம்பி! இதையெல்லாம் மறந்து விடு. கடவுளின் கிருபையால் இனி இந்த ஸ்திதி வராது” என்றான்.

மல்கம்பம்



... ஸாதாப்பிடி ...

என் சிறுவயதில், வடக்கே பம்பாய் பக்கத்தில் கேட்ட ஒரு கதை. அது என் மனதில் அப்படியே பசுமையாகப் பதிந்திருக்கிறது. அதில் எவ்வளவு உண்மை இருக்கிறதோ தெரியாது. ஆனாலும் இன்றைக்கு நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது; நெஞ்சு பூரிக்கிறது.

சத்ரபதி சிவாஜி தமது வாலிபப் பருவத்தில்,—புதிய மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டித்து விரிவாக்கிய காலத்தில்—தினந்தோறும் அதிகாலையில் குதிரை சவாரி போவது வழக்கம். ஒரு குறிப்பிட்ட திசையில் தினம் சுமார் முப்பது மைல் போய் வருவார்.

அவ்வாறு அவர் சென்றுவரும் ரஸ்தாவில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. தூண்கள் போன்ற விழுதுக் கைகளை ஊன்றிக் கிளைகளைப் பரப்பிப் பிரமாதமான தோற்றமளிக்கும் மரம். அதன் இரு விழுதுகள் நடுச்சாலைக்கு நேரே கைக்கெட்டும் தூரத்தில் வந்து தொங்கியிருந்தன. சிவாஜி தினம் அந்த வழியாகப் போய்த் திரும்புகாலையில், வரும் வேகத்துடனேயே அந்த இரு விழுதுகளையும் இரு கைகளாலும் பற்றிக் கொள்வாராம். அவர் ஏறியிருந்த குதிரை அவர் தொடைகளினிடையில் தரையிலிருந்து அரைமுழ உயரத்தில் தொங்குமாம். அத்துடன் சிறிதுநேரம் ஊசலாடிவிட்டுத் தான் சிவாஜி குதிரையைத் தரையைத் தொட விட்டு, விழுது வழியே வழுக்கி வருவாராம்.

இதே போல சிவாஜியின் ஆத்ம நண்பனாக இருந்த தானாஜியைப் பற்றியும் ஒரு கதை கேட்டதுண்டு. மகாராஷ்டிர பீமனென்று புகழப்படும் தானாஜி மாட்டு மந்தைகளுக்குள் புகுந்து, ஒரு பசுவின் அடிவயிற்றில் இடது கையைக் கொடுத்துத் தூக்கிக் கொண்டு, மற்றக் கையால் பால் கறந்து குடிப்பாராம்.

அந்தக்காலத்தில் இந்தக் கதைகளைக் கேட்டபோது அவர்கள் தான் ராமாயணம் முதலியவற்றில் வரும் ராட்சதர்களோ என்று கூட நான் ஆச்சரியப்பட்டேன்.

பின்னால் நான் சிவாஜி மகாராஜாவைப் பற்றியும், அவரது வீர மராட்டியர்களைப் பற்றியும் அதிகமாக அறிய அறியத் தான் என் ஆச்சரியம் வியப்பாக மாறியது. கடைசியாக நான் ஹிந்துஸ்தானி சேவாதளத்தின் ஒரு தொண்டனாகப் பயிற்சி பெற்ற காலத்தில் நான் மேலே கூறிய கதைகள் உண்மையாகத் தான் இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையும் வளர ஆரம்பித்தது.

சிவாஜி மகாராஜாவின் கால்களிலும் புஜங்களிலும் இந்தக் கதை காட்டும் பலமும் சக்தியும் நம்மை பிரமிக்கச் செய்கின்றன. அதேபோலத் தான் தானாஜியைப் பற்றியும். ஆனால் இந்த பலமும் உறுதியும் கற்பனைச் சரக்கல்ல; உண்மையில் அவர்களிடமிருந்த அம்சங்கள் தான்; அதிலும் வரப் பிரசாதமாகப் பெற்ற அற்புத சக்தியல்ல. தினசரி சரீரப் பயிற்சிகளால் வளர்த்துக் கட்டிய பலம் என்று அறிந்தபோது நானடைந்த சந்தோஷத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது.

சிவாஜி மகாராஜா காலத்தில் ரொம்பப் பிரபலமாக இருந்த சரீரப் பயிற்சி முறைகளில் மல்கம்பம் ரொம்ப முக்கியத்துவம் வகித்ததாகத் தெரிகிறது. மகாராஷ்டிரம் முழுவதிலும் இந்த மல்கம்பப் பயிற்சியில் அக்காலம் முதல், இன்று வரை விசேஷ உற்சாகம் காட்டப்பட்டு வருகிறது.



காப்டன் டி. வி. திருவேதி

எழுதியது

பின்னால் தெற்கே தஞ்சாவூரில் மராட்டியர் ஆட்சி ஸ்தாபிக்கப் பட்டபோது இந்தப் பிராந்தியங்களிலும் இந்தப் பயிற்சி விசேஷ உற்சாகத்துடன் பரப்பப்பட்டது என்று தெரிகிறது. இன்னும் தஞ்சாவூரிலுள்ள வயது முதிர்ந்தவர்கள், அவர்கள் காலத்து மல்கம்ப நிபுணர்களைப்பற்றிப் பேசுவதைக் கேட்க ரொம்ப ருசியாயிருக்கும்.

மல்கம்பம் என்பது ஒருவகை சரீரப்பயிற்சி விளையாட்டுதான். சுமார் பத்தடி உயரமுள்ள ஒரு மரத் தூண்தான் மல்கம்பம். மல் என்றால் யுத்தம், மோதுதல் என்றும், கம்பம் என்றால் தூண் என்றும் நமது குழந்தைகளுக்கும் புரியும். ஒரு தூணுடன் மோதி யுத்தம் செய்வதுதான் மல்கம்ப விளையாட்டு.

அடியிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவில் சிறுத்துக் கொண்டு போகும் ஒரு மரக் கம்பம். அது நன்றாக இழைக்கப் பட்டு, தந்தம் போன்ற வழுவழுப்புள்ளதாகச் செய்யப் படுகிறது. பிறகு அதன் மேல் விளக்கெண்ணெ தடவிப் பதப்படுத்துவார்கள். இதுதான் மல்கம்பம்.

இந்த மரத்துடன் ஒருவன் மல் யுத்தம் செய்கிறான். ஆனால் எதிரி ஒரு மனிதனானால் நமது பிடிகளுக்குத் தகுந்தபடி வளைந்து கொடுத்தும், தனது பிடிகளாலும், மோதலாலும், நம்மையும் வளைந்து, நெளிந்து முண்டி முட்டச் செய்தும் போர் செய்வான். ஆனால் இந்தக் கம்பம் நமது பிடிகள் எதுவானாலும் நின்றபடி தான் நிற்கும்! இத்தகைய ஒரு கம்பத்துடன் மல்லுக் கட்டவாவது என்று பலர் ஆச்சரியப்படக்கூடும்.

ஆனால் இதில் ஆச்சரியமொன்றுமில்லை. மல் யுத்தத்தில் நமது ஒவ்வொரு பிடிக்கும், எதிர்ப்பிடி, மாற்று இருக்கிறது. அவற்றையெல்லாம் யோசித்தே நாம் பிடிகளை உபயோகிப்போம். ஆனால் மல் கம்பப் பயிற்சியில் நமது பிடிகள் வேறு வகையானவை.

மல் கம்பத்தில் எல்லாம் பிடிக் கணக்குகள் தான். 'கமர்பகட்', 'கான்பகட்', பாவ்(ம்) பகட்',



...ஜாங் அல்லது தொடைப்பிடி...

'ஹாத்பகட்' என்று ஹிந்தியில் சொல்லப்படும் இடுப்புப்பிடி, கழுதுப் பிடி, கால்ப்பிடி, கைப்பிடிகள் தான் மல் கம்பத்தின் வரிசைகள். இந்த வரிசைகளின்படி ஒருவர் கம்பத்தில் பழகிப் பயிற்சி பெறவேண்டும்.

சாதாரணமாக ஒரு பிடியை விவரிப்போம். முதலில் நாம் அந்தக் கம்பத்தில் நமது இடது புஜத்தை முன் புறமாகக் கொடுத்து மோதுகிறோம். பிறகு கைகளைத் தலைக்குமேல் கொடுத்து மரத்தை இறுக்கிப் பற்றிக்கொள்ளுகிறோம். மூன்றாவதாக கைப்பிடியினுடையவும் புறத்தினுடையவும் பலத்தின் மேல் உந்தி உடலை மேல் நோக்கி உயர்த்தி மரத்துடன் தலைகீழாக நிற்கிறோம். இப்படியே பல பிடிகள்.

இத்தகைய பிடிகளால் செய்யப்படும் மல்கம்ப விளையாட்டின் பலனைப் பற்றியவைதான் நான் மேலே குறிப்பிட்ட கதைகள். அவர்கள் இத்தகைய பயிற்சினாலேயே அப்படிப்பட்ட ஆச்சரியகரமான பலம் பெற்றனர் என்பதை நினைக்கும்போது, இந்தக் கம்பப்பயிற்சியின் பெருமை நம்மை பிரமிக்கச் செய்கிறது.

அந்தக் காலத்தில், வட இந்தியாவில் யாராவது குஸ்தி வீரன் என்று பெயர் வைத்துக்கொண்டு வெளிப்பட்டால், அவனை உனக்கு "மல்கம்" எத்தனை பிடிகள் தெரியு மென்றுதான் கேட்பார்களாம். அதாவது இந்த மல்கம் பயிற்சி குஸ்தி விளையாட்டிற்கு, அஸ்திவார ஆரம்பப் பயிற்சி என்று சொல்லலாம். இன்றும் கூட நமது நாட்டின் பிரசித்திபெற்ற குஸ்தி வீரர்களெல்லோரும் இந்தப் பயிற்சி பெற்றவர்கள் என்றே சொல்லி விடலாம்.

உலகம் முழுவதும் குஸ்தியில் இந்தியாதான் தலைமை வகிக்கிறது. இத்தகைய உயர்ந்த நிலைமைக்கும் கௌரவத்திற்கும் அஸ்திவாரமாக வுள்ளது இந்த 'மல்கம்' பயிற்சி யென்றால் அது மிகையாகாது.

இடையில் நமது தேசத்தில் ஏற்பட்ட பலவகை மாறுபாடுகளின் காரணமாக இந்த 'மல்கம்' கொஞ்சம் மங்கிப் போயிருந்தது. ஆயினும் சென்ற அரை நூற்றாண்டாக தேசத்தில் ஏற்பட்டுள்ள விழிப்பின் பயனாக, நமது தேசியத் தேகப் பயிற்சி முறைகளுடனும் இதுவும் புத்துயிர் பெற்றுப் பரவிவருகிறது.

வட இந்தியாவில் நகரங்தோறும் மிகுந்து வரும் வியாயாம் மண்டல் என்னும் தேகப் பயிற்சிக்கூடங்களில் இன்று மல்கம் மிகவும் ஊக்கத்துடன் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. மத்திய மாகாணத்தைச் சேர்ந்த அமராவதி (அம்ரோட்டி, நாகபுரிக் கருகில் உள்ள) யில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஹனுமான் வியாயம் மண்டலத்தில் வருஷந்தோறும் ஆயிரக் கணக்கானவர்கள் இந்தப் பயிற்சி பெறுகின்றனர். பரோடாவிலுள்ள ஒரு பெரிய வியாயாம் மண்டலிலும், பம்பாயிலும், மகாராஷ்டிரத்திலு முள்ள பல மண்டல்களிலும், இந்தப் பயிற்சி ஒரு முக்கிய அம்சமாகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது.



... பகல்பிடி ...

காங்கிரஸ் சபையின் ஒரு அங்கமான ஹிந்துஸ்தானி சேவாதளத் தொண்டர்கள் பயிற்சியிலும் மல்கம் முக்கியத்துவம் வகித்து வருகிறது. தளத் தொண்டர்கள் நாடெங்கும் பரவி இதைப் பரப்பி வருகின்றனர்.

மல்கம்பப் பயிற்சியின் விசேஷங்களில் முக்கியமானது அது மனித உடலுக்கு அளிக்கும் உறுதியின் தன்மைதான். இந்தப் பயிற்சி பெற ஆரம்பித்தவுடன் உடல் பஞ்சு போல நெகிழ்ந்து பிறகு தான் உறுதியடைகிறது. ஆனால் சரீரம் முழுவதும் ஒரே அந்தஸ்தாக, எல்லா அவயவங்களும், அங்கங்களும் உறுதி பெற்று இறுகுகின்றன. முக்கியமாக வண்ணான் சால்போலத் தொந்தி பெருக்கவே பெருக்காது. தற்கால மல்யுத்த வீரர்களின் தொந்தி தொப்பைக்குக் கூட அவர்கள் மல்கம்பப் பயிற்சி பெறாதது, அல்லது கைவிட்டது தான் காரணமென்று சொல்லலாம்.

நண்பர் ஒருவர் விளையாட்டாகச் சொன்னதுபோல மல்கம் பயிற்சி—டார்வின் தத்துவப்படி நமது மூதாதையராகக் கருதப்படும்—வானரக் குலத்திலிருந்து தான் பிறந்தது என்று கூடச் சொல்லலாம். அதாவது மல்கம் பயிற்சி பெற்றவன் உடல் லாகவமும், பிடி உறுதியும், குரங்கினதைப்போல அவ்வளவு சரளமாகவும், உறுதியாகவும் இருக்கும்.

நமது நாட்டில்கூட ஸ்ரீ ஜயந்தி விழாக்காலத்திலும், கிராமங்களில் கிராம தேவதைகளின் பெரிய உற்சவ காலங்களிலும் வழுக்குமரம் நிறுத்தி யிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் அந்தமரம் மல்கம்பத்தைவிட இரண்டு மடங்கு உயரமும், கொஞ்சம் அதிக கனமும் உடையதாக இருக்கும். அதன்மேல் பூசும் விளக்கெண்ணை, கம்பத்தின் தலையில் கட்டியுள்ள பண முடிச்சை அவிழ்த்தெடுக்க ஏறுபவனைக் கட்டாயமாக வழுக்கி விட்டு சிரமப்படுத்தும் அளவுக்கு, அவ்வளவு அதிகமாகப் பூசப்பட்டிருக்கும்.

இந்தமாதிரி வழுக்கு மரங்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கும். நமது முன்னோர்கள் அந்தக் காலங்களில் எத்தகைய ஆண்மை நிறைந்த பந்தயங்களெல்லாம் வைத்து விளையாடினார்கள்? இந்த எண்ணம் எனக்கு உற்சாகமளிக்கும். வழுக்கு மரத்தில்கூட மல்கம்பப் பயிற்சி பெற்றவர்கள், மற்றவர்களை விடச் சுலபமாக ஏறிவிட முடியுமென்பதுதான் என் அபிப்பிராயம். ஆனால் நான் மல்கம்பப் பயிற்சி பெற்றபிறகு இதைப் பரிட்சிக்க இதுவரை சந்தர்ப்பமே கிடைத்ததில்லை.

மல்கம் நமது நாட்டுப் பழமையான பல தேகப் பயிற்சி முறைகளில் ஒன்றுதான். நமது பயிற்சி முறைகள் எல்லாமே, சரீர சாஸ்திர நுட்பம் தெரிந்த நிபுணர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை என்பதுதான் என் அபிப்பிராயம். அதுதான் உண்மை யென்பதையும் ஒவ்வொரு விளையாட்டையும்பற்றியும் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் விளங்கும்.

சலாமி அல்லது சபைவணக்கம்



... ஹாத் அல்லது கைப்பிடி ...

எனக்கு மல்கம் விளையாட்டில் கொஞ்சம் பயிற்சி யிருப்பதால் அதைப்பற்றி விசேஷமாகச் சொல்லுகிறேன். ஆனாலும், மல்கம் உலகத்திலேயே ஒரு ஒப்புவமையற்ற சிறந்த தேகப் பயிற்சி முறை என்று உறுதியாகச் சொல்லுவேன். தினசரி மல்கம் பயிற்சி சரீர பலத்தையும், உறுதியையும் மாத்திரம் தான் வளர்த்துக் காப்பாற்றுகிறது என்பதில்லை; மனத்தையும் திடமாக்குகிறது.

இன்று நம் நாட்டில், ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை பரவியிருக்கும் மேல்நாட்டவரின் வாழ்க்கையின் சோபை மயக்கம், நமது யுவர்களின் தேகப் பயிற்சியைக்கூடக் குட்டிச் சுவராடித்து விட்டது. ஆயினும், நாட்டில் இன்று காணும் விழிப்பு நம்பிக்கை யூட்டுவதாக இருக்கிறது.

வருங்காலத்தில் நமது குழந்தைகள், நமது புராதனமானவையும், ஆயினும் சரீர சாஸ்திர நுட்பங்களில் தேர்ந்த நிபுணர்களால் நிர்ணயிக்கப் பட்டவையுமான மல்கம் போன்ற தேகப் பயிற்சி முறைகளைக் கற்றுப் பயின்று, தேகதிடத்திலும், மன உறுதியிலும், உற்சாகத்திலும் சத்ரபதி சிவாஜி தானாஜிகளாக வாழ்வார்கள் என்று நம்புவோம்.

ஊமை செய்த வேலை



சுவாமி
சுத்தானந்த பாரதியார்
எழுதியது

I

பதினாலாவது லூயி சிறுவயதில் தந்தையை யிழந்தான்; நாட்டை அவனது தாயான ராணி அன்னி டி' ஆட்ரிச்சா பார்துகாத்து வந்தாள். ராணிக்கு வலது கை போன்றுதவியது மந்திரி மஜாரீன். மந்திரி மஜாரன் இத்தாலியன். அருங்கலைவாணன்; இனிய பேச்சாளன்; ஆனால் தொடை நடுங்கிப் பேர்வழி; அவன் யாரைக் கண்டாலும் சந்தேகிப்பான். வேட்டை நாய்க்குப் பயந்து பதுங்கிக் குடல் நடுங்கிக் கொண்டிருக்கும் குழிமுயல் மாதிரியே அவன் தனது பதவியில் பதுங்கிக் கொண்டிருந்தான். தற்காப்பிற்காக அவன் ஏராளமான முரட்டுச் சிப்பாய்களை வைத்திருந்தான். நாடெங்கும் ஒற்றரை யனுப்பி சந்துபொந்துகளில் நடக்கும் சம்பவங்களை யெல்லாம் ஒன்று விடாமல் அறிவான். பிரபுக்கள் வீடுகளிலெல்லாம் ஒற்றரை வைத்திருந்தான். ராணிக்கு அவனே ராஜா, இல்லை, 'காதலன்' என்றே சொல்லிவிடலாம். இருவரும் இணைபிரிய மாட்டார்கள். அந்த அந்தப்புர ரகசியங்கள் நமது கதைக்குத் தேவை யில்லையாதலால், இக்குறிப்புடன் நிறுத்திக் கொள்வோம். முதன்மையாக அரச குடும்பத்தைச்சேர்ந்த பிரபுக்களின் மேல் மஜாரன் கண் வைத்திருந்தான். அவர்களில் யாரேனும் "மஜாரன் பொல்லாதவன்" என்றாற் போதும். உடனே பஸ்தீலுக்குப் போகவேண்டியதுதான். இவ்வாறு பஸ்தீல் சிறையில் அடைபட்டு வருந்திய பிரபுக்கள் பலர் என்றால், சாதாரண மனிதர் மிகப்பலர் என்றுசொல்ல வேண்டாம்.

II

பஸ்தீல் சிறைச்சாலை என்பது வானளாவிய பயங்கரக் கோட்டை. அதில் இருட்டறைகள் பல. அங்கே சாவின் குரல் தினம் கேட்கும். "அட அநியாயமே! நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே. என்னை யேன் சிறையிலிட்டான் இந்தப் பாவி?" என்ற கூக்குரல் கேட்கும். இச்சிறையில் யாரும் நுழைய முடியாது; பலமான காவல். காவலாளரெல்லாம் மஜாரன் பாவைகள்; அவன் இச்சை எப்படிக் கயிற்றை யிழுக்கிறதோ அப்படி ஆடுபவர்.

III

இச்சிறையில் **கோண்டா** என்னும் ஒரு பிரபு அடைபட்டிருந்தார். அவர் பதினாலாம் லூயிக்கு மாமன் முறை. மஜாரனுக்கும் அவருக்கும் ஏழாம் பொருத்தம். பிரெஞ்சுக்காரர்களுக்குப் பொதுவாகப் பிரெஞ்சுக்காரரைத் தான் பிடிக்கும். தம்மை ஒரு இத்தாலியன் ஆளுவதா என்று, நெப்போலியனைக் கூட வெறுக்கும் பிரெஞ்சுக்காரர் இன்னும் உண்டு. மஜாரன் என்றால் குப்பை கூளத்திற்குச் சமானமாக நினைத்தவரில் கோண்டா ஒருவன். கோண்டாவிற்குப் படிப்பு அதிகம் கிடையாதென்றாலும், குஷியாகப் பேசுவான்; பெரிய தமாஷ் பேர்வழி. காலித்தனமாகக் கவி கட்டி தனக்கு வேண்டாத பேரை மட்டந் தட்டுவான். காலிகளைத் தூண்டி அவர்களைத் தெருவில் அவமானப் படுத்துவான். சுவர்களில் ஆபாசமான படமெழுதி பார்த்தவர் சிரிக்கும்படி செய்வான். மஜாரனுக்குக் கொண்டா இவ்வளவு மரியாதையும் செய்தான். மஜாரனுக்கும் ராணிக்கும் நடக்கும் அந்தப்புர ரகசியங்களை யெல்லாம் படம்போட்டு ஊர் சிரிக்க வைத்தான். முடிவில் மஜாரனை வீழ்த்த ஒரு கலகத்தையே ஜோடித்து விட்டான். அதற்குப் பெயர் கௌவாங்கல் **கலகம்**. கொண்டா, ஊர்க்காலிகள், பிச்சைக்காரர் படைகள், அரசாங்க விரோதிகள் அனைவரையும் இரகசியமாகத் திரட்டி தைரியப்படுத்தினான். எதற்கு? கண்ட இடமெல்லாம் மறைந்திருந்து மஜாரன் ஆட்கள் மேல் கவண் கல்லை யடித்து மண்டையுடைக்க வேண்டியது—இவ்வளவுதான் விஷயம். இப்படிக் கௌவாங்கல் பூசை வாங்கின பேர் மிகப் பலர். மஜாரன் தெருவெங்கும் சிப்பாய்களை வைத்துப் பார்த்தான். 'யாரும் துப்பாக்கி, தடி, கௌவாங்கல் வைத்திருக்கக் கூடாது' என்று பலமான அடக்குமுறைகள் செய்து பார்த்தான். 'இரவு ஒன்பது மணிக்கு மேல் யாரும் வெளியேறக் கூடாது, கூடிப் பேசக்கூடாது' என்று சட்டம் போட்டான். தான் சொன்னபடி ஜனங்கள் நடக்கிறார்களா என்று மாறு வேஷம் போட்டு, இரவு பத்து மணிக்குப் பலமான காவலுடன் ஊர் சுற்றப்போவான். அப்போது தான் "படார்" என்று ஒரு கல் வந்து அவன் குதிரை மேலே தைக்கும். பிறகு பத்துக் கற்கள் வரும்: குதிரை கீழே உருளும். பாவம் மஜாரன் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி, ராணி பக்கத்தில் ஒளிந்து கொள்வான்! அன்று முதல் இரவும் பகலும் தன் மேல் கௌவாங்கல் விழுவது போலவே கனவு காண்பான். இன்னொரு நாள் தைரியப் படுத்திக் கொண்டு இரவு பன்னிரண்டு மணிக்கு ஊர் சுற்றிச் சோதனை செய்யப் போவான். இப்போது கல்விழாது. யாரோ பத்துப்பேர் இடி யிடி யென்று சிரிப்பர்:

மஜாரப் பேயே
இத்தாலிய நாயே
சண்டைக்காவது வாடா - அல்லது
ஜல்தி ஓடிப் போடா

என்றொரு பாட்டுக் கிளம்பும். சுற்றிப் பார்த்தால் பாட்டு வெகு தூரம் சென்று மறையும். மறுநாள் ஊர்ச்சுவர்களிலெல்லாம் கரியினால் இந்தப் பாட்டு எழுதியிருக்கும். மஜாரனுக்குத் தபாலில் ஒரு அழகான கடிதம் வரும்; பிரித்துப் பார்த்தால், மஜாரனை பைரவாகாரமாகச் சித்தரித்து அதன் கீழே மேற்படி பாட்டு வர்ண மையினால் எழுதப் பட்டிருக்கும். மஜாரன் ராணியிடம் காட்டி யழுவான்.

IV

இதற்கெல்லாம் காரணம் கோண்டா தான் என்று ஒற்றரால் அறிந்தான் மஜாரன். உடனே ஒரு பலமான படையனுப்பிக் கொண்டாவைக் கைது செய்து பஸ்தீலில் அடைத்துவிட்டான். கொண்டா அரசாங்கக் கைதி யல்லவா? அவனுக்கு எல்லாச் சௌகரியங்களும் சிறையிலுண்டு. ஆள் மட்டும் சிறைச் சுவற்றைத் தாண்டக் கூடாது. கொண்டாவின் பின்னே அவன் நண்பரெல்லாம் ஏராளமாக வந்தனர். அவர்களில் ஒருவனைப் பார்த்து வாயினால் ஏதோ ஜாடை செய்து கண் சிமிட்டியதும் கொண்டா இடி யிடி யென்று சிரித்துக் கொண்டே பஸ்தீலுக்குள் நுழைந்தான். கொண்டாவிடம் ஒரு அருமையான நாய் இருந்தது. அதற்கு "உண்மை" என்று பெயரிட்டான். அதை அவன் பல வேடிக்கைகள் செய்யப் பழக்கினான். அவை யெல்லாம் பெரும்பாலும் மஜாரனையும் ராணியையும் அவமானப்படுத்தும் தமாஷாக்கள். அத்துடன் சிறைச் சுவர்களிலெல்லாம் மஜாரனைக் குரங்கு மாதிரியும், பன்றிமாதிரியும் படமெழுதினான். அவற்றின்கீழ் ஆபாசப் பாடல்களை யெழுதினான். ஒற்றர் சும்மா இருப்பாரா? மஜாரனிடம் உடனுக்குடன் ஒன்றிற்குப் பத்தாகச் சொல்லுவர்.

V

மஜாரனுக்கு ரோஷம், கோபம், பொறாமை, வன்மம், இத்தனையும் ஒன்று சேர்ந்து காலாக்கினியாகப் பகை யெழுந்தது. கொண்டாவை ஒரு ஒதுக்கமான தனி யறையில் வைத்தான். அவன் செய்யும் தமாஷாக்களை யாரும் பார்க்கக்கூடாது, பார்த்தாலும் சிரிக்கக் கூடாது, அவனுடன்யாரும் பேசக் கூடாது என்று உத்திரவிட்டான். ஒரு நம்பிக்கையான வீரனை ஜெயிலராக்க நினைத்தான். ஒரு நாள் மஜாரன் வெகு கம்பீரமாக "அர்த்தாங்கா!" என்று கூப்பிட்டான். வந்தான் **அர்த்தாங்கன்**. இராமாயணத்திற்கு ஹனுமான் போல அக்கால பிரெஞ்சு சரித்திரத்திற்கு அர்த்தாங்கன் விளங்கினான். பலே சூரன் என்றால் சூரன், சூரன், சூரன்! எத்தன் என்றால் எத்தன்! அவனை யாரும் ஏமாற்ற முடியாது. அவன் பிடித்ததைச் சாதித்தே தீருவான். அவனிடம் நம்பிக்கையுள்ள வீரப் புலிகள் ஆயிரக் கணக்கான பேர். அவர்களுக்கென்று தனியான பேச்சு ஜாடைகள் உண்டு. அர்த்தாங்கன் அரசாங்கப்படையில் ஒரு வீரன்தான். என்றாலும் அவன் தனது மனச் சாட்சிக்கே உண்மையான வீரன். கடவுளே அநியாயம் செய்தாலும் அவன் பொறுக்கமாட்டான். அர்த்தாங்கன் மஜாரனின் உடற் காப்பாளனாக இருந்தான்.

அரண்மனை இரகசியம், ராணி - மஜாரன் போக்குவரத்துக்கள் எல்லாம் அவனுக்கு நன்றாகத் தெரியும். கொண்டாவிடம் அர்த்தாங்கனுக்கு உயிர். ஏனென்றால் கொண்டா

"கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் ணிடையார் ஆடும் ஆடக அரங்கு கண்டார்."

—கம்பன்

PRINTED BY:
KESARI PRINTING WORKS, MADRAS.

FOUR-COLOUR BLOCKS BY:
STANDARD PHOTO ENG. CO., MADRAS.

போதுஜனங்களின் நண்பன்; தன்னைப் போன்ற ஏழைகளின் தோழன். அர்த்தாங்கன் செய்த அபாரமான வீரச் செயல்களைப் பற்றிப் பல கதைகள் உள்ளன.

இப்போது அர்த்தாங்கன் மஜாரன் முன் நிற்கிறான்.

மஜா :—அர்த்தாங்கா, நமது அருமை வீரனே!

அர் :—ஏன்? என்ன விசேஷம்? எசமான், ஏன் அழறீங்க?

மஜா :—எனது உயிரைக் காக்கும் வீரனல்லவா நீ?

அர்த் :—நான் எப்போதும் எனது நாட்டைக் காக்கும் வீரனே.

மஜா :—உன்னால் ஒரு உபகாரம் நடக்க வேண்டும்.

அர்த் :—நியாய விரோதமில்லாத எந்த வேலையும் செய்யத் தயார்.

மஜா :—இந்தக் கொண்டாவிற்கு ஏற்ற ஒரு காவலாளி வேண்டும். நம்பிக்கையுள்ளவன், உறுதியுள்ளவனாக இருக்கவேண்டும். அவன் ஒரு பெரிய கோமாளி. அவன் வேடிக்கைக்கெல்லாம் மசியாதவனாக இருக்க வேண்டும்.

அர் :—இவ்வளவுதானே! அதற்கேற்ற ஆளை இதோ தருகிறேன்,

என்று சொல்லிவிட்டு வெளியே சென்றான். சற்றுநேரத்தில் ஒரு ஆளுடன் திரும்பினான்.

வந்தவன் பெயர் கிர்மாடன். பரம திக்குவாயன். "ஆம்" என்று சொல்லுவதற்குக் குறைந்தது ஒரு டஜன் "ஆ"வாவது பீடிகை போட்டால்தான் "ம்" தொடரும். இல்லாவிட்டால் திறந்த வாய் திறந்தபடியிருக்கும், சப்தம் மாத்திரம் வராது.

அவனையே சரியான ஆளென்று தீர்மானித்து நியமித்துவிட்டான் மஜாரன். மாதச் சம்பளம் நூறு பிராங்.

VI

கிர்மாடன் அர்த்தாங்கனின் பரம சிஷ்யன். அவனுக்கு ஜோடியாக இன்னொரு ஆளையும் காவலுக்கு அனுப்பினான் அர்த்தாங்கன். இருவருமாகக் கொண்டாவுக்குக் காவல் செய்தனர்.

கிர்மாடன் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை. கொண்டாவின் தமாஷ்கள் அவனிடம் கொஞ்சம்கூடப் பலிக்கவில்லை. சிறையில் கிர்மாடனை எல்லோரும் ஊமை என்றுதான் அழைப்பார்கள். அவ்வளவு கடுமையான மௌனத்துடன் காவல் செய்தான்.

கொண்டாவின் கொட்டம் அடங்கிவிட்டது. கிர்மாடனின் காவல் உறுதி கொண்டாவை கட்டிப்போட்ட கன்றாக ஆக்கிவிட்டதோ என்று தோன்றியது. இதையெல்லாம் கேள்விப்பட்ட மஜாரனுக்குப் பரம சந்தோஷம். முதல் மாதம் இப்படிக் கழிந்தது.

அடுத்த மாதம் கொண்டாவை, சிறையில் வேறொரு விசாலமான பகுதியில் வைத்தான் மஜாரன். ஆனால் அங்கும் கிர்மாடன் தான் காவல். அதற்காக கொண்டா கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் கிர்மாடன் அடிக்கடி கண்ணாலும் கைச் சாடையாலும் அபினயங்களாலும், ஏராளமாகப் பேசுவான். அந்தப் பேச்சில்லாப் பேச்சைக் கொண்டா தான் அறிவான். இப்படி நான்கு மாதங்கள் ஆனதும் கொண்டா ஒழுங்கிற்கு வந்து விட்டதாகக் கருதி, மஜாரன் அவனுக்கு ஜயிலுக்குள்ளேயே போதிய சுதந்திரம் அளித்தான். கிர்மாடன் கொண்டாவைக் காக்குமட்டும் மஜாரனுக்குக் கவலையில்லை. ஆனால், மற்றக் காவலரும் ஒற்றரும் கிர்மாடனைக் கவனிப்பர். கிர்மாடனைக் காப்பவன் விழித்த பேர்வழி; மஜாரதாஸன். அவனே கொண்டாவுக்கு அருகிலுள்ள ஓட்டலில் உணவுவாங்கி வருபவன். அவனுக்கு "ஷாம்பைன்" என்னும் திராக்ஷ ரஸத்தின் மேல் உயிர்.

VII

இன்று கொண்டாவும் கிர்மாடனும் கண்ணுக்குக் கண் பேசுகின்றனர். மாலை 6-மணிக்குக் கொண்டா வழக்கம்போலப்

... வாயில் ஒரு ரொட்டித்துண்டை யடைத்து ...

பந்தாடினான். அன்று பந்து சிறைச் சாலைச் சுவரண்டையே போய் விழுந்தது. கிர்மாடன் அதை அங்கிருந்து உள்ளே எற்றிக் கொண்டிருந்தான். ஒருமுறை கொண்டா சிறைச் சுவருக்கருகே போய் சுவருக்கப்பால் விர்ரென்று மேலேறி விழும்படிப் பந்தை உயர எற்றினான். அதை யெடுக்கச் சுவரேறும்போது கிர்மாடன் பற்றிக் கீழே யிழுத்துவிட்டுத் தான் ஏறி பத்து நிமிஷம் தாமதமாகப் பந்தை எடுத்துக்கொண்டு கொண்டாவுடன் நேராகச் சிறைச்சாலைக்குள் ஓடினான்.

அச்சமயம் மற்றொரு காவற்காரன் சாப்பாடு கொண்டுவரச் சென்றான். கிர்மாடன் தான் கொண்டுவந்த பந்தைப் பிரித்து உள்ளிருந்து ஒரு கடிதம் எடுத்துத் தந்தான். கொண்டா அக்கடிதத்தைப் படித்தான் :—

"புதன்; மாலை 6 மணி; எல்லாம் தயார்" அர்த்தாங்கன் கையெழுத்தைக் கொண்டா கண்டு மகிழ்ந்தான். சுவருக்கப்புறம் அன்று அர்த்தாங்கனே மாறுவேடம் போட்டுக் கொண்டு நின்றான். தான் வருவதாக அறிவிக்கவே, கிர்மாடன் பந்தைச் சுவருக்கப்பால் எற்றும்படிக் கொண்டாவுக்குச் சாடை காட்டினான்.

VIII

கொண்டாவுக்குச் சாப்பாடு தயாரிக்கும் ஓட்டலில் இன்னொரு புதிய வேலைக்காரன் வந்து சேர்ந்தான். அவன் கொண்டாவுக்குப் புதுவகையான ரொட்டி செய்தான். அந்த ரொட்டி சுமார் ஓரடி நீளம் நாலங்குலம் அகலமிருக்கும். அந்த ரொட்டியுடன் மூன்று ஷாம்பைன் புட்டிகளும் இன்னும் பலவகைப் பலகாரங்களும் தயாரித்து, ஒரு அழகான பெட்டியில் வைத்து சிறைச்சேவகனிடம் அனுப்பினான். சிறைச்சேவகன் பெட்டியை நன்கு சோதித்த பிறகு கொண்டாவிற்கு அதைக் கொண்டுபோனான்.

சாப்பாடு வந்தவுடன் கொண்டா சாப்பிட உட்காரவில்லை. அதைக் கொண்டு வந்த காவலாளியிடம் பேச்சுக் கொடுத்தான். "இன்று எனக்குப் பசியே யில்லை," என்று ஆரம்பித்தான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய க்ஷேமலாபங்களைப் பற்றிக் கேட்டான். கடைசியாய் அந்த ஏழைச் சிப்பாயியின் கஷ்டங்களுக்காக ரொம்ப அனுதாபப் பட்டு "அடடா! உன்னைப் போன்ற ஏழைகள் குளிருக்குத் துணிகூடச்சரியாக வாங்க முடியாதல்லவா?" என்று கவலையோடு சொன்னான் கொண்டா. கடைசியாய் ரொம்பத் தந்திரமாகப் பேசி அந்தக் காவலாளிக்குத் தன் உடைகளைத் தானமாகக் கொடுத்து அவற்றை உடனே அணிந்துகொள்ளச் செய்தான். காவலாளியின் பழைய உடைகளைக் கழற்றிக் கட்டித் தன் அறையில் வைக்கச் சொன்னான்.

பிறகு தனக்கு உடம்பு சரியில்லை யென்றும், ஆகையால் ஷாம்பையின் புட்டிகளை அவனே எடுத்துக் கொள்ளலாமென்றும் சொன்னான். காவலாளியின் சந்தோஷத்திற்குக் கேட்கவேண்டுமா? ஆவலுடன் இரண்டு புட்டிகளை மண்டினான். அது தான் சமயமென்று கொண்டா ரொட்டியைப் பிட்டான். அதில் முழ நீளம் வாள், பளபள வென்றிருந்தது. அதைக் கையில் உறுதியாகப் பிடித்துக் கொண்டான். காவற்காரன் உடையைத் தான் போட்டுக் கொண்டான். சிறைக் கதவைத் திறந்தான். அச்சமயம் காவற்காரன் கொண்டாவை எதிர்த்தான். அவனை ஒரு தள்ளுத் தள்ளி "உன்னைக் குத்திவிடுவேன் வாளால். பேசாமல் விழுந்துகிட" என்று மிரட்டிக் கதவைத் திறந்து கொண்டு பளிச்சென்று வெளியே தாவிக் குதித்து மறைந்தான் கொண்டா. காவற்காரன் குடி மயக்கத்தில் "அரெ ரெ ரெ........" என்று உளறினான்.

சிறைச் சுவரில் ஒரு ஏணியிருந்தது. அதில் ஏறினான் கொண்டா. கொண்டா ஏறியதும் ஏணியைக் கயிற்றால் வெளிப்புறம் இழுத்துக் கொண்டு போனான் ஒருவன். கொண்டா சுவரேறிக் கீழே குதித்

ததும், ஆங்கொருகுதிரை தயாராயிருந்தது: அதில் ஏறி ஒரு பர்லாங் சென்றதும் ஒரு படை தயாராயிருந்தது.

கொண்டாவை இவ்வாறு தப்புவித்து, கிர்மாடன் சிறைக்குள் வந்தான். அங்கே காவற்காரன் குடி வெறியில் உளறிக்கொண்டிருந்தான். அவன் கையைப் பின்னல் பிடித்துக்கட்டி, வாயில் ஒரு பெரிய ரொட்டித் துண்டை அடைத்து விட்டுச் சிறை வாசலில் வெகு உஷாராக நின்றான் ஊமை. சிறையை மேற்பார்க்கும் உத்தியோகஸ்தன் இரவு எட்டு மணிக்கு வந்தான். கிர்மாடன் அவனுக்குத் தாழ்ந்து சலாம் போட்டான்.

உத் : ஆள் பத்திரமா யிருக்கிறரா ?
ஊமை : குகுகுகுடி வெவெவெவெவெறி....
உத் : உஷாரா யிரு............

ஊமை : சிசிசிசிறை புபுபுபூட்டி.......
உத் : போதும் உன் பிரசங்கம். ஆள் கவனம்.

ஊமை : பெ பெ பெ பெபேசமுடியுமா....
உத் : போதும் பெ பெ பெ........

உத்தியோகஸ்தன் சிறையை எட்டிப்பார்த்தான். அங்கே கொண்டாவைப் போலச் சட்டை போட்டு ஆள் குடிவெறியில் மயங்கிக் கிடந்தான். 'அவனே கொண்டா' என்றெண்ணிச் சென்றான் உத்தியோகஸ்தன்.

நடு இரவு மணி யடித்தது; கிர்மாடன் காவல் காக்கும் நேரம் அத்துடன் தீர்ந்தது; ஊமை சுவரில் ஏதோ எழுதினன். உடனே ஓடிச் சென்று புறமதிலுக் கருகே நின்றான். வெளியே "உஷ்ஷ்!" என்று சீழ்க்கை கேட்டது. உடனே உடும்பு மாதிரி சுவரேறிக் கீழேயிறங்கியதும் அங்கொரு குதிரையிருந்தது. அதில் ஏறிச் சிறிது தூரம் சென்றதும், "நேராகப் போவோம்" என்றொருவன் சொல்லி அருகே வந்தான்; யாரது ? அர்த்தாங்கனே !

ஊமையும் அர்த்தாங்கனும் சேர்ந்து கொண்டாவை இவ்வாறு விடுவித்தனர். ஒட்டலிற் புகுந்து புதிய ரொட்டி செய்து உள்ளே வாளை வைத்தனுப்பியது யார் ? அர்த்தாங்கனே.

அன்றிரவே கொண்டா பெரும் படை திரட்டிக் 'கௌவாங்கல் போரைத்'தொடங்கினன். கல்லுடன் குண்டும் சேர்ந்தது.

IX

"கொண்டா எப்படி சிறை தப்பினன் ; பிடி அந்த கிர்மாடனை ; அவ்வளவு அஜாக்கிரதை யாயிருந்த அவன் முழியை வாங்கு" என்று சீறி மஜாரன் சிறைக்கு வந்தான். கொண்டாவின் அறை வெளியே பூட்டப் பெற்றிருந்தது. "நாட்டை விட்டுப்போடா, இத்தாலிய மூடா!" என்று கரியால் எழுதியிருந்தது. மஜாரன் ஊழிக்கனல் போலக் கொதித்தான். உள்ளே எட்டிப் பார்த்தான். "அதோ இருக்கிறனே கொண்டா ?" என்றான். சிறையைத் திறந்து உள்ளே சென்றான். பார்த்ததென்ன ? கொண்டா சட்டையைப் போட்டுக்கொண்ட காவற்காரன் பேந்தப் பேந்த முழித்தான். வாயிலே தொண்டை மட்டும் ஒரு பெரிய ரொட்டி அடைத்திருந்தது.

மஜா : எங்கே ஊமை ?

காவற் : உ உ உ .... உ ("முழ நீளம்" என்று கையைக் காட்டினன்). சேவகன் சட்டையை யவிழ்த்தான் ; வாயிலுள்ள ரொட்டி விலக்கப்பட்டது. கொண்டா சிறை தப்பிய விதத்தைச் சேவகன் சொன்னன்.

மஜா : ஊமை எங்கே ?
காவற் : தெரியாது.

யாருக்குந் தெரியாது. அதோ கொண்டாவின் பக்கத்தில் இருந்துகொண்டு எதிரிகள் மீது 'விண் விண்' என்று கல் வீசுகிறனே அவனே ஊமை. கௌவாங்கல் கலகம் அன்று ஊரைக் கலக்கியது. மஜாரன் உயிர் துடித்துக்கொண்டிருந்தது. அப்போது அர்த்தாங்கன் ஒருகடிதம் கொண்டுவந்தான். அதை ஆவலாகப் படித்தான் மஜாரன்.

"இத்தாலியிலிருந்து வந்த மஜாரன் இத்தாலிக்கே போகவேண்டியது. பிரான்ஸை நிர்வகிக்கச் சுதேசிகள் உள்ளோம். அவரவர் தாய் நாட்டை அவரவர் நிர்வகிப்பதே இயல்பு; எம் வீட்டு நலம் எம்மவருக்கே உரியது. மஜாரரே! உமது வீட்டைப் பார்க்கச்செல்லும். ழாந்தார்க்கைப் பெற்ற பிரெஞ்சுச் சமூகம் ஒரு நல்ல பிரெஞ்சு மந்திரியைத் தேர்ந்தெடுக்கும். பிரான்ஸு பிரெஞ்சுக்காரருக்கே."

போதுஜனம்.

எங்கள் மாந்தோப்பு

'ஜோதி'

1\. மாலைப் பொழுதழகு வீறிநின்றதும்
மாமரத் தோப்பினிலே தென்றல் அசையச்
சோலை வளத்தைவிழி கண்டு களிக்கத்
துன்பம் மறந்துடலில் தண்மை புகவே
வேலை மிகுதியினல் வந்த வருத்தம்
விட்டுப் பறந்தொளிக்க மேவி யிருந்தேன் ;
சாலைப் புழுதியிலே சந்தை யிரைச்சல்
சற்று கிலுமவ்விடம் சார்ந்த தில்லைகாண்.

2\. பூங்கா வனத்திடையே செய்குன் றத்திலே
பூமணம் வீசவங்கே ஊற்றுப் புனல்தான்
தேங்காமல் ஓடிவர அள்ளிக் குடித்தே
சிரித்துப் பொழுதுபோக்கும் வாழ்க்கை அறியேன்
ஏங்காம லேயிருக்க நெஞ்சம் எண்ணினல்
எங்கள்மாந் தோப்பினிடம் சரண்புகு வன்யான்
பூங்காவும் செய்குன்றமும் இல்லையென் றலும்
பூரிக்கும் இன்பத்திலே குறைவு வருமோ ?

3\. பாட்டனர் நட்டுவைத்த பழைய மாமரம்
பழுத்துக் கனிந்துநிற்கப் பார்த்திருப் பீரேல்
கூட்டுக்குள் ளேபுகுத்திக் கொஞ்சுங் கிளிபோல்
கோலிய வேலிக்குள்ளே பட்ட ணத்திலே
நாட்டிய நந்தவனம் என்னத்துக் காகும் ?
நல்ல திதுவெனவே நாடிடு வீரே.
ஏட்டில் எழுதிவைப்ப தன்று ; கண்ணிலே
எழுதி மனத்தினிலே தீட்டு வதுவாம்.

4\. தென்ன மரமடர்ந்த கூட்டத் திடையே
சேருங் கமுகமரம் கொத்துக்கொத் தாக
வன்னக் குலைகளீன்று நிற்ப துவுமவ்
வானப் பறவையதைக் கொத்து வதுமே
இன்னமென் னெஞ்சிற்படம் மாட்டி விட்டன
இத்தனை காட்சியும்நீர் கண்டனி ரென்றல்
என்ன பயன்பணத்தைக் கொட்டி நகரில்
இயற்றும் பொழில்களென எண் ணுதல்
திண்ணம்.

ஸிம்லாவின் சிவபுரி

'ராஜா'

ஸிம்லாவிலிருந்து சுமார் ஆறு மைல் தூரத்தில் மஷோப்ரா என்ற பெயருள்ள இடம் ஒன்று இருக்கிறது. இது ஸிம்லாவைவிட சுமார் அறுநூறு அடி உயரம். ஆகையால், ஸிம்லாவைவிட அதிகக் குளிராயிருக்கும். ஸிம்லாவின் கானலேயும் கூடத் தாங்க முடியாத பல துரைமார்களும் வைசிராயும் விடு முறை நாட்களில் இங்கு வந்து தங்கிச் செல்லுவது வழக்கம்.

இந்த இடத்திலிருந்து அரை மைல் தூரத்தில் தானிருக்கிறது மேலே குறிப்பிட்ட சிவஸ்தலம். இங்குள்ள சிவன் கோயிலேச் சுற்றி உள்ள ஊருக்குப் பண்டைக் காலத்தில் சிவபுரி என்ற பெயர் வழங்கிவந்தது. நாளடைவில் இது சிப்ரி என்று திரிந்து கடைசியாய் இப்போது சிபி என்று ஆகியிருக்கிறது.

இந்த ஊர் கோட்டி சமஸ்தானத்தைச் சேர்ந்தது. இந்த சமஸ்தானதிபதிக்கு ராஞ 'என்ற பட்டம் உண்டு.

சிபியில் வருஷத்துக்கு ஒரு முறை உற்சவம் நடக்கிறது. இந்த உற்சவம் மதசம்பந்தமுடையது போல அரசியல் விசேஷமுமுள்ளது. இந்த உற்சவம் இரண்டு நாட்கள் தான் நடக்கிறது. இரண்டாவது நாள் சகஜமாக சர்க்கார் காரியாலயங்கள் மூடப்படுமாதலால் ஸிம்லாவிலிருந்து ஏராளமாக ஜனங்கள் வருவார்கள்.

ராஞ இந்த சமயத்தில் வைசிராய்க்கும், பஞ்சாப் மாகாண கவர்னருக்கும் இதர உயர்தர அதிகாரிகளுக்கும் ஒரு விருந்தளிப்பார். வைசிராய் முதலியவர்களும் தவறாது வந்திருந்து ராஞவை கௌரவிப்பார்கள்.

திருவிழாநடக்குமிடம் மிகமிக ரமணீயமானது. ஒரு மலேயின் அடிவாரத்தில், தியோதார், ஒக், பைன் முதலிய மரங்கள் சூழ, சூரிய வெப்பம் சிறிதும் உறைக்காத குளுமை நிறைந்த இடம். ஓர் புறம் சதா சலசலவென்ற இன்னிசை யெழுப்பும் ஓடை ஒன்று ஓடுகிறது.

சாதாரண நாட்களில் இங்கு மனிதர்களேயே காணவியலாது. அந்த சமயங்களில் துறவிகளும், முனிபுங்கவர்களும் ஆசிரமம் அமைத்துக் கொள்வதற் கேற்ற இடம் இதுவென்று தோன்றும். சில இடங்களில் அடர்ந்த மரங்களுக்கடியில், குடிசையேதுமின்றி வசிக்கும் சாதுக்கள் சிலர் காணப்படுகின்றனர். இவர்கள் குளிர் காலத்திலும் பனியிலும் கூட அங்கேயே மரத்தடியில் தங்குவதாகக் கூறப்படுகிறது.

உற்சவ காலமாகிய இவ்விரண்டு நாட்களிலும், ஸிம்லாவிலிருந்து அனேக சிறு கடைகளும், "வை ராஜா வை!" என்று லாட்ரிகளும், வந்து குவிந்து விடுகின்றன. இவ்விடத்திலிருந்து, திபத் சுமார் 200 மைல் தூரத்திற்குள்ளே தான் இருப்பதால், நடுவிலுள்ள உயர்ந்த மலேகளேக் கடந்து, ஜிப்சி கூட்டத்தாரைப் போல், மணி, சிறு கிண்ணங்கள், கூடை முதலியவை விற்பனேக்குக் கொண்டு வந்திருக்கும் திபத்தியர்களேயும் இங்கு காணலாம்.



சிபிவிழாவின்போது கலியாணச் சந்தைக்கு வரும் சில பர்வத குமாரிகள்

சிபி உற்சவத்தில் கடை வைத்திருக்கும் ஒரு திபத்திய ஸ்ரீமதி.

இக் கேளிக்கைக்கு, ஸிம்லாவைச் சுற்றி 40, 50 மைல் தூரத்திற்குள் வசிக்கும் மலே வாசிகள் எல்லாம் 5, 6 நாட்கள் முன்னதாகவே கிளம்பி குஞ்சு குழந்தை குடும்பங்களுடன், கால் நடையாகவே நடந்து வருவார்கள். குளிர் காலமாகிய ஐந்து மாத காலம், வெளிக்கிளம்ப முடியாமலும், தமது நண்பர்களேச் சந்திக்கக் கூடாமலும், சிறையில் அடைபட்டு கிடப்பதைப் போல் இருந்த இம்மலே வாசிகளுக்கு மறுபடியும் தமது பழய நண்பர்களேயும், பந்துக்களேயும் காண்பதில் உண்டாகும் ஆனந்தத்தை விவரிக்கச் சிறிதும் இயலாது.

இவ்வாறு வருபவர்களில் ஸ்திரீகளின் எண்ணிக்கை தான் அதிகமென்று கூறலாம். இவ்வினத்தைச் சேர்ந்த ஸ்திரீகளின் அழகே அழகு! சாதாரணமாக குளிர்ந்த தேசங்களில் வசிப்பவர்கள் வெளுத்த மேனியும், சாயம் பூசப்பட்டவைகளோ எனச் சந்தேகமுறக்கூடிய சிவந்த கன்னங்களும் பெற்றிருப்பார்கள். மேலும் இவர்கள் மலேவாசிகளாதலால் கரடுமுரடான பாதைகளிலும், மேடு பள்ளங்களிலும் தினமும் சலிப்பின்றி நடப்பதினல், சிறந்த தேக புஷ்டியும், கட்டுத்தளராத தேகமும் உடையவர்கள்.

இந்தப் பிராந்தியத்தில் வசிக்கும் இந்தப் பர்வத குமாரிகளின் விவாகம் இச்சுபதினத்தின் போதுதான் நிச்சயிக்கப்படும். முன் காலத்தில் இவர்களின் விவாகங்களில் ஒரு நூதன வழக்கம் இருந்து வந்தது. இத்தினத்திலிருந்து மறு வருஷம் இவ்வுற்சவ தினம் வரையிலும் புருஷனும் மனேவியுமாக இருப்பதென்று ஏற்பாடு செய்துகொள்வது வழக்கமாம். ஒரு வருஷத்திற்குள் இவர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டால், அல்லது வேறு எந்தக் காரணங்களினலாவது அவர்களுக்கு இச்சம்பந்தம் பிடிக்காவிட்டால், மறு வருஷம் இப்பண்டிகையின் போது வேறு புருஷனே மணந்து கொள்ளலாம்.

இக்காலத்தில் இம்மாதிரியான ஒரு வருஷ ஏற்பாடு இல்லாவிடினும், அனேக விவாகங்கள், இவ்விரண்டு நாட்களுக்குள் இக்கோயிலில் நடைபெறுகின்றன. விவாகமாகாத கன்னிகைகளும், மறுமணத்தை இச்சிக்கும் ஸ்திரீகளும், நாஞவித ஆடைகள் உடுத்து, கழுத்தில் வெள்ளியினல் ஆன ஆபரணங்களும், கைகளில் வெள்ளி வளையல்களும், மூக்கில் மிகவும் கனமுள்ள வளையங்களேப் போன்ற நத்து புலாச்குகளும் பூண்டு வரிசை வரிசையாக உட்கார்ந்து இருப்பார்கள். மணக்க விரும்பும் புருஷர்கள் தமக்கு இஷ்டமானவர்களேப் பொறுக்கி எடுப்பார்கள்.

நடுவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு விஸ்தாரமான பந்தலில், ராஞவிற்காக ஒரு வெள்ளி சிம்மாசனம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் இருபுறங்களிலும், ஸிம்லாவிலிருந்து வரும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்காக ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எல்லோரும் தம்தம் ஆசனங்களில் அமர்ந்தவுடன், ராஞவும் தமது சிம்மாசனத்தை அலங்கரிப்பார். அப்போது அவர் எதிரில் பஞ்சாப்பில் பிரக்யாதி பெற்ற மல்யுத்த வீரர்கள் தமது சாமர்த்தியத்தைக் காண்பிக்கின்றனர். வில் யுத்தத்தில் தேர்ந்த மலேவாசிகளும் தமது கைத்திறமையை விளக்குகின்றனர். பாடகர்களும், நடனமாதுகளும் தம்தம் வித்தையால் எல்லோரையும் மகிழ்விக்கின்றனர்.

எங்கும் குதூகலமும் கேளிக்கையும் நிறைந்து கிடக்கும் சிபியின் காக்ஷி, இது தேவகன்னிகைகளும் அப்சரசுகளும் நிறைந்துள்ள இந்திர லோகமோ என்று ஒவ்வொருவரும் சந்தேகிக்குமாறு செய்து விடுகிறது.

சிவப்பு இந்தியர்கள்

...இரு சிவப்பு இந்திய ஸ்ரீமதிகள்...

அமெரிக்காவின் பூர்வீக குடிகளுக்கு சிவப்பு இந்தியர்கள் என்று பெயர். இவர்கள் நிறம் சிவப்பல்ல. இவர்கள் இந்தியர்களுமல்ல. ஆனால் பெயர் மட்டும் சிவப்பு இந்தியர்கள்.

கொலம்பஸ் இந்தியாவுக்குப் பதிலாக அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அப்பொழுது இந்தப் பூர்வீக குடிகள் இவருக்குத் தொந்தரவு கொடுத்தனர். கொலம்பஸ் இவர்களை ஸ்பானியர்கள் நியாய ஸ்தலத்தின் முன் நிறுத்துகையில் 'சிவப்பு இந்தியர்கள்' என்று குறிப்பிட்டார்.

சிவப்பு இந்தியர்களின் பூர்வம் சரித்திர ஆசிரியர்களின் கற்பனைக்கும் எட்டாத மர்மமாக இருக்கிறது. வெகு நாட்கட்கு முன்னர் அலாஸ்கா பகுதி ஆசியா கண்டத்துடன் இணைந்திருந்ததென்றும், இந்தோசைனுவிலிருந்து குடியேறியவர்கள் இந்தச் சிவப்பு இந்தியர்கள் என்றும் கருதப்படுகிறது. லட்சக் கணக்கான சிவப்பு இந்தியர்கள், நாகரீகம் வாய்ந்த அமெரிக்கர்களால் கொல்லப்பட்டார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. இப்பொழுது 250 பிரிவுகளைச் சேர்ந்த மூன்றரை லட்சம் பேர்தான் உயிரோடிருக்கிறார்கள்.

இவர்கள் பழக்க வழக்கங்கள் விநோதமானவை. குறிப்பிட்ட பகுதிகளில் (Reservations) தான் இவர்கள் வசிக்கலாம். இவர்களுக்கு வரியில்லை. குறிப்பிட்ட இடத்தை விட்டு வெளியேறச் சுதந்திரமும் கிடையாது. இவர்களின் முன்னேற்றத்துக்கு அமெரிக்க அரசாங்கம் இயன்றவரை உதவி செய்கிறது. தற்பொழுது பல இந்தியர்கள் ஸ்பானிய பாஷையும் ஆங்கிலமும் பேசுகின்றனர் குடிசைகளில் வசிக்கும் இவர்களிற் பலர் சிறந்த மோட்டார்களும் வைத்திருக்கின்றனர்.



...பூர்வத்தில் சிவப்பு இந்தியர்கள் இம்மாதிரிக் குகைகளில்தான் வசித்து வந்தார்கள்...



...இன்று அவர்கள் வசிக்கும் பிரத்தியேகப் பகுதியிலுள்ள வீடுகள்...

அமெரிக்க சர்க்கார் இந்த ஜாதியினரைப் பூராவாக அழிந்துவிடாதபடி பாதுகாக்கும் கொள்கையை அனுஷ்டிக்கிறது ஆனாலும் அமெரிக்க வெள்ளையர்கள் இந்தஜாதியின் பூண்டேயில்லாமல் செய்யக்கூடிய வெறுப்புடனும் அலட்சியத்துடன் இவர்களுக்குப் பல கொடுமைகள் இழைக்கின்றனர். ஆஸ்திரேலியாவின் ஆதிகுடிகளையும், ஜப்பானிய 'அய்னு' என்ற பழங்குடிகளையும்போல சிவப்பு இந்தியர்களும் தொகையில் தேய்ந்து குறைந்து கொண்டேயிருக்கின்றனர்.

Photos by: A. K. CHETTIAR U. S. A.

பரம்பரை

வியாபாரத்துறையில் அபிவிருத்திக்கு அத்யாவச்யமானது பரம்பரை கௌரவம்தான். பரம்பரைகௌரவமும் புகழும் இல்லாவிடில் அபிவிருத்தியுமில்லை.

சென்ற 30 வருஷ காலமாக மிகுந்த செல்வாக்குடன் நிர்வகித்து வந்ததன் பலனாக நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி பெரும் கீர்த்தியைத் தேடிக்கொண்டது. இன்று இக்கம்பெனி ஒரு உயர்ந்த ஸ்தானத்தை அடைந்திருப்பதன் காரணம் அதன் புகழ்தான்.

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் : கல்கத்தா

ஏஜன்ஸி நிபந்தனைகள் முதலியவைகளுக்கு எழுதவும் :

ஸப் ஆபீஸ் :
171, புதுத்தெரு,
மதுரை.

பிராஞ்ச் செக்ரிடேரி :
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைனாபஜார் ரோட், எஸ்பிளனேட், மதராஸ்.

ஸப் ஆபீஸ் :
கெம்பகோடா ரோட்,
பெங்களூர் ஸிட்டி.

நெருப்பு, மோட்டார், தொழிலாளிகளின் நஷ்ட ஈடு இன்ஷ்யூரன்ஸ் இவைகளுக்கு இதனைச் சேர்ந்த நாஷனல் பைர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியை யோசனை கேளுங்கள்


ஜோதிஷபானு E. S. K. சுவாமி

Annual Rememberancer

Precise Predictions ! Accurate Calculations !

For ANYTHING IN ASTROLOGY

ஜோதிஷபானு E. S. K. சுவாமியின் தெளிவான பலன்கள். L. V. S. மணி [B.A. (Hons.) Mathematics] யின் சுத்த ஸ்புட கணிதம்

மூன்று கேள்விகளுக்கு விபரமுடன் பதில்	ரூ. 1
பொருத்தம் அல்லது முகூர்த்தம் பார்க்க	ரூ. 1
ஒரு வருட அந்திராந்திரப் பலன்	ரூ. 2
ஒரு ஜாதகம் பாவகஸ்புடத்துடன் கணிக்க	ரூ. 2
ஆயுள்வரை பொதுப்பலன்	ரூ. 10

பிறந்த ஊர், நேரம் & தேதி அல்லது ஓர் நம்பர் தேவை

பிரஹத் ஜோதிஷ நிலையம்,
71, அக்ரஹாரம், புரசவாக்கம், மதராஸ்.

கல்கத்தா ஜெனரல் ரிஜிஸ்தர் நெ. 61.

டிரேட் மார்க்கு

கிட்டப்பா நெ. 1
(டிரேட் மார்க்)
சிவபுரி புகையிலை
&
கொட்டைப்பாக்கு
சுருள் சீவலை
உபயோகியுங்கள்.

சிவபுரி புகையிலை பாக்கெட்	0 0 3
மாதிரி பாக்கெட்	0 0 1

சௌகரியத்தை முன்னிட்டு கீழ்க்கண்ட பாக்கெட்டுகளும் கொடுக்கப்படும்.

ஸ்பெஷல்	0 1 0	0 0 6	0 0 3
கொட்டைப்பாக்கு சுருள் சீவல்:—	0 1 0	0 0 6	0 0 1

வாசனை பாக்கு, நெய்யில் வறுத்த சுருள் வாசனை சீவலும், பல ரகங்களில் கொப்பரை சீவலும் கிடைக்கும்.

ரூ. 10/-வரை ஆர்டர்களுக்கு ரயில் சார்ஜ் (S.I.Ryல் மட்டும்) இலவசம்.

(பாக்கிங் சார்ஜுகள் பிரத்தியேகம்)

ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.

எப்பொழுதும் எங்களது **“அசுரா” வாசனை பாக்குத்தூளை** உபயோகியுங்கள்

A. D. சுல்தான் & கோ., கும்பகோணம்
பிராஞ்சு :—16, ஹை ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்

சினிமா வானிலோர் புது நக்ஷத்திரம்

தீண்டாமையெனும் கோரப் பேயுக்கும், ஏகநாதருக்கு மிடையே நடக்கும் சாத்வீகப்போர் மிகு சோகரசம் பொருந்தியது. நம்மையுமறியாமல் இரத்தம் கொதிக்கும் சம்பவங்கள் நிறைந்த

*

ஏகநாதர்

*

பொன்னம்பலம் பிக்சர்ஸாரின்
மகத்தான தமிழ் பேசும் படமிது

டைரக்டர்
H. S. மேதா

நடிகர்கள்
சென்னை ஷைனிங் ஸ்டார்
சோஸைடி கோஷ்டியார்

விவரங்களுக்கு
பொன்னம்பலம் பிக்சர்ஸ்
டிஸ்டிரிப்யூடர்ஸ்

திருச்சி ரோட் : : கோயமுத்தூர்

OF THE FIVE SENSES

EYE SIGHT

IS THE MOST IMPORTANT

AND

VALUABLE



So, when you feel

EYE STRAIN

Consult :

K. RATNA & Co.

OPTICIANS

(With 25 years Experience in the line)

305, ESPLANADE : : MADRAS.

"ஹேரோடின்"

மூளைக்குக் குளிர்ச்சியளித்து நரையைப் போக்கி கேசத்தை வளர்த்து அழகைப் பெருக்கும் கூந்தல் தைலம்

★

தயாரிப்பவர் :

கர்னாடிக் கெமிகல் ஒர்க்ஸ்

116, ராமஸ்வாமி தெரு, மதராஸ்.

★

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

ஜெனரல் ஸ்வதேசீஸ்

சைனா பஜார் : : ஜி. டி., மதராஸ்

இந்தியாவில் 1000 கணக்காய் சிலவாகும் புது மாதிரியான

ரோல்ட் கோல்ட்



செயின்கள்

ஐந்துவித நிறமான சிந்தடிக் கற்களினாலும் அல்லது தனி கலராலும் ஆர்டர்படி ரோல்டு கோல்டினால் செய்து உத்தரவாதமாய் அனுப்பப்படும்.

நிகளம் 24 அங்குலம்

செயின் 1-க்கு ரூ. 2-4-0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

தி யூனிவர்ஸல் ஏஜன்ஸி

தபால் பெட்டி நெ. 28, : : சென்னை

எங்களுடைய நோக்கமுமிதுவே!

நவீன நாகரீகத்தின்
வைர நகைகள்
தங்க நகைகள்
வெள்ளி நகைகள்
சீமைக் கமலங்கள்

வியாபாரத்தில் நாணயமும் நம்பிக்கையும் தானே பிரதானம். அந்த நம்பிக்கையில் மட்டும் எங்களுக்கு எப்பொழுதும் லக்ஷிய முண்டு.

யாவும்

இங்கே காணுங்கள்

பூர்வீக

புகழ்பெற்ற

சுவர்ண மாளிகை

போன் நெ. 81.

தந்தி : " ராஜா "

P. A. ராஜு செட்டியார் & Bros.

ஷராப் வியாபாரம், கோயமுத்தூர்.

செதுக்குளிச் சித்திரங்கள்

இன்று பத்திரிகைகளில் ஏராளமாகப் படங்கள் வெளிவருகின்றன. முக்கியமான செய்திகளையும் படங்களாகவே வெளியிட முயலுகின்றார்கள். விக்ஞான சாஸ்திர ஆராய்ச்சிகளின் பயனாய்ப் போட்டோ படமெடுக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. அப்படி எடுத்த போட்டோக்களை, அல்லது ஒரு சைத்திரிகர் எழுதிய படங்களை, ரஸாயன முறைகளால், துத்தநாகம், பித்தளை, அல்லது தாமிரத்தகடுகளில் அச்சடித்து, அவற்றைச் செதுக்கிச் சீர்படுத்தி, அச்சு எழுத்துக்கள்போல, அச்சுப்படங்கள் தயாரிக்கிறார்கள்.

இந்த விக்ஞான, ரஸாயன முறைகளெல்லாம் கண்டுபிடிப்பதற்குமுன், அச்சுப்படங்கள் தயாரிக்கக் கையாண்ட முறைதான் "கட்டை வெட்டு" என்பது.

சாதாரண மரத்தைவிட அதிக உறுதியும் நெருக்கமும் உள்ள மரக்கட்டைகளை எடுத்து, சித்திரக்காரர் தானேயோ, அல்லது தானெழுதிய படத்தைக் கொண்டு தேர்ந்த தச்சர்கள் மூலமோ, அந்தக் கட்டைகளிலேயே படத்தைச் செதுக்கிவிடுவார்கள். அந்தக் "கட்டை வெட்டை" அச்சில் வைத்து அச்சடிப்பார்கள். அச்சடிக்கும் காலம் ஆரம்பிக்குமுன், நமது முன்னோர்கள் தங்கள் சித்திர ரஸனையை பெரும் பாறைகளிலும், கற்களிலும் செதுக்கி நிரந்தரமாக்கிவிட்டுப் போயிருக்கிறார்கள். இந்தக் கல்சித்திரங்களையும், கட்டை வெட்டுகளையும் செதுக்கும் சிற்பி, சித்திரக் கலையிலும் நிபுணனாக இருந்தாகவேண்டும்

நவீன விக்ஞான அறிவின் பயனாக, தினசரி, ஏராளமான அச்சுப்படங்கள் (Blocks) தயாராகிக்கொண்டேயிருக்கின்றன. ஆயினும், 'கட்டை வெட்டுச்" சித்திரங்களின் சிறப்பும், அழகும் இன்றும் குறையாமலே யிருந்து வருகின்றன. காரணம் அவை சித்திர, சிற்பக்கலைகளின் நேரடியான பலன்கள் என்பதுதான்.

கட்டை வெட்டுகளுக்கு வீரை என்ற ஜாதிமரத்தின் கட்டைகள்தான் ரொம்ப ஏற்றவை. வீரமரம் நம்நாட்டுக் காடுகளில் எவ்வளவோ அகப்படுகிறது. இதன் கட்டை, கனம், உறுதி, அணுநெருக்கம் ஆகியவற்றில் சாதாரண இதர மரங்களைவிடச் சிறந்திருக்கிறது. அதனாலேயே இதில் சித்திரம் செதுக்குவது ரொம்ப சிரமசாத்தியமாகவும் இருக்கிறது.

இந்தக் கட்டைகளை அளவாகச் செதுக்கிவைத்துக்கொண்டு, சிறிய செதுக்கு உளி, அரைவட்ட உளி, ஊசி உளி போன்ற கருவிகளைக்கொண்டு, தேர்ந்த சித்திரக்காரர்கள் சித்திரங்கள் செதுக்குகிறார்கள்.

அடுத்த பக்கங்களிலுள்ள "கட்டை வெட்டுகள்" சென்னை ஆர்ட் ஸ்கூல் (சித்திரக் கலாசாலை) மாணவரான ஸ்ரீ.டி. வி. ராமச்சந்திரனது செதுக்குளிச் சித்திரங்கள்.

நமது திருஷ்டி வியாபகத்தில்படும் அழகிய காட்சிகள் அப்படி அப்படியே மனதில் பதிவாகிவிடுகின்றன. பிறகு வேறொரு சமயம் அந்தக் காட்சிகள் கனவுகள்போல மனக்கண்முன் எழுவது நம் ஒவ்வொருவருக்கும் அனுபவம்.

அத்தகைய கனவுபோன்ற காட்சிகளை, சிற்றுளிகளால், ஸ்ரீ ராமச்சந்திரன், இந்தக் கட்டை வெட்டுகளில் பதிவு செய்திருக்கிறார்.





பச்சை மோதிரம்

*

1

“அடா டா டா! என்ன மழை, என்ன மழை! சுத்தமாய்த்தள்ளவேயில்லை; வீடு பூராவும் ஒரே ஒழுக்கு. என்ன இடி இடிக்கிறது! ஐப்பசி மாதம் அடைமழை என்பார்களே, சரியாய்த் தானிருக்கிறது. குழந்தைகள் துணி மணி ஒன்றுகூட உலரவில்லை; புடவை ஒரே தெப்பல். இந்தப் புடவைகளே உலரமாட்டேனென்கிறது. இன்னும கதரவேண்டுமாம். கதர்! துலம் துலமாய் ரெட்டையும் ஜமக்காளத்தையும் வாங்கினால் யாரால் தூக்கி உடுத்த முடியும். சொல்லப்போனால் பொல்லாப்பு. நான் கதர் உடுத்திக் கொள்ள வில்லையேன்னுதான் ‘சுய ராஜ்யம்’ வராமெ, வழியிலே நின்று கொண்டிருக்கிறதாக்கும்! இதைத் தவிர மீதியெல்லாம் பண்ணினால் போறலையாக்கும். போன வருஷமாவது தேவலை. இவ்வளவு மழை யில்லை. இந்த வருஷம் ரொம்ப அக்ரமம். இந்த மாதிரி ‘சொட்டச் சொட்ட வந்தேன் தோழி கதவைத் திற’ ன்னு நாலு நாள் வேலை செய்தால்—அப்புறம், அப்புறம் தான். யாரால் தான் சாத்யம். என்னால் முடியவே யில்லை,” என்று நிறுத்தினாள் செல்லம்.

“ஆய்விட்டதோ இன்னும் பாக்கி உண்டோ” என்றேன்.

“ஆமாம், உங்களுக்கென்ன; ஏதடா பாவம், ஒண்டியாய் குழந்தைகளுடன் அலைகிறாளே என்று எண்ணமிருந்தால் தானே. உட்கார்ந்த படியே பரிகாசத்துக் கொன்றும் குறைவில்லை. ஆகா! போருமே சவரணை” என்று முகத்தைக் கோணிக் கொண்டாள்.

“ஏன் ஒண்டியாய் திண்டாடுவானேன்? எல்லாம் நீயாகப் பண்ணிக் கொண்ட வியவகாரம் தானே. அம்மா இருந்தால் உன்னை இவ்வளவு அலையவிடுவாளா? மடி விழுப்பு என்று நன்றாய்த் தான் உன்னை உட்காரவைத்து சிசுரூஷை செய்து கொண்டிருந்தாள். நீயாகத்தானே வீண்பழி சுமத்தினாய்? ஒன்றும் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் நான் தவிக்கிறேன். நீ ஆனாலும் அநியாயம். அம்மா காதிலும் படும்படி சொல்லி விட்டாய். என்னதானிருந்தாலும் பெரியவர்களை அப்படி மனம் நோகப் பேசலாமா?”

“ஆகா! நான் முதலில் சொன்ன பொழுது என்னை வெருட்டினீர்கள். குட்டியம்மாளிடமிருந்து, நீ அனுப்பிய ரூபாய் ஐப்பதும் வந்து சேர்ந்தது என்ற காகிதத்திற்கு என்ன சொல்லுகிறீர்கள்? உங்களை அறியாமல் அம்மாவுக்கு திடீரென்று ஐம்பது ரூபாய் ஏது? அதை யோசித்துப் பாருங்களேன். தவிர, நான் மோதிரத்தைப்பற்றி சந்தேகப் படுகிறேனென்று தெரிந்ததும், தைரியமாய் கேட்கிறது தானே. துலா காவேரி ஸ்னானத்துக்குப் போகிறே னென்று சொல்லிக் கொண்டு பெண்ணகத்தில் போய் ஏறிக் கொள்வானேன்? நானும் பொறுத்துப் பொறுத்துத் தான் பார்த்தேன். மாதம் தவறாமல் அப்பளமும் வடாமும் அவளும் யார் போனாலும் டப்பி டப்பியாய் கொடுத்துக் கொடுத்து வசங்கண்டு போயிற்று. இங்கே இடுவதற்கு கூலிக்காரி நான் ஒருத்தி இருக்கிறேனே இல்லையோ? பெண் கைகளைத்து விட்டால் தான் என்ன? இப்படி ஒரே யடியாய் பிள்ளை வீட்டை மொட்டை யடிக்கிறதுண்டா? வீட்டில் ஒரு தகரம் பாக்கி கிடையாது. பொரி விளங்காய் வேணுமென்று ஆசைப் பட்டாளாம். மாவை ஒரு டப்பி, திணியத் திணிய கோடியாத்து அம்மாளுவிடம் கொடுத்தனுப்பினார். ஏன் அந்தப் பொரி விளங்காயை இங்கேயே உருண்டையாய் பிடித்தால், நானும் என் குழந்தைகளும் தின்றால் உடம்புக்காகாதோ? உங்களுக்கென்னமோ உலகத்திலில்லாத அதிசயமாய் அம்மாவைப் படைத்து விட்டதாக எண்ணம். இந்தச் சின்ன சங்கதிகளிலேயே இவ்வளவு சூதும் வினையுமானால் மோதிரத்துக்கு நான் சொன்னது குற்றமாய் விட்டதோ? தலைவாரிக் கொள்ளும் பொழுது கழற்றிப் பக்கத்தில் வைத்துக் கொண்டது; வேலைக் காரியா, குழந்தையா ஒரு பிராணி வரவில்லை. எங்கே போய் விடும்? அது தான் போகட்டும்! ஐம்பது ரூபாய் எப்படி முளைத்தது? அதுக்கேன் பதிலில்லை?”

> ## ஸ்ரீமதி “குகப்ரியை”
>
> தமிழில் எழுதும் வெகு சில பெண்மணிகளில்
>
>
>
> ஸ்ரீ “குகப்ரியை” சிறந்து விளங்குகிறார். அவர் எழுதிய ஒரு நாவலுக்கு ரூபா 500 பரிசளிக்கப் பட்டதென்பது பலருக்குத் தெரிந்திருக்கும். இங்கு எழுதியுள்ள **பச்சை மோதிரம்** அவரது எழுத்துத் திறமையை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

“சரி, சரி. இதென்ன தலை வேதனை. போதும், நிறுத்துன்னா நிறுத்து. மற்ற சமாச்சாரங்கள் ஏதோ பெண் என்ற சபலத்தினால் செய்கிறாள் என்றால், அதற்காக ஒரே யடியாய் திருட்டுப் பட்டம் கட்டுகிறதா? அதோடு விட்டாயா? நான் ‘கேம்ப்’ போய் வருவதற்குள் ஊரைவிட்டே ஓட்டியும் விட்டாயே. என்னா நீலியடி நீ! ஒண்டியாய் அலைகிறாளாம்! நன்றாய் அலையேன்; யாருக்கென்ன?”

“ஆகா? குறைச்சலில்லை. வேணுமென்று நான் ஆசைப் பட்டு கேட்டே னென்று அப்பா எவ்வளவோ பொறுக்கி பொறுக்கி வாங்கினார் நடுப் பச்சையை. அருமையாயிருந்தது மோதிரம். நிமிஷமாய்த் தொலைந்தாயிற்று. நீங்கள் பணம் போட்டு வாங்கியிருந்தால் தெரியும். எப்பேர்ப்பட்ட ப்ளூஜாகர் வைரம்! இரண்டு கல்லும் இரண்டு நக்ஷத்திரம் மாதிரி ஜொலிக்குமே.”

“சரி, சரி, நிறுத்தப் போகிறாயா இல்லையா? குழந்தைகளுக்குப் போர்த்தி யிருக்கிறதா பார்” என்றேன்.

“அம்மாடி! இப்பொழுது தான் உட்கார்ந்தேன். உடனே எழுந்திரு என்கிறீர்கள். எப்பொழுதுமே நான் சற்றே உட்கார்ந்தால் மனஸாகாது. நீங்க மட்டும் சுகமாய் நாள் முழுக்க வெற்றிலை மென்றுகொண்டே ‘ஈஸிசேரில்’ படுத்திருக்கலாம். நான் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால், ஏதோ வீணாய்ப் போய்விட்ட மாதிரிப் பறக்கறேள். ஒன்றும் அகப்படா விட்டால் ‘வாசலில் ஏதோ சத்தம் கேட்டது போய்ப் பார்’ என்பீர்கள். நீங்கள் தான் எஜமான் என்பதை என்னிடம் காட்டாமல் வேறே யாரிடம் காட்டுகிறது” என்று முணு முணுத்துக்கொண்டே எழுந்தாள் செல்லம்.

இடியும் மின்னலும் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டே வந்தது. மழை சற்று நின்றது போல் தோன்றிற்று. காற்று “ஹோ” வென்று பலமாய் அடிக்கத் தொடங்கிற்று. காற்றுடன் கடலோசையும் கலந்து சமுத்திரமே அருகே நகர்ந்து நகர்ந்து வருவது போலவும் மரங்கள் ‘விர் விர்’ என்று சுழல்வது போலவும் ஓசை கேட்கலாயிற்று.

2

செல்லத்துக்கு இடி என்றால் நடுக்கம். இரவு முழுவதும் தானும் தூங்கமாட்டாள். பிறரையும் தூங்கவிட மாட்டாள். அதிலும் நாங்கள் குடியிருந்த வீடோ வெகு அற்புதம். கோயில் நிலங்களை குத்தகை எடுத்து, ஏலத்திலெடுத்த பனங்கட்டைகளையும், ஓடுகளையும் வைத்துக் கட்டப்பெற்ற மாளிகை. வீட்டுக்காரர் பத்து வருஷங்களுக்கு ஒரு முறை தான் மராமத்து செய்வார். அது வரையில் குடியிருப்பவர், ஏதோ பார்த்துக் கொள்ள வேண்டியது தான். ஒவ்வொரு மழைக்கும் வீடுகள் ஒரு அடி கீழே இறங்கி விடும். சுவர்கள் பூகம்ப வெடிப்புகள் போல் வெடிக்கும். குடியிருப்பவர்களுடைய ஆசிர்வாதங்கள் நடக்கும். என்ன ஆனால் தானென்ன? சொந்தக்காரருக்கு வாடகை வந்து விடும். அந்த சொந்தக்காரருக்கு இதே மாதிரி பல வீடுகள் உண்டு. ஓடு மாற்ற நேரிட்டால், இந்த வீட்டு ஓடுகளை அந்த வீட்டிற்கும், அந்த வீட்டு ஓடுகளை இந்த வீட்டிற்கும் மாற்றி விடுவார். ஓடு மாற்ற வேண்டியது தானே!

கட கட மட மட வென்று ஒரு பெரிய இடி இடித்தது.

பாவம்! இடியோசை கேட்டுச் செல்லம் நடு நடுங்கி விட்டாள்.

“காற்றடிக்குது கடல் குமுறுது கண்ணை
விழிப்பாயென் நாயகியே.
தூற்றல் கதவு சாளரங்க ளெல்லாம்
தொளைத் தடிக்குது பள்ளியிலே”

என்று பாடலானேன்.

"போதுமே பாட்டு! என்ன காற்று, என்ன கண்ட்ராவி, புயலடிக்கிறதோ என்னமோ."

"புயல் தான். நேற்றே பேபரில் போட்டிருந்தது. சொன்னால் நீ நச்சு நச்சென்று கழுத்தை அறுத்து விடுவாய் என்று தான் சொல்லவில்லை. நாகப்பட்டணம் வழியாய்த் தான் வருகிறதாம்."

"ஆமாம். பொய்யும் புளுகும்! நாகப் பட்டணம் வழியாய் ரயிலில் வருகிறதோ, கட்டை வண்டியில் வருகிறதோ!"

"நிஜத்தைச் சொன்னால் பொய் என்கிறாய். மணிக்கு இத்தனை மைல் வீதமென்று கூட கணக்கிட்டிருக்கிறார்கள். கதவைத் திறக்கிறேன், பார்."

"வேண்டாம், வேண்டாம்," என்று ஆத்திரத்துடன் கூவினாள் செல்லம். நான் ஜன்னலின் ஒரு கதவை மட்டும் திறந்தேன்.

அடாடா, என்ன வேகம்! தென்னை மரங்கள் பேயாடுவது போல் தலை சுற்றி பயங்கரமாய் ஆடிக்கொண்டிருந்தன. காற்றின் வேகத்தினால் திறந்த கதவு படீரென்று மோதிற்று. மறுபடியும் மூடினேன்.

செல்லம் தலையையும் சேர்த்துப் போர்வையை மூடியவளாய் இரு கைகளாலும் காதுகளை இறுகப் பொத்திக்கொண்டு சுருண்டு உட்கார்ந்திருந்தாள். நான் எழுந்து குழந்தைகளின் போர்வைகளை ஒழுங்கு படுத்தி விட்டுப் படுத்தேன்.

"என்ன? நீங்கள் தூங்கப்போகிறீர்களா?"

"எனக்கு தூக்கம் தலையைச் சுற்றுகிறது. உன்னைப் போல் 'கொட்டுக் கொட்டே'ன்று உட்கார்ந் திருந்தால் நாளைக்கு வேலை போய் விடும்" என்று சொல்லிக் கொண்டே போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டேன்.

3

"என்ன! எனக்கு கொஞ்சம் துணை வருகிறீர்களா?" என்று கெஞ்சினாள் செல்லம்.

"துணை என்ன? என்னால் முடியாது, போ."

செல்லத்துக்கு இந்த நெருக்கடியான சமயத்தில் தான் "அடடா, மாமியாரை வெருட்டி விட்டோமே" என்ற ஞானோதயம் ஏற்படலாயிற்று. "என்னமோ நீங்கள் இல்லாத 'பிகு' பண்ணிக்கிறீர்கள். அம்மா இருந்தால் உங்களை லக்ஷியம் செய்து யார் கூப்பிடக் காத்திருக்கிறார்கள்" என்று முணுமுணுத்தாள் செல்லம்.

"அம்மாவை வெருட்டினது நீயோ, நானோ? காகிதம் வந்தால் தானென்ன? உடனே படபடவென்று உளறணுமோ—" என்று சொல்லுகையில் "மளமள" வென்று ஏதோ முறிவது போலவும் சாய்வது போலவும் பிரமாதமான ஓசை கேட்டது. நானும் நடுங்கி விட்டேன். தெருவில் வீட்டிற்கு எதிர் வரிசையில் பெரிய கிழத் "தூங்குமூஞ்சி" மரம் ஒன்று உண்டு. அதுதான் முறிந்திருக்க வேண்டும்! வீட்டின் மேல் விழுந்தால் வீடும் நாங்களும் "சட்ணி" தான் என்று தோன்ற சுருட்டி வாரிக்கொண்டு எழுந்தேன்.

என்னை யறியாமலே என் கரங்கள் குவிந்தன. "தீனக் குழந்தைகள் துன்பப்படாதிங்கு தேவியருள் செய்ய வேண்டுகிறேன்" என்ற தொடர் என் மனத்துள் எழுந்தது. கண்களை இறுக மூடிக்கொண்டேன். "ஐயோ!" வென்று அலறியவளாய் என்னைத் தழுவி நின்றாள் செல்லம்.

4

"நல்ல வேளை. இந்தமட்டில்வீடு பிழைத்ததே" என்று ஆனந்தப்பட்டார் வீட்டுக்காரர். 'மாப்பிள்ளை தலை போனாலும் போகட்டும், பழைய நாளைய உரல் மிஞ்சிற்றே' என்று சொன்ன மாமியாரின் நினைவு வந்தது. செல்லத்துக்கு அசாத்ய கோபம். வீட்டுக்காரரை அப்படியே எரித்து விடுபவள் போல் பார்த்து, "சிரிக்கத் தான் வேண்டும்! இவ்வளவு பெரிய மரம் வீட்டின் மேல் சாய்ந்திருந்தால் என்ன ஆகி யிருக்கும்? வீடு தொட்டால் விழுந்து விடும் போலிருக்கிறது. இந்த லட்சணத்தில் வாடகைக்கு மாத்திரம் மாசம் முடிவதற்கு முந்தி இருபத்தேழாந் தேதியே ஆள் வந்து விடுகிறது. குடியிருப்பவர்கள் எப்படிச் செத்தாலென்ன? இந்தப் பாழும் ஊரில் ஒருவரில்லா விட்டால் ஒருவர் குடி வந்து விடுகிறார்கள். நல்ல வேளையாம். வீடு பிழைத்ததாம். மனிதர்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும். நம் வீட்டிற்கு பழுது வராமலிருந்தால் சரி. இந்த மாதம் வாடகையைச் செலவழித்தாவது ஏதாவது செய்யட்டுமே. இல்லாவிட்டால் வாடகையைக் கொடுக்கப் போகிறதில்லை. இவர் வாங்குகிறபடி வாங்கிக் கொள்ளட்டும், பார்க்கிறேன்" என்று உறுமிக் கொண்டே உள்ளே போனாள்.

வீட்டுக்காரர் சர்வ சாதாரணமான குரலில் மிகவும் மெதுவாய் நிறுத்தி நிறுத்தி, "இல்லே ஸார், இல்லை. என்ன! மற்றவர்களைப் போல் நான் பத்து வருஷங்களுக்கு ஒருமுறை சுண்ணாம்பு அடிக்கிறேனா? வருஷா வருஷம் பொங்கலுக்கு முன்னாலேயே ஆள் விட்டு, போனது வந்தது பழுது பார்த்து, ஒட்டரைகூட என் செலவிலேயே அடித்துக் கொடுக்கவில்லையா? அம்மா, ஏதோ ரொம்ப கோபப்படுகிறார்கள். நானும் சம்சாரி தானே. போன வருஷம் 'மராமத்து'க்கு வந்தபோது நீங்கள் தான் 'குழந்தைகளுக்கு இருமல்; இப்போ வேலை செய்யமுடியாது' என்றீர்கள். எனக்கும் கையோடு கைபாய்ச் செய்தால்தான் முடிகிறது. இல்லாவிட்டால் எங்கே, முடிகிறதா சம்சாரத்தில்? அதான் பாகவதர் கூட, சம்,சாரி டுசம் சாரி" என்று அசட்டுச் சிரிப்புடன் சொன்னார். எனக்கோ கோபம் ஒரு பக்கம், சிரிப்பு ஒரு பக்கம். ஒன்றும் பதிலே சொல்ல முடியவில்லை.

"என்ன ஸார்! பதிலே சொல்ல வில்லை. நானே இந்த மழை காலத்துக்கு முன்னே இந்தத் தூங்குமூஞ்சி மரத்தை வெட்டிவிட வேண்டுமென்று தான் இருந்தேன். ஆனாலும், அநியாயக் கூலி கேட்டான். தாம்புக் கயிறு ஒரு சுருள் வேணுமென்றான். ஏதோ வாயு பகவான் கிருபை அதுவும் லாபம். பாருங்கள்; விறகு நன்றாய் நின்று எரியும். தை பிறந்ததும் வெட்டித் துண்டு போடலாம்," என்று சொல்லியவராய் "அடே கோவிந்தா! முனியனை அழைத்துக் கொணர்ந்து சீக்கிரம் மரத்தை எடுங்கள். எலெக்டிரிக் கம்பிமேலே விழுந்து அது வேறே போய்விட்டது. அந்தமட்டும் நம்ம வீட்டு கம்பிமேலே விழல்லே. முனிஸிபாலிடி கம்பிதான்" என்றார்.

"இல்லெங்க, நம்ப கம்பி கூட பூட்டுதுங்க" என்றான் கோவிந்தன்.

"அடடா, சரியாய்ப் பார். சீக்கிரம் மரத்தை அப்புறப் படுத்துங்கள். போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லாம் கிளை கிளையாய் ஒடித்துக்கொண்டு போய் விடுவார்கள். சீக்கிரம், சீக்கிரம்" என்று அவசரப்படுத்தினார் வீட்டுக்காரர்.

5

"எப்போதும் இந்த தொல்லை தான். வாசல் மரத்தை இன்னும் எடுத்தபாடில்லை. இந்தக் குட்டிகள் ஏறி இறங்கிக் கை கால்களை முறித்து தொலைத்துக் கொள்ளப்போகிறது கள். நான் வீட்டு வேலை செய்கிறதா, குழந்தைகளை மேய்க்கிறதா? லீவுதானே. அந்த நாவலை இராத்திரி படித்தாலென்ன?" என்று சொல்லிக்கொண்டே காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தாள் செல்லம்.

வாயிற்புறத்து ரேழியில் ஏக அமளி. 'ஐயோ! அப்பா!! நான் மாட்டேன்; அடிக்கிறனே. எனக்குத் தான். நான்தானே முதலில் கண்டுபிடித்தேன்" என்று பற்பல ஸ்தாயிகளில் குரல்கள் கேட்டன. நான் படிப்பதை நிறுத்தாமல், "என்ன அமர்க்களம்! சண்டையில்லாமல் பகிர்ந்துகொள்ளுகிறதுதானே" என்று சொல்லிவிட்டு "செல்லம்! நீயாவது பார்த்து தொலைக்கப் படாதோ? என்ன இரைச்சல்; சந்தைகூட கெட்டுது. நல்ல குழந்தைகள்! தலை வேதனை; சீ, சீ" என்று சீறினேன்.

செல்லத்துக்கு அசாத்ய கோபம் வந்து விட்டது. "அடுப்பிலொன்றும் துடுப்பிலொன்றுமாக இருக்கும்பொழுதே பகிர்ந்து கொடுக்க அவசரமா? நன்றாய் கிடந்து அலைகிறதுகள்! அவர்கள் இரைச்சலை விட நீங்கள் இரைவது தான் நன்றாயிருக்கிறது. அதுகள்கூட இவ்வளவு அவசரப் படுத்தவில்லை. நீங்கள் எல்லோரையும் விட பச்சைக் குழந்தை" என்று சொல்லி முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக்கொண்டாள்.

எனக்கும் கோபம் தான்; படித்துவிட்டுக் கோபித்துக் கொள்ளலாமென்று மேலும் படிக்க, குழந்தைகள் மூவரும், ஒருவரை யொருவர் துரத்திக்கொண்டு ஓடி வந்து, என் கால் தடுக்கி ஒருவர் மேலொருவராய் விழுந்தார்கள். என் கணுக்கால் எலும்பிலும் அடி பட்டுவிட்டது. என்ன யாரென்று கூடக் கவனியாமல் அகப்பட்ட முதுகில் ஒரு அறை அறைந்தேன்.

அழுத குரலுடன் "நான்தான் முதலில் பார்த்தேன்" என்றான் சீனு.

"என்னடா அது?"

"தூக்கணங் குருவிக்கூடு," என்றான் சீனு.

"அண்ணு பொய் சொல்றான் அப்பா. கூடு இல்லே; நான் கேட்டது, அதுக்குள்ளே இருக்கிற 'குர்நாப்பட்டை".

"எதடா கூடு" என்று அவன் கையிலிருந்த கூண்டைக் கையில் வாங்கினேன்.

"வாசல் மரத்திலே இருந்தது; கோவிந்தன் கொடுத்தான்."

"சீ, சீ, ஆபாஸம்" என்று வீசி எறியப் போனேன்.

"அப்பா, அப்பா! எறியாதே. அதிலே நிறைய மின்மினும் பூச்சி இருக்குமாம். இராத்திரிலே நக்ஷத்ரம் மாதிரி மினுக்குமாம்" என்று என் கைகளைப் பற்றிக் கொண்டாள் தங்கம்.

கூண்டைத் திருப்பினேன், பளிச்சென்று மின்னிற்று. "அடியே! செல்லம், ஓடி வா, ஓடி வா" என்று ஆச்சர்ய மிகுதியினால் கூவினேன்.

"என்ன வந்து விட்டது வேலை அதற்குள்? 'காரிய மில்லாத மாமியார் கல்லையும் நெல்லையும் கலந்தாளாம்' என்கிற மாதிரி வந்து கேட்டால் ஒன்று மிராது; தெரிந்த சங்கதி தானே" என்று வெகு அலட்சியத்துடன் சொல்லிக் கொண்டே வந்தாள் செல்லம்.

"இன்னமும் மாமியாரைத்தானே கரிக்கிறாய் நீ? இந்தா உன் மோதிரம். எங்க அம்மாள்...." என்று சொல்லிக் கொண்டே மோதிரத்தை நீட்டினேன்.

செல்லம் இடைமறித்து "மோதிரமா! எங்கே யிருந்து அகப்பட்டது?" என்று கேட்டவள், என்னைச் சூழ்ந்து நின்ற குழந்தைகளையும், கையில் பாதியும் தரையில்பாதியுமாகச் சிதறிக் கிடந்த குருவிக் கூட்டையும் பார்த்து விட்டு மௌனமாகி விட்டாள்.

இருந்தாலும் அவளுக்கு தோல்வியை ஒப்புக்கொள்ள இஷ்டமில்லை. "இது தான் இப்படி யிருக்கட்டும். அந்த ஐம்பது ரூபாய் உங்களை யறியாமல் எப்படி மூளைத்......." என்று ஆரம்பித்தவள் சட்டென்று நிறுத்தி விட்டு உள்ளேபோய்விட்டாள். என் முகத்தைக்கூடப் பார்க்கவில்லை.

கண்ணன் தேவன் தேயிலை

Quality Production

கண்ணன் தேவன் தேயிலை 5,000 அடி முதல் 7,000 அடி உயரமுள்ள திருவாங்கூர் மலைத்தொடர்களில் பயிரிடப்படுகிறது. வெகு சுத்தமானதும், நல்ல வாடையும், நிறமான கஷாயமுள்ளதும், பானங்களில் சிறந்ததும், செலவில் குறைந்ததும் இத்தேயிலையே.

—: விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

கண்ணன் தேவன் ஹில்ஸ் பிராட்யூஸ் கம்பெனி லிமிடெட்.,

திருச்சிராப்பள்ளி.

ஐரோப்பிய வல்லரசுகள் ஒன்றன்மேல் ஒன்று பாய்வதற்குக் காரணக்கருவியாக ஆக்க முயன்ற செக்கோ ஸ்லோவேகியா, தனது சுதந்திரத்தை காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று உறுதியுடன் தலை நிமிர்ந்து நிற்பதன் ரகசியமென்ன? கீழேயுள்ள கட்டுரை அதை நன்கு விளக்குகிறது.

"ராசு"

ஒரே சமயத்தில் சுமார் ஒன்றரை லட்சம்பேர்கள், கசகசவென்ற களேபரமான கூட்டமல்ல; ஒழுங்கும், நியதியுமுள்ள ஒரு பட்டாளம் போல வரிசை வரிசையாக நின்று தேகப்பயிற்சி செய்கிறார்கள்! கண்ணை வீசி நேர் எதிரில் பார்த்தால், சமுத்திரத்தின் அலைவீச்சை மனிதர்களைக் கொண்டு நடித்துக்காட்டச் செய்யும் ஒரு அழகியகாட்சி போலத் தோன்றும். இத்தகைய அதிசயக் காட்சி இந்த ஜூன் ஜூலை மாதங்களில் செக்கோ ஸ்லோவேகியா நாட்டில் நடைபெறுகிறது.

இன்றையதினம் ஐரோப்பாவின் சமாதானம் அல்லது பயங்கரமான ஒரு யுத்தகோலம் ஆகிய இரண்டிற்கும் கேந்திர ஸ்தானமாக உள்ளது செக்கோஸ்லோவேகியா. அதன் தலைநகரான பிரேக்கில் இந்த வருஷம் ஜூன் ஜூலை மாதங்களில் அவர்களது மகத்தான ஸொக்கோல் என்னும் தேசீய இயக்கத்தின் விழா நடைபெறுகிறது. இந்த விழா ஆறு வருஷத்திற்கு ஒரு முறைதான் கொண்டாடப் படுகிறது; நம் நாட்டில் திருவனந்தபுரத்தில் நடக்கும் லட்ச தீப விழாவைப் போல. போன 1932-ம் வருஷத்தில் நடைபெற்ற பிரகு மறுபடி இந்த வருஷம் நடைபெறுகிறது.

இந்த ஸொக்கோல் இயக்கம் உலகததிலேயே பெரிய ஒரு தேகப்பயிற்சி இயக்கம். முதல் முதலாக 1862-ம் வருஷத்தில் டாக்டர் மிரோஸ்லாவ் டைர்ஸே என்ற பிரபல ஆசிரியரால் ஆரம்பிக்கப் பட்டது. டாக்டர் மிரோஸ்லாவ் ஒரு வேதாந்தி கூட. தேசமக்களிடையே மனம், தேகம் இரண்டிலும் ஒரு உயர்ந்த அளவு ஆரோக்கியகரமான நிலைமையை உண்டாக்கி, அதை நிரந்தரமாக விளங்கச் செய்ய வேண்டுமென்பதற்காக அவர் கண்ட கனவுதான் இந்த இயக்கம். அவர் கனவு கண்டதுடனும் நின்றுவிடவில்லை. அதை நடைமுறை உண்மையாக்கவும் அளவு கடந்த உற்சாகத்துடன் உழைத்தார்.

தேசமக்களின் இந்த ஆரோக்கியகரமான மன நிலையும், தேகதிடமும் செக்கோஸ்லோவேகிய நாட்டின் இழந்த சுதந்திரத்தைத் திருப்பப் பெறும் போராட்டத்திற்கு அத்தியாவசியமாகுமென்று அவர் கருதினார். அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லையென்றே சொல்லலாம். செக்கோஸ்லோவேகியா இன்று அனுபவிக்கும் ஸ்வதந்திரத்திற்கு ஸொக்கோல் இயக்கம் எவ்வளவு தூரம் காரணமாக இருந்தது என்பது சரித்திரப் பிரசித்தம்.

இன்று இந்த இயக்கத்தில் எட்டு லட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இயக்கத்தின் தேகப்பயிற்சித் திட்டத்தில் பொதுவான தேகப்பயிற்சி விளையாட்டுகள், பலதினுசான பயிற்சி முறைகள், அணி வகுப்பு டிரில், பந்தயங்கள் முதலியவை அடங்கியுள்ளன.

இந்த ஸொக்கோல் இயக்கம் வெறும் விளையாட்டு, அல்லது தேகப் பயிற்சி இயக்கம் மட்டுமல்ல. இது ஒரு முக்கியமான சமூக அமைப்புத் திட்டத்தின் தத்துவங்களையும் அஸ்திவாரமாகக் கொண்டுள்ளது. இதன் அங்கத்தினர்கள் வகுப்பு, பால்,



ஸொக்கோல் அங்கத்தினர்கள் ஆறுவருஷ விழாவின்போது டிரில் செய்யும் காட்சி.



வயது என்ற வித்தியாசமற்ற சரிநிகர் சமானமான அந்தஸ்துடையவர்கள். எனவே, இந்த இயக்கம் ஒரு உண்மையான ஜனநாயக அமைப்பு என்றும் சொல்லலாம். எனவே, இதன் அங்கத்தினர்கள் யாவரும் ஒரே தினுசான நியாயம், தேச பக்தி, ஒழுங்கு முறைச் சட்டங்கள் ஆகியவற்ருல் இணைக்கப்பட்டு இயங்குகின்றனர்.

ஸோக்கோல் இயக்க விழாக்கள் ஆறு வருஷத்திற்கு ஒரு முறை நாட்டின் தலை நகரான பிரேக்கில் நடைபெறுகின்றன. இந்த வருஷ விழா பத்தாவது விழாவாகும். முதல்விழா 1882-ம் வருஷம் நடைபெற்றது.

போன தடவை 1932-ல் விழா நடந்தபோது சுமார் ஒன்றரை லட்சம் அங்கத்தினர்கள் தங்கள் சொந்தச் செலவில் வந்து கூடினர். இவர்கள் ஏக காலத்தில், சதுரமாகவும், முக்கோணங்களாகவும், சக்கர வட்டமாகவும் நின்று தேகப் பயிற்சிகள் செய்தது நேத்திரானந்தமான காட்சியாக இருந்ததென்று சொல்ல வேண்டுமா? அது மட்டுமல்ல. இத்தகைய காட்சி பார்ப்பவர் மனதில் எழுப்பும் உற்சாகத்தையும், நம்பிக்கையையும் இந்த வேடிக்கையைக் கண்டுகளிக்கவரும் செக் நாட்டுக் கிராமவாசி மக்களின் முகத்தில் தான் காணலாம்.

இத்தகைய காட்சி மக்கள் மனத்தில் எழுப்பும் கலகலப்பு உணர்ச்சியே, அவர்களது மனே ஆரோக்கியத்தின் வளர்ச்சிக்கு ஒரு முக்கியமான படியாகவும் அமைகிறது என்னலாம்.

இவ்வருஷ ஸோக்கோல் உற்சவ காலத்தில் வழக்கமான பிரதர்ஸனங்களுடன், சர்வதேச விளையாட்டுப் பந்தயங்களும், போட்டிகளும் நடத்த ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

சுமார் எழுபத்தைந்து வருஷங்களுக்கு முன் ஆரம்பித்த இந்த இயக்கம் செக்கோஸ்லோவேகியா இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கு மாத்திரம்



தான் உதவியது என்று சொல்லிவிட முடியாது. இன்றைய தினம் அந்தச் சிறிய ஐக்கிய நாடு, தனது கண் போன்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் கொண்டுள்ள உறுதிக்கும் நம்பிக்கைக்கும் கூட இந்த இயக்கமே காரணம்.

தற்கால ஐரோப்பாவில் குமுறிக் கொண்டிருக்கும் யுத்த மேகங்கள் ஐரோப்பிய மக்களை மட்டுமன்றி இதரக் கண்டங்களிலுள்ள மக்களையும் நெஞ்சம் கலங்கச் செய்து கொண்டிருக்கிறது. பத்திரிகைகளும், ராஜீய நிருபர்களும், ராணுவ நிபுணர்களும், வரப்போகும் மகாயுத்தத்தின் முதல் குண்டு செக்கோஸ்லோவேகியாவில் தான் வெடிக்குமென்று கூறுகின்றனர். எந்த நிமிஷத்தில், எந்தச் சிறு அல்பமான காரணத்தை வைத்துக் கொண்டு முதல் வெடியைத் தீர்த்தாலும், அது இந்தச் சிறிய நாட்டின் எல்லையில் தான் என்று சொல்லப்படுகிறது. வரப்போகும் யுத்தம்மா இது வரை மனிதன் அனுபவத்திலும், கற்பனையிலும் கண்டிராத அவ்வளவு பயங்கரமானதும், கொடூரங்கள் நிறைந்ததாகவும் இருக்கப்போகிறது.

இத்தகைய பயங்கரமான ஒரு நிலைமையிலும் செக்கோஸ்லோவேகியா தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற திட நம்பிக்கையுடனும், உறுதியுடனு மிருப்பதற்கு இந்த ஸோக்கோல் இயக்கம் ஒரு வகையில் முக்கியமான காரணமாகிறது. எந்த நிமிஷத்திலும் பயிற்சிபெற்ற எட்டு லட்சம் மக்கள் நாட்டின் சேவையில ஈடுபடத் தயாராக இருக்கின்றனர் என்ற எண்ணம், நாட்டின் அரசாங்கப் பொறுப்பை வகிப்பவர்களுக்கு எவ்வளவு திடம் அளிக்கும் என்பதைச் சொல்லவேண்டுமா? ஒழுங்கு முறையிலும், சொன்னதை ஏன் என்று கேட்காமல் செய்யும் கட்டுப்பாட்டிலும் பயிற்சி பெற்று இறுகிய எட்டு லட்சம் பேர்கள் போர் முனையில் மாத்திரமன்றி, போரில் ஈடுபட்டவர்களுக்காக உள் நாட்டிலும் ஏற்படும் அவசர நிலைமைகளில் காலதாமதமின்றி உத்தரவிட்ட தட்சணம் வந்து ஈடுபடத் தயாராகவுள்ள ஆண்களும் பெண்களுமாக எட்டு லட்சம் பேர்கள் !

இந்தியாவிலும் சமீப காலமாக சேவாசமிதித் தொண்டர் படை (ஸ்கவுட்) இயக்கம் ஆரம்பமாகி நடந்து வருகிறது. ஆனல் இந்த இயக்கத்தின் அஸ்திவார நோக்கங்களில் உள்ள மூளிகளினுல் அது இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறது.



சிகிச்சை

"மௌனி" எழுதியது

சிற்சில சமயம் இருவரும் ஒருவருக்கொருவர், சம்பந்தமற்ற தனி ஜீவன்கள் போலத் தோன்றுவது அவர்களது மிக மிக மர்மமான ஒற்றுமை வாழ்க்கையின் ஒருவிதத் தோற்றந்தான். இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தபோது சீனுவின் முகம் கறுத்தது. கர்ம வாழ்க்கையின் கடமையினால் பலமாகத் தாக்குண்டான் போலும்! தன் மனைவியிடம் அவனுக்கு இருந்த அன்பு முன்னிலுமதிகமாக இறுகியது.

கமலாவிற்கோ சதா தன் குழந்தை ஞாபகமும், சீனுவின் ஞாபகமுந்தான். தன்னை அறியாமலே ஆனந்தமுற்று, மெய்மறந்து போவாள். வாய்விட்டுச் சிற்சில சமயம் குழந்தையுடன் கொஞ்சுவதும், அப்போது சீனு வந்தால் அவனுடன் பேசுவதும், பிறரிடம் பொறுமையை எழுப்புவதாக இருக்கும். தன் ஜீவிய லக்ஷியமும், வாழ்க்கைப் பயனும் இவ்வகை ஆனந்தத்தில் எல்லையை எட்டிவிட்டதென்ற ஓர் எண்ணம் அவள் மனதில் எழும். அப்போது மரண பயத்தை வென்றவளாகப் புன்முறுவல் கொள்வாள்.

காலை கண்டவுடன், சீனு புழக்கடை சென்று, பல் தேய்த்து முகங்கழுவி, உள்ளே வந்தான். கண் மூடிய வண்ணமே கமலா சிறிது அங்குமிங்கும் புரண்டுவிட்டு மெதுவாகக் கண்ணை விழித்தாள். தன் எதிரில் நின்றுகொண்டு குனிந்து தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்த தன் கணவனைப் பார்த்தாள்.

"இரவெல்லாம் தூக்கமில்லையே உங்களுக்கு.... சிறிது படுத்துக் கொள்ளுங்கள் ..." என்று சொல்லியவள் "குழந்தை?" என்றதும், சிரமத்துடன் எழ முயன்றாள்.

அவளைத் தடுத்து சீனு "குழந்தை அதோ தூங்குகிறது....பேசாமல் படுத்துக்கொள். நான் காப்பி சாப்பிட்டுவிட்டு யாரையாவது டாக்டர் ஒருவரை அழைத்து வருகிறேன். ஒத்தாசைக்கு அம்மாவுக்கு சொல்லி அனுப்புகிறேன்...." என்றான்.

கமலா மௌனமாக அவனைப் பார்த்தாள். அவனும் ஒரு கணம் பார்த்துவிட்டுச் சென்றான். அப்பார்வையின் அர்த்தமே மிகத்தெளிவானது போன்றும், அவர்கள் பேசுவது சாதாரண உலக நடப்பு சௌகரிய சாதகத்திற்குத்தான் போலும் இருந்தது.

1

ஆவலோடு எதிர்பார்க்கப்படும் அம்சத்தின் வருகையை சமீபத்தில் காட்டும் அறிகுறிபோலவும், ஒரு விளங்காத முன்னெச்சரிக்கை போலவும், வைகறையொளி பரவுவதற்கும் முன்பே, முதல் காகத்தின் கரைதல் ஒலி கேட்டது. பொழுது மிகத் தயக்கத்துடன் புலர்ந்தது.

இரவு முழுவதும் மன நிம்மதியின்றி ஒவ்வொரு கணத்தையும் கணக்கிட்டுக் கழித்துக் கொண்டிருந்த சீனுவுக்கு மனசின் பாரம் கொஞ்சம் குறைந்தது போலிருந்தது. தன் பக்கத்தில் படுத்துக்கிடந்த தன் மனைவி கமலாவைப் பார்த்தான். இரவெல்லாம் மூடாத தன் கண்களை அவள் சிறிது மூடி உறங்குவதுபோல அயர்ந்து கிடந்தாள். சிறிது தூரத்தில் அவர்களது ஒரு வயதுக் குழந்தையும், வீட்டு வேலைக்காரக் கிழவியும் படுத்திருந்தார்கள். விளக்கு மங்கலுற்று எரிந்து கொண்டிருந்தது.

இரண்டு நாளாகக் கொஞ்சம் தலைவலி கடுப்பு ஜுரமாக இருந்ததை கமலா அலக்ஷியமும் செய்யவில்லை, அதிகப்படுத்தவுமில்லை. தன்னுடைய கணவன் மனதை மிகப் பாதிக்க விடக்கூடாதென்று சாதாரணத் தோற்றத்துடனிருக்க முயன்றாள். ஆனால், முந்தின மாலையிலிருந்து தேக அசௌக்கியம் தனக்கு மிஞ்சிவிடவே, படுக்கையில் படுக்க நேர்ந்தது. சுரத்துடன் முக்கலும் முனகலும் அதிகரித்தது.

அவர்களிருவரும் மணவாழ்க்கை நடத்த ஆரம்பித்து மூன்று வருஷமே யாயினும், இவர்களிடையே தோன்றிய அன்னியோன்னியம் காலத்தின் கட்டை மீறியதாக இருந்தது.

சீனு நன்றாகப் படித்தவன். சிறிது கறுப்பாக இருப்பான். நெட்டையான மெல்லிய சரீரமுடையவன். படிப்பு முடிந்தவுடன், மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் அவனுக்கு ஒரு உத்தியோகம் கிடைத்தது. இதற்குப் பிறகு, இவர்கள் ஒன்று சேர்ந்து மண வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார்கள்.

இவர்களுடைய இல்வாழ்க்கை, சதையுணர்ச்சி இன்பம் என்ற அஸ்திவாரத்தின் மேல்ப்பூச்சு, காதல்ச்சுவை கொண்டதல்ல.

2

மிஸ் கோமதி வைத்தியக் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன், காலியாக இருந்த அவ்வூர்ப் பெண்கள் ஆஸ்பத்திரி தலைமை டாக்டராக நியமனம் பெற்று வந்துசேர்ந்தவள். 'முற்போக்கான கொள்கை'களுடைய ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தவள். கல்லூரியிலும், மற்றும் சென்னையில் அவளை அநேகமாக முக்கியஸ்தர் எல்லோருக்குமே தெரியும். நான்கு பேர்கள் தன்னைக் கவனிப்பதில் அவளுக்கு கொஞ்சம் பிரியம் உண்டு. கடற் கரையிலோ, மற்றும் ஐந்து பேர்கள் கூடியிருக்கு மிடத்திலேயோ அந்தக் கூட்டத்தின் மத்தியிலில்லா விட்டாலும், சிறிது எட்டி அவள் நின்றிருப்பது 'என்னைப் பார்' என்பது போலத்தான் பிறருக்குத் தோன்றும்.

நவீன நாகரீகத்தை அணிந்து நாணத்தை வீட்டில் வைத்து வெளிக்கிளம்பும் அநேக பெண்களைப்போல அவளும் வாலிபருடைய 'பார்வைக் காதலுக்கு' ஆளானாள்.

... டாக்டர் கோமதி ...



... கமலா ...

கோமதி பாலியமுதல் செருக்கும் மமதையும் கொண்டவள். கிட்ட நெருங்கினால், அவள் பார்வையில் ஒரு வெடு வெடுப்புத் தெரியும். அது அவளுடைய இயற்கை சுபாவமா அல்லது செயற்கை மேலணியா என்பதை யாரும் கண்டு கொள்ள முடியாத வகையில் தான் எல்லோரிடமும் எட்டி நின்று ஒட்டாமலே பழகுவாள். தன்னுடைய படிப்பின் காரணமாயும், வனப்பின் மிகுதி என்ற எண்ணத்தினாலும் மிகுந்த சுயப்பிரக்ஞை உடையவளானாள். தன்னை மெச்சுபவர்களின் வியப்பை எண்ணி ஆனந்தம் கொள்ளுவதை விட, அவர்களை புறக்கணிப்பதினால் அவர்கள் அடையும் மனோ நிலையைக் கண்டு களிப்பது கோமதிக்கு அதிகப் பிரியமாக இருந்தது.

தன்னால் உணரப் படாததாயினும், உணர முடியாததாயினும், பிறர் தன்னிடம் காட்டும் மதிப்பு, தன்னைக் கண்டவுடன் அடையும் வியப்பும், மயக்கமும் எதற்காக என்பதை அவள் புரிந்து கொண்டிருந்தால், அந்த நவீன வாலிபர்கள் எத்தகைய கேவலத் தன்மையை அடையத் தான் காரண கர்த்தாவாக ஆகிறாள் என்பது அவளுக்குப் புலப்பட்டிருக்கும்.

கொஞ்சம் கொஞ்சமாக கோமதியின் மனதில் ஆடவரை வெறுக்கும் சுபாவம் நன்றாய் வேரூன்றி விட்டது. உண்மையோ, பொய்யோ, ‘பெண்கள் வெகுவாக மண வாழ்க்கையில் ஆடவரால் அடிமைப் படுத்தப் படுகிறார்கள்’ என்ற தனது மனதிற்கிசைந்த காரணத்தையும் கட்டிக் கொண்டாள். நாளடைவில் இவளுடைய ‘காதலுக்’காகவும், இவளை மணப்பதற்கும் நெருங்கிய வாலிபர்களின் தொகை தானாகக் குறைந்து விட்டது.

மூக்கில் அழகிய சிறு கண்ணாடி அணிந்து, அதிக ஆடம்பரமற்ற ஆபரணம் பூண்டு, உடம்போடு ஒட்டிய துல்லிய ஒற்றைவர்ணப் புடவை அணிந்து ஒரு கொடிபோல அவள் கடற்கரையில் நடப்பது, ஆடவர் மனதின் அமைதியைக் குலைப்பதாக இருக்கும். ஆயினும், அவளுடைய இறுகிய வாயும், கடுகடுத்த பார்வையும், ஆடவரை அவளிடம் நெருங்கவொட்டாது தடுத்தது மன்றி, மானஸீகமாகவே அவளைப் பூஜிக்கவும் செய்தன.

தன்னுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றி கோமதிக்கு நிச்சயமான திட்டங்கள் ஏதும் கிடையாது. முடியுமானால், மேல்ப் படிப்பிற்காக சீமைக்குப் போகலாம் என்ற உத்தேசம் கொஞ்சம் உண்டு.

கோமதி காலையில் காப்பி அருந்தி விட்டு, அன்றையப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தாள். சீனு அப்போது உள்ளே நுழைந்தான். இவனைப் பார்த்ததும் அலட்சியம் நிறைந்த மரியாதையோடு ‘என்ன வேண்டும் ?’ என்றாள்.

“ஒரு நோயாளியைப் பார்க்க என் வீட்டிற்கு வர வேண்டும்” என்றான்.

“உங்கள் அட்ரஸ் வைத்துவிட்டுப் போங்கள். சிறிது நேரம் சென்று வந்து விடுகிறேன்” என்றாள் கோமதி.

சீனு வீடு சேர்ந்து பத்து நிமிஷங்களுக்குள் கோமதி வந்து விட்டாள். கமலாவின் சுரம் தணியும் குறியே யின்றிக் கடுமையாகவே இருந்தது. ஆனால், தன் கணவரது கவலையை அதிகரிக்கவும், அதைரிய மூட்டவும் காரணமாகிவிடக் கூடாதென்று தன் வேதனையை, வெளிக்காட்டிக் கொள்ளாது சிரமப்பட்டுக் கொண்டு படுத்து இருந்தாள். சீனுவின் மனம் வெடித்துவிடும் போல் இருந்தது. கட்டுக் கடங்காத துக்கத்தை அடக்கி வைப்பதன் சிரமம் முழுவதையும் அவன் அனுபவித்தான். வாய்விட்டு அலறி அமைதியை நாடுவதை ‘எதற்காக இப்போது?’ என்ற எண்ணம் குறுக்கிட்டு தடுத்துக் கொண்டிருந்தது. ஆனால் அதற்கும் மேலே, தனியாக, கமலாவின் உடம்பு அசௌக்கியம் என்ற நினைவையும் தாண்டி, அவன் மனதில் ஏதோ ஒரு தாங்கமுடியாத சுமையின் பாரம் அழுத்துவது போன்ற ஒரு உணர்ச்சியும் வளர்ந்து கொண்டிருந்தது. வானக் கூரை இவன் தலையை நோக்கிக் கொஞ்சம் கொஞ்சமாக நழுவி இறங்குவது போன்ற ஒருபிரக்ஞை வளர்ந்து கொண்டிருந்தது.

டாக்டரைத் தன் மனைவியிடம் அழைத்துச் சென்றான். டாக்டர் சீனுவையும் கமலாவையும் இரண்டொருதரம் மாறி மாறிப் பார்த்து விட்டு “இவள்?” என்றதும், “என் மனைவி” என்று பதிலளித்தான். “எத்தனை நாளாக?” எனக் கேட்டுக்கொண்டே டாக்டர் நோயாளியை பரிசோதிக்க ஆரம்பித்தாள். பரிசோதனை முடிந்தவுடன், மருந்து எழுதிக் கொடுத்துவிட்டு சாயந்திரம் நிலைமையை வந்து தெரிவிக்கும்படி சீனுவிடம் சொன்னாள். மற்றும் அவசியமானால் தான் வருவதாகவும் சொல்லிச் சென்றாள்.

கமலாவின் தோற்றமும் பார்வையும் கோமதி மனதில் சங்கடம்கொடுத்தது. கமலாவைப் பார்த்ததும், கணவனுக்கு அடிமைப் படுதல் என்பதான மணவாழ்க்கையைப் பற்றிய தனது வியாக்யானம் பிசகு என்பது போன்ற ஒரு எண்ணம் அவள் மனதில் எழுந்தது. இந்த எண்ணம், தன் மனதில் திடமாக வேரூன்றி விட இடம் கொடுக்க அவள் இஷ்டப்படவில்லை. கமலாவின் சுரமும் கூட அவள் மனதைப் பாதிக்கவில்லை. அவள் பக்கத்தில் ஒரு ஆடவன் மிகுந்த பாத்தியத்துடன் நின்றிருப்பதும், முகத்தினாலும், ஒருவகை உணர்ச்சியையும் தெரிவிக்காது இவளுக்கு விளங்காத ஒரு பாஷையில் பேசுவது போன்ற பார்வையாலும், இருவரும் பேசிக்கொண்டது போன்ற தோற்றமும் கோமதிக்குக் கோபத்தையும், வருத்தத்தையும் கொடுத்தது.

கோமதி திரும்பிப் போகுமுன் மற்றொரு முறை கமலாவை திரும்பிப் பார்த்தாள். அவள் சாந்தமே உருக்கொண்டது போலத்

... சீனு ...

தோன்றியது கோமதிக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளுடைய நோய் கடுமையானது என்பது கோமதியின் டாக்டர் மனதுக்குத் தெரியும். இருந்தும் எதனால் அவள் அவ்வளவு ஆறுதலோடு சாந்தி நிறைந்து விளங்கினாள் என்பது தான் டாக்டருக்குப் புரியவில்லை. அவளுக்கே அவள் நோயின் கடுமை தெரியாது என்று நினைப்பதற்கு மில்லை. அவள் முகம் அவளுடைய புத்திசாலித்தனத்தை நன்கு எடுத்துக் காட்டியது. இந்த யோஜனைகளெல்லாம் கொஞ்ச நேரத்திற்குத் தான். அவ்விடம் விட்டகன்றதும் அவ்வளவும் அவள் சிந்தனைக்கு வெகுதூரத்தில் சென்று மறைந்தன. வாசலில் வண்டியேறும்போது கையினால் மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்து கொண்டபோது, மூளையையும் சஞ்சலம் நிறைந்த எண்ணங்களினின்றும் விடுவித்துச் சரி செய்து கொண்டாள்.

3

அன்று மாலை ஐந்து மணிக்கு கோமதி நாஸூக்காக உடைதரித்து, தேயிலைப் பனம் அருந்திக் கொண்டிருந்தாள். அப்போது சீனு வந்தான். அவனைப் பார்த்தபோது கோமதிக்கு மனதில் கொஞ்சம் ஆத்திரம் பிறந்தது. கமலா இவனுக்கு அடிமைப்பட்டுவிட்டாள் என்பதனால் போலும்! ஆனால், சீனுவைப் பார்க்கும் போது பிறரை அடக்கியாளும் சுபாவஸ்தன் என்று தோன்றவேயில்லை. ஆனால், ஏதோ மனதில் தோன்றித் தோன்றி ஒரு உருவிலாத சஞ்சலத்தைக் கொடுத்து மறைவதைத் தான் கண்டாள்.

"ஏதாவது விசேஷம் உண்டோ?" என்றாள் சாதாரணமாக.

"நிலைமை அப்படியே தான் இருக்கிறது. ரொம்ப சோர்வடைந்து இருக்கிறாள்; மூச்சு திணறுகிறது...." என்று சொல்லி அவளைக் கூட்டிப்போக வந்திருப்பதாகத் தெரிவித்தான். "சரி; கொஞ்சம் உட்காருங்கள். தேத் தண்ணீர் அருந்தி விட்டுப் போகலாம்" என்று சொல்லி அவனை உட்காரவைத்தாள். அவள் எதிரில் உட்கார்ந்து இருக்கும்போது அவன் தோற்றம் உணர்ச்சியற்ற சிலைமுகமாக விளங்கியது.

"அதிகமாக பயப்பட வேண்டாமாயினும், உங்கள் மனைவியின் நோய் கொஞ்சம் கடுமையானது தான். என்னால் ஆவதைச் செய்கிறேன். இரண்டு நாள் பார்த்துவிட்டு, அவசியமானால் பட்டணம் போக நான் பெரிய டாக்டருக்கு லெட்டர் தருகிறேன்" என்றாள்.

"சரி, ஆகட்டும்" என்று சாதாரணமாக பதில் சொன்னான் சீனு.

"நீங்கள் வருத்தப்பட வேண்டியதில்லை. நோய் கடுமையானது தான். இப்போது அதிகமாகாது பார்த்துக் கொள்ளுவதைத் தவிர வேறு செய்வதற்கு ஒன்றுமில்லை. தானாகவே சரியாகிவிட வேண்டும்...இப்போது தெரிந்து கொள்ளுவதில் உங்களுக்குத் துன்பமதிகமானாலும் விஷயம் கையை மீறிய பிறகு தெரிந்துகொள்ளுவது இன்னும் அதிகக் கஷ்டமாக இருக்கும் என்று தான் இப்போதே சொல்லுகிறேன்" என்று, ஏன் இவ்விதம் பேசுகிறோம் எனபது புரியாமலே பேசினாள் கோமதி.

சீனு "சரி; வரப்போவது எதுவும் எனக்கு ஆச்சரியமாயிராது. எதுவானாலும் எப்படியும் நடக்கப் போவதுதானே; சரி. புறப்படலாமா?" என்றான்.

கோமதி கெட்டிக்காரிதான். ஆயினும் சீனுவுடன் ஒப்பிட்டால் அவள் வெகு மந்தம். அவன் அதிகமாகப் பேசாவிட்டாலும் பேசின கொஞ்சமும் அவளுக்குப் புரியவில்லை. பேச்சிற்கு அடிப்படையான அவன் மனோபாவத்தை அறிந்தால் தான் அவன் பேச்சின் அருத்தம் விளங்கும். அவன் எதிரில் மட்டும் தன்னுடைய மதிப்பு மட்டுப்பட்டுப் போனது என்ற ஒரு எண்ணம் நடுநடுவே அவள் மனதில் பிறந்தது. தனக்குத் தானே "தடிக்கழுதைகள் இவ்வாடவர்கள்; இவர்களிடம் பெண்கள் படும் சிரமம்!" என்று சொல்லி மனதைக் கொஞ்சம் தேற்றிக்கொண்டாள்.

கமலாவிற்கு சுரம் கடுமையாக இருந்தது. டாக்டருக்கு நம்பிக்கை மிகக் குறைந்துவிட்டது. தன்னுடைய முழுவன்மையையும் காட்டி கமலாவை சொஸ்தப்படுத்தவேண்டுமென்ற ஆத்திரம் கொண்டாள். ஏன் இவ்வகை மனோபாவம் கொண்டாள் என்பது அவளுக்கே புரியவில்லை. கமலா சாதாரணத் தோற்றத்திலேயே விளங்கினாள். தான் இறப்பினும் தன் ஜீவிய ஞாபகத்தை ஒரே பார்வையில் பதித்துச் செல்ல முயலுவது போன்று தன் கணவனை மிக ஆறுதலாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். சீனுவிற்கு மூளை சுழல ஆரம்பித்தது. ஒருபோதும் இருவரும் இவ்வளவு நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டதில்லை. அவன் கண்கள் ஈரமுற்றன. கமலா சிறிது பரிகாசம் தோன்ற "ஏன் கவலை? பைத்தியம் பிடித்துவிட்டது போல இருக்கிறீர்களே. குழந்தையைப் பாருங்கள்; விளையாடிக் கொண்டிருக்கிறது. நீங்கள்—"

தாரகைப் பெண்கள்

*

1. ஆகாய வாணியின் ஆடையிலே—தேவர்
அள்ளி யிறைத்தாரோ முத்துக்களை
ஏக நிறத்தினில் பொட்டிடவே—அவள்
எந்நாட்டுப் பெண்ணிடம் கற்றனளோ!

2. நீல நிறத்திற்குப் பொட்டிடவே—அவள்
நீணிலப் பெண்ணிடம் கற்றனளோ!
கோலமிடும்போது பொட்டுவைக்கும்
—தமிழ்
குமரிப்பெண்களைக் கண்டதுண்டோ!

3. விண்ணினழகைப் பெருக்கவரும்—ஒளி
வீசும் வயிர மணிகள் தானோ!
'தண்'ணென்றிருக்கும் பாலொளியை
—மிகு
தாகத்தோடருந்தும் பூச்சிகளோ!

4. ஆதித்தன் முன்னாலே தோன்றுவதால்
—கற்பு
அழிந்துவிடுமென எண்ணுவதோ
தாதிகள் போலவே சந்திரனை—இரவில்
சந்தித்துச் சல்லாபம் செய்வதேனோ?

5. இரவியைக் கண்டு ஒளிப்பதேனோ?
—பின்பு
இந்துவைக் கண்டு களிப்பதேனோ?
தாரகைப் பெண்களின் தந்திரத்தை
—நாளைத்
தாமரை சொல்லி நகைக்குமடா?

"தாராபதி"

"ஆம் கமலா; உனக்குப் பிறகு?"

"நீங்கள் ஜீவித்து இருங்கள். நம்முடைய குழந்தை இல்லையா? என்னுடைய நியாபகம் இல்லையா?"

"பரிகாசம் செய்கிறாயே. உன் நிலைமை உனக்குத் தெரியாது. தெரிந்தாலும் இப்படித்தான் இருப்பாய். என்னைக் கண்டாலே உனக்குப் பரிகாசம்தானே. கமலா உன்னைப் பிரிந்து வாழ முடியாது என்று நான் சொல்லவில்லை. என்னைப் பொருத்தவரையில் உனக்கு அழிவில்லை. எப்படி வாழ்வது என்பது தான் புரியவில்லை. எவ்வகை யோஜனையாலும் அதை நிதானிக்க முடியவில்லையே, கமலா" என்றான் சீனு.

"என்ன என்னவோ சொல்லுகிறீர்களே நீங்கள். நான் இறக்கு முன் சாக வைத்துவிட்டீர்களே! நீங்கள் பெரிய அசடு. உங்களோடு வாழ்ந்து பட்ட கஷ்டம் போதும்" என்று கமலா சிறிது சிரித்தவண்ணம் "கிட்டே வாருங்கள்; ஒரு ரகஸியம் சொல்லுகிறேன்" என்றாள்.

அவள் அருகில் சீனு தலையைக் கொண்டு போனவுடன் அவன் முகத்தில் ஒரு முத்தம் அளித்தாள். "இப்போது தெரிந்ததா உங்களுக்கு பின்னால் உங்கள் வாழ்க்கை எப்படி இருக்குமென்று?" ஒரு நீண்ட முத்தத்தில் கழியும் போலும்!

டாக்டர் அருகில் நின்று இருந்தாலும் அவளை இருவரும் கவனிக்கவில்லை.

"ஆம் கமலா, நான் பைத்தியம் தான். இப்போது உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்று சீனு கேட்டபோது டாக்டர் கமலா அருகில் வந்து அவளைப்பரிசோதிக்க ஆரம்பித்தாள். கோமதியால் கமலாவை நன்கு உற்று நோக்க முடியவில்லை. அவளுடைய ஜீவிய ஆனந்தத்தை எண்ணும்போது தன்னுள் அடங்கிய ஒரு குறை நன்றாகத் தலை காட்டுவது போல இருந்தது அவளுக்கு. கமலாவிடம் பொறாமை கொண்டாள். அவள் ஆநந்தத்திற்கு சீனு காரணமென்று கருதிய கோமதிக்கு அப்போதைய நிலைமையில், சீனுவிடம் ஒரு அநுதாபம் ஏற்படலாயிற்று.

டாக்டர் பரிசோதனையில் தெரிந்துகொண்டவை, அவள் மனநிலைக் கேற்றவையாகவே இருப்பது போலிருந்தது. கமலாவின் நிலை மிக சந்தேககரமாக இருந்தது. அவள் அநேகமாக இறந்து விடுவாள் என்ற எண்ணமும் பலப்படலாயிற்று. டாக்டர் தன்னை வெகு நேரம் ஊன்றிப் பரிசோதித்தது கமலாவிற்கு ஒருவிதமாக இருந்தது. தான் இறப்பதுநிச்சயம் என்றஎண்ணத்தை உறுதிப் படுத்திக்கொள்ளத் தான் இந்த ஆழ்ந்த பரிசோதனை என்பதாகத் தோன்றியது. 'ஏன்' என்று நினைக்கும்போதும், டாக்டரும் ஒரு பெண் என்பதை எண்ணும்போதும், கமலாவின் மனதில் பட்டவை அவளுக்கு சஞ்சலமுண்டாக்கின. மற்றும் தன்னுடைய வாழ்நாள் குறுகி விட்டதென்பதும் உறுதி யடைந்தது.

தன்னுடைய கணவனையும் கோமதியையும் மாறி மாறிப் பார்த்தாள். கணவன் முகத்திலும் மனதிலும் துக்கத்தைக் கண்டாள். டாக்டரிடமும் துக்கச் சாயையைப் பார்த்தாள்.

கமலாவின் நெஞ்சம் நேர்மை நிறைந்தது. உண்மையின்மேல் வளர்ந்தது. விரிந்த மனசு. உலகத்தையே ஆட்கொள்ளக் கூடிய பெரும் புத்தி படைத்தவள்.

அதனால்தானே அந்த துக்கத்திலிருந்து இருவரும் ஆனந்தம் பெறுவர் என்று கமலா நினைத்தாள். ஏன் அப்படி நினைத்தாளென்பதும் அவளுக்கே விளங்கவில்லை.

கமலாவின் சுர மூளையில் இவ்வகை எண்ணங்கள் வெகு வேகமாகப் பதியலுற்றன. அவள் முகம் பிரகாசமடைந்தது. தன்னை இழந்த தன் கணவனின் பிற்கால வாழ்க்கையை காண ஆவலுற்றவளே போன்று அவள் கண் ஓடி வெகு அப்பாலே எட்டிய வெற்று வெளியிற் சென்று பதிந்தது. தன் குழந்தை விளையாடுவதைப் பார்த்தாள். டாக்டரை வெகு அன்போடு நோக்கினாள். குழந்தையைத் தவிர மற்றையோரெல்லாம் இவளை நேரே பார்க்க முடியவில்லை. தாங்க முடியாத துக்கத்தினால் வாய்அடைக்கப்பெற்று தலை குனிந்து நின்ற சீனுவின் முகம் களை குன்றியது.

"கமலா! குழந்தையையும் என்னையும் அழைத்துக் கொண்டு போ. யார் எனக்கு

"தில்லையம்பல ஸ்தலமொன் றிருக்குதாம்—அதைக் கண்டபேர்க்கு
ஜனனமரண பிணியைக் கருக்குதாம்"

PRINTED BY :
KESARI PRINTING WORKS, MADRAS.

TRI-COLOUR BLOCKS BY :
STANDARD PHOTO ENGRAVING CO., MADRAS.

இருக்கிறார்கள்? கமலா! ஏன் எப்போதும் தூர இருந்தே என்னோடு கலக்கிறாய்? என்னையும் கூட''.... சீனுவின் மனதில் நிச்சயமாகத் தன் மனைவியை இழந்துவிடப் போகிறோம் என்ற எண்ணம் உண்டாகி விட்டது.

டாக்டர் சிறிது கூர்ந்து கவனித்தவள் திடீரென வியப்படைந்தாள்; ஸ்தம்பித்து சீனுவைப் பார்த்தாள். கமலாவினுடைய நிலைமை சிறிது சிறிதாக மாறிக் கேவலமாகியது. திடீரென எழுந்து "நான் போய் வருகிறேன்" என்று சொல்லி வெளியேறி விட்டாள் கோமதி.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு கமலா சவமானாள். சீனுவின் மனதைப் பிளக்கும் துக்கமும் அவன் நெஞ்சிலேயே அடைபட்டு வெளி வரவும் இயலாது புழுங்கியது.

4

மறுநாள் சாயந்திரம் சீனு யோஜனையற்ற யோஜனைகளில் ஆழ்ந்தவனாக, தன் குழந்தைக்குப் பால் ஊட்டிக்கொண்டு இருக்கும் போது டாக்டர் கோமதி உள்ளே வந்தாள். இவன் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் தோற்றம் அவள் மனதில் நன்றாகப் பதிந்தது.

"ஐயா, என்னுடைய வருகை என் வழக்கத்திற்கும், தொழிலுக்கும் பொருத்தமல்ல. ஆயினும் உங்களைப் பார்த்து என் ஆறுதலைத் தெரிவித்துப்போக வந்தேன்'' என்றாள். பதிலொன்றும் தோன்றாமல் மௌனமாக அவளைப் பார்த்த வண்ணம் இருந்தான். குழந்தை தவழ்ந்து கொண்டு கோமதி காலருகில் சென்று அவள் புடவையைப் பிடித்து இழுத்தது. கோமதி குனிந்து அதைத் தூக்கி முத்தமிட்டாள்.

சீனு "எவ்வகை நிகழ்ச்சியும் விநோதமாகத் தோன்றாமல் போவதில்லை. எதுவானாலும் மனோ கற்பிதமான அனுபவத்திற்கு அகப்பட்டாலும், அனுபவ பூர்வமாக நிகழ்ச்சிகளை உணருவது வேறு மாதிரியாகத் தான் இருக்கிறது. நடந்ததைப் பற்றியோ நடக்கப் போவதைப் பற்றியோ, நான் ஒன்றும் யோசிக்கவில்லை. களையின்றி எல்லாம் ஏதோ கனவு போலத் தான் தெரிகிறது. —உங்கள் சிரமத்திற்கு—'' என்று எப்போதையும் விடக் கொஞ்சம் அதிகமாகவே பேசினான்.

"இல்லை, ஐயா. உங்கள் மனைவியைப் போன்றவளை இழப்பது உங்களை மட்டுமல்ல, சிறிது நேரப் பழக்கமேயுள்ள என்னையும் பாதித்து விட்டது'' என்றாள்.

குழந்தை இதற்குள் அவளிடம் வெகு ஆர்வமாகக் கொஞ்சலுற்றது. "ஐயா, குழந்தையை நினைக்கும்போது வெகு கவலையாக இருக்கிறது. குழந்தையை நான் பார்த்துக் கொள்ளுகிறேனே. நீங்கள் அடிக்கடி வந்து பார்க்கலாம்—'' என்றாள்.

சீனுவுக்கு கொஞ்சம் கூட அர்த்தமாகவில்லை. அவன் பழக்க நிமித்தம் சொல்லும் 'சரி' என்னும் வார்த்தை வாயைவிட்டு வெளிவந்தது. அவ்வளவு தான், கோமதியும் குழந்தையுடன் வெளியேறி விட்டாள்.

அன்றிரவு சீனுவுக்குத் தூக்கமில்லை. முதல்நாள் நிகழ்ந்த சம்பவம் அவன் மனதை அன்று பாதிக்கவில்லை. ஆனால், அன்றிரவு அவன் உலகில் தனிப்பட்டவனாகிவிட்டதாக எண்ணினான்.

5

கோமதி மேல் படிப்பிற்காக சீமை சென்று திரும்பி வந்து ஒரு வருஷமாகிறது. சீனுவின் குழந்தை சின்னப்பையாவுக்கு ஏழு வயதாகிறது. கோமதியின் வீட்டிலேயே அவன் செல்வமாக வளர்க்கப்பட்டு வந்தான். சமீப ஐந்தாறு வருஷங்களில் கோமதி எப்படி மாறிவிட்டாள என்பது ஒரு தனி அத்தியாயம் தான்........

சீனுவிற்கும் கோமதிக்கும் ஆடம்பரமின்றி சென்னையில் மணம் நடந்தது. மணம் முடிந்த அன்று மாலை சீனுவும் கோமதியும் தோட்டத்தில் தனியாகஉலாவி வரும்போது, இருவரும் உணர்ச்சி மிகுதியாலோ உணர்ச்சியற்றதாலோ ஒன்றும் பேசாமலே கொஞ்ச தூரம் நடந்தார்கள். கோமதி அடிக்கடி சுற்றிச்சுற்றித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தாள். கமலாவைத் தேடி சுற்றிச் சூழ நிவனிப்பது போலவும், தன்னை அவள் ஆட்கொண்டு அவள் அடைந்த அமைதியை தனக்கும் கொடுக்கவேண்டுவது போன்றும் இருந்தது அவளுடைய தோற்றம்.

உலகத்தின் மாலை மங்கல் ஒளி அதிகமாகவே மயங்கித் தோட்டத்திடையே சிறிது இருட்டாக இருந்தது. மனதில் வாய்விட்ட குதூகலம் காணவிட்டாலும், வசீகரமான ஒரு புன்முறுவலைக் கண்டதாக எண்ணினாள். ஏதோ ஒன்றை எதிர்பார்த்ததை எங்கும் காண முடியாதவள் போல ஒரு பெருமூச்செறிந்தாள்.

தன்னை யாரோ பின் தொடருவதாக ஒரு உணர்ச்சி தோன்றித் திரும்பினாள். சின்னப்பையா குதித்து ஓடி வருவதைக் கண்டாள். கமலாவின் ஞாபகம் எங்கும் நிரம்பியது. சீனுவை கோமதி பார்த்தபோது அவனும் திரும்பித் தன் மகனைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். உணர்ச்சியற்று, ஆனால் பிறரது உணர்ச்சிகளை மாத்திரம் தன்னிடம் பிரதிபலிக்கச் செய்யும் கண்ணாடி போன்று ஸ்வச்சமாக இருந்தான் சீனு. கோமதி கமலாவைப்பற்றிய பிரக்ஞையில் கலந்து நிற்கும் சீனுவைத் தான் அப்போது பார்த்தாள். அவ்வகையிலே அவனைக் காணவேண்டுமென்பதுதான் அவள் ஆசை. அவன் புறம் திரும்பி "உங்களைத் தனியாக உங்களுக்காகவே நான் உங்களை மணக்கவில்லை. என்னுடைய மனதைக் கவர்ந்து ஆட்கொண்ட கமலாவின் நினைவு ததும்பி இருக்கும் உங்களைத்தான் நான் காதலித்து மணம் செய்து கொண்டேன்'' என்று சொல்லி அவன் கன்னத்தில் ஒரு செல்ல அடி கொடுத்து ஒரு முத்தமும் கொடுத்தாள். அருகில் நின்ற சின்னப்பையா வெட்கம் கொண்டு வெளியே ஓடினான்.

"பாரிஸ் மெடல்" தங்க நகைகள்

ஆயிரக்கணக்கானவர்கள் வாங்கி ஆநந்த மடைகிறார்கள்! ஏன்? நீங்களும் வாங்கி சந்தோஷ மடையுங்கள்!!

1. விலை சகாயம்
2. உத்திரவாத முள்ளது
3. நாணய முள்ளது
4. பொன்னுக்கு நிகரானது
5. பார்ப்பவர் மனதைக் கவரச் செய்வது
6. ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை வாங்கக் கூடியவைகள்
7. உயர்தரமான வேலைக்காரர்களால் தயாரிக்கப்பட்டவைகள்



ஏஜண்டுகளும் தேவை!

ஸ்ரீ லக்ஷ்மி ஜுவலரி மார்ட்

184, சைனபஜார் ரோட் :: சென்னை.



ஸ்ரீ. ஏ. கே. செட்டியார்
தயாரிக்கும் பயிற்சிக்காக
...னி முதலிய நாடுகள்
...ரிக்காவில் அவரது அனுப...

ஜப்பானிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோவுக்கு 24 நாட்கள். ஹாவாய்த்தீவில் தங்கிய இரண்டு மூன்று நாட்களைத் தவிர மற்ற நாட்களெல்லாம் கப்பலில்தான். சான் பிரான்ஸிஸ்கோ துறை முகத்தைக் கப்பல் நெருங்க நெருங்க, 'புது உலகத்தைப் பார்க்கப் போகிறோம்' என்ற உற்சாகம் அதிகரித்தது. அதோ ஐம்பது அறுபது மாடிக்கட்டிடங்கள் தோன்றுகின்றதே, அது தான் சான் பிரான்ஸிஸ்கோ என்றார் அருகில் நின்ற அமெரிக்கர். சில நிமிஷங்களுக்குள், உலகிற் பெரிய பாலமென்று கருதப்படுகிற Golden Gate Bridge-ன் (தங்கவாசல் பாலம்) கீழே எங்கள் கப்பல் சென்றது. இதோ தெரிகிற தீவும் கட்டிடமும் என்ன என்று கப்பலிலிருந்த ஜப்பானிய அதிகாரியைக் கேட்டேன். 'அமெரிக்காவிலுள்ள, தப்பியோட முடியாத சிறைகளிலே இது ஒன்று. பேர் போன அல்காபோன் இங்கு தான் சிறைவைக்கப் பட்டிருக்கிறான்' என்று கூறினர்.

கப்பல் துறை முகத்தை நெருங்கிற்று. அப்படியே கரையில்தாவிக் குதிக்கலாமா என்று கூடத் தோன்றியது. வழக்கமான சடங்குகள் முடிந்தபின் கப்பல் அதிகாரிகள் 'கருணை'யின் பேரில் கரைக்குச் சென்றேன். 'புதிய உலகின்' முதல் துறை முகத்தின் இரவுக் காட்சிகள் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. மூன்று வாரங்கள் ஜப்பானியக் கப்பலில் நிறையச் சாப்பிட்டதன் பயனாக எனது உடம்பு மெலிந்திருந்தது. ஆர்வத்தோடு ஒரு இந்தியரின் வியாபார நிலையத்துக்குச் சென்று இந்திய உணவை ருசித்தேன்.

முதல் அனுபவம்

மறுநாள், எங்கள் கப்பல் சான் பெட்ரோ துறை முகத்தை அடைந்தது. லாஸ் வஞ்சல்ஸ் நகரத்துக்கு இது தான் துறை முகம். கப்பல் ஏழு மணிக்குக் கரை சேர்ந்தது. எல்லோரும் சுலபமாகக் கரையிலிறங்கி தங்களிஷ்டம் போல் சென்றனர். கப்பலில் இருந்த இந்தியன் நான் ஒருவன் தான். எனவே, துரதிர்ஷ்டமும் தொந்தரவும் எனக்குத் தான் நேர்ந்தது.

ஆஜானுபாகுவான இமிகிரேஷன் ஆபீசர் முன்னே கொண்டு போய் நிறுத்தப்பட்டேன். என்னுடைய பாஸ்போர்ட்டைப் பல முறை பரிசீலனை செய்துவிட்டு என்னை உற்றுப் பார்த்தார். அச்சடித்த பாரம் ஒன்றைக் கொடுத்து அதைப் பூர்த்திசெய்யும்படி கூறினர். 'உனக்குப் புத்தி ஸ்வாதீன மிருக்கிறதா?' என்றொரு கேள்வி இருந்தது. இதைப் படித்ததும் எனக்கே சந்தேக முண்டாயிற்று. அந்த பாரத்திலுள்ள மற்ற கேள்விகளைப் படிக்கும்பொழுது என்னுடைய சந்தேகம் உறுதிப் பட்டது.

'உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?' என்பது மற்றொரு கேள்வி. இதைப்பற்றி எனக்குச் சந்தேகமே உண்டாகவில்லை. அந்த பாரத்தை முற்றிலும் படித்து மூளை குழம்பியதற்குக் காரணம் நான் படித்த பாவந் தானல்லவா!

இதோடுமட்டும் என்னை விடவில்லை. இந்த பாரங்களைப் பொங்கிற்று. பாவம், அவர் என்னை நீக்ரோ என்று நினைத்துக் கொண்டார்; தலைப்பாகையின்றி அமெரிக்கா செல்லும் இந்தியர்களில் பலர் இக்கதிக்குத் தான் ஆளாகின்றனர். 'இங்கு தங்குவதற்கு இடமில்லை' என்றார். 'வேறு தங்குவதற்கு ஏதாவது இடங்காட்டக்கூடுமா?' என்றேன். தன்னால் முடியா

அமெரிக்காவிலுள்ள இந்த மரம் வானுற ஓங்கி வளர்ந்திருக்கிறது. அதன் வயிற்றினிடையே இயற்கையாக ஏற்பட்ட இடைவெளி இன்று ஒரு மோட்டார் வண்டி சென்றுவரப் போதிய அகலமுள்ளதாக அமைந்திருக்கிறது.

பூர்த்தி செய்வது அந்நியர் எல்லோருக்கும் பொதுவான சடங்கு. எனக்குத் தனியாக நேர்ந்த கஷ்டங்களைக் கூறி என்ன பயன்? அடிமை இந்தியர்களாகிய உங்களால் அதற்கு என்ன பரிகாரம் தேடமுடியும்? கடைசியாக இரவு ஒன்பது மணிக்குக் கப்பலை விட்டிறங்கினேன்.

நிறத் திமிர் வேகம்

முன்பின் தெரியாத ஒரு நாட்டிலே, நிறத் துவேஷம் நிறைந்த லாஸ் வஞ்சல்ஸ் நகரிலே எனது நிலை பரிதாபமாய் இருந்தது. கையில் சிறு பெட்டியுடன் ஒய். எம். ஸி. ஏ. க்குச் சென்று தங்குவதற்கு இடங் கொடுக்கும்படி கேட்டேன். என்னைப் பார்த்ததும்—என் நிறத்தைப் பார்த்ததும், அந்த அதிகாரிக்குக் கோபம் தென்று மறுத்துவிட்டார். எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு அமெரிக்க இளைஞர் என்னைத் தனியாக அழைத்து, தங்குவதற்கு அங்கே இடமிருக்கிறதென்றும், காரியதரிசியைப் பார்க்கும்படியும் கூறினர்.

விரைந்து சென்று காரியதரிசியைப் பார்த்தேன். ரங்கூன், டோக்கியோ ஒய். எம். ஸி. ஏ. காரியதரிசிகளின் அறிமுகக் கடிதங்களையும் கொடுத்தேன். நடந்ததை மறந்து விடுமாறு கூறி நல்ல அறையொன்றை ஏற்பாடு செய்தார் காரியதரிசி.

மின்னாத நட்சத்திரங்கள்

லாஸ் வஞ்சல்ஸிலும் ஹாலிவுட்டிலுமாகப் பல தினங்கள் கழிந்தன. இரவு நேரங்களில் ஹாலிவுட் புல்வார்டுகளுக்குச் சென்றேன். மின்னுகின்ற நட்சத்திரங்கள் ஒன்றும் எனக்குத் தென்படவில்லை. அங்குள்ள நட்சத்திரங்கள் மின்னுகின்ற பொருள்கள் அல்ல என்றார் கூட வந்த நண்பர்.

லாஸ் வஞ்சல்ஸிலிருந்து நியூயார்க் சுமார் 3,200 மைல். ரயிலில் 4 நாள் பிரயாணம். இப்பிரயாணத்தில் கண்ட காட்சிகளை நினைக்கும்பொழுது இப்பொழுது கூட மகிழ்ச்சி யுண்டாகிறது. அந்தப் பிரயாணத்தின் எதிர்பாரா அனுபவங்களிலே சிகரம் போன்றது ஒரே ஒரு சம்பவந் தான்.

டெக்ஸாஸ் என்பது அமெரிக்காவிலுள்ள ஸ்டேட்டுகளில் ஒன்று. இந்தப் பகுதியில்தான் நிறத்துவேஷம் உச்சஸ்தானத்தை அடைந்திருக்கிறது. இந்த ஸ்டேட்டின் வழியாக ரயில்



செய்தி (ஸினிமா) படங்கள்
அமெரிக்கா, ஜப்பான், ஜர்
சென்று திரும்பியவர். அமெ
வங்களைக் கீழே தருகிறார்.

வென்றும், இம்மாதிரி நடத்தப் பட்டேன் என்றும் கூறினேன்.

ரயில் நின்றது

அவர் நல்ல மனிதர். வருத்தப் பட்டார். மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். தனது அறைக்கு அழைத்துச் சென்று தனியாக உணவு பரிமாறும்படி செய்தார். இது மட்டுமல்ல, ரயில்வே விருந்த மிக உயரமான ஒரு கட்டிடத்தைக் குறிப்பிட்டுக் காட்டினார். அந்தக் கட்டிடத்திற்கு எதிரே தான் எனது பள்ளிக் கூடம். பிரின்சிபாலைக் கண்டு விஷயங்களைத் தெரிவித்த பின்னர் எம்பையர் ஸ்டேட் கட்டிடத்துக்குச் சென்றேன். அங்கு நின்ற வேலைக்காரன், உச்சிக்குச் செல்ல ஒரு டாலர்தான் கட்ட



நியூயார்க் நகரத்தில் ஒரு தெரு முனையில் எதிரெதிராக உள்ள இரு கட்டிடங்கள். இரண்டிலும் ஒரே கம்பெனியாரின் வர்த்தகம். ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்ல, மேலே மாடிகளுக்குப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. முதல் மாடிக்கருகில் தெரியும் பாலம் ஒரு ரயில்வண்டிப் பாதை! அதற்குக் கீழேதான் மோட்டார், பிரயாணிகள் முதலியவர்களுக்கு சாலை.

சென்ற பொழுது டல்லாஸ் என்ற ஸ்டேஷனில் பகலுணவுக்காக முப்பது நிமிஷம் ரயில் தாமதித்தது. ரயில்வே உணவுச் சாலைக்குச் சென்றேன். நீக்ரோக்களுக்கென்று மறைவாக ஒரு தனியிடம் ஒதுக்கியிருக்கின்றனர். வேலைக்காரப்பெண் நீக்ரோக்களுடன் உட்காரும்படி கூறினாள். எனக்கு முன்னே உட்கார்ந்த நீக்ரோக்களுக்கு ஒரு பெண் பரிமாறினாள். என்னை அவள் கவனிக்கவே யில்லை. பத்து நிமிஷமாயிற்று, பதினைந்து நிமிஷமுமாயிற்று. பசி யொருபுறம், அவமானம் ஒரு புறம். ரயிலுக்கு நேரமாகிவிட்டதே என்ற திகில் மறுபுறம். இவைகளை யெல்லாம் தாங்க மாட்டாது ஹோட்டல் மானேஜரிடம் சென்று நான் ஒரு இந்து கார்டை அழைத்து நான் சாப்பிட்டு ரயிலேறும் வரை ரயிலை நிறுத்தும்படி கூறினார். சில நிமிஷங்களுக்குமுன் நேர்ந்த அவமானத்தையும், இப்பொழுது ஒரு இந்திய மாணவனுக்காக ஐக்கிய அமெரிக்கா நாட்டில் ஒரு ரயில் நிறுத்தப்படுவதையும் நினைத்தபொழுது எனக்கே ஆச்சரியமுண்டாயிற்று.

நான்காவது நாள் நியூ யார்க் நகரத்தையடைந்தேன். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வெளியே வருவதற்கே பல நிமிஷங்கள் ஆயின. ‘எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ்’ எங்கே யிருக்கிறதென்று ஒருவரைக் கேட்டேன். அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார். அவர் சிரித்ததின் அர்த்தம் எனக்குப் பின்னர் தான் விளங்கிற்று. அதே வீதியி ணம் என்று கூறி அந்தக் கட்டிடத்தைப் பற்றிய சிறு புத்தகமொன்றைக் கொடுத்தான்.

ராட்சஸ வீடு

102 மாடிகள், 1248 அடி உயரம், இருபதாயிரம் ஜனங்கள் வேலை செய்கிறார்கள். கட்டிடத்தின் மதிப்பு 15 கோடி ரூபாய். மேலே செல்ல 32 லிப்டுகள், என்றெல்லாம் அப் புத்தகத்தில் படித்தேன். உச்சிக்குச் சென்று கீழே நோக்கியபோது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஏனென்றால் தலை சுழன்றது.

மனிதனுடைய சக்தியைப் பற்றி ஆச்சரியப் பட்டுக் கொண்டே பூமிக்குக் கீழ் ஓடும் ரயில்வே நிலயத்தை நோக்கி நடந்தேன். மணிக்கு 60 மைல் வேகமுள்ள இந்த ரயில் பத்து நிமிஷத்தில் 125-வது வீதியை அடைந்தது.

திமிரின் நடுவே சோதரத்துவம்

ராக்பெல்லர் என்பது உலகறிந்த பெயர். இவ்வள்ளல் கோடி ரூபாய் செலவில் நியூயார்க் நகரில் ‘இன்டர் நாஷனல் ஹவுஸ்’ என்ற மாணவர் விடுதி அமைத்துள்ளார். இங்குள்ள இந்திய, சமூகத்தில் நானும் ஐக்கியமானேன். 52 தேசங்களைச் சேர்ந்த 300 மாணவர்களும் 300 மாணவிகளும் இங்கு வசிக்கின்றனர். இவர்களுடைய உடையும், பாஷையும் வெவ்வேறு விதமானது. ஆனால் இவர்கள் அனைவரும் ஒரே மாதிரி உடையணிகின்றனர். ஒரே பாஷை பேசுகின்றனர்.

வெளி யுலகில் நடைபெறாத சில ‘அதிசயங்கள்’ இந்த வீட்டிலே நிகழ்கின்றன. ஜப்பானியனும் கோரியப் பெண்ணும் கைகோர்த்துச் செல்வார்கள். ஜர்மனும் யூதனும் அளவளாவுவார்கள். சீனரும் ஜப்பானியரும் அந்நியோந்நிய மாயிருப்பார்கள். ஆங்கிலேயனும் இந்தியனும் இணைபிரியாதிருப்பார்கள். அமெரிக்கனும் நீக்ரோவும் சரியாசனத் தமர்வார்கள். இத்தாலியனும் எதியோப்பியனும் கைகுலுக்கி க்ஷேமம் விசாரிப்பர். ஆனால் இவர்களிற் பெரும்பாலோர் சொந்த நாடுகட்குச் சென்றவுடன் சிறந்த தேசீயவாதிகளாகி விடுகிறார்கள்.

நியூயார்க் வாழ்க்கை கொஞ்ச நாள் வரை எனக்கு பிரமிப்பைக் கொடுத்தது. மனிதர்கள் இயந்திரங்களின் அடிமைகளாகி விட்டார்கள் போலத் தோன்றியது. ஒரு வார முடிவில் அமெரிக்கக் குடும்பமொன்றுக்குச் சென்றிருந்தேன். அந்த அம்மையார் வீடு முழுமையும் காட்டினார். வழக்கம் போல் அமெரிக்கர் வீடு மிகச் சுத்தமாக இருந்தது. துணிமணிகளைத் துவைப்பது மின்சாரம். எச்சில் பிளேட்டுகளை சுத்தம் செய்வது இயந்திரம். வீடு பெருக்கும் கருவிக்குத் துணை செய்வது மின்சாரம். சமையல் செய்வதும் மின்சார அடுப்பில்தான்.

வீடுகளில் மட்டுமல்ல, அமெரிக்கர்களின் வாழ்க்கையே மின்சார மயமாகத்தான் இருக்கிறது. பூட்ஸ் துடைப்பது இயந்திரம், காசைப்போட்டவுடன் ஜன்னல் வழி உணவளிப்பது இயந்திரம். ஜன நெருக்க முள்ள வீதியைக் கடப்பதற்கு மக்களைத் தூக்கிச் செல்வது இயந்திரம்.

மோட்டாரில்

கொஞ்ச நாளில் நியூயார்க் நகர வாழ்க்கை ‘புளித்து’ விட்டது, ஒரு நார்வீஜிபன், ஒரு ஜர்மன். ஒரு ஹாலந்துக்காரன் · ஆகிய மூன்று மாணவர்களுடன் சேர்ந்து அமெரிக்காவில் சுமார் பதினையாயிரம் மைல் மோட்டாரில் பிரயாணம் செய்தோம். ரயில் பிரயாணத்தைவிட, மோட்டார்ப் பிரயாணத்தில் எங்களுக்

ஓர் "எர்க்கோ" ரிகார்டு

(இதைப் போன்ற இன்னும் அநேக மிருக்கின்றன. அதில் இது ஒன்று !)

C. INDIAN POSTS AND TELEGRAPHS DEPARTMENT 8

NOTICE.
This form must accompany any inquiry made respecting this Telegram.

Charges to pay. Rs. As.

MOUNT ROAD TEL. 25 JUN 38

Handed in at (Office of Origin) | Date. | Hour. | Minute. | Service Instructions. | Words

TO

Recd. here at 9 H. 44 M.

O HA TRICHINOPOLY JN S I 25-18 ERKOKINO MADRAS MT RD
OPENED TODAY ERKO SOUND MARVELOUS CONGRATULATIONS
FOR YOUR EQUIPMENTS REGAL =

N B.—The name of the Sender, if telegraphed, is written after the text.
Lal Chand & Sons, Printers, Calcutta—No. 724R (B-255)—24 11-37—50,000 Bks



இந்தத் தந்தி திருச்சி ரீகல் டாக்கீஸிலிருந்து வந்தது. அங்கு டபிள் 'எர்க்கோ சூபர் 55' மெஷின்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. 1938 ஜூன் 24-ல் பிரபாத்தின் 'எதிர்பாராதது' படக்காட்சியுடன் தியேட்டர் ஆரம்பிக்கப்பட்டது.

*

ஜூன் மாதத்தில் அமைக்கப்பட்டவை :—

டபிள் எர்க்கோ சூபர் 55 மெஷின் **கடப்பை, ஸ்ரீ சத்யநாராயண டாக்கீஸில்** இணைக்கப்பட்டிருக்கிறது.

*

டபிள் எர்க்கோ சூபர் 55 மெஷின் **பங்களூர் ஸிடி உஸ்மானியா தியேட்டரில்** இப்போது அமைக்கப்படுகிறது.

*

சின்னாலபட்டி, ஏக்காடு, திருக்காட்டுப்பள்ளி முதலிய இடங்களில் சிங்கிள் மெஷின்கள் வைக்கப்படுகின்றன.

ஸோல் ஏஜண்டுகள் :

ஸௌண்டு பிராடக்ட்ஸ் கம்பெனி

ஹெட் ஆபீஸ் :

162, மௌண்ட்ரோடு, மதராஸ் — போஸ்டு பாக்ஸ் 78, பம்பாய் — 7, பிரிகேட் ரோட், பங்களூர்

பிராஞ்சுகள் :

கல்கத்தா — டெல்லி — கராச்சி

குச் செலவு குறைவு, புத்தப் புதிய செவர்லட் மோட்டார் ரூ. 1,400 தான். பெட்ரோல் காலன் 6 அணா. இதைக் கண்டு பொறுமைப் படாதீர்கள்; இது அமெரிக்காவில்.

மோட்டாரிலே நான்கு ஜன்னல்கட்கும் எங்களுடைய நான்கு தேசீயக் கொடிகளையும், மத்தியில் அமெரிக்கக் கொடியையும் அமைப்பதென்று நிச்சயித்தோம். கொடி விற்கும் கடைக்குச் சென்றேன். இந்தியக் கொடி தவிர மற்ற நான்கு கொடிகளும் கிடைத்தன. இந்தியக் கொடிக்குப் பதிலாக யூனியன் ஜாக் கொடியைக் கொடுத்தனர். அதை நான் மறுத்து விட்டு,

மளிக்கும் புதிய மோட்டாரிலே ஒன்பது வாரங்கள் பிரயாணம் செய்தோம். திறந்த வெளிகளிலே கூடாரமடித்து உறங்குவோம். ஒரு சமயத்தில் ஒரே நாளில் 651 மைல் பிரயாணம் செய்தோம்.

சுதந்திர நினைவு

பிரபலமான கோடக் பாக்டரி, நயாகரா நீர் வீழ்ச்சி, டிட்ராய்ட் போர்டு மோட்டார் தொழிற்சாலை, சிக்காகோ நகரம், போல்டர் அணைக்கட்டு, கிராண்டு கான்யன், அமெரிக்க இந்தியர்களின் வாசஸ்தலம், நியூ மெக்ஸிகோ சுரங்கங்கள், ஹாலிவுட், நாஷனல் பார்க்குகள் முதலிய பலவற்றைப்



அமெரிக்காவில் தானடைந்த அனுபவங்களை எழுதும் தமிழன் ஸ்ரீ. ஏ. கே. செட்டியார், அந்த நாட்டில் ஒரு நிலக்கரிச் சுரங்கத்திற்குப் போனபோது அங்கிருந்த ஒரு தொழிலாளியின் விருப்பப்படி அவனுடன் எடுத்துக் கொண்ட படம்.

எனது சட்டையில் அணிந்திருந்த தேசீயக் கொடியை அவர்கட்குக் காண்பித்தேன். அந்த வியாபாரி ஆச்சரியத்தோடு நோக்கினார். ‘உலகில் உள்ள எல்லாத் தேசக் கொடிகளும் என்னிடமிருக்கின்றன—ஆனால் 35 கோடி மக்களுள்ள இந்திய தேசீயக் கொடி தெரியாமல் போய்விட்டதே’ என்று வருந்தினார். ‘ராட்டினம் அமைப்பது சிரமம், உங்கள் அவசரத்துக்கு முடியாது’ என்றார். ‘பாதகமில்லை, ராட்டினமின்றி மூவர்ணக் கொடியைக் கொடுங்கள்’ என்றேன். விரைவில் கொடியைத் தயார் செய்து கொடுத்தார். ஆனால் அந்தக் கொடிக்கு மட்டும் பணம் பெற மறுத்து விட்டார்.

ஐந்து கொடிகள் அலங்கரிக்க, அமெரிக்க நாட்டின் உன்னத ரோடுகளிலே, ரேடியோ சங்கீத

பார்த்துக் கொண்டே சென்றதால் எங்கள் பிரயாணம் மிக உற்சாகமாக இருந்தது.

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் நகரம் தனியான அழகுடையது. ஆறு லட்சம் ஜனங்கள் கொண்ட அங்கரிலே மூன்றரை லட்சம் மோட்டார்கள் இருப்பதனால் அதற்குப் பெருமையல்ல. ‘ஜனங்களால், ஜனங்களுக்காக, ஜனங்களுடைய அரசாங்கம்’ என்ற கொள்கையை நிலைநாட்டிய ஆபிரகாம் லிங்கனின் ஜீவகளையுள்ள அந்தப் பிரமாண்டமான பளிங்கு உருவச் சிலையும், அதற்கு முன்னே ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் தம்மை மறந்து தலைவணங்கி நிற்கும் உருக்கமான காட்சியும் தான் வாஷிங்டன் நகருக்குப் பெருமையளிக்கின்றன.

Exhibitors!

Pictures which you can't miss!!

★

TAMIL

JALAJA — Srimathi Bhanumathi (India's First Dance Picture)
SAVITRI — T. P. Rajalakshmi
SRI THIAGARAJA — (North & South Arcot & Chingleput Dt.)

TELUGU

BAKTHA KUCHELA — Mythological
SATI AHALYA do
MAYA BAZAAR — Godavari Dt.

HINDI & URUDU

300 DAYS & AFTER — Sabita Devi & Motilal
DYNAMITE — Surendra & Bibbo
LORD OF THE JUNGLE — Chandra Rao (Indian Tarzan)
DAULAT — do
HOT BLOOD — do
VALIANT — Stunt
KHUNI KON — do —Kanan Devi
WAMAQ EZRA — Romantic Drama
GRADUATE — Social - Gohar Karnataki
ZINGARO — Stunt

ENGLISH

CAPTAIN BLOOD — Million Dollar
JUNGLE PRINCESS — Super Jungle Thriller
CRUSADES — Million Dollar
LITTLE MISS MARKER - Shirley Temple
MILKY WAY — Harold Lloyd
TRAIL OF LONESOME PINE — Full Technicolor
LOVE PARADE — Maurice Chevalier
SMILING LIEUTENANT — Maurice Chevalier
LAST OUTPOST — War Picture

ALSO

SERIALS—COMEDIES—CARTOONS—NEWS

ALSO

CARBONS 7 X 10 m. m. and 8 X 12 m. m. Size

APPLY TO:

GENERAL FILM DIST. CO.

48, ARMENIAN ST. :: MADRAS

Phone: 4254 Telegrams: GENFILMS

ஸ்ரீ ரவீந்திரநாதர்



அனதிகாலந் தொட்டு, உலக இலக்கியச் சோலையில் இந்தியா அற்புதமான மலர்க் கொடிகளைத் தோற்றுவித்துத் தன் பங்கை நிரப்பி வந்திருக்கிறது. இந்த யுகத்தின் இந்திய மலர் ஸ்ரீ ரவீந்திரநாத டாகூர். அவரது கவிதை யுள்ளத்தைத் தமிழில் சித்தரிக்கிறர்,

ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்

கொஞ்ச காலத்திற்கு முன் ஸ்ரீ ரவீந்திர நாத டாகூர் தன்னை 'ஒரு உபாத்தியாயராகவும் கவியாகவும்' வர்ணித்துக்கொண்டார்; ஆனல் அவர் வாழ்க்கையில், இவ்விரண்டு அம்சங்களில் மட்டுமல்ல, எல்லா அம்சங்களிலும் உழன்றிருக்கிறர். சென்ற அறுபது வருஷங்களாக அவர் எழுதிக் குவித்துள்ள எழுத்துக்கள் யாவும் அதற்கு அத்தாட்சி. அவர் வங்காளியில் எழுதியிருப்பதின் ஒரு அம்சம் தான் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கிறது; தமிழில் ஒன்றுமே வரவில்லையெனச் சொல்லுமாறு, ஒரு சில சிறுகதைகளும் ஓரிரண்டு நாவல்களும் தான் வெளிவந்திருக்கின்றன.

இந்திய அரசியல் கிளர்ச்சிக்கு அங்குரார்ப்பணம் செய்த காலத்தில், அதாவது வங்காளப் பிரிவினை காலத்திலேயே, அவர் ஒரு அரசியல் வாதியாயிருந்தார்; சமூகச் சீர்திருத்தம் என்பதே முன்னணிக்கு வராதகாலத்தில் அவர் ஒரு முற்போக்குள்ள சீர்திருத்த வாதியாக இருந்தார்; ராம்மோகனருடைய ஊக்கத்திற்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடிய சிரத்தையுடனும் செல்வாக்குடனும் மத சம்பந்தமாகப் பாடுபட்டிருக்கிறர்; வங்காளி பாஷையில் தலைசிறந்த பத்திரிகாசிரியராக இருந்திருக்கிறர்; கல்வி விஷயத்தில் எப்பேர்ப்பட்ட சிறப்புடன் உழைத்திருக்கிறர் என்பது உலகமறிந்த விஷயம்; இதெல்லாம் போக, இந்தியாவில் உயிர் வாழும் கவிகளில் தலைசிறந்தவராகவும், உலகத்திலேயே ஒரு மகா கவியாகவும் விளங்குகிறர்.

இந்தக் கவிதையின் சிறப்பால்தான் அவர் நமது மனதைக் கொள்ளை கொள்ளுகிறர். வால்மீகி, காளிதாஸன் மரபில் தோன்றியவர் அவர். அவர்கள் வாக்கே, அவர் வாக்கு. அவர்கள் விஷயமே அவர் விஷயம். அவர் வங்காளிக் கவியல்ல. வங்காளி பாஷையில் அவர் எழுத நேர்ந்தது, அவ்வளவுதான். அவர் இந்தியக் கவி. அவருடைய கவிதை இன்னும் தமிழ் மக்களுக்கு தமிழில் கிடைக்காதிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கது. அவருடைய காவிய நூல்களில் ஒன்றைமட்டும் எடுத்து இங்கே சுருக்கமாக விமர்சனம் செய்து காட்டினல் அவருடைய பெருமை ஒருவாறு விளங்கலாம்.



1895-ம் வருஷத்தில் சித்ரா என்று பெயர் கொண்டு ரவீந்திருடைய சிறு காவியங்கள் (Lyrics) அடங்கிய புத்தகம் ஒன்று வெளியாயிற்று. (ஆங்கிலத்தில் சித்ரா என்ற புத்தகம் வங்காளியில் சித்ராங்கதா என்ற நாட்டிய காவியம்.) அப்பொழுது ரவீந்திரர் வாலிபம் முடிந்து நல்ல யௌவனத்தின் பூரிப்பில் இருந்த சமயம். இந்தப் புத்தகத்திலும் அந்த யௌவனமும் பூரிப்பும் இருக்கிறது. அந்தக் காலமே அவருடைய மனதின் சந்தியா காலம். பகலின் பகட்டும் படபடப்பும் குறைந்து, வரப்போகும் இரவின் ஆழ்ந்த சாந்தியும் சரளமும் தோற்றும் காலம். அவர் வாக்கு சித்ராவில் சொல்லழகின் சிகரமாக நிற்கிறது; அதன் பிறகு எல்லாம் தெளிவு, தூய வெண்மை, அமைதி; அதற்கு முன் பெருக்கு, குழப்பம், ஏக்கம் எல்லாம்.

இந்தச் சந்தியா காலத்தின் பிரதோஷ ஆரதி வேளையில் கவி தன் நிவேதனத்தை அழகு தெய்வத்தின்முன் சமர்ப்பிப்பதற்காகக் கொண்டு வருகிறர். அத்தெய்வத்தை எங்கெங்கோ தேடிக் கடைசியாகத் தன் உள்ளத்திலேயே கோவில்கொண்டிருந்ததைக் கண்டுவிட்டார். அங்கிருந்த அவளது உருவம் இயற்கைக் கண்ணுடியில் பல உருவங்களாகப் பிரதிபலித்துத் தென்பட்டது. அவள்தான் சித்ரா, அழகு; அவள்தான் ஊர்வசி; அவள்தான் விஜயினி; அவள்தான் ஜீவன தேவதை; அவள்தான் அந்தர்யாமி. இந்தப் புத்தகத்தின் தனிப் பாடல்களில் சில இப்பேர்ப்பட்ட பெயர்கள் கொண்டவை.

இந்த சித்ராவிலேயே சந்தியையைப் போன்ற கலப்பு குணம் தென்படுகிறது. வாலிப கவியின் பகல் வெளிச்சம் போன்ற கட்டற்ற வாக்கும், நடுவயது கொண்டுவிட்ட கவியின் இரவு போன்ற அடக்கமும் இதில் சேர்ந்து தென்படுகின்றன. வார்த்தைகளும் மாலை ஒளியைப்போல வீசி மறைகின்றன. அச்செய்யுள்களின் இசையும் நிதானமாக இருக்கிறது. கரி-ஓ-கோமல் அல்லது சபி-ஓ-கான் என்ற புத்தகங்களிலிருக்கும்வேகமும் ஆவேசமும் இதில் கிடையாது; இதிலிருக்கும் பெருவாரியான பாடல்கள் மெள்ள நகரும் அகவல் முறையில் அமைந்திருக்கின்றன. முதல் பாடலான சந்தியா என்பது புத்தகத்தின் போக்கையே உணர்த்துவதாக இருக்கிறது.

> "மனமே, மௌனம் கொள்க!
> மெதுவா யுந்தன்
> சிரம் வணங்கிச் சொல் விளம்பு;
> பகல் தணிந்தது,
> பிறந்த பொன்மாலையும் பெருகுது
> சாந்தியாய்—"

புத்தகத்தின் பொருள் அதன் பெயரில் அடக்கமாகிவிட்டது—சித்ரா—அழகு! இயற்கையின் அழகு மிக்க அம்சங்களுக்கு கவியின் மனது குரலிற்கு பதில் குரல் கொடுக்கின்றது குயில்போல. அந்தப் பதில் குரலே இந்தப் பாடல்கள். வெளியே வசந்தத்தின் வியப்பேறிய வுடலிலும், இலையுதிர்காலத்தின் இளகிய நிலவிலும் அழகு அளவற்ற மகிழ்ச்சியில் அலறுகிறது; கவியுள்ளம் அதைக் கண்டு காதல் கொள்ளுகிறது. அந்த அழகுதான் ஜீவன தேவதை. கவி முதல் பாடலில் சொல்லுவது போல அது உலகத்தின் நடுவில், அதன் வக்ஷஸ்தலத்தில் கௌஸ்துபம்போல விளங்குகிறது. கவியுள்ளத்திலும் அந்தர்யாமியாக இருக்கிறது என்கிறர் அப்பெயர் கொண்ட பாடலில். நிலவொளி நிறைந்த நள்ளிரவில், உலகமே ஓசையடங்கி உறக்கத்தில் கிடக்கும் பொழுது, அதன் புலன் வாயில்கள் பூட்டுண்டிருக்கும் பொழுது, கவியின் உள்ளம் வெளி யேறி, தனிமையின் சுயேச்சையில் உலவுகிறது. அப்பொழுது, திடீரென்று எதிர்பாராமல் அழகே, இரவின் தேவதைபோல, அதன்முன் தோன்றுகிறது:

> "தனி மஞ்சத்தில் தூக்கமின்றி
> யோர்
> மணி விளக்கின் மரகத வொளியில்,
> இரவின் ஏரார்ந்த ஜோதி எழில்
> மங்கை
> உலகின் காதலி, உயிர்திரு—"

கவி நிலவின் அடிமை; அந்நிலையில் காதலியின் கனைச் சேலையின் காற்றுகூட அவரை பாடல் மயிர்க்கூச்சடையச் செய்கிறது. அவருக்குக் கீர்த்தியும் வேண்டாம், கிதாப்பும் வேண்டாம்; தன் மௌன

ஆராதனை மலர்களை அவள் காலடியில் போட்டு நின்றால் போதும். இதுதான் அவருடைய ஆவேதன் (பிரார்த்தனை) என்ற பாட்டு. அழகு தெய்வத்தின் அலங்காரத் தோட்டக் காவலனாக இருந்து அவளுடைய கைகளுக்குமலர்க் கங்கணங்கள் கட்டிப் போட்டால் அவரது மனம் திருப்தியடைந்துவிடும். அந்தப்புனிதப் பூஜைக்கு அவர்தான் பூசாரி.

இந்த பக்தியில் வைஷ்ணவ பக்தர்களின் பரவசம்போன்ற ஒரு ஈடுபாடு இருக்கிறது. இயற்கை யழகு பரமாத்ம ஸ்வரூபத்தின் பிரத்தியக்ஷ சாயை. கவியின் அந்தராத்மா அதைக் காதலித்து அத்துடன் சேர்க்கை கொள்ள ஏங்குகிறது. ரவீந்திரரின் இந்தப் பரவச லயிப்பில் ஒரு அடக்கம் இருக்கிறது. அதனாலேயே ரவீந்திரர் அந்தப் பேரவாப் பித்தர்களில் ஒருவராகவில்லை. அவருடைய நாயக நாயகி பாவத்தில் ஒரு கட்டு இருக்கிறது. அது கவிதையின் எல்லைக் கட்டு.

உணர்ச்சி பொங்குமிடத்திலும் வாக்கு கட்டற்று அருள் போலப் பெருகுமிடத்திலும் பக்தியின் பரவச லயிப்பு இருக்கக்கூடும். அதேமாதிரிதான் ஆண்டாளின் வாக்கு. அதில் கவிதையின் எல்லைக் கட்டில்லை. குலசேகரரின் வாக்கில் கட்டு இருக்கிறது. ஒரு முறையில் கவிதையின் கட்டுக்கு மீறிய வாக்குதான் உண்மைக் கவிதையென்றே சொல்லலாம்.

ரவீந்திரரின் கவிதையில் அந்த மிகை கிடையாது. தத்துவத்தை தத்ரூபமாக பிறந்த மேனி கண்டு, சொல்லும் பலம் அவரிடம் கிடையாது. அந்தக் கண் கூசும் ஒளியை திரையிட்டே பார்க்கிறார். சூரியனைப் புகைக்கண்ணாடி கொண்டுதான் பார்க்கிறார். அழகை அனுபவிக்கும் வழியே அதுதான் என்கிறார். சிதம்பர ரகஸியமாக அழகை திரையெடுத்துப் பார்த்துவிடக்கூடாது.

விஜயினி என்ற பாட்டில் அழகு ஆடையின்றி குளத்திலிறங்கி குளிக்கிறாள். அவளைத் தன் சரங்கள் கொண்டு மாய்க்கவேண்டுமென்று மன்மதன் கரையில் காத்திருக்கிறான். ஆனால், அவள் கரையேறிய கணம் அவனே அழகால் அடிபட்டு விழுகிறான். இது ஒரு உட்பொருள் கொண்டது. தனியழகு மினனல்போல உயிரை மாய்த்துவிடுகிறது. மறைவும் மங்கலும்தான் அதை உயிருடன் இணையச் செய்கிறது. அழகு கையை மூடிக்கொண்டு "என்ன இருக்கிறது சொல்?" என்று கேட்டுக் கொண்டே இருக்கிறாள். நாம் திகைப்புடனும் தித்திப்புடனும் யுகம் யுகமாக ஊகித்து "அது, இது" என்று சொல்லிக்கொண்டே இருக்கிறோம். அதை நாம் திறந்து பார்த்துவிடவே கூடாது.

அந்த அழகின் உருவம் ஊர்வசி. அவள் உயிரின் காதலி. காளிதாஸனின் மேகசந்தேசத்தில் யக்ஷன், குபேரன் உத்தரவால் அளகாபுரியிலிருந்து ராமகிரிக்கு வெளியேறிப் போகும்படி நேருகிறது. அவன் அங்கேயிருந்து அளகாபுரியிலிருக்கும் தன் காதலியைப்பற்றி நினைத்து நினைத்து உருகுகிறான். அந்தராத்மா நாடு கடத்தப்பட்ட அந்த யக்ஷன் போல அவளைக் காண ஏங்குகிறது. தன் ஆசையின் உன்னத குன்றுகளிலிருந்து அவளுக்கு, செய்தி யனுப்புகிறது. அவளை பிரகிருதியின் பல நிகழ்ச்சிகளில் பார்க்கிறது. அவளுடைய மார்பின் மாலையிலிருந்து நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் உதிர்கின்றன. அவளுடைய ஒட்டியாணம் உலகக் கோடிகளில் நெகிழ்ந்து கிடக்கிறது. கூந்தல் அவிழ்ந்துவிழ திக்குகளில் இருள் சூழ்கிறது. அவளுடைய சேலை கலைந்து சந்திரோதயமாகிறது. மனிதனின் மார்பில் அடிக்கும் சுருதி லயத்திற் கொப்ப ஊர்வசி நாட்டியம் செய்கிறாள். கவி மதுவுண்டு வெளியேறிய வண்டுபோல மிதமிஞ்சிய மகிழ்ச்சியில் பாடுகிறான்.

அழகு ஆனந்தத்தின் ஆலயம் மட்டுமல்ல; ஏக்கம்கூட. அவள் மூலஸ்தானத்தில் மணிதீபமாக இருக்கிறது. நிலவு ஏக்க வெள்ளம். இரவு உயிர்க் கர்ப்பம் கொண்ட துக்கச் சொரிவு.

ஆனாலும் துக்கத்தின் நடுவிலும் இன்பம் இருக்கிறது. துக்கத்தின் நுனியில் இன்பம் காம்பு கனிந்த பழமாகத் தொங்குகிறது.

மட்ட மத்தியான வேளை. கங்கையில் ஒரு படகிலிருந்து கவி சுற்றுப்புற ஆனந்தத்தை உலர்ந்த தரை ஜலத்தை உறிஞ்சுவதுபோல உறிஞ்சுகிறார்.

இப்புத்தகத்தில் கவி காதலுக்கும் அழகிற்கும் மகுடாபிஷேகம் செய்கிறார். அந்த விசேஷ சந்தர்ப்பத்தில் அந்தராத்மா காதலிக்கு அளிக்கும் பரிசென்ன? என்றும் நிறைவேறாமல் சதா தன்னையே மீறி மீறி ஏங்கிக்கொண்டிருக்கும் மனோரதம்! அந்த மனோரதம் சொல்லாத ஒரு சொல், பாடாத ஒரு பாட்டு, செய்யாத ஒரு செயல்.

இதைத்தான் எனக்குக் கொடுத்தார்கள்

ஐம்மி
வெங்கடரமணய்யாவின்
லிவர்க்யூர்
இது
மண்ணீரல், கல்லீரல் கோளாறுகளுக்கு
இணையற்ற ஔஷதம்
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்
அல்லது
ஐம்மி வெங்கடரமணய்யா
லிவர் & ஸ்பிளீன் ஸ்பெஷலிஸ்டு
2 & 8, சாலைத் தெரு, மைலாப்பூர், மதராஸ்
கிளை ஆபீஸ் :—தெப்பக்குளம், திருச்சி

1938-ம் வருஷத்திய மகத்தான வெற்றிச் சிகரம்

கிருஷ்ணன் தூது

நடிகர்கள் :

செருகளத்தூர் சாமா விசலூர் சுப்பிரமணியபாகவதர்
M.R. லக்ஷ்மி நாராயண பாகவதர் S.S. மணி பாகவதர்
C.S. தன்சிங் R.K. ராமசாமி N. திருவேங்கடம்
P.R. சீனிவாசன்

நடிகைகள் :

M. R. வாசவாம்பாள் M. N. விஜயாள்
M. K. ருக்மணி T. S. சுபத்திரா
M. R. கனகரத்தினம் M. R. ராமலக்ஷ்மி
K. பாபுச்சி

&

நவீன தென்னாலிராமன்

N. S. கிருஷ்ணன் ஜாலி கிட்டு T. S. துரை ராஜ் குஞ்சிதபாதம் பிள்ளை T. N. வாசுதேவ பிள்ளை
T. S. கமலம் T. M. ராஜம் T. V. அன்னபூரணி

படப்பிடிப்பு :—கமால் கோஷ் டைரக்ஷன் :—R. பிரகாஷ் ஒலிப்பதிவு :—P. K. விஸ்வநாத்

ஸ்டுடியோ :—மோஷன் பிக்சர் ப்ரொட்யூஸர்ஸ் கம்பைன்ஸ்

விபரங்களுக்கு :

தந்தி : Thoothu

Rajagopala Talkies

போன் : 86006

27, Lloyds Road, : : Royapettah, Madras

இத்துடன் திருக்கோகர்ணம் மாணிக்கத்தின் அரிய சங்கீத விருந்து

கல்லில் செதுக்கிய கவிதை

தொடர்ந்துவரும் சந்ததிகளுக்கென்று, நமது முன்னோர் தங்கள் சிற்ப, சித்திரக் கலைத் திறனை "கல்லில் செதுக்கிய சிலையாக" வைத்துச் சென்றனர். இது மகாபலிபுரத்திலுள்ள "பகிரதன் தவம்" என்ற இடத்தின் படம். பகிரதனுடைய கோர தவத்தை நையாண்டி செய்வதுபோல கீழ் வலப்புறம் ஒரு ருத்ராக்ஷப் பூனையும் கண்மூடி மௌனியாகி நிற்கிறது!

சித்திரமும் சித்திரக்காரர்களும்



...வெறும் கரிக்கட்டியினல்...

நண்பர்கள் கோஷ்டியாக மகா பலி புரம் போய்த் திரும்பிக் கொண்டிருந்தோம். கரடு முரடான கற் குன்றுகளுக்கு ஜீவகளை கொடுத்து, நிரந்தர அதிசயங்களாக ஆக்கியிருந்த மகா பலி புரத்து அற்புதச் சிற்ப வேலைகளின் அழகு வடிவங்களால் என் நெஞ்சு நிறைந்திருந்தது. நண்பர்களிடையே ஒரு அபூர்வமான கலகலப்பு கொந்தளித்துக் கொண்டிருந்தது.

ரயில் வண்டி பல்லாவரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. எல்லோரும் குதூகலமாகப் பேசிக் கேலி பண்ணி சிரித்துக் கொண்டிருந்தோம். எதிரில் பல்லாவரம் மலை திடீரென்று எழுந்தது போலக் காட்சி யளித்தது. அதை எல்லோரும் தான் பார்த்தோம். திடீரென்று ஒரு நண்பர் பேசினர். எங்கள் கலகலப்புணர்ச்சியை யாரோ ஒரு தரம் குலுக்கிவிட்டது போலாகி விட்டது.

“மகாபலிபுரத்து மலைகளுக்கு ஜீவகளை கொடுத்த சிற்பிகளைப் பற்றிப் பேசுகிறோமே; அதோ பாருங்கள். இந்தப் பல்லாவரம் மலைக்கு ஜீவகளை கொடுத்திருக்கிற சிற்பியின் கைத்திறம் எப்படி யிருக்கிறது!” என்றார் நண்பர்.

எல்லோரும் கலகலவென்று விழுந்து விழுந்து சிரித்தோம். ஆனாலும் அவர் பேச்சில் இருந்த சாட்டையடிபோன்ற நையாண்டி சுரீர் என்று தைத்தது எல்லார் நெஞ்சிலும்.

வேட்டு மருந்து வைத்து மலையைச் சிதற அடித்து கோரம் கோரமாக எழுப்பப்பட்ட பிளவுகளுடன் காட்சியளித்தது பல்லாவரம் மலை. அதிலே செதுக்கப் பட்டிருந்த வடிவங்களை ராட்சஸ ரூபங்கள் என்பதா? பைசாச உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன என்பதா?

அங்கே சுமார் ஆயிரம்வருஷங்களுக்கு முன் ஒரு மலை யாரோ ஒருவனுடைய கண்ணில் அற்புதமான சிலா வடிவங்களை உள்ளடக்கிக் கொண்டு காட்சி யளித்தது. தன்னுள் அடங்கிக் கிடந்த அந்த அதிசயச் சிற்பங்களின் ரகசியத்தை அந்த மலை அவனிடம் எப்படி வெளியிட்டதோ! அதற்குள் எத்தகைய அழகு ஒளிந்து கொண்டிருந்திருக்கிறது!

இங்கே பல்லாவரம் மலைக்குள் அத்தகைய அழகு கொஞ்சம் கூட இருக்கவே யில்லையா? இருந்திருந்தால் அதை வெளியிலிருந்தே பார்த்திருக்கக் கூடிய சிற்பி எங்கே? மலையின் இந்த ரகஸிய பாஷையைக் கேட்டுப் புரிந்து கொண்டு, அந்த உற்சாகத்தில் ஈடுபடக் கூடிய சிற்பி இன்னும் வரவில்லை போலும்.

ஆனல் அந்தச் சிற்பி வருவதற்குள் இன்னொருவன் முந்திக் கொண்டு விட்டான். ஒரே கும்பலாக ராட்சஸ அளவாக நிற்கும் அந்த மலையைத் தூளாக்கி மோட்டாரும் கோச்சும் ஓடும் சாலைகளாக்கி விடலாம் என்ற ரகஸியத்தை அறிந்த ஒருவன் முந்தி விட்டான்.

மகாபலி புரத்து மலைக்கு ஒருவன் சிற்றுளியால் உயிர் கொடுத்தால், பல்லாவர மலையை ஒருவன் வேட்டு மருந்தால் வண்டிச் சாலையில் சரளைக் கல்லாகப் பரப்பி விட்டான்!

இம்மாதிரி எண்ணங்கள் என் மனதில் ஓட ஆரம்பித்தன. உண்மையாகவே இரண்டு மலைகளும் ஆதியில் ஒரேமாதிரி இயற்கை நியதியால் எழுந்து நின்ற வெறும் காடுகள்தானே. ஒன்றைப் பார்த்தவன் கண்களுக்கு அதனுள் “பகீரதன் தவம்”, “பாண்டவர் ரதங்கள்” முதலிய சிற்பங்கள் ஒளிந்திருப்பது பட்டது. மற்றவன் கண்களில் வண்டிச்சாலையில் பரப்ப சரளைக்கல்கள்தான் இந்த மலைக்குள்ளிருப்பதாகத் தோன்றியது.

...அவனவன் மனசிலே...

அவனவன் மனதில் எத்தகைய அழகோ, உபயோகமோ மேலோங்கி இருந்ததோ அது அவன் பார்த்த மலைக்குள்ளும் தெரிந்தது!

சிற்பி, சைத்ரீகன் என்பவர்கள் நாமெல்லோரும் பார்க்கும் சாதாரண, தினசரி இயற்கைக் காட்சிகளிலேயே ஒளிந்துகொண்டிருக்கும் அழகுகளைக் கண்டுவிடும் அந்த அபூர்வ சக்தி படைத்தவர்கள். அவர்கள் சிற்பிக்கும் அல்லது சித்திரிக்கும் அழகுகள் அவர்கள் மனதிற்குள்ளேயே இருந்ததேயன்றி வெளிப்பொருள்களில் இல்லை எனலாம்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு எனக்குச் சில சைத்ரிகர்களுடன் நெருங்கிப் பழக சந்தர்ப்பமும், அதிர்ஷ்டமும் கிடைத்தது. அவர்களது மனப்போக்கைக் கூர்ந்து கவனிக்கும் ஆவலும், பயிற்சியும்கூட என்னிடம் பிறந்து வளர்ந்தன.

தற்காலம் தமிழ்நாட்டிலுள்ள சித்திரக்காரர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இந்த வெகு சிலரும்கூட பத்திரிகை உலகில், அவசரம் அவசரமாகத் தோன்றி வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடும் விளக்கச் சித்திரங்களிலேயே அதிகப் பொழுதைச் செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுடனெல்லாம் நான் கொஞ்சம் கிட்ட நெருங்கிப் பழகச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அப்போது அவர்களது சித்திர மனப்போக்கைக் கண்டு புளகித்து நின்றிருக்கிறேன்.

ஒருசமயம் நான் என் அறையிலிருந்து வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தேன். மாடிப் படியிறங்கி வீதியை யடைந்தேன். எதிரே யிருந்த கட்டிடத்தைச் சுற்றி அமைந்திருந்த இரும்புக் கிராதியருகில் கண்ட காட்சி தூக்கிவாரிப் போட்டது.

ஒரு பசுங்கன்று; நோஞ்சான்; கம்பியில் கட்டப்பட்டிருந்தது. இன்னொரு கன்று கொஞ்சம் பெரியது, திமிருடன் வளர்ந்தது, கட்டியிருந்த கன்றை முட்டிக் கீழே தள்ளிவிட்டு, மேலும் அதை மோதி முட்டப் பாய்ந்து கொண்டிருந்தது. கீழே விழுந்த நோஞ்சானின் கால்கள் பறப்பிக் கிடக்கின்றன. சமாளித்து எழுந்திருக்க முயலுகிறது. ஆனல் தடியன் அதை எழவிடாமல் மோதித் தள்ளுகிறது. இதை யாரோ ஒருவர் நின்று வேடிக்கை பார்க்கிறார்!

இந்தக் காட்சியைப் பார்த்தவுடன் பாய்ந்து ஓடி தடிக்கன்றை அதட்டி விரட்டினேன். நான் ஓடிப்போய் அதை விரட்டமுயன்றவுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர் “இந்தா........ பேசாமேயிரு” என்று என்னைத் தடுக்க முன் வந்தார்.

இருவரும் ஏககாலத்தில் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டோம். ஸ்ரீமான் மாலி! “உங்கள் ரஸனையது; என் பங்கு இது” என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு தடிக் கன்றை விரட்டினேன். நோஞ்சான் தத்திப் பித்தி எழுந்து நின்றது.

நோஞ்சான்மேல் என் நெஞ்சில் சுரந்து ஓடிய ஜீவதயை மாலியிடம் இல்லையா? அவ்வளவு கடின சித்தரா அவர் அந்த அபாக்கியக் கன்றின் அவஸ்தையை ரஸித்துக் கொண்டு நிற்க? அவருடைய நெஞ்சில் எழும் ஜீவதயா உணர்ச்சியையும் மீறி நிற்கிறது அவரது சைத்ரீக உணர்ச்சி. அந்த இரண்டு கன்றுகளினுடைய அந்த அபூர்வமான நிலைகளை மனதிலேயே படம் பிடித்துக்கொண்டு நின்று விட்டார் சித்திரக்கார மாலி. அவருடைய சித்திர மனம் மற்ற மானுஷ்ய உணர்ச்சியை யெல்லாம் எங்கோ அதல பாதாளத்தில் அமுக்கித் தள்ளிவிட்டு முன்னல் வந்து விட்டது படம் பிடிக்க.

அன்று முதல் மாலியின் படங்களைப் பார்க்கும்போதெல்லாம் என் மனக்கண் முன் அந்தக்

பி. எஸ். ராமையா

எழுதியது



பட்டுக்குல்லாவும் பஞ்சுகோட்டிய தாடியும்

(சென்னை சர்க்கார் சித்திரக் கலாசாலை பிரின்ஸ்பால் ஸ்ரீ சௌத்ரி எழுதிய படத்திலிருந்து ஸ்ரீ டி. வி. ராமச்சந்திரன் தாமிரத்தகட்டில் செதுக்கியது.)

கன்றுகளின் காட்சி வந்து நிற்கிறது. மாலியின் ஒவ்வொரு சிறிய கோடும் அம்மாதிரி ஒரு நாடகத்தில் பிறந்ததாகவே தோன்றுகிறது.

சித்திரக்காரர் ஸ்ரீ. கே. ஆர். சர்மாவைத் தெரியாத தமிழ் பத்திரிகை வாசகரே இருக்க முடியாதெனலாம். சர்மாஜியின் (நண்பர்கள் சொந்தத்துடன் குறிக்கும் மரியாதைப் பெயர்) வீட்டில் கலியாணம். இரவு படுக்கை நேரம். ஒரு சிறு குழந்தை தரையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தது. "குழந்தை வெறுமனே படுத்துக் கிடக்கிறதே; ஒரு தலையணையாவது வைத்துப் படுக்க விடப்படாதோ" என்றேன்.

உடனே சர்மாஜி "குழந்தைகளின் தோள்பட்டை உயரம் ரொம்பக் குறைவு தானே. தலையணை, சுகத்திற்குப் பதில் குழந்தைக்கு நோவுதான் கொடுக்கும்" என்றார்.

சர்வ சாதாரணமான விஷயம் தான். ஆயினும் குழந்தையின் தோள்பட்டை உயரம் தலையணைக்குச் சிறியது என்பதை நம்மில் எவ்வளவு பேர் கவனித்திருக்கிறோம்? சித்திரக்காரனின் கண்கள் தாமாக இதையெல்லாம் அளவெடுத்து விடுகின்றனவல்லவா?

ஸ்ரீ. ஆரியாவும் (ஸ்ரீமான் கே. பாஷ்யம்) நானும் சில காலம் சேர்ந்து ஒரே அறையில் வசித்தோம். அந்தக் காலங்களில் நான் ஏதாவது புஸ்தகத்தையோ அல்லது பத்திரிகையையோ எடுத்துப் படித்துக்கொண்டேயிருப்பேன். ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டோ, படுக்கையில் படுத்தோ, படிப்பது என் வழக்கம். நண்பர் ஆரியா கையில் பென்சிலுடன் மேஜை யடியில் உட்கார்ந்து ஏதாவது கிறுக்கிக் கொண்டிருப்பார். அவர் என்ன கிறுக்குகிறார் என்று நானும் கவனித்துப் பார்த்ததில்லை. அவரும் பிரக்ஞையோடு அதைச் செய்யாததால் என்னிடம் காட்டியதும் இல்லை.

ஒரு நாள் தற்செயலாக அவருடைய நோட்புத்தகத்தை எடுத்துப் புரட்டினேன். பக்கம் பக்கமாகப் புரட்டப்புரட்ட சாட்சாத் நான் இருபது முப்பது தினுசான நிலைகளில் படமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறேன்! ஆரியாவுக்கே அதையெல்லாம் எழுதியிருப்பதில் ஏதோ விசேஷமிருப்பதாகத் தோன்றவில்லை. சித்திரக்காரன், வேறு வேலையின்றி உட்கார்ந்திருக்கிறார். கண்கள் ஒரு நிலையைப் பார்க்கின்றன. கையிலுள்ள பென்சில் அதைப் பதிவு செய்கிறது அவருக்கே தெரியாமல்!

ஸ்ரீமான் சேகர் கார்த்திகேயா பிலிம்ஸில் ஒலிப்பதிவாளராகவும் சித்திர டைரக்டராகவுமிருந்தாரல்லவா? அந்த சமயம் ஒருநாள் அங்கு போயிருந்தேன். மயூரா பிலிம்ஸ் "அதிர்ஷ்டம்" என்ற படத்திற்காக ஒரு நாடகமேடைசீன் ஜோடனை நடந்துகொண்டிருந்தது. அநேகமாக எல்லாம் தயாராகி விட்டது எனலாம். சேகர் அங்கு வந்து சேர்ந்தார். கொஞ்ச நேரம் நின்று பார்த்தார். யாரோ ஒருவனைக் கூப்பிட்டு ஏதோ சாமான்கள் கொண்டுவரச் சொன்னார். சில உத்திரவுகள் போட்டார். சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்தபோது பார்த்துப் பிரமித்துப் போய் விட்டேன். நாடக மேடை தத்ரூபமாக இருந்தது. அதன் அமைப்பில் ஏதோ புதிய அழகு சேர்ந்து விட்டது போலத் தோன்றியது.

பின்னால் அந்தக் காட்சி படம் பிடிக்கப்பட்டுத் திரையில்போட்டுப் பார்க்கப்பட்டபோதும் நான் அங்கிருந்தேன். படம் ஓடிக்கொண்டிருந்த போது அந்தக் குறிப்பிட்ட காட்சியில் நான் அந்த நாடகமேடை அமைப்பைத்தான் கவனித்தேன்; அவருடைய சைத்ரிகக் கண்கள் படத்தையே முன் கூட்டியே பார்த்து விட்டதென்பதைக் கண்டேன்.

நாலைந்து ஆண்டுகளுக்குமுன் நடந்த ஒரு சிறு சம்பவம். "மணிக்கொடி" வாரப் பதிப்பு ஆரம்பித்த சமயம். ஆசிரியர் கே. ஸ்ரீநிவாசனே நடத்திக் கொண்டிருந்தார். அப்போது காலஞ் சென்ற ஸ்ரீ வித்தல்பாய் பட்டேல் சம்பந்தமாக ஒரு கார்ட்டூன் எழுதவேண்டியிருந்தது. சித்திரக்காரர் 'வாசு' வரவழைக்கப்பட்டார். ஸ்ரீ. ஸ்ரீநிவாசன் 'வாசு' விடம் படத்தின் விஷயத்தைச் சொல்லி யனுப்பினார்.



...ஏதாவது கிறுக்கி...

வெளியே வரும்போது "வாசு" என்னிடம் "ஏன் ஸார், நீங்கள் பம்பாய் போயிருக்கிறீர்களோ" என்றார். ஆம் என்றவுடன் "சௌபாத்திக் கடற்கரையைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்" என்றார். அவருடைய அந்தரங்க பூர்வமான சிரத்தையால் தூண்டப்பட்டு என் ஞாபகத்திலிருந்தபடி வர்ணித்தேன். மறுநாள் படம் வந்தபோது நான் சொல்லிய அவ்வளவு விவரங்களும் இம்மி குறையாமலிருக்கக் கண்டு பிரமித்து விட்டேன். என் வர்ணனையைக் கொண்டே அவர் மனம் எவ்வளவு நிச்சயமாகப் படம் பிடித்திருக்கிறது என்ற ஆச்சரியம் தாங்கவில்லை எனக்கு.

கடைசியாக நண்பர் ராமராஜூ ('ராஜூ' என்று சுருக்கத்தில் கையெழுத்துப் போட்டு இந்த ஆண்டு மலரில் பக்கத்துக்குப் பக்கம் காட்சி யளிக்கிறாரே, அவர்.) அவரிடம் ஒரு படத்திற்காவது நான் கொஞ்சம் அவகாசம் கொடுத்து எழுதி வாங்கியதேயில்லை. எல்லாம் காலிலே கஞ்சியைக் கொட்டிக் கொண்டு வந்தது போலத்தான்.

இவ்வளவு அவசரத்திலும் அவருடைய கிராகிய சக்தியும், கற்பனையும் எவ்வளவு துடியாகப் பாய்ந்து வருகிற தென்பதைக் கண்டு நான் வியந்து நில்லாத நாளே கிடையாது. உதாரணமாக இந்த மலரில் பொற்சரடு என்ற தலைப்பிட்ட ஸ்ரீ. பிச்சமூர்த்தியின் கட்டுரைக்குப் படம் ஏதாவது எழுதிப் போட வேண்டுமென்று நினைத்தேன். ஸ்ரீ. ராஜூவிடம் ஸ்ரீ. பிச்சமூர்த்தியைப் பற்றிக் கொஞ்சம் விவரித்து "இந்த மாதிரி தாடி மீசை ஆள், ஸார்; பார்த்துப் போடுங்களேன்" என்று சொல்லி விட்டுவிட்டேன். படம் சாட்சி நிற்கிறது. படத்திற்கும் ஸ்ரீ. பிச்சமூர்த்திக்கும் ஏதாவது கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசமிருந்தால் அது என் குற்றமேயன்றி நண்பர் ராஜூவின் குற்றமன்று. ஏனென்றால் அவ்வளவு அவசரத்தில் அவர் படமெழுதினார்.

இவர்களெல்லாம் ஒவ்வொரு குறிப்பிட்ட விகாச முறையில் தேர்ந்தவர்களாயிருக்கலாம். ஒவ்வொருவருடைய திறமையும் ஏற்றத் தாழ்வாயிருக்கலாம். ஆயினும் இவர்களுடைய சைத்ரிக மனோபாவம் நமது தமிழ் நாட்டில் அபூர்வமான தென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இவர்கள் நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் காணக் கிடைக்கும் நாடகக் காட்சிகளைப் படமாக எழுதிக் காட்டும்போது "அடே! இதை நாம் நேரிலேயே பார்த்தபோது இது இவ்வளவு ரஸமான காட்சியென்று நமக்குப்படவேயில்லையே" என்று ஆச்சரியமாயிருக்கிறதல்லவா!





ஸினிமாத் தொழிலின் ஆதிபிதா என்று சொல்லத்தகுந்த டேவிட் வார்க் கிரிப்பித் என்பவர்தான் அமெரிக்காவின் முதல் ஸினிமா டைரக்டர். அவர்தான் முதல் முதலாக பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளைக் கற்பனை செய்து ஸினிமா ரஸிகர்களை பிரமிக்கச்செய்யும் நாடக ரஸனையை ஸினிமா மூலம் வெளியிட வழி கண்டுபிடித்தவர்.

கிரிப்பித்தின் முதல் படமான "சமுதாய ஜனனம்" என்ற படம் ஒரு கோடி எண்பது லட்சம் டாலர் வசூல் கொடுத்தது. அவருடைய இரண்டாவது படம்தான் "இன்டாலரென்ஸ்" (சகியாமை) என்பது.



அந்தப் படத்திற்காக அவர் தயாரித்த ஒரு பிரம்மாண்டமான காட்சி ஜோடனையின் படம் இது. பேபிலோன் நாட்டு அரசன் பெல்ஷஜார் என்பவனது ராஜசபைக்காட்சி. படத்தில் காணும் நடிகர்கள் சித்திரக் குள்ளர்கள் போலத் தோன்றுகின்றனர். காரணம் இந்தக் காட்சி ஜோடனையின் உயரம் 300 அடி!

கிரிப்பித்தின் படங்கள் இப்பொழுது நியூயார்க்கு நகரிலுள்ள "நவயுகக் கலாமண்டபம்" என்ற மியூசியத்தில் வைத்துக் காப்பாற்றப் படுகின்றன.



அஜந்தா

'சங்கு மணி' எழுதியது

நேற்றிரவு நாடகத்தில் கண்ட ஒரு காட்சியின் சுவை நேற்றோடு மறைந்தது. இவ்வருடம் எடுக்கப்பட்ட திரைப்படம் அடுத்த வருடமும் அதே அளவு ரஸனையை வழங்குமென்று சொல்வதற்கில்லை. கலா ரஸனையின் லகான் காலத்தின் கையிலிருக்கிறது. தன்னிச்சைப்படி வளைக்கிறது, அடிக்கிறது, நீட்டுகிறது, குறுக்குகிறது.

ஆனால் 1500 வருடங்களுக்கு முன்னே தோன்றிய சில நாடகக் காட்சிகள் அன்றைக்குப் பரிமாறிய சுவைக்கு அணுவளவும் குறையாது இன்றைக்கும் பரிமாறிக்கொண்டிருக்கிறதை அறிவீர்களா? இங்கே காலத்தை வென்று விட்டது கலாரசனை. அந்த நாடகக் காட்சிகள் உள்ள அந்த இடம் தான் அஜந்தா.

அங்கு நடக்கும் நித்தியமான நாடகத்தில் எத்தனை காட்சிகள்! எத்தனை நடிகர்கள்! அருள்வீசும் முகமுடைய அரசகுமாரர்கள், அன்றாடம் பிச்சை கேட்கும்



பிக்ஷுக்கள், பெண் குலத்தின் வெற்றிகள், கண்ணிமைக்காத கந்தர்வர், யட்சர், கின்னரர், ஹம்சங்கள், தாமரைகள், மலர்மழைகள், மேகவரிசைகள்—இவ்வாறு வனப்புச் செல்வம் கல்லிலும் வர்ணத்திலும் வரையின்றி குவிக்கப் பட்டிருக்கின்றது அஜந்தாவில்.

அஜந்தா, ஹைதராபாத் சமஸ்தானத்தின் வடமேற்கு எல்லையிலுள்ள ஒரு குன்று. பம்பாயில் இன்றிரவு ரயிலேறினோமானால் நாளைக் காலை ஜலகாம் முன்னுள்ள பாச்சோரா ஸ்டேஷனை அடைவோம். அங்கிருந்து பர்தாபூர் என்ற கிராமத்தை யடைந்தால் அதற்கருகிலுள்ள குன்று தான் அஜந்தா.

ஆயிரத்தெழுநூறு வருடங்களுக்குமுன்னே காடு முரடாயிருந்த இந்தக் குன்றுக்கு சில பௌத்த சந்யாசிகள் வந்தார்கள். பாரத நாட்டின் மேலப்பகுதியில் பகவான் புத்தனின் அருள் மொழிகளைப் பரப்புவதற்காக வந்த பிரசார கோஷ்டி அது. விந்திய பர்வதத்தின் சாரலிலுள்ள அஜந்தாக் குன்றின் அழகு அவர்களை மயக்கி விட்டது. பாகோரா நதி கொஞ்ச தூரத்தில் முணுமுணுத்துக்கொண்டு நகர்வதையும், அஸ்தமன சூர்யன் அந்தக் குன்றத்தை செங்குழம்பால் அபிஷேகம் செய்யும் அற்புதத்தையும் கண்டு சொக்கி அந்தக் குன்றத்தின் மீதே தங்கிவிட்டனர். சௌந்தர்யமும் சாந்தியும் ததும்பும் இந்தக் குன்றம் தான் ஆத்ம ஸாதகத்துக்கு உகந்த இடம் என்று நினைத்து அந்தக் குன்றிலிருந்த குகைகளில் குடி புகுந்து விட்டனர்.

நாட்கள் மாதங்களாயின. ஒரே குன்றின் மீது பல குருமார்கள் கூடியிருக்கின்றார்களென்ற செய்தி கேட்டதும் ஞானதானம் பெறவேண்டி இளைஞர் கூட்டம் வரத் தொடங்கிற்று. நாளடைவில் அந்தக் குகைகளில் ஒரு பெரிய சர்வகலாசாலை ஏற்பட்டு விட்டது. அக்கம் பக்கத்திலிருந்த அரசர்கள் பல சிற்பிகளை அனுப்பி அந்த வித்யா பீடத்தை அழகு செய்ய ஆரம்பித்தனர். காடு முரடான கற்சுவர்க் குகைகள் விஸ்தாரமான விஹாரங்களாக (பௌத்த பிட்சுக்களின் வாசஸ்தலம்) மாறின. இந்தக் குன்றை அழகுபடுத்துவதையே வாழ்க்கை நோக்கமாகக் கொண்ட சிற்பிகளும் ஓவியரும் பாரத நாட்டின் பல மூலைகளினின்றும் வந்த வண்ணமேயிருந்தனர். அக்காலத்திய கனவுகளையும், கற்பனைகளையும் கவிதைகளையும் கற்களில் செதுக்கினர்; வர்ணத்தால் வேய்ந்தனர்.

கோயில் திருவாசி போன்ற வளைவுடைய ஆசாரவாசல்கள், ஸ்தூபங்கள், சிற்றுளி வேலைப்பாடு மிகுந்த நெடுந்தூண்கள், வெளிச்சம் விளையாடும் பிராகாரங்கள் இவைகள் சகிதம் 26 குகைகள் ஐந்நூறு வருட காலத்தில் ஒவ்வொன்றாய் தோன்றத் தொடங்கின.

'சொல்லுக்கு நித்ய சக்தியா? கல்லுக்கு நித்ய சக்தியா?' என்று ஒரு போட்டி அறிவுலகத்தில் அப்போது நடந்து கொண்டிருந்தது. காவியங்களைச் சொல் வன்மையோடு சிருட்டித்தது ஒரு கோஷ்டி. அங்கிருந்த கல்லில் அற்புதங்களை சிருட்டித்து வைத்தது மற்றொரு கோஷ்டி. அந்தக் காவியங்கள் இன்று போன திசை தெரியவில்லை. சொல்லை விட கல்லே சக்தி வாய்ந்ததென நிரூபித்து விட்டனர் அந்த சிற்பிகள். கண்ணுக்குப் பூரா இன்பத்தையும் தர கற்சிலைகளால் முடியுமா என்று ஒரு சந்தேகம் ஏற்பட்டது. கண்ணுக்கு குளுமையான வர்ண விஸ்தாரங்களை மெழுகி ஓவியக் காட்சிகள் சிருட்டிக்கப்பட்டன பின்னர்.

அஜந்தா பாரத நாட்டின் சித்ர சிற்பக் களஞ்சியமாயிற்று. அந்தக் களஞ்சியத்தில் ஒன்றிரண்டை இங்கு மாதிரிக்காக எடுத்துக் காட்டுகின்றோம்.

அஜந்தா மலையின் ரட்சக தேவதையான **நாகராஜன்*** பத்தொன்பதாவது குகையில் ஐந்து பண மகுடங்களோடு கொலுவீற்றிருக்கின்றான். அவனைப் போலவே 26 குகைகளைத் தாங்கிக்கொண்டு **அஜந்தா** பர்வதமும் * இங்கே அமர்ந்திருக்கிறதென்னலாம். திருவாசி ரூபத்தில் கதிரவன் கிரணங்

* இந்தக் குறி தாங்கியவை இந்தப் பக்கத்தைப் படங்களாக அலங்கரிக்கின்றன.

கல்லிலும் வர்ணத்திலும் கண்ட கவிதை

களோடு ஜொலித்துக் கொண்டு 19-வது குகையின் ஆசாரவாசலில் ஒளிர்கின்றதே,* அதன் கம்பீரத்துக்கு இணையுமுண்டோ? உண்டு. அவ்வளவு கம்பீரச் சுவையையும் முதல் நம்பர் குகையிலுள்ள பௌத்த விக்ரகத்தைச்* சுற்றிக் காண்கின்றோம். கதிரவன் கிரண ஜாலங்களுக்குச் சமானமாக இங்கு ஓவியன் வர்ண ஜாலங்களை யதேஷ்டமாக சுவரில் அள்ளி இறைத்திருக்கின்றான்.

முதல் நம்பர் குகையிலுள்ள ஓவியச் செம்மை தான் ஒண்ணுந்தரமானதென்று ரஸிகர்கள் அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். பகவான் புத்தன் சிலா ரூபத்தில் நடுவே அமர்ந்திருக்கின்றான். இருபுறத்திலும் சுவர்களில்வர்ண பேதங்களோடு புத்த நாடகக் காட்சிகள் தோன்றுகின்றன.

வலது பக்கச் சுவரில் எட்டடி உயரமுடைய ஆஜானுபாகுவான ஒரு அரசிளங் குமரனைக்* காண்கின்றோம். அவன் முகத்தினின்று பொழியும் கருணை ரஸத்துக்கு ஈடு அவன் கையில் ஏந்தியுள்ள தாமரையின் சோபையைத்தான்சொல்லவேண்டும். மத்யகால ஐரோப்பிய ஓவியர்கள் பகவான் ஏசுகிறிஸ்துவின் முகத்தில் எந்த அற்புதச் சோபையைத் தீட்டினார்களோ, அதே சோபையை 1500 ஆண்டுகளுக்கு முன்னே அஹிம்சைக் கடவுளான இந்த **அவலோகிதேனின்** முகத்தில் பாரதநாட்டின் ஓவியர் காட்டிச் சென்றனர். "சேடியர், மனைவி, மக்கள் திருவொடு மின்னு மின்பம் நாடக உலகச் சீர்; போம் நமன் விடு திரைக்குள்" என்று நினைத்து, மகா தியாகத்துக்குத் தயாரான சுத்தோதனன் என்ற அந்த ராஜகுமாரனை ஓவியன் வர்ணத்தால் இங்கே வர்ணித்திருக்கின்றான்.

அவன் அருகே நிற்கும் நாரீ மணிதான் அவன் தேவி. தன் கணவன் உலகை உய்விக்கும் பொருட்டு பரம தியாகம் செய்கின்றான் என்ற ஆத்ம திருப்தி அவள் முகத்தில் சொட்டுகின்றது. இவ்வளவு அழகுவடியும் பெண்ணுருவை ஓவியன் பூரா கறுப்பு வர்ணத்தில் தீட்டியிருக்கின்றானே, என்ன விபரீதம் என்று எண்ணலாம். அழகுக்குக் கறுப்பாவது, சிகப்பாவது? இந்த அபிப்பிராயத்தை ஆணி போல அறைவதற்காகத் தான் சியாமள மேனியுடைய ஒரு சுந்தரியை ஓவியன் இங்கு சிருஷ்டித்திருக்கின்றான் என்னலாம்.

இந்தத் தியாகத்தைக் கண்டு வானில் கின்னரர் பாடுகின்றனர். ஒரு யட்சன் தன் காதலியையும் கவனிக்காது தியாக புருஷனையே பார்த்துக் கொண்டிருக்கின்றான்*. இவ்வளவும் முதல் நம்பர் குகையில் வலது பாரிசத்தில் நடக்கும் நாடகம்.

இடது பாரிசத்தில் மைத்ரேயன்* ஒரு சிறு புஷ்பத்தோடு அதே எட்டடி உயர புருஷனாக நிற்கின்றான். அவன் மேனி சியாமள வர்ணத்திலிருக்கின்றது. தாமரை நிறைந்த தாம்பாளத்தோடு நிற்கும் ஒரு சேடி* தன் கருவிழிகள் இரண்டையும் ஆசார்யனுடைய பாதங்களுக்கு அனுப்பி விட்டாள். தூரத்தில் வியாகூல முகத்தோடு யசோதராதேவி* தன் சேடியிடம் பேசிக்கொண்டிருக்கின்றாள்.

இதேமாதிரி இதர குகைகளின் சுவர்களிலும் பல நாடகக் காட்சிகள் நடக்கின்றன. போதாக்குறைக்கு சில மண்டபங்களின் முகடுகளில் அற்புதமான வர்ணப் படங்கள் தீட்டப்பட்டுள. தாமரை மீது சங்கு உறங்குவதுபோல ஓர் படம்*. உயிரற்ற பொருள்களுக்கும் உயிரூட்டினர் அஜந்தா ஓவியர்.

அஜந்தா சித்ரங்களின் வரிகளும் கீற்றுகளும் ஓவிய உலகத்தில் அமரத்வம் பெற்றுவிட்டன. துவண்டு கொடுக்கும் விரல்கள்மூலமும், சுழன்று நோக்கும் விழிகள் மூலமும் ஓர் உருவத்தின் மனோபாவத்தைக் காட்ட முடியும் என நிரூபித்தவர்கள் அந்த ஓவியப் பாட்டன்மார்கள்.

நின்ற நிலையில் ஆணியடித்தது போல நம்மையே பார்த்துக் கொண்டு உருவம் இருக்குமாறு காட்ட சிற்பி ஒருவனுக்குத் தான் சில சமயங்களில் உரிமையுண்டு. அத்தகைய நின்ற நிலை உருவத்தைத் தீட்ட ஓவியர்களுக்கு உரிமை கிடையாது. அசைவு காட்டும் உருவங்களைச் சிருட்டிப்பது தான் அவர்கள் கடமை. அஜந்தாவில் இத்தகைய திறமைகளை ஆயிரக்கணக்கில் பார்க்கின்றோம்.

உதாரண சித்ரம்: நாட்டியக் காரிக்குப் பின்னே தாளம் போடும் கைகளைப் பார்க்கும் போது அந்த ஜாலர்கள் ஒன்றை ஒன்று அடுத்த நிமிஷமே முத்திமிட்டுவிடும்போல் தோன்றுகிறது. மற்றொரு காட்சி: நாகராஜன் பாதத்தில் வளைந்து வணங்கிக்கொண்டிருக்கும் நங்கை அடுத்த க்ஷணத்தில் எழுந்துவிடுவாள்போலத் தோன்றுகிறது. இந்த அசைவுச் சுவைகள்தான் ஓவியத்துக்கு உயிர் ஊட்டுபவை. அத்தகைய நிலைகளைச் சிருஷ்டித்துச் சென்றனர் அந்த ஓவிய பிதாமகர்கள்.

பாரதநாட்டின் கலைக்கூடமாகவும், அறிவின் கேந்திர ஸ்தானமாகவும் இருந்த அஜந்தாக் குகைகள் இன்று வௌவால்களின் இருப்பிடமாக இருப்பது பாரத மக்களையே குத்திப் பேசுவது போலிருக்கிறது. அத்தனை அழகுகளையும் அங்கே குவித்த பிட்சுக்கள், சிற்பியர், ஓவியர் இவர்களுடைய ஆன்மாக்கள் தங்கள் சிருஷ்டிகளிடமிருந்து பிரிய மனமின்றி வௌவால் உருவத்தில் அந்த இடத்தைச் சுற்றுகின்றார்களோ என்று ஒரு ரஸிகர் மனங்கரைகின்றார்.

பௌத்த மதம் பாரதநாட்டில் மறைந்து விட்டது. ஆனால் பௌத்த சந்யாசிகளின் சிருஷ்டியான அஜந்தா இன்றைக்கும் கம்பீரமாக வாழ்ந்துகொண்டிருக்கிறது. விருந்து எப்போதும் தயாராயிருக்கின்றது. ஆனால், இந்த அமுதத்தைப் பருக விருந்தினர் மட்டும் திரள் திரளாகச் செல்கின்றார்களில்லையே!

சுண்ணும்பும் சாயமும் சேர்ந்த சித்திரம்



மொட்டையாகக் கோணலும் மாணலுமாக நின்ற கற்குன்றுகளைக் கவிதைகளாகச் செதுக்கி வைத்ததுபோல, நம்நாட்டுச் சிற்பிகள், சுண்ணும்பையும் சாயத்தையும் சேர்த்த அற்புதச் சித்திரக் கலா நிலயங்களான கோபுரங்களை நிர்மாணித்து வைத்திருக்கின்றனர்.



பண்டைக் காலத்து வாணிகச் சங்கங்கள்

தி. நா. சுப்பிரமணியன்

பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் அலைகடல் கடந்து பிறநாடுகளுடன் வாணிகம்செய்து வந்தனர். ஒரு காலத்தில் உலக வியாபாரமே தமிழ்நாட்டினர் கையில் இருந்தது. மேற்கிலிருந்து கிரேக்கர்களும் ரோமதேசத்தவர்களும் தமிழ் நாட்டுக்கு வந்து போயினர். தமிழ்மக்களும் மேற்கே அரேபியாவுக்கும் கிழக்கே ஸுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளுக்கும், சீன தேசத்துக்கும் வியாபார நிமித்தமாக போய்வந்த செய்தி அந்த அந்த நாட்டுச் சரித்திரங்களினின்றும் தெரியவருகின்றது.

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசியில் ஐரோப்பியர்கள் வியாபாரம் செய்வதற்காகக் கடல் கடந்து பிற நாடுகளுக்கு செல்ல ஆரம்பித்த காலத்திலிருந்துதான் தமிழ் நாட்டினர் பிற தேசங்களுக்குச் செல்வது நின்று விட்டது. அதற்கு முன்பு நம் மக்கள் அலைகடலில் கப்பலைச் செலுத்திச் செல்வதில் பின் வாங்கவில்லை. ஆயினும், அக்காலத்தில் இருந்த கப்பற் றொழிலையோ வியாபாரத்தையோ பற்றிய நூலோ, விவரமோ ஒன்றும் கிடைக்கவில்லை. சுமார் கி. பி. ஒன்பது முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டினருடனும் பிறருடனும் வாணிகம் செய்து வந்த அரபியர்களுட் சிலர் எழுதிவைத்திருந்த குறிப்புகளினின்றும் அவ்வகை நூல்கள் இருந்தன என்பது வெளியாகின்றது. அக்காலத்துக் கப்பல்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ளும் முக்கியமான செய்தி, ரோம் முதலிய நாடுகளில் பலகைகளை ஆணியடித்து ஒன்று சேர்த்துக் கப்பல் செய்யப்பட்டதைப் போல் அல்லாமல் தமிழ் நாட்டினர் பலகைகளை ஒன்றோடு ஒன்று தைத்துப் பிணைத்துக் கப்பல் செய்துவந்தனர் என்பதேயாகும்.

சீனத்துடன் உறவு

சீன தேசத்துச் சரித்திரங்களினின்றும் தமிழ் மக்கள் அத் தேசத்தவர்களோடு கொண்டிருந்த உறவு தெரியவருகின்றது. கி. பி. 9-ம் நூற்றாண்டின் கடைசியில் சீன தேசத்தில் உள்நாட்டுக் கலகங்கள் அதிகமாகிவிட்டன வாதலின், பிற நாட்டவர்கள் வாணிகம் செய்வதற்காக அவ்விடம் போவதை நிறுத்தி விட்டார்கள். 10-ஆம் நூற்றாண்டின் கடைசியில், அக் கலகங்கள் அடங்கிவிட்டன. அப்பொழுது இருந்த அரசன், பிற நாட்டவர்கள் சீனவுக்கு வந்து வாணிகம் செய்வதை விரும்பினான். அதனால் "கடல் கடந்து பிற நாடு சென்று வாணிகம் செய்பவர்களும், தென்கடலில் வியாபாரம் செய்யும் அயல் நாட்டாரும் சீனவுக்கு வரும்படி தூண்டுவதற்காகச் சக்கரவர்த்தி, ஒரு தூது கோஷ்டியை அமர்த்தி, அரசாங்க முத்திரையிட்ட ஆணைப் பத்திரங்களுடன் பொன்னும் துணியும் அதிகமாகக் கொடுத்து அவர்களை வெளியிடங்களுக்கு அனுப்பினான். அங்ஙனம் வருபவர்களுக்கு, இறக்குமதி செய்வதற்கான தனி உரிமைகள் கொடுப்பதாகவும் வாக்களித்தான்."

அதனால் அக்காலத்தில் தமிழ் நாட்டை ஆண்டு வந்த சோழ மன்னர்களான இராஜராஜன், இராஜேந்திரன், முதற் குலோத்துங்கன் ஆகியவர்கள் சீன தேசத்துக்குத் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினார்கள்.

மேல் நாட்டினர்

அரேபியா, பாரசீகம் முதலிய மேல் நாட்டு முகம்மதிய ராஜ்யங்களிலிருந்தும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், கடல் மார்க்கமாகச் சீனவுக்குச் செல்லும் வர்த்தக கப்பல்களுக் கெல்லாம், ஸ்ரீவிஜய ராஜ்யத்துத் துறைமுகப் பட்டினங்களே வழியில் தங்கு மிடங்களாக இருந்தன. ஸ்ரீவிஜயம் என்பது மலேயா தீபகற்பம், ஸுமத்ரா, ஜாவா முதலிய தேசங்களின் பகுதியை கொண்டு அக்காலத்தில் பிரஸித்தி பெற்று விளங்கியது. ஸ்ரீவிஜயத்து ஜனங்கள் தமிழ் நாட்டுக்கு வந்து தங்கியும் தமிழ் மக்கள் ஸ்ரீவிஜயத்துக்குச் சென்று தங்கியும் வியாபாரம் செய்து வந்தார்கள். இவற்றைத் தெரிவிக்கும் ஆதாரங்கள் பல உள.

ஸ்ரீவிஜயத்து அரசனான சைலேந்திர வமிசத்து மாரவிஜயோத்துங்கவர்மன் என்பவன் தன் நாட்டு ஜனங்களுடைய உபயோகத்துக்காக நாகபட்டினத்தில் பௌத்த விஹாரம் ஒன்று கட்டுவித்தான். அவன் மகனான சங்கிராம விஜயோத்துங்கன் காலத்தில் ஸ்ரீவிஜய ராஜ்யம் சோழ மன்னர்களுக்குக் கீழ்ப்பட்ட ஒரு சிற்றரசாங்கமாக விளங்கியது.

இங்ஙனம் வெளிநாடுகளில் தமிழர் ஆதிக்கமும் வியாபாரமும் பெருகி யிருந்த காலத்தில் உள்நாட்டு வியாபாரமும் உன்னத நிலையில் இருந்தது. வாணிகர்கள் விளைபொருள்களையும் கனிப்பொருள்களையும் அவை உற்பத்தியாகும் இடங்களிலே வாங்கி அவற்றைத் துறைமுகப் பட்டினங்களுக்குக் கொணர்ந்து கப்பலேற்றிப் பிற நாடுகளுக்குக் கொண்டு செல்வார்கள். பிற நாட்டிற் கிடைக்கும் பொருள்களையும் அதே போலத் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்து பட்டினங்களிலும் கிராமங்களிலும் விற்று வருவார்கள்.

சங்கங்கள்

இவ்விதம் வாணிகம் செய்பவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் குறைகளை நீக்கி ஸௌகரியங்களைச் செய்து கொடுக்க வாணிகச் சங்கங்கள் பல இருந்தன. அவற்றைப் பற்றிய விவரங்கள் முழுமையும் இப்பொழுது கிடைக்கவில்லை ; ஆயினும் குறிப்புகள் சில சாஸனங்களில் காணப்படுகின்றன.

வாணிகச் சங்கங்களுக்குச்சாஸனங்களில் காணப்படும் பெயர்களுள் வளஞ்சியத்தார், அஞ்சுவண்ணம், மணிக்கிராமம், நானாதேசிகள், நகரத்தார் என்பன சில. இந்தப் பெயர்களுள் ஒவ்வொன்றும் எதைக் குறிக்கின்றது என்பதும் இந்தச் சங்கங்களுள் ஒன்றற்கொன்று பெற்றிருந்த சம்பந்தமும் நமக்குத் தெரியவில்லை. எனினும், அவற்றினின்றும் சில விஷயங்கள் தெரியவருகின்றன.

பண்டைக் காலத்தில் வாணிகம் செய்து வந்தவர்களுள் பல சாதியினரும் காணப்படுகின்றனர். ஆயினும், தமிழ் நாட்டுச் செட்டி மக்களும், அவர்களைப் போன்ற பணஜிகர், கோமட்டி என்பவர்களும்தான் பெரும்பான்மையானவர். முகம்மதியரும், பிராமணரும் பல சமயங்களில் வியாபாரிகளாகக் காணப்படுகின்றனர்.

நம் நாட்டு மக்களுள் தொழில் முறை பரம்பரையாகவே வருகின்றது. அதனால் தந்தை செய்து வந்த தொழிலையே மகனும் செய்வான். அன்றி, ஒவ்வொரு தொழிலையும் ஒரு குறிப்பிட்ட சாதியினரே செய்து வருவார். அதனால் ஒவ்வொரு தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் ஒரே சாதியினராக இருப்பர். ஆயினும், வேறு சாதியைச் சேர்ந்தவர் ஒருவர் அந்தத் தொழிலை நடத்தினால், அவரும் அந்தச் சங்கத்தில் இடம் பெறுவர். உதாரணமாகப் பிராமணன் ஒருவன் தட்டாரத் தொழில் செய்தானாகில் அவன் தட்டார் கூட்டத்தில் கட்டாயம் இடம் பெறுவான்.

வணிக வகுப்புகள்

தமிழ் நாட்டைச் சோழ மன்னர்கள் ஆண்டு வந்த காலத்தில் 'நானாதேச திசையாயிரத் தைஞ்ஞூற்றுவர்' என்னும் வாணிக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் முக்கியமானவர்களாக விளங்கினார்கள். இவர்கள் பொதுவாகச் சாஸனங்களில் நானா தேசிகள் என்றும் ஐஞ்ஞூற்றுவர் என்றும் குறிக்கப்படுவர். அதனால், இவர்களைப் 'பல தேசங்களையும் ஆயிரம் திசைகளையும் கொண்ட ஐந்நூறு பேர்கள்' என்று கூறலாம். இந்தப் பெயருக்கேற்ப இவர்களை நாம் பல தேசங்களிலும் காணலாம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கிடைக்கும் சாஸனங்களிலே தான் முதன் முதலாக அவர்கள் குறிக்கப்படுகிறார்கள். சோழ மன்னர்கள் தலையெடுத்து ஸாம்ராஜ்யத்தை நிறுவுவதற்கு முன்பிருந்தே அவர்கள் பலம் பொருந்தியவர்களாகக் காணப்படுகின்றனர். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நார்த்தாமலை (நகரத்தார் மலை) என்னுமிடத்தில் விஷ்ணுவுக்கு மலையிலேயே குடைந்து நிறுவப்பட்ட ஆலயம் அவர்களால் ஏற்படுத்தப் பட்டதாகும். இஃது அக்கோயிலின் முக மண்

டபத்தின் சுவர்களில் விஷ்ணுவின் பன்னிரண்டு பெயர்களைக் குறிக்க நிர்மாணம் செய்யப்பட்ட பன்னிரண்டு உருவங்களும் 'நானாதேசி' விஷ்ணு என்று குறிக்கப்படுவதினின்றும் நன்கு விளங்கும். அன்றி முனிசந்தை என்னுமிடத்தில் வெட்டப்பட்ட குளமும் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டு வந்தது.

மைசூர் சமஸ்தானத்தில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் தான் அவர்களைப் பற்றிய விவரங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன.

யானையும் குதிரையும்

அவர்கள் வாசுதேவன், கண்டலி, மூலபத்திரன் ஆகிய இவர்களுடைய வமிசத்தில் தோன்றியவர்கள் ஆவர்; பகவதியின் வரப்பிரசாதத்தைப் பெற்றவர்கள். நாடோடிகளான பல தேசங்களிலும் சுற்றியவர்களுக்குப் பிறந்த அவர்கள் பலவகை உட்பிரிவுகளையுடையவர்கள். சேர, சோழ, பாண்டிய, மலைய, மகத, கோசல, ஸௌராஷ்டிர, தானுஷ்ட்ர, குரும்ப, காம்போஜ, லாள, பருவர, நேபாள, ஏகபாத, லம்பகர்ண, ஸ்திரீ ராஜ்ய, கோளாமுக ராஜ்யங்களையும் வேறு பல தேசங்களையும், சுற்றியதுடன், தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும், ஆறு கண்டங்களுக்கும் போய் வந்தவர்கள். உத்தமமான யானைகள், நல்ல ஜாதிக் குதிரைகள், பலவகையான ரத்தினக் கற்கள், வாசனைத் திரவியங்கள், மருந்துச் சரக்குகள் ஆகியவற்றை வியாபாரம் செய்பவர்கள். அவர்கள் சாமான்களை மொத்தமாகவும் தோள்களில் சுமந்து சென்று சில்லரையாகவும் விற்று வந்தார்கள். பல சமயங்களில் அவற்றை அவர்கள் கழுதையின் மேலும் எருதுகள் மேலும் ஏற்றிச் செல்வார்கள்.

பல தேசங்களிலும் அவர்கள் மிக்க மரியாதையுடன் நடத்தப்பட்டு வந்தனர். அந்த அந்த தேசங்களின் ராஜீய விவகாரங்களில் அவர்கள் நுழைய மாட்டார்கள். ஆயினும், அவர்கள் நிரந்தரமாக வாழ்வதற்குத் தங்கிய இடங்களில் உள் நாட்டு விவகாரங்களைக் கவனித்து வந்தனர். ராஜேந்திர சோழன் ஆட்சியின் முதலில், சோழமாதேவி சதுர்வேதிமங்கலமான வண்டூர் என்னுமிடத்துச் சபையார், அவ்வூர்க் கோயிலினின்றும் நிரந்தரமாகப் பெற்றிருந்த கடன் தொகையின் வட்டியைக் கிரமமாக வசூல் செய்வதற்கு அவர்கள் ஏற்றுக்கொண்டதிலிருந்து இது நன்கு விளங்குகின்றது.

வலங்கை வீரர்

அவர்கள் குடியேறிய நகரங்களை 'எறிவீரப்பட்டினம்' என்று அழைத்து வந்தார்கள். இங்ஙனம் தமிழ் நாட்டில் பல எறிவீரப் பட்டினங்கள் இருந்தன. சோழ மன்னனான ராஜாதிராஜன் காலத்துச் சாஸனம் ஒன்றில், நானாதேசிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும், சிராவள்ளி என்னுமிடத்தை "நானாதேசிய தசமடி எறிவீரப்பட்டின"மாக மாற்றி, அங்கு வசிப்பவர்களுக்குச் சில உரிமைகளைப் பெற்று வழங்கினார்கள். இச் செய்தியைத் தெரிவிக்கும் 'வீரசாஸன'த்தைப் போன்றவை ஐந்நூறு இருந்தனவென்று கூறிக்கொள்ளுகிறார்கள்.

அவர்கள் தங்கள் வியாபாரப் பொருள்களையும், பண்டகசாலைகளையும், இதர உரிமைகளையும் பாதுகாப்பதற்காக, சமயத்து (அதாவது சங்கத்து) திருவடிக்குப் பணி செய்யும், வாள் வீரர்களையும், காலாட் படையையும் வைத்திருந்தனர். இப்படையினர் பல சமயங்களில் பிறருக்காகவும் போர் புரிந்திருக்கின்றனர். 'வலங்கை வீரர்' என்று சாஸனங்களில் காணப்படுபவர்களும், வளஞ்சியத்தார் போன்ற வாணிகச் சமூகம் ஒன்றினால் நிறுவப்பட்டு வந்த படையே போலும்.

சுமத்ராவில், லோபோய் தோய்வா என்னுமிடத்தில், கி. பி. 1088-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டதாகக் காணப்படும் தமிழ்க் கல்வெட்டொன்றில் நானாதேசிகளைப் பற்றிய குறிப்பு ஒன்று இருக்கிறதென்றால், அவர்கள் பெருமை நன்கு விளங்கும்.

மணிக்கிராமத்தாரைப்பற்றிய குறிப்புகளும் பல சாஸனங்களில் கிடைக்கின்றன. அவர்கள் தமிழ் நாட்டிலே தஞ்சை, சேலம், ராமநாதபுரம், முதலிய இடங்களிலும் மேலைக் கடற்கரையோரமாகக் கோட்டயத்திலும், கடல் கடந்து சயாம் முதலிய தேசங்களிலும் காணப்படுகின்றனர். அவர்களுடைய ஆதிக்கம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதினான்காம் நூற்றாண்டு வரையில் பரவியிருந்தது. இந்தச் சங்கத்தில் ஹிந்துக்களன்றி, கிறிஸ்தவர்களும் சேர்ந்திருந்தார்கள்.

வர்த்தகத் தலைவர்கள்

சாஸனங்களில், அஞ்சு வண்ணம், வளஞ்சியத்தார் ஆகியோருடைய பெயர்களும் காணப்படுகின்றன. அன்றி, காஞ்சீபுரம் மாமல்லபுரம் போன்ற பெரிய ஊர்களில் நகரம் என்ற பெயரையுடைய வாணிகச் சங்கங்கள் இருந்தனவென்பதும் கல்வெட்டுக்களால் வெளியாகின்றன.

இச் சங்கங்களுக்கு மாநகரமாள்வான், பட்டண சுவாமி, ராஜச்ரேஷ்டி, தேசிதண்ட நாயகன் என்பன போன்ற பெயர்களைக் கொண்ட தலைவர்கள் இருந்தார்கள். அவர்கள் பதவி பரம்பரையாக வந்ததா அல்லது ஜாதி, வயது, செல்வாக்கு ஆகியவற்றைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்களா என்பதை நாம் அறியோம்.

இந்தச் சங்கத்தினர் தங்களுக்குள்ளே வரி விதித்துக்கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் செலுத்திய வரி பலவிதமாக இருந்தது. சிலர் வருஷ வாரியில் ஒரு குறிப்பிட்ட தொகையையும், வேறு சிலர் தாங்கள் வியாபாரம் செய்யும்பொருள்களில் ஒரு பொதிக்கு இவ்வளவு என்பது போன்ற ஒரு விகிதாசாரத்தையும் மற்றுஞ் சிலர் தங்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியையும், இன்னும் சிலர் கடைக்கு இவ்வளவு என்றும் செலுத்தி வந்தார்கள். இங்ஙனம் கிடைக்கும் வரிப் பணத்தைக் கொண்டும், அவர்களுக்குச் சங்கப் பொதுவில் உள்ள நிலங்களின் வருமானத்தாலும் பல தர்மங்களைச் செய்து வந்தார்கள். மடங்கள் ஏற்படுத்தியது, உற்சவ காலங்களில் திருக்கொடி அளித்தது, நந்தாவிளக்குகள் வைத்தது ஆகியவைகள் அவர்கள் செய்தனவாகப் பல சாஸனங்களில் காணப்படுகின்றன.

இவ் வாணிகச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் வியாபார நேர்மைக்குப் பெயர் பெற்றவர்கள். சாஸனங்களில் அவர்கள் சத்ய வாசகர், தன்மவாணியர், ஸமயக் சரித்திரர் என்பன போன்ற சொற்களால் குறிக்கப்படுவதே இதனை நிரூபிக்கும். அன்றியும், இன்றைக்குச் சுமார் அறுநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டுக்கு வந்திருந்த மார்கோ போலோ என்னும் இத்தாலிய யாத்ரீகர் இவர்களைப் பற்றிப் பின் வருமாறு கூறுவதும் இதனை வலியுறுத்தும்.

வர்த்தக நேர்மை

"அவர்கள் உலகத்திலே உள்ள வியாபாரிகளுள் சிரேஷ்டமானவர்கள்; எப்பொழுதும் உண்மையே பேசுவார்கள். கிடைப்பதற்கரிய பொருள் கிடைப்பதாக இருந்தாலும் அவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்.

"வெளி நாட்டு வியாபாரி ஒருவன் அந்த நாட்டுப் பழக்க வழக்கங்களை அறியானாகில் அவன் அவர்களைத் தாராளமாக நம்பித் தன் பொருள்களை அவர்கள் பாதுகாப்பில் கொடுக்கலாம். அவர்களும் அப்பொருள்களை ஒப்புக்கொண்டு, நேரிய முறையில், அவற்றை விற்பர். அங்ஙனம் விற்குங்கால் அவர்கள் தங்களுக்கு ஒரு லாபத்தையும் கருதாமல், பிற நாட்டு வியாபாரியின் நன்மையையே முக்கியமாகக் கொள்வார்கள். வெளி நாட்டு வியாபாரி இஷ்டத்துடன் கொடுக்கும் தரகைக்கொண்டு சந்தோஷமடைவார்கள்."

இவ்விதமான உயரிய நோக்கங் கொண்ட வியாபாரிகளைக் கொண்ட சங்கங்கள் அக்காலத்தில் பெருமையுடன் விளங்கியதில் ஆச்சரியமுண்டா?

வழக்கச் சொல்லை வம்பு செய்தால்—

"அவனைத் திருநெல்வேலி ரயில் பாலத்திலே வச்சுப் பேசிக்கொண்டிருந்தேன்....."

"முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே
நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந்தே
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே."

குரூர உலகம்

டி. என். குமாரஸ்வாமி
எழுதியது

அவர்களுக்கும் ரயில் வண்டித் தொடருக்கும் இடையில் நின்ற கம்பத்தின் மேலிருந்த தந்தியொன்று, தனது ரகசிய பாஷையில் வெள்ளையின் கதியை நிர்ணயிக்கும் செய்தியை யாருக்கோ எடுத்துச் சென்றுகொண்டிருந்தது அவர்களுக்கு எப்படித் தெரியும்!

I

பச்சை, பொன்னி, வெள்ளை இவர்கள் மூவரும் எந்தச் சமயத்திலும் இணைபிரியாது இருப்பார்கள்.

களத்துமேட்டின் அருகிலேயே முக்கோணமான ஒரு நிலத் துண்டு; வரப்பின் ஓரங்களில் பசும்புல் செழிப்பாக வளர்ந்திருக்கும். நிலத்தின் ஒரு மூலை ‘ரயில் லயனை’த் தொடுகிறது. வரப்பின் ஓரமாகவே ஒரு தந்திக் கம்பம். பச்சைக்கும் பொன்னிக்கும் இந்தத் தந்திக் கம்பம் வெளியுலகின்—அவர்கள் பாராததும், அவர்கள் அறிவுக்கு எட்டாத ரகஸ்யம் குடிகொண்டதுமான ஓர் அதிசயத்தின்—சின்னமாக நின்றது. அதைப்பற்றிப் பயங்கரமான எண்ணங்கள் இந்தச் சிறுவர்கள் மனதிடை உண்டானபோதிலும், பிரதிதினமும் அதைப் பார்ப்பதனால் அவர்களுக்கு அது இருப்பது ஸஹஜமாகிவிட்டது.

நிரபராதியான அந்தத் தந்திக் கம்பத்தை பச்சை பரீக்ஷிக்காத நாளே கிடையாது. அவன் புத்திக்கு அது ஒரு பட்டுப்போன மரமெனத் தோன்றும். மேலே வரிசையாக இருக்கும் பீங்கான் குமிழிகள் ஒரு வகைப் பழமென்றே அவன் எண்ணுவான். ஒரு நாள் இந்த நம்பிக்கையினால், அந்த விசித்திரக் கனியைப் பறிக்கக் கம்பத்தின் மீது தொத்தி ஏறினான் பச்சை. தந்திகளின் சமீபமாக வரும்போது சட்டென்று அவனுக்கே ஓர் அச்சம் ஏற்பட்டது. பீங்கான் குமிழிகள் அவனுக்குக் கோயிலின் கோபுரக் கலயங்களை நினைப்பூட்டவே, மட மடவென்று கீழே இறங்கிவிட்டான். புல்தரையில் கால்கள் நிலைத்ததும் அவனுக்கு ஜில்லென்று வியர்த்தது.

பொன்னிக்கு அவ்வளவு தைரியம் வரவில்லை. பெண்ணாயிற்றே! ஆனால் பச்சையைக் காட்டிலும் வெளியுலகைப்பற்றி அறிய வேண்டிய ஆவல் அவளுக்குத்தான் அதிகம். மணிக்கணக்காக அந்தத் தந்திக் கம்பத்தின் அடியிலேயே உட்கார்ந்திருப்பாள். மேலே செல்லும் தந்திகளிலிருந்து வரும் ரீங்காரமும், காற்றின் அலைகள் அவற்றின் மீது மோதும்போது ஏற்படும் சப்தமும் ஓர் அபூர்வ ஸங்கீதத்தை ஸ்ருஷ்டித்தன. பொன்னி இந்த இசையைக் கேட்டுக் கொண்டு இன்புற்று இருப்பாள். தந்தியின் நாதம் சிற்சில சமயம் அவளுக்குத் தெரிந்த பாட்டைப்போலவே கேட்கும். அப்போது அவள் சந்தோஷத்தினால், கைகளைக் கொட்டி, கண்களில் ஆச்சர்யம் ஜொலிக்க அதையே ஊன்றிக் கவனிப்பாள். தன்னையுமீறி அவள் முகத்தில் முறுவல் விளையாடும். வெகு தூரத்திலுள்ளவர்கள் ஒருவரோடொருவர் இந்தத் தந்திகளின் மூலமாகப் பேசிக்கொள்வதை அந்த நாட்டுப்புறச் சிறுமி எங்ஙனம் அறிவாள்? வெளியுலகின் இந்த ரகஸ்யத்தைத் தெரிந்துகொள்ள அவளுக்குச் சற்றும் பரபரப்பு இல்லைபோலும்! இதன் உண்மை தெரிந்துவிட்டால் நித்தியம் கேட்டு ஆனந்திக்கும் அந்த அற்புத இசையின் மாதுர்யம் குன்றிவிட்டாலும் குன்றிவிடும். பொன்னிக்கு இந்த ஸங்கீதத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதே போதும்!

வெள்ளை, இந்தச் சிறுவர்களைக் காட்டிலும் வயதில் பெரியவள். அவள் ரகஸ்யமான அந்த வெளியுலகைப்பற்றி மண்டையை உடைத்துக்கொள்ளவில்லை. சிறுவர்களுக்கு இயல்பான கற்பனாசக்தி அவளுக்கில்லை. ஸம்ஸாரத்திற்கேற்ற அறிவு படைத்திருந்தாள் அவள். அந்தத் தந்திக்கம்பம் அவள் வரைக்கும் ஒரு ஸாரமற்ற வஸ்துவே. அவளுக்குச் சொறி யெடுக்கும்போது உடம்பை உராய்ந்துகொள்ள அது உபயோகமாக இருந்ததே ஒழிய வேறெதற்கும் பயன்படவில்லை.



...வெள்ளை, பொன்னி, பச்சை...

வெள்ளை என்பது ஒரு பசுவின் பெயர். அது இந்த உலகில் எவ்வளவோ மாறுதல்களைப் பார்த்தாகிவிட்டது. இரண்டீற்றான புஷ்டியுள்ள பெரிய மாடு. ஸம்ஸாரத்தில் பல கஷ்ட நிஷ்டூரங்களையும் அனுபவித்து இருக்கிறது, தன் யஜமானனுடன். வயிறாரப் புல்மேய வேண்டியது; கவடில்லாமல் பாலைத் தரவேண்டியது. அதற்கு வீண் தொல்லை எதற்கு? கண்கள் பாதி மூடினபடி மெல்ல அசைபோட்டுக் கொண்டே, அடிக்கடி வாலை ஆட்டிய வண்ணம் தொலைவில் தெரியும் பயிர் பச்சைகளையும், நீலக் குன்றுகளையும் நோக்கியபடி அது கனவு காணும். நடுநடுவே பச்சை, பொன்னி இவர்கள் விளையாட்டுகளில் அதுவும் கலந்து கொள்ளும். அவர்களிடத்தில் வெள்ளைக்கு அவ்வளவு பாசம்! அந்தக் குழந்தைகள் தானே அதை வயிறு வெடிக்க மேயவிட்டு போஷித்து வருகிறார்கள்! பசுமாடு எங்கேயாவது பேசுவதுண்டானால், இந்த வெள்ளையும் இவர்பால் தான் கொண்ட அன்பையும் ஆதரவையும் வெளியிடும். பிறர் வயல்களுக்குப் போய்விடாமல், வேலியைத் தாண்டி ஆபத்திற் கிடமான அந்த ரயில் பாதைக்குச் சென்று விடாதபடி, தன்னை அவர்கள்தானே கருத்தாய்க் காப்பாற்றி வருகிறார்கள்? மாடானாலும் அதற்கும் கொஞ்சம் அறிவு இருந்தது. மற்றப் பசுக்களைப்போல அது சிறுவர்களுக்கு அனாவசியமான தொந்தரவைக் கொடுப்பது கிடையாது. இதரர்களின் விளைச்சல்களில் மேய்ந்ததாக வெள்ளை ஒரு நாளும் கெட்ட பெயர் வாங்கினதில்லை. இளம் புல் மேய்வதும், சொந்தமாக வாழ்வதுமே அதன் லக்ஷியமாகும். இவ்விரண்டையும் தவிர்த்து வேறு எதையும் அது விரும்பவில்லை. முதன் முதலாக ரயில் வண்டியைப் பார்த்ததும் துள்ளி விளையாடும் சிறு கன்றாக இருக்கும்போது அதன் அமைதியான வாழ்க்கைக்கு விகாதம் ஏற்பட்டது. அப்போது வெருண்டுபோய் மாட்டு மந்தையில் புகுந்து கொண்டது. அப்புறம் அடிக்கடி ரயில் வண்டி வருவதையும் போவதையும் பார்த்துப் பார்த்து அதற்கு ஒருவாறு பயம் தெளிந்தது. வண்டி வரும் சப்தத்தைக் கேட்கும்போதெல்லாம் தலையை மட்டும் தாழ்த்திக் கொண்டு உடலைச் சுருக்கிக்கொள்ளும். நாளடைவில் அந்த அச்சமும் தொலைந்து விட்டது. இப்போதெல்லாம் வெள்ளை, பக்கத்தில் ரயில் வண்டி இரைச்சல் போட்டுக் கொண்டு சென்றால்கூட, அசட்டையாகவே இருக்கும். ‘ரயில் வண்டியும் உலகத்திலிருக்கும் ஒரு வஸ்து; அதன் வழியில் குறுக்கிட்டால்தானே விபத்து? அது பாட்டிற்குத் தொலைவில் செல்கிறது.’—இத்தகைய எண்ணம் அதற்கு வந்ததோ என்னவோ?

இந்த ‘ரயில் லயன்’ பச்சைக்கும் பொன்னிக்கும் ஒரு குதூஹலத்தையே அளித்தது. முதலில் பயம் கலந்த ஆவல் அவர்களிடம் தோன்றியது. ரயில்வண்டி வரும்போதெல்லாம் அவர்கள் கம்பி வேலியின் ஓரமாக நின்று கொண்டு வண்டித் தொடரை நோக்கிக் கூவியும் கைதட்டியும் குதிப்பார்கள். அதைப்போலவே சப்தங்களை அபிநயம் செய்வார்கள். கடைசியில் வீட்டில் ரயில்வண்டி விளையாட்டென்ற ஓர் ஆட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள். இருப்புப் பாதையின்மேல் புழுவைப் போன்று அந்த ரயில் வண்டித் தொடரென்னும் வஸ்து வேகமாகச் செல்வது அவர்

களுக்கு விநோதமாய் இருந்தது. அது எந்த ரகஸ்யமான வெளியுலகிற்குச் செல்கிறதோ?

ஆனால், அந்தத் தந்திக் கம்ப மாகட்டும், ரயில்வண்டியாகட்டும் எத்தனை நாழிகை தான் இந்தப் பாலர்களின் மனதைக் கவரும்? ரயில்வண்டி தூரத்தில் மறைந்துபோனதும் மீண்டும் தனிமையும் நிச்சப்தமும் அவர்களைச் சுற்றி நிலவும்; மறுபடியும் மாடு மேய்க்கும் பழைய தொழில்தான்; மீண்டும் அவர்களின் ஆசைக்குப் பாத்திரமான அந்த வெள்ளைப் பசுதான்.

பொழுது புலர்வதற்கு முன்பே பால் கறந்தாகிவிடும். புள்ளினத்தின் குரலோசையைக் கேட்டுக்கொண்டே, தம் சின்னஞ்சிறு அடிகளைப் பனிதோய்ந்த புல் தரையில் பதிய வைத்து, வெள்ளையை வரித்தாங்கலுக்கு மேய ஓட்டிச்செல்வார்கள். நீண்ட பகற்பொழுதை பல விசித்திர மனோபாவங்களில் கழித்தவுடன் அவர்கள் களைத்துத் தூசிபடிந்த மேனியுடன் அந்திவேளையில் திகழும் மஞ்சள் வெயிலோடு கோவுடன் வீடு திரும்புவார்கள். தாய் கதை சொல்லிக்கொண்டே பிசைந்து கையில் போட்ட சோற்றைத் திருப்தியுடன் புசித்துவிட்டு, அந்தத் தூய குழந்தைகள் மாட்டுக் கொட்டிலுக்குவந்து வெள்ளையின் அலை தாடியைத் தடவிக்கொடுப்பார்கள். அது முடிந்ததும், முற்றத்தில் பாய்விரித்துப் போட்டுப் படுத்துக்கொண்டு பொன்னியும் பச்சையும் இருள் வானில் ஏற்படும் நக்ஷத்திர விளக்குகளை "அதோ ஒண்ணு! இதோ ஒண்ணு!" என்று கணக்கிட்டு இயற்கை அன்னை செய்யும் அதிசயத்தை நினைந்தவாறு கற்பனை ஊசலில் ஆடிக்கொண்டே கண்ணயர்வர். வெள்ளையும் பகலெல்லாம் மேய்ந்த புல்லை, மென்று விழுங்கிக்கொண்டே படுத்துக் கண்ணிமைகளை மூடி நித்திரையில் ஆழும். இவர்களுடைய வாழ்க்கை இப்படியே அமைதியுடன் சென்றுகொண்டிருந்தது. ஒரே காம்பில் இரட்டை மலர்கள் போன்று அந்தச் சிசுக்கள் தூக்கத்திலும் இணைபிரியாது இருப்பார்கள். ஸ்வப்ன தேவதையும் இன்பக் கனவுகளையே மூட்டி அவர்களை நித்திரையில் சிரிக்கவைப்பாள். வெள்ளைப்பசுவானது அவர்களுக்கு நிறையப் பால் கொடுத்துத் தன் நேசப்பான்மையைக் காட்டியது. பகல்வேளைகளில் அதற்குத் தெரிந்த விளையாட்டுகளைக் காட்டி மகிழ்வித்தது.



பையன் ஊருக்குப் புறப்படும்போது "உடம்பை நன்னாப் பாத்துக் கோடா" என்றதன் பலன்.

II

அந்தக் குழந்தைகளின் தந்தை பெரியண்ணன் நிலம் வாங்கிக் கொஞ்சநாட்கள் கூட ஆகவில்லை. வெள்ளைப்பசுவுக்கு யதேஷ்டமாக மேய்கிற அளவு புல் வரப்பில் இருந்தது. ஆனால், இந்த நிலம் வாங்குவதற்கு முன்னர் நெடுந்தூரம் பரவிய வயல் வெளி, ஏரிவாய், கொல்லைப்புறம் முதலிய இடங்களில் மேய்ந்துதான் ஜீவித்தது. அதுவும் கோடைக்காலங்களில் வறட்சியே உருவெடுத்திருக்கும் பூமியில் பசும்புல் எங்கிருந்து கிடைக்கும்? ஜலாசயங்களில் ஒரு பொட்டுத் தண்ணீர் ஏது? அந்தமாதிரி சமயங்களில் வெள்ளையை வயிறு நிரம்ப மேய்த்துக் காப்பாற்றியது யார்? பச்சையும் பொன்னியுந்தான்! மழைக்காலத்தில்தான் கஷ்டம். ஏழையான பெரியண்ணன் வைக்கோலுக்கு எங்கே போவான்? பாவம்! நாந்தல் தினங்களில்கூட—வானம் கண்ணையே திறக்காமல் மழைகொட்டும்போதுகூட-அக்குழந்தைகள்தான் வெறும் உடலுடன் வாடைக்காற்றையும் பொருட்படுத்தாமல், பசுவின்மேல் உள்ள அந்தரங்கமான பற்றுதலினால், புல் செதுக்கிக் கொண்டுவந்து போடுவார்கள். வெள்ளையும் மதமதவென்று வளர்ந்தது. நிறையப் பாலும்தந்து, அந்தக் குழந்தைகளை போஷித்தது. பசு கன்று போட்ட ஒவ்வொருதரமும் அவர்கள் வீட்டில் ஒரு சின்ன விவாதம் ஏற்படும். கன்றுக்கு அதிகப்பால் விடலாமா, வேண்டாமா வென்றுதான். வீட்டுக்காரி "கன்றுக்குக் கொஞ்சம் விட்டால் போதும். பாலைச் செம்பு நிறையக் கறந்துகொள்ளுங்கள்" என்பாள். அவள் ஸம்ஸாரத்தில் இடிபட்டவளானதால் மிகுந்த பாலை விற்றுத்தான் குடித்தனத்தை நடத்தமுடியுமென்பதை அறிவாள். ஆனால் உலகம் இன்னதென்று தெரியாத அந்தக் குழந்தைகள் கன்றுக்குப் பால் அதிகமாக விடவேண்டுமென்ற கக்ஷியில் இருப்பார்கள். சந்தர்ப்பம் அகப்பட்டால் கன்றை அவிழ்த்துப் பசுவிடம் விட்டுவிடத் தவற மாட்டார்கள். கன்று தன் தாயின் பெரிய மடியில் தலையை முட்டிக்கொண்டே பாலைக் காம்பிலிருந்து ஊட்டும். குழந்தைகளிருவரும் அதன் வாயிலிருந்துவரும் பால்நுரையைப் பார்க்க ஆவலுடன் நிற்பார்கள். பசுவும், தனக்கு எந்த விதத்திலும் உபகாரமாக இருக்கும் அந்தச் சிசுக்களை ஸ்நேகத்துடனும், கிருதக்ஞையுடனும் நோக்கும். அம்மூவரிடையே ஏற்பட்ட இந்தப் பாசம் அறுக்கமுடியாததாய் இருந்தது.

நிலம் வாங்கினதும், பெரியண்ணனின் அதிர்ஷ்டம் மந்தமாகிவிட்டது. அவன் எதிர்பார்த்தபடி அது பலனை அளிக்கவில்லை. வரிப் பணத்திற்கு வேண்டிய தான்யம் கூடக் கைக்கு வரவில்லை. ஏழை படும் ஸங்கடத்தைப்பற்றி வரி வசூலிப்பவருக்கு என்ன அக்கரை? அது என்றும்போல் கஜானாவில் குவிந்துகொண்டிருந்தது! மணியக்காரன் ஒருதரம் இரண்டுதரம் தவணை கொடுத்தும் பெரியண்ணனால் சமாளிக்க முடியவில்லை. கடைசியில் தன் உடைமைகளை வாரிக்கொண்டுபோக வந்து விடுவார்களேயென்று பயந்து, கண்ணும் கருத்துமாகத் தான் வளர்த்துவந்த பசுவான வெள்ளையை விற்று வரிகட்டுவதென்ற முடிவிற்கு வந்தான்.

அவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாகப் பழகியிருந்தது அந்தப் பசு. ஆனால், அதை விற்றால்தானே மானம் மிஞ்சும்? வேறு உபாயம் இல்லை. ஐயோ, அதற்குரிய மதிப்பை அறிந்து யார் வாங்கிக் கொள்ளப் போகிறார்கள்?

பெரியண்ணன் மனைவியின் கண்களில் நீர் ஊற்றியது. அவள் வெள்ளையைத் தடவிக்கொடுத்து விக்கி விக்கி அழத் தொடங்கினாள். அதைவிட்டுப் பிரிவது தன் வயிற்றில் பிறந்த குழந்தையைப் பறிகொடுப்பது போல் இருந்தது அவளுக்கு. அந்தக் காமதேனுவினால் அல்லவா அவளுடைய செல்வக் குழந்தைகள் நோய் நொடியின்றி வளர்கிறார்கள்? அந்த லக்ஷ்மி வீட்டைவிட்டுப் போய்விடுகிறாளே! இனி ஒவ்வொன்றாக வறுமைப்பேய்கள் இந்த வீட்டைச் சுற்றிக்கொள்ளும்—இவ்வாறெல்லாம் அவள் மனம் எண்ணித் துடிதுடிக்கும். ஆனால் என்ன செய்வது? ஏழையின் கஷ்டங்களைக் கவனிக்க அரசாங்கத்தாரல்லவோ முன் வர வேண்டும்?

III

பசுமாட்டை விற்றுவிடப் போகிற சங்கதி குழந்தைகளுக்கு மட்டும் தெரியாது. ஒரு சனிக்கிழமை, இருள் அகல்வதற்குள், பச்சையும் பொன்னியும் என்றும்போல் கவலையின்றித் துயிலும் சமயம் பார்த்துப் பெரியண்ணன் தன் அருமைப் பசுவை அடுத்த ஊர்ச்சந்தைக்கு ஓட்டிச்சென்றான். அவனுக்கு அந்தக் காரியத்தைச் செய்ய இஷ்டமேயில்லை. வெளியுலகின் நிர்ப்பந்தமே அவனை இப்படிச் செய்ய வற்புறுத்தியது.

குழந்தைகள் எழுந்தவுடன் பசுவைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்ட பிறகுதான் வேறு எந்த ஜோலியையும் கவனிப்பது வழக்கம். ஆனால், அன்று கொட்டிலில் பசுவையும் கன்றையும் காணாது போகவே, அவர்களுடைய சிறிய ஹ்ருதயங்கள் திடுக்கிட்டன. அழுது சிவந்த கண்களுடன், அம்மா வந்து அவர்களுக்கு மெல்ல சமாசாரத்தை எட்டவிட்டாள். பசுமாடு வேண்டா வெறுப்பாய்த் தான் சந்தைக்குப் போயிருக்குமென்பது அவர்களுடைய எண்ணம். அந்தச் சிறு நம்பிக்கையே அவர்களுடைய மெல்லிய இதயங்களுக்கு அதிர்ச்சியைத் தராமல் சற்று ஆறுதலை அளித்தது.

பொழுது சாயும்போது, மனச்சோர் வெய்துசரீரக்கிலேசத்துடனும் தூசுபடிந்த கோலத்துடனும், பெரியண்ணனும் பசுவும் வீடு திரும்பினர். அப்பாவை விசாரிக்கக் கூடக் குழந்தைகளுக்குப் பயம். சும்மா இருந்துவிட்டனர். பசு திரும்பி வந்ததே, அதுவே அவர்களுக்குப் போதும்!

பசு விற்பனை போகவில்லை. பெரியண்ணன் சொன்ன விலைக்குச் சந்தையில் வாங்க யாரும் முன் வரவில்லை. துரதிர்ஷ்டம் பாருங்கள்! பசுவை விலைக்குக் கோரினால் வாங்குபவர், 'இனி விலை இறங்கட்டுமே, கஷ்டம் மென்னியைப் பிடித்தால் சரஸமான விலைக்குத் தானாகவே கொடுத்துவிட்டுப் போகிறான்' என்று எண்ணமிடுகிறார்கள். இப்படி இருப்பதுதானா உலகத்தவர் இயல்பு!

பசு ஒருதரம் சந்தைக்குப் போனதைப் பார்த்ததுமே சிறுவர்களுக்குச் சந்தேகம், சந்தேகம்தான்; பசு தங்களை விட்டு என்றைக்காவது போய்விடுமோவென்று அன்று முதற்கொண்டு கவலை அவர்கள் மனதில் குருத்துவிடத் தொடங்கியது. போதாக் குறைக்குத் தலையாரி வீட்டெதிரே வரிக்காக இடும் கூச்சல் இவர்களுடைய பூப் போன்ற இதயத்தைக் கசக்கியது.

"வெள்ளையை விற்றால்தான் வழி ஏற்படும்; அநியாய விலைக்குப் போனாலும் சரி" என்ற உறுதிக்கு வந்தான் பெரியண்ணன்.

அடுத்த சனிக்கிழமையன்று சந்தை. வீட்டில் எவர் முகத்திலும் ஈயாடவில்லை. பின்னால் தனக்கு ஏற்படப்போகும் நிலைமையை மிருக இனத்தைச் சேர்ந்த அந்த வெள்ளை எவ்வாறு அறியும்? என்றும்போல அது தானுண்டு, தன் வழியுண்டு என்றவாறு நிச்சிந்தையாக இருந்தது.

பெரியண்ணன் வெள்ளையைக் கொட்டிலிலிருந்து அவிழ்த்துக்கொண்டு சந்தை கூடும் ஊரை நோக்கி நடந்தான். கூடவே சென்றான் பச்சையும். போக இஷ்டப்படாமல் பசு தயங்கிற்று. அந்தச் சிசுக்களின் தாய் வீட்டுவாயிலில் நின்றபடி கண்ணீரும் கம்பலையுமாய் பசுமாடு மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்தாள். "அம்மா, வெள்ளே! நீ போய்விட்டாயா?" என்று அவள் கூறும்போது என்ன உருக்கமாயிருந்தது! ஆ! கஷ்டம். அதைச் சொல்ல முடியாது.

அவர்களைப் போஷித்த தாய்—வீட்டில் பால் பொங்கவைத்த அந்தக் கிருஹலக்ஷ்மி—என்றைக்குமே அந்த எளிய குடும்பத்தை விட்டுப் பிரிந்து போய்விட்டாள்.

"போய்வா, அம்மா, வெள்ளே!" என்று சொல்லும்போது பொன்னியின் நெஞ்சில் துக்கம் அடைத்தது. ஊரின் கோடியிலுள்ள தோப்பிற்கு மேல் அவள் போகவில்லை. கண்களுக்கு மறையுமட்டும் தன் செல்வப் பசுவைப் பார்த்துக்கொண்டே விழிகளில் நீர்த் திரையிட நின்றிருந்தாள். பசுமாடோ அவளை அடிக்கடி திரும்பிப் பார்த்தது. பசுவின் துயரம் வெளிக்கு எப்படித் தெரியும்?

IV

பெரியண்ணனின் நல்லகாலமோ, கெட்டகாலமோ பசுவை ஒரு கசாப்புக்காரன் விலைக்கு வாங்கினான். பெரியண்ணன் தன் பசுவின் குணாதிசயங்களைப் பற்றி அவனுடன் சொல்லிக்கொண்டான். "வெள்ளை எவ்வளவு பால் கறக்கிறது, தெரியுமா? அதை நீ நன்றாக உன் குழந்தை மாதிரி போஷிக்கவேண்டும். என் கஷ்டகாலத்தினால்தான் அதை நான் விற்று விடுகிறேன்" என்று சொல்லும்போது கசாப்புக்காரனின் நினைவெல்லாம் பசுவின் உடல் எவ்வளவு வீசை மாமிசமாகுமென்று மதிப்பிடுவதில்தான் இருந்தது. அவனைச் சுட்டு எரித்துவிடுவது போல், குழந்தையான பச்சை விழித்து, "நாங்கள் வளர்த்த அந்தப் பசுவை எங்களை விட்டு இப்படியா பிரிப்பது? சாமீ! உனக்குக் கண்ணில்லையா?" என்று புலம்பினான். மாட்டின் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டான். அதுவும் அவனை நக்கிக் கொடுத்தது. இரக்கமிராத அந்தக் கசாப்புக்காரன், திரும்பிவர ஏங்கும் அந்தப் பசு, சோகத்தினால் வாடும் அச்சிறுவன், இவர்கள் எல்லோரும் சேர்ந்திருக்கும் அந்தக் காட்சி கல் மனதையும் கரைத்திருக்கும். தந்தையும் மகனும் பசுவைக் கசாப்புக்காரனுக்கு விற்றுவிட்டு வீட்டைநோக்கி நடந்தனர். பசு அவர்களை விட்டுப்பிரிய இஷ்டப்படாமல், கசாப்புக்காரனுடைய கடிமையான பிடியில் உறுமுவது கொஞ்ச தூரம் வரை கேட்டது. கடைசியாக ஒருதரம் பச்சை அந்தப் பசுவைத் தொலைவிலிருந்தே திரும்பிப்பார்த்து, "போய் வா! என் அம்மா, வெள்ளையம்மா!" என்றான். வெகு தூரத்திலிருந்து வரும் வெள்ளையின் கழுத்து மணியின் அரவம், "போய் வரேன், குழந்தைகளே!" என்று சொல்வது போலிருந்தது.

V

பச்சையும் பொன்னியும் தங்கள் வேதனைக்கு ஒரு விமோசனமும் ஏற்படாததைக் கண்டு ஒடுங்கிய மனதுடன், குதூஹலமின்றி அந்தப் பழைய ரயில் பாதைக்குப் பக்கத்திலுள்ள களத்தை அடைந்து புல் தரையில் சாய்ந்தனர். தங்கள் செல்வப் பசுவை நினைக்கும்போதெல்லாம் அவர்களுடைய துயரம் எல்லையைக் கடந்தது. வெளிக்காட்சி எதனாலும், வேடிக்கை விளையாட்டு எதனாலும் அவர்களுக்கு ஆறுதலே ஏற்படவில்லை. வெறுப்புடன் அவர்கள் அந்தத் தந்திக் கம்பத்தை நோக்கினர். இது வல்லவோ கொடூரமான அந்த வெளியுலகின் ஓர் அம்சம்! தங்களுடைய உயிரினும் இனிய பசுவைக் களவாடிய குரூர உலகின் சின்னம்! வெள்ளையுடன் அவர்கள் உலாவிய இடமெல்லாம் இப்போது வெறிச்சென்றிருந்தது. அந்தப் பசும் புல் தரையும் அவர்கள் கண்களுக்குப் பாலையாகத் திரிந்தது.

தூரத்தில் கரும்புகைச் சுருள் தென்பட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் இருப்புப் பாதையின்மீது கடகடவென்று ஒரு கூட்ஸ் வண்டி சென்றது. பெரிய பெட்டிகளின் ஜன்னல்களின் மூலமாக சில மாடுகள் தலையை நீட்டுவது தெரிந்தது. உலகம் எவ்வளவு கொடூரம் நிறைந்த இடமென்பது இன்று அவர்களுக்கு யாரும் சொல்லாமலே வெட்ட வெளிச்சமாகிவிட்டது. பச்சையும் பொன்னியும் ஓடும் அந்த வண்டித்தொடரை நோக்கிக் கைகளை யோங்கிச் சபித்தனர்.

"போய் வா, அம்மா, வெள்ளையம்மா!" என்று கடைசியாகத் தங்கள் வெள்ளையிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு, அக்குழந்தைகள் வெளியுலகின் ஒரு வடிவமான ரயில் வண்டியையும் வெறித்துப் பார்த்தார்கள். உலகத்தின் மீது அவர்களுடைய மனம் பகை கொண்டது. ரயில் வண்டி மறைந்ததும், அவர்கள் மீண்டும் அத்திசையே நோக்கி, "போய் வா, என் அம்மா!" என்று கூறிக் கண் கலங்கினர். அவர்களுக்கும், ரயில் வண்டித் தொடருக்கும் இடையில் நின்ற கம்பத்தின்மேலிருந்த தந்தி யொன்று, தனது இரகசிய பாஷையில் வெள்ளையின் கதியை நிர்ணயிக்கும் செய்தியை யாருக்கோ எடுத்துச் சென்று கொண்டிருந்தது அவர்களுக்கு எப்படித் தெரியும்!

ரிஜிஸ்டர் அறிவிப்பு



கல்கத்தா ஜெனரல் ரிஜிஸ்தர் நெ. 1488

"எருமைக் கடா டிரேட் மார்க்"

ஷை டிரேட் மார்க்கு மிஸ்டர் T. சுப்பராயலு செட்டியார், புரொப்ரைட்டர் கோண்டா பெயிண்ட்ஸ் கம்பெனி, 68, நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு, மதராஸ் அவர்களால் தயாரிக்கப்படும் வர்ணங்கள், கண்ணாடி, காகிதம் தினுசுகளுக்கு இந்தியன் பீனல் கோடு 478, 479 செக்ஷன்களின்படிக்கு கவர்ன்மெண்டு கல்கத்தா ரிஜிஸ்தர் செய்துள்ளோம். ஷை டிரேட் மார்க்கை அதைப்போலவோ மாற்றியோ, பெருக்கியோ, குறுக்கியோ உபயோகித்து ஷையாரின் உரிமைகளையும் வியாபாரத்தையும் நஷ்டமடையச் செய்பவர்கள் நஷ்ட ஈடு முழுமைக்கும் சிவிலிலும், கிரிமினலிலும் ஜவாப்தாரியாவார்களென இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

எல்லா சரக்குகளுக்கும் ஒரே டிரேட் மார்க்

அகில இந்திய ரிஜிஸ்திரேஷன் ஏஜன்ஸி :: பெரிய செட்டித் தெரு, திருச்சினாப்பள்ளி



ஆநந்த மடம், விஷவிருட்சம் முதலியவற்றின் ஆசிரியர்

ஸ்ரீ. பங்கிம் சந்திர சட்டோபாத்யாய

எழுதியது

தாம்பத்ய தண்ட விதாயம்



ஸ்திரீகளாகிய நமக்கு ஒன்றும் தெரியாது, ஸாதுக்கள் என்று நினைத்துக்கொண்டு நம்மீது மிகவும் அநியாயங்கள் செய்கிறார்கள். இம்மாதிரி நமக்குத் துரோகம் செய்யும் புருஷர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. ஸ்திரீகளைப் பற்றி அவர்கள் கவனிப்பதேயில்லை. நமது புராதனமான ஸ்வதந்திரத்தைப் பிடுங்கிக் கொண்டு வருகிறார்கள். ஒரு புருஷனாவது தனது ஸ்திரீயின் கட்டளைப்படி நடப்பதே கிடையாது. ஸ்திரீகளுடைய ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்துவதற்காக "ஸ்திரீ ஸ்வதந்திர ரக்ஷிணி சபா" என்ற சங்கம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இந்த சபாவைப்பற்றி இப்போது அதிகமாக அறிந்துகொள்ளமுடியாது. பின்னால் பல அறிக்கைகள் மூலம் இதைப்பற்றிய விவரங்கள் தெரிவிக்கப் படும். ஆனால், இப்போது முக்கியமாக, நமது ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக ஓர் உபாயம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதைமட்டும் சொல்லிவிடுகிறேன். இதற்காக நாம் இந்திய அரசாங்கத்தாருக்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருப்பதும் தவிர, கணவனின் உரிமைகளைப் பாதிக்காத வகையில், "தாம்பத்ய நியாயச் சட்டம்" என்னும் சட்டத்தின் நகலொன்றும் அனுப்பியிருக்கிறோம்.

எல்லோருடைய எல்லா வஸ்துக்களுடைய—ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவும், புதிது புதிதாகச் சட்டங்கள் இயற்றப்படும்போது, நம்முடைய பழங்கால ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் சட்டங்கள் இயற்றமுடியாதா, என்ன? கூடிய சீக்கிரத்தில் இந்தச் சட்டம் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கையிருப்பதாலும், இதைப் புருஷர்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகையாலும், இதை நான் 'வங்க தரிசன'த்திற்கு அனுப்புகிறேன். பெரிய மனிதர்—பணக்காரர்—களில் பலர் ஆங்கில பாஷையில் இயற்றப்பட்ட சட்டம் அதிகமாகப் புரிந்து கொள்ளமாட்டார்கள்.

இந்தச் சட்டம் முதலில் ஆங்கில பாஷையில் இயற்றப்பட்டது. பிறகு மொழி பெயர்க்கப்பட்டு, அது ஆபாசமாய் முடிந்தது. பல இடங்களில் மொழி பெயர்ப்பு, மூலத்திலிருந்து வேறுபட்டுக் காண்பதால் நான் மூலத்தையும் (ஆங்கிலம்) மொழி பெயர்ப்பையும் அனுப்புகிறேன். நீங்கள் தயவு செய்து ஆங்கிலம் வேறு பாஷை என்னும் பேதத்தை யொழித்து ஆங்கிலம், மொழி பெயர்ப்பு இரண்டையும் பிரசுரிப்பீர்களென்று நம்புகிறேன். இதை பார்க்கும் போதே ஜனங்கள் "இதில் புதிதாக செய்யப்பட்ட சட்டம் ஏதுமில்லை. பழைய 'லெஸ்னன் ஸ்கிரிப்டா' (Lessnon Scripta) தான்" என்பதைத் தெரிந்துகொள்வார்கள்.'

ஸ்ரீமதி அமிர்த சுந்தரி தாஸி
காரியதரிசி,
ஸ்திரீ ஸ்வதந்திர ரக்ஷிணி சபா.

சட்டம்

அத்தியாயம் 1

முகவுரை

வக்ரபுத்தியும், மூர்க்கத்தனமுமுள்ள கணவன்மார்களையும், ஸ்திரீகளின் சர்வாதிகாரத்தை ஆட்சேபிக்கும் இதரர்களையும் அடக்கிச் சரிக்கட்டுவது அத்தியாவசியமென்று கருதப்படுவதால் கீழ்க் கண்டபடி சட்டம் இயற்றப்படுகிறது:

பிரிவு 1. இந்தச் சட்டத்திற்கு "தாம்பத்ய தண்ட விதாயம்" என்று பெயர். கலியாணமான எல்லா இந்தியர்களையும் இந்தச் சட்டம் கட்டுப்படுத்தும்.

அத்தியாயம் 2

விளக்கங்கள்

பிரிவு 2. "கணவன்" என்றால் ஒரு ஸ்திரீயின் சர்வ உரிமைகளுக்குமுட்பட்ட (அசையும், அசைக்கப்படக்கூடிய) ஒரு ஜங்கம சொத்து.

உதாரணம்

(அ) ஒரு டிரங்குப்பெட்டி அல்லது அலமாரி கணவனல்ல. அது அசைக்கப் படக்கூடியதாயினும் தானாக அசைய முடியாது.

(ஆ) கால்நடைகள் கணவர்களல்ல. அவை தாமாக அசைகின்றனவாயினும், எல்லா சமயங்களிலும் எந்த ஸ்திரீயினுடைய சர்வ உரிமைகளுக்கும் உட்பட்டிருப்பதில்லை; ஒவ்வொரு சமயங்களில் கட்டுப்பாட்டை மீறும் ஸ்வபாவமுடையவையாக மாறி விடும் குணம் அவற்றிடம் காணப்படுகிறது.

(இ) கலியாணமான, சொந்தமாக எவ்வித அதிகாரமுமற்ற நிலைமையிலிருக்கும் மனிதர்கள் "கணவர்கள்" எனப்படுவார்கள்.

பிரிவு 3. "மனைவி" என்றால் தன் கணவன் மேல் சொத்துரிமை உடைய ஒரு ஸ்திரீ.

விளக்கம்

சொத்துரிமை என்பதில் அடிக்கவும் உதைக்கவும் உரிமையுண்டு என்பதும் அடங்கும்.

பிரிவு 4. "கலியாணமான" நிலைமை என்றால், ஆண்பிள்ளைகள், பல முன் ஜன்மங்களில் செய்த பாவங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்துகொள்ள தாமாக (ஸ்வயமாக) ஏற்றுக்கொள்ளும் தபோநிலை என்று பொருள்படும்.



அத்தியாயம் 3

தண்டனைகள்

பிரிவு 5. இந்தச் சட்டத்தின்படி குற்றம் செய்வோர் கீழ்க்காணும் தண்டனைகளுக்குள்ளாவார்கள்.

முதலாவது: சிறைவாசம்: படுக்கையறையின் நான்கு சுவர்களுக்குள்ளாவது அல்லது வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளாவது இந்தச் சிறைத் தண்டனை நிறைவேற்றப்படலாம்.

சிறைவாசம் இருவகைப்படும். அவை யாவன :—

(1) கடுங் காவல்: அதாவது வசவு திட்டுகளுடன் கூடியது.

(2) வெறுங் காவல்.

இரண்டாவது: தீபாந்திர வாசம். அதாவது படுக்கை யறையை விட்டு வெளியேற்றப்பட்டு, வேறு அறையில் தூங்கும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படுதல்.

மூன்றாவது: விவாக சம்பந்தத்தினால் ஏற்பட்ட பராதீன நிலை.

நான்காவது: பணம் காசுகள் பறிமுதல்.

பிரிவு 6. "தலைமைத் தண்டனை" என்றால் (இந்தச் சட்டத்தின்படி) மனைவி தன் பிறந்தகத்திற்கோ அல்லது வேறு பந்து அல்லது சிநேகிதர் வீட்டிற்கோ ஓடிப்போ யுட்கார்ந்து கொண்டு திரும்பி வருவதைப் பற்றி யோசிக்காமலே யிருத்தல்.

பிரிவு 7. சிறு குற்றங்களுக்குப் பின்வரும் தண்டனைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

முதலாவது: மனைவி இறுமாப்பும் அலட்சியமும் கலந்த மௌன விரதம் அனுஷ்டித்தல்.

இரண்டாவது: நெற்றி சுளித்தல், புருவத்தை நெறித்தல் முதலியவற்றுடன் கூடிய கோபப் பார்வைகள்.

மூன்றாவது: கண்ணீர், விம்மல்கள், விசும்புதல், அழுதல்.

நான்காவது: அதட்டுதல், வைதல், திட்டுதல்.

அத்தியாயம் 4

பொது விலக்குகள்

பிரிவு 8. மனைவி செய்யும் எதுவும் குற்றமாகாது.

பிரிவு 9. ஒரு மனைவியின் உத்திரவுப்படி ஒரு கணவன் செய்யும் எதுவும் குற்றமாகாது.

பிரிவு 10. இந்தச் சட்டத்தின்கீழ், யாருக்கும் வேறு எந்த விதமான காரணத்தின் மீதும் விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாது.

அத்தியாயம் 5

உதவி யளித்தல்

பிரிவு 11. இந்தச் சட்டத்தின்படி பின்வரும் காரியங்கள் செய்பவர்கள், குற்றம் செய்ய உதவியளித்தவர்களாகக் கொள்ளப்படுவார்கள் :—

முதலாவது: குற்றம் செய்யத் தூண்டுதல், உற்சாகப் படுத்துதல், தைரியமளித்தல், உபதேசம் செய்தல் முதலியன.

இரண்டாவது: அந்தக் குற்றம் செய்வதற்கு உடந்தையாக இருத்தல் அல்லது குற்றம் செய்யப்படுகையில் உடனிருத்தல்.

விளக்கம்

விவாகமாகாத ஆண் அல்லது ஸ்திரீ உடந்தையாயிருந்த குற்றம் செய்யலாம்.

உதாரணம்

(அ) லக்ஷ்மியின் கணவன் கிருஷ்ணனும், பிரம்மச்சாரியான ராமனும் சேர்ந்து குடிக்கிறார்கள். குடிப்பது தாம்பத்ய விதாயப்படி, ஒரு குற்றம். எனவே ராமன் கிருஷ்ணனுக்கு உடந்தையான குற்றம் செய்கிறான்.

(ஆ) மீனாக்ஷி கிருஷ்ணனின் தாயார். கிருஷ்ணன் லக்ஷ்மியின் கணவன். மீனாக்ஷி கிருஷ்ணனை, லக்ஷ்மியின் இஷ்டத்திற்கு விரோதமாகப் பணம் செலவு செய்யச் செய்கிறாள்.

இப்படிப் பணம் செலவு செய்வது தாம்பத்ய விதாயப்படி ஒரு குற்றம். ஆகையால், மீனாக்ஷி கிருஷ்ணனுக்கு உடந்தையான குற்றம் செய்கிறாள்.

பிரிவு 12. கலியாணமான ஒருவன், கலியாணமான மற்றொருவனை, இந்தச் சட்டப்படி குற்றம் செய்யத் தூண்டினால், குற்றவாளி, உடந்தையா யிருந்தவன் ஆகிய இருவருக்கும் ஒரேமாதிரி தண்டனை விதிக்கப்படலாம். ஆனால், உடந்தையாயிருந்தவனை தண்டிக்க அதிகாரமுள்ள ஒரு கோர்ட்டினால் அந்தத் தண்டனை விதிக்கப்படவேண்டும்.

விளக்கம்

"அதிகாரமுள்ள கோர்ட்" என்றால், கணவன்மேல் சொத்துரிமை வகிக்கும் மனைவி என்று அர்த்தம்.

பிரிவு 13. உடந்தையாயிருப்பவர்கள் ஸ்திரீகளானாலும், கலியாணமாகாத ஆணானாலும், அதட்டுதல், வசவு, திட்டுகள், கோபப் பார்வை, கண்ணீர், அழுகை முதலிய தண்டனைகள்தான் விதிக்கப்படுவார்கள்.

அத்தியாயம் 6

ஆதிபத்தியத்திற்கு எதிரான குற்றங்கள்

பிரிவு 14. "ஆதிபத்தியம்" என்றால் இந்தச் சட்டத்தின்படி "மனைவியின் ஆதிபத்தியம்" என்றுதான் பொருள்படும்.

பிரிவு 15. மனைவிக்கு எதிராகப் போர் தொடுப்பவன் அல்லது போர் தொடுக்க முயலுபவன் அல்லது போர் தொடுக்க உடந்தையா யிருப்பவன், ஆகியவர்கள், தலைமைத் தண்டனை அதாவது மனைவி பிறந்தகம் அல்லது வேறு சிநேகிதி வீட்டுக்குப் போதல், அல்லது தீபாந்தர தண்டனை, அதா

வது படுக்கை யறையைவிட்டு வெளியேற்றப் படுதல், அல்லது கையிலிருக்கும் பணங் காசு முழுவதையும் பறிமுதல் செய்யப்படும் தண்டனை ஆகிய தண்டனைகளுக்குள்ளாவார்கள்.

பிரிவு 16. மனைவியுடன் போர் தொடுக்கும்படி குழந்தைகளைத் தூண்டுபவன், அல்லது தான் போர் தொடுக்கும்போது குழந்தைகளை உதவிக்குச் சேர்த்துக் கொள்பவன், அல்லது போர் தொடுக்கக் குழந்தைகளைத் தயார் செய்பவன் ஆகியவர்கள் தீபாந்தரம் அல்லது கண்ணீர், அழுகை முதலிய தண்டனைகளுக் குள்ளாவார்கள்.

பிரிவு 17. தன் மனைவியைத் தவிர வேறு எந்த ஸ்திரீயிடமாவது ஆசை கொள்பவன் "விபசார" குற்றம் செய்தவனுவான்.

விளக்கம்

(1) தன் மனைவியல்லாத, எந்த யுவதியிடம் அல்லது இளவயது மங்கையிடம் அனுதாபம் அல்லது ஆதரவு காட்டுபவன் அந்த ஸ்திரீயிடம் ஆசை கொண்டவனுவான்.

உதாரணம்

கிருஷ்ணன் லக்ஷ்மியின் கணவன். சொர்ணம் ஒரு இளமங்கை. சொர்ணத்தின் குழந்தை அழகா யிருக்கிற தென்று கிருஷ்ணன் அதற்கு மிட்டாய், கற்கண்டு முதலியவை வாங்கிக் கொடுக்கிறுன். இதற்கு, கிருஷ்ணன் சொர்ணத்திடம் ஆசை கொண்டிருக்கிறுன் என்று வியாக்யானம் செய்யப்படும்.

விளக்கம்

(2) கணவர்கள் இந்தப் பிரிவின்கீழ் குற்றம் செய்திருப்பதாக மனைவிகள் கற்பனை அல்லது ஊகம் செய்து கொள்ளலாம். கணவன் இந்தக் குற்றம் செய்யவில்லை யென்பதற்காக விடுதலை செய்யப்படமாட்டான்.

மனைவி குற்றம் சாட்டினுலே போதும். குற்றம் செய்யப்பட்ட தென்பதற்கு அதுவே போதிய ஆதாரமாகும்.

(3) இந்தப் பிரிவின்படி குற்றத்தைக் கற்பனை அல்லது ஊகம் செய்து கொள்ளும் உரிமை பொதுவாக வயது சென்ற மனைவிகளுக்கும், வயதான அல்லது குரூபியான கணவர்களையுடைய ஸ்திரீகளுக்கும்தான் உண்டு. இளம் மனைவிகளாயிருந்தால், அவர்கள் ஸ்வபாவத்திலேயே சிடுமூஞ்சிகள் என்ருவது, அல்லது செல்லமாக வளர்க்கப்பட்ட பிடிவாதக்காரிகள் என்ருவது ரூபித்தால்தான் இந்த உரிமை உண்டு.

பிரிவு 18. "விபசாரக்" குற்றம் செய்பவர்களுக்கு இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட எல்லாத் தண்டனைகளும், இதில் சொல்லப்படாத இதர தண்டனைகளும் விதிக்கப்படலாம்.

அத்தியாயம் 7

பட்டாளத்திற்கு எதிரான குற்றங்கள்

பிரிவு 19. இந்தச் சட்டத்தின்படி பட்டாளம் என்ருல், புதல்வர், புதல்விகள், மருமகள்கள் (நாட்டுப் பெண்கள்) என்று பொருள்.

பிரிவு 20. புதல்வன், அல்லது புதல்வி, அல்லது மருமகளுக்கு கலகம் செய்ய உடந்தையா யிருப்பவன், அதட்டல், கண்ணீர், அழுகை ஆகிய தண்டனைகள் விதிக்கப்படுவான்.

அத்தியாயம் 8

(குடும்ப) சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கும் குற்றங்கள்

பிரிவு 21. கீழ்க்கண்ட உத்தேசங்களுடன் இரண்டு அல்லது அதற்கு மேல்பட்ட கணவர்கள் கூடினுல், அது சட்ட விரோதமான கூட்டம் ஆகும். உத்தேசங்களாவன :—

முதலாவது : கீழே விவரிக்கப்படுகிறபடி குடிக்கவோ, அல்லது சூதாடவோ, அல்லது தாம்பத்ய விதாய விரோதமான எந்தக் குற்றமும் செய்தல்.

இரண்டாவது : தங்கள் மனைவிகளுக்குரிய நியாயமான உரிமைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதைப் பயமுறுத்தித் தடுக்கும் அதிகாரத்தைக் காட்டுதல்.

மூன்றாவது : மனைவியின் உத்திரவு நிறைவேற்றப் படுவதைத் தடுத்தல்.

பிரிவு 22. சட்ட விரோதமான கூட்டத்தின் அங்கத்தினனுயிருப்பவன் வசவு திட்டுகளுடன் சிறைத்தண்டனை மாத்திரமன்றி அலட்சிய மௌனம், அதட்டல் முதலிய தண்டனைகளும் விதிக்கப்படுவான்.

அத்தியாயம் 9

விஸ்கி, பிராந்தி, வைன் குடித்தல்

பிரிவு 23. ஒரு புட்டியிலடைக்கப்பட்டு, ஒரு கண்ணுடி தம்ளரில் ஊற்றிக் குடிக்கப்படும் திரவபதார்த்தங்களெல்லாம் விஸ்கி, பிராந்தி, வைன் ஆகும்.

பிரிவு 24. மேலே குறிக்கப்பட்ட விளக்கப்படி தன்னிடம் விஸ்கி, பிராந்தி அல்லது வைன் வைத்திருப்பவன் குடிப்பதாகக் கொள்ளப்படும்.

விளக்கம்

அவன் அந்த திரவத்தைத் தொடுவதேயில்லையென்ருலும்கூட அவன் குடிப்பதாகத்தான் கருதப்படும்.

பிரிவு 25. குடிக்கும் குற்றம் செய்பவன் சாயங்காலவேளைகளில் படுக்கையறை அல்லது வீட்டினுள் இருவித காவல் (சிறைவாச) தண்டனையும், திட்டு, வசவு முதலிய தண்டனைகளும் விதிக்கப்படுவான்.

கலவரம் செய்தல்

பிரிவு 26. மனைவியிடம் கடுமையான குரலில், அல்லது வார்த்தைகள் பேசுபவன் குடும்பத்தில் கலவரம் விளைவித்த குற்றம் செய்தவனுவான்.

பிரிவு 27. குடும்பத்தில் கலவரம் விளைவித்த குற்றம் செய்தவன் அதட்டல், கண்ணீர், அழுகை ஆகிய தண்டனைகள் விதிக்கப்படுவான்.

வாசனை திரவிய வியாபாரிகளுக்கும், வாஷிங் மற்றும் டாய்லட் சோப் செய்பவர்களுக்கும்,

ஓர் நற்செய்தி !

வாசனை சோப், வாஷிங் சோப், வாசனைப் புகையிலை, வாசனைப் பாக்கு, வாசனைச் சுண்ணும்பு, ஊதுவத்திகள், ஹேர் ஆயில், போமேட், ஸ்நோ, கை குட்டை செண்ட், மற்றும் பல வாசனை சாமான்களுக்கும் ஏற்ற 'குதிரை மார்க்' ஒரிஜினல் எஸன்ஸுகளும், கலர்கள், கெமிகல்கள் முதலியவைகளும், எங்களிடம் கிடைக்கும். விலை ஜாப்தா இலவசமாக அனுப்பப்படும்.

D. G. Gore

Mangaldas Road, :: BOMBAY 2.



நியாயம்!



மஞ்சேரி. ஈஸ்வரன் எழுதியது
மொழிபெயர்ப்பு : டாக்டர் ராகவன்

நாகரிகம் விரிந்திருக்கிறது; ஸௌக்யத்தைக் காணேம். சட்டமிருக்கிறது; நியாயத்தைக் காணேம்.........

ரௌண்ட் டாணு; விஜயநகர் பௌண்டன் கட்டிடத்துடன் இருந்த காலம்; ரிப்பன் துரைக்குப் பசி வந்து அவர் பொலோட்டோ பக்கம் நகர்ந்ததற்கு முந்திய காலம்.

ரிப்பன் துரையின் சிலையினடியிலுள்ள மேடையில், அக்கருத்த சிலேயோடு சிலையாய், வயது பதினைன்கு கூட ஆகாத வாலிபன் ஒருவன் உறங்கிக் கொண்டிருந்தான். கிழிந்த சாக்குத் துண்டாலான அவனுடை கூட அவனிடமிருக்க வெறுத்து, நகர்ந்திருந்தது. கடவுள் ஆக்கியபடி கிடந்தான் அச்சிறுவன். உதித்த சூரியனுடன் நகரம் உயிர்க்கும் ஒலிகள் தெருக்களை நிரப்பின. சிறுவன் எழுந்திருக்கவில்லை; அவன் இரவின் குழந்தை; தாய்போல் தன் இருளில் அவனை மூடி வைத்துக்கொண்டிருந்த இரவின் மடியிலிருந்து வெளிக் கிளம்ப அவனுக்கு மனமில்லை. ஆனல், எதிரிலிருந்த கவர்ன்மெண்ட் ஹௌஸ் மரங்களின் இடைவெளி வழியாய் நுழைந்து 'இதோ இருக்கிறன் பார், உலகுக்கு வேண்டாதவன், ஸமூகத்தைச் சேராதவன், மண்ணுகப் பிறந்தவன்' என்று நாலைந்து சூரிய கிரணங்கள் காண்பித்துக் கொடுத்தன. நாயாயிருந்தாலும் பிஞ்ஜரபோலிலும், நாய் காக்ஷிகளிலும் வைத்து கவர்னர் வந்து தட்டிக்கொடுப்பார்; காட்டில் விலங்கா யிருந்தாலும் 'வன விலங்கு ஸம்ரக்ஷண ஸபையார்' பாதுகாத்துக் கொள்வார்கள். மனுஷ்யனுய்ப் பிறந்த தோஷம்!

ரிப்பன் துரை ஸ்தல ஸ்தாபனங்களையும் ஸ்தல சுய ஆட்சியையும் நமக்கு வழங்கிய பிரபு அல்லவா? அவரை விசேஷமாய்க் கவனிக்கவேண்டாமா நம் நகரக் கார்ப்பொரேஷன்? துரையின் சிலையைச் சுற்றியிருக்கும் அழகிய புல் தரைக்கு ஜலம்விடும் கார்ப்பொரேஷன் வேலைக்காரன் வந்தான். புற்களும் புதர்களும் செய்த புண்யம் கூடச் செய்யவில்லை சென்னையில் தெருவிலேயே உழைத்து, உண்டு, உறங்கி வரும் மனிதர்கள். ரிப்பன் பிரபுவின் காலடியில் சரணுகதியாய்க் கிடக்கும் சிறுவனைக் கிளப்ப தண்ணி கொட்டும் வேலைக்காரன் ஆபாஸமான சொற்களால் பள்ளி யெழுச்சி பாடியும், சிறுவன் எழுந்திருக்கவில்லை. பாதப்ரயோகம் செய்தான்; உணர்ச்சியற்ற பிரம்மம் போல் சிறுவன் கிடக்க, புற்களுக்காகக் கொண்டு வந்திருக்கும் 'சாரல் வீசி'யை சிறுவன் முகத்தின் மேல் திருப்பினன். காலை வேளையில் இவ்வளவு இன்பமான சாரல் ஸ்நானம் யாருக்குக் கிடைக்கும்! பையன் எழுந்திருந்தான்; ஸ்நானமானதும் தன் சாக்குடையை உடுத்திக்கொண்டு, சங்கிலியைத் தாண்டி, மவுண்ட்ரோடின் பக்கத்து நடையொன்றில் வந்து நின்றுகொண்டான்.

வெய்யிலில் ரிப்பன் பிரபுவின் பெருத்த வயிறு பளபளவென்று பிரகாசித்தது; கிளப்புகளிலிருந்து ஸாம்பார் ஏப்பத்துடன் சாரை சாரையாய் ஜனங்கள் வெளி வந்தார்கள். சிறுவன் 'ஸார்' என்றும் 'ஒரு தம்படி, ஸார்' என்றும் கையை நீட்டிய வண்ணம் நின்றுன். மணிபர்ஸுகள் கனமாய்த்தான் இருந்தன; கோயில்கள் பெரிதாயில்லையா?

நின்றுகொண்டு பிச்சையெடுக்க வழியில்



லாமற் போக, சிறுவன் நிழலில் ஒரு பக்கமாய் உட்கார்ந்து கையை நீட்டிக்கொண்டிருந்தான்.

மைலாப்பூர் பக்கமாய் ஒரே தங்க மயமாய்ப் பழுத்த வாழைப்பழம் நிரப்பிய கைவண்டி ஒன்று போய்க் கொண்டிருந்தது; சிறுவன் திடீரென எழும்பிக் குதித்து, இரண்டு கைகளாலும் முடிந்த வரையில் பிடுங்கினன் பழங்களை. தோலுடனேயே ஒன்றை வாய்க்குள் திணித்துக் கொண்டான். ஆனல் விழுங்க முடியவில்லை. 'திருடு' என்ற வினை அவன் மென்னியை பின்புறமிருந்து ஒரு மனுஷ்யனுடைய கை ரூபமாய்ப் பிடித்துக்கொண்டது. தலையில் பலமான குட்டு ஒன்று விழுந்தது. திரும்பிப் பார்த்தான். கிருதா மீசையுடனும், சிவந்த கண்களுடனும் ஒரு தடியன் தன்னைப்பிடித்துக் கொண்டிருப்பதை யறிந்தான்.

'திருட்டுப் பயலே' என்று ஒரு அதட்டலுடன் விழுந்தது மற்றொரு குட்டு.

'வா, தாணுவுக்கு' என்று காதுக்கு ஒரு திருகு; 'போடா' என்று முதுகில் ஒரு அறை; 'உம்' என்று ஒரு உதை.

'பழம் நன்ன இருக்காடா', 'ருசி பாத்தயோ',—இப்படி அடிக்கடி வார்த்தைக்கு வார்த்தை ஒரு அடி, ஒரு உதை.

வாலாஜா ரோடில் திருவல்லிக்கேணி ஹைரோடை மேற்பார்வை பார்த்துக்கொண்டிருக்கும் போலீஸ் ஸ்டேஷன். அங்கிருந்த 'ஸப்'புக்கு (ஸப் இன்ஸ்பெக்டர்) அப்பொழுது தான் புதிதாய் வேலை ஆயிருந்தது; வெள்ளிப் பொத்தான்களை பளபள வென்றும், தலைப்பாகையின் ஜரிகைகளைத் தூசி ஏருமலும் வைத்துக்கொண்டு, நகரத்தின் ஜாக்ரதையைத் தான் ஒருவனுகவே தாங்கிக்கொண்டு, ஒரே ஆவேசமாய் வேலை செய்து வருபவர். கையும் களவுமாகவல்லவா திருடன் ஒருவன் அகப்பட்டுவிட்டான்! பிரதம மந்திரியின் வீட்டில் களவு போயிருந்தால்கூட இவ்வளவு ஜெரூர் இருக்காது.

* * *

மாஜிஸ்திரேட் கோர்ட் கொட்டாவி களுக்கு முன் வாய்மேல் விரல்களைச் சொடுக்கிக் கொண்டிருந்தார் மாஜிஸ்திரேட். பிராஸிகூடிங் இன்ஸ்பெக்டர் அவர் ஆயுஸில் அப்படி வாதம் செய்ததில்லை. நார்டன் கேட்டிருந்தால் தலைகுனிந்து போயிருப்பான்; 'கிரிமினல் ஸைகாலஜி' (திருடனின் மனோபாவம்) என்று உயர்தர நூல்களிலிருந்து அவர் மேற்கோள்கள் கொடுத்ததைக்கேட்டால் அவர் 'யூனிவர்ஸிடி ப்ரபோஸர்' தான், என்று சொல்ல வேண்டியிருக்கும். "இவன் மூளையிலுள்ள 'குற்ற ஸ்வபாவம்'. இப்பொழுதே இத்திருட்டு மூளையைப் பிடுங்கி விடாவிட்டால் இவன் கொலைக்கும் அஞ்சாதவனுய் வளர்ந்து விடுவான்."

போதும் போதாதற்கு கான்ஸ்டேபிள் 3245 இச்சிறுவனே நான்கு மாதங்களுக்கு முன் எஸ்பிளனேடில் ஒரு கனவானுடைய பையிலிருந்து பணப்பையை எடுத்தவன் என்று கண்டு பிடித்தான். ஜவான் 3259, திருவல்லிக்கேணியில் ஒரு ஸைகில் விளக்குடன் இவன் ஒரு நாள் பதுங்கிப் பதுங்கி ஓடினதைப் பார்த்திருப்பதாகச் சொன்னுன். 2525 இவன் சிறுவனுயிருந்தும், ஒரு பெரிய சிறுவர் சோதாக்கூட்டத்தின் தலைவன் என்பதற்கு பல அத்தாக்ஷிகள் இருப்பதாய் தெரிவித்தான். இவன் அரையில் இருக்கும் சாக்கில் உள்ள மண்டியின் பெயரினுல் அவன் கடைசிக்களவின் விவரங்களைத்தான் கண்டுபிடித்து விட்டதாக துப்பறி நிபுணன் 1981 வெளியிட்டான்

ஒன்றுமே புரியாமல் இந்நியாய ஸபையிலிருந்தவர் இருவர்: மாஜிஸ்திரேட்டும், கூட்டிலிருக்கும் இளம் வாலிபனும். கொட்டாவி விட்டுக்கொண்டே மாஜிஸ்திரேட் தண்டித்தார்; "மூன்று வருஷம்—பார்ஸ்டல் ஸ்கூல் (சிறுவர் சீர்திருத்த சிறை)" என்றுர். தண்டனை என்ன என்று கூடத் தெரிந்துகொள்ளக் கூடாத அச்சிறுவன் கூட்டில் நடுங்கின வண்ணமே நின்றுன்.



"காமாட்சி"

எழுதியது

•

"டக்டிக் டகுக் டகு டிகு—"

அட ராமச்சந்திரா! அந்த டைபிஸ்ட் கூட வந்தூட்டாப் போல இருக்கே!

ஒரு தாண்டில் இரண்டு படிக்கட்டாய் மாடியேறி, கதவைத் திறந்தான். நெற்றி வியர்வையை இரண்டு விரலால் வழித் தெறிந்து விட்டு கோட்டைக் கழற்றி நாற் காலியில் போட்டான். மெஷின் மூடியை எடுத்துக் கீழே வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

மற்ற டைபிஸ்டும் வந்திருந்தார். அவர் வழுக்கை மண்டையில், மின்சார விசிறி சுழலும் சாயை பிரதி பலிப்பதைக் கண் டான். வழுக்கையான வழுக்கை! ஏப்பை சாப்பையான வழுக்கையல்ல. மண்டை முழுதும் நெற்றியின் வியாபகமேதான். "ஸார், இவன் சர்விஸில் புகுந்து மண்டை மயிர்கூட உதிர்ந்து போச்சு, ஸார்—"என்று வசனம் சொல்லுவார்களே, அது இவர் விஷயத்தில் உண்மையாகவே பொருந்தும். அவர் கைகள், மெஷின்மேல் நடமாடும் பொழுது இறக்கை கட்டிக்கொண்டு பறந் தன.

"இன்னிக்கு, என்ன ஸார், அஞ்சு நிமி ஷம் லேட்?—உஷார் ஸார்—இன்னிக்கு தொரைசாணி என்ன கோவிச்சுண்டாளோ, தெரியல்லே—மூஞ்சிலே அவனுக்கு 'ஓர்'ன்னு மூணும் பேஸ்து வெச்சிருக்கு. யாருக்கு இன்னிக்குத் தலை வலிக்கறதோ தெரியல்லே. நான் 'ஆபதாமபஹர்த்தாரம்,' சொல்லிண்டிருக்கேன்—"

அவர் எச்சரிக்கை காதில் விழுந்ததும், விழாததுமாய், ஒரு காயிதத்தை எடுத்து மெஷினில் சொருகினான்.

"டக்டிக் டகுக்டகுடிகு—" தேதியடித் தான்.

"இன்னிக்கி முழித்த வேளை என்ன வேளையோ, எடுத்த காரியமெல்லாம் இப் படித்தான் ஆயிண்டுவரது—"

கண் முழித்ததும் முழிக்காததுமாய் முன்னால் கண்களில் தென்பட்டது சாளரத் தில் செருப்பு. வெள்ளிக்கிழமையாம், வீடு மெழுகணும்னு மேலே சொருகி வைத்தா ளாம், மஹாராஜி! வெள்ளிக்கிழமை வெகு நன்றாய் விடிந்திருக்கிறது!

அப்புறம் அந்த ஷர்ட் பொத்தானுக்கு மேலும் கீழும் தேடி யலைந்ததே அரைமணி யாயிருக்கும். கடைசியில் கேட்டால், பொத் தானைக் கழற்றாமலே, வண்ணானுக்குப் போட்டுட்டாளாம்!

இவ்வளவுதான் ஆயிற்றே—அந்த வண் ணாரப்பேட்டை வண்டியாவது சுருக்க வருகி றதா? வேண்டாதபோது பட்டாளம் பட்டாளமாகப் போகும்—அதாவது சுருக் கப் போகிறதா?—"லொடக்—லொடக்—லொடக்—"

"டகு டகு டகு டகு—"

விலாஸத்தின் அடியில்கோடு அடித்தான்.

எஜமானே பொல்லாதவன். வீட்டிலிருக் கும் கோபத்தை யெல்லாம், அங்கு செலுத் தத் துப்பில்லாமல் ஆபீஸுக்கு வந்து வேலைக்காரர்மேல் வெளுத்து வாங்குவான். அப்பா, ஒரு தடவை அவன் சொல் லும் வார்த்தைகள் "ஹா, ஹா—ஹா—" என்று அம்பு பட்டாற் போல் உள்ளத்தைத் துள்ளித் துடிக்கவைக்கும்.

தனக்காவது இதையெல்லாம் சமாளித் துக்கொள்ளத் தெம்பு இருக்கிறதா? அதுவு மில்லை. உடலோ, வியாதியும் வெக்கையும் பிடுங்கித் தின்ற உடல். அதனாலேயே, பிகிந்து இறுக்கி, சற்றுத் தொட்டாலே, உடனே அலறும் வீணைத் தந்திபோல், வெகு நுட்பமாய்ப்போன மனம். அப்புறம் பிழைக்கிற வழியேது?........

Dear sir (அன்பார்ந்த ஐயா)—டகுக் டகு டகு டிகு டகு டிகு.

காலையில் 9-30 மணிக்குப் போனால், வீடு வரும் வேளை ராத்திரி, 8-0, 8-30 தான். ஆபீஸ் விட்டு வெளி வரும் பொழுது அப்படியே இடுப் புக் கத்தரித்து விழுந்துவிடும் போல் ஆய்விடும்.

எப்பொழுதடா ஞாயிற்றுக் கிழமைவரும் என்று மனம் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டே யிருக்கும். சனிக்கிழ மை வந்ததும், மனம் சந்தோஷ மாயிருக் கும், அடுத் தநாள் ஞா யிற்றுக்கிழ மை யென் று. ஆனால், ஞாயிற்றுக் கிழமைவந் தாலோ, 'ஐயோ நாளைக்கு திங்கட்கிழமை யாச்சே!' என்று ஏங்கிவிடும். ஆகையால், படும் சுக மெல்லாம் அந்த சனிக்கிழமை சாயந்திரம் கொஞ்ச நாழிகையுடன் சரி.

அடேயப்பா, இந்த வேலைக்குப் பட்ட கஷ்டம் எவ்வளவு! நேற்று மாதிரியிருக்கி றது, துரை அறைக்கு வெளியில், மனுதார் களுடன் மனுதாராய், கண்ணாடி பிரேம் போட்ட தன் சர்டிபிகேட்டுகளையும், சின் னங்களையும் தாங்கிக்கொண்டு நின்றதும், ஒருவரை யொருவர், ஒருத்தன் கவளத்தை இன்னொருவன் பிடுங்கிக் கொள்வதுபோல், பார்த்த அவநம்பிக்கைப் பார்வையும், கண் முன் வந்து நிற்கிறது.

"டக் டக் டக் டக்—"

இப்படித்தான் மார் அடித்துக்கொண்டது துரை யெதிரில் அவன் நின்றபொழுது. துரையின் வழுக்கை மண்டையும், தக்காளிக் காய்ச் சிவப்பேறிய மூஞ்சியும், பிரதிதின மும் சரைத்துச் சரைத்துப் பச்சையாய்ப் போன முகவாய்க் கட்டையும், அதைஅடுத் தாற்போன்ற இன்னொரு மோவாயும். கன் னக் கதுப்புகளுக் கிடையில், அகப்பட்டுத் தவிப்பது போல் பிரகாசிக்கும் சிறு கண்க ளும், அவைகளின் உள் பாப்பாவைச் சுற் றிய நீலமும், அவன் பென்சிலை யெடுத்து மேஜையின்மேல் உருட்டுவதும்,—எவ்வ ளவு அற்ப விஷயங்களெல்லாம், அம்மாதி ரிச் சமயங்களில் எவ்வளவு ஆழமாய்ப் பதி கின்றன!

"மிஸ்டழ்—சம்பத் குமாழன்!—(ரகரம் தான் வருவதில்லையே!)—உன்னை வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்!—" என்று அவன் இங்கிலீஷில் சொன்னபொழுது, "டகுக்" என்று அவன் மனம் ஒரு எகிர் எகிறி, அடிப் பாதாளத் தில் விழுந்தது. உடனே, "டகு டிகு டகு டிகு டகு டிகு—" ரயில் பாலத் தின் மேல் ஓடும் பொ ழுது, இப்படித்தான், அவன் மார் அடிப்பது போல் சத்த மிட்டுச்

...போறப்போ இலையைத் திரட்டிண்டு

செல்லும்.

அவ்வளவுதான், சந்தோஷத்துடன் சாக் கடையில் விழுந்தாய் விட்டது. இத்துடன் இந்த முப்பது ரூபாய்ச் சம்பளத்திற்குக் கல்யாணமும் செய்து கொண்டாய்விட்டது. தனக்குக் கல்யாணம் என்று பேச்சுக் காதில் விழுந்ததும் ஊருக்கு, "அப்பா, நான் இன் னும் வாழ்க்கையில் என் நிலையை ஸ்திரப் படுத்திக் கொள்வதற்கு முன்னால், என்னை சந்தியில் இழுத்து விட்டு விடாதீர்கள்—!" என்று கதறிக் கதறி எத்தனை கடிதங்கள் எழுதுவான்! ஆனால் ஒன்றும் சரிப்பட வில்லை. வரதக்ஷிணை பலமாக வருகிறது, என்று ஒரே பிடியாக நின்று விட்டார். போதாக் குறைக்கு அவன் பாட்டி ஒருத்தி

—"என் கண் மூட்றத்துக்கு முன்னாலே—என் பேரனைக் கல்யாணம் செய்து பாக்கணும்—" என்று நீட்டி முழக்கிப் பேசி, அவள் கண் மூடுவதற்கு முன்னால் அவனைக் கண் மூடியாக்கி விட்டாள்.

அவ்வளவுதான், கண்ட பலன் என்ன? அந்தப் பணமாவது மிஞ்சியதா? எல்லாம் எங்கேயோ மணலில் இறைத்த நீர்போல் மாயமாய்த் தொலைந்துவிட்டது. மிஞ்சியது—இரட்டைப் பூணூலும், கால்கட்டும் தான்.

"ஷ்—!!—"

'ஸி' போடும் இடத்தில் ஒரு 'எக்ஸ்' விழுந்துவிட்டது. ரப்பரையெடுத்து அழிக்க ஆரம்பித்தான்.

'தாரமும் குருவும் தலைவிதி' என்று எந்தப் புண்ணியவான் எழுதிவிட்டுப் போனானோ தெரியவில்லையே!

அகஸ்மாத்தாய் அவன் கண்கள் ஜன்னலின் வெளிப்புறம் நோக்கின.

தெருக்கக்கூஸ் குழாயில் ஒருத்தி ஒரு சிறு குண்டு சட்டியில் ஜலம் பிடித்துக் கொண்டிருந்தாள். அவள் தோம்புப்புடவையில் நூறு பொத்தல். எண்ணெய் கண்டு எத்தனையோ நாளாகி செம்பட்டை பூத்த



போயிடுங்கோ...

மயிர். அவள் குளித்தும் எத்தனை நாளாயிருக்குமோ, தெரியவில்லை. பக்கத்தில் போனாலே துர்க்கந்தம்—ஆனால்.

ஆபீஸ் விட்டு வெளியேறும் பொழுது, அவள் அவ்வழியாய்த்தான் போவாள். ஆகையால் அவளையும் அவள் புருஷனையும் எத்தனையோ தடவை கவனித்திருக்கிறான். அவர்கள் வாழ்க்கை சின்னக் குழந்தைகள் "செப்பு" வைத்துக் கொண்டு விளையாடுவது போலேயே இருக்கும். அவன் எங்கேயோ, கல் உடைத்துவிட்டு வந்த கூலியில் படிக்கு மேல் பாதி கள்ளைக் குடித்துவிட்டு ஷோக்காய் தெம்மாங்கு பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வருவான். இவள், அதற்குள், மூன்று செங்கற்களால் நிருமாணித்த அடுப்பில், செத்தை எரியிட்டு 'தப்ளான்' குழம்பு காய்ச்சி வைத்திருப்பாள்.

அவன் வந்ததும், "என்ன, சுடுதண்ணி வெக்கிலையோ?" என்று ஜம்பமாக விரட்டிவிட்டு அந்தக் கக்கூஸ் குழாயிலேயே குளித்துவிட்டு வருவான். மண் கலயத்தில், சாதத்தை வட்டித்து வைத்துக் காத்துக் கொண்டிருப்பாள். அச் சோற்றைப் பார்த்தாலே வாந்திவரும். ஓரேயடியாய் மஞ்சள் பூத்து, ஒவ்வொரு பருக்கையும் நத்தை நத்தையாய்—

"தே, என்ன ஒண்ணுமே சரியாத் துண்ணமாட் டென்றியே! எந்தப் பாவி கண்ணு வெச்சூட்டானோ, தெரியலையே. ஒங்கம்மா இருந்தாலும் பனையோலை எரியிட்டுச் சுத்திப்போடுவாளல்ல?—"

"அம்மா!—அம்மா!! —அம்மா!!!" அவ்வார்த்தையை மனதிற்குள் சொல்லிக் கொள்ளும் பொழுது, அவன் உதடுகள் தாமாகவே அசைந்தன. அம்மா, அம்மா தான்! அதுவும் ஒரே குழந்தையாய் வாய்த்துவிட்டால்—

அம்மாவைப் பற்றி நினைத்ததும், அவன் மனக்கண்முன் "யசோதா - கிருஷ்ணா" படம் வந்துநின்றது. அதேமாதிரி களங்கமற்றுக் கருணை மொழியும் முகம் கட்டுத் தளந்தாற்போல், சற்று சரிந்த சரீரம். அதேமாதிரி பளபளவென வாரியெடுத்துக் கட்டிச் செருகுக் கொண்டையிட்ட கத்தை மயிர். அந்த புலாக்கும் தண்டைக் கொலுஸும் தான் இல்லை. மற்றதெல்லாம் யசோதைதான். அவள் தான் அவன் கிருஷ்ணன்.

படிக்கும் நாட்களில், பள்ளிக்கூடம் விட்டதும், புத்தகங்களை வலைப்பையில் போட்டுத் தோளில் தொங்க விட்டுக் கொண்டு, ஆடி அசைந்து நடந்து வந்து, அவள் ரேழியில் உட்கார்ந்து, அண்டை அசல் வீட்டாருடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது "லொட்டென்று" மடியில் போய் விழுவான்.

"என்னடா, நன்னாருக்கு! குட்டிச் செவிரு மாதிரி பத்து வயஸாறது. இன்னும் அம்மா கிட்டப் பால்குடிக்கணும்னு ஆசையாயிருக்கா, என்ன?" என்று பக்கத்திலிருப்பவர் நாலு பேர் சொன்னாலும் கூட, அவனுக்கு ஏறுவதில்லை. அவளுக்கும் ஏறுவதில்லை. இரண்டு பேரும் அடுப்பங்கரைக்குப் போய், அவள் தோசையை வார்த்துப் போடப்போட, அவன் அதில் பழங்குழம்பை விட்டுக்கொண்டு கண்ணைச் சிமிட்டிக்கொண்டு, முகத்தை யில்லாத கோரணியெல்லாம் பண்ணிக் கொண்டு தின்றானே! ஆஹா, அந்த ஆனந்தம் இனி, இந்த ஜன்மத்தில் கிடைக்கப் போகிறதா?—

அம்மா குரல் வெகு ஸன்னமானது. ஓரேயடியாய் ரொம்பவும் இனிமை பொழியாவிட்டாலும், உணர்ச்சி ததும்பியது.... அதன் சுகத்தை மார்கழி மாதமும் தீபாவளியின் பொழுதும் தான் நன்றாய்க் காணலாம்.

சங்கராந்தி சமயத்தில், விடியும் வேளையில், தாதன் வந்து சங்கை ஊதிவிட்டுப் போன பிறகு, தொடர்ந்தாற் போல், அம்மா, "தேவனு கூலனே தேவி கோசலை பாலனே, தசரத ராமனே எழுந்திரும்" என்று உதயராகம் பாடிக்கொண்டு வீட்டு வேலை செய்யத் தொடங்கும் பொழுது, அவன் கைகளைத் தலைக்குப் பின்னால் கோர்த்தவண்ணம், லயித்துப்போய், படுக்கையில் கட்டையாய்க் கிடப்பான். தன் வீட்டு வாசலில், சாணியுருண்டை யுருட்டி, பூசணிப் பூவை சொருகிவைத்த பிறகு தான் மற்றவர் வீட்டில், சாணி தெளிக்க ஆரம்பிப்பார்கள். எப்படி இந்த ஸ்ரீமதி இவ்வளவு காத்தாலே எழுந்திருக்கறு என்று இதுவே, பக்கத்தாத்து அம்மாமிகளுக்கெல்லாம் பெரிய ஆச்சரியமாயிருக்கும்.

தீபாவளியின் பொழுது கோலமிட்டுப் பலகையிட்டு, அவனை உட்காரவைத்து நெற்றியில் குங்குமமிட்டு, வெற்றிலை மடித்துக் கொடுத்து, கௌரி கல்யாணம் பாடிக்கொண்டு தலையில் ஒரு கை எண்ணெய் வைத்தது, எப்பொழுதும் மறக்குமா?—

உண்மையான சந்தோஷம், வெள்ளம் போன்று கரை புரண்டு ஓடுவதன்று. கானலைப்போல் வெகு நுட்பமானது. கானல் பொய்யென்கிறார்களே, ஏன்? அதைப் பிடிக்கத் தெரியாததால் தான். கானலைப் பிடித்தவர்க்கல்லவா தெரியும், அதன் உண்மையும், ஆனந்தமும்!—

வேலையும் கல்யாணமும் ஆன புதிசில் புதுக் குடித்தனம் போகுவதற்கு முன்னால் ஓட்டல் சாதம் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளவில்லையென்று, சமைத்துப் போட அம்மா ஒரு மாதம் அவனிடம் தங்கியிருந்தாள். கடைசீ முறையாக அவள் கைச்சாப்பாடு சாப்பிட்டதும், கவலையற்று, பரிபூரணமான இன்பத்தை அனுபவித்ததும், அச் சொற்ப காலந்தான்!

ஒவ்வொரு நாள் வேலை மிகுதியால், இரவு 10, 10-30 மணிக்குக்கூட வருவான். அவள் தூங்கத்தான் செய்வாளோ, அல்லது தூங்காமல்தான் காத்திருப்பாளோ, அதுவும் தெரியாது. எத்தனை மணியானாலும் சரி, அவன் காலடி சத்தம் ரேழியில் கேட்டதும், அல்லது எவ்வளவு மெதுவாகக் கதவைத் தட்டினாலும்— "சம்—ப——த்—" என்று கூப்பிட்டுக்கொண்டே "லொங்கு லொங்கு" என்று ஓடி வருவாள். கதவின் அந்தண்டப்புறம் ஒலிக்கும் அவள் மெட்டி சப்தம், கானத்தின் இனியதாயிருக்கும். மோப்பம் கிப்பம் பிடிக்கிறாளோ என்று அவன் ஆச்சரியப்படுவான்.

அவனுக்கும் எப்பொழுதாவது, அத்திபூத்தாற் போல் 5, 5-30-மணிக்கு வீட்டிற்கு வர சந்தர்ப்பம் கிடைப்பதுண்டு. அச் சமயங்களில் தலைக்குப் பின்னால் விரலைக் கோர்த்துக்கொண்டு, சாய்வு நாற்காலியில், அரைக்கண் மூடிய வண்ணம், படுத்திருப்பாள். சாயங்காலத்தின் மெலிந்த காற்று கண் ரப்பைகளின் மேல்படுகிறதே, அக் குளிர்ச்சிதான் ஆனந்தம் (ஆஹா! களைப்பில் எவ்வளவு ஸுகம் இருக்கிறது!!)

அச்சமயத்தில் அம்மா சுவாமி படத்திற்கு எதிராக நின்று கொண்டு, குத்து விளக்கை ஏற்றுவாள்.

அந்த இருட்டும் வெளிச்சமும் ஒன்று கலக்கும் சமயத்திற்கும், அவன் மனம் ஒரேயடியாய் மனோதர்மத்தில் திளைத்துத் தோய்ந்திருக்கும் வேளையில்—அவள் அம்மாதிரி குனிந்து விளக்கேற்றும் பொழுது, அவள் உடல் வளைவில், ஒரு தனி தேஜஸ்-பக்தியின் தேஜஸ்-மிளிறுவதாக அவனுக்குத் தோற்றும். ஏன், ஒவ்வொரு சமயத்தில் அவன் கற்பனை கரை புரண்டு ஓடும் பொழுது, எதிரில் மாட்டியிருக்கும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி படத்தில், அம்பாள் முகத்தில், அம்மாவைப் பார்த்து புன்னகை புரிவதாக....கண்ணைக் கூடச் சிமிட்டுவதாக-நினைத்துக் கொள்வான். பிறகு ஒருவரும் இல்லாத சமயத்தில், படத்தண்டை போய், தனக்குப் புலப்பட்டது மெய்யா, பொய்யா என்று, படத்தை உற்றுப் பார்த்துப் பரீக்ஷிப்பதுமுண்டு.

அவன் சாகும் பொழுது கூட கொடுத்து வைத்தவன் தான். பகவான், அவனைத் தூக்கிக்கொண்டு போய் விட்டார் என்றே சொல்லவேண்டும்.

பட்டண வாசம், அவனுக்குப் பிடிக்கவில்லை. தவிர, பெண்டாட்டியும் பிறந்த

கத்திலிருந்து வந்து விட்டாள். ரொம்பவும் சிரமப்பட்டு, மூன்று நாள் லீவு வாங்கிக் கொண்டு, அம்மாவைக் கூட்டிக்கொண்டு, கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். அவனுக்கே அந்தப் பொட்டைக் காடு ஸ்டேஷனில் இறங்கி அந்த மண் காலிற் பட்டதும், உடம்பெல்லாம் ஒரு தடவை சிலிர்த்தது. அம்மா கண்களில் கண்ணீர் ததும்பியிருப்பதை ஓரக்கண்ணால் கவனித்தான்.

வீடு போய்ச் சேர்ந்தனர். ஊரிலிருந்து வந்த ரகளை ஓய்ந்த பின், எல்லோரும் சாப்பிட்டுவிட்டுக் கூடத்தில் கலகலவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். அவளும் சாப்பிட்டுவிட்டு, வெற்றிலையைக் கையில் இடுக்கிக்கொண்டு கூடத்தில்வந்து உட்கார்ந்தாள். வாயில் ஒரு வெற்றிலை போட்டு மென்று கொண்டிருந்தாள். உதட்டில் சிவப்பேறியிருந்தது. அம்மா முகத்தில் ஒரு தனி சோபை, ஒரு புது மலர்ச்சி....

சிரித்துக் கொண்டே உட்கார்ந்தவள், அப்படியே திடீரென்று தூணில் சாய்ந்து விட்டாள். பக்கத்தில் அவன்தான் உட்கார்ந்து கொண்டிருந்தான். 'அம்மா !—' என்று அலறிக் கொண்டே அவளை வாரியெடுத்தான். ஆனால் உடல்தான் துவண்டது. ஆவி நீங்கி யிருந்தது. இன்னும் சிரித்த சிரிப்பு ஓயவில்லை. அப்புன்முறுவல் கடைசி வரையில் வாயில் பூத்திருந்தது.....

அவளை, அதே வெற்றிலையுடனும், மடியில் மஞ்சளுடனும், சுடலை போய்ச் சேர்த்தார்கள். அவன் அவளை எப்படித்தான் கொளுத்தினானோ, எப்படித் தான் வீடு வந்து சேர்ந்தானோ, அவனுக்கே ஒன்றும் தெரியாது. "ஸ்ரீமதி, ஸ்ரீமதி" என்று ஊரே கதறிற்று.

அவள் இறந்த தினம் ஏகாதசி.

அம்மா போனாள், அத்துடன் போச்சய்யா, அவன் பட்ட சுகமும், அவன் மனவமைதியும் !

நுட்பம், குறிப்பு, என்பது எல்லாருக்கும் கொடுத்து வைத்திருக்கும் குணங்களல்ல என்பது, அம்மா போனபிறகு தான் அவனுக்குத் தெரிந்தது. அதுவும் போயும் போயும் தனக்கென்று தேடிவைத்தாற்போல், தனக்கென்று தனியாய் வாய்த்தாளே ஒருத்தி !

இப்பொழுது, வீட்டிற்குப் போனவுடன், என்ன நடக்குமென்று, அவனுக்கு இப்பவே தெரியும். கதவை 'பொட்டு பொட்டு' என்று இடித்துக்கொண்டே இருக்கவேண்டியது தான். ஆள் பேச்சு மூச்சு ஒன்றும் இருக்காது. குடித்தனக்காரரில் யாராவது திறந்தால்தான் உண்டு. அவர்கள்தான் திறப்பார்கள். கூடத்தில் வெகு அட்டஹாஸமாய்ப் படுத்துத் தூங்கிக்கொண்டிருப்பாள். பக்கத்தில் குண்டு வைத்து சுட்டாலும் தெரியாது. வெள்ளி முளைக்கு முன், வயற்புறம் சென்று, பொழுது சாய்ந்த பின்னரே வீடு திரும்பும் குடியானவனுக்குக் கூட இவ்வளவு ஆழ்ந்த, நிம்மதியான நித்திரை உண்டா என்பது சந்தேகம்.

பலகை, இலை, தீர்த்தம் எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு, "மங்களம், மங்களம்" என்று சுமார் நூறு குரல் கூப்பிட்டால், "ஆ—உள...." என்று அசைந்து, பிரண்டு, இரண்டு, சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்திருப்பாள்.

தலை மயிரை 'வரக்கு வரக்கு' என்று சொறிந்து பரட்டையாகக் கலைத்துக் கொண்டு, 'ஔச், ஔச்' என்று உள்நாக்குத் தெரிய கொட்டாவி விட்டுக்கொண்டு தூக்கத்தால் இடுங்கிய கண்களை கசக்கி, புடவையை இழுத்து விட்டுக்கொண்டு அவள் வரும் ஒரு கோரம் ஸஹிக்க முடியாது.....

வருவாள். சாதத்தை வட்டிக்கு முன்னால், சிப்பல் தட்டையும், வெண்கல அகப்பையையும் 'டக் டக்' என்று தட்டி ஓசை செய்வாள். 'நாசமாயிருக்கு, அப்படிச் செய்யாதே' என்று எத்தனையோ முறை நயமாயும், பயமாயும் சொல்லியும் அவளுக்கு ஏறவில்லை. சாதத்தை எடுக்கும் பொழுதும், 'டிக்டிக்' என்று ஓசை செய்து, கீழ் பாதி மேல் பாதியாய்ச் சிதற........

'டகுக்....'ஒரே தள்ளல், அவ்வளவுதான். ஒரு மனுஷன் இவ்வளவு தான் சாப்பிடுவான், சாப்பிட முடியாது என்ற தாரதம்மியமேயில்லை. முதலில் வைத்த சாதமே மோருஞ் சாதம் வரையில் சாப்பிடும் பொழுது, "ஔச், ஔச்" என்று அவள் கோட்டுவாய்ச் சத்தம் பாணம் போல் புறப்படும்.

மோரை விட்டாளோ இல்லையோ, சாப்பிட்டு முடியு முன்னர், கையில் சாணியுருண்டையும், செம்பில் ஜலமுமாய் நிற்பள்.

"போறப்போ, இலையைத் திரட்டிண்டு போயிடுங்கோ."....

இவள் பரிமாறும் ஒரு திறமையிலேயே, பெட்டியில் போட்ட மாதிரி வெகு செல்லமாய் வளர்ந்து வந்திருந்த அவன் உள்ளம் சிறுகச் சிறுக முறிந்து விட்டது.

"எங்க பொண்ணுக்கு நன்னா ஹார்மோனியம் வாசிக்கத் தெரியும், நன்னா தையல் போடுவள்"....கொடும்பாவிகள் !

மூலையில் குந்திட்டாற் போல் உட்கார்ந்து கொண்டு தையலே கணவன், "டகுக், டகுக்" என்று ஊசியைக்குத்தி மாட்டியிழுக்கும் பொழுது, அந்தத் தையல் சட்டத்தை அவள் கையிலிருந்து பிடுங்கி அப்படியே முறித்தெறிந்து விடலாமா என்று ஆத்திரம் கிளம்பும். ஆனால் என்ன பயன், அவளுடன் கோபிக்கவும், அவன் சக்தி குறைந்து விட்டது.

"எந்த ராஜா எந்தப் பட்டினம் போனால் என்ன!" என்று வீட்டு வேலையெல்லாம் விட்டுவிட்டு, மெனக்கெட்டு, பாயைப் போட்டு, ஆர்மோனியத்தை வைத்துக் கொண்டு, தொடையைத் தட்டிக்கொண்டு ஆரம்பிக்கும் பொழுது, அம்மா பூபாளம் பாடிக்கொண்டு, வீட்டு வேலை செய்யத் தொடங்குவது அவன் மனக் கண்முன் தோன்றி மறையும். கண்களை உறுத்திக் கொண்டு நெருப்புத் துளிகள் கிளம்பும்.—

காலையில் எழுந்து, இரவு படுக்கும் வரையில் இந்த 'டிக் டிக் டகுக் டகுடிகு' சத்தம் கண்டது தான் மிச்சம். அதுவும் அம்மா போன பிறகு தாங்கவே முடியவில்லை.

அவள் சாதம் போடும்பொழுது—"டக் டிக் டகுக் டகுடிகு."

தையல் தைக்கும் பொழுது—"டக் டிக் டகுக் டகு டிகு."

டிராம் வண்டி தண்டவாளத்தில் ஓடும் பொழுது "டக் டிக் டகுக் டகுடிகு."

துரை எதிரில் நிற்கும்பொழுது அவன் மனம் "டக் டிக் டகுக் டகுடிகு". ஆபீஸ் வந்ததிலிருந்து வெளியேறும் வரையில் "டக் டிக் டகுக் டகுடிகு". இரவு தூக்கத்தில் புரளும் பொழுதும் காதில் "டக் டிக் டகுக் டகுடிகு." பகவான், இப்படித் தன்னை ஒன்றிலும் ஒட்டாத வண்ணம் படைத்து விட்டதை நினைக்கும்பொழுது, மனதில் ஒரு தனி பயங்காம் ஜனித்தது.

உலகமே, இந்த "டக் டிக் டகுக் டகுடிகு" சப்தத்தில் சுழல்வது போல் அவனுக்குத் தோன்றியது. பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது. நெற்றிப் பொட்டில் உலக்கை யிடித்தது. இந்த மெஷினை ஒரேயடியில் உடைத்து விடலாமா என்று ஒரு எண்ணம், அமாவாசையில் அலைகிளம்புவது போல ஆவேசத்துடன் பொங்கி யெழுந்தது. உடம்பில் "ஜிவ்வென்று" ஒரு சக்தி பாய்ந்தது. ஆனால், அடுத்த நிமிஷம்—

"சம்பத் குமா—ழ—ன்---அந்த ஸ்டேட்மெண்ட் தயாராயிற்று..."என்று ஆங்கிலத்தில், துரையின் அறையிலிருந்து ஒரு கர்ஜனை கிளம்பியது.

அவன் உள்ள வெழுச்சி மாயமாய் மறைந்தது.

"இதோ....ஸார்....இதோ...."

"டக் டிக் டகுக் டகுடிகு—" அம்மெஷின் சப்தம் அவன் ஹிருதயத் துடிப்புடன் ஒத்துப் பாடியது....

கடிகாரத்தில் மணி மூன்று.

டங்....டிங்....டங்.



இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொஸைடி, லிமிடெட்

கோயமுத்தூர்

இரண்டு காரணங்களால் இக்கம்பெனியின் உன்னத நிலைமையை அறியலாம்

1

முதல் வருஷத்தில் 7 லக்ஷத்திற்கும் 2-ம் வருஷத்தில் 11½ லக்ஷத்திற்கும் பாலிஸி கொடுக்கப்பட்டமை

2

ரினியூவல் சர்தா தொகை முழுவதும் பாலிஸி தாரரது லைப் பண்டிற்கே சேர்க்கப்பட்டமை

மற்ற விபரங்களுக்கு:—

சப் - ஆபீஸ்

26, பைகிராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை

தலைமை ஆபீஸ்

கோயமுத்தூர்

சப்-ஆபீஸ்

102-1, கிளைவ் தெரு,

கல்கத்தா

குறைக்கப்பட்ட விலைகள்

Fully Jewelled Pattern Nos. 25 & 31—Tested and adjusted to the minute, Rectangular shaped movement

At CHALLENGE PRICES!

மிக உயர்ந்த மெகானிசம், 15 ஜுவெல், லீவர், காம்பன்சேஷன்ஹேர்ஸ்பிரிங், மிகவும் அழகிய நாகரீகமான உருவம் 3 வருஷ உத்திரவாதம். இவ்வளவு மலிவாக விற்க இது வரையில் எவரும் துணிந்ததில்லை.

15 JEWELS

நம்பிக்கை, நவீனம், உறுதி.



நீடித்தஉழைப்பு, சரியான மணி, மிகக் குறைந்த விலை.

	சாதாரண விலை	குறைக்கப் பட்ட விலை
P. No. 25 (15 ஜுவெல்ஸ்) ரோல்ட்கோல்டு (10 வருஷ உத்திரவாதம்)	Rs. 32/-	Rs. 19-15-0
,, ஆல்புரூப் ஸ்டீல்	Rs. 27/-	Rs. 16--0-0
P. No. 171 (எகானமி லீவர்) குரோமியம்		Rs. 9--12-0

படம் கடியாரத்தின் சரியான அளவு.

P. No. 31 (15 ஜுவல்) 10½'' ரவுண்ட் ரோல்டுகோல்டு		Rs. 15-12-0
P. No. 172 (எகானமி லீவர்)	தங்க கலர்	Rs. 7--12-0

தபால் & பாக்கிங் இனும்—இன்றே ஒன்று ஆர்டர் செய்யுங்கள்

PATON SMITH & Co.,

45, Chandney Chowk Street,

Dharamtollah P.O., **CALCUTTA**

ஜயா பிலிம்ஸ் & ஹிந்துஸ்தான் பிலிம்ஸ் லிமிடெட்

பெருமையுடன் சமர்ப்பிக்கும்

விமோசனம்

(தமிழ்ப் படம்)

சென்னை பிரதம மந்திரி ஸ்ரீ ச. ராஜகோபாலாச்சாரியின் பாராட்டுதலைப் பெற்றது. பத்திரிகைகளும் பொதுஜனமும் ஏகோபித்துப் புகழ்ந்த கதை.

நாடக மேடையில் மதராஸ் மக்களைப் பரவசப் படுத்திய அதே பெண் குழந்தைகள், நகரப் பெண்கள் சங்கீதப் பாடசாலை மாணவிகள், நடிக்கிறார்கள்.

டைரக்டர்:—டி. மார்கோனி

உதவி டைரக்டர்: டி. எஸ். பாபு

சங்கீத டைரக்டர்: ஸ்ரீமதி எஸ். ஆர். ரமணி, எல்.டி.

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதவும்:—

ஸோல் டிஸ்டிரிபியூடர்கள்:

ஹிந்துஸ்தான் பிலிம்ஸ் லிமிடெட்,

132, பிராட்வே, மதராஸ்.

ஜப்கோ நீம் சோப் நிகரற்றது

பெரிய கேக்

ஒன்றுக்கு 0-3-0

மூன்றுக்கு 0-8-6

எங்கும் கிடைக்கும்

ATTAIN "WEI WEIS" HEALTH

"'Wei Weis,' who inhabit the Northern Part of Bengal are the Healthiest people in the world".

—Dr. William Hall Haldem
(New York Explorer.)

THEY USE ONLY

T. T.

MISKY ASAFOETIDA

(A Scientific product to balance your diet)



Rashid Jamshed Sons & Co.
222, Govindappa Naick St.,
MADRAS.
H.O.: BOMBAY
Branches: MADURA & KUMBAKONAM

சர்ச் லைட் கட்டிங் டைமன்ஸ், வர்ஜீனியா மலைப் பிரதேசங்களில் உற்பத்தியாகி சிறந்த மின்சார சாஸ்திரிகளின் ஆராய்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்டு அசல் வைரங்களுக்கு இணையாக விளங்குவது.



தோடு சைஸ் கமலம் 1-க்கு ரூ. 0-8-0
கடுக்கன் சைஸ் 0-7-0
பேஸரி சைஸ் 0-6-0

சர்ச்லைட்
வைரங்கள்

முக்கிய கவனிப்பு

சர்ச்லைட் கட்டிங் டைமன்ஸ்கள் எங்களிடமும் எங்கள் உரிமை பெற்ற ஏஜண்டுகளிடமும் தான் கிடைக்கும். வேறு யாரிடமும் கிடைக்காது.

சம்சுதீன் & இசுமாயில் 96, தங்கசாலை தெரு சௌகார்பேட்டை :: மதராஸ்.	S. தீன் சேட் 94, தங்கசாலை தெரு சௌகார்பேட்டை :: மதராஸ்.

(1) விடியும் வேளை வந்ததென்று
விரைந்து நந்தவன மடைந்து
மடிந்து கவிந்த கொம்பிலுள்ள
மலரைப் பறித்து நிற்கையிலே
வளைந்து நின்ற செடியெல்லாம்
மாறி மாறி யெனைநோக்கி
“ உளைந்து நெஞ்சம் வருந்துவதேன்
ஊக்கத் துடன்வா ” வென்றழைத்தே

(2) “ இந்த உலகை யியக்குகின்ற
இறையின் முடிமீ திருப்பதனால்
வந்த பெருமை யடைந்திங்கு
வாழும் வாழ்வில் விருப்பமில்லை.
கந்தம் வீசி மாலைகளாய்க்
காதலர் கையி லினிதமர்ந்தே
இந்த உலகிற் காதலிகட்
கின்பந் தரவும் விருப்பமில்லை.

(3) தந்தை நாட்டிற் கின்னுயிரும்
தயங்கா தீயும் வீரர்கள்
வந்து சென்று நடமாடும்
வழியிற் கிடந்து மிதிபடவே
என்றன் நண்ப ! என்றும்நீ
என்னைப் பற்றி யிடுவதுபோல்
இந்த உலகி லெனக்கின்பம்
யாதும் இல்லை ” யென்றதடா.

எஸ். உமைதாணு பிள்ளை.

மால பில்லா (தெலுங்கு பேசும் படம்)

மிஸ். காஞ்சனமாலா நடிக்கும்

சாரதி பிலிம்ஸாரின் தயாரிப்பு



டைரக்ஷன் : G. ராமப்ரஹ்மம்

சங்கீத டைரக்ஷன் : B. நரசிம்ஹ ராவ்

For Bookings apply to:—

SARASWATHI TALKIES Ltd., BEZWADA.

ஜெயசிங்கின் ஜந்தர் மந்தர்

எஸ். ராஜகோபால் பி. எஸ்ஸி.
எழுதியது

மிஸ்ர யந்திரம்

புது டில்லியில் சட்ட சபைக்குச் செல்லும் பாதையில் விசித்திரமான கட்டிடங்கள் சில காணப்படுகின்றன. அவை ஜந்தர் மந்தர் என்னும் பெயரால் குறிப்பிடப் படுகின்றன. இங்கிருக்கும் முக்கிய கட்டிடமான ஸம்ரத யந்திரம் என்பதன் பொருளையும் மேன்மையையும் அறியக் கூடாமல் பாமரர்கள் இதை ஜந்தர் மந்தர் (இயந்திரக் கோயில்) என்னும் பரிகாசப் பெயருடன் குறிக்கவே, இக்காலத்திலும் இவற்றிற்கு அதே பெயர் வழங்கி வருகிறது.

கி. பி. 1686-ல் பிறந்த ஸவய் வம்சத்து இரண்டாவது ஜயசிங் என்னும் அரசர் தான், இராஜபுதனத்திலுள்ள தற்காலத்து ஜயபூர் என்னும் நகரை ஸ்தாபித்தவர். இதன் பழைய பெயர் ஆம்பர். ஔரங்கசீப் இறப்பதற்குச் சில வருஷங்களுக்கு முன் கி. பி. 1699-ல் இவர் பட்டத்திற்கு வந்தார். கி. பி. 1719-ல் மொகலாய சக்கிரவர்த்தியான மகமத் ஷா என்பவரால், ஆக்ராவிற்கும் மாளவ தேசத்திற்கும் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

இவருக்குச் சிறு வயது முதலே வான சாஸ்திரத்தில் அதிக ஆவல் உண்டு. சண்டை சச்சரவுகள் மிகுந்திருந்த அந்நாட்களில், ஒவ்வொருவரும் போர்த் தொழிலையே மேற்கொண்டனர். ஆனால், இவருடைய மனம் யுத்தத்தையும் அதில் பெறும் வெற்றிகளையும், நாடவில்லை. அக்காலத்தில் வட இந்தியாவிலும் ஸமர்கண்டிலும், அராபிய முறைகளையும் கிரேக்கிய முறைகளையும் பின்பற்றியே வான சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வந்தன. அவ்வாறு ஆராய்ந்தவர்களில் முக்கியமானவர்கள், தைமூர் லேன் என்பவனின் பேரனை உலுக்பேக் என்பவனும், நசீர்-அல்-தீன், ஜாம்ஷிட் காஷி முதலியவர்களும் ஆவர்.

புதிய ஆராய்ச்சி

உலுக்பெக் தொகுத்திருந்த விண்மீன்களின் அலகு முறை, சில அம்சங்களில் சீர்கேடாக இருக்கக் கண்டு ஜயசிங் அவற்றைச் சீர்திருத்த எண்ணங்கொண்டார். உலுக்பெக் கண்டுபிடித்திருந்த ஒவ்வொரு நக்ஷத்திரத்தின் நிலை, உயரம் முதலியவை சரியானவைதானா என்று உறுதிப் படுத்திக்கொள்ள டில்லியில் இவ்வாராய்ச்சி சாலையை நிர்மாணித்தார். இங்கு அவர் ஏழு வருஷ காலம் சோதனைகள் நடத்தித் தமக்கு நிலம் முதலிய வசதிகளை அளித்த சக்கிரவர்த்தியின் ஞாபகார்த்தமாக ஜிஜ் மகமத் ஷாஹி என்னும் ஒரு நூலை வெளியிட்டார். நாகர அக்ஷரங்களில் எழுதப்பட்ட இந்நூலின் ஒரு பாகத்தை இன்றும் ஜயபூரில் காணலாம். பர்ஸிய அக்ஷரங்களில் எழுதப்பட்ட ஒரு பிரதி பிரிட்டிஷ் மியூசியத்தில்உள்ளது.

இவ்விஷயங்களில் இவருக்கு மிக்க உதவி அளித்தவர், இவருடைய முக்கிய வான சாஸ்திரியான ஜகந்நாத் என்னும் பெயர் கொண்டவர் தான். இவர் சம்ஸ்கிருதத்திலும் அராபி பாஷையிலும் அதி பண்டிதர். டாலமி என்னும் பிரக்யாதிபெற்ற வான சாஸ்திரி எழுதியுள்ள ஆல்மஜஸ்ட் என்னும் நூலை அராபி பாஷையிலிருந்து மொழி பெயர்த்து, சித்தாந்த சார கௌஸ்துபம் என்னும் பெயருடன் வெளியிட்டார்.

மேல் நாட்டு உறவு

பிரஞ்சு வான சாஸ்திரியான டீலாஹைறா் என்பவரும் ஜான் ப்ளாம் ஸ்டீட் என்பவரும் வெளியிட்டுள்ள நூல்களைப் படித்து அதன் பொருளை ஜயசிங் உணர்ந்து கொண்டதன்றியும், வான சாஸ்திரத்தில் பயிற்சி உள்ளமேல்நாட்டாரான ஸ்ட்ரோபேல், பாதரி போடியர் முதலியவர்களை டில்லிக்கு வரவழைத்து, அவர்களுடன் கலந்து அவர்களின் கொள்கைகளையும் கிரஹித்துக்கொண்டார். மேலும், பாதரி மானுயல், மகமத் ஷரீப், மகமத் மஹதீ என்பவர்களை மேல்நாட்டிற்கு அனுப்பி அங்கு அவர்களால் உபயோகிக்கப்படும் கருவிகளையும் யந்திரங்களையும் அறிந்து வருமாறு செய்தார்.

கல் கட்டிட யந்திரம்

இவ்வாறு எல்லா விஷயங்களையும் திரட்டி தீர்க்க ஆலோசனை செய்து கடைசியில், சூரியாபமம்



ஸம்ரத யந்திரம்

(Declination of the sun), நக்ஷத்திரங்களின் உயரம், நிலை, முதலியவற்றை அறிய, அக்காலத்தில் உபயோகப்பட்டு வந்த பித்தளை, இரும்பு முதலிய உலோகங்களால் செய்யப்பட்டிருந்த சிறு கருவிகளை விட, கற்களினாலும் சுண்ணாம்பினாலும் எழுப்பப்பட்ட அசைவற்ற கருவிகளே மேலானவை என்ற தீர்மானத்திற்கு வந்தார்.

மேலும், கருவிகள் மிகவும் சிறியனவாய் இருந்தால், சிறு பின்னங்களையும், உட்பிரிவுகளையும் திட்டமாய் அறிய முடியாதென்று, எவ்வளவு பெரிய கருவிகளை அமைக்க முடியுமோ அவ்வளவு பெரியனவாய் அமைத்தார். மற்றொரு காரணம் என்னவென்றால், அசையும் யந்திரங்களில், அதன் உருவாணிகள் (axes) தேய்ந்து, நாளடைவில் பயனற்றுவிடும். கற் கட்டிடங்களில் அந்த பயம் எப்போதுமே உண்டாகாது. இதுவரையிலும் இம்மாதிரி கற்கருவிகளை வேறு ஒருவரும் அமைத்தது இல்லை. டில்லியில் நிர்மாணிக்கப் பட்டுள்ள கருவிகள் யாவும் ஜயசிங்கின் புதிய கற்பனைகளே. இவர் முதல் முதல் உபயோகித்த உலோகத்தினால் செய்யப்பட்ட கருவிகளில் சிலவற்றை இன்றும் ஜயபூரில் காணலாம். டில்லியிலுள்ள யந்திரங்கள் கி. பி. 1724-ல் கட்டப்பட்டன.

டில்லியிலுள்ள யந்திரங்கள்

ஸம்ரத யந்திரம்

ஜயசிங் அமைத்த கருவிகளில் முக்கியமானது இதுதான். இது ஒரு பிரமாண்டமான சூரிய கடியாரம். இதை இரு பாதங்கள் உள்ள ஒரு சாத்திய திருபுசம் (Right-angled triangle) எனக் கூறலாம். டில்லியின் அட்சபாகை (latitude) 28 டிகிரி 39 மினிட். ஆதலால், முக்கோணத்தின்



ராமயந்திரம்



ஜயப்பிரகாசம்



ஸம்ரத யந்திரம்

நீண்ட பாகமாகிய கர்ணம் (Hypotenuse) நேராக துருவத்தைக் குறிக்குமாறு, பூமியிலிருந்து 28 டிகிரி 39 மினிட் கோணத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் $118\frac{1}{2}$ அடி, உயரம் $56\frac{1}{2}$ அடி. ஒவ்வொரு பாதத்தின் அரைவிட்டமும் (radius) $49\frac{1}{2}$ அடி.

இரு பாதங்கள் மீதும் கர்ணத்தின் மீதும், எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. சூரிய உதயத்தில் முக்கோணத்தினுடைய நிழல் மேற்குப் புறமுள்ள பாதத்தில்



ராமயந்திரத்தின் மத்ய ஸ்தம்பழம், பிரிந்துக் துறிக்கப் பட்டுள்ள பாதங்களும்

விழும்; சிறிது சிறிதாக அது குறைந்து கொண்டே வந்து நடுப்பகலில் மறைந்துவிடும். அதன் பிறகு அஸ்தமனம் வரையிலும் அது கிழக்குப் புறமுள்ள பாதத்தில் காணப்படும். பாதத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்களிலிருந்து அச்சமயம் சரியான நேரம் என்னவென்று நிமிஷம் செகண்டு வரையிலும் திட்டமாக கூறிவிடலாம். கர்ணம் மீதுள்ள எண்களிலிருந்து சூரியனின் சாய்வு (Declination) எவ்வளவு என்று உடனே கண்டு பிடித்துவிடலாம்.

இதன் மீது ஏறிச் செல்வதற்குப் படிகள் கட்டப்பட்டுள்ளன. அதன் உச்சியில் மேல் நாட்டார் உபயோகிக்கும் சிறு சூரிய கடியாரமொன்று உடைந்த ஸ்திதியில் உள்ளது. இக்கட்டிடத்தின் உள் பாகத்தில் ஷஷ்டாம்ச யந்திரம் என்ற ஒரு கருவி இருந்தது. அக்காலத்திலிருந்ததைவிட இப்போது யமுனையின் ஜல மட்டம் உயர்ந்து விட்டதால், இதன் அடிபாகத்தில் ஜலம் ஊறுகிறது. ஆதலால் கி. பி. 1910-ல் இதைப் பழுதுபார்த்து செவ்வை செய்த போது இதற்குள் ஒருவரும் செல்ல முடியாதபடி இதை அடைத்து விட்டனர்.

ஜயப் பிரகாசம்

ஸம்ரத யந்திரத்தின் அடியில் படிகள் ஆரம்பிக்குமிடத்தில், ஜயப் பிரகாசம் என்னும் இரு யந்திரங்கள் உள்ளன. வானசாஸ்திரி ஜகந்நாத் இதை சர்வயந்திர சிரோமணி என்று குறிக்கின்றார். இவை எல்லா அம்சங்களிலும் ஒன்றை மற்றொன்று ஒத்துள்ள உட்கவிந்த அர்த்த கோளங்கள். (Concave hemispheres) இதற்குள் உச்சி முதல் அடிவானம் வரையிலுமுள்ள விருத்த பாகமும் (Azimuth), மத்திய ரேகையும் (Meridian), நிரட்ச ரேகையும் (Equator) குறிக்கப்பட்டுள்ளன. மேலே உள்ள இதன் வட்டம் அடிவானத்தையும் (Horizon), இதன் அடிபாகம் உச்சியையும் (Zenith) குறிக்கின்றது. இதன் மேல் பாகத்தில் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் கம்பிகள் கட்டி, அவற்றின் நிழலிலிருந்து சூரியாபமம், உயரம் (Altitude) முதலியவற்றைக் கவனிக்கலாம்.

இதன் உட்புறம் முழுவதும் எண்ணிக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. உள்ளே ஒவ்வொரு பாகத்தின் அருகிலும் சென்று எண்ணிக்கைகளைக் கூர்ந்து கவனிப்பதற்குப் படிகள் கட்டப்பட்டுள்ளன.

ராம யந்திரம்

ஜயப் பிரகாசத்தின் தென்புறத்தில், ராம யந்திரம் எனப் பெயர் கொண்ட இரண்டு வட்ட வடிவமான அமைப்புகள் காணப்படுகின்றன. இதை முதல் முதல் ராம்சிங் என்ற ஒருவர் கண்டு பிடித்ததால், இதற்கு அப்பெயர் வந்தது. இவற்றின் நடுவில் ஒரு ஸ்தம்பம் உள்ளது. ஸ்தம்பத்திலிருந்து வெளிச் சுவற்றின் அரை விட்டம் எவ்வளவோ அவ்வளவு தான் ஸ்தம்பத்தின் உயரமும்; அதாவது 24 அடி $6\frac{1}{2}$ அங்குலம். ஸ்தம்பத்தின் குறுக்களவு 5 அடி $3\frac{1}{2}$ அங்குலம். இதைச் சுற்றி உள்ள தரையை ஒவ்வொன்றும் 6 டிகிரி உள்ள 30 பாதங்களாக (Sectors) பிரித்திருக்கின்றனர். இவற்றின் மீதும் சுவற்றிலும் குறிக்கப்பட்டுள்ள டான்ஜண்ட் எண்ணிக்கைகளை நன்றாய்க் கவனிப்பதற்கு, ஒவ்வொரு பாதத்திற்கும் அடுத்து அடுத்து, அதே 6 டிகிரி உள்ள இடைவெளிகள் காணப்படுகின்றன. இவ்விர்த்த பாதங்கள் தரையிலிருந்து 3 அடி உயரத்திலுள்ளன. இரண்டு யந்திரங்கள் அமைத்ததின் காரணத்தை ஒன்றின் எந்த எந்த பாகங்களில் இடை வெளிகள் உள்ளனவோ, அந்த இடங்களிலெல்லாம், மற்றொன்றில் பாதங்கள் அமைக்கப்பட்டுள்ளதிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம். ஸ்தம்பத்தின் நிழல் மூலமாக சூரியனின் திகம்சகோடியையும் (Azimuth), உயரத்தையும் சுலபமாகக் கண்டு பிடித்து விடலாம்.



ஜயப் பிரகாசம் : பின்னால் ராமயந்திர அமைப்புத் தெரிகிறது.

மிஸ்ர யந்திரம்

ஸம்ரத யந்திரத்திற்கு வடமேற்கில், 140 அடி தூரத்தில் மிஸ்ர யந்திரம் உள்ளது. இதன் பொருள் "கலப்புள்ள யந்திரம்." இதற்குள் நான்கு வெவ்வேறு கருவிகள் ஒன்றாய் கட்டப்பட்டுள்ளதால், இதற்கு இப்பெயர் வந்தது. இவை ஜயசிங் காலத்திற்குப் பிறகு அவருடைய மகனான மாதவ சிங் என்பவரால் எழுப்பப்பட்டதாகச் சிலர் கருதுகின்றனர்.

இதில் ஸம்ரத யந்திரத்தைப் போன்ற ஒரு அமைப்பும், நியத சக்ரம், தக்ஷிணோ விர்த்தி யந்திரம், கடகராசி வளையம் என்ற நான்கு கருவிகளும் அடங்கி உள்ளன.

தாம் இவ்வளவு சிரமப்பட்டுக் கண்டு பிடித்த விடைகள் சரியானவைதானா என்று அறிய ஜயபூர், உஜ்ஜயினி, காசி முதலிய இடங்களிலும், இதே மாதிரியான கருவிகளை அமைத்து சோதனைகள் நடத்தினார். அவை எல்லாம் ஒன்றுக்கொன்று சிறிதும் பேதமின்றி ஒத்திருந்தன.

ஜயசிங் கி. பி. 1743-ல் இறந்தார். "அவருடைய பிரேதத்துடன் (வான சாஸ்திர) ஸயன்சும் அழிந்து விட்டது" என்று ஒரு சரித்திராசிரியர் கூறுகிறார். அவருடைய ஜீவிய காலத்திலேயே, கி. பி. 1739-ல் நாதிர்ஷாவின் படைகள் இவருடைய உலோக யந்திரங்களை அழித்து விட்டன. பிற்காலத்தில் ஆக்ராவையும் டில்லியையும் கொள்ளையிட்ட ஜாட் என்பவர்கள் இந்த யந்திரங்களையும் அழிக்க முயன்றனர். இவை இன்றும் ஜயபூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவையாதலால், கி. பி. 1910-ல் ஜயபூர் மன்னர், ஏராளமான பணம் செலவழித்து, சீர் குலைந்து கிடந்த இவற்றை நேர்படுத்தினார். இப்போது இதைச் சுற்றிலும் இரமணீயமான ஒருதோட்டமும் வைத்து வளர்க்கப்பட்டுள்ளது. இந்திய சர்க்காரும் ஜய சிங்கின் பெயர் எந்நாளும் அழியாமல் இருக்க வேண்டுமென்று, புது டில்லியில் ஒரு காலத்தில் அவருடைய மாளிகைகள் இருந்த வீதிக்கு ஜயசிங் ரோட் என்றும், கடைத்தெருக்கள் இருந்த இடத்திற்கு ராஜா பஜார் என்றும் பெயரிட்டிருக்கின்றனர்.

கவலைப்படாதிரு மனமே......

கவலை கைக்குழந்தையைப் போல்; கைக் குழந்தையில்லாத சில தாய்மார்கள் வெகுகாலம் ஜீவித்திருப்பதில்லை. கவலையே நீடித்த ஆயுளுக்கு அஸ்திவாரமாகும்.

வ. ரா.

முத்தமிழ் பிறந்த மாமதுரையில் தோன்றின தமிழன் வீர சரித்திரம் !
தமிழர்களால் இன்றும் கடவுளென்று போற்றப்படும் தீரன் வாழ்நாள் கதை !
தமிழ் நாடு வாழ்க வென்று வீர ரத்தம் சிந்தின தீரன் !

மதுரை வீரன்

★

பம்பாய் வாடியா மூவிடோனில் வளர்ந்து
தமிழர்மனமும் குளிர தமிழருடம்பில் ஓடிக்கொண்டி
ருக்கும் உறைந்த ரத்தம் உணர்ச்சி பெற்றெழ விரைவினில்

வெள்ளித் திரையில் தோன்றுவான்

★

நடிகர்கள் :

T. P. ராஜலக்ஷ்மி	V. A. செல்லப்பா
M. A. ராஜாமணி	M. M. சிதம்பரநாதன்
P. R. மங்களம்	T. V. சுந்தரம்
S. ராஜலக்ஷ்மி	T. P, ராஜகோபால்

டைரக்ஷன் :

P. V. ராவ்

★

அடுத்த படம் :	கைவசமிருக்கும் படம் :
மீனாக்ஷி கல்யாணம்	**மிஸ் கமலா**

For bookings and Territorial rights apply to:

THE RAJU FILMS Ltd.

81, Poonamallee High Road,
KILPAUK, MADRAS.

'Grams:—**"Filmsraju"**

Phone:—**2781**

கீர்த்தி ரகசியம்

சிட்டி (தான்)
எழுதியது

பிரபல எழுத்தாளர்களாக வேண்டும் என்ற ஆசை உள்ளவர்களுக்கு ஒரு எச்சரிக்கை. முதல் முதலில் பிரசுரிக்கப் படாமல் திரும்பிவந்த கதை, கட்டுரைகளிலிருந்து, உங்களுடைய முன்னேற்றத்தைப் பற்றிய அம்சங்களைக் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். பத்திரிகாசிரியர்கள் வந்து உங்கள் காலில் விழுந்து கெஞ்சி கட்டுரை வேண்டும்பொழுது, அலக்ஷியமாக "என்ன, சார், எழுதுவதற்கு நேரமே இல்லையே!" என்று அலக்ஷியமாக சொல்லக் கூடிய காலம் வரும் வரை நடந்த விஷயங்களை யெல்லாம் மறக்காமல் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் என்னைப் போல் கஷ்டப்படவேண்டியது. இலக்கியப் புகழும் எழுத்துக் கீர்த்தியும் இவ்வளவு கஷ்டமானவை என்று தெரிந்திருந்தால் நான் இந்த எழுதும் விவகாரத்தில் தலையிட் டிருக்கவே மாட்டேன். ஆனால் இப்பொழுது நொந்து கொண்டு என்ன பயன்? வந்த புகழ் வேண்டாமென்றால் போய்விடப்போகிறதா? கர்மபலனை அனுபவித்துத் தானே தீரவேண்டும்.

நினைத்தால் ஒவ்வொரு சமயத்தில் ரொம்ப கோபம் கூட வருகிறது. நான் எழுதுவதனால் எல்லோரும் என்னைப் புகழ்கிறார்கள் என்றால் அது என் குற்றமா? ஏதோ பெரிய குற்றவாளியை விசாரணை செய்வது போல என்னை என்னென்னமோ கேட்கிறார்கள். ஒவ்வொரு நாளும் தபாலில் வரும் கடிதங்களைப்பிரித்துப் பார்ப்பதற்கே நேரம் சரியாய்ப் போகிறது. "நீங்கள் எப்படி எழுதுகிறீர்கள்?" என்று ஒருவர் கேட்கிறார். பேனாவினால் தான் என்று சொன்னால் அவர் நம்புவாரோ என்று சந்தேகப்படுகிறேன். "உங்களுடைய இலக்கிய மேதைக்கு முக்கிய காரணம் என்ன?" "தமிழ் இலக்கியத்தின் எதிர்காலத்தைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" "பத்திரிகை எழுத்துக்கும் உண்மை இலக்கியத்துக்கும் என்ன வித்தியாசம்?" இன்னும் இதுபோன்ற ஆயிரக் கணக்கான கேள்விகள். இதற்கிடையில் "நீங்கள் ஏன் இப்பொழுது அடிக்கடி எழுதுவதில்லை?" என்ற கேள்விகளோடு சில நூறு கடிதங்கள். இந்தக் கடிதங்களைப் படித்துக்கொண்டிருக்கும்போது இலக்கியம் எழுதுவது எப்படி? நான் ஒருவன்தான் இந்த மாதிரி கடிதங்கள் கொடுமையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், நமது பிரதம மந்திரியும் இதே ஸ்திதியில் இருப்பதாகக் கேட்டது முதல் கொஞ்சம் ஆறுதல் உண்டாயிற்று. இவைகளை யெல்லாம்விட பெரும்பாலான கடிதங்கள் இப்பொழுது தான் முளைக்கும் எழுத்தாளர்களிடமிருந்து வருகின்றன. அவர்கள் எல்லோரும் ஒரே கேள்வியைத் தான் திருப்பித் திருப்பிக் கேட்கிறார்கள். "பிரபல எழுத்தாளன் ஆவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்பதுதான். இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று எனக்கு விளங்கவில்லை. நான் பிராபல்யம் அடைந்த நுணுக்கத்தையும் மறந்து விட்டேன். இதைப்பற்றி ரொம்ப நாளாக யோசித்துப் பார்த்ததில் சில உண்மைகள் வெளிப்பட்டன. ஆனால் இவைகளைப் பிறருக்குத் தெரிவிக்க எனக்குப் போதிய சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. நண்பர்களிடையில் இதைப் பற்றிப் பேச முயன்று பார்த்தேன். இந்த எழுத்துக் கீர்த்தி பேச்சை எடுத்ததுமே சிலர் ரொம்ப அவசரமான காரியங்களை முன்னிட்டு எழுந்து போய்விடுவார்கள். சிலர் வேறு இலக்கிய சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றி ரொம்ப வேகமாகப் பேச ஆரம்பித்து விடுவார்கள். எனக்குக் கடிதம் எழுதிய ஒவ்வொருவருக்கும் இதைப்பற்றி தனித் தனியாக எழுதுவது சாத்தியமான காரியமாகத் தோன்றவில்லை. பத்திரிகைகளில் எழுதுவோமென்றால் ஒரு பத்திரிகைக்கு எழுதினால் மற்றொன்றுக்கு மனஸ்தாபம். உங்களுக்குத்தான் தெரியுமே. கொஞ்சம் பெரிய மனிதனாய்விட்டால் ஓரவஞ்சனை செய்யாமல் இருக்க வேண்டாமா?

இந்தத் தர்ம சங்கடத்திற்குட்பட்டு ஏன் இந்த எழுத்து வேலைக்கு வந்தோம், பேசாமல் தாலுகா கச்சேரி குமாஸ்தாவாகவே இருந்திருக்கலாமே என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது நல்ல வேளையாக இந்திய சர்க்காரே இந்தப் பிரச்னையைத் தீர்க்க முன் வந்தார்கள்.



...ரேடியோ பேர்வழி என்னருகில் வந்தார்...

எனக்குக் கடிதம் எழுதியவர்கள் நான் பேசாமலிருந்ததைக் கண்டு வைகிராயிடம் ஒரு தூது கோஷ்டியாகச் சென்று தங்கள் குறைகளைத் தெரிவித்துக்கொண்டார்கள் என்றுதான் நான் சந்தேகிக்கிறேன். இல்லாவிட்டால் இவ்வளவு அவசரமாக இந்திய சர்க்கார் சென்னையில் ரேடியோஸ்டேஷன் ஒன்றை ஏற்படுத்தி அதில் நான் பேச வேண்டுமென்று சொல்வார்களா? எதைப்பற்றிப் பேசுவது என்று கேட்டதற்கு, ரேடியோ அதிகாரி "உங்களுடைய இலக்கிய சிருஷ்டிகளைப் பற்றிப் பேசுங்களேன்" என்றார்.

உடனே எனக்கு சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. இது, கடிதங்கள் எழுதியவர்கள் சர்க்காரோடு சேர்ந்து செய்த சதிதான் என்று நன்றாய்த் தெரிந்தது.

என்ன செய்வது? இவ்வளவு பெரிய இடத்து வேண்டுகோளை மறுக்க முடியுமா? ரேடியோக்காரர்கள் காங்கிரஸ் நடவடிக்கைகளை பரப்ப மறுத்தது உண்மைதான். அந்தச் சிறு விஷயத்திற்காக முடியாது என்று சொல்லிவிடமுடியுமா? தவிர, நானென்ன ராஷ்ட்ரபதியா?

அதோடு நமது பிரதம மந்திரியே ரேடியோவை ஆரம்பித்து வைத்திருக்கும்போது எனக்கு என்ன ஆக்ஷேபணை இருக்கமுடியும்? ஒரு விஷயத்தில் நானும் அவரும் ஒரே ஸ்திதியில் இருப்பதை முந்தியே தெரிவித்திருக்கிறேன். என்னுடைய கீர்த்தி ரகசியத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாகஇருப்பவர்களையும் உத்தேசித்துப் பேச ஒப்புக் கொண்டேன். ரேடியோ மூலம் பேசுவதில் உள்ள நன்மைகளும் என்னை உற்சாகப்படுத்தின. வேறு ஒருவரும் குறுக்கே பேச முடியாது. நான் சொல்வது தப்பு கிப்பு என்று சொல்லி பேச்சை நிறுத்த முடியாது. சாதாரணமாய் மேடையில் பேசும்போது நமது முகத்தையே எல்லோரும் பார்ப்பதனால், முகத்தில் அசடு வழிகிறதோ, அல்லது சாப்பாட்டுப் பருக்கை உதட்டில் ஒட்டிக் கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகத்திற்கும் பயத்திற்கும் ரேடியோ பிரசங்கத்தில் இடமில்லை. இன்னொரு பெரிய நன்மை. நாம் சொல்லப் போவதை எழுதி வாசித்து விடலாம். 'என்ன கோர்வையாக, அழகாகப் பேசுகிறார்!' என்ற பட்டமும் வாங்கிவிடலாம்.

குறிப்பிட்ட நாள் இரவு 8-14-க்கு மைக்ரபோன் முன் நின்று கொண்டு தொண்டையைக் கனைத்துக் கொண்டேன். ரேடியோ 'அன்னவுன்ஸர்' என் பெயரையும் நான்பேசப்போகும் விஷயத்தையும் மைக்ரபோனிடம் தெரிவித்தார். அது கை தட்டவில்லை. ஆனால், அங்கங்கே ரேடியோ கேட்பவர்கள் ஆயிரக் கணக்காக தங்கள் வேலைகளை விட்டு விட்டு ஆவலுடன் என் பேச்சை கேட்பதற்காக ஒலி பரப்பிக்கருகில் நெருங்கித் தள்ளிக்கொண்டு வருவதைக் கற்பனையில் கண்டேன்.

என் பேச்சை ஆரம்பித்தேன். மூச்சு விடாமல் நான் எழுதியதை முதல் வரியிலிருந்து படித்தேன். என் கூட இருந்த அன்னவுன்ஸர் டெலிபோனில் ஏதோ மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தார். உடனே என்னருகில் வந்தார். என்ன சொல்லப்போகிறார் என்பது எனக்குத் தெரியும். அங்கங்கே ஜனங்கள் கரகோஷம் செய்து என் பிரசங்கத்தை ரஸிப்பதை டெலிபோன் மூலம் யாரோ தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். இல்லாவிட்டால் அந்த சமயத்தில் எனக்கு என்ன செய்தி வரும்?

ஆனால், இந்த வழக்கமான பாராட்டுதல்களைக் கேட்பதற்காக நான் என் பிரசங்கத்தை நிறுத்த இஷ்டப்படவில்லை. என் பிரசங்கத்தை 15 நிமிஷங்களுக்கு சரியாக எழுதி வைத்திருந்தேன். ஒரு நிமிஷம் தாமதம் ஏற்பட்டாலும் பல அருமையான விஷயங்களைப் பொதுஜனங்கள் கேட்க முடியாமல் போய் விடும். ஆகவே, நான் அந்த ரேடியோ பேர்வழியை கையமர்த்தி உட்காரச் சொல்லி விட்டு என் பிரசங்கத்தைத் தொடர்ந்து செய்தேன். இரண்டு மூன்று முறை என்னைத் தடுக்க முயன்றும்பயனில்லாமல் போனதால் ரேடியோ பேர்வழி தோல்வியை ஒப்புக்கொண்டு பேசாமல் உட்கார்ந்துவிட்டார்.

என் பிரசங்கத்தை முடித்து கண்ணுக்குத் தெரியாத ஜனங்களிடம் விடைபெற்றுக் கொண்டேன். வழக்கப்படி அடுத்த விஷயத்தை அறிவிக்க ரேடியோக்காரர் முன் வரவில்லை. அவர் உற்சாகமின்றி உட்கார்ந்திருந்ததைப் பார்த்து அவருக் கருகில் போனேன். டெலிபோனில் வந்த செய்தி என்னவென்று விசாரித்தேன்.

"ஸ்விச் ரூமிலிருந்து இன்ஜினீயர் பேசினார். பரப்பும் மெஷினில் ஏதோ தகராறும். அரை மணிநேரம் ஒரு மைக்ரபோனும் வேலை செய்யாது எனறு சொன்னார். அதைத்தான் உங்களிடம் தெரிவிக்க வந்தேன். நீங்கள்...."

எனக்குத் தலையில் இடி விழுந்தமாதிரி இருந்தது. "அப்படியானால் நான் பேசியது முழுவதும்...!"

"மைக்ரபோனும் நானும் மாத்திரம்தான் கேட்டுக்கொண்டிருந்தோம்" என்றார்.

எனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் முழுவதும் என்னைப்பற்றி மாத்திரம் அல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பாவம்! என் பேச்சைக் கேட்பதற்காகக் காத்துக்கொண்டிருந்த லக்ஷக்கணக்கான ஜனங்களின் ஏமாற்றம் தான் எனக்கு வருத்தமாயிருந்தது. ரேடியோவைப்பற்றி என் அபிப்பிராயத்தை முற்றிலும் உடனே மாற்றிக்கொண்டேன். ஏமாற்ற மடைந்தவர்களெல்லாம் உடனே எனக்குப் புகார்க் கடிதங்கள் எழுத ஆரம்பித்துவிடுவார்கள். ஆகையால் என் ரேடியோ பிரசங்கத்திலிருந்து சில முக்கிய அம்சங்களை சேர்த்து பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கையாக வெளியிட்டிருக்கிறேன். அதைக் கீழே படிக்கலாம்:—

இலக்கிய உலகத்தில் கீர்த்தி பெறுவதற்கு கையாளவேண்டிய முறைகள் எவை என்று அடிக்கடி அநேகர் என்னைக் கேட்கிறார்கள். எத்தனையோ முறைகள் இருக்கின்றன. இவைகளில் முக்கியமானவைகளை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

1. எழுதுவது
2. எழுதாமலிருப்பது
3. விமரிசனம் செய்வது.

1. எழுதுவது என்ற பெரும் பிரிவில் கட்டுரைகள், கதைகள் முதலியவை எழுதுவது, புத்தகங்கள் எழுதுவது முதலிய எல்லாம் அடங்கும். பத்திரிகைகளுக்கு எழுதுவதில் கீழ்க் கண்ட விதிகளை தவறுமல் அனுஷ்டிக்கவேண்டும்.

(1) பத்திரிகை எப்படிப்பட்ட ஜனங்களுக்குப் போகிறது என்பதைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தேவையான விஷயங்களைப்பற்றியே எழுதவேண்டும். இதை யறிந்துகொள்வதற்கு ஒரு வழி இருக்கிறது. ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி எழுதி ஒரு பிரபல பத்திரிகைக்கு அனுப்ப வேண்டும். அது திரும்பி வந்து விட்டால் வேறு விஷயத்தைப் பற்றி எழுதவேண்டும். இப்படி எழுதிக்கொண்டே இருந்தால் என்றாவது ஒரு நாள் பத்திரிகைக்கு வேண்டிய விஷயமே கிடைத்துவிடும். பத்திரிகையும் (அதுவரையில் நீடித்து இருந்தால்) பிரசுரித்துவிடும்.

(2) புத்தகங்கள் எழுதுவதில் ஒருவிஷயம் நினைவிலிருக்கவேண்டும். தமிழில் சொந்தமாக எழுதிய புத்தகங்கள் பிரசுரிக்கப்படுவது ரொம்ப துர்லபம். ஹிந்தியிலிருந்தோ வங்காளியிலிருந்தோ மொழி பெயர்க்கப்பட்டதானால் உங்கள் புத்தகத்தைப் பிரசுரிக்க பிரசுர கர்த்தாக்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடி வருவார்கள். வெறும் தமிழில் எழுதி காலத்தை வீணாக்கவேண்டாம்.

2. எழுதாமலிருந்து எப்படிப் புகழ் அடைவது என்று உங்களுக்கு சந்தேகமாயிருக்கலாம். எழுதாமல் இருப்பதோடு எழுத்தாளர்களோடு பழகிக்கொண்டே இருக்கவேண்டும். நீங்கள் எழுதாதவரையில் ஒருவேளை நன்றாய் எழுதுவீர்களோ என்ற எண்ணம் அவர்களுக்கிருக்கும். உங்களுடைய அபிப்பிராயத்திற்கு அதிக மதிப்பு கொடுப்பார்கள். அடிக்கடி எழுதும்படி வற்புறுத்துவார்கள்.

3. விமரிசனத் தொழிலில் தான் ரொம்ப ஸ்வாரஸ்யம். புத்தகங்களை விமரிசனம் செய்யும்போது ஒன்று வசைமொழிகளாகச் சேர்த்து ஆசிரியரைத் திட்டி அல்லது வெகுவாகப் புகழ்ந்து விடவேண்டும். புத்தகத்தின் இனத்தைப்பற்றி கவனிக்க வேண்டிய அவசியமே இல்லை. இதுதான் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்ட முறை.

ஒரு விஷயம். நீங்கள் விமரிசனத் தொழில் ஆரம்பித்து விட்டால், கனவிலும் புத்தகம் எழுதி வெளியிட முயலவேண்டாம். உங்கள் புத்தகத்தை விமரிசனம் செய்ய மற்றவர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள்.

என்னுடைய பிரசங்கத்தின் சில பகுதிகளைத்தான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன்: முழு விபரம் வேண்டியவர்கள் யாராவது இருந்தால் எனக்கு ரொம்ப ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

பெங்கால்
சுத்த கதர் ஸில்க்குகளையே அணியுங்கள்

ஏன் பெங்கால் ஸில்க்குகளை எல்லோரும் உபயோகிக்கிறார்கள்?

பெங்கால் ஸில்க் கையால் நூற்று கையால் நெய்யப்பட்டது.

உயர்தரமானது, பளபளப்புள்ளது, நீடித்து உழைப்பது, தினமும் துவைத்து உடுத்தக்கூடியது.

எவ்வளவுநாட்கள் மழையிலும் வெயிலிலும் இருந்த போதிலும் எங்களுடைய பட்டு நிறம் மாறாது. இதற்கு நாங்கள் உத்திரவாதம். மற்ற எவ்வித ஸில்க்குகளும் இம்மாதிரி இருக்கவே முடியாது.

தெருவில் வரும் ஜப்பான் "ஸிழ்க்"குகளை வாங்கி ஏமாறுதீர்கள்

புடவைகள், சிட்டிகள், ஷர்ட்டிங்குகள், கோட்டிங்குகள், அங்கவஸ்திரங்கள்

முதலிய எல்லா

பட்டு தினுசுகளும்

நயமாகக் கிடைக்கும் கடை:—

பெங்கால் ஸில்க் ஸ்டோர்ஸ்

76, கிடங்குத் தெரு :: சென்னை

Do you know WHY of our success???

PURE! FINE!! SMOOTH!!! SHINY!!!!

BUY HAND SPUN WOVEN SILKS

Daily wash and wear GUARANTEED

FOR GENTS, LADIES & YOUNGS
CHOICE AND TASTE - -
COMFORT & CONVENIENCE

BUY BEST BRILLIANT BENGAL
SPECIAL SUPERIOR STYLISH SILKS

BENGAL SILK STORES

76, Godown St. - - MADRAS

Branches: BOMBAY, DELHI, BENARES, CALCUTTA
Production Centre: BISHNUPUR (Bengal)

BEWARE OF IMITATIONS

டில்லி டவாலிச் சேவகர்கள்

கே. ராமு
எழுதியது

தமிழில் டவாலிச் சேவகன் என்றவுடன், கலெக்டர் அல்லது பெரிய இஞ்சினீர் துரை ஆபீஸ் வாசலில் நிற்கிருனே, பில்லை போட்ட சேவகன், அவன் நினைவு வரும். புது டில்லி செக்ரெட்ரியேட்டிலுள்ள டவாலிச் சேவகன் முன்னுல், அவனெல்லாம் பூ, பூதான்! தமிழ் டவாலிச் சேவகனுக்கு ஹிந்தியில் சப்ராஸி என்று பெயர். அதிலும் இந்திய சர்க்கார் கரியாலயங்களிலுள்ளவர்கள் மகா சப்ராஸிகள். பெரிய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இந்திய ஏகாதிபத்தியத்தின் தலைமை ஸ்தலத்துச் சப்ராஸிகள்!

புது டில்லி செக்ரெட்ரியேட்டுகளின் பெருமையை விளக்க எவ்வளவோ எழுதலாம். அங்கே தான் "முப்பத்தைந்து கோடி ஜனங்களின் தலைவிதி......." அதெல்லாம் சாதாரணம். ஒருசமயம் ஒரு தேசிய வாதி அன்பர் சொன்ன ஒரு வாக்கியம் தான் இந்த செக்ரெட்ரியேட்டின் பெருமையைப் பிரகாசமாக எடுத்துக் காட்டுகிறது. "அங்கேதான் மகா சப்ராஸிகள் சேவகம் செய்கிருர்கள்!"

வாஸ்தவமாகவே சப்ராஸி சிரோமணிகள் எனத் தக்க மகா சப்ராஸிகள் இங்கே சேவகம் செய்கிருர்கள்—அல்லது இங்கே வசிக்கிருர்கள், சுகவாசம் செய்கிருர்கள், இந்த இடத்திற்கு அழகும், ஒளியும், உற்சாகமும் உஷ்ணமும் கொடுக்கிருர்கள். பொதுவாக, இந்திய சர்க்கார் செக்ரெட்ரியேட்டில் உத்தியோகம் செய்பவர்கள், அவர்கள் கனம்.........மெம்பர்களானுலும், காரியதரிசிகளானுலும், அல்லது சாதாரண ஒரு குமாஸ்தாவேயானுலும் சகஜமாக, சாம்பல், அழுத்தமான பழுப்பு, அல்லது கருப்பு உடை தான் அணிந்திருப்பார்கள். ஒவ்வொரு சமயம் இடையிடையே, ஒரு கழுத்து 'டை' யிலோ, அல்லது ஒரு 'சூட்'டிலோ ஒரு பட்டுப்பூச்சி பறந்தது போன்ற வர்ண வித்தியாசம் காணப்படலாம். ஆனுல் இவற்றையும் மீறி அவர்கள் யாவருடைய முகங்களும், துக்கம் விசாரிக்க வந்து கூடின தோற்றம் தான் அளிக்கும். புதுசாக டில்லி சர்க்கார் காரியாலயத்தைப் பார்க்கிறவன் 'ஏகாதிபத்தியத்தில் ஏதோ கோளாறு' என்று பயந்து போனுலும் போவான்.

இந்த மாதிரி இடத்துக்கு உற்சாகமும் ஒளியும் கொடுப்பவர்கள் இங்குள்ள சப்ராஸிகள் தான்; அதிலும் ஏகாதிபத்திய காரியாலயங்களையும், வைசிராய் மாளிகையையும் சேர்ந்த மகா சப்ராஸிகள்.



...ரைக்கிளைச் சாத்தி வைத்து பார்க் பெஞ்சில் யோக நித்திரை...

கம்பீரமான தலைமேல், ஒரு மேதையின் கற்பனையில் பிறந்து, இன்னெருவர் நிபுணனுல் கட்டப்பட்ட 'பகிடி' என்ற தலைப்பாகை. தலைப்பாகை யென்ருல் சாதாரணமான தலைப்பாகையல்ல. ஜாலர் குஞ்சம் எல்லாம் வைத்து, சில இடங்களில் புடைத்தும், நெளித்தும் அலங்கரிக்கப்பட்டது. மேலங்கி உடம்போடு ஒட்டும்படி விசேஷ சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கும். அதன்மேல் பெரிய பெரிய மகா ராஜாக்களுடைய பிரகாசத்தையும் மிஞ்சிப் பிரகாசிக்கும் குறுக்கு பெல்டு. அவன் உடம்பெல்லாம் எங்கெங்கிருந்தோ ரகசியம் ரகசியமாகத் தோன்றுவது போல ஜாலர்கள் தொங்கும். இவை யெல்லாவற்றையும் விட விசேஷமான அம்சம் ஒன்றிருக்கிறது. அவன் இடை பெல்டில் ஒரு பொன் உறையில் வைத்த சிறு உடைவாள் சொருகியிருக்கும்.

ஆடையைக் கொண்டு ஆளை மதிக்கலாம் என்பார்கள். ஆனுல் டில்லி செக்ரெட்ரியேட் சப்ராஸியை அவனுடைய ஆடையைக் கொண்டு தான் மதிப்பிடமுடியும் என்று சொல்லிவிட முடியாது. அவன், அந்த உடையை மீறியவன். இந்த உடை யலங்காரங்களெல்லாம் அவனுடைய சொந்த மதிப்பினுல் தானுக அவனைத் தேடி வந்தவை.

கனம்........மெம்பரின் ஆபீஸ் அறை வாசலிலோ அல்லது ஒரு காரியதரிசியின் ஆபீஸ் வாசலிலோ உட்கார்ந்திருந்தாலும், அல்லது அங்கு மிங்கும் உலாவிக் கொண்டிருந்தாலும் டில்லி செக்ரெட்ரியேட்டில் மிக மிகக் குறைவாகவுள்ள ஒரு அம்சத்தை இட்டு நிறைக்கிருன் இந்த மகாசப்ராஸி. அது தான் அந்த இடங்களில் காணப்படாத தன்னம்பிக்கை அம்சம்.



மேலே:—மகா சப்ராஸி குறிப் பெழுதுகிறர். வலது:—கண்ணை நாலு கொட்டுக் கொட்டி...

மாகாண சுயாட்சித் திட்டம் அமுலுக்கு வந்து மாகாணங்களிலுள்ள இலாகா அதிகாரிகளையும், சப்ராஸிகளையும் கூட ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. ஆனுல், டில்லி சப்ராஸியின் அந்த நிதானமான, கம்பீரம் நிறைந்த நடையை அதனுல் ஒரு இம்மி கூட அசைக்க முடியவில்லை. சமீபத்தில் ஒரு காங்கிரஸ் மாகாண செக்ரெட்ரியேட்டில், ஒரு மாடிப் படிமேல், அந்த மாகாண சர்க்கார் சப்ராஸி யொருவனைப் பேட்டி கண்டபோது அவன் ரொம்பக் கவலை தரும் குரலில் பேசினுன். அவன் எந்த மந்திரியினுடைய அறை வாசலைக் காத்து நின்ருனே, அந்த மந்திரி, வேளா வேளையில் சாப்பிடுகிருரா என்பதைப் பற்றிக் கூடச் சந்தேகம் எழும்படி பேசினுன்.

ஆனுல் ஏகாதிபத்திய டில்லி செக்ரெட்ரியேட்டைச் சேர்ந்த சப்ராஸி இருக்கும் திசையில் கூட இம்மாதிரிக் கவலைகளும், பயங்களும் தலைகாட்டத் துணியா. அவனுடைய உலகம் நல்ல உறுதியான இருசின்மேல், ஜாக்கிரதையாக இறுக்கப்பட்ட கடையாணிகளுடன் சுழலுகிறது. ரூபா அணுப் பைசாவில் அளவெடுத்தால் அவன் 'திருப்தியில் மிதக்கும் ஒருபெரிய அரசாங்கம்' போலத் தோன்றுகிருன். மூலப் பொருள்களை (பக்ஷீஸ் இனும்இத்யாதி) பற்றிய கவலை அவனுக்கு இல்லை. அவனுடைய சம்பளம் சாதாரணமாக ஒரு பட்டதாரியின் அளவைக்கூட மீறிவிடுகிறது. தீபாவளி, கிறிஸ்துமஸ், ஹோலி, ரம்ஸான், பக்ரீத் பண்டிகை காலங்களில் அவனுடைய வலை ரொம்பி கனத்துத்தான் இழுக்கப்படுகிறது. சில தனிப்பட்ட காரியாலயச் சப்ராஸிகள், அல்லது "சின்ன உத்தியோகஸ்தர்களின்" சப்ராஸிகள் போல அவனுக்கு மாமூலைப்பற்றிய பகல் கனவுகள் கிடையாது. சப்ராஸி, வம்சத்துக்கே பரம விரோதியான பட்டாணியன் அல்லது ஈட்டிக்காரன் (ஆறுமாதக் கடன்

அதோ வருகிறரோ அவர் எங்க துரையைத் தான் பார்க்க வருகிறர்...

காரன்) பயம் அவனுக்கு இல்லை. அவனுடைய "ஜாகை" நன்றாக அமைக்கப்பட்டு சகல சுக சௌகரிய சாதனங்களாலும் நிரப்பப்பட்டிருக்கிறது.

இவ்வளவுக்கும் மேல் அவன் "போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற நீதி வாக்கியத்தை கவனப்படுத்திக் கொள்ளாமல் என்ன செய்வான்!

இப்படிப்பட்ட சுகவாச நிலையிலே பெற்ற பயிற்சியின் பயனாக, டில்லி சப்ராஸி ரொம்ப சந்தோஷகரமானதும், அதோடு உடம்பலங்காமல் நிறைவேற்றக் கூடியதுமான ஒரு வேலை முறையை வகுத்துக் கொண்டிருக்கிறான். இதர டவாலிச் சேவகர்கள் திடீரென்று மறைந்துவிடலாம். டில்லி சப்ராஸி அப்படியில்லை.

மத்தியான இடை வேளைக்கு முன் அப்படிக் கொஞ்சம் கண்ணை நாலு கொட்டுக் கொட்ட வேண்டுமென்றால் இதர சப்ராஸிகள், ரோடுகளில் உள்ள மரத்தடிகளைத் தேடவேண்டும். அதுவும் திருட்டுத்தனமாக. ஆனால் டில்லி சப்ராஸி நிதானமாக பெல்டைக் கழற்றி ஒரு புறம் வைத்துவிட்டு, ஒரு காகிதக் கட்டை இழுத்துத் தலைக்கணையாக வைத்துக் கொண்டு ஜம்மென்று கண்ணயர்கிறான்.

இதர சப்ராஸிகள் சைக்கிளில் கட்டிய சுமைகளைத் தள்ளிக் கொண்டு போகும்போது, களைப்பாற விரும்பினால் ரோட்டின் அருகிலுள்ள ஏதாவது பார்க்கு பெஞ்சிலோ அல்லது திண்ணையிலோதான் அதை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். டில்லி சப்ராஸிக்குத் தள்ள சைக்கிளே கிடையாது. அவன் வேலையெல்லாம் ஒரு "பெரிய இடத்திலிருந்து" மற்றொரு "பெரிய இடத்துக்கு" காகிதக் கட்டுகளைத் தூக்கிக்கொண்டு போக வேண்டியது; ஒரு அலமாரியிலிருக்கிற கட்டுகளை மற்றொரு அலமாரியில் குடியேற்றுவது; ரொம்ப ரொம்பப் "பெரிய சமுகத்தை"க் காண வருகிறவர்கள் அறிமுகச் சீட்டைக் கொண்டுபோய் கொடுப்பது; இவைதான்.

இதில் கடைசி அம்சத்தை நிறைவேற்றுகையில் தான் அவனுக்கு 'பொதுஜனத் தொடர்பு' ஏற்படுகிறது. அப்போது அவன் "பொது ஜனத்தை" நடத்துகிற விதத்தில்தான் அவனுடைய மகாத்மியமும் வெளியாகிறது. சாதாரண சப்ராஸிகளின் முன்னால் கொஞ்சம் நிமிர்வுடன் பணப்பையை (பர்ஸ்) ஜேபியிலிருந்து இழுத்து அதிலிருந்து ஒரு சீட்டை எடுத்து நீட்டுகிற தோரணையிலேயே காரியம் பாதி அனுகூலமாகி விடலாம். ஆனால், டில்லி சப்ராஸியிடம் அதெல்லாம் பலிக்காது.

நேரடியாக லஞ்சம் கொடுக்க முயலுவதைக் கண்டவுடன் அவன் முகம் சிணுங்கும். அல்லது வருகிறவர், இந்த டில்லி மகானுடன் ஜனநாயக முறையில் உறவு கொண்டாட முயன்றால், அதாவது கொஞ்சம் ஸரசமாகப் பேசமுயன்றால் தீர்ந்தது. அவருடைய சீட்டு உள்ளே போய்ச் சேர வழக்கத்திற்கு மேல் இன்னொரு மணிநேரம் தாமதமாகும். இந்திய சர்க்காரின் சப்ராஸிகளில் சிறந்த மகா சப்ராஸிகள் செக்ரெட்ரியேட்டுக்கு வருபவர்களைக் கையாளும் முறையென்று ஒரு அபூர்வ முறையே வகுக்கப்பட்டுள்ளது.

நீள நீளமாகச் செல்லும் நடைகள். அவற்றின் நீளமுழுவதும் அங்கங்கே அடக்கமான நிமிர்வோடு பெரிய பெரிய பெயர்களைக் காட்டும் சிறிய பலகைகள் ஒவ்வொரு அறையின் வாசலிலும் அடிக்கப்பட்டிருக்கும். இதையெல்லாம் பார்த்து வந்தவர் பிரமித்து ஒரு மாதிரி மயக்கத்துடன் தேடிக்கொண்டேபோய் தனக்கு வேண்டிய பெயரைக் கண்டு பிடிப்பார். அந்த அறையின் வாசலில் அவர் சகஜமாகக் காண்பது (அ) மகா சப்ராஸி (ஆ) இளைய சப்ராஸி (இவனுக்கு இடையில் உடைவாள் கிடையாது. உடையிலும் தங்கவேலை குறைவு) ஆகிய இருவரும் (1) மௌனக் கடலில் ஆழ்ந்திருத்தல், (2) பத்திரிகை படித்தல், (3) நூல் நூற்றல் ஆகிய மூன்றில் ஏதாவது ஒரு நிலையிலிருக்கக் காண்பார். (புது டில்லி செக்ரெட்ரியேட் சப்ராஸிகளின் அபிமானப் பொழுதுபோக்கு நூல் நூற்றல்.)

நீங்கள் அவர்கள் அருகில் நெருங்க நெருங்க அவர்கள் தாங்கள் செய்துகொண்டிருந்த அல்லது செய்யாமலிருந்த வேலையில் அதிக மும்முரமாக ஈடுபடுவார்கள், அல்லது ரொம்பத் தணிந்த குரலில் ஆழ்ந்த மனத்தினராய் ஸ்வாரஸ்யமாகப் பேச ஆரம்பிப்பார்கள்.

வந்தவர் எப்படி அவர்கள் கவனத்தைக் கவர்வதென்று தோன்றாமல் கொஞ்சம் தயங்குவார். முதலில் கைக்குட்டையை வெளியே எடுப்பார். பிறகு தலையிலிருந்து தொப்பியைக் கழற்றிக் கையிலேந்துவார்; மறுபடி கைக்குட்டையை ஜேபியில் வைப்பார்; தொப்பியும் தலைக்குத் திரும்பும். கடைசியாய் துணிந்து கனைத்துக் கொண்டு "ஸாஹிப் அகேலா ஹேங்?" என்று கேட்பார். (துரை தனியாக இருக்கிறாரா?)

இதற்காகவே காத்திருந்த இளைய சப்ராஸி மகா சப்ராஸியிடம் "அகேலா ஹேங்?" என்பான்.

மகாசப்ராஸி இளையவனிடம் "அகேலா ஹேங்?" என்று திருப்பிக் கேட்பான். இம்மாதிரி முப்பட்டைச் சந்தேகம் கிளம்பி விட்டால் அதற்கு முடிவேது! எப்படியோ ஒரு தினுசாக சப்ராஸிகளுடன் பேச்சுறவு ஆரம்பமாகி விட்டதல்லவா? அவர் ஜேபியிலிருந்து அறிமுகச் சீட்டையெடுத்து, அதை இருவரில் எவன் வாங்கப் போகிறான் என்பது தெரியாமல் தயக்கத்துடன் நீட்டுவார். அந்தக்கட்சியிலும் அதே மாதிரிக் கொஞ்சம் தயக்கம் காணப்படும். பிறகு இருவரில் ஒருவன் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, மற்றவனிடம் நீட்டுவான். பிறகு இருவரும் அதைப் பார்ப்பார்கள். கடைசியாக ஒருவன் அதையெடுத்துக் கொண்டு எழுந்திருப்பான்.

எழுந்தவன் தன் பகிடியை எடுத்துத் தலையிலணிந்து கொண்டு கோட்டைத் தட்டிவிட்டு நெளிவு சுருக்கங்களைச் சரிப்படுத்திக் கொண்டு செருப்புக்காகக் குனிந்து ஏதாவது ஒரு பெஞ்சியடியில் தேடுவான். முடிவாகத் தன் அலங்கார நிலைதிருப்திகரமாக இருக்கிறதென்று தீர்மான மானவுடன் உள்ளே போவான். அவன் உள்ளே போனது அதே கையோடு திரும்பி வரத்தான் என்பது அடுத்த நிமிஷமே தெரிந்துவிடும். கையில் சீட்டு அப்படியே யிருக்கும். அவசரமாக வெளியே வந்து அடுத்த அறைக்குள் நுழைந்து துரையின் சுருக்கெழுத்து குமாஸ்தாவைக் கூட்டி வருவான்.

அந்த குமாஸ்தா உள்ளே போனால் குறைந்தது அரை மணி நேரமாவது துரையிடம் வேலை யிருக்கும். அதுவரை உங்கள் சீட்டு அந்த மகாசப்ராஸியின் கை விரல்களுக்கிடையே தவம் செய்து கொண்டிருக்கும். விரல்கள் அதைத் தடவிக் கொடுத்து, உடம்பு பிடித்துக் கொஞ்சிக் குலாவும்.

இந்த இடை வேளையில், வந்தவன், செக்ரெட்ரியேட்டின் பிரகாச காரணமான சப்ராஸியின் பிரமையடிக்கும் செல்வாக்கை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறி விடுவான்.

பிரிட்டிஷ் அதிகார வர்க்க ஆட்சி வண்டியின் ஓட்டத்தை அளவுடன் நடத்துகிறவன் சப்ராஸிதான். அதன் சக்கரங்களுக்கு மைபோட்டு, மாதம் ஆறுயிர ரூபாய்த்தாகம் கொண்ட அதன் எஞ்சினுக்கு ஜலம் ஊற்றி, அதைத் துடைத்துத் தட்டிப் பழுது பார்க்கிறவன் அவன்தான். மொத்தத்தில் அவன்தான் அந்த வண்டியின் கடை யாணியாகவும் விளங்குகிறான்.

இவ்வளவு மகத்துவம் பொருந்திய வேலைகளுள்ளவன் சப்ராஸி ஜாதியிலேயே சிறந்து விளங்குவது நியாயமல்லவா? உண்மையில் புது டில்லியில் சப்ராஸிகளின் முக்கியத்துவம் வர்ணனையை மீறி நிற்கிறது.



ஸிம்லாவில் ஒரு கடைத்தெரு. ஐரோப்பியருக்காக; சுத்தமாக இருக்கும். கீழேயுள்ளது மற்றவர்களுக்கு.

புதிதாக சீமையிலிருந்துவந்த ஒரு "பெரிய துரை"யின் மனைவி முதல் முதலாக டில்லிச் சாப்பாடாக ஒரு வேளை சாப்பிட்டவுடன் சொன்னாளாம்: "இந்தியச் சாப்பாடு ரொம்ப நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் இந்த சப்ராஸிதான் வயிற்றில் மதமதவென்று ஊறிக் கனக்கிறது" என்று.

அந்த அம்மாள் சப்பாத்தியைத் தான் சொன்னாள். ஆனாலும் சப்ராஸிகள் டில்லி வாசிகள் மனதில் மதமதவென்று ஊறிக் கனக்கிறார்கள் என்பதும் உண்மைதான்.

சென்னை பேசுகிறது



சமீபத்தில் சென்னையிலிருந்து இந்திய சர்க்கார் ஆதரவில் புதிய ரேடியோ ஸ்டேஷன் ஸ்தாபிக்கப்பட்டு, பெரும்பாலும் தமிழிலும், தெலுங்கிலும் சங்கீதம், பிரசங்கங்கள், நாடகங்கள் முதலியவை ஒலி பரப்பப்படுகின்றன. இதுவரை தமிழ் ஜில்லாக்களில் ரேடியோ ரஸிகர்கள், பம்பாய், டில்லி, கல்கத்தா என்று வடநாட்டு ஸ்டேஷன்களிலிருந்து பரப்பப்பட்ட விஷயங்களைத் தான் ரஸிக்கமுடியும். இந்த சென்னை ஸ்டேஷன் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர், நமது சொந்த பாஷையிலே இவற்றை யெல்லாம் ரஸிக்கமுடிகிறது. அதனால் நமது ஜில்லாக்களில் "கேட்கும்" வழக்கம் அதிகரித்து வளரும் என்பது நிச்சயம்.

ரேடியோவில் ஒலி பரப்புவது எப்படி நடக்கிறது என்பது இயந்திர, விக்ஞான சாஸ்திர நுணுக்கங்கள் நிறைந்த விஷயம். ஆனால் இயந்திரத்தைக் கொண்டு ஒலிபரப்பும் வேலையை யார் எப்படிச் செய்கிறார்கள் என்பது ரொம்ப ரஸமான விஷயம்.

ஒரு ரேடியோ ஸ்தாபனத்தில் பல இலாக்காக்கள் உண்டு. பி. பி. ஸி. (பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்) போன்ற பெரிய ஸ்தாபனங்களில் அரை டஜனுக்கு மேற்பட்ட இலாக்காக்கள் இருக்கின்றன. ஆயினும், நாம், இந்த ஸ்தாபனங்களின் இலாக்காக்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை முறையே (1) நிகழ்ச்சி நிர்ணய இலாக்கா, (2) இஞ்ஜினீயரிங் இலாக்கா, (3) நிர்வாக இலாக்கா என்பவைகளாகும்.

இந்த மூன்று இலாக்காக்களிலும் எது முக்கியமானது என்று வரையறுத்துக் கூற முடியாது. இந்த மூன்று இலாக்காக்களும் ஒன்றோடு ஒன்று ஒத்துழைத்தால்தான் நாம் நல்ல நிகழ்ச்சிகளை நல்ல மாதிரியில் கேட்கலாம்.

முதன் முதலாக நிகழ்ச்சி நிர்ணய இலாக்கா அல்லது புரோகிரும் (திட்டம் போடும்) இலாக்காவின் அலுவல்களைச் சிறிது விஸ்தாரமாக ஆராய்வோம். இந்த இலாக்காவை, ஒரு பத்திரிகாலயத்தில் உள்ள ஆசிரியர் இலாக்காவிற்கு ஒப்பிடலாம். ஏனென்றால், ரேடியோவின் மூலம் வெளியிடப்படும் ஒவ்வொரு செய்தியையும், சங்கீதத்தையும்,—எதையும்—இந்த இலாக்கா சீர்திருத்திய பின்னரே வெளியே அனுப்பலாம். பத்திரிகையின் நோக்கம், கொள்கை, பலபிரச்னைகளில் அது எடுத்துக்கொள்ள வேண்டிய பங்கு இவைகளை நிலைநிறுத்துவது ஆசிரியர் குழாம் தான். அதேபோல ரேடியோவிலும் இந்தஇலாக்காவிற்கு ஸ்தாபனத்தின் கொள்கைக்கு ஏற்றவாறு பிரசங்கங்களைத் திருத்தியமைக்க உரிமையுண்டு.

அந்த இலாக்காவில் உள்ள உத்யோகஸ்தர்களில் முக்கியமானவர் ஸ்டேஷன் டைரக்டர் என்பவர்தான். ஏன், ஒரு ரேடியோ ஸ்தாபனம் முழுவதற்குமே அவர்தான் ராஜா. அதன் புகழுக்கோ, இகழ்ச்சிக்கோ அவரே காரண பூதர். திறமைசாலியான ஒரு டைரக்டர், ரேடியோவை தெய்வலோக வரப்ரசாதமாகச் செய்யலாம்; அதே போல திறமையற்ற ஒரு டைரக்டர் அதை நரக சொரூபமாகவும் செய்யலாம்.

அவருக்கடுத்தாற் போல முக்கியமானவர் ப்ரோட்யூஸர். இந்த ஆங்கில பதத்திற்கு சரியான தமிழ் எனக்குக் கிடைக்கவில்லை. இவருடைய அலுவல் என்னவென்றால், நாடகமோ அல்லது சங்கீதமோ, என்னவாயிருந்தாலும் சரி; அதைச் சரிவர ஒத்திகை பார்த்து மைக்கின்முன் கொண்டு நிறுத்தும்வரை அவர் பொறுப்பாகும். மைக்கின் முன்னும் அவர் மேற்பார்வையிட வேண்டும்.

சங்கீத டைரக்டர் என்று ஒருவர் அலாதியாக உண்டு. அவருக்கு சங்கீதம் சம்பந்தமாக மட்டும் மேற்பார்வையிட உரிமையுண்டு. ஆனால், ப்ரொட்யூஸர் பாட்டு, பேச்சு, நடிப்பு சகலத்தையும் மேற்பார்வையிட வேண்டும்.

மற்றொரு முக்கியமான உத்யோகஸ்தர் கன்டின்யூயிட்டி ரைட்டர் என்பவராகும். தொடர்ச்சிப் பதிவு செய்பவர் என்று தமிழில் சொல்லலாம். ஒலி பரப்பும் கருவியின் முன் பேசப்படும் ஒவ்வொரு சொல்லும் எழுதி வாசிக்கப்படும். அது நாடகமோ அல்லது பிரசங்கமோவாக இருந்தாலும் சரி, இந்த எழுத்துக்கு கன்டின்யூயிட்டி என்று பெயர். இதை சினிமா உலகத்தின் சினேரியோவிற்கு ஒப்பிடலாம்.

வி. அனந்தகிருஷ்ணன், பி. ஏ.

ரேடியோவில் பேசுவதற்கு வேண்டிய கன்டின்யூயிட்டி எழுதுவது ரொம்பக் கடினமான வேலை. சினேரியோவை விடக் கடினம். ஏனென்றால், அவர், காதால் கேட்கச்செய்வதன் மூலமாகமட்டும் ஜனங்களை திருப்திப்படுத்தவேண்டும். ஜனங்களைத் திருப்தி செய்வது எவ்வளவு கடினமான காரியம் என்பதை இங்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. ஆகையால் இந்த எழுத்தில் ஸ்வாரஸ்யமில்லை என்றால், ஜனங்கள் ரேடியோவை மூடிவைத்துவிடுவார்கள். ஆகவே, ஹாஸ்யத்துடன் கலந்த ஸரஸமான பேச்சை அவர் கையாள வேண்டும். கண்ணால் காண வேண்டிய பல விஷயங்களை நீரோட்டமுள்ள சொற்களின் மூலமாக விஸ்தரிக்கவேண்டும். சப்பென்று இருக்கக் கூடாது. ஆகையால், ஜனங்களுக்கு இந்த வார்த்தைகள் செவியில் விழுந்ததும், என்ன விதமான மனோபாவம் ஏற்படும் என்பதை மனக் கண்ணால் பார்க்கும் சக்தியுள்ளவராக இருக்கவேண்டும்.

ஒரு நிகழ்ச்சியை சாரமுள்ளதாகவோ அல்லது குப்பை மண்ணாகவோ செய்வது முக்கியமாக இவரைப் பொருத்திருக்கிறதாதலின், இவர் அபார சாமர்த்தியசாலியாக இருக்க வேண்டும். எழுதும் விஷயங்கள் யதார்த்தமாக இருக்கவேண்டும்; சும்மா கயிறு திரிக்கக் கூடாது. ஒவ்வொரு வார்த்தையும் தாாசில் நிறுத்தது போல் விழவேண்டும். பிறர் குற்றம் சொல்லும் நிலைமையில் வைத்துக்கொள்ளக்கூடாது. முக்கியமாக இவருக்கு, ஒரு நிகழ்ச்சியை ஸ்வாரஸ்யமாக ஆரம்பிக்கத் தெரிய வேண்டும். அதே போல் முடிக்கவும் தெரிய வேண்டும்; மிருதங்கத்தில் 'தீர்மானம்' கொடுப்பது போல. இதற்கு, அடிபட்டுப்போன சொற்களையும், வற்றியுலர்ந்த பதமொழிகளையும் உபயோகிக்காமல் சமயோசிதமான, சாமர்த்தியமான சொற்களை யுபயோகிக்க வேண்டும்.

கன்டின்யூயிட்டி எழுதுவதற்குச் சில தொழில் ரகஸ்யங்கள் உண்டு. அவற்றை எழுத்தில் எழுதுவது அசாத்தியம். ஆகையால் (1) ஏற்கனவேயுள்ள கன்டின்யூயிட்டிகளைப் படித்தோ அல்லது (2) ரேடியோப் பேச்சுக்களை நுணுக்கமாகக் கவனித்தோ அவற்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். அனுபவத்தில், அவை சாதாரணமாக நடைமுறைக்கு வரக்கூடியவை தான். எழுத்து வல்லமையுடைய பலர் இந்தத் துறையில் முன்னுக்கு வர வழியிருக்கிறது.

சங்கீதத் துறையில் சங்கீத டைரக்டர் முக்கியமான பேர் வழி. இவருக்கு, ரேடியோவில் பாடப்படும் சங்கீதத்தை வழிப்படுத்துவது ஒன்று மட்டும் தான் வேலை என்று நினைக்கக்கூடாது. தற்காலத்தில், ரேடியோவில் சங்கீதம்தான் முக்கியமாக ஜனங்களுக்குக் கவர்ச்சியை அளிக்கிறது. இதை உத்தேசிக்கும் பொழுது, எவ்வளவுக் கெவ்வளவு சங்கீத டைரக்டர் முயற்சி எடுத்துக்கொள்கிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு ஜனங்களுக்கு ரேடியோவின்மீது கவர்ச்சி அதிகரிக்கும் என்று ஏற்படுகிறது. நல்ல முதல்தர வித்வான்களை அவர் பிடித்துப் போட வேண்டும். சென்னையில் கார்ப்பரேஷன் ரேடியோ நடந்த காலத்தில், சங்கீதத்திற்கு (முன்பு) ஆலோசனைக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தியிருந்தார்கள். அது நல்ல முறைதான். அதைவிட, ரேடியோவிலேயே 'கேள்வி நேரம்' என்று ஏற்படுத்தி, அந்த நேரத்தில் சில வித்வான்களைக் குறிப்பிட்டு, ஜனங்களின் அபிப்பிராயத்தை அதிகாரிகளுக்கு (தனக்கு)த் தெரிவிக்குமாறு கேட்கலாம். இதுபோல் இந்தியாவில் சில ஸ்டேஷன்களில் செய்துவருகிறார்கள். இன்னும் சங்கீத டைரக்டர்கள், பிரபல வித்வான்களுடன் நெருங்கிப் பழகவேண்டும்; வித்வான்கள் மட்டுமல்ல; அமெச்சூர்களையும் பிடித்துப் போடவேண்டும். அவர்களைத் தமாஷ்படுத்த வேண்டும். நெருங்கிய நட்பின் மூலம் குறைந்த செலவில் முதல்தர சங்கீத விருந்து அளிக்கலாம்

ரேடியோ நாடகங்களின் போது சில விசேஷ சப்தங்கள் ஏற்படுத்த வேண்டிவரும். உதாரணமாக ஒரு ஆகாய விமானம் அல்லது மோட்டார் வந்து நிற்க வேண்டிவரும். இந்தச் சம்பவங்களை சாக்ஷாத்கரிக்க சில தந்திரங்களைக் கையாள வேண்டி

வரும். இந்தத் தந்திரங்களைக் கையாள்வதற்கென்று பெரிய ஸ்டேஷன்களில் ஒரு தனி மனிதரை ஏற்படுத்துவது வழக்கம். அவருக்குஆங்கிலத்தில் (sound effects-man) என்று பெயர். இவர் மிகுந்த சமயோசிதபுத்தியுள்ளவராயும், யூகசாலியாகவும் இருக்கவேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. உதாரணமாக ஒரு ஸ்டூடியோவில் கிருஷ்ண லீலா நாடகத்தை ஒலிபரப்பினர். அந்த நாடகத்தில் தயிர் கடைவது ஒரு கட்டம் அல்லவா? தயிர் கடையும் சப்தத்தை அப்படியே காண்பிக்க வேண்டும். ஒத்திகையின்போது பலர் பல யோசனை சொன்னார்கள். கடைசியில் இந்த வகைக்கென்று ஏற்படுத்தியிருந்த நிபுணர் ஒரு சின்ன வேலை செய்தார். துருப்பிடித்த கப்பி யொன்றை உயரே கட்டி அதில் ஒரு கயிறைவிட்டு அடியில் கல்லைக் கட்டி மற்றொரு கோடியை நிதானமாக இழுக்கச் செய்தார். சப்தம் தத்ரூபமாக இருந்தது! இதேபோல், ஆகாய விமானம் பறக்கும் சப்தத்தை மற்றொரு நண்பர் பிடிலில் பௌவை ஒரு தினுசாகப் போட்டு நிரூபித்தார். இதுபோல் பலவித யுக்திகள் உண்டு. மின் வெட்டுவதுபோல அந்த அவசரத்தில் அதைக் கண்டுபிடித்து உடனுக்குடன் கையாள வேண்டும். ஆகவே, இந்தவகைக்கென்று தனிமனிதர் ஒருவரை அமர்த்துவதுதான் சிறந்தது.

நிகழ்ச்சியிலாக்காவில் மற்றொரு முக்கியமான பேர்வழி இருக்கிறார். அவர்தான் ரேடியோவிற்கு சூத்திரதாரி போன்றவர். "மெட்ராஸ் காலிங்!" என்று அவர்தான் ஒவ்வொரு நாளும் துவக்குவது. ஆங்கிலத்தில் அவரை 'அநௌன்ஸர்' (Announcer) என்பது. தமிழில் 'அறிவிப்பவர்' என்று தாத்காலிகமாகக் கொள்வோம். இந்த மனிதர் அபார சாமர்த்திய சாலியாக இருக்க வேண்டுமென்பதில்லை. இவருக்கு 'ரேடியோத்தொண்டை' இருக்க வேண்டும். 'சினிமா முகவெட்டு' என்று சொல்லுகிறோமல்லவா, அதுபோல. ஆத்திரப்படாமல், நிதானமாக, தெளிவாக, நல்ல உச்சரிப்புடன், மைக்குக்கு ஏற்ற ஸ்தாயியில், சொல்லவேண்டிய விஷயங்களைச் சொல்லவேண்டும். அவருடைய சாரீரத்தில் ஒரு காந்த சக்தி, கவர்ச்சி இருக்க வேண்டும். அவர்தான் ஜனங்களின் கவனத்தை அப்படியே ஈர்க்கவேண்டும். ஆரம்பத்திலேயே கண்ணில் குட்டிக்கொள்வதுபோல, இவர் சரியான மனிதராயில்லாவிடில், ஜனங்கள் மிஷினை மூடிவிட்டுப் படுக்கப் போய் விடுவார்கள். "இவன் யாரடா, 'தொண தொண'வென மழைகாலத்துத் தவளை போல் கத்துகிறான்" என்று எத்தனையோபேர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆகையால் சங்கீதத்திற்கு எப்படி கண்டப் பயிற்சி இருக்கிறதோ, அதேபோல் இவருக்கும் கண்டப் பயிற்சி வேண்டும். ஜலதோஷம் அல்லது இருமல் வந்தால் இவர் உடனே ரஜா வாங்கிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் புரோகிறாம் தொலைந்தது. ஆதலின், இந்தமனிதர் தேக ஆரோக்கியமுள்ளவராயும் கெட்ட பழக்கங்கள் அற்றவராயும் இருக்க வேண்டுமென்பது வெளிப்படை.

இவருடைய உச்சரிப்பு அப்பழுக்கு அற்றதாக இருக்கவேண்டியது மிகமிக அவசியம். ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்புகளுக்கு (1) பி. பி. ஸி. (2) ஆக்ஸ்போர்டு அகராதி, இவ்விரண்டும் தான் பிரமாணம். அந்த மாதிரி ஒரு நிலைமையை நாம் இந்தியாவிலும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

கடைசியாக கவனிக்க வேண்டிய இனம் ஒன்று இருக்கிறது. பெரிய ஸ்டேஷன்களில் அதற்கென்று பிரத்யேக இலாக்கா ஒன்றை ஸ்ருஷ்டித்திருக்கின்றனர். விசேஷ சம்பவங்கள் அடிக்கடி ஏற்படும். உதாரணமாக, பிரபல கிரிக்கட் பந்தயம், மகாநாடுகள் முதலியன. இந்த நிகழ்ச்சிகளை தேசத்திற்கு ஒலி பரப்புக்கருவியின்மூலம் அறிவிப்பது சகஜம்; அவசியம். இந்த வகைக்குச் சாதாரணமான ஸ்டூடியோ அநௌன்ஸர் போதாது. இதற்கு நிபுணர்களின் உதவி வேண்டும். ஆகையினால் இவை போன்ற விசேஷ சம்பவங்களை ஒலிபரப்புவதற்கு, முதன் முதலாக மகாநாடு அல்லது பந்தய அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும். பிறகு அந்த சம்பவங்களை ஒட்ட நடையில் ஒலி பரப்பும் வழியறிந்த நிபுணர் ஒருவரை அமர்த்த வேண்டும். பிறகு வழக்கம் போல் ஒலி பரப்பவேண்டும்.

இவைதான் ஜனங்கள் நிகழ்ச்சியிலாக்காவைப் பற்றி மேலெழுந்த வாரியாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள்.



1938-ம் வருஷத்திய புதிய

பில்கோவின்



மூலம் சிறந்த நாதத்துடன் கூடிய உயர்ந்த ரேடியோ, இப்போழுது யாவருக்கும் எளிதில் கிடைக்கிறது.

இவ்வளவு உயர்ந்த ரேடியோ இவ்வளவு குறைந்த விலைக்கு இதுவரை கிடைத்ததில்லை.

மாடல் 38-620 T. AC-க்கு 110 அல்லது 220 வோல்ட்ஸ் ரூ. 375.
D. C. ஆபரேஷனுக்கு E. D. C. C. கன்வர்ட்டருடன் ரூ. 525.

எங்கள் கேட்லாக்கைக் கேட்டு வாங்குங்கள் அல்லது எங்கள் ஷோ ரூமில் இந்த மாடல்களையும் நேரில் பாருங்கள்

சென்னை மாகாணம் சமஸ்தானங்களுக்கும் ஸோல் டிஸ்டிரிபியூடர்கள்:

மகமத் இப்ராகிம் & கோ.,

(மே. த. கவர்னரின் நியமனம் பெற்றவர்கள்)

26-27, ரட்டான் பஜார் : : மதராஸ்

மிகக் குறைந்த சார்ஜில்

★

காலேஜ், ஆபீஸ் க்ரூப் போட்டோக்கள், என்லார்ஜ்மெண்டுகள், சினிமா சிலைடுகள்,

தயாரிப்பதற்கும்

உயர்தரப் போட்டோ படங்கள் எடுப்பதற்கும்

திருச்சி

ராஜா போட்டோ ஸ்டூடியோ

★

Prop. K.P.: கோபால்ராஜு,

எலக்டிரிக் போட்டோகிராபர்,

கொத்தவால்சாவடி, திருச்சினப்பள்ளி

ஸினிமாவும் கோவிலும்

ஸினிமா ஒரு கலை என்கிறார்கள். இல்லை; அது ஒரு தொழில் என்று சிலர் எதிர்வாதம் செய்கிறார்கள். என் அபிப்பிராயத்தில் ஸினிமா ஒரு கோயில். அதிலும் நமது தென்னிந்தியக் கோயில்.

விஞ்ஞான சாஸ்திரத்தின் நேரடியான செல்வாக்கு, ஆளேவளைக்கும் சக்தி நிறைந்த ஸினிமாத் தொழில், எனக்கு மேல் நாட்டு நாகரிகத்தின் பல அம்சங்களையும் அடிக்கடி கண்டு கேட்டு அனுபவிக்கும் சம்பவங்கள் நிறைந்த ஜீவனம். இவ்வளவின் மத்தியிலிருந்தாலும், என் சிறு வயதில், என் மனதிலே பதிந்த தெய்வ பக்தியும் மத உணர்ச்சியும் இன்னும் கொஞ்சம் கூட ஆடவில்லை.

அதனால் தான் போலும் எனக்கு அடிக்கடி, கோயிலின் ஞாபகம் வருகிறது. ஸினிமா என்று நினைத்தாலே எனக்கு நம் நாட்டுக் கோயில்களின் நினைவு தான் கூட எழுகிறது. இந்த எண்ணச் சூசனையில் ஒரு உண்மையுமிருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

கோயில்களின் ஆரம்பம்

கோயில்கள் முதல் முதலாக எப்படி ஏற்பட்டதென்பது எனக்குத் தெரியாது. ஆனால் உத்தேசமாகச் சொல்ல முடியும். பிறப்பு இறப்பு என்ற மகா ரகசியங்களின் உண்மையை அறிய தாகம் கொண்ட மனித சிந்தனையின் பலன்தான் தேய்வம் என்ற கருத்து. அந்தக் கருத்தின் கண் காணும் வடிவம் கோயில்கள்.

எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும், கோயிலில் போய்த் தான் அந்த மகா சக்தியைத் தொழுகின்றனர். சாதாரணமாக வீட்டிலே செய்யும் பிரார்த்தனையிலும், பூஜைகளிலும் புனிதக் குறைவு இருக்கிறதென்று அர்த்தமில்லை. மற்ற இடங்களை விட, பிரார்த்தனைக்கென்றே ஜனங்கள் கூட்டமாகக் கூடும் ஆலயத்தில், அந்த உணர்ச்சி அலை ரொம்ப வேகமாக, கனத்து, தனி மனிதனைத் தன்னுள் விழுங்கிக்கொள்ளும் அளவுடன் அடித்துப் பரவுகிறது. அங்கு வந்து கூடுவோர் அவ்வளவு பேர்களினுடைய—பிரார்த்தனை என்ற—ஒரே விஷயத்தைப் பற்றிய சிந்தனை அலைகளின் வெள்ளம் ஒவ்வொரு தனி ஜீவனையும் தன்னுள் கலக்கச் செய்து விடுகிறது.

இலக்கியம்

இந்தப் பெரும் பயன் காரணமாகத் தான் மனித சமூகத்தில் ஆலயங்கள் பிராபல்யமும் முக்கியத்துவமு மடைந்தன. முதல் முதல் கோயில்களிலே ஜனங்கள் கூடினார்கள். அங்கு, தெய்வத்தைப்பற்றிச் சிந்தித்த மகா புருஷர்கள், அந்த மகா சக்தியைப் புகழ்ந்து பாடிய கவிதைகளைப் படித்தார்கள். படிக்கக் கேட்டார்கள். தெய்வப் பிரார்த்தனையாகத் தான் முதல் முதலில் இலக்கியமே—கவிதையே—ஆரம்பமாகியிருக்குமென்று நான் எண்ணுகிறேன். பிரார்த்தனை யிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரிந்து, சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் என்ற மூவகைத் தொழில்களைப் பற்றிய கவிதைகள் பிறந்தன. இவை தான் வேதங்கள், உபநிஷத்துகள் முதலியவை.



இந்தக் கவிதைகளை—இலக்கியங்களை—ஆசிரமங்களிலே குருவிடமிருந்து பாடங்கேட்ட சிஷ்யர்கள், கோயில்களிலே கூடிப் பாடினார்கள். ஜனங்கள் அவர்கள் பாடுவதைக் கேட்டு ஆனந்தித்தார்கள். அகிலத்தைப் பற்றிய, சிந்தனையின் சிகர நிலையிலிருந்து வெளியிட்ட கருத்துகள், கவிதைகள் இவை.

அதன் பின்னர் தான் மனித சமூக வாழ்க்கையைப் பற்றிய சட்டங்கள், நியதிகள், விதிகள் இவற்றை விளக்கும் இலக்கியங்கள் பிறந்தன.

சிற்பக்கலை

அடுத்தபடியாக, கோயில்களிலே, எந்த மகாசக்தியைப்பிரார்த்திக்கிறோமோ, அதை மூர்த்திகரிக்கச் செய்து, சாதாரண கல்பனையற்ற பாமர மக்களும் சிந்தனையை ஒருமைப்படுத்த உதவும் நோக்கத்துடன் தான் விக்ரக ஸ்தாபனம் ஏற்பட்டது. மனிதன் கற்பனையில் கண்ட வடிவத்தில் அந்த ஆதிசக்தியை ஆவாஹனம் செய்து, அதன் உதவியால், அந்த உருவக் கல்பனையின் உதவியால் மக்கள் தங்கள் மனதை யடக்கிப் பிரார்த்திக்க வழி செய்யப்பட்டது.

பின்னால் இவ்வாறு கற்பிக்கப் பட்ட மூர்த்திகளில் மனிதனின் அழகுணர்ச்சியை வெளியிட ஆரம்பித்தார்கள். கண்ணால் பார்க்கும் வடிவங்களில், ஒரே பார்வையில் நெஞ்சைக் கவர்ந்து, அளவை மீறிய பிரமை தருவது போன்ற உற்சாக மளிக்கும் அழகுடன் ஒளிரும் உருவங்களைக் கண்ட சிற்பிகள், அத்தகைய அழகை கோயில்களிலே ஸ்தாபிக்கும் மூர்த்திகளிலே வெளியிட ஆரம்பித்தார்கள்.

இந்த அழகு விகாசத்தின் உச்ச நிலைதான் நம்முடைய நடராஜா. சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளின் எவரெஸ்டு சிகரம் நடராஜ விக்ரகம். மனிதக் கல்பனையால் காணக்கூடிய அழகின் எல்லை. அந்த எல்லையை மீறி இது வரை யாரும் கற்பனை செய்யவில்லை; அல்லது செய்திருந்தாலும் சித்திரமாகவோ, அல்லது சிற்பமாகவோ வெளியிடவே யில்லை.

சங்கீதம் நடனம்

சித்திர சிற்பக்கலைகளைப் போலவே கோயில்கள், சங்கீதக் கலையையும் ஆகர்ஷித்து வளர்த்தது. திருஷ்டி மூலமாய் மக்களின் அழகுணர்ச்சியைத் தூண்டிவிட்டு, களி மயக்கம் கொள்ளச் செய்யும் இந்த மூர்த்திகள் அவன் குரலையும் தூண்டிப் பாடச் செய்தன. கோயிலில் சங்கீதம் வளர்ந்தது.

அதனுடன் நாட்டியக் கலையும் அங்கு இடம் பெற்றது. கண்களும் செவியும் அடைந்த அழகனுபவ இன்பம் நடனமாகப் பரிணமித்தது.

இவ்வாறு கோயில் மனித ஜாதியின் ஐந்து பெரும் நுண்கலைகளின் ஆரம்பமும், தொட்டிலும் இல்லமுமாக விளங்கின ஆரம்பத்தில்.

ஆனால்! பின்னால் இந்தக் கோயில்கள் அடைந்த நிலையென்ன? இன்று அவற்றின் நிலையென்ன?

இதை யோசிக்கும்போது தலை சுழலுகிறது.

வேதம், உபநிஷத் என்ற மகா காவியங்கள் கோஷித்த கோயில்களில் இன்று காதிலே விழும் சப்தம் நெஞ்சைக் கலக்குகிறது. உடல் குன்றச் செய்கிறது.

இருள் சூழ்கிறது

நடராஜ மூர்த்தியைக் கற்பித்த மகா சிற்பி அதிலே வெளியிட்ட அழகுணர்ச்சி, இன்று ஜனங்கள் கண்ணில் படுவதில்லை. இன்று நடராஜ மூர்த்தி, வருந்திக் கேட்பவருக்கு வரம் (பிள்ளைப்பேறும், பணப் புதையலும்,) கொடுக்கும் "சாமி"யாக ஆகிவிட்டார். தெய்வத்தைச் சூழ்ந்து நின்ற அழகே தெய்வமாகி, காலாகாலத்தில் பயனற்று, சக்தியற்றுப் போய் விட்டது!

அதே போலத்தான் சங்கீதமும் பரத நாட்டியமும். இன்று சங்கீதம் கோயில்களில் இல்லை. பரத நாட்டியம் கோயில்களில் இல்லை என்பது மாத்திரமன்றி, விபசாரம் என்ற தோழன் கையைப்பற்றிக் கொண்டு வெளியேறி எங்கோ அஜகஜ பாதாளத்தில் வாசம் செய்து கொண்டிருக்கிறது.

இவ்வளவு விவரமான வர்ணனைக்குப் பிறகு தான் ஸினிமாவின் நினைவு என் மனசில் ஏன் கோயிலைச் சூசிப்பிக்கிறது என்பதை விளக்க முடியும்.

ஸினிமாவில் கலைகள்

ஸினிமாப் படத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும் கோயிலின் சரித்திரத்தை எந்த விதத்திலும் ஒத்திருக்க வில்லை யென்பது வாஸ்தவம். ஆனால், ஸினிமாத் தொழிலில் மனிதனின் ஐந்து பெரிய நுண் கலைகளும் அடங்கி யிருக்கின்றன. இந்தக் கலைகளின் கூட்டந்தானே ஸினிமா?

மானுஷ்யத்துவ உணர்ச்சிகளை வெளியிடும் நாடக இலக்கியம், பாவங்களை வெளியிடும் சங்கீதம், அந்தந்த பாவ உணர்ச்சியை வளர்க்கும் சித்திரக் காட்சியமைப்புகள், அந்த உணர்ச்சிகளை நடித்துக் காட்டும் நடனம் ஆகிய கலைகள், விக்ஞான அறிவின் பயனாகப் பிறந்த இயந்திரங்களால் ஒருசரட்டில் சேர்க்கப்பட்டிருப்பது தான் சலனப் படம். எனவே கலைகளை வளர்ப்பதற்கு ஸினிமா ஒரு மகத்தான சாதனம்.

நடிப்பு நடனமாகுமா என்பவர்களுக்கு என் பதில் இது தான். நடனம் நடிப்பின் கவிதாரூபம்; நடிப்பு நடனத்தின் வசன ரூபம் என்பது என் அபிப்பிராயம். இதை அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன்.

இன்று ஸினிமாவில் என்ன நடக்கிறது? ஸினிமாவில் கலைகள் வளர்கின்றனவா?

இந்தக் கேள்விகளுக்கு ஸினிமாப் பார்க்கும் ஒவ்வொருவரும் சட்டென்று "இல்லவே யில்லை" என்று பதில் சொல்லி விடுவார்கள். அதுவும் ஸினிமாத்தொழிலுக்கு வெகு தூரத்திலிருந்தும் கூட.

தற்கால நிலை

நான் தொழிலின் நடுச்சுழலிலிருந்து கொண்டே அந்தப் பதிலையே தான் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். தற்கால நிலைமையில் கலைகள் வளரவில்லை. அதற்குப் பதிலாக, உலகில் கொஞ்ச நஞ்சம் மிஞ்சியிருக்கும் மனிதத் தன்மையையும் கீழ் நோக்கி இழுத்துக் கொண்டு எங்கோ போய்க் கொண்டிருக்கிறது.

அதை மேல் நோக்கித் திருப்புவது சாத்தியமா? அதுதான் என்போன்ற ஸினிமா தாஸர்களின் ஆசையும் முயற்சியும். ஆயினும் நாங்கள், இந்தமாதிரி ஆசை கொண்ட நாங்கள், எவ்வளவு பெரிய சக்திகளை எதிர்த்து நிற்கிறோமென்பது வெளியிலிருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்?

தற்சமயம் நமது கோயில்கள், சுயநலமிகளும், தந்திரசாலிகளுமான சிலர் கொள்ளையடித்துக் கொழுக்க உதவும் சாதனங்களாக ஆகிவிட்டன. சில்லரைப் பூசல்கள் மலிந்து, இகத்தில் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியாதபடி மக்கள் மன நிலை நொண்டியும்முடமுமாக ஆக வழி காட்டும் இடங்களாகி விட்டன.

அதுபோலவே தற்கால ஸினிமா உலகமும் ஒரு சிலர் கொள்ளை யடிக்க முயலும் தொழிலாகத்தானிருக்கிறது. ஆபாசமான மனப்பான்மை தான் அதில் மலிந்திருக்கிறது.

உணவின் சிறப்பிற்கும் மணத்திற்கும் ஆதாரம் உள்ளது!!!

"ஜெ" மார்க்

பெருங்காயம்

எங்கும் கிடைக்கும்.

கோபால்ஜி & கம்பெனி,
பம்பாய், மதராஸ், கும்பகோணம், மதுரை.

ரங்கூன் வைரங்கள் நகைகள்

சவரன் பொன்னிற்கு

உத்தரவாதம்

கேட்லாக் இனும்

பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்,

பறங்கிமலை P. O. (சென்னை).

பிராஞ்சு:—

234, கோவிந்தப்ப நாயக்கன் தெருவு, சென்னை.

நம்பிக்கைக்குப் பாத்திரமானது

H. M. V. ரெப்ரிஜிரேடரே.

உங்கள் தேக நலத்தைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. அது நல்ல தல்ல. கீழ் நாட்டில் தேகநலத்தைப் பாதுகாக்க முதன்முதலாகச் செய்ய வேண்டிய கடமை ரெப்ரிஜிரேடரை உபயோகிப்பதே. மட்டமான ரெப்ரிஜிரேடரை வாங்குவதை விடசும்மா இருப்பது மேல். ஆனால் **H.M.V.** ரெப்ரிஜிரேடர் விசேஷமான பாதுகாப்பு அளிக்கவல்லது; நம்பிக்கையானது.



இந்த ரெப்ரிஜிரேடர்கள் தங்கள் வேலையைச் சிறப்பாய்ச் செய்கின்றன. இந்த ரெப்ரிஜிரேடரில் வைத்திருந்தால் பானங்கள் குளிர்ச்சியாக இருக்கும்; ஸலாடுகள், பழங்கள் கெடாமல் இருக்கும்; உணவு சுத்தமாயிருக்கும்.

டிஸ்டிரிபியூடர்கள்:

மகமத் இப்ராகிம் & கம்பெனி,

(மே. த. கவர்னர் நியமனம் பெற்றவர்)

26-27, ரட்டான் பஜார் :: மதராஸ்

H.M.V. REFRIGERATORS

நிம்மதியான ஓய்வு

★

55 வயதில்

(1) பென்ஷன். ஆயுள் முழுதும் மாதம் ஒன்றுக்கு ரூ. **100-** வீதம் பெறலாம்.

தவிர

(2) ரொக்கம். ரூ. **12,000** நீங்கள் இறந்த பிறகு உங்கள் மனைவியும், குழந்தைகளும் பெறுகின்றனர்.

உங்கள் மனைவி மக்களுக்குக் கிடைப்பது

ஒருவேளை அகால மரணத்தினல் ரிடையர் ஆகுமுன்பே இறந்து, அதனல் பென்ஷன் வாங்கத் தவறினல்

(1) பென்ஷன். ஒரு குறிப்பிட்டகாலத்திற்குக் கொடுக்கப்படும்

அத்துடன்

(2) ரொக்கம். ரூ. **12,000**-மும் கொடுக்கப்படும்

★

விவரங்களுக்கு: **டி. அனந்தாச்சாரி,** மானேஜர்,

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷூரன்ஸ் ஸொஸைட்டி லிமிடெட்.

"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"

107, அரமனைக்காரத்தெரு :: மதராஸ்.

இறந்த பிறகோ மற்றும் பாலிஸி முடிந்த பிறகோ விநியோகிக்கப்பட்ட தொகை

ரூ. **1,40,00,000**-க்கு மேல்

கலங்காப் புலி

★

எஸ். எம். எஸ்.

எழுதியது

★

இருபது வருஷங்களுக்கு முன்பு அந்த வடக்குப் பார்த்த வீட்டுத் திண்ணையில் மணலைப் பரப்பி, பிள்ளைகள் அ, ஆ, எழுதிக்கொண்டிருப்பார்கள்.

இப்பொழுது நெல்லுப்பட்டரை போட்டிருக்குமிடத்தில், முந்திரி லெக்கம் முறை வைப்பதில் தவறிய பையன்கள் வெய்யிலில் நின்று தண்டனை யனுபவிப்பார்கள்.

ஒடிந்த மூக்குக் கண்ணாடி, பட்டைஉரிந்த பூவரசங்குச்சி, பத்து ஏடு, ஒரு குண்டு எழுத்தாணி சமேதராக ஆறுமுகமய்யர் குரு ஸ்தானத்தில் வீற்றிருப்பார்.

அந்த சமயம் அவர் இந்த ஊருக்கு வந்த புதுசு.

பஞ்சனத அய்யரின் தமக்கை புருஷன் ஆறுமுகமய்யர். அவருக்குக் கல்யாணமான போது கொடுத்த மஞ்சக்காணி மாவடிச் செய் நிலத்தை விவசாயம் செய்து, அந்த வரும்படியுடன் பள்ளிக்கூடமும் வைத்து, காலக்ஷேபம் செய்து வந்தார்.

பட்டா மாறுதல், மனு, பிராது, ஒத்தி, அடமானமுறி எல்லாம் எழுதுவார். அவருக்குக் கொஞ்சம் இங்கிலீஷும் தெரியும். தந்தி எழுதுவார், தந்தி படிப்பார், தந்திக்கு ஓரணக் கூலி என்று திட்டம் போட்டு வாங்கமாட்டார். உபாயமாக முக்குறுணி நெல் பெற்றுக்கொள்வார்.

அவர் தந்தி எழுதுகிற தோரணையே அலாதி. அவருக்கு அவ்வளவுதான் தெரியும். முத்துராக்கனை உடனே அனுப்பவும் என்பது தந்தி விஷயமானால், உடனே அனுப்பவும் என்பதற்குச் சரியான இங்கிலீஷ் பதங்களை எழுதவேண்டுமே என்று பிரமிக்க மாட்டார். "முத்துராக்கனை உடனே அனுப்பு" என்பதை அப்படியே இங்கிலீஷ் அட்சரங்களில் எழுதிவிடுவார்.

எப்படியோ, பணம் சேர்ந்துவிட்டது. இப்பொழுது மிராசுதார்.

பஞ்சனதய்யர் தந்த மஞ்சள்க் காணி வயலும் சேர்ந்து நஞ்சை, புஞ்சை எல்லாம் மூணுவேலிக்கு மேலிருக்கிறது. முன்னூறு வேலிக்குள்ள அகம்பாவமிருக்கிறது; மூவாயிர வேலியாக்கிவிட வேண்டுமென்ற ஆசையுமிருக்கிறது.

"இந்த ஒரு பொண்ணுக்கே ஊர் முதலெல்லாம் கொள்ளையடிக்கிறான். ஒரு புள்ளையிருந்துதன்னா ஊரையே அழிச்சுப்பிடுவான்" என்று குளத்தங்கரை மகா நாடுகளில் அவரைப்பற்றி பிரஸ்தாபம் நடக்கும்.

அவருடைய பெண்ணுக்கு வயது பத்து. பெயர் மங்களம்.

பஞ்சனதய்யர் புதல்வன் தஞ்சாவூரில் படிக்கிறான். மங்களத்தின் தாயாருக்கு, மருமகனை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள வேண்டுமென்ற யோஜனை.

கல்யாண விஷயத்தைப்பற்றி ஆறுமுகமய்யர் யோசிக்கவே யில்லை. எப்படி யோசிப்பது? விவசாயத்தைக் கவனிக்கவேண்டும். அவருடைய அதிருஷ்டம் பண்ணைக்காரன் நிலைப்பதில்லை. வேலையைப் பார்த்துவிட்டு ஐயர் தயவிருந்தால் போதுமென்று அவர்கள் போவதில்லை. பணம் பணம் என்று கேட்கிறார்கள். ஆறுமுகமய்யருக்கு அது பிடிக்காது. இந்த வேலையைப் பார்க்காவிட்டால் சும்மா கிடக்கவேண்டியவர்கள் தானே.

"கம்பெனி வேலையா பாழைபோறது. பண்ணைக்கார வேலைக்கு கணக்குப் பார்த்துக் கொடுத்துக்கட்டுமோ?" என்பார் ஆறுமுகமய்யர்.

அதோடுமாத்திரமா? "இந்தப் 'புடிக்கிப் புடி நமசிவாயம்' என்ற எண்ணம் இருக்கிற வரையிலே இந்தவூர்க் குடியானவன் உருப்படாது மண்ணுதான். இதை வேணு எழுதி வச்சுக்குங்கோ" என்று தீர்க்க தெரிசனமும் சொல்லுவார். இது ஒவ்வொரு வருஷ விவசாயமும் முடிந்தவுடன் சகஜமாகக் கேட்கும் குரல்.

இதற்கு நேர் எதிரிடை பஞ்சனதய்யர். கலங்காப்புலி அவருடைய பண்ணையாள். ரொம்ப விசுவாச முள்ளவன். அதைச் சொன்னால் போதுமா; பஞ்சனதய்யரும் அப்படி நடத்தினார்.

அவனும், சாகுபடியைப் பற்றிய கவலை கொஞ்சங் கூடப் பஞ்சனதய்யருக்கு ஏற்படாத வண்ணம் உழைத்து வந்தான்.

கிழமேல் வண்டிப்பாதை; பாதைக்கு வடக்கே வாய்க்கால். வாய்க்காலுக்கு அடுத்தது மாவடிச்செய்.

ஒரே வயல்; அஞ்சுமா நிலத்தில் நடுவில் வரப்புப் போட்டு, மஞ்சக்காணி நிலம் பிரித்துக் கொடுத்திருந்தார்கள்.

பஞ்சனதய்யர் பாதிக்கு தெற்கு மாவடிச் செய் என்றும், ஆறுமுகமய்யர் பாதிக்கு வடக்கு மாவடிச் செய் என்றும் பெயர்.

* * *

பஞ்சனதய்யர் உஷத்கால தாம்பூலந் தரித்துக் கொண்டிருந்தார். கலங்காப் புலி கையைக் கட்டிக் கொண்டு எதிரில் நின்றான்.

"வருஷந் தவரிச்சின்னாலும் வம்பு தவரதில்லே. நெதம் இதுவே வளமையாப் போச்சு," என்றான் கலங்காப் புலி.

அன்று காலையில் அவன் வழக்கம் போல் வயலுக்குப் போனான். நடுவரப்பு உள்வாயிலிருந்த அவரிச் செடிகளையும், நீர் முள்ளிப் புதர்களையும் காணவில்லை. உதியம் போத்துக் கீழே விழுந்து கிடந்தது. அவனுக்குப் பதை பதைத்தது. கவனித்தான். செடிகளுக்கு மேல் புது மண் விழுந்து அமுக்கிக் கொண்டிருப்பதையும், தலைக் கொண்ட சம்பா நாத்தில் வெட்டு மண் கிடந்து அமுக்கி இருப்பதையுங் கண்டான்.

வரப்பு வெளிவாயில் மண் வெட்டப் பட்டிருந்தது அப்பொழுது தான். இதுவும், ஆறுமுகமய்யரின் வேலைதானென்றும், மேல வீட்டு அய்யர் வரப்பை வெட்டி வயலைச் சேர்த்திருக்கிறார் என்பதையும் தெரிந்து கொண்டான்.

ஆத்திரத்துடன் எஜமானனிடம் வந்து அவரை யெழுப்பி, இந்த சங்கதியைச் சொன்னான்.

வருஷா வருஷம் அந்த வயல் விஷயத்தில் சச்சரவுகள் நடப்பதில் குறைவில்லை. பஞ்சனதய்யர் யோசித்தார்.

"அது தான் தெரிஞ்சிருக்கே....என்ன செய்யலாங்கறே," என்றார்.

"வேறெ யாராவாச்சுமிருந்தா, எனக்காச்சு, அவனுக்காச்சுன்னு பார்த்திருப்பேன். எசமானுக்கு, சொந்தங்கிறதை நெனைக்கரப்போ...."

"சொந்தமா? எதுலெ சொந்தம்?" என்று இடைமறித்தார் அய்யர்.

"இனிமேத்தெரியும். ஒம்பாடு பதினையிரமுடா பார்த்துக்கடா பயலேன்னு சொல்லிருங்க. அந்த மம்புட்டி புடிச்ச கை மணிக்கட்டையைப் பேத்துப்புடரேன்" என்றான் கலங்காப்புலி.

"ஏண்டா, திருடனை ஓட விட்டுவிட்டு தடம் பார்க்கிறே? இதைச் செய்துப்பிட்டு வந்துன்னுடா எங்கிட்டேச் சொல்லணும் நீ? போக விட்டுட்டு வீராப்புப் பேசறான்! இளிச்சவாப் பயல்!" என்று கோபித்தார் அய்யர்.

... எம் பண்ணைக்காரனை யிருந்தா வாலே ஒட்ட...

கலங்காப்புலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எஜமான் இந்த மாதிரி சொல்வாரென்று கனவிலும் அவன் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய வேலையில் குற்றங்கண்டு பிடிப்பதென்பது அவனுக்குப் பொறுக்காது. தான் செய்தது பிசகென்றெண்ணினான். அவனும் பதிலுக்குப் பதில் செய்திருப்பான். எஜமானனுடைய கோபம் வந்துவிடுமோ வென்று பயந்தான்.

"ஏண்டா பயலே, ஒரு வார்த்தை சொல்லப்படாதான்னு கேப்பியன்னு பாத்தேன். அல்லாமே ஆளும் கையிலே சிக்கல்லே. சாயங்காலம் பாருங்க, இந்தக் கலங்காப் புலிப்பய கைவரிசையெ" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

அன்று பகல் கஞ்சி குடிக்க அவன் வீட்டுக்குப் போகவில்லை. நேரே வயலுக்குப் போனான். அரைக்கால் முழம் வரப்பை வைத்துக் கொண்டு, மீதம் எல்லாவற்றையும் உள் (வரப்பில்) இருந்து வெட்டி வெட்டி வடக்கு மாவடிச் செய்யில் போட்டான். இப்போது பஞ்சனதய்யர் நிலம் கீழ் மேலாய் முக்காலடி விரிந்து காட்டியது.

* * *

அக்கிரஹாரப் பஞ்சாயத்து முன்னிலையில் ஆறுமுகமய்யர் வகுத்த பாதையில் தான் கலங்காப்புலி சென்றானென்றும், அவனைக் கண்டிக்க முடியாதென்றும் பஞ்சனதய்யர் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார்.

கலங்காப் புலியோ, "செஞ்சவனுக்குச் செய்யறது செத்தபெறகா? எனக்குத்

தோணிச்சு. செஞ்சுட்டேன். இதுலெ புத்தி வந்தாச் சரி.....இல்லே.....ஓங்கர கைமேலே நிக்குது; பாத்துக்குவம்" என்று சொல்லி விட்டான்.

அத்துடன், தன்னைக் கூப்பிட்டு விஜாரித்ததே நியாயமில்லை யென்றும், "எங்கய்யரு முகத் தாச்சணியத்துக்காக வந்தே"னென்றும் சொல்லிவிட்டுச் சென்றான்.

கலங்காப்புலி நியாயம் பேசியது பஞ்சாயத்தார்களுக்குப் பிடிக்கவில்லை.

"ஊரிலே பணக்காரப் பெரிய மனிதர்களிருக்க, எத்தனையோ லா ஏஜண்டுகளிருக்க, ஒரு குடியானவன் ஞாயத்தைப் பற்றிச் சொல்லுவதா? தற்குறிப்பய! மழைக்கி ஒதுங்க ஒரு குச்சுக் கிடையாது. அந்தப் பயல் ஞாயத்தைப் பத்திச் சொல்றான். நீங்கள்ளாங் கேட்டுக்கிண்டு இடிச்ச புளி மாதிரி இருக்கியள்" என்று ஆறுமுகமய்யர் பஞ்சாயத்தை இளக்காரம் செய்துவிட்டு வீட்டுக்குச் சென்றார்.

கலங்காப் புலிக்கு, தான் ஏழை என்றும், தான் பிறக்கும் பொழுதே அடிமையென்றும், தன் தோளில் வெள்ளை வேஷ்டியேறக்கூடாதென்றும், தன்னிடம் சிந்தனை என்ற மனித அம்சம் ஒரு குறையாகவே கருதப்படுமென்றும், நடுக்கடலில் அலைபடும் கட்டுமரம்போல் காற்றடிக்கிற பக்கமெல்லாம் சஞ்சாரம் செய்து நாலு பேருக்கு நல்லவனாக நடக்கவேணு மென்றும், இது போன்ற இதர முக்கியமான விஷயங்களும் கொஞ்சங் கூடத் தெரியாது.

இவன் வரப்பை வெட்டும்போது "முண்டனுக்கு ரெண்டாள்" என்றபடி ஆறுமுகமய்யர் நான்கு ஆட்களுடன் வந்து ஏதேனும் விபரீதங்கள் நடத்தியிருந்தால் என்னவாகியிருக்கும்!

இதெல்லாம் கலங்காப்புலிக்குத் தெரியாமலில்லை. தெரிந்தே தான் வரப்பை வெட்டி அவர் வயலிலே போட்டான்.

கல நெல்லும் ஒரு ரூபாயும் மாசச் சம்பளமுள்ள அவனுக்கு எங்கிருந்து இவ்வளவு துணிச்சல்! சொத்து அவனுடையதல்ல; உத்யோகமோ நின்றவரையில் நெடுஞ்சுவர்; வேண்டாத பெண்டாட்டி வாழ்க்கை அவனது. கைப்பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம். சூலத்திலே வடக்கே பார்க்க ஏர் பிடித்தான், மரண யோகத்திலே தண்ணீரைத் திறந்து விட்டான், என்று ஏதாவதொரு காரணத்தைச் சொல்லி பஞ்சனதய்யர் எந்த நேரத்திலும் அவனை விலக்கிவிட முடியும். அதோடு எதிரியோ பிரபல மிராசுதார். அய்யரின் தமக்கை புருஷன்; மாப்பிள்ளை. அவனுக்கு அந்தக் கவலைகளெல்லாமில்லை.

கலங்காப்புலியிடம் ஒப்புவித்துக் காப்பாற்றும்படி பஞ்சனதய்யர் கட்டளையிட்ட குழந்தை மாவடிச் செய்.

அதில் நாத்து முளைப்பதைக் கண்டு மகிழ்வான். பொதிகட்டுவதைக் கண்டு களிப்பான். தலைதூக்கி நிற்கும் பயிரில் விழுந்து வரும் காற்றின் மழலை மொழி கேட்டு ஆனந்திப்பான். மணிமுடி தாங்கிய பயிர் வா, வா வென்று தலையசைத்துக் கூப்பிடுவதைக் கண்டு குதூகலம் கொள்வான். அவனுடைய உலகம் மிகச் சிறியது. சத்திய மென்னும் மணம் பொருந்திய புஷ்ப மரங்களைக் கொண்ட ஒரு வேலி யினிடையே, நன்றி மறவாமை யென்னும் குடிசையில், உழைப் பென்னும் மைதானத்துடன், வீர சரீரமாகிய அவன் வசிக்கிறான். அதற்கு மேல் அவன் வாழ்க்கை விரியப் போவதில்லை. விரிய வேண்டு மென்று அவன் விரும்பவுமில்லை.

பஞ்சனதய்யர் காலில் முள் குத்தினால், தன் கண்ணில் ஆணி யடிக்கப்பட்டதைப் போலெண்ணுவான். பஞ்சனதய்யர் வெற்றிலை போட்டுக் கொண்டால், கலங்காப்புலி பசி தீர்ந்து ஏப்பம் விடுவான். விசுவாசத்தில் அவன் ஒரு நாய். எஜமானன் ஏவுதலை எதிர்பார்த்துக் கொண்டே யிருப்பான்.

அதிலும் நியாய முண்டு. சாதாரண நாயை யார் பேரில் வேண்டுமானாலும் ஏவலாம். இவனையோ, திருடன் பேரில் மாத்திரந்தான் ஏவ முடியும்.

இரண்டு பண்ணைக்கும் விவகாரம் முற்றியது.

ஆடி மாதம் 15-ந்தேதி :—

பஞ்சனதய்யரின் குற்றமற்ற மாடுகள் பவுண்டி லிருந்தன.

அடைத்தது ஆறுமுகமய்யர்.

ஆடி மாதம் 16-ந்தேதி :—

வடக்கு மாவடிச் செய்யில் மாட்டை மேய்த்துக்கொண்டு நின்றான் கலங்காப்புலி. ஆறுமுகமய்யரிடம் அடிபட்டான்.

ஆடி மாதம் 17-ந்தேதி:—

கலங்காப்புலி, பஞ்சனதய்யரிடம் வசவு வாங்கினான்.

18-ந்தேதி:—

வடக்கு மாவடிச் செய்யில் பயிர்கள் தலை சாய்ந்து கிடந்தன. தண்ணீரை வெட்டி வடித்து விட்டவன் கலங்காப்புலி.

புரட்டாசி மாதம் 16-ந்தேதி:—

கலங்காப்புலியின் குடிசையில் நெருப்பு பற்றி யெரிந்தது.

18-ந்தேதி:—

நெல்லுப்பட்டரையிருந்த இடத்தில் பொறி பொறுக்கித் தின்ற சிறுவர்களை ஆறுமுகமய்யர் அடித்து விரட்டினார்.

21-ந்தேதி:—

கலங்காப்புலி கையைக் கட்டிக்கொண்டு பஞ்சனதய்யர் முன் நின்றான்.

"ஏண்டாபயலே, பத்து ஆள் வேணும்னு சேத்துக்கலேவன்?" என்றார் அய்யர்.

கல:—"என்னத்துக்குங்க, நான் பொணமாவா போயிட்டேன்?"

பஞ்:—"இல்லே.......இந்த மாதிரி நீளத்துலே விட்டுக்கிண்டே போனாக் கடேசிலே, அது, ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு, அய்யனாரையும் சேர்த்துக் கடிச்சுதுன்னு வந்துடும்."

கல :—"சும்மா யிருங்க, எசமான். கொஞ்சம் வேடிக்கைதான் பாருங்களேன்! அவன் எவன் ஆனைக்கிப் பொறந்தவன்! இந்த நாய்க்குட்டிக்கு ஒத்த மூக்குலே மூச்சு இருக்கிற வரையிலே உங்களுக்கு யோசனையே வேண்டாம்."

இது இங்கே.—

"அந்தப்பயல் இந்த ஊருலே யிருக்கிற வரையிலே, நம்ம ஒண்ணும் செய்யமுடியாது" என்றார் ஆறுமுகமய்யர்.

"இந்தச் சமயத்துலே யெல்லாம், பணத்தைப் பணமாப் பாக்கக் கூடாது. செலவுக்கு இல்லாத பணம் செம்பத்துக்கா? ஆளுக்கு ரெவ்வெண்டு ரூபாய் விட்டெறிங்க, சாமி" என்றான் ஒரு குடிகாரன்.

இது ஆறுமுகமய்யர் கோஷ்டியில்.

அன்று பகல்

கலங்காப்புலி வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறான். ஆறுமுகமய்யர் எதிரில் வந்து கொண்டிருக்கிறார். ஆறுமுகமய்யர் காரி உமிழ்ந்தார். கலங்காப்புலி கனைத்துக் கொண்டான்.

ஆறுமுகமய்யர்:— "ஹூம்....(செருமிக் கொண்டே) அவ்வளவு ஊத்தமா?........ எம்பண்ணைக்காரனா யிருந்தா வாலை ஒட்டப் புடிச்சுக் கத்திரிச்சிருப்பேன்," என்றார்.

கலங்காப்புலி:— "எங்க எசமானா யிருந்தா, அன்னிக்கே இதெல்லாம் அக்கிரமம்னு சொல்லி யிருப்பேன்" என்றான்.

"அந்த மாதிரி மடையந்தான் பண்ணைக்காரன் யோசனையைக் கேழ்ப்பான்."

"இந்த மாதிரிப் புத்தியுள்ளவுகள்ளாம் சட்டை அளுக்காப் போனப்புறம் தான் ஏண்டா சகதிலே கல்லை விட்டெறிஞ்சோம்னு யோசிப்பாக."

இனி நேருக்கு நேர்.

ஆறு:—அயோக்கியத்தனமாப் பேசினால் பல் ஒடஞ்சு போகும்.

கல:—மருவாதிக்கித்தானே வேட்டிகட்டறது. வேண்டாம்....வயலோடெ நிக்கட்டும்னு பாத்தேன்....ஒங்களைத்தான் எச

மான்....நேருக்கு நேரா சண்டைக்கி நிக்க ணும்னியன்னாலும் சரிதான்.''

ஆறுமுகமய்யருக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. அவர் வைது கொண்டே யிருக்கவேண்டும், கலங்காப்புலி கேட்டுக் கொண்டேயிருக்க வேணுமென்ற அவர் அபிப்பிராயத்தைக் குலைப்பதாக இருந்தது அவன் போக்கு.

"ஏண்டா, அதிகப் பிரசங்கிப் பயலே? உங்களை யெல்லாம் இந்த ஊருலே குடிவச்சது பிசகு'' என்றார் அதட்டலாக.

"அதைச் சொல்லுங்க, சாமி, நூறு தடவை. நாங்க உழவும் மாட்டோம்; நெலத்தை உழுது சாகுபடி செய்யாட்டி இந்தக் கலகமெல்லாம் ஏது! போங்க சாமி. நீங்க போங்க. கல்லும், கல்லும் மோதினாப் பொறி பறக்கும்? கண்ணாடி வந்து மோதிச்சுனா.......போங்க நீங்க, வீட்டுக்குப் போயி உங்க சிப்பாய்களை படையெடுத்துக்கிட்டு வரச்சொல்லுங்க'' என்று கலங்காப்புலி நையாண்டியாக சொல்லிவிட்டு அவரைப் பொருட்படுத்தாமலே நடந்தான்.

நூறு ஆறுமுகமய்யர் சேர்ந்து எதிர்த்தாலும் ஒரு கலங்காப்புலி அதற்கு வகை செய்து விடுவான். இந்தத் தடவை அவன் புத்தியும் சொல்லிவிட்டுப் போகவே, ஆறுமுகமய்யர் வெகுண்டார். அவருடைய மனதில் வெகுநாளாக ஒரு கற்பனை யோடிக் கொண்டிருந்தது. அந்த கற்பனைப்படி நடந்துவிட்டால் கலங்காப்புலிக்குக் காப்புப் போட்டு விடலாம் என்று எண்ணி யிருந்தது வீணாகிவிட்டது.

கலங்காப்புலிக்கு பலம் மாத்திர முண்டு. ஆறுமுகமய்யருக்கோ, பணமிருக்கிறது.

பலத்தின் விளையாட்டெல்லாம் பத்து கஜந்தான். பணம்!

ஆகவேதான் கலங்காப்புலியின் கை தன் மேலே பட்டுவிட வேண்டுமென்று அவர் நினைத்ததும். அதற்காகவே, இன்று அவனைக் கண்டும் காணாததுபோல் காரி உமிழ்ந்து வலுச்சண்டைக் கிழுத்ததும்.

இந்தத் தடவையாவது கலங்காப்புலி அடித்துவிடுவான் என்றெண்ணினார். அதுவும் நடக்கவில்லை.

யோஜித்துக்கொண்டே நடந்தார். வீட்டு வாசல் தாண்டி வடக்கே ஒரு பர்லாங்கு போய் மறுபடியும் திரும்பி வீட்டுக்கு வந்தார் என்ற பிரஸ்தாபம். அவ்வளவு யோஜனை.

அன்று இரவு

ஆறுமுகமய்யரும் ஊரை இரண்டுபடுத்தி வேடிக்கை பார்க்கும் நான்கு கூத்தாடிகளும் தெற்கு மாவடிச் செய்க்குள் நின்று கதிர் பரியாத பயிர்களை அறுவடைசெய்துகொண்டிருந்தார்கள்.

பாலில் ஊறவைத்த ஓமம் போன்ற தாவள்யமான கதிர்ப் பொதிகள் கருக்கரிவாள்களினால் நறுக் நறுக்கென்று சாய்ந்தன.

பயிரை அறுப்பவர்களும் விவசாயிகள் தான்!

கலங்காப்புலி கெட்ட கனவுகள் கண்டு கொண்டே வீட்டில் படுத்திருந்தான். திடீரென்று எழுந்தான்.

பகல் முழுவதும் உழைத்த குடியானவன் இரவில் அயர்ந்து தூங்குவான். அவன் கனவு காணுவதேயில்லை. சிரமமின்றி உண்டு ஈசிச்சேரில் சாய்ந்துகொண்டே யிருந்து மலச்சிக்கலுக்கும், தாதுபுஷ்டிக்கும் மருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும் 'சிலர்' கனவு காணுவதும், கனவில் கனவு காணுவதும் சகஜம்.

விவசாயிக்கு அப்படியல்ல.

விவசாயி கனவை தேவர்களின் எச்சரிக்கையாக எண்ணுவான். உடனே அதன் பலனை அறியவும், அடையவோ அல்லது விலக்கவோ முயற்சிப்பான்.

குற்றங் கோளாறு இருக்கிறதா வென்று உடுக்கடித்துக் கேட்பான். இப்பொழுதோ கலங்காப்புலி சவுகரியமாக யிருக்கிறான். கெடுதல் ஏதேனும் வந்திருந்தால் நிலத்தில்தான் வந்திருக்க வேணுமென்று எண்ணினான்.

விழுந்தடித்துக் கொண்டு வயலுக்கு ஓடினான். ஐந்தாறு கரிய வுருவங்கள் குனிந்து குனிந்து ஏதோ செய்வதைக் கண்டான்.

குதித்தான் வயலுக்குள். புலிபோலப் பாய்ந்து எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கைகொண்ட மட்டும் சாடினான். 'சரக்' 'சரக்' கென்று அரிவாள் உராயும் சத்தத்தைக் கேட்டான். தன்னுடைய ஆபத்தை யுணர்ந்தான்.

சிறிது விலகிக்கொண்டு யோசித்தான்.

"....ஐயோ—செத்தேன்'' என்று அலறினார் ஆறுமுகமய்யர்.

"ஆத்தே! சாமியா....?'' என்றான் அவருடைய ஆள்.

வழக்கும் தீர்ப்பும்

மாஜிஸ்திரேட் கோர்ட்டு வாசல் புளிய மரத்தடியில் ஆறுமுகமய்யரின் ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

தலையிலே முண்டாசைக் கட்டிக்கொண்டு வக்கீல்கள் அறைக்கும், கோர்ட்டுக்கும், குறுக்கும், நெடுக்குமாக அலைந்து கொண்டிருந்தார் பஞ்சனதய்யர்.

மூன்றே கால் மணிக்கு கைகளில் விலங்குடன் கலங்காப்புலி கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

கிருமினல் கேசில் குற்றவாளி தரப்புக்கு ஆஜராவதில் பிரசித்தி பெற்ற வக்கீல் ஒருவரே கலங்காப்புலி தரப்புக்கு ஆஜராகி இருந்தார்.

அன்று விசாரணையில், கலங்காப்புலி, தன் கையில் அரிவாளே எடுத்துப்போக வில்லை யென்றும் ஆறுமுக மய்யரை தான் குத்தவில்லை யென்றும் எவ்வளவோ சொன்னான். ஆனால் அவனுக்குச் சாட்சி யேது?

ஆறுமுகமய்யர் ஆஸ்பத்திரியில் கிடந்தார். பிழைத்து விடுவாரென்று நம்பிக்கை யேற்படுவதற்கு மூன்று நாட்களாகி விட்டன.

பஞ்சனதய்யரும் அவர் மனைவியும், பஞ்சனதய்யர் தமக்கையும், தமக்கை பெண்ணும் கூடியிருந்தார்கள்.

பஞ்சனதய்யர் பையனும் லீவு வாங்கிக் கொண்டு வந்திருந்தான்.

ஆறுமுகமய்யர் கண்ணை விழித்தார். "வாயிதா நடந்துதா?—என்ன முடிவாச்சு?'' என்று கேட்டார்.

பஞ்சனதய்யர் வந்து பக்கத்தில் நின்றார். "ஆறு மாதம் ஜெயில்....'' என்று சொல்லிக் கீழே குனிந்தார். அவரது கண்களிலிருந்து இரண்டு சொட்டு ஜலம் ஆஸ்பத்திரிச் சிமிண்டுத் தரையில் சொட்டியது.

ஈன ஸ்வரத்தில் "பஞ்சனதம்'' என்றார் ஆறுமுகமய்யர். "...நான் பொழச்சுருவேனா?'' என்று கேட்டார்.

"கவலைப் படாதீங்கோ. பொழச்சுடுவியன்னு டாக்டர் சொல்றார்.''

"பஞ்சனதம்...உட்காரு .... இங்கேவா'' என்று, ரகசியமாக "கலங்காப்புலிதான் குத்தினான்னு நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவன் கையிலே, அரிவாளிருந்துதான்னு நான் பாக்கல்லே. எனக்குக் கூட கருப்பன் மேலே சந்தேகம்...''

"அய்யய்யோ! அப்போ அப்படி யேன் வாக்கு மூலம் கொடுத்தியள்? கருப்பனையும் காணமே பத்து நாளாய். எங்கேயோ ஓடிப் போயிட்டானமே!'' என்று கூவினார் பஞ்சனதய்யர்.

"இருக்கலாம். நான்........பிழைக்கமாட்டேனேன்னு .... சந்தேகமா யிருந்தது... நாமே சாகப்போறோம். எதிரி வாழ்வானேன் என்று நினைத்தேன். கலங்காப்புலி குத்தினான்னு சொன்னேன்'' என்றார் ஆறுமுகமய்யர் மரணபயச் சோர்வில்.

பஞ்சனதய்யர் பிரமித்து நின்றார். ஒரு புறத்தில் அப்பீல் யோசனையும், ஒரு புறத்தில் 'அத்திம்பேரு'க்கு தண்டனை வந்து விடுமோ யென்ற பயமும், அல்லல்படுத்தின.

தை மாதம் 5-ம் தேதி சிரஞ்சீவி ராகவனுக்கும், சௌபாக்கியவதி மங்களத்துக்கும் கலியாணம்.

ஆறுமுகமய்யரும், பஞ்சனதய்யரும் பிரப்பம் பாயிலுட்கார்ந்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மூன்று மாதமாக ஜெயிலில் அவதிப்படும் கலங்காப்புலியின் ஞாபகம் இருவருக்கும் வந்தது.

கலங்காப்புலி கலகங்கள் நடந்திராத பக்ஷத்தில் பஞ்சனதய்யரும் ஆறுமுகமய்யரும் ஒன்று சேர்ந்திருக்க மாட்டோ மென்றெண்ணினார்கள்.

கத்திக் குத்துப்பட்டது, ஆஸ்பத்திரிக்குப்போனது, அங்கே பஞ்சனதய்யர் அவசியம் வரும்படி நேர்ந்தது, எல்லாம் நன்மைக்காகவே என்று தோன்றியது ஆறுமுகமய்யருக்கு. அன்றைய தினம் சம்பந்திகளிருவரும் சேர்ந்து ஒரு தீர்மானமும் செய்துகொண்டனர். இருவர் மனமும் விரிந்து உயர்ந்த நிலையில் செய்துகொண்ட தீர்மானம்.

மூன்று மாதம் கழித்துக் கலங்காப்புலி வந்து சேர்ந்தான்.

பஞ்சனதய்யர் மனமாரத் தழுவிக் கொண்டார். யோசனைப்படி வடக்குமாவடிச் செய், தெற்குமாவடிச் செய் இரண்டினுடைய கிரயப் பத்திரங்களும், கலங்காப்புலி கையில் தூக்கிக் கொடுக்கப்பட்டன.

பண்ணையாள் கலங்காப்புலி ஐந்துமா நிலத்துக்கு அதிபதியானான்.

இரண்டு நிலங்களுக்கும் இடையிலிருந்த வரப்பை அவன் நீக்கிவிடுவானென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால்!

மறுநாள் சப் ரிஜிஸ்திரார் ஆபீஸில் தெற்குமாவடிச் செய்யும் வடக்குமாவடிச் செய்யும், ஊர்ப்பொது அம்மன் கோவில் சொத்தாகப் பதிவு செய்யப்பட்டன. இடையிலிருந்த வரப்புதானே கலங்காப்புலிக்கு அஸ்திவாரம்; அவன் ஸ்வபாவம்!

"கோடாலியும் கம்பும் கூடினப்புறம் கலங்காப்புலிக்கு என்ன சோலி? என்ன மரியாதை?'' என்று ஊரைவிட்டு வெளியேறினவன் தான்.

குழந்தைகளின் ஈரல் குலே ஜுரக்கட்டிகளுக்கு

'அசல் விஜய நகரம்' மருந்து

பால சஞ்சீவினி

சோற்ப மாதத்திலே குணப்படுத்தக்கூடியது. மற்ற மருந்துகளைப்போல் வருஷக்கணக்காக கோடுக்க வேண்டாம்.

இது ஒன்றே "அசல் விஜயநகரம்" மருந்து என்பதை இதற்கு வந்திருக்கும் எண்ணிக்கையற்ற நற்சாக்ஷிப் பத்திரங்கள் சந்தேகமின்றி வெளிப்படுத்தும்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு பிரதர்

விஜயநகரம் ஸமஸ்தான வைத்திய பரம்பரை

45 வருஷகாலமாய் அநேக ஆயிரக்கணக்கான குழந்தைகளை இந்தக் கோடிய குலேக்கட்டி வியாதியினின்று குணப்படுத்தி இருக்கிறுர்கள்.

98-99, பிராடீஸ் ரோட்,

மைலாப்பூர், மதராஸ்.

பூரா ஆரோக்யத் துடனிருங்கள்.

ருசி, மணம், குணம் நிறைந்ததும் மலச்சிக்கலே கண்டித்து, அஜீர்ணத்தைபோக்கடித்து ஆரோக்கியத்தைத் தரும்,

★



T.T.

மிஸ்கி பெருங்காயம்.

நேராய் ஈரான் தேசத்திலிருந்து வரவழைத்து எல்லா வியாபாரிகளுக்கு சப்ளே செய்கிறவர் :—

ரஷீட் ஜெம்ஷேட் சன்சு அண்டு கோ.

222, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்

H. O.: **BOMBAY.** *Branches:* **KUMBAKONAM & MADURA.**

டிராபிகல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், டெல்லி

தலேவர்: **ஸ்ரீயுத சுபாஷ் சந்திரபோஸ்**

(காங்கிரஸ் தலேவர்)

Sjt Subhas Chandra Bose.

CONGRESS PRESIDENT

Chairman

TROPICAL INSURANCE Co. LTD. A PURELY NATIONAL *Institution.* H.O. DELHI.

ஸ்தாபகர்கள்:
- பண்டித மோதிலால் நேரு
- டாக்டர் எம். ஏ. அன்ஸாரி
- ஹகீம் அஜ்மால்கான்

(1) ரூ. 2 கோடிக்குமேல் பாலிஸிகளே எடுத்திருக்கிறது.

(2) முன்னணியிலுள்ள தேசியத் தலேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, சிறந்த தேச பக்தர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

(3) முதல் வால்யுவேஷனிலேயே போனஸ்கொடுக்கப்பட்டது. இப்போது இரண்டாம் வால்யுவேஷன் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழ் ஜில்லாக்களிலும், ஸிலோனிலும், கமிஷன் திட்டத்திலும் சம்பள திட்டத்திலும் வேலே செய்யக்கூடிய

ஏஜண்டுகளும் ஆர்கனேஸர்களும் தேவை.

கீழேயுள்ள விலாஸதாருக்கு டினுப்போடவும்:—

டி. எஸ். பஞ்சு,		**கே. எஸ். ராமமூர்த்தி, எம். ஏ.,**
பிராஞ்சு மானேஜர்,	அல்லது	*கிளே காரியதரிசி,*
13, வடக்குவெளி வீதி,		189/B, மௌண்ட் ரோடு,
மதுரை		மதராஸ்

கன்றைக் கொன்ற பசு

பாபரை எதிர்த்து நின்ற சிங்கம், சித்தூர் ராணா சங்கா இறந்து விட்டான். மந்திரிகளால் விஷமிட்டுக் கொல்லப்பட்டான் என்ற வதந்தி உலவி வந்தது. அவனுடைய மூன்றாவது மகன் ரட்ணா, பட்டத்திற்கு வந்தான். ரட்ணாவுக்குப் பின், அவனுடைய சகோதரன், விக்கிரமஜித், சித்தூர் சிம்மாஸனம் ஏறினான். ராணா விக்கிரமஜித் உயர்குலத்து ராஜபுத்திரத் தலைவர்களுக்கும், பிரபுக்களுக்குமுரிய மரியாதைகளையும், வெகுமதிகளையும் சாதாரணப் போர் வீரர்களுக்கு அளித்ததால், வெகு சீக்கிரம் செல்வாக்கிழந்தான். பெரும் பிரபுக்களை அரச சபையிலேயே அவமரியாதையாக நடத்த வாரம்பித்தான். போர்ச் செருக்கு வாய்ந்த இராஜபுத்திரத் தலைவர்களால் இதைப் பொறுக்க முடியவில்லை. ஆகையால், அவனைச் சிம்மாசனத்தினின்றும் நீக்கினார்கள். ராணா சங்காவினுடைய கடைசிப் புத்திரன் உதயசிங் ஆறு வயதுப் பாலகனாயிருந்தான். டில்லியில் மொகலாய வம்சம் வேரூன்றி விட்டது. அவர்களுடைய கண்ணுக்குச் சித்தூர் கருப்பாயிருந்தது. இத்தகைய காலத்தில், ஒரு பச்சைப் பாலகனைச் சிம்மாசனம் ஏற்றுவது அறிவுடைமையாகாது. ஆகையால், பிரிதிவிராஜனுடைய ஆசை மகனாகிய பன்பீரைச் சிம்மாசனம் ஏற்றினார்கள்.

பன்பீர், முதலில் ராஜ பதவியை வேண்டாமென்று மறுத்தாலும், சிம்மாசனத்தில் உட்கார்ந்த சிறிது நேரத்திலேயே, அதன் சொகுசு தென்பட்டு விட்டது. அதை விடுவதற்கு அவனுக்கு மனமில்லை. அச் சுகத்தைத் தன் வாழ்க்கை முழுவதும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. இரவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தான். கொலைகாரன் சூரியனுக் கஞ்சுவது போல், கடவுளுக்குக் கூட அஞ்சுவதில்லை. இருளுங் கொலையும் சகோதரர்கள். ஆகையால் ஒன்றின் குற்றத்தை மற்றொன்று வெளிப்படுத்தாது என்று கொலைகாரன் நினைக்கிறான்.

2

இரவு வந்தது. தாதி புன்னா உதய சிங்குக்குப் பாலுஞ்சாதமும் ஊட்டித் தொட்டிலில் படுக்க வைத்தாள். தனக்கு வரப்போகும் அபாயத்தைக் கொஞ்சமும் அறியாத குழந்தை தூங்கியது. திடீரென்று அந்தப்புரத்தினின்றும் பெண்களின் அழுகைக் குரல் கேட்டது. தாதி திடுக்கிட்டு விழித்தாள். ராஜ குமாரன் சாப்பிட்ட மீதத்தை வாங்கிக்கொண்டு போவதற்கு, அரண்மனை நாவிதன் அறைக்குள் நுழைந்தான்.

"ஏன் இந்தக் கூக்குரல்?" என்று மெல்லிய குரலில் புன்னா பயத்துடன் நாவிதனைக் கேட்டாள்.

நாவிதன்:—"உனக்குத் தெரியாதா? அக் கொலைகாரப் பாவி பன்பீர், ராஜா விக்கிரமஜித்தைக் கொன்று விட்டான்."

புன்னா:—"நிஜமாகவா?"

நாவிதன்:—"ஆம்".

புன்னாவின் மனதில் திடீரென ஓர் பயங்கர எண்ணம் குடிகொண்டது. அவள் உடம்பெல்லாம் நடுங்கிற்று. பன்பீரின் இரத்த தாகம், ஒரு உயிரோடு தணியாது என்று நினைத்தாள். அடுத்தாற்போல் பச்சைக் குழந்தை உதயசிங்கின் உயிருக்கு ஆபத்து வருமென்பது அவளுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. அவள் உதயசிங்கின் தாதி. ராஜகுமாரனின் உயிர் அவளிடத்தில் ஒப்புவிக்கப் பட்டிருந்தது. அவனைக் காப்பாற்றுவது அவளுடைய கடமை. பன்பீரோ கொடிய மூர்க்கன். அவனுடைய கரங்களினின்றும், சங்கவிருக்ஷத்தின் கடைசிக் கிளையை எங்ஙனம் காப்பாற்றுவது? சிங்கத்தின் குட்டி சிங்கம் என்பார்கள். "மொகலாயச் சேனையைத் தோற்கடிக்காமல் சித்தூர் நுழைய மாட்டேன்" என்று சபதஞ் செய்த ராணா சங்கா, அதை நிறைவேற்றுவதற்குள் இறந்து விட்டான். அச் சபதம் இன்னும் நிறைவேறவில்லை. அதற்குள் ராணாவின் குலவிளக்கை அவிய விடுவதா? ஒருக்காலுங் கூடாது என்று தீர்மானித்தாள்.

நாவிதனிடத்தில் ஒரு பழக்கூடையைக் கொடுத்து, "இதைப் பத்திரமாகக் கோட்டைக்கு வெளியில் கொண்டுபோய், நதிக் கரையில் காத்துக்கொண்டிரு; நான் கூடிய சீக்கிரம் வருகிறேன்" என்றாள்.

3

இரத்தம் ஒழுகுங் கத்தியுடன் பன்பீர் அறைக்குள் நுழைந்து, "எங்கே உதய சிங்?" என்று உறுமினான். புன்னாவிற்கு வயிற்றில் தீப்பற்றியது. என்ன செய்வாள்? பதில் சொல்ல அவளுடைய உள்ளம் மறுத்தது; வாய் மறுத்தது; கண் மறுத்தது; கை மறுத்தது; அவளது ஒவ்வொரு அங்கமும் மறுத்தது! தன்னிடத்தில் ஒரு கத்தியிருந்தால், இக் கொலைகாரனை ஒரே குத்தில் கொன்று விடலாமே என்று நினைத்தாள். அதற்குள் பன்பீர் மீண்டுங் கர்ஜித்தான். "எங்கே உதயசிங்?"

"அதோ" என்று சொல்ல வாயெடுத்தாள். வார்த்தை தொண்டையிலேயே விக்கிக் கொண்டது. கை மட்டும் நடுங்கிக் கொண்டே தொட்டிலைக் காட்டிற்று.

மூர்க்கன் தொட்டிலை அணுகினான். கவலையற்றுத் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது. கொலையும், பேராசையும், கோபமும் பன்பீர் முகத்தில் குடி கொண்டிருந்தன. கோபி குருடன்! அவனுடைய கத்தி, அப் பச்சைக் குழந்தையின் மார்பில் பாய்ந்தது.

புன்னா 'ஓ' வென்று அலறினாள். இக் கொடுந் தொழிலை அவளால் பார்க்க முடியவில்லை. கண்களை இறுக மூடிக்கொண்டாள். "சங்காவின் கடைசிப் புத்திரனும் இறந்து விட்டான்; ராணாவின் வம்சம் அழிந்தது; பெயர் சொல்ல ஒரு பிள்ளைகூட இல்லையே!" என்று அந்தப்புர ஸ்திரீகளெல்லாம் ஓலமிட்டு அழுதார்கள். யாவர் துக்கத்தைக் காட்டிலும், புன்னாவின் துக்கம் அளவு கடந்ததாயிருந்தது. விம்மி, விம்மி அழுதாள். குழந்தையின் அருமை பெற்று வளர்த்த அவளுக்கல்லவா தெரியும்? அவ் விரவே அவசர அவசரமாக அதற்கு அந்திமக்கிரியைகளை செய்து முடித்துவிட்டுப் பின்பு நாவிதனைச் சந்திக்க ஓடினாள்.

4

நாவிதன் பழக் கூடையைத் தூக்கிக் கொண்டு கோட்டை வாசலைக் கடந்து வெளியேறினான். சிறிது தூரம் சென்றதும், கூடையிலிருந்த பழம் அழவாரம்பித்தது! நாவிதன் திடுக்கிட்டு நின்றான். பழம் அழுகக் கண்டிருக்கிறான்; ஆனால் அழக் கேட்டதில்லை. ஆகையால் ஆச்சரியத்துடன், கூடையை இறக்கிப் பார்த்தான். என்ன அதிசயம்! உதயசிங், கால்களை உதறி அழுது கொண்டிருந்தான். அரண்மனை மெத்தையின் சுகம் பழக்கூடையில் வருமா?

சிறிது நேரத்திற்குப் பின் புன்னா வந்து சேர்ந்தாள்.

நாவிதன் வெகு ஆச்சரியத்துடன், "அக் கொலைகாரனுக்கு என்ன பதில் சொன்னாய்?" என்று கேட்டான்.

"என் மகனைக் காட்டினேன்."

"புன்னா!"

"ஆம்."

"பாவி! கொன்று விட்டானா?"

"ஆம்."

அவளுடைய கண்களினின்றும் கண்ணீர் மாலை மாலையாக வடிந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "என் ராணா! என் செல்வம்!!" என்று உதயசிங்கைத் தூக்கி முத்தமிட்டாள்.



5

புன்னாவின் கடமை இத்துடன் முடிந்து விடவில்லை. ராஜபுதனப் பாலை வனத்தில், பசியென்றும், தாகமென்றும் பாராமல், உள்ளங்கால் வெள்ளெலும்போட, ராஜ குமாரனைத் தூக்கிக் கொண்டு, ஊரூராய்க் கடந்து சென்று கடைசியில் தியோலாவை அடைந்தாள். அதை அக்காலத்தில் ஆண்டு கொண்டிருந்த சிங்ராவின் தகப்பன், சித்தூருக்காகத் தன் உயிரைக் கொடுத்த வீரன்.

அவனிடத்தில் தன் விருத்தாந்தம் முழுவதையுஞ் சொல்லி, உதயசிங்கை ஒப்புவித்தாள். தந்தையின் வீரம் மகனிடத்தில் இல்லை. பன்பீரின் கொடுங்கோலுக் கஞ்சி, அரசகுமாரனுக்கு அடைக்கலம் மறுத்தான்.

பின்னர் புன்னா டாங்கர்ப்பூருக்குச் சென்றாள். அவ்வரசனும் உதவி செய்ய மறுத்தான். ஆனால் புன்னா சிறிதேனும் மனந் தளரவில்லை. எங்ஙனமாயினும் ராணாவின் புத்திரனை, வயது வரும் வரை மறைவாக வைத்திருந்து, சித்தூருக்கு ராஜாவாக்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டாள். ஆகையால் ஏரோ வழியாக அரவல்லி மலைக் கணவாய்களைக் கடந்து, நெடுந்தூரம் சென்று, இறுதியில் கோமல் மீர் அடைந்தாள். அஸ்லா ஸா என்பவன் அந்த நகரின் கவர்னர். அவனிடம் சென்று, உதயசிங்கை அவன் மடியில் வைத்து, “இவன் தான் உமது ராஜா! இவனைக் காப்பாற்றும்” என்றாள். அஸ்லா ஸா உல்லாசப் பூங்காவில் தன் தாயுடன் ஏதோ பேசிக்கொண்டு அமர்ந்திருந்தான். இப்படி திடீரென்று பைத்தியக்காரி போலக் கிழிந்த ஆடையும், தூசிபடிந்த மேனியுமாக ஒருத்தி வந்து ஒரு குழந்தையைத் தன் மடியிலிட்டு “இவன் தான் உமது ராஜா” என்றதைக் கேட்டு அவன் திடுக்கிட்டுவிட்டான்.

“யாரடி, நீ பைத்தியம்!” என்பது போலப் புன்னாவைப் பார்த்தான்.

புன்னா பன்பீரின் கொடூரத்திற்குத் தப்பி வந்த விவரத்தையும், அந்தக் குழந்தை தான் ராணா சங்காவின் கடைக்குமாரன் உதயசிங் என்பதையும் சொன்னாள்.

பன்பீர் ராணா விக்கிரமஜித்தையும், குழந்தையையும் கொன்று விட்டான் என்ற செய்தி அவளுக்கு முன்பே அஸ்லா ஸாவுக்கு எட்டியிருந்தது. அதனால் அவன் கேலியாகச் சிரித்து “என்னடி கதை பேசுகிறாய்!” என்று அதட்டினான்.

புன்னா அதுதான் ராணாசங்காவின் குழந்தையென்பதை அடையாளங்களுடன் நிரூபித்தாள். அப்போதும் அவனுக்கு நம்பிக்கை யேற்படவில்லை. “போடி, போடி” என்று மடியிலிருந்த குழந்தையைக் கீழே உதற முயன்றான்.

அவன் அருகில் நின்ற அவன் தாய் அவனைக் கையமர்த்தி “ஆனால் பன்பீர் கொன்று விட்டதாகச்சொல்லப்படும் குமாரன் யார்?” என்று கேட்டாள் புன்னாவிடம்.

புன்னாவின் கண்களிலிருந்து பிரவாக மெடுத்தது. ரொம்பத் தயக்கத்துடன் அடைத்த குரலில் “இந்தப் பாவி பெற்ற பிள்ளை; அந்தச் சண்டாளன் ராணா விக்கிரமஜித்தைக் கொலை செய்தசெய்தி கேட்டவுடன், என் ராஜாவின் தொட்டிலில் என் மகவைத் தூங்க வைத்தேன்” என்றாள்.

அஸ்லா ஸாவும் அவன் தாயும் பிரமித்துக் கற்சிலைகளாகி விட்டனர். இதுவும் சாத்தியமா!

அதிசய அதிர்ச்சி தீர்ந்து சுயபிரக்ஞை வந்தவுடன், அஸ்லாஸாவுக்குத் தன் நிலைமையின் ஞாபகம் வந்தது. கொடுங்கோலன் பன்பீரின் வாளை ஏமாற்றிய ராஜகுமாரனைத் தான் அபயம் கொடுத்து வளர்ப்பது உசிதமா என்ற யோசனை பிறந்தது. தயங்கினான்.

அவன் தயக்கத்தைக் கண்ட அவன் தாய் சீறியெழுந்து, “மகனே! உன் குழவிப் பருவத்தில், விஜய வீரர்களாய் நித்யத்துவம் பெற்ற ராஜபுத்திர ரத்தினங்களின் கதைகளைக் கலந்து உனக்குச் சோறூட்டினேனே! அதன் பலனா இந்தத் தயக்கம்? பார்; கொஞ்சம் யோசித்துப் பார். நீ இதுவரை கேட்டுள்ள ரஜபுத்திர வீரச்சரிதங்களிலே எந்த வீரனாவது, அல்லது வீரப் பெண்மணியாவது இத்தகைய மகத்தான வீரமும், தியாக புத்தியும் காட்டியதுண்டோ? மனித சரித்திரத்திலேயே இது தனித்து நிற்கும் தியாகமன்றோ! கேவலம் ஒரு தாதி தான் சுமந்துபெற்ற மதலையை அந்த அரக்கன் வாளிலே நேருக்கு நேர் தூக்கிக்கொடுத்து, இதைக் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறாள்; நீ ஒரு ஆண் மகன், கண்ணுக்குத் தெரியாத தூரத்தி லுள்ள அந்தக் கொடுங்கோலன் கத்தியை நினைத்து நடுங்குகிறாய்! பேஷ்!” என்றாள்.

அஸ்லா ஸாவின் நெஞ்சம் கொதித்தது. குழந்தையை அள்ளி மார்புடன் அணைத்துக்கொண்டு புன்னாவைப் பார்த்தான்.



எஸ். குருசாமி B. A.,

எழுதியது

6

குழந்தையைத் தழுவி முத்தமிட்டுச் சித்தூர் திரும்பினாள் புன்னா. அவள் கண்ணீர் குழந்தையை நனைத்து அவள் கண்களையும் மறைத்தது. ஆயினும் இந்தப் புன்னா என்னும் நட்சத்திரத்தைக் கால வெள்ளத்தாலும் மறைக்க முடியுமோ!

ஓரியண்டல் கவர்ன்மெண்ட் ஸெக்யூரிடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

இந்தக் கம்பெனி 1874-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தியாவிலுள்ள லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனிகளிலெல்லாம் மிகப் பழமையானது. அதனால் இந்தத் தொழிலில் இந்தக் கம்பெனிக்குள்ள அனுபவம் ஏராளமானது. அதோடு இந்திய லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனிகளிலேயே மிகப் பெரியதும், உறுதியான அஸ்திவாரமுடையதுமாகும்.

இது வருஷா வருஷம் புதிது புதிதாகத் தொழிலை விரித்து வளர்த்து வந்திருக்கிறது. இந்தக் கம்பெனியின் 1936-ம் வருஷத்திய தொழிலின் அளவு இதுவரை செய்துள்ள தொழிலின் சிகரம் என்று சொல்லலாம்.

இந்தக் கம்பெனி தொழிலை விருத்தி செய்ய நவீன முறைகளைக் கையாளுவது போற்றத்தகுந்தது. தனது செலவுகளை ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள்ளே செய்ய வேண்டும் என்பது இதன் நிர்வாகத்தின் அடிப்படையான நோக்கம். மிகவும் நாணயமான ஸெக்யூரிட்டிகளில் இந்தக் கம்பெனியின் மூலதனம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. இந்தக் காரணங்களை நோக்குங்கால் மற்ற இந்திய அஷ்யூரன்ஸ் கம்பெனிகளைவிட இதுவே முதன்மை ஸ்தானம் பெற்று விளங்குவது புலனாகும்.

அன்று 'சிந்தாமணியை' சிருஷ்டித்த அவரே இன்று 'பக்த மீரா'வை
அளிக்கிறார்

★

ஒய். வி. ராவின் மகோன்னத தமிழ்ப் படம்

பக்த மீரா

(வட இந்திய மகாத்மாவின் புனித சரித்திரம்)

இதோடு

ஷோக் சுந்தரம் கிராம விஜயம்

(ஒரு 3 ரீல் காமிக் படம்)

இரு படங்களும் சென்னை சிந்தாமணி பிக்சர்ஸ் தயாரிப்பு

ஒய். வி. ராவ் நடிப்பு — ஒய். வி. ராவ் டைரக்ஷன்

ஒய். எச். ராவ்—ராணா — வசுந்தராதேவி—மீரா

மைசூர் ஆஸ்தான வித்வான் K. A. ஸ்ரீனிவாசன், எல். நாராயணராவ், எம். ஆர். துரைராஜ், ஏ. ஏ. சோமயாஜுலு, பி.ஏ., எஸ். கல்யாணம், ஏச். ஆர். அப்பாகுட்டி, எஸ். ஜி. ராஜம், மிஸஸ் V. ராஜம் முதலியோர் நடித்தது.

★

வசனம், பாட்டு :	சங்கீத டைரக்ஷன் :	ஸ்டுடியோ :
ஏ. ஏ. சோமயாஜுலு, பி.ஏ.	ஹரிகேசநல்லூர் சகோதரர்கள்	நியூடோன் ஸ்டுடியோஸ், கீழ்ப்பாக்கம்

"பக்த மீரா" பாடல்களை ஓடியன் ரிகார்டுகளில் கேளுங்கள்

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு உரிமை பெற்றவர்கள் :

ராஜா பிலிம் டிஸ்ட்ரிபியூடர்ஸ், ராஜபாளையம்

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள் :

World Talkie Distributors

BANGALORE CITY

தமிழ் நாட்டில்

ஹிந்திப் படங்கள் தயாரிப்பு

டைரக்டர்
ஒய் வி. ராவ்
எழுதியது

ஹிந்தி கட்டாய போதனையை எதிர்த்து இப்போது நடைபெறும் பிரசாரத்தை உத்தேசிக்கும்போது, இந்த விஷயத்தைப்பற்றி எழுதக் கொஞ்சம் தயங்கினேன். ஆனால், எனக்கு ஒரு தைரியம்; எந்த விதத்திலும் நான் அரசியலில் சம்பந்தப்பட்டவனல்ல. நான் சொல்லுவதெல்லாம் கேவலம் வர்த்தக லாபத்தை உத்தேசித்துத்தான்.

ஒரு பாஷையைவிட இன்னொரு பாஷை உயர்ந்தது என்று நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். ஆனால், ஒன்றைவிட மற்றொன்று நிச்சயமாய் லாபகரமானதென்று தோன்றினால், அதைச் சொல்லித்தான் தீரவேண்டும். ஆயிரம் பாஷைகளிலிருந்து இரவல் வாங்கியது ஆங்கிலம். ஆயினும் உலகம் முழுவதிலும் அதற்குச் செலாவணி இருக்கிறது. வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்கிறவர்களுக்கு ஆங்கிலம் மிகவும் அனுகூலமாக இருக்கிறது. இது சர்வதேச விஷயம். இந்தியாவை மாத்திரம் எடுத்துக் கொண்டால் மற்ற எந்த பாஷையையும் விட ஹிந்திக்கு செலாவணி அதிகம். நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஹிந்திப் படங்கள் நன்றாக ஓடுவது பிரத்தியக்ஷம். இந்தப் பணமெல்லாம் வட இந்தியாவுக்குப் போய்ச் சேருகிறது. தென்னிந்திய பாஷைகளில் தயாரிக்கப்பட்ட ஒரு படம்கூட வட இந்தியாவில் ஓடுவதில்லை, ஓடமுடியாது.

அந்நியத் துணிகள் மூலமாகவும், அந்நிய சரக்குகள் மூலமாகவும் வெளிநாடுகளுக்கு நம் நாட்டுப் பணம் போகிறதென்று நாம் எவ்வளவு வருந்துகிறோம்? சர்வதேசங்களுக்கும் பொதுவாக இருக்கக்கூடிய ஒரு பாஷையில் படம் தயாரிக்க முடியாவிட்டாலும், நம் நாட்டில் பொதுவாக இருக்கக்கூடிய ஒரு பாஷையிலாவது படங்களைத் தயாரித்து, ஒரு படத்தின் மூலம் வெளி மாகாணங்களுக்குக் கொடுக்கும் பணத்தை, மற்றொரு படத்தின் மூலம் நாம் வசூலிக்க முயலுவது நியாயமாகாதா? தமிழ்ப் படங்களுக்கும், தெலுங்குப் படங்களுக்கும் வடநாட்டில் சுத்தமாக இடம் கிடையாது. ஹிந்தி அபிமானத்தால் நான் இந்த வார்த்தைகளைச் சொல்லவில்லை. நாளை ஒரியா பாஷை ஹிந்தியின் ஸ்தானத்தைப் பெற்றால், ஒரியா பாஷையில் தயாரிக்க வேண்டுமென்றுதான் சொல்லுவேன்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் வருஷம் தொட்டு தென்னாட்டில் ஹிந்தி விசேஷமாகப் பரவி வருகிறது. அதில் பட்டம் பெற்றவர்களும் பலர் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு ஹிந்தியில் படங்களைத் தயாரிப்பது கடினமல்ல. தென்னிந்திய பாஷைப் படங்களே இருக்கக்கூடாதென்று நான் சொல்லவில்லை. புராண, சரித்திர, சமூக சம்பந்தமான கதைகளை இரண்டு பாஷைகளில் தயாரிக்கலாம். அதனால் செலவு குறையும்; மதிப்பு அதிகமாகும்; தென்னாட்டின் செல்வம் அதிகப்படும். இது முதலாளிகள் கவனிக்க வேண்டிய விஷயம்.

நடிகர்கள், ஹிந்தியைக் கற்றுக் கொள்வது நலம். நடிப்புத் திறமையோடு பாஷைப் பயிற்சியுமிருந்தால், இதர மாகாணங்களிலும் நம்மவர்களுக்குக் கிராக்கி ஏற்படலாம். இப்போதில்லாவிட்டாலும் இன்னும் கொஞ்ச காலத்தில், நாம் ஹிந்திப் படங்களைத் தயாரிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதற்கு நாம் சித்தமாயிருப்பதுதான் புத்திசாலித்தனம். வட நாட்டு நடிகர்களைக் கொண்டுதான் ஹிந்திப் படங்களைத் தயாரிக்கவேண்டுமென்ற நிலைமை வரும்படியாக நாம் விட்டுவிடக்கூடாது.

நான் ஜோசியனில்லை. காலத்தின் போக்கைப் பார்த்துச் சொல்லுகிறேன். தமிழ்ப் படங்களில் எத்தனை கன்னடப் பெண்கள், தெலுங்குப் பெண்கள், வடநாட்டுப் பெண்கள் நடிக்கவில்லை? எத்தனை தமிழர் வடநாட்டுப் படங்களில் நடித்துக் கீர்த்திபெறவில்லை? உதாரணமாக, ராஜா சாண்டோவை எடுத்துக்கொள்ளலாம். சினிமாத்தொழிலில் எனக்கேற்பட்ட அனுபவத்திற்கு வெளி மாகாணங்களில் பயிற்சியே பெரும்பாலும் காரணம். தெலுங்கு எனக்குத் தாய்பாஷை. தமிழ் ஸ்வீகார பாஷை. ஹிந்தி நான் காதலிக்கும் பாஷை. இவற்றுள் ஒன்றுக்கொன்று தாழ்ந்தது, உயர்ந்தது என்று நான் சொல்லவேமாட்டேன். உற்ற போது தாய், மகள், மனைவி மூவரும் உதவுவார்கள்.

★

............என்ன?............
பாக்கிறேளே! தெரியில்லியோ! ......என்னை நீங்கள் "பாலயோகினி"யிலே பாக்கல்லியோ!.....ஆமா...நான்தான் பேபி ஸரோஜா.........டிரெஸ் மாத்திட்டேன் அவ்வளவுதான்..........இருக்கட்டும்........நான் பாடினேனே அந்த "கண்ணே பாப்பா" பாட்டு நீங்கல்லாம் கேட்கணும்னு, "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"லே ரிகார்டு கொடுத்தூட்டேன் ...... இன்னக்கே ரிகார்டெ விக்கறாளாம்...... நீங்களும் என் ரிகார்டெ வாங்கிடுங்களேன் ...... நாழி ஆச்சு. அப்பா கூப்புடுவார் போய் வரட்டுமா?
....

N. 18013

{கண்ணே பாப்பா
{ராதே தோழி

★

நீங்கள் விரும்பும் டாக்கி கீதங்கள்!



"அம்பிகாபதி" பிலிமிலிருந்து

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

ரிகார்டுகள் N. 18015-16

★ இவைகளை சகஜ மாதுர்யத்துடன் பிரதிபலிக்கும் இந்த மாடல் நெ. 173 விலை ரூ. 140/-

● இன்றே உங்களுக்குவேண்டியவைகளை வாங்கி விடுங்கள்

எங்கள் வியாபாரிகளிடம் கிடைக்கும்

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்

45, ஸௌத் பெரேட் : : பெங்களூர்

ஹநுமானின் ஜன்மபூமி

ஸ்ரீமதி எஸ். விசாலாக்ஷி
எழுதியது

துங்கபத்ரா நதியின் வட கரையில், விஜய நகர ராஜ்யமாக இருந்த எல்லையில் இருக்கிறது கிஷ்கிந்தை என்னும் ஹநுமானின் ஜனனபூமி. அதன் பக்கத்திலிருப்பது தான் ஆனேகுந்தி என்பது; துங்கபத்ரையின் தென் கரையிலிருக்கிறது விஜயநகர ராஜ்யத்தின் தலை நகராக விளங்கிய பம்பா அல்ல ஹம்பி நகரம். ஹநுமான் பிராட்டியாரைத் தேடிக்கொண்டு தென் திசையில் சென்று திரும்புமளவும் ஸ்ரீ ராமன் கிஷ்கிந்தையில் தான் தங்கி யிருந்ததாக ராமாயணம் சொல்லுகிறது.

கி. பி. 1118-ல் விஜ்ஜலன் அல்லது விஜய ராஜன் என்பவர் துங்கபத்ரையின் வடகரையிலுள்ள ஆனேகுந்தி கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அதை ஒரு நகரமாக்கி அதற்குத் தனது பெயரால் விஜய நகரம் என்று பெயரிட்டான். அவனுக்குப் பிறகு சுமார் இரு நூறு வருஷங்கள் வரை விஜயநகரத்தைத் தலைநகராகக் கொண்டு பலர் அரசுசெலுத்தி வந்தனர்.

மகம்மது டோக்லக் காலத்தில் கி. பி. 1334-ல் மாலிக் காபூர் என்பவன் படை திரட்டிக் கொண்டு தென்னேக்கி வந்து ஆனேகுந்தி நகரத்தைச் சூரையிட்டான். அப்போது விஜயநகர அரசனு யிருந்த பூபராயலு என்பவன் தீயில் பாய்ந்து இறந்தான். அவனுடைய மந்திரிகளான ஹரிஹரன், புக்கன் என்ற இருவரும் அருகில் கிஷ்கிந்தையில் தவக்கோலத்திலிருந்த வித்யாரண்யர் என்ற மகாத்மாவை அண்டி முறையிட்டனர். இருவரும் அவருடைய உதவியைக் கொண்டு, அவரது பெயரால் வித்யாரண்ய நகரம் (வித்யா நகரம்) என்ற ஒரு நகர மமைத்து புதிய ராஜ்யத்தை ஸ்தாபித்தனர். அதற்கு ஹரிஹரன் அரசனுகவும், புக்கன் சேனபதியாகவும், வித்யாரண்யரே மந்திரியாகவும் அமர்ந்தனர்.



வித்யாநகர அமைப்பைப்பற்றிய ஒரு கதை கூட வழங்குகிறது. ஒரு முயல் அந்த இடத்தில் ஒரு சிங்கத்தையே வெருட்டித் துரத்தியதாகவும், அருகில் தாகசாந்தி செய்யச் சென்ற ஹரிஹரனும், புக்கனும் ஒரு குளத்தருகிலிருந்த குகையில் பொற்குவியல்களிருக்கக் கண்டதாகவும், அதைக் கொண்டு தான் வித்யாநகர மமைத்ததாகவும் அந்தக் கதை சொல்லுகிறது.

கிஷ்கிந்தையில் உள்ள ஒரு சிவன் கோயிலில் தான் ஸ்ரீராமன் கிஷ்கிந்தா வாசகாலத்தில் பூஜை செய்ததாகவும் கதை.

ஹரிஹர ராயலுக்குப் பிறகு புக்கராயலுவும், அவருக்குப் பிறகு பலரும் வித்யா நகரில் ஆட்சி செலுத்தினர். 1467 முதல் 85 வரை விருபாக்ஷி ராயர் என்பவர் ஆட்சிசெய்தார். அவர் பெயரால் இன்றளவும் ஹம்பியில் துங்கபத்ரா நதிக்கரைமேல் ஒரு கோயிலிருக்கிறது. அந்தக் கோயிலின் பின்புறத்தில் ஒரு நாழிக் கிணறு இருக்கிறது. அதிலிருந்து ஓரடி அகலத்தில் ஜலம் எழும்பி ஒரு சிற்ருருக ஓடிக் கோயில் வழிபாய்ந்து முன் புறமாகச் சுற்றி ஓடுகிறது. அதன் ஜலம் ரொம்பத் தெளிவாயிருக்கிறது. அதில் எக்காலத்திலும் ஜலம் வற்றுவதேயில்லையாம்.

விருபாக்ஷி ராயருக்குப் பின் கி. பி. 1497-ம் வருஷம் முதல் அரசாண்டவர் வீர நரசிம்ம ராயர். அவருடைய பராக்ரம ஞாபகார்த்தம் போல வித்யாரண்யத்தில் பிரம்மாண்டமான நரசிம்மமூர்த்தி விக்ரகமொன்றிருக்கிறது. அதற்கடுத்தாற்போல ஒரு சிவலிங்கமும் இருக்கிறது. இந்த லிங்கத்தின் ஆவடையாரைச் சுற்றி இடைவிடாது நீர் ஓடிக்கொண்டே யிருப்பது ரொம்ப ஆச்சரியகரமான காட்சியாகும்.

L.A.G. 120 போட்டோ

சேலம் L. A. கபூர்
போட்டோ மார்க் பீடிகள்

L.A.G. 120 போட்டோ

அறிவிப்பு

எமது சுதேசி 120 நெ. L. A. G. போட்டோ மார்க் பீடிகளின் ரிங்ஸ் மேல்கண்ட விதமாய் மாற்றப்பட்டிருக்கிறது.

மணம், குணம், காரம், நிறம், சாரம் பொருந்தியது. மேல் நாட்டு சிகரெட்டுகளுக்கு நிகரானது ஆதலாலும், சுதேசிப்பொருளை ஆதரிப்பது சுதேசிகளின் கடமை யாதலாலும், சுதேசி 120 நெ. L. A. G. போட்டோ மார்க் பீடிகளேயே உபயோகிக்க வேண்டுமென, பீடியபிமானிகளனை வரையும் கேட்டுக்கொள்கிறேன்.

புரொப்ரைட்டர்: T. S. R. S. கல்யாணசுந்தரம், திருச்சினுப்பள்ளி.

வீர நரசிம்மனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவர்தான் ராயர் அப்பாஜி கதைகளில் பிரசித்தி பெற்ற கிருஷ்ணதேவ வீரப்ரதாப மதண ராயர். இவர் காலத்தில் விஜய நகர ராஜ்யம் வடக்கிலும் தெற்கிலும் வெகு தூரம் வரை இருந்தது.

கிருஷ்ணதேவ ராயர் சிதம்பரத்தில் ஒரு கோபுரமும், திருவண்ணாமலையில் ஒரு ஆயிரக்கால் மண்டபமும் கட்டினார். அவருடைய ராஜ்யத்திலேயே ஒரு விட்டல ராயர் கோயிலும், அர்ச்சுனன் கல்த்தேர் ஒன்றும் அமைத்தார். அந்தக் கோயிலினுடையவும், தேரினுடையவும் சிற்பவேலைகள் ரொம்ப அழகும் அதிசயமும் நிறைந்தவை.

விருபாக்ஷி கோயிலின் முன்புறம் தற்காலம் பாழடைந்து தோன்றும் கடை வீதிகளின் இருபுறங்களிலும் காணும் சிற்பவேலைகள் நம்மை வியப்பால் பிரமித்து நிற்கச் செய்வனவாக இருக்கின்றன.

ஹம்பிக்குச் செல்பவர்கள் அங்குள்ள அரண்மனைக் கதவு, மிருகங்கள் தண்ணீர் குடிப்பதற்கென்றமைத்த தொட்டி, (சுமார் 32 அடி நீளமும் 4 அடி உயரமும் உள்ளது) ராணிகளின் ஸ்நான மண்டபம், யானை மால் முதலியவற்றைக் கண்டு களிக்காமல் வர முடியாது. இவை ஒவ்வொன்றும், விஜய நகர ராஜ்ய ஸ்தாபகர்களிலிருந்து, அதன் அந்திய காலம்வரை அதை ஆண்டவர்களது கலாரஸனையையும், நாகரிக மேம்பாட்டையும் எடுத்துக் காட்டும் சின்னமாக விளங்கி நம்மைப் பிரமித்து நிற்கச் செய்கிறது.

இவற்றைத் தவிர வேறு பல சிறிய கோயில்களும் ஆயிரக்கால் மண்டபங்களும் ஒரு காலத்தில் ஹம்பி நகரை அலங்கரித்திருக்கின்றன என்று நிரூபிக்கும் பாழடைந்த சாட்சியங்கள் அங்கு ஏராளமாகக் காணக் கிடக்கின்றன. விஜய நகரத்தின் கிலங்கள் தற்காலம் சுமார் ஒன்பது சதுர மைல் வரை பரவியிருக்கின்றன. ஆனால் ஆராய்ச்சியாளர்கள் நகரத்தின் எல்லை இருபது மைல் தூரம் பரவியிருந்திருக்குமென்று சொல்லுகிறார்கள்.



கண் வீச்சுவரை பச்சைப் பசேலென்ற தோற்றம். ஆங்காங்கு சிறு சிறு ஓடைகள்; அவற்றிலே துள்ளி விளையாடும் அழகு நிறைந்த மீன்கள்; இவை யெல்லாவற்றையும் எழுத்தில் எப்படிச் சித்தரிப்பது! சாவகாசம் கிடைத்தவுடன், தென் மராட்டா ரயிலில் ஏறி குண்டக்கல் ஸ்டேஷனில் இறங்கி, ஹுப்ளி ரயிலில் மாறி, ஆஸ்பட்டு ஸ்டேஷனில் இறங்கி அங்கிருந்து எட்டு மைல் தூரம் பஸ்ஸிலோ அல்லது வாடகை மோட்டாரிலோ ஹம்பிக்கு நேரிலேயே போய்ப் பாருங்கள் என்று தான் சொல்லலாம்.

பஸ்ஸுக்கும் மோட்டாருக்கும் பணமில்லா விட்டாலும் இதோ இருக்கிறது இரட்டை மாட்டு வண்டி! அதுவும் வேண்டாமென்றால் இருக்கவே இருக்கிறது கால் வண்டி. எப்படியோ கட்டாயம் போய் ஒரு முறை ஹம்பியையும் கிஷ்கிந்தையையும் கண்டு வாருங்கள் என்பேன். நமது மூதாதையர்கள் ராஜ்ய ஸ்தாபனம் செய்வதற்கென்று பொறுக்கிய இடங்களின் இயற்கை யமைப்புகளைப் பார்க்கப் பார்க்க, அவர்களது அரசியலறிவும் இயற்கையாகப் பிறந்து, இயற்கையுடன் வளர்ந்ததென்ற எண்ணம் தானாக எழுகிறது.

சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன் வரை நமது கலைக்கோட்டமாக இருந்த ஒரு



ராஜ்யத்தின் தலைநகரம் தற்காலமுள்ள பாழடைந்த நிலைமையிலும் எப்படிப்பட்ட அழகுக் காட்சிகள் நிறைந்திருக்கிறது! ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் நடந்த அந்த ராமாயணக் கதை தனது கம்பீரம் முழுவதுடனும் நம் மனக்கண் முன் எழுந்து தோன்றுகிறது ஹநுமானின் ஜனன க்ஷேத்ரமான கிஷ்கிந்தையில் காலடி வைத்தவுடன்! ராமாயண காலத்தில் வாலி சுக்ரீவர்களது ஆக்ஞா சக்கரம் உருண்ட அந்த பூமியில், இடையே தோன்றிய விஜயநகர சாம்ராஜ்யமும் சரித்திர விஷயமாகிவிட்டதன்றி, இன்று அது ஜன சூன்யமான பிரதேசமாக அளிக்கும் காட்சியைக் கண்டு பெருமூச்சு விடாமலிருக்க முடியாது, யாராயினும்.



முதலாளிகளுக்கு

படந் தயாரிக்கும் முதலாளிகளுக்கு
மிக்க சௌகரியத்தை உண்டாக்கும் உத்தேசத்தோடு எங்கள் அச்சுக்கூட இலாகாவுடன் லித்தோ வேலைகளையும் செய்யப் பிரத்தியேகமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

லித்தோ வேலைகளைச் சிறந்த முறையில்
செய்து தர, இந்தத் துறையில் மிகுந்த அநுபவம் வாய்ந்த தொழிலாளர்களைப் பம்பாயிலிருந்து வரவழைத்து, எங்கள் சிப்பந்திகளாக அமைத்துக்கொண்டிருக்கிறோம்.

இனி, தங்களுக்குத் தேவையான
லித்தோ வேலைகளை எங்களிடம் கொடுத்துதவக் கேட்டுக்கொள்கிறோம்.

எவ்வளவு குறைந்த ஆர்டராயினும்
கவனமாக, நியாயமான கூலிக்குச் செய்து தரத் தயாராக இருக்கிறோம்.

★

ஒரு முறை பரீட்சிப்பது
உண்மையை உணர்ந்துகொள்ள வழியாகும்.

விவரங்களுக்கு:

Theodore Litho Works, Fine Art Lithographers & Designers 211, Big Bazaar Road, **Trichy**

தமிழ்க் கவிதைப் பூஞ்சோலை:

பாரதிதாஸன்

புரொபஸர். கே. ஸ்வாமிநாதன்
எழுதியது

"அரிஸ்டாட்டில் முதல் என் வரை விமர்சகர்கள் விதித்துள்ள விதிகளையெல்லாம் ஹாம்லெட் மீறியிருக்கிறது; ஆயினும் ஹாம்லெட்டைப்போல் படிப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் நாடகம் வேறொன்றில்லை" என்பதுண்டு.

இது போலவே பாரதிதாஸனின் நூல்களைக் குறித்தும் சொல்லலாம்:— இவர் கவிதைகளிலும் நாடகங்களிலும் உள்ள குற்றம் குறைவுகளுக்குக் கணக்கில்லை. பாட்டுக்குப் பாட்டு கொள்கை முரண்பாடு. கவிதையென்னும் தீயை, பக்தி, அன்பு என்னும் எண்ணெய், நெய்யை விட்டு வளர்க்காமல், பகுத்தறிவு என்னும் குளிர்ந்த தீர்த்தத்தையும், ஜாதித்வேஷம் என்னும் சேற்றையும் வார்த்து வார்த்து வளர்க்கப் பார்க்கிறார். உணர்ச்சியற்ற வெறும் பிரசாரத்தை அநுவசியமாய், அநுசிதமாய் எங்கெங்கோ புகுத்துகிறார். அவமரியாதையாய், வெகு விரஸமாய் கடவுளையும், கடவுளனுப்பிய தூதர்களையும், பரமாத்மாக்களையும் 'கழுதை' என்றே கழித்துவிடுகிறார். ராவணனையும், துரியோதனனையும், இரணியனையும் ஏற்றிவைத்துப் பாடுகிறார். 'செந்தூர் வேலாண்டி', 'பண்டித மோதிலால் நேருவை' முதலிய மெட்டுக்களை பரம ஆபாஸமாய் சற்றும் பொருத்தமில்லா வகையில் கையாளுகிறார்.

ஆனால் இவையெல்லாம் "ஆர்ஷம்"; நல்ல கறவைப் பசுவின் முரட்டு முட்டல்; திவ்யமான தேன் கூட்டில் பதுங்கிக் கிடக்கும் தேனீக் கொட்டல்; கருமத்தில் கண்ணுயினர் பொருள் படுத்தமாட்டார் இச் சிறிய துன்பங்களை.

"தமிழ் நாட்டில் இன்று உயிருடனிருக்கும் கவிகளுள் உண்மைக் கவி யார்? உயிர்க் கவி யார்? சிரஞ்சீவிக் கவி யார்?" என்று கேள்விகள் கிளம்பினல், சற்றும் சந்தேகமின்றி பாரதிதாஸன் என்ற ஒரு விடைதான் நம்மால் கொடுக்க முடியும்.

"பாரதிதாஸன்" என்ற பெயர் இவருக்குப் பல வகைகளில் நன்றாய்ப் பொருந்தும். இவர் கவிதையின் முக்கிய குணம் ஒரு வேகம். இவர் இலக்கணக் கவியல்ல, ஆவேசக் கவி. "உலகம் உன்னுடையது" என்ற செய்யுளின் விசை தான் என்ன விசை! அதன் முதற் பகுதியில் நெளிந்து புரளும் வசை மொழிகளையும், பின்னே எழுந்து தைரியமளிக்கும் வீரச் சொற்களையும் பாரதிக்குப் பின் பாரதிதாஸன் ஒருவரே தொகுத்திருக்க முடியும்.

இவருடைய நடையின் விரைவை இன்னும் பல இடங்களில் காணலாம். "வீரத் தாய்" என்னும் சிறு நாடகம் மிகவும் அழகும் சக்தியும் வாய்ந்தது. இந்த நாடகத்தின் உச்சஸ்தாயியில் வீரத்தாயாகிய விஜயராணி சொல்லுகிறாள் ஒரே மூச்சில் :—

கோழியும் தன்சுதனைக் கொல்லவரும்
 வான்பருந்தைச்
சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவியில்,
 ஆடவரைப்
பெற்றெடுத்த தாய்க்குலத்தைப், பெண்
 குலத்தைத், துஷ்டருக்குப்
புற்றெடுத்த நச்சரவைப் புல்லெனவே
 எண்ணி விட்டான்!

என்ன துரிதம், என்ன அதிர்ச்சி, என்ன வல்லின மெல்லினத் தாக்கல்.

நிறைகுடம் ததும்பாது. ஓரிடத்தில் காதல் வைத்தோர் அதைப்பற்றி நேராகப் பேசியும், உரக்கப் பாடியும் அதைப் பகிரங்கப்படுத்த மாட்டார். இந்த முறையில் "தமிழ்" என்ற பகுதியிலுள்ள பத்துப் பாட்டுக்களும் என்னவோ ஒரு மாதிரி தான் இருக்கின்றன. ஆனால், இந்தப் பகுதியில் கூட ஒரு பாட்டில் பாரதியாரின் வீராவேசத்தின் எதிரொலி கேட்கத்தான் செய்கிறது. "சங்க நாதம்" என்ற அந்த பயங்கரமான பாட்டில் இந்த ஒரு வரி போதாதா நம்மைக் கலங்கச் செய்ய!

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
 தோளெங்கள் வெற்றித் தோள்கள்!

* * * *

ஒரு விஷயம் (கதையோ, வர்ணனையோ, வாதமோ), ஓர் உணர்ச்சி, சில எண்ணங்கள், சில உபமானங்கள், அரிய வார்த்தைகள், இனிய ஓசைகள், இவைகளை யெல்லாம் பல விடங்களிலிருந்து தேடிக் கொணர்ந்து ஒன்று சேர்த்து ஒட்ட வைத்தால் அது கவிதையாகாது; மீன் கண்ணையும், பவள உதடையும், முத்துப் பல்லையும் வைத்து இழைத்தாலும் செயற்கைப் பொம்மை குழந்தையாகாது. எல்லா அவயவங்களும், குணங்களும் ஒன்றாய், இயற்கையாய்ப் பிறந்து வளர்ந்தால்தான் உண்மைக் கவிதை தோன்றும். இந்த விதமாய்—இயற்கையாய்—அவதரித்த உயிருள்ள உருப்படிகள் இவர் கவிதைகளுக்குள் குறைந்த பக்ஷம் ஏழு, எட்டு இருக்கின்றன.

பிறர் இயற்றிய பிரபல மெட்டுக்களுக்குப் பாட்டுக்கள் கட்டும் ஒட்டு வேலையை மூன்றாம் தரம் எழுத்தாளர்களுக்கு விட்டு விட்டு, பாரதிதாஸன் போன்றவர்கள் சுயேச்சையாய் அகவற் பாக்கள் செய்தால், தமிழ்க் கவிதையானது சங்கீதத்தின் பக்கபலம் இல்லாமலே ஜீவித்து, உலகில் சஞ்சரித்து, மகத்தான காரியங்கள் செய்யக் கூடும் என்று காட்ட வழியுண்டு.

இவர் இயற்கைக் கவி என்று பல வகைகளில் நிரூபிக்கலாம். பேச்சு வழக்கிலுள்ள சர்வ சாதாரணமான சொற்களைக் கொண்டே படிப்பவர்களின் உள்ளத்தில்



மோட்டார் பம்புகள்
எலக்ட்ரிக் பான்கள்
மோட்டார் ஸ்டார்ட்டர்கள்
எலிக்ஸ் பல்புகள்

கிடைக்குமிடம்:—

ஆர். எம். எஸ். அண் கோ.,
எலக்ட்ரிகல் இன்ஜினியர்ஸ்
ராட்டன் பஜார் :: ஜி. டி., மதராஸ்.

" கலி முத்திப்போயிடுச்சு! இந்தப் பசங்க போறபோக்கு எனக்குக் கட்டோடே புடிக்கலேப்பா......... "



PRINTED BY :
KESARI PRINTING WORKS, MADRAS.

ஹநுமான் ஆண்டு மலர்
1938

TRI-COLOUR BLOCKS BY :
STANDARD PHOTO ENG. CO., MADRAS.

புதிய புதிய உணர்ச்சிகளை எழுப்புகிறார். வெல்லத் தமிழ் நாடு, பச்சைப்பசுந் தமிழ், பச்சைரத்தம் பரிமாரி, ஒளியின் கற்றை, வயிரக் குப்பை, முகவிழி கவிழ்ந்து வயலில் மொய்த்தது, விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை—இந்த லேசான, பலமான தொடர்களில் பாரதியாரின் "அள்ளுசுவை, மோதும் இன்பம்" மீளவில்லையா?

வார்த்தைகள் மட்டுமல்ல. வர்ணனைகள், உபமானங்கள், அணியலங்காரங்கள் அனைத்தும் வெகு சாமான்யமானவை. இவர் நடையில் உள்ளதை உள்ளபடி சொல்லும் குணம் (realism) குடிகொண்டிருக்கிறது. இதைப் பண்டிதர்களும், மிகை முறைகளில் மோகங் கொண்ட சிலரும் இகழலாம்; ஆனால், இந்த உண்மை நடை பொது ஜனங்களின் மனதில் சுரீரென்று தைக்கிறது. உதாரணமாக,

பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்.
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?

* * *

கைம்மை எனக்கூறி—அப்பெரும்
கையினிற் கூர்வேலால்
நம்மினப் பெண்குலத்தின்—இதய
நடுவிற் பாய்ச்சுகின்றோம்.

* * *

தேக்குமரம் கடைந்து செய்ததொரு தொட்டிலிலே
ஈக்கள் நுழையாமல் இட்ட திரைநடுவில்
பொன் முகத்திலே மிழைத்த புத்தம் புது நீலச்
சின்னமணிக் கண்ணை இமைக்கதவால் மூடிவைப்பாய்.

எளிய நடையில் மட்டுமல்ல, விஷயங்கள், எண்ணங்கள், உணர்ச்சிகளிலும் கூட இவர் இக்காலத்துப் பொதுமக்களின் உண்மையான பிரதிநிதியாக விளங்குகிறார். என்றும் நடவாத புராணக் கதைகள், நடத்தையில் இன்று நடவாத நீதிநெறி போதனைகள், மகாராஜா, மடாதிபதி முகஸ்துதி—இவையொன்றும் இவரிடம் அகப்படாது. ஆனால், நம்முடைய இக்காலத்திய சமூக நிலை, பொருளாதார நிலை, நமது பெண்களும், தொழிலாளரும் படும் கஷ்டங்கள், இவைகளினிடையே தோன்றும் வேடிக்கைகள், இவற்றை நமது கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். இவ்வளவு ஆழ்ந்த அனுதாபமும், தெளிந்த நகைச்சுவையும், லௌகிக ஞானமும் ஒன்று சேர்ந்து எளிய, இனிய தமிழ் நடையில், நமது வாழ்க்கையனுபவங்களைச் சித்தரித்துக் கலையுருவ மாக்கிக் கொடுப்பதை இதற்கு முன் நாம் கண்டதில்லை.

கர்ப்பத் தடையைப்பற்றி ஒருவர் பாட்டுக்கள் எழுதியிருக்கிறார் என்று கேட்டவுடன், "களி மண்ணைக் கொண்டு சோறு சமைத்திருக்கிறார்" என்று சொல்லி நகைக்கிறோம். ஆனால், "மக்கள் நிலை" என்ற அழகிய இயற்கைப் பாட்டையும், "கர்ப்பத் தடை" என்னும் தலைப்பின் கீழ் வரும் சில வரிகளையும்:—

கனல்புரளும் ஏழ்மையெனும் பெருங்கடலில் அந்தோ
கதியற்ற குழந்தைகளோர் கோடானு கோடி
மனம்பதைக்கச் சாக்காட்டை மருவுகின்ற நேரம்
வந்ததொரு பணமென்ற கொடிபறக்கும் கப்பல்;
இனத்தவரின் குழந்தைகளோ 'ஏ!' என்று கெஞ்ச
ஏறிவந்த சீமான்கள் 'சீ!' என்று போனார்.

—இவைகளைப் படித்தவுடன், "ஆம். களி மண்ணின்றி அரிசி ஏது? அரிசியன்றி சோறேது?" என்றும், Piers Plowman முதல் W. H. Anden வரை இங்கிலீஷ் கவிகளில் பலர் இதே பாட்டைத் தானே பாடி யிருக்கிறார்கள் என்றும், நமது முதல் எண்ணத்தைத் திருத்தி மாற்ற வேண்டியிருக்கிறது. Keats உடைய No hungry generations tread thee down என்பதும், For him the Ceylon diver held his breath என்பதும் கவிதையல்லவா? அப்படியானால், பின்வரும் வரிகளும் கவிதை தானே?

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து, மலை பிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார் கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக் குலத்தை
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

* * *

ஆடைகள் நெய்தோம்—பெரும்
ஆற்றை வளைத்து நெல் நாற்றுக்கள் நட்டோம்........
கந்தையணிந்தோம்—இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்
மொந்தையிற் கூழைப்—பலர்
மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்.

சோறு கிடைப்பதற்கு முன் சூரியவெப்பம், உரமிடுதல், விதை விதைத்தல், நீர் பாய்ச்சல், தீ மூட்டல் முதலிய பல பக்குவங்கள் எப்படி அவசியமோ, அப்படியே சங்கதி யென்னும் களிமண், கவிதை யென்னும் சோறாகச் சமையும் முன், அனுதாபம், உயர்ந்த மனோபாவம், உசிதமான அலங்காரங்கள், முதலியன அவசியமான இடை நிகழ்ச்சிகள். தமிழின் சிறப்பு என்னவென்றால், இந்த மாறுதல் வெகு சுலபமாய் நடைபெறுகிறது. சில சமயம் எதுகையும், உபமானமும் எதேஷ்டம்:—

நீர் நிறைந்த கடலையொக்கும்
நேர் உழைப்பவர்தொகை!
நீர்மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல்கொள் வோர்தொகை.

* * * *

குன்றும் இரங்கும்! கொடும்பாம்பும் நெஞ்சிளகும்!
ஏழையரைக் கொல்ல எதிரிருந்து பார்த்திருப்போர்
பாழான நெஞ்சும் சிலசமயம் பார்த்திரங்கும்!
சித்தம் துடிக்கின்ற சேயின் நிலைமைக்கு
ரத்தவெறி கொண்டலையும் நால் வருணம் ஏனிரங்கும்?

சில சமயம், உவமையே போதும்:—

காதலும் தானும் கனலும் புழுவுமாய்
ஏங்கினாள்.

சில சமயம், ஓசையழகு ஒன்றே போதும்:—

இருவர் ஒரு தொழிலில் இரண்டு நாள் ஒத்திருந்த
சரிதம் அரிதுநம் தாய்நாட்டில்—
தோழர்களே!

பாரதிதாஸனுடைய நகைச்சுவை திடீர் திடீரெனத் தோன்றி மறைந்து நமது சந்தோஷத்தையும், ஆசையையும் மேல்மேலும் கிளப்புகிறது; சற்று, அடங்கி, மௌனமாய் வேலை செய்கிறது; பிறகு பீறிக்கொண்டு வெளி வந்து வெள்ளமாய்ப் புரளுகிறது. பட்டை நாமக்காரப் பாகவதர்—ரூபாயைத் தட்டிப்பார்க்காமல் வாங்காதவர்—கதை சொல்ல, குப்பனுக்குத் தோன்றும் உவமையைக் கேளுங்கள்:—

கண்ணாடிப் பாத்திரத்தைக்
கல்தரையில் வைப்பது போல்.

சஞ்சீவி மலையைத் தூக்கும் சக்தியை ஹனுமாருக்கு வால்மீகி அளித்தது சுத்த மோசமான பொய்மை, மனிதரை ஏமாற்றும் அயோக்கியத்தனம் என்ற பகுத்தறிவுக் கக்ஷியை ஸ்தாபிக்கும் காவியத்திலேயே—குப்பனுக்கும், வஞ்சிக்கும் ஞானோதயம் சித்திக்கும் பொருட்டு பாரதிதாஸன் தான் மட்டும் சில மூலிகைகளுக்கு இன்னும் அபூர்வமான சக்திகளை அளித்திருப்பது, எந்த அதிகாரத்தின் கீழ், எந்த நியாயத்தின்மேல்? "இன்மையிலே உண்மையுண்டோ?" என்று ஒரு கவி—வேடிக்கையாயின்றி, கேட்பதுண்டோ?

50வருஷத்திய அனுபவம்50
● சிறந்த வைரங்கள்
● உத்திரவாத நகைகள்
● சுத்தமான வெள்ளி சாமான்கள்
ஒரே விலை
உலகம் அறிந்தது



வீகம்ஸீ சபில்தாஸ் அன்டு சன்ஸ்,
நகை வைரங்கள் வியாபாரிகள்
112, 113, சைனாபஜார் ரோட். சென்னை.
படங்களுள்ள காட்டலாக் இனாம்.

எல்லாத் தமிழரும், எப்பொழுதும் நேர்மையும், சீலமும் மனித உரு எடுத்தவர்போல் நடப்பதில்லை; தமிழரும் சில சமயம் "குள்ள நரி" யுக்தி செய்வதுண்டு; தந்திரத் திருட்டு மானுஷ்யத்தின் ஓர் அம்சம், ஆரியரின் அற்புத குணமன்று—என்பதை "எலி எமனை விழுங்கியது" என்னும் ஹாஸ்யக் கதையில் மறைவாய்க் காட்டிவிட்டார். இதிலும் நகைச்சுவையை மடிப்புக்குள் மடிப்பாய் அடக்கிவைத்திருக்கிறார். "காதற் கடிதங்கள்" இரண்டும் விரகத்தால் தவிப்போர் முகத்திலும் ஒரு முறுவலை யுண்டாக்கும். தங்கை "குடும்பத்தின் பெயர் கெடுக்க", அண்ணனுடைய நடத்தை நகைப்புக்கிடமாகிறது:—

டபடவென்றே கொல்லைக் கிணற்றில்
வீழ்ந்தே
மாய்வார் போல் ஓடிப்பின் திரும்பிவந்து-

தமிழ்ப் பேசும் படத்தின் கோரத்தை உள்ளபடி உரைத்து, சிரிப்புடன் கோபத்தையும் கலந்து தருகிறார்:—

பரமசிவன் அருள்புரிய வந்துவந்து
போவார்!
பதிவிரதைக் கின்னல் வரும்,
பழையபடி தீரும்!
சிரமமொடு தாளமெண்ணிப்
போட்டியிலே பாட்டுச்
சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து
வரும்காதல்! அவ்விதமே
துன்பம் வரும், போகும்!

கடைசியாக ஒன்று சொல்லவேண்டும். தமிழரில் பெரும் பான்மையோருடைய மூலக் கொள்கைகளுக்கும், இவருடைய மூலக் கொள்கைகளுக்கும் பெரிய பிளவு ஒன்று இருப்பதால் இவரது கவிதையின் வன்மை சற்றுக் குன்றித்தான் இருக்கிறது.

வழக்கச்சொல்லை வம்பு செய்தால்—

"அப்படியே போயி எஜமான் கையிலே சோல்லிவிட்டேன்."

தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பாகம்; தமிழன் இந்தியனுந்தான். வெறும் தமிழனோ, வெறும் 'உலகத்தா' னுயில்லை. இந்த உண்மையை பாரதி மட்டு மல்ல—கம்பர், வள்ளுவர், இளங்கோவும்—உணர்ந்திருந்தனர். பாரதிதாஸன் பெரிய கவிதான், ஆனால் நமது கலைகளத்தனையையும் கவிழ்த்துவிட்டு, புது நாடகத் தமிழ் நாடென்னும் ஒரு தனிச் சிறு நாட்டைச் சிருஷ்டித்து, அதற்குத் தானே கவிராஜனாக முயலுவது வீண் முயற்சி. இந்தச் சுருங்கிய எண்ணத்தை விட்டுவிட்டு தமது உயர்ந்த பாரம்பரியத்தை உதறி எறியாமல், இக்காலத் தமிழ் மக்களின் பொது எண்ணங்களை ஏற்றுக்கொண்டு, தானும் ஒரு இந்தியத் தமிழர், சாதாரணத் தமிழர்—தனிச் சிறப்புத் தமிழரல்ல, வேரற்ற மரமல்ல—என்று கண்டு கொண்டால், அவருடைய கவிதைக்கும், நல்லது; தமிழின் முன்னேற்றத்துக்கும் நல்லது. உலக சகோதரத்வத்தை வருந்தி யழைத்து, இந்திய சகோதரத்வத்தை எதிர்ப்பது பாரதி செய்யாத புதிய, விபரீத காரியம். ஆகையால், இன்று "பாரதிதாஸன்" என்ற பட்டம் முக்கால் வாசிதான் நிஜம். அதை ஏன் முழுவதும் நிஜமாக்கலாகாது?

மிட்லண்டு இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

●

தலைமை ஆபீஸ்.	தபால் பெட்டி.	போன்.
சென்னை	**276**	**3006**

●

நீங்கள் இன்ஷூர் செய்யவும் ரெப்ரசெண்ட் செய்யவும் தகுதியுடையது

●

விபரங்கட்கு தயவுசெய்து எழுதுங்கள்

ஸ்பென்ஸரின் இரும்புச் சாமான் இலாகாவின் சமர்ப்பணை

டான் - சாத் மடிப்பு பிராம்கள்

சீர்திருத்தப்பட்ட மாடல்கள் — வசீகரம் பொருந்திய மெருகு வேலை — கண்ணைக் கவரும் வர்ணங்கள்

மிக நேர்த்தியான உடம்புக்கு சவுகரியமான மடிக்கக்கூடிய குழந்தை வண்டி இது ஒன்றே.
விலைகள் :—ரூ. 47-8-0 முதல் ரூ. 145 வரை.
முழு விவரங்கள் கேட்பவருக்கு அனுப்பப்படும்

டெமன் ஆயில் - காஸ் ஸ்டவ்கள்



நீல காஸ் ஜ்வாலையுடன், சுத்தமாக, புகையின்றி, நாற்றமின்றி எரிபவை. ஒரு பர்னர் உள்ளது ரூ. 20 முதல் விலை கொண்டது ; 2 பர்னருள்ளது ரூ. 30 முதல் விலையுள்ளது; ஷ பர்னருக்கேற்ற அடுப்புகள் ரூ. 11-8-0 முதல் விலையுள்ளது. அடுப்பண்டை உட்கார்ந்திருக்கத் தேவையில்லை — ஸ்டவ்வை ஏற்றிவிட்டுச் சென்று விடலாம் !

இதைப்பற்றி படங்களுடன் கூடிய விவரமான கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட், மதராஸ்

இனாம்! இனாம்!

இந்தக் கூப்பனை கத்தரித்து அனுப்பவும்

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட்
23, எர்ரபாலு செட்டித் தெரு, சென்னை

நீம் எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்ட மார்கோ சோப்பை உபயோகிக்க ஆவலாக இருக்கிறேன். தயவு செய்து ஒரு சாம்பிள் ஸோப் அனுப்பவும்.

பெயர்...

விலாசம்...

....

சென்னையிலே

சிறந்த சுதேசி ஜவுளி மாளிகை

★

சகலவிதமான சுத்த சுதேசி பட்டு, நூல் ஜவுளி ரகங்களும் இதர சுதேசி சாமான்களும் அடங்கிய மிகப் பெரிய ஸ்டோர். நம்பிக்கையும் நாணயமும் பொருந்திய இடம்

★

ஜெனரல் சுதேசிஸ் லிமிடெட்,

ஹைக்கோர்ட்டுக்கு எதிர் :: சென்னை.

டான்ஸினல் (ரிஜிஸ்டர்ட்)

"டான்ஸினல்" என்னும் அரிய மருந்தினல் தொண்டையில் சதை வளர்வதை "டான்ஸில்ஸ்" ஆபரேஷனில்லாமலே குணப்படுத்த உத்திரவாதம்.

ஆபரேஷனின்றியே ஆயிரக் கணக்கானவர்கள் காப்பாற்றப் பட்டுள்ளார்கள். ஆபரேஷன் செய்தும் குணமாகாத அநேக கேசுகள் இவ்வரிய மருந்தினல் பூர்ண குணமாயுள்ளது.

உண்மை அறிய இன்றே பரிக்ஷியுங்கள்

(Consult our Tonsil Specialist)

தயாரிப்பவர் :— **டான்ஸினல் லேபரேடரி, 53,** கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு, சென்னை.

எல்லா இடங்களிலும் விற்பனை ஏஜண்டுகள் தேவை! **முந்துங்கள்!**

(1) **பார்வதி கல்ப மாத்திரை** :—சர்வ வாத, வலிகளை குணப்படுத்தும் சஞ்சீவியை 5 நாள் சாப்பிட்டால் போதும். விலை ரூ. 1—4—0

(2) **பார்வதி வங்க தாம்பர பஸ்பம்** :—சர்வ வாதம், மேகம், கடினமான குஷ்டங்கள், சகல தூர்நீர் சம்மந்தமான வியாதிகளை 20 நாட்களில் குணப்படுத்தும். விலை ரூ. 2—8—0.

(3) **பார்வதி ஜுர மாத்திரை** :—மலே ஜுரம், குளிர் ஜுரம், அஸ்தி ஜுரம், முறை ஜுரம், எவ்வித நாட்பட்ட ஜுரங்களையும் மூன்றே நாட்களில் குணப்படுத்தும். விலை அணு 0—12—0.

(4) **பார்வதி பெஸ்டோன் பிளாஸ்திரி** :—ராஜ பிளவை, அரையாப்பு கட்டி, கண்டமாலை கட்டி முதலிய எவ்விதமானதையும் கரைத்து குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டாம். விலை டப்பி 1-க்கு ரூபாய் 1—4—0.

மற்றைய மருந்துகளுக்கு கியாட்லாக் இனும்

பார்வதி மருந்துசாலை, 23, தேரடி கடைத்தெருவு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

ரூ. 2,51,000 க்கு சொந்தம்

K POST BOX No. 185 MADRAS B

"கரீம் பீடி" ஸ்தாபகரும் மெஸ்ஸர்ஸ் ஏ. அப்துல் கரீம் அண்டு கம்பெனியின் பிரதம பங்குதாருமான கான்பகதூர் ஏ. அப்துல் கரீம் சாஹிப் "கரீம் பீடி" யின் ஏக சொந்தக்காரராக ஆகி இருக்கிறார்.

முப்பது வருஷ காலமாய் பிரசித்தி பெற்ற

"கரீம் பீடி"

உபயோகித்து, முழு இன்பத்தை அனுபவியுங்கள்.

கவனிப்பு

கம்பெனிக்கு விரோதமாக பொய் பிரசாரம் செய்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

மானேஜர் : கரீம் பீடி பாக்டரி அண்டு பிரெஸ்,
மண்ணடி, : : சென்னை.

தமிழ் நாட்டினர்க்கு ஓர் நற்செய்தி!

அகில இந்திய காங்கிரஸ் பொருட் காக்ஷியில் அரும் பெரும் தேசியத் தலைவர்களால் நன்கு மதிக்கப்பட்டு நற்சான்றளிக்கப் பெற்ற அபூர்வமான மருந்து

சி. எம். சாமி

மன்மதக் குளிகை

தாதுபுஷ்டியைக் கொடுக்கும்

இழந்த ஆண்மையும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், இரத்த விருத்தி, இந்திரியக் கட்டு, போகசக்தி, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பல ஹீனம், தாதுநஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். இதன் அபார சக்தியை வர்ணிக்க இயலாது.

20 குளிகை விலை ரூ. 2—0—0

பிரமேக நிவாரணி

எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் இதில் நிச்சயமாய்த் தீரும். பிரமேகம், இரத்த மேகம், தந்தி மேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, குத்து, எரிச்சல், நீரோடு விந்து கலந்து விழல் முதலியன குணமாகும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2 தபால் சார்ஜ் வேறு

பிராஞ்சு :—1/54, அருணாசலநாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

தலைமை ஆபீஸ் :—

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S.I.

தபால் பெட்டி நெ. 1209. தந்தி விலாசம்: "Religart."

கிரஹத்தை அழகுபடுத்தும்

பல வர்ணமுள்ள, அழகான காட்சிப் படங்களும், டீபாய் முதலிய மேஜை, கண்ணாடி பீரோக்களில் அலங்கிர்தமாய் வைக்கக்கூடிய (Flower Vases) செம்பு புஷ்ப பாத்திரங்களும், இன்னும் அநேக விசித்திர சாமான்களும் எங்கள் வியாபார ஸ்தலத்தில் சரசமான விலைக்குக் கிடைக்கும். எங்கள் வியாபார ஸ்தலத்தை நேரில் தரிசித்தால் உண்மை விளங்கும்.

நயமான சரக்குகள்! நாணயமான சேவை!

சரசமான விலைகள் !!!

வெளியூர் ஆர்டர்கள் விசேஷ சிரத்தையுடன் கவனிக்கப்படும்.

'உங்கள் திருப்தியே எங்கள் அநுகூலம்.'

★

Thomas Rodrigo & Sons,

No. 1, Tucker's Lane

BROADWAY : : G. T., MADRAS

திரளான ஜனங்கள் கண்டு தினசரி களிக்கிறார்கள்

ஆனந்தகரமான 5-வது வாரம்

பிராட்வே டாக்கீஸில்

வேல் பிக்சர்ஸாரின்

கம்பர்

(தமிழ் பேசும் படம்)

காமெடியன்

எல். நாராயண ராவ்

&

மிஸ். மங்களம்

சங்கீத வித்வான்

எஸ். வி. சுப்பய்யா பாகவதர்

1938-ஹு ஜூலை மீ 30உ சனிக்கிழமை முதல்

காலம் கட்டணம் காட்சி வழக்கம்போல்

இதுவரை வெளிவந்த ஹாஸ்யப் படங்களுள் மிகச் சிறந்தது.

எங்கும் வெற்றி! திரள் திரளான கூட்டம் கண்டு களிக்கிறது!



இதோடு

" சுண்டைக்காய் சுப்பன் "

என்னும் 3 சுருணைப் படம் காண்பிக்கப்படும்

இப் படத்தில் குடும்ப வாழ்க்கையின் வேடிக்கைகளைக் கண்டு வயிறு
குலுங்கக் குலுங்க நகைக்கப் போகிறீர்கள்

இதில்
பி. ஆர். மங்களம் & கிருஷ்ணமூர்த்தி
நடிக்கிறார்கள்

கதை & டைரக்ஷன்
சி. வி. ராமன், பி.ஏ., எல். எல்.பி.
Asst. Director : **S. LAKSHMINARAYANAN**, B. A.

புக்கிங்குகளுக்கும் மற்ற விவரங்களுக்கும் கீழேயுள்ள விலாசத்திற்கெழுதுக:

ராதா பிலிம் கம்பெனி, கல்கத்தா

மதுரை, திருநெல்வேலி, திருவாங்கூர், கொச்சி, மலையாளம், தென் கன்னடம், மைசூர், பர்மா, எப். எம். எஸ்., வட இந்தியா முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள்.

நார் அண்டு ஸன்ஸ், திருச்சி

தஞ்சாவூர், ராமனாதபுரம் ஜில்லா ஏஜண்டுகள்.

கனி அண்டு ஸன்ஸ், ரட்டான் பஜார், மதராஸ்

சேலம், திருச்சி, சிலோன், கிழக்கு ஆப்பிரிக்கா முதலிய பிரதேசங்களுக்கு ஏஜண்டுகள்.

ஸதர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்,

10, ஸ்டிரிங்கர் தெரு, பார்க் டவுன், மதராஸ்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, ஆந்திர ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள்.

ஜுவல் பிக்சர்ஸ், கோயம்புத்தூர்

கோயம்புத்தூர், நீலகிரி ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள்.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

வெற்றிவேல் ப்ராம்

(டாக்டர்களால் சர்ட்டிபை செய்யப்பட்டது.)

தலைவலி, சுளுக்கு, கைகால் பிடிப்பு, கீல் வலிகள், ஜலதோஷம், இருமல், சளி, மூச்சடைத்துக் கொள்ளுதல், முதுகெலும்பு வலி, வயிற்று வலி, வயிற்றுப்பிசம், மூலவியாதி, வாயுசம்பந்தமான சகல வியாதிகளுக்கும், காயங்கள், நெருப்புப்பட்ட புண்கள், தேள்கடி முதலியவைகளுக்கும் கைகண்ட ஔஷதம்.

வெற்றிவேல் பாம் :—டின் ரூ. 0-6-0 பெட்டி ரூ. 0-3-0

வேற்றிவேல் படைமருந்து

அதிகநாள்பட்ட படை, வண்டுகடி, தேமல், சொறி சிரங்கு, வறட்டுச் சொறி, ரணங்கள், கக்கூஸ்பத்து, பித்தவெடி, சேத்துப் புண் முதலிய தோலைப்பற்றிய சகல வியாதிகளுக்கும் தொத்து வியாதிகளுக்கும் இது நிகரற்றது.

டின் ரூ. 0—6—0 பெட்டி ரூ. 0—3—0

ஶ்ரீ ராமகிருஷ்ண பற்பொடி

பற்களிலுள்ள வியாதிகளை நிவர்த்தி செய்து, பற்களை சுத்தம் செய்வதில் மிகச் சிறந்தது.

$1\frac{1}{2}$-oz. ஸ்தூ பாட்டில் ரூ. 0—3—0 ஷை டின் ரூ. 0—2—6

வெற்றிவேல் பாம் டிபோ,

தஞ்சாவூர்.

மலரிற் சிறந்தது மல்லிகை
குக்கரிற் சிறந்தது ருக்மணி.

போலி குக்கர்களைக் கண்டு ஏமாறுதீர்கள்.

ருக்மணி குக்கர்

ஒரு மணி நேரத்தில் பிரயாசையில்லாமல் சாதமும் 5 வித பதார்த்தங்களும் செய்து முடிக்கும்.



கணவன் :—இவ்வளவு நேர்த்தியான சாப்பாட்டை இவ்வளவு சீக்கிரம் எப்படிச் செய்து முடித்தாய் ?

மனைவி :—இந்த ருக்மணி குக்கரின் உதவியால்தான்.

1 முதல் 16 பேர்கள் வரையில் சாப்பிடக் கூடிய குக்கர்களின் விலை ரூ. 9 முதல் 38

விபர புத்தகம் இனும்

ருக்மணி குக்கர் கம்பெனி

ராயபுரம் (7) : : சென்னை

முக்கிய ஊர்களில் ஏஜண்டுகள் உண்டு

BOLD HEADING **TAMIL TYPES** COND. HEADING

BOLD HEADING			COND. HEADING		
54 pt.	45 lbs.	per lb. 0-7-0	48 pt.	40 lbs.	per lb. 0-7-6
தன் மதிப்			மானம் விடாதது		
42 pt.	40 lbs.	per lb. 0-7-0	36 pt.	35 lbs.	per lb 0-7-6
புள்ளது சுதந்			சுதந்திரம் கடமை		
36 pt.	35 lbs.	per lb. 0-7-0	30 pt.	30 lbs.	per lb. 0-7-6
திரம் எவருக்கும்			கற்றது சுதந்திரம், கொடு		
28 pt.	30 lbs.	per lb. 0-7-0	24 pt.	25 lbs.	per lb. 0-7-6
ஊழியனைகப் பணிசெய்			மை கண்டு பொறுக்காது அடி		

AND FOR OTHER DESIGNS OF TYPES

APPLY TO :—

THE MADRAS TYPE FOUNDRY

38, JONES STREET, G. T., MADRAS

1938-ம் ஆண்டின் வெற்றிப்படங்களை காணத்தவறுதீர்கள்

ஸ்ரீமான் சங்கு சுப்ரமண்யம்
முதல் அநேக தேசத் தொண்டர்
களும் பேபராசிரியர்களும் தோன்
றும் முதல் படம்

அஞ்ஞானத்தில் உழலும் மக்களைக்காக்க
கருணையுடனும் ஜோதியுடனும்
இப்பொழுதே திரையில்
தோன்றிவிட்டார்

ஸ்ரீ ராமானுஜர்

(என்ற உடையவரின் திவ்ய சரிதம்)

முதல்தரமான தமிழ் திரைப் பேசும் படம்

தீண்டாமையை ஒழித்த பெரியார்
மூல மந்திரத்தை பகிரங்கப்படுத்திய மஹான்
ஆசாரப் புரட்சியை உண்டாக்கிய உடையவர்
அக்கிரமங்களை அகற்றிய அரியார்
வைஷ்ணவத்தை ஸ்தாபித்த புண்யமூர்த்தி

?

இப்பேரியாரை
உங்களூர் வெள்ளித் திரைகளில்
இம்மாதத்தில்
குதூகலத்துடன் காண
முன்னிடம் தேடுங்கள்

வெற்றித் தந்திகளைக் கொள்ளைகொண்ட நவீனப் படம்

காண ஆச்சர்யம்! கேட்க ஆனந்தம்!! ரசிக்க பரமானந்தம்!!!

காதுக்கு நாராசமான அதிகப் பாட்டுகளும்
கண்களுக்கு விகல்பமான ஆபாச காட்சிகளும்
மனதிற்கு விரக்தி தரும் நடிப்பும்

இடையாது

எனவே, அதிரசமான தமிழ்ப் படம்

உஸ் . . . மற்றொரு விசேஷம் . . . . ஒரே சமயத்தில் இரண்டு காக்ஷிகள்

ஒன்று பெரும் படம்

Mr. M. V. கிருஷ்ணப்பா & T. R. காந்தாமணி
முதலியவர்கள் நடித்த
G. W. M. ரெய்னால்ட்ஸின் விரசமான கதையைத்
தழுவிய தமிழ்ப் படம்

போர் வீரன் மனைவி

மற்றொன்று ஹாஸ்யப் படம்

தென்னாட்டு ஹாஸ்ய ராணி மிஸ் T. S. கிருஷ்ணவேணி
நடித்த விடாநகைப்பை ஊட்டும்
ஹாஸ்யப் படம்

அசட்டு வீரன் மனைவி

உங்களூர் தியேட்டர்களில் காணும் நன்னாளை எதிர்பாருங்கள்

கைவசமுள்ள படங்கள்: **விக்ரம ஸ்திரீ சாகஸம், நவீன ஸ்திரீ சாகஸம்**

உடனே விபரங்களுக்கு எழுதுங்கள்:

YESSEL FILM COMPANY

EGMORE :: :: MADRAS

Printed and Published by V. Sundram Iyer, Proprietor, at his Kesari Printing Works, 150, Anna Pillai St., G. T., Madras.

ராதையின் கோபம்!

அவள் கோபத்திற்குக் காரணம் அவன் (நந்தகுமார்) பாடவில்லையாம். அவனது இனிய கானத்தில் ராதைமட்டுமல்ல, நீங்களும் லயிக்கப்போகிறீர்கள். நந்தகுமார்—ப்ரகதி பிக்சர்ஸ் தயாரிப்பு